https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாட்டின் கதை

அருணகிரி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாட்டின் கதை

அருணகிரி

விகடன்
பிரசுரம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

Title :
THAMIZNAATTIN KATHAI

©ARUNAGIRI

ISBN :978-81-8476-512-0

விகடன் பிரசுரம்: 746

நூல் தலைப்பு:
தமிழ்நாட்டின் கதை

நூல் ஆசிரியர்:
© அருணகிரி

அட்டை வடிவமைப்பு:
த.வினோத்

முதற்பதிப்பு : ஜூலை, 2013

விலை : ₹ 280

பதிப்பாளர்:
பா.சீனிவாசன்

முதன்மை உதவி ஆசிரியர்:
அ.அன்பழகன்

தலைமை உதவி ஆசிரியர்கள்:
கே.பாசுமணி, சிவராஜ்

முதன்மை வடிவமைப்பு:
மு.ராம்குமார்

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

விகடன் பிரசுரம்
757, அண்ணா சாலை, சென்னை-600 002.
எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாட்டின் குறிப்பு!

தஞ்சம் என வந்தோரையும், இங்கு பிறக்கும் பேறு பெற்றோரையும் தலை நிமிரச்செய்யும் தமிழ்நாடு, இந்திய மாநிலங்களுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்பதை வெறும் வார்த்தைகளால் விளக்கிவிட முடியாது. எண்ணிலடங்கா தமிழர்களையும், தரமான தலைவர்களையும், கண்ணியம் கலந்த கட்டுப்பாடு மிகுந்த கட்சிகளையும், மக்களுக்கான அரசை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையைத் தொடர்ந்து செயல்படுத்திவரும் தமிழ்நாட்டு அரசியல் பின்னணிகளையும், கடந்து வந்த தடங்களையும் பார்த்துப் பெருமை/பொறாமைகொள்ளும் பிற மாநிலங்கள் இன்று அநேகம்.

உலக மேடையில் அரங்கேறும் பல்வேறு நிகழ்வுகளை நாம் அன்றாடம் அறிந்து வருகிறோம். ஆனால், பிறந்து வளர்ந்து வாழ்ந்துவரும் தமிழ்நாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் நமக்கு எப்போதாவது தோன்றி உள்ளதா? அப்படியே தோன்றினாலும் அதனைக் குறித்த சரியான தகவல்கள் எங்குக் கிடைக்கும், எப்படிக் கிடைக்கும், கிடைக்கும் தகவல்கள் உண்மையானதா என்பது போன்ற மனச் சிதறல்களுக்கு இதுவரை நாம் ஆளாகி வந்ததுதான் மிச்சம்.

இனி, தமிழனுக்கு மட்டுமல்லாமல், சிந்தனையில் தரமும், உடலில் உரமும் உள்ள அனைவருக்கும், “உங்களின் திறமைக்கான வழித்தடமாக நான் இருக்கிறேன். என்னைப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொண்டு, உங்களின் அறிவுத்திறனை இந்த உலகுக்குக் காட்டுங்கள்!” என்று நம்மை வரவேற்கிறது, தன்னிகரில்லா மாநிலமான தமிழ்நாடு.

அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் பூர்வீக தோற்றம் முதல், இன்றைய சமூக, அரசியல் கட்சிகளுக்கான பின்னணி, தமிழக அரசியல் களம், இந்தியக் கட்சிகள், ஒடுக்கப்பட்டோர் உரிமை இயக்கங்கள், மதச்சார்பு இயக்கங்கள், தமிழகத்தில் முன்பு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயங்கிய கட்சிகள், தமிழ்நாட்டு அரசியலை உலுக்கிய நிகழ்வுகள் வரை அரசியல் அதிரடி நிகழ்வுகளை வரிசைப்படி தொகுத்துள்ளார் நூலாசிரியர்.

மேலும், எந்தக் கட்சி எப்போது உதித்தது, அதன் அரசியல் செயல்பாடுகள் என்ன, மக்களுக்கு ஆற்றியப் பணிகள் என்ன, இவற்றின் மூலம் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சி என்பது போன்ற பல்வேறு வகையான தகவல்கள் அடங்கிய உண்மைத் தகவல்களை சுவாரஸ்யமான நடையில் தொகுத்துள்ளார் நூலாசிரியர் அருணகிரி.

பள்ளி, கல்லூரி மற்றும் போட்டித் தேர்வாளர்கள் என வரலாற்றின் மீது தணியா தாகம் கொண்ட வாசகர்களுக்கும், வரலாற்று ஆசிரியர்களுக்கும், தமிழ்நாட்டின் குறிப்புகளை எடுத்துச்சொல்லும் ஒரு கையேடாக இந்த நூல் விளங்கும் என்பது திண்ணம்.

- ஆசிரியர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக அரசியலின் காலக் கண்ணாடி!



பூவுலகின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் மனிதர்களை நேரில் கண்டு, அவர்தம் வாழ்க்கை, பின்பற்றும் நாகரிகம், அவர்கள் கடந்து வந்த வரலாறு அனைத்தையும் துருவித் துருவி அறிந்து, அதனை எழுத்தில் வடித்திடும் வித்தகம், நான் உயிரினும் இனிதாக நேசிக்கும் தம்பி அருணகிரிநாதனுக்கு இயல்பாக அமைந்துவிட்ட அரிய ஆற்றல்.

‘நான் கண்ட உலகம்’ என, நாடுகள் பலவற்றின் பயண நூல்களைத் தருவதில், ஏ.கே.செட்டியாரின் வழித்தோன்றலாக இவர் உலா வருகிறார்.

உலகில் மிகத் தொன்மையாகத் தோன்றிய இனம், தமிழ் இனம். எனினும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மொழியால், பண்பாட்டால் சிறந்த தமிழகத்தின் வரலாறு, முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. கடல்கோளாலும், செல்லரிப்பாலும் அழிந்தவை போக, மீதம் இருக்கும் பழந்தமிழ் இலக்கியங்களும், கிடைத்து இருக்கும் செப்பு ஏடுகளும், கல்வெட்டுகளும்தாம், உன்னதமான தமிழர் சரிதத்தின் ஆவணங்களாக உள்ளன.

மனித குலத்தின் போக்கையும், நாடுகளின் இயக்கத்தையும் தீர்மானிக்கும் காரணியாக அரசியல் அமைந்து உள்ளது. கிரேக்கச் சிந்தனையாளன் அரிஸ்டாட்டில், “மனிதன், அரசியலால்தான்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயங்குகிறான்” என்றார். நம் தமிழ்நாட்டை அறிவதற்கு, இங்கு எழுந்து உள்ள அரசியலைத் தெரிந்துகொள்ள வேண்டும். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, 20-ம் நூற்றாண்டில் முழுக்கப் பயணித்து, இன்று வரையிலான தமிழகத்தின் அரசியல் தட்பவெட்ப நிலையை உணர வைக்கும் தமனியாக, ‘தமிழ்நாட்டின் கதை!’ என்ற அரிய நூலைப் படைத்து உள்ளார், லட்சிய இளைஞர் அருணகிரி. ஆவணக் காப்பகங்களிலும், பழைய ஏடுகளிலும் தேடித் தேடிச் செய்திகளைச் சேகரித்து, வளரும் தலைமுறைக்கும், வரப்போகும் தலைமுறைக்கும் வெகுபயன் தரும் நூலைத் தந்து உள்ளார். நூல் நெடுகிலும் விரவிக் கிடக்கின்ற தகவல்கள் வியப்பூட்டுகின்றன!

அன்றைய சென்னை ராஜதானி, அதன் அங்கங்களாகத் திகழ்ந்த பகுதிகள், கிழக்கு இந்திய வணிக நிறுவனத்தின் பிடியில் இருந்து விக்டோரியா பேரரசியின் ஆளுகைக்கு மாறிய நிலை, இங்கிலாந்தில் வகுக்கப்பட்ட பட்டயச் சட்டம் தொடங்கி, உருண்டோடிய ஆண்டுகளில் உருவான பல சட்டங்கள், 1921-ல் அமைக்கப்பட்ட சென்னை மாகாணச் சட்டமன்றம், முதல் ஆளுநர் உரை, ஈரடுக்குச் சட்டமன்றம், அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் வளர்ந்த விதம், சென்னை ராஜதானியில் இருந்து கேரள, ஆந்திரா, கர்நாடகப் பகுதிகள் பிரிந்து சென்ற விவரம், இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள், அந்தச் சட்டமன்றம் இயங்கிய இடங்கள் அனைத்துமே, எளிதில் மனதில் பதியும்வண்ணம் கூறப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் எழுந்த அரசியல் விழிப்பு உணர்வு, சென்னை மாகாண ஆட்சியை பிரித்தானியப் பேரரசே ஏற்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, பேரரசி விக்டோரியாவுக்கு, 1855-ல் 14,000 பேர்களிடம் பெற்ற கையெழுத்தை, சென்னை வணிகர் காசுலு லட்சுமி நரசு செட்டி விண்ணப்பம் அனுப்பினார் என்பது, பலரும் அறியாத வியப்பூட்டும் செய்தி.

மெட்ராஸ் மகாஜன சபை, திராவிட மகாஜன சபை ஆகிய அமைப்புகள் உருவானதும், 1909-ல் சென்னை பிராமணர் அல்லாதார் சங்கம், பின்னர் சென்னை ஐக்கியக் கழகம், ஓராண்டுக்குப் பின்னர் டாக்டர் நடேசனார் தோட்டத்தில் அதுவே திராவிடர் சங்கமாகப் பரிணமித்ததும், 1916 ஜூன் திங்களில், திராவிடர் சங்க விடுதி அமைந்ததும், அதே ஆண்டு நவம்பர் மாதம்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சர் பி.டி.தியாகராயர், டி.எம்.நாயர், டாக்டர் நடேசனார் உருவாக்கிய தென்னிந்திய நல உரிமைச் சங்கமும், அதுவே நீதிக் கட்சியாகப் பெயர் தாங்கியதும், 1920 முதல் நான்கு தடவை நீதிக் கட்சி அரசுகளும், தந்தை பெரியாரின் விழுமிய தலைமையும், சேலத்தில் 1944-ல் திராவிடர் கழகம் உதித்ததும், அருமையாகச் சித்திரிக்கப்பட்டு உள்ளன.

அறிவு ஆசான் தந்தை பெரியார் அவர்கள் நாத்திகர் ஆனதும், பகுத்தறிவை ஏற்றதும், காங்கிரஸில் சேர்ந்ததும், தலைமை தாங்கியதும், தீண்டாமை எதிர்ப்பு, வைக்கம் போர், சேரன்மாதேவி குருகுல எதிர்ப்பு, வகுப்புவாரி உரிமைக் கிளர்ச்சி, காங்கிரஸை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டு 1932-ல் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தது, நாடு திரும்பிய பின் ‘தோழர்’ என்ற பதத்தையே விளிக்கும்போதும், பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்த வேண்டும் என்று அறிவித்தது, தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை விடுதலை இதழ் மூலம் அறிமுகப்படுத்தியது, இவை அனைத்தும் திராவிட இயக்கத்தின் நாற்றங்காலை அறியச் செய்வனவாகும். விடுதலைக்கு முன்பு நடைபெற்ற சென்னை மாகாணச் சட்டமன்றத் தேர்தல்கள் குறித்த செய்திகள், அந்தக் கால அரசியல் போக்கை உணர்த்துகின்றன.

சென்னை அடையாறு தியசாஃபிகல் சொஸைட்டி வளாகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், மெட்ராஸ் மகாஜன சபை உறுப்பினர்கள், ஆங்கில அரசுக்கு எதிராக ஓர் அமைப்பைத் தோற்றுவிக்க உறுதிகொண்டனர். இந்தக் கூட்டத்தில், இந்திய தேசிய காங்கிரஸுக்கு விதை ஊன்றிய ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஆலன் ஆக்டேவியன் ஹியூம் கலந்துகொண்டார் என்ற அரிய செய்தியை, இந்த நூலில் காண முடிகிறது.

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துச் சமர்க்களத்தில் வாள் ஏந்தியதும் தென் தமிழ்நாடுதான்; இந்தியாவின் விடுதலைக்கான ஓர் அமைப்புக்கான எண்ணம் உதித்ததும் சென்னையில்தான் என்பது, தமிழர்களின் வீறுகொண்ட மான உணர்ச்சிக்கு அடையாளங்கள்.

1937-ல் காங்கிரஸ் அரசு அமைந்தது, ராஜாஜி தலைமை, காங்கிரஸ் கட்சிக்குள் காமராஜர்-ராஜாஜி அணிகள் என முரண்பட்டது, காமராஜர் வென்றது, முதல்வர் ஆனது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆனது, நேரு மறைவுக்குப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பின்னர், சாஸ்திரி, இந்திரா காந்தியை பிரதமராகத் தேர்வு செய்யக் காமராஜர் காரணம் ஆனது, 69-ல் குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது, காமராஜர் மறைவுக்குப் பின் இரண்டும் ஒன்றானது, 71-ல் தொடங்கி ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸ் கட்சி சேர்ந்துகொண்ட கூட்டணிகள், 96-ல் தமிழ் மாநில காங்கிரஸ் பிறந்தது, பின்னர் காங்கிரஸிலேயே சங்கமித்தது, ஒவ்வொரு தேர்தலிலும் காங்கிரஸுக்குக் கிடைத்த இடங்கள் என, 133 ஆண்டுக்கால காங்கிரஸ் கட்சியின் வரலாறு, ரத்தினச் சுருக்கமாகப் பளிச்சிடுகின்றது.

அரசியல் சட்ட வரைவு குறித்தும், இந்தியாவில் மத்தியில் அமைந்த இடைக்கால அரசு குறித்தும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. 1936-ல், தமிழகத்தில் பொது உடைமை இயக்கம் பூத்தது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிளவு, மார்க்சிஸ்ட் கட்சி உதயம், இந்தக் கட்சிகள் பங்கேற்ற கூட்டணிகளும் தேர்தல்களும் பற்றிய தகவல்களைக் காணலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிடர் கழகத்தில் இருந்து வெளியேறி, திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கி, 1949 செப்டம்பர் 18-ல் ராபின்சன் பூங்காவில் உரை ஆற்றியது, லட்சோபலட்சம் மாணவர்களும் இளைஞர்களும் அண்ணாவின் தலைமையில் அணி திரண்டது, பொதுக்கூட்டங்கள், ஏடுகள் மூலம் தி.மு.க. மாபெரும் சக்தியாக வளர்ந்தது, 57 தேர்தலில் போட்டியிட்டது, 61-ல் ஈ.வெ.கி. சம்பத் தி.மு.க-வை விட்டு விலகியது, 63-ல் திராவிட நாடு கோரிக்கையை ஒத்திவைத்தது, 67 பொதுத்தேர்தலில் தி.மு-கழகம் அண்ணா தலைமையில் அரசு அமைத்தது, சென்னை மாகாணத்துக்கு ‘தமிழ்நாடு’ என, அண்ணா பெயர் சூட்டியது, சுயமரியாதைத் திருமணத்துக்குச் சட்ட ஒப்புதல் தந்தது, 69-ல், புற்றுநோய்க் காரணமாக அண்ணா மறைந்ததும், எம்.ஜி.ஆர். துணையுடன் கருணாநிதி முதல்வர் ஆனது, 71 பொதுத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற பிறகு, தி.மு-கழகத்தில் இருந்து எம்.ஜி.ஆர். நீக்கப்பட்டது, 76-ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது, அடுத்து நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் தி.மு.க. தோற்றது, 87-ல் எம்.ஜி.ஆர். மறைந்த பின்பு, மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தது, 91-ல் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டது, 93-ல் வைகோ தி.மு.க-வில் இருந்து நீக்கப்பட்டது, 96-லும் 2006-லும், தி.மு-கழகம் தேர்தலில் வென்று ஆட்சி அமைத்தது உள்ளிட்ட தி.மு-கழகத்தின் அரசியல் பயணம், விருப்பு வெறுப்பு இன்றித்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தீட்டப்பட்டு உள்ளது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எம்.ஜி.ஆர் தொடங்கியதன் பின்னணி, திண்டுக்கல் இடைத்தேர்தலில் பெற்ற மாபெரும் வெற்றி, 77-ல் எம்.ஜி.ஆர். முதல்வர் ஆனது, மூன்று முறை முதல்வராகத் தொடர்ந்தது, அவரது மறைவுக்குப் பின்னர் அண்ணா தி.மு.க-வில் நிகழ்ந்த பிளவு, ஜெயலலிதா தலைமை, அடுத்தடுத்து அமைந்த ஆட்சிகள் பற்றி அருமையாக விவரித்து உள்ளார்.

தி.மு.க. ஆட்சியின் சாதனைகள், அண்ணா தி.மு.க. ஆட்சியின் சாதனைகளை நடுநிலையோடு எழுதி உள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து 1993-ல் விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி வைகோ விலக்கப்பட்டதால், தி.மு.க. தொண்டர்கள் ஐவர் தீக்குளித்து மடிய, ‘மறுமலர்ச்சி தி.மு.க.’ பிறந்தது. லட்சிய தாகம் கொண்ட இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர்ந்தனர். இந்த இயக்கம் நடத்திய பேரணிகள், நடைபயணங்கள், மாநாடுகள், சந்தித்த போராட்டங்கள், சிறைச்சாலைகள் பற்றிய செய்திகள் இடம் பெற்று உள்ளன.

பாட்டாளி மக்கள் கட்சி, தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், பாரதிய ஜனதா கட்சி, ஃபார்வர்டு பிளாக், ஒடுக்கப்பட்டோர் உரிமை இயக்கங்கள் குறித்த செய்திகளையும் இந்த நூலில் காணலாம்.

விடுதலைக்குப் பின்பு நடைபெற்ற பொதுத்தேர்தல்கள், போட்டியிட்ட கட்சிகள், அவற்றுக்குக் கிடைத்த இடங்கள், இந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்கள் குறித்த விவரங்கள், ஆய்வாளர்களுக்கு பெரிதும் உதவிடும்.

தமிழக முதல் அமைச்சர்கள், தமிழக அரசியலின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள், தமிழகத்தில் கடந்த காலத்தில் தோன்றிச் செயல்பட்டு, கால வெள்ளத்தில் கரைந்துபோன கட்சிகள், தமிழகத்தின் ஆளுநர்கள், இவை அனைத்தையுமே கால வரிசைப்படித் தொகுத்து உள்ளார். ஏறத்தாழ 150 ஆண்டுக்காலத் தமிழக அரசியல் சரித்திரத்தை, இந்த நூல் அறிமுகப்படுத்துகிறது.

இன்றைய இளைஞர் உலகத்துக்குத் தேவையான நூலாக அமைந்து உள்ளது. அகில இந்திய அரசியல் கட்சிகளைப் படம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பிடித்து, ‘கட்சிகள் உருவான கதை’ என்று, அருணகிரி முன்பு எழுதி, விகடன் பிரசுரம் வெளியிட்ட நூலின் அணிந்துரையில், ‘எண்ணங்களை எழுத்து ஆக்கும் கணினிக் களஞ்சியமான அருணகிரிநாதன் படைத்து உள்ள இந்திய அரசியலின் ஆவணப் பேழை’ என வர்ணித்து இருந்தேன்.

‘தமிழ்நாட்டின் கதை’, தமிழக அரசியலின் காலக் கண்ணாடி.

தேர்வுகளுக்குச் செல்வோருக்கு வழித்துணையாகும் இந்த நூல், சுரங்கம் வெட்டிக்கொண்டு சேர்க்கும் தங்கமாக, கடலுள் மூழ்கி எடுத்துவரும் ஒளி முத்தாக, அனைவரின் கருத்துக்கும் விருந்தாகும் விதத்தில் அமைந்துள்ளது. இந்திய தேசிய காங்கிரஸ், பொது உடைமை இயக்கங்கள், பாரதிய ஜனதா கட்சி குறித்து மேலும் விரிவாக அறிய விழைவோர், அருணகிரி எழுதிய ‘கட்சிகள் உருவான கதை’ நூலையும் சேர்த்தே படிக்க வேண்டும்.

அருணகிரி, ஒரு தொலைநோக்குப் படைப்பாளி. இவரது எழுத்து ஆற்றல் தமிழ்நாட்டுக்கு வெகுபயன் வழங்கும். எழுத்துச் சிகரங்களில் சாதனைக் கொடி நாட்டிய ஹெரடோட்டஸ், பிளினி, ஹெச்.ஜி.வெல்ஸ், பண்டித நேரு போன்ற பேரறிவாளர்களின் நெஞ்சில் கிளர்ந்த தொலைநோக்கும், அறிவில் பூத்த நுண்மான் நுழைபுலமும், தென்தமிழ்நாட்டின் தகைசால் பகுத்தறிவு நெறி தழைத்த ஒரு குடும்பத்தில் பிறந்த அருணகிரியின் எண்ணத்தில், மதிநுட்பத்தில் புதைந்து கிடந்த உண்மை, அவரது எழுத்துச் சுடர்களில் பளிச்சிடுகிறது.

வாழ்வில் எனக்குக் கிடைத்த கருவூலங்களுள் ஒருவராக அவரை நான் நேசித்தாலும், அவரது ஊனிலும் உணர்விலும், என் மீது நீங்காப் பற்றுடன் அவர் இயங்கியபோதிலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அவர் அருந்தொண்டு ஆற்றும் நிலையிலும்கூட, துலாக்கோல் நிலையில் நின்று, காய்தல் உவத்தல் அகற்றி, தமிழக அரசியல் கட்சிகளை அவர் விவரித்து இருக்கும் பாங்கு மிகவும் அபூர்வமானது.

ஒவ்வொரு நூலகத்திலும், ஒவ்வொருவர் இல்லத்திலும் இடம் பெற வேண்டிய இந்த அரிய நூலினைத் தந்து உள்ள என் ஆருயிர்த் தம்பி அருணகிரிநாதன், தமிழகம் ஒளி பெற வேண்டும் எனும் தொலைநோக்கோடு தன்னை அர்ப்பணித்து இயங்கி வருகின்றார். அவரின் முயற்சிகளுக்குத் தோன்றாத் துணையாக, தோள் கொடுத்து ஊக்குவிக்கும் ‘விகடன் பிரசுரத்தார்’,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

‘தேடல்’ என்ற சொல்லுக்கு இலக்கணமாக இயங்கிக்கொண்டு இருக்கும் அருணகிரி, அரிய நூல்கள் பலவற்றைப் படைத்து உள்ளார்; அந்த வரிசையில் இன்னும் பல ஆய்வு நூல்கள் அணிவகுத்திட வாழ்த்துகிறேன்!

- வைகோ

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக அரசியல் ஓர் அறிமுகம்!

‘இந்திய அரசியல் கட்சிகள்’ என்ற தலைப்பில், ‘சங்கொலி’ வார இதழில் நான் எழுதி வந்த தொடர் கட்டுரைகளை, ‘கட்சிகள் உருவான கதை’ என்ற தலைப்பில், ‘விகடன் பிரசுரம்’ வெளியிட்டுச் சிறப்பித்தது. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஏற்பு அளிக்கப்பட்ட 25 அரசியல் கட்சிகளைப் பற்றிய குறிப்புகள், அந்த நூலில் இடம் பெற்று இருந்தன. 20-ம் நூற்றாண்டில், இந்திய அரசியல் நிகழ்வுகள் குறித்து அறிந்துகொள்ள, ஒரு திறவுகோல்போல அந்த நூல் அமைந்து இருப்பதாக, பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் பாராட்டுகள் குவிந்தன. சுருக்கமாகவும் சிறப்பாகவும் எழுதி இருப்பதாக, வரலாறு மற்றும் அரசியல் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் வாழ்த்தும் நன்றியும் கூறினர்.

அவர்களில் சிலர், ‘தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளைப் பற்றி ஏன் எழுதவில்லை?’ என்று கேட்டார்கள். ‘அதுபற்றிய குறிப்புகளை, தனிப் புத்தகமாக எழுதிக்கொண்டு இருக்கிறேன்’ என்று குறிப்பிட்டேன்.

19, 20-ம் நூற்றாண்டுகளின் அரசியல் நிகழ்வுகள் குறித்த செய்திகள், ஆவணங்களைத் தேடிப் பிடிப்பது மிகவும் கடினமான பணியாக இருந்தது. எனவே, நீண்ட தாமதம் ஆயிற்று. தொடர்ச்சியாக எழுத முடியவில்லை. இடையில், பத்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி முடித்தேன். அவ்வப்போது கிடைத்த குறிப்புகளைத் தொகுத்துக்கொண்டே வந்தேன். தற்போது ‘தமிழ்நாட்டின் கதை’ என்ற தலைப்பில், விகடன் பிரசுர வெளியீடாக, உங்கள் கைகளில் தருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் சங்க கால நிகழ்வுகளை, சங்க இலக்கியப் பாடல்களின் வழியாக நாம் அறிகிறோம். சேர, சோழ, பாண்டிய பல்லவர்களின் ஆட்சி பற்றி, கல்வெட்டுகளின் வாயிலாக அறிகிறோம்.

கிழக்கு இந்திய வணிக நிறுவனம், தமிழகத்தில் கால் பதித்த

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நாள் முதலான அவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தும், ஆவணங்களாக, காகிதங்களில் பதிவு செய்யப்பட்டு உள்ளன. சென்னை எழும்பூர் தொடர்வண்டி நிலையத்துக்கு எதிரே அமைந்து உள்ள, சிவப்பு நிறக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்ற, தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தில், அவற்றை நீங்கள் பார்க்கலாம்.

தமிழ்நாட்டு அரசியல் நிகழ்வுகளை மட்டும் அன்றி, உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறுகின்ற மாற்றங்களையும், வினாடிக்கு வினாடி வீட்டு வரவேற்பு அறையில் உள்ள தொலைக்காட்சியில் இந்த நாட்களில் பார்க்கிறோம். இணையங்கள், அலைபேசிகளின் வழியாக அடுத்த நொடியிலேயே அறிந்துகொள்கிறோம். தமிழகத்தில் தனியார் தொலைக்காட்சிகளின் வருகைக்கு முன்பு, 1993-ம் ஆண்டுக்கு முந்தைய நிகழ்வுகளை, தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரப் பிரிவு, அரசுத் தொலைக்காட்சியான ‘தூர்தர்ஷன்’ எடுத்த ஒரு சில பழைய ஆவணப் படங்களில்தான் (Documentary) பார்க்க முடியும். இந்திய விடுதலைக்கு முன்பான நிகழ்வுகளை, அந்த நாட்களில் வெளியான ஏடுகளில் மட்டுமே பார்க்க முடியும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் (eci.gov.in), இந்தியாவில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் குறித்த முழு விவரங்களும் இடம் பெற்று உள்ளன.

இன்றைக்குத் தமிழகத்தில் மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட உறுப்பினர்கள், ஆட்சி நடத்துகிறார்கள். இந்த ஆட்சியின் தொடக்கம் என்ன, எவ்விதம் வளர்ச்சி அடைந்தது, இப்போது என்ன நிலைமை என்பதைச் சுருக்கமாகக் கூறி, 20-ம் நூற்றாண்டுத் தமிழக அரசியல் நிகழ்வுகளை, ஒரு பறவையின் பார்வையில் தொகுத்து எழுதி இருக்கிறேன்.

சுமார் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக எங்களோடு இணைந்து பணி ஆற்றிய, திராவிட இயக்கத்தின் முதுபெரும் எழுத்தாளர்களுள் ஒருவரான மதுரை மா.பாண்டியன் அவர்கள் இயற்கை எய்துவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு, ‘சங்கொலி’-யில் தமது தேர்தல் நினைவுகளை, ஒரு சிறிய கட்டுரையாகத் தொகுத்து எழுதினார். அந்தக் கட்டுரையை இந்த நூலில் சேர்த்து இருக்கிறேன். அன்றைய காலகட்டத்தில், தமிழகத்தில் தேர்தல்கள் எப்படி நடந்தன என்பதை ஒப்பிட்டுப் பார்க்க அந்தக் குறிப்புகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உதவும்.

அனைத்து இந்திய அரசியல் களத்தில் இருந்து, தமிழக அரசியல் களம் மாறுபட்டது. இந்தியத் துணைக்கண்டத்தில் 200 ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர்களை அகற்ற, இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் விடுதலைப் போராட்டம் நடத்தி வந்த நாட்களில், ‘2000 ஆண்டுகளாக இருந்து வருகின்ற ‘சாதி, மத, சமூகப் பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகளை முதலில் அகற்றுவோம்’ என்பதற்கான சமூகநீதிக் களமே, சென்னை மாகாண அரசியலில் முன்னுரிமை பெற்றது. அந்தக் காலகட்டத்தில் தலைவர்கள், சாதிப் பெயர்களாலேயே அடையாளம் காணப்பட்டார்கள். எனவே, தவிர்க்க இயலாத நிலையில், சாதிப் பெயர்களை எழுத வேண்டியதாயிற்று.

இந்தியாவின் ஏனைய மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சிகள் அமைந்த காலத்தில், ‘வெள்ளையருக்கு வால் பிடித்த கட்சி’ என்று விமர்சிக்கப்பட்ட நீதிக் கட்சி, சென்னை மாகாணத் தேர்தல்களில் நான்கு முறை வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. அதற்கான காரணங்களை, ஒரு நூற்றாண்டுக் கால அரசியல் நிகழ்வுகளையும் பல்லாயிரம் பக்க ஆவணங்களையும் ஒரே நூலில் பதிவு செய்துவிட முடியாது. இந்திய விடுதலையை (1947) ஒரு கோடாகக் கொண்டு, தமிழக அரசியலை இரண்டாகப் பிரித்து எழுதி இருக்கிறேன்.

திருக்குறளைப் பற்றிக் கூறும்போது, ‘அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தி...’ என்று சொல்வார்கள். அதுபோல, கடல் போன்ற தமிழக அரசியல் நிகழ்வுகளை, இந்த நூலுக்குள் புகுத்த முயற்சித்து இருக்கிறேன்.

பல ஆண்டுகளாக நான் சேகரித்த குறிப்புகள், செய்தித்தாள்களைப் படித்ததில், நினைவில் நின்ற குறிப்புகளைத் தொகுத்தும், வயதில் மூத்த பெரியவர்கள் பலருடன் உரையாடி, அவர்கள் பார்த்தவற்றைக் கேட்டும் எழுதி இருக்கிறேன்.

இவற்றுள், பல செய்திகள் விடுபட்டு இருக்கலாம். பல செய்திகளுக்கு உரிய முறையில் விரிவாக விளக்கம் அளிக்கப்படாமல் இருக்கலாம். இதில் குறிப்பிடப்பட்டு உள்ள ஒவ்வொரு செய்தி குறித்தும் விளக்கமாக அறிந்துகொள்ள விழைவோர், அந்தத் தலைப்பு தொடர்பான நூல்களை, செய்திகளைத் தேடிப் படிக்கலாம். இந்த நூலில் கட்டாயம் இடம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற வேண்டிய செய்திகள் குறித்து வாசகர்கள் தெரிவிக்கின்ற கருத்துகள், அடுத்தடுத்த பதிப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்த நூலில், தலைவர்களின் அரசியல் வாழ்க்கையின் வெற்றி-தோல்விகள், சாதனைகள் குறித்து ஆராயப்படவில்லை. ஒட்டுமொத்தத் தமிழக அரசியல் குறித்தே விவாதிக்கப்படுகிறது. முதல் அமைச்சர்களைப் பற்றிய குறிப்புகளில், அன்றைய நாட்களில் நிகழ்ந்த அரசியல் நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. மத்திய, மாநில அமைச்சர்களின் பெயர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் தரப்பட்டு உள்ளன. தமிழக அமைச்சர்கள் பற்றிய குறிப்புகளும் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டு உள்ளன. அவ்வப்போது அமைச்சரவையில் நடைபெற்ற துறை மாற்றங்கள் குறித்து எழுதவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிய முழு விவரக் குறிப்புகளை, தனிப் புத்தகமாக எழுத வேண்டும்.

‘சட்டமன்றம் அமைந்த கதை’ என்ற தலைப்பில் உள்ள கட்டுரையை, தமிழ்நாடு சட்டமன்ற ஆவணங்களில் இருந்து மொழிபெயர்த்து உள்ளேன். அதில் ஒரு சில பத்திகள் மட்டுமே, என்னுடைய கருத்துகள். செய்திக் குறிப்புகளாகவே இந்த நூலை எழுதி உள்ளேன். ஒரு சில செய்திகளை மட்டும், தேவை கருதி சற்றே விரிவாக எழுதி உள்ளேன். தமிழக அரசியல் குறித்த ஓர் அறிமுகமே இந்த நூல்.

இந்திய ஆட்சிப் பணித் தேர்வு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு உள்ளிட்ட போட்டித் தேர்வுகளை எழுதுவோர் மற்றும் ஆய்வாளர்களுக்கு, இந்த நூல் சிறந்த ஒரு கையேடாக அமையும். எதிர்கால இளைய தலைமுறை, கடந்த கால நிகழ்வுகளைச் சுருக்கமாக ஒரே நூலில் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நூலை எழுதினேன்.

தகவல் பிழைகள் நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக, அரசியல் ஆர்வம் உள்ள பத்துக்கும் மேற்பட்ட நண்பர்களிடம், இந்த நூலைக் கொடுத்துப் படிக்கச் செய்தேன். அவர்கள் சில திருத்தங்களைக் கூறினார்கள்; அருமையாக எழுதி இருப்பதாகப் பாராட்டினார்கள். அவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல் ஆக்கத்தின்போது, கணினி ஒளி அச்சுப் பணிகளில் உதவிய மஞ்சநாயக்கன்பட்டி இளங்கோ, இளம்புவனம் ஆறுமுகம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆகியோருக்கு நன்றி.

இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஃபார்வர்டு பிளாக், குடியரசுக் கட்சி உள்ளிட்ட தேசிய கட்சிகளின் வரலாற்றை, எனது ‘கட்சிகள் உருவான கதை’ நூலில் விரிவாக எழுதி உள்ளேன். எனவே, இந்த நூலில், தமிழகத் தேர்தல் களத்தில் அந்தக் கட்சிகளின் பங்கு குறித்த தகவல்களை மட்டும் தந்து உள்ளேன். இரண்டு நூல்களையும் சேர்த்தே படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,

அருணகிரி

அலைபேசி: 94443 93903

e-mail: writerarunagiri@gmail.com

face book: arunagiri sankarankovil

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்த நூல்...

என் வாழ்க்கையின் ஒளியாகவும்,
நூல் ஆக்கப் பணிகளுக்கு உற்ற பெருந்துணையாகவும்
திகழ்கின்ற
தலைவர் வைகோ அவர்களுக்கு...

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உள்ளே...

1. தமிழக அரசியல் களம்
2. தமிழக கட்சிகள்
3. சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தல்கள்
4. நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்
5. தமிழக முதல் அமைச்சர்கள்
6. தமிழக ஆளுநர்கள்
7. புதுச்சேரி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக அரசியல் களம்

சட்டமன்றம் அமைந்த கதை

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காடுகளில் அலைந்து திரிந்த மனிதன், சிறுசிறு குழுக்களாக ஒன்று சேர்ந்து வாழத் தொடங்கினான். அக்குழுவினர், தங்களுக்குள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மக்கள்தொகை பெருகியது; கிராமங்களும் நகரங்களும் உருவாகின; நாகரிகம் பிறந்தது; நாடு என்ற அமைப்பு உருவானது; நாட்டின் தலைவராக மன்னர்கள் பொறுப்பேற்றார்கள். அரசு அமைந்தது; அமைச்சரவை பொறுப்பேற்றது. அமைச்சர்கள், மன்னனுக்கு அறிவுரை பகர்ந்தார்கள். அரசனின் ஆணைகள் சட்டமாகின. அதை எதிர்த்துப் பேசுவோர், சிறைகளில் பூட்டப்பட்டனர், காணாமல் போயினர். பல நூற்றாண்டுகளாக இந்த நிலை தொடர்ந்தது.

காலப்போக்கில், மன்னர்கள் ஆட்சி வலுவிழக்கத் தொடங்கின. மக்கள் ஆட்சி மலரத் தொடங்கியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், நாட்டை ஆளத் தொடங்கினார்கள். தமிழகத்தில் சோழ மன்னர்களின் ஆட்சியில், பத்தாம் நூற்றாண்டிலேயே, ‘குடவோலை’ முறை மூலம் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்ற செய்திகளை கல்வெட்டுகள் மற்றும் ஓலைச்சுவடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

மனிதர்கள் சமுதாயமாகக் கூடி வாழத் தலைப்பட்டவர்கள். யாருடைய உதவியும் இன்றி ஒருவர் தனித்து வாழ்ந்துவிட முடியாது. மனிதன் நாகரிகமாக வாழ்வதற்கு ஒரு வரையறை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தேவை. அந்த வரையறைதான் ‘சட்டம்’ ஆகும். நமக்கு நாமே சட்டதிட்டங்களை வகுத்துக்கொண்டு, அதன்படி இயங்க வேண்டும். அதுவே வளர்ச்சிக்கு வழிவகுக்கும். சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறி, சட்டங்களை இயற்றுவதற்காகத்தான் நாடாளுமன்றம், சட்டமன்றம் ஆகிய அமைப்புகள் இயங்குகின்றன.

பண்டைய நாட்களில், கிரேக்கத்தில் நாடாளுமன்றம் போன்ற அமைப்பு செயல்பட்டது. உலகில் முதன்முதலாக, ஐரோப்பிய நாடுகளில்தான் சட்டங்களை இயற்ற நாடாளுமன்றங்களும் சட்ட மன்றங்களும் அமைந்தன. அட்லாண்டிக் பெருங்கடலின் வட பகுதியில், கனடாவுக்கும் இங்கிலாந்துக்கும் நடுவே அமைந்துள்ள ‘ஐஸ்லாந்து’ என்ற தீவின் நாடாளுமன்றம்தான் கி.பி. 12-ம் நூற்றாண்டில் அமைந்து, இன்றைக்கும் உலகில் இயங்கி வருகின்ற மிகப்பழமையான நாடாளுமன்றம் ஆகும்.

இங்கிலாந்து நாட்டில் நாடாளுமன்றம் என்ற அமைப்பு உருவாகி, சுமார் 400 ஆண்டுகள் கடந்துவிட்டன. ‘மேக்னா கார்ட்டா’ எனப்படுகின்ற இங்கிலாந்து அரசியல் சட்டம் வரையப்பட்டு, 800 ஆண்டுகள் கடந்துவிட்டன.

இந்தியா விடுதலை பெற்று 65 ஆண்டுகள் கடந்துவிட்டன. அரசியல் சட்டம் வரைந்து, இந்தியா ஒரு குடியரசு என அறிவிக்கப்பட்டு 62 ஆண்டுகளே ஆகின்றன. இருபதாம் நூற்றாண்டில் தொடங்கி இன்றுவரையிலும் இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களால் இந்தியாவில் மக்களாட்சி நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது; அரசின் செயல்பாடுகள் நாளுக்கு நாள் பல்வேறு தளங்களில் விரிவு பெறுகின்றன. ஒவ்வொரு நாடாளுமன்றக் கூட்டத்தொடரிலும் புதியபுதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, உறுப்பினர்களின் கருத்துகளைப் பரிமாறி, தேவையான திருத்தங்களுடன் ஏற்கப்படுகின்றன. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன், சட்ட வடிவம் பெறுகின்றன.

1776-ல் அமெரிக்கா விடுதலை பெற்று, 236 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றுமுதல் இன்றுவரையிலும் அந்த நாட்டின் குடியரசுத்தலைவர் தேர்தல், நான்கு ஆண்டுகள் இடைவெளியில், சீராக நடைபெற்று வருவது வியப்புக்குரியது. குடியரசுத்தலைவர் இறந்தாலும், இடைத்தேர்தல் கிடையாது. துணைக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

குடியரசுத்தலைவரே, அதிபராகி விடுகிறார். அடுத்தது யார்? என்ற அரசியல் குழப்பங்களுக்கு இடம் இல்லை. மக்களாட்சி வலுவாக நிலைநிறுத்தப்பட்டு இருக்கிறது. அதனால், இன்றைக்கு உலகின் மிகப்பெரிய வல்லரசாக அந்த நாடு திகழ்கிறது.

எனவே, ஒரு நாட்டின் அரசியல் களம் அமைதியாக இயங்கி, மக்கள் கருத்துகளுக்கு மதிப்புக் கிடைத்தால், அந்த நாடு விரைவான வளர்ச்சியைப் பெற முடியும்; வல்லரசாகத் திகழும்.

விடுதலைக்குப் பிறகு இந்திய மக்களாட்சியின் வளர்ச்சி பெருமைப்படத் தக்க வகையிலேயே அமைந்துள்ளது. அமெரிக்காவைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக மக்கள்தொகையைக் கொண்ட இந்தியா, உலகிலேயே மிகப் பெரிய மக்களாட்சி நாடு என்ற பெருமையைப் பெற்றிருக்கின்றது. ஏனெனில், நம்மைவிடக் கூடுதலாக மக்கள் தொகை கொண்ட சீனாவில் 1948-ம் ஆண்டு புரட்சி வெடித்து, பொது உடைமையாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றியது முதல், இன்றுவரையிலும் அங்கே தேர்தல் என்பதே கிடையாது. எதிர்க்கட்சிகள் வாயைத் திறக்க முடியாது. பெயரளவுக்கு மட்டுமே சில கட்சிகள் இயங்குகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொறுப்புகளுக்குத்தான், அக்கட்சிக்கு உள்ளேயே தேர்தல் நடைபெறுகிறது. அவர்களே நாடாளுமன்ற உறுப்பினர்களாகச் செயல்படுகின்றனர். அக்கட்சியின் பொதுச்செயலாளரே நாட்டின் தலைவராகச் செயல்படுகின்றார்.

ஆப்பிரிக்காவில்...

எத்தனையோ ஆப்பிரிக்க நாடுகளில், இன்றைக்கும் அரசாங்கத்தின் செயல்பாடுகள், தலைநகரைச் சுற்றியுள்ள பகுதிகளோடு நின்று விடுகிறது. உள்நாட்டுப் பகுதிகளில், சட்டம்ஒழுங்கு என்பதே கிடையாது. இந்தியாவில் உள்ள சாதிகளைப் போல, ஆப்பிரிக்க நாடுகளில் அந்தந்தப் பகுதியில் வலுப்பெற்று இருக்கின்ற இனக்குழுக்களின் ஆட்சிதான் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அங்கே தடி எடுத்தவன் தண்டல்காரன்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

200 ஆண்டுகளுக்கு முன்பு வரையிலும் இந்தியாவில்கூட நிலைமை அப்படித்தான் இருந்தது.

இந்தியா ஒரே நாடு அல்ல; ‘இந்தியா’ என்ற பெயரும் வரலாற்றில் இல்லை. பல்வேறு இனங்கள், பல்வேறு மொழிகள், மாறுபட்ட பழக்கவழக்கங்களைக் கொண்ட இந்திய நிலப்பரப்பு, ஒரு துணைக்கண்டம்.

இங்கே ஆங்கிலேயர்களின் வருகைக்கு முன்னர், 560-க்கும் மேற்பட்ட சிற்றரசுகள் இருந்தன. குறுநில மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அவ்விதம் சிதறிக்கிடந்த சிற்றரசுகளை எல்லாம் ஒருங்கிணைத்து, ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தது ஆங்கிலேயர்களின் ஆட்சி. அப்போதும்கூட, அவர்களுக்கு ஆதரவாக இருந்த பல்வேறு சமஸ்தானங்கள் தனி அரசுகளாகத்தான் இயங்கி வந்தன. எடுத்துக்காட்டாக, தமிழகத்தில் புதுக்கோட்டை சமஸ்தானம், திருவாங்கூர் கொச்சி சமஸ்தானம், மைசூர் ராஜ்யம், ஹைதராபாத் நிஜாம் சமஸ்தானம் போன்றவை இந்தியா விடுதலை பெறுகின்ற வரையிலும், தனி ஆட்சிப் பகுதிகளாகவே இயங்கி வந்தன.

1947-க்குப் பின்னர்தான் ‘இந்தியா’ என்ற ஓர் அமைப்பு, ஒரே நாடு எனக் கூறப்படுகிறது.

இந்தியாவில், சட்டத்தின் ஆட்சி எப்போது தொடங்கியது? எவ்வாறு வளர்ச்சி பெற்றது? இந்திய நாடாளுமன்றமும், மாகாணச் சட்ட மன்றங்களும் எப்போது உருவாகின?

இன்று தமிழ்நாடு சட்ட மன்றத்தில் 234 உறுப்பினர்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஒரே நாளில் முடிவு செய்யப்பட்டதா?

இதுகுறித்த சுவையான தகவல்களைச் சுருக்கமாகக் காண்போம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை ராஜதானி

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கிழக்கிந்திய நிறுவனம் (East India Company) 1639-ம் ஆண்டு, மதராச பட்டணத்தை விலைக்கு வாங்கியது. கோட்டை ஒன்றைக் கட்டினார்கள். அதேவேளையில் அவர்கள் மச்சிலிப்பட்டினம், புலிகாட் ஏரிக்கு அருகில் உள்ள அர்மகாவ்ன் ஆகிய இடங்களிலும் கால் பதித்திருந்தனர். அதன்பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக உள்ளே புகுந்து தமிழ் மண்ணைக் கைப்பற்ற முயன்ற ஆங்கிலேயர்களை, ஆங்காங்கு இருந்த குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள் எதிர்த்தனர். ஆனால், அவர்கள் அனைவரையும் ஆங்கிலேயர்கள் கொன்று குவித்தனர். இவ்வாறாக, தமிழகமும் இந்தியத் துணைக்கண்டத்தின் பெரும்பகுதிகளும் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் ஆளுகையின் கீழ் வந்தது. பின்னர் பிரித்தானியப் பேரரசின் ஆளுகைக்கும் உட்பட்டது. அவர்கள், இந்தியாவில் ஓர் அரசமைப்பை உருவாக்கினார்கள்.



https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



பிரிட்டிஷ் இந்தியா - **1937**

இந்தியாவில் சட்டமன்றங்களின் வரலாறு, 18-ம் நூற்றாண்டில் இருந்து தொடங்குகிறது. இன்றைய தமிழ்நாடு, அப்போது சென்னை ராஜதானி, (மெட்ராஸ் பிரசிடென்சி Madras Presidency) ஆட்சியின் ஒரு பகுதியாக இருந்தது. தொடக்கத்தில் இது ‘புனித ஜார்ஜ் கோட்டை ராஜதானி’ (Presidency of Fort St. George) என்று அழைக்கப்பட்டது.

தற்போதைய கேரள மாநிலத்தின் ஒரு பகுதியான திருவாங்கூர் கொச்சி சமஸ்தானம், கர்நாடக மாநிலத்தின் ஒரு பகுதியான மைசூர் சமஸ்தானம், ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் ஒரு பகுதியான ஹைதராபாத் நிஜாம் சமஸ்தானம், தமிழகத்தின் புதுக்கோட்டை சமஸ்தானம் ஆகிய பகுதிகளைத் தவிர்த்து, இன்றைய தமிழகம், வட கேரள மாநிலத்தின் மலபார் பகுதிகள், லட்சத்தீவுகள், ஆந்திர மாநிலத்தின் ராயலசீமா, கடலோர ஆந்திரப் பகுதிகள், ஒடிஸா மாநிலத்தின் தென்பகுதியில் உள்ள கஞ்சம், மல்காவ்ன்கிரி, கோரபுட், ராயகடா, நவரங்பூர், கஜபதி ஆகிய மாவட்டங்கள், கர்நாடக மாநிலத்தின் பெல்லாரி, தென் கனரா மற்றும் உடுப்பி ஆகிய பகுதிகள், சென்னை ராஜதானி ஆட்சிப் பரப்புக்குள் இடம் பெற்றிருந்தன.

1947-ம் ஆண்டு வரையிலும் ‘சென்னை ராஜதானி’ (Madras Presidency) என்றே அழைக்கப்பட்டு வந்தது. இந்தியா விடுதலை பெற்றதற்குப் பின்னர், ‘சென்னை மாகாணம்’ (Madras State) என்று பெயர் மாற்றம் பெற்றது. 1967-ல் ‘தமிழ்நாடு’ என பெயர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மாற்றம் பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சியில் சென்னை ராஜதானியைப் போன்றே பம்பாய், வங்காளம், (இன்றைய வங்காளதேசம், பர்மா ஆகிய நாடுகள் உட்பட) உத்தரப் பிரதேசம், வடமேற்கு மாகாணங்கள் (இன்றைய பாகிஸ்தான்) ஆகிய பெரிய மாகாணங்களும் தனித்தனி ஆட்சிப் பகுதிகளாக இயங்கி வந்தன. இன்றைய இலங்கை தொடக்கத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அதிகார எல்லைக்கு உள்ளே சிலகாலம் இருந்தது.

ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி ஆளுநர்கள் ஆட்சிப்பொறுப்பை மேற் கொண்டு வந்தார்கள். ஆட்சி ஒழுங்கு முறைகளை வகுக்கும் அதிகாரம் ஆளுநரின் ஆட்சிக்குழுவிடம் இருந்தது.

1773-ம் ஆண்டு, இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் இயற்றப்பட்ட ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி (Regulating Act 1773) வங்காள மாகாணத்தின் கவர்னர், இந்தியாவின் அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் தலைவராக (Governor General) அறிவிக்கப் பட்டார். அதே வேளையில், மாகாண ஆட்சி குறித்து ஆணைகள் பிறப்பிக்கும் மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் தடை செய்யப்படவில்லை. கவர்னர் ஜெனரல் கொல்கத்தாவில் இருந்து இயங்கியதால், அந்நகரம் இந்தியாவின் அறிவிக்கப்படாத தலைநகரமாக ஆனது. 1911-ம் ஆண்டில்தான் கொல்கத்தாவில் இருந்து டெல்லிக்குத் தலைநகரம் மாறியது.

பட்டயச் சட்டம்

1833-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ‘பட்டயச் சட்டத்தின்படி’ (The Charter Act of 1833), கவர்னர் ஜெனரலின் ஆட்சிக் குழுவில் மாகாண ஆளுநர்களைத் தவிர, நான்காவதாக ஓர் உறுப்பினர் இடம் பெற வகை செய்யப்பட்டது.

மாகாணங்கள் தனித்தனியாகச் சட்டம் இயற்றும் அதிகாரம் தடை செய்யப்பட்டது. மாறாக, மாகாணங்கள் இயற்ற வேண்டிய சட்டங்கள், வகுக்க வேண்டிய திட்டங்கள் குறித்து தங்களது கருத்துகளை மட்டும் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்ப வேண்டும் என்று வரையறுக்கப்பட்டது.

1853-ம் ஆண்டில் ஒரு ‘பட்டயச் சட்டம்’ (The Charter Act of 1853) இயற்றப்பட்டது. இதன்படி, சட்டம் இயற்றும் குழுவின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நடவடிக்கைகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தது. பகுதிநேர உறுப்பினராக இருந்த சட்ட உறுப்பினர், முழு தகுதிபெற்ற உறுப்பினரானார். மேலும் வங்காள மாகாணத்தின் தலைமை நீதிபதி, துணை நீதிபதி, உத்தரப்பிரதேசம், வடமேற்கு மாகாண அரசுகளின் சார்பில் ஓர் உறுப்பினர், ஆளுநர்களின் சார்பில் ஓர் உறுப்பினர் அக்குழுவில் புதிதாக இடம் பெற்றனர். மொத்தத்தில் 12 உறுப்பினர்கள் கொண்டதாக அக்குழு விரிவு பெற்றது.

சென்னை மாகாணத்தில் இருந்து எலியட் என்பவர் அக்குழுவில் உறுப்பினராக இடம் பெற்றார். மன்ற நடவடிக்கைகளைக் காண பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்தக் குழுதான் இந்தியாவில் முதலாவது சட்டமன்றத்தை அமைப்பதற்கு வழிவகுத்தது.

1833-ம் ஆண்டில் இருந்து 1861-ம் ஆண்டு வரையிலும் கவர்னர் ஜெனரலின் ஆட்சிக்குழுதான் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளவும் சட்டம் இயற்றவும் அதிகாரம் பெற்று செயல்பட்டு வந்தது.

கிழக்கிந்திய வணிக நிறுவனத்திடம் (East India Company) இருந்த இந்திய நிர்வாகத்தை 1859-ம் ஆண்டு, இங்கிலாந்து மகாராணி விக்டோரியா ஏற்றுக் கொண்டார். இந்திய விவகாரங்களைக் கவனிப்பதற்காக அரசின் சார்பில் ஒரு செயலாளரை (Secretary) நியமித்தார். அவர் ‘இந்திய செகரட்டரி’ என்றும் ‘இந்திய அமைச்சர்’ என்றும் அழைக்கப்பட்டார்.

அப்போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த கேனிங் பிரபு (Lord Canning), வைஸ்ராய் என அழைக்கப் பட்டார்.

ஆட்சிக் குழுவுக்கும் கவர்னர் ஜெனரலுக்கும் இடையே சில பிரச்னைகள் ஏற்பட்டன. குழு உறுப்பினர்கள் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்ட விரும்பினர். ஆனால் சட்டம் இயற்றும் பணியைத் தவிர அரசின் பிற நடவடிக்கைகளில் தலையிட இந்த மன்றத்துக்கு உரிமை இல்லை என்ற நிலையை அரசு கடைப் பிடித்தது. சில பொருட்களுக்கு வரி விதிப்பது தொடர்பாக, அப்போதைய சென்னை மாகாண ஆளுநர் சர். சார்லஸ் டிரவெல்யன் என்பவருக்கும் அப்போதைய இந்திய அரசுக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக 1861-ம் ஆண்டு, ‘இந்தியச் சட்டமன்றங்களின் சட்டம்’ (The Indian Councils Act of 1861) என்ற புதிய சட்டம் இயற்றப்பட்டது. இது சட்டமன்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வரலாற்றில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது.

அதன்படி, கவர்னர் ஜெனரலின் ஆட்சிக்குழுவுக்கும் மும்பை, சென்னை மாகாண ஆட்சிக்குழுக்களுக்கும் இடையே ஒருங்கிணைப்பு ஏற்பட்டது. குறைந்த எண்ணிக்கையில் புதிய உறுப்பினர்கள் குழுவில் இடம் பெற்றனர். அரசு அதிகாரிகள் தவிர, சரிபாதி உறுப்பினர்கள் வெளியிலிருந்து நியமிக்கப்பட்டனர். கவர்னர் ஜெனரலின் குழுவில் 6 உறுப்பினர்களுக்குக் குறையாமலும் 12 உறுப்பினர்களுக்கு மிகாமலும் புதிய உறுப்பினர்கள் இடம் பெற்றனர். இந்தக் குழு சட்டம் இயற்றும் பணிகளை மட்டும் செய்தது.

1833-ம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி பறிக்கப்பட்ட சட்டம் இயற்றும் உரிமைகளை 1861-ம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட இந்தியச் சட்டமன்றங்களின் சட்டம், மீண்டும் ஆட்சிக் குழுவிடமே திருப்பிக்கொடுத்தது.

மாகாணத்தில் சட்டம் ஒழுங்கைப் பராமரித்து அமைதியை நிலைநாட்டவும் சிறப்பான ஆட்சி நடைபெறுவதற்கும் தேவையான சட்டங்களை தாமே இயற்றிக் கொள்ளும் உரிமை சென்னை மாகாண அரசுக்கு வழங்கப்பட்டது.

சட்டம் இயற்றும் பணிகளைச் சிறப்பாகச் செய்வதற்காக, சென்னை மாகாண ஆளுநரின் ஆட்சிக்குழு விரிவு படுத்தப்பட்டது. சென்னை மாகாண அரசின் தலைமை வழக்கறிஞர் (Advocate General) சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேலும் 8 உறுப்பினர்களும் (Adhoc) ஆளுநரின் குழுவில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். அவர்களுள் அரசு அதிகாரிகள் தவிர, சரிபாதி உறுப்பினர்கள் வெளியில் இருந்து ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். அவர்களுடைய பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டது.

ஆளுநரின் ஆட்சிக் குழுவிலிருந்து தனித்து இயங்கிய இந்தக் குழுதான், எதிர்காலத்தில் சட்டமன்றங்கள் தனித்து இயங்குவதற்கான விதையை ஊன்றியது. சட்டங்களை இயற்றுவது குறித்து இந்தக் குழுவினர் தெரிவித்த பெரும்பாலான கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. எனவே, இக்குழுவின் மதிப்பு உயர்ந்தது. இவ்வகையில் உருவாக்கப்பட்ட மாகாணச் சட்டமன்றங்கள் நடுவண் அரசுக்கு ஆலோசனை தரும் குழுவாக மட்டுமே இருந்து வந்தது. நடுவண் சட்டமன்றம் இயற்றுகின்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சட்டங்களில் மாகாணச் சட்டமன்றங்கள் குறுக்கீடு எதுவும் செய்ய முடியாது.

இந்தக் காலகட்டத்தில் ‘இந்திய நாட்டு ஆட்சியில் இந்திய மக்களுக்குப் பங்கு அளிக்க வேண்டும்; தேர்தலை நடத்தி சட்டம் இயற்றுகிற மன்றத்தில் அவர்களுக்கு இடம் தர வேண்டும்’ என்ற கோரிக்கைகள் 1885-ம் ஆண்டு முதல் எழுந்தன. இந்த ஆண்டில்தான் ‘இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம்’ தோன்றியது.

இதையடுத்து இந்தச் சபையின் நடவடிக்கைகளை முறைப்படுத்த 1892-ம் ஆண்டு, ‘இந்தியச் சட்டமன்றங்கள் சட்டம்’ (The Indian Councils Act 1892) நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டம் மேலும் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. இதன்படி, மத்திய சட்டமன்றத்தின் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்தது. சென்னை மாகாண சட்ட மன்றத்தின் கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்தது. அவர்களுள் அரசு அதிகாரிகள் 9 பேருக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டது. அரசு அதிகாரிகள் அல்லாத பொது உறுப்பினர்கள், ஜில்லா போர்டு, நகர்மன்றங்கள் போன்ற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் பரிந்துரையின் பேரில் நியமனம் செய்யப்பட்டனர்.

இந்தச் சட்டம், குழுவின் பணிகளை இரண்டு வழிகளில் மேம்படுத்தியது.

ஒன்று, இக்குழுவினர் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து விவாதிக்கலாம்; இரண்டு, சில வரைமுறைகளுக்கு உட்பட்டு அரசிடம் கேள்விகளும் கேட்கலாம் என சில உரிமைகள் வழங்கப்பட்டன.

1893-94-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை, 02.05.1893 அன்று இக்குழு விவாதித்தது. விவாதத்தில் இரண்டு உறுப்பினர்கள் பங்கு பெற்றனர். ஆனால் வாக்களிக்கும் உரிமை இல்லை. இக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டது. சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து வெளியிடவும், அதன் சுருக்கத்தை அரசு இதழில் (Gazette) வெளியிடவும் வழி செய்யப்பட்டது. மாகாணங்கள் இயற்றுகின்ற சட்டங்களுக்கு கவர்னர் ஜெனரலின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சட்டமன்றத்துக்கு 'Madras Legislative Council' என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற கருத்து உருவானது. ஆனால், அப்போதைய இந்திய அரசு, 'புனித ஜார்ஜ் கோட்டை ஆளுநரின் கவுன்சில்' என்றே பெயர் சூட்டியது.

மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள்

1861-ம் ஆண்டுச் சட்டம் ஊன்றிய விதை, 1909-ம் ஆண்டுச் சட்டமாக முளைத்து வளர்ந்தது. இந்தச் சட்டம், 'மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள்' (Minto-Morley Reforms) என்று அழைக்கப்பட்டது.

இச்சட்டம், கவர்னர் ஜெனரலின் ஆட்சிக் குழு மற்றும் மாகாண அரசுகளின் சட்டமன்றங்களுக்கு மேலும் கூடுதல் அதிகாரங்களை வழங்கியது. பொதுநலன் குறித்தும் வரவு செலவுத் திட்டம் குறித்துத் துணைக்கேள்விகள் கேட்பதற்கும் தீர்மானங்களை முன்மொழிவதற்கும் இடமளித்தது. உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்காக குறுகிய அளவில் மறைமுகத் தேர்தல் நடைமுறைகளை அறிமுகப் படுத்தியது.

கவர்னர் ஜெனரல் குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, 16-ல் இருந்து 60ஆக உயர்த்தப்பட்டது. சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை, 20-லிருந்து 50ஆக உயர்த்தப் பட்டது.



மின்டோ

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



மார்லி

இந்திய அரசுச் சட்டம் 1919

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில், 1919-ம் ஆண்டு ‘இந்திய அரசுச் சட்டம்’ (The Government of India Act of 1919) இயற்றப்பட்டது.

சட்டமன்றங்கள் குறித்து முன்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் அடிப்படையில், மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படுகின்ற ஓர் அரசையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் தேர்வு செய்வதற்கு வழி பிறந்தது. இந்தியாவில், ‘இரட்டை ஆட்சி’ (Diarchy) அறிமுகப்படுத்தப்பட்டது. மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் உரிய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டன. மாகாண அரசுகளைப் பொறுத்தமட்டில், அதிகாரங்கள் மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

அதன்படி, ஆளுநரும் அவரது அமைச்சர்களும் சட்டமன்றத்துக்குப் பதில் கூறக் கடமைப்பட்ட பிரச்னைகள் (Transferred Subjects) என்றும் ஆளுநரும் அவரது ஆட்சிக்குழுவினரும் தீர்மானித்துக் கொள்ளத்தக்க அதிகாரங்கள் (Reserved Subjects) என்றும் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



மாண்டேகு

செம்ஸ்போர்டு

சட்டமன்றம், ஆட்சிக்குழு ஆகிய இரண்டின் முடிவுகளையும் ஆளுநர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மாகாணச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கை, 70 விழுக்காட்டுக்கும் கூடுதலாக உயர்த்தப் பட்டது.

மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட பிரச்னைகள் குறித்து மட்டுமே சட்டம் இயற்ற வேண்டும். அனைத்துச் சட்டங்களுக்கும் ஆளுநர் மற்றும் கவர்னர் ஜெனரலின் ஒப்புதல் தேவை.

ஆளுநர், சட்டமன்றத்தின் உறுப்பினராக இடம்பெற முடியாது. ஆனால், அவர் சட்டமன்றக் கூட்டத்தில் உறுப்பினர்கள் நடுவே உரையாற்ற முடியும்.

முதல் நான்கு ஆண்டுகளுக்கு சட்டமன்றத்தின் தலைவரை ஆளுநர் நியமிப்பார். அதற்குப் பின்னர், சட்டமன்ற உறுப்பினர்களே அவைத் தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சட்டமன்றத்தின் துணைத் தலைவரை உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தபோதிலும் அவரது தேர்வுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தின்கீழ், மத்திய அரசின் பொறுப்புகள் வரையறுக்கப்படவில்லை. பின்னாளில், 'இந்தியச் சட்டமன்றம்' (Indian Legislature) என்று அழைக்கப்பட்ட மத்தியச் சட்டமன்றத்தில் (The Central Legislature), மேலும் கூடுதல் உறுப்பினர்கள் இடம்பெற வழி செய்யப்பட்டது. அதன்படி 60 உறுப்பினர்கள் இடம் பெற்றார்கள். அவர்களுள் 34 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

சட்டமன்றம், 145 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. அவர்களுள் 104 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்; மற்றவர்கள் நியமன உறுப்பினர்கள். அவர்களுள் 26 பேர் அரசு அலுவலர்கள். இரண்டு அவைகளுக்கும் சமமான அதிகாரங்கள் வரையறுக்கப் பட்டன. இருப்பினும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை உண்டு.

இந்தச் சட்டம், இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஆளப்படுகின்ற ஓர் அரசை நிறுவியது. இருப்பினும் ஆளுநரே கூடுதல் அதிகாரங்களைப் பெற்றிருந்தார்.

சட்ட மன்றங்களில் நிறைவேற்றப்பட்ட ஏதாவது ஒரு மசோதா மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலோ, நாட்டின் பாதுகாப்புக்கோ பொது அமைதிக்கோ இடையூறு ஏற்படுத்தும் என்று ஆளுநர் கருதினால், அவர் அந்த மசோதாவை நிராகரித்து விடலாம்.

அதைப்போலவே, சட்ட மேலவை உறுப்பினர்கள் ஏதாவது ஒரு மசோதாவை நிராகரித்தால், அரசாங்கத்தின் செயல்பாடுகளுக்கு அந்த மசோதா மிகவும் தேவை என்று ஆளுநர் கருதினால், அந்த மசோதாவுக்கான ஒப்புதலை சட்ட மன்றத்திடம் ஆளுநர் பெற்றதாகக் கருதப்படும்.

சென்னை மாகாண சட்டமன்றம்

1919-ம் ஆண்டு வகுக்கப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின்படி, (Government of India Act, 1919) 'சென்னை சட்டமன்றம்' (Madras Legislative Council) 1921-ம் ஆண்டு அமைக்கப் பட்டது. இதன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காலம், மூன்று ஆண்டுகள். மொத்த உறுப்பினர்கள் 132 பேர். 34 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

98 உறுப்பினர்கள், தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நில உடைமையாளர்கள், அரசுக்கு வரி செலுத்துவோர், கல்வியறிவு பெற்றோருக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை உண்டு.

முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்று, 1921-ம் ஆண்டு, ஜனவரி மாதம் 9-ம் நாள், புனித ஜார்ஜ் கோட்டையில் முதலாவது சட்டமன்றம் கூடியது. ஆளுநர் வெல்லிங்டன் பிரபுவின் (Lord Wellington) வேண்டுகோளுக்கிணங்க,

1921 ஜனவரி 12-ம் நாள், இங்கிலாந்து மன்னரின் தந்தைவழி சித்தப்பாவான கன்னாட் பிரபு, இச்சபையைத் தொடங்கி வைத்தார். 1921-ம் ஆண்டு பிப்ரவரி 14-ம் நாள் ஆளுநர் அந்த அவையில் உரை நிகழ்த்தினார்.

பெண்கள் வாக்குரிமை

1921-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், பெண்கள் வாக்களிக்கும் உரிமை இல்லை. எனவே, பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்க வேண்டும் என்று கோரும் தீர்மானம், 01.04.1921-ல் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்தத் தீர்மானத்துக்கு 1926-ம் ஆண்டுதான் அரசின் ஒப்புதல் கிடைத்தது.

1923, 1926-ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது மற்றும் மூன்றாவது சட்டமன்றங்கள் அமைக்கப்பட்டன. 1921 முதல் 1937-ம் ஆண்டு வரையிலும் புனித ஜார்ஜ் கோட்டையில், சட்டமன்ற மேலவை அரங்கிலேயே அன்றைய சட்டமன்றக் கூட்டங்கள் நடைபெற்றன.

நான்காவது சட்டமன்றம், பொதுத் தேர்தலுக்குப் பிறகு 1930-ம் ஆண்டு நவம்பர் 6-ம் நாள் கூடியது. அதனுடைய காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டது. 1935-ம் ஆண்டு, இந்திய அரசுச் சட்டம் நடைமுறைக்கு வரும்வரை இந்தச் சட்டமன்றம் நீடித்தது.

ஈரடுக்கு சட்டமன்றம் **(Bicameral Legislature)**

இந்திய அரசுச் சட்டம் **1935**

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1935-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டம், 01.04.1937-ம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இதன்படி, அனைத்திந்திய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கத் திட்டம் வகுக்கப் பட்டது. இதில், மாகாண அரசுகளும் கவர்னர்கள் ஆளுமையின் கீழ் இருந்த மாகாணங்களும் இடம் பெற்றன. மாகாணங்களுக்குத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. கூட்டமைப்பில் மாகாணங்கள் இடம் பெறுவது அவர்களது விருப்பம்; கட்டாயம் அல்ல. இரண்டு அவைகள் அமைக்கப்பட்டன.

அவை ‘ஒருங்கிணைந்த சட்டமன்றம்’ (Federal Assembly) என்று அழைக்கப்பட்டது. சட்டமன்ற மக்களவை (House of Assembly), மாநிலங்களவை (Council of States) இரண்டும் சேர்ந்தவை.

ஒருங்கிணைந்த சட்டமன்றத்தில் 375 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படவில்லை. மாகாணச் சட்டமன்றங்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். 125 பேர் மாநில ஆளுநர்களால் நியமிக்கப்பட்டனர். சட்டமன்றத்தின் காலம் ஐந்தாண்டுகள் என வரையறுக்கப் பட்டது.

சட்டமன்றப் பேரவை, மேலவை ஆகிய இரண்டு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. மேலவை என்பது நிலையான அமைப்பு. அது ஒருபோதும் கலைக்கப்பட மாட்டாது. அதன் உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர், இரண்டு ஆண்டுகள் இடைவெளியில் ஓய்வு பெறுவர். புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்த அவையில் 260 உறுப்பினர்கள் இடம் பெறுவர். இந்திய மாநிலங்களின் சார்பில் 104 பேரும் 6 உறுப்பினர்கள் ஆளுநராலும் நியமனம் செய்யப்படுவர். 128 உறுப்பினர்கள், வரையறை செய்யப் பட்ட தொகுதிகளில் இருந்து (Territorial Communal Constituencies) தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

சிறுபான்மையினர், மகளிர், தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கு 22 இடங்கள் ஒதுக்கப்பட்டன.

இரண்டு அவைகளும் சமமான அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், வாக்குப் பதிவு நடத்தி நிதிநிலை அறிக்கையை நிறைவேற்றும் உரிமை, மக்களவைக்கே வழங்கப்பட்டது. சட்ட மன்றத்தில் உறுப்பினர்களுக்குப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பேச்சுரிமையும் மன்றத்தில் ஆற்றும் உரைகளை எதிர்த்து சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில் இருந்து பாதுகாப்பு உரிமையும் அளிக்கப்பட்டது.

இந்தச் சட்டம், சென்னை மாகாணத்தில் இரண்டு அடுக்கு சட்டமன்றத்தை உருவாக்கியது. அரசின் செயல்பாடுகள் குறித்து இரண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

1. நிதிநிலை தொடர்பாக ஆளுநருக்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கியது.
2. சில பிரச்னைகளில் அமைச் சரவைக்கே தெரியாமல் செயல்பட ஆளுநருக்கு அதிகாரம் வழங்கியது.

சட்டமன்றம் என்பது ஆளுநர், சட்டமன்றம், சட்ட மேலவை ஆகிய மூன்றையும் உள்ளடக்கியதாகும். சட்ட மேலவையைக் கலைக்க முடியாது. ஆனால், அந்த அவையின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஓய்வு பெறுவர். புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்த அவையில், 54 உறுப்பினர்களுக்குக் குறையாத, 56 உறுப்பினர்களுக்கு மிகாத எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இடம் பெற்றனர். அவற்றுள், 35 இடங்கள் பொதுத் தொகுதிகள், 7 இடங்கள் இஸ்லாமியர்களுக்கு, ஐரோப்பியர் 1, இந்திய கிறிஸ்துவர்கள் 3, 8-லிருந்து 10 உறுப்பினர்களை ஆளுநர் நியமனம் செய்வார் என்று வரையறுக்கப்பட்டது.

சட்டமன்றம், 215 உறுப்பினர்களைக் கொண்டது. அவற்றுள்,

பொதுத் தொகுதிகள்	- 146
தாழ்த்தப்பட்டோருக்கு	- 30
பிற்படுத்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு	- 1
தொழில், வணிகத் துறையினருக்கு	- 6
ஆங்கிலோ இந்தியர்களுக்கு	- 2
ஐரோப்பியர்களுக்கு	- 3

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தியக் கிறித்துவர்களுக்கு	- 8
நில உடைமையாளர்களுக்கு	- 6
பல்கலைக்கழகத்துக்கு	- 1
தொழிலாளர் பிரதிநிதிகளுக்கு	- 6
மகளிர்க்கு	- 8

மேலும் 6 பொது இடங்கள் என வரையறுக்கப்பட்டது.

இந்தச் சட்டம்தான் மத்திய, மாகாண அரசுகளின் அதிகாரங்களைத் திட்ட வட்டமாக வரையறுத்தது. மத்திய அரசுக்குத் தனிப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சில அதிகாரங்கள், மாகாண அரசுக்கு வழங்கப்பட்டன. பொதுவான சில அதிகாரங்கள், மத்திய மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டன.இச்சட்டத்தில் குறிப்பிட்டபடி, மத்திய அரசு (Federal Structure) உடனடியாக அமையவில்லை. எனவே, 1919-ம் ஆண்டு வகுக்கப்பட்ட இந்திய அரசுச் சட்டம் தொடர்ந்து நீடித்தது.

1935-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின்படி, மாகாண அரசுகளுக்கான அதிகாரங்கள் மட்டும் 1937-ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தன. சென்னை மாகாணச் சட்டமன்றம் 1937-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர், ஜூலை மாதம் அமைக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று, அமைச்சரவையை அமைத்தது. ஆனால், இரண்டாம் உலகப்போர் மூண்டதால் அறிவிக்கப்பட்ட நெருக்கடி நிலையை எதிர்த்து, 1939-ம் ஆண்டு அக்டோபர் மாதம், இந்தியா முழுமையும் காங்கிரஸ் அரசுகள் பதவி விலகின. சட்டமன்ற நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. சென்னை மாகாணச் சட்டமன்றத்தின் நடவடிக்கைகளும் நிறுத்தி வைக்கப் பட்டன.

14.07.1937-ல் தொடங்கி, 21.12.1937 வரையிலும் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள பல்கலைக்கழக செனட் மண்டபத்தில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

27.01.1938 முதல் 26.10.1939 வரையிலும் அரசினர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தோட்டத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது.

இரண்டாம் உலகப்போர் முடிவுக்கு வந்தபின்பு, 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாவது பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல், 1935-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி நடத்தப்பட்டன. இச்சபையின் முதலாவது கூட்டம் 1946-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாள் கூடியது. 24.05.1946 முதல் 27.03.1952 வரையிலும் மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றது.

இந்திய விடுதலைச் சட்டம் 1947 (**The Indian Independence Act 1947)**

இந்தியாவுக்கு விடுதலை அளிக்கும் சட்டம், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில், 1947-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ம் நாள் தாக்கல் செய்யப்பட்டது. ஜூலை 18-ம் நாள் நிறைவேற்றப்பட்டது. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதிகார மாற்றம் நடைபெற்றது. 14-ம் தேதி பாகிஸ்தானும் 15-ம் தேதி இந்தியாவும் விடுதலை பெற்றன.

இச்சட்டத்தின்படி, இங்கிலாந்து மன்னரின் முடியாட்சி விலக்கிக் கொள்ளப்பட்டது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகள் உருவாக்கப்பட்டன. இந்தியாவுக்கான சட்டங்களை இங்கிலாந்து நாடாளுமன்றம் இயற்றுகின்ற நிலை மாறியது. ‘அரசியல் சட்ட வரைவு மன்றம்’ (Constituent Assembly) அமைக்கப்பட்டது. மாகாணச் சட்டமன்றங்கள் தனித்தன்மை கொண்ட, இறையாண்மை உடைய அமைப்புகளாக மாறுவதற்கு வழிவகுத்தது.

இந்தியாவுக்கான புதிய சட்டங்கள் வகுக்கப்படுகின்ற வரையிலும் சில மாறுதல்களுடன், 1935-ம் ஆண்டு இந்தியச் சட்டம்தான் நடைமுறையில் இருந்தது. 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் நாள், புதிய இந்திய அரசியல் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நாள்தான், குடியரசு நாளாகக் கொண்டாடப் படுகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜவஹர்லால் நேரு உரை **(1947)**

அரசியல் சட்டத்தை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றம், தற்காலிக நாடாளுமன்ற மாக (Provisional Parliament) ஏற்றுக் கொள்ளப் பட்டது. 1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர்தான், இந்தியாவின் முதல் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த மாகாணச் சட்டமன்றங்கள் தொடர்ந்து நீடிப்பது என இச்சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

விடுதலைக்குப் பின்னர்...

புதிதாக இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்படி, சென்னை மாகாணத்தின் முதலாவது சட்டமன்றத்துக்கான தேர்தல், 1951 அக்டோபர் 21-ம் நாள் தொடங்கி, 1952 பிப்ரவரி 21-ம் நாள் வரையிலும் நடைபெற்றது. உலக வரலாற்றிலேயே அதிக நாட்கள் இடைவெளியில் நடந்த தேர்தல் இதுதான்.

1951-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகள் வரையறை (சென்னை) சட்டத்தின்படி (The delimitation of Parliament and Assembly Constituencies (Madras) Order, 1951), ஒருங்கிணைந்த சென்னை மாகாணச் சட்டமன்றம் (Composite Madras Assembly), 375 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டது.

இந்த 375 உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கு, 309 தொகுதிகள் வரையறுக்கப் பட்டன. அவற்றுள், 243 தொகுதிகள் ஒற்றை உறுப்பினர்களையும் 62 தொகுதிகளில் இரட்டை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உறுப்பினர்களையும் தெரிவு செய்யும் வகையில் வரையறுக்கப்பட்டன. இரட்டை உறுப்பினர் இடங்களுள் ஓர் இடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டது. நான்கு இரட்டை உறுப்பினர் இடங்களுள் ஓர் இடம் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. வயது வந்தோர் அனைவரும் வாக்களிக்கும் உரிமை பெற்றனர்.

ஒருவர்கூட போட்டி இல்லை

தேர்தல் நடைபெற்றபோது மூன்று தொகுதிகளில் ஒருவர்கூட போட்டியிட வில்லை. எனவே, 372 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்று, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆங்கிலோ இந்தியர் சமூகத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினர், அரசியல் சட்டத்தின் 333-வது பிரிவின்படி ஆளுநரால் நியமிக்கப் பட்டார். 03.05.1952 முதல் 27.12.1956 வரையிலும் கலைவாணர் அரங்கத்தில் (முன்னர் பாலர் அரங்கம்) உருவாக்கப்பட்ட புதிய மண்டபத்தில் சட்டமன்றம் செயல்பட்டது.

மொழிவாரி மாநிலங்கள் அமைப்பு

1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் நாள், சென்னை மாகாணத்தில், தெலுங்குமொழி பேசுகின்ற மக்கள் வசிக்கின்ற பகுதிகளை ஒன்றாக இணைத்து, ‘ஆந்திரப் பிரதேசம்’ என்ற மாநிலம் உருவாக்கப்பட்டது. அதில், பெல்லாரி பகுதி, அப்போதைய மைசூர் அரசுடன் சேர்க்கப்பட்டு, மைசூர் சட்ட மன்றம் உருவாக்கப்பட்டது. எனவே, சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 231ஆகக் குறைந்தது. 1956-ம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாநிலங்கள் மறுசீரமைப்புச் சட்டம், அதே ஆண்டு நவம்பர் 1-ம் தேதி நடைமுறைக்கு வந்தது.

இச்சட்டத்தின்படி, சென்னை மாகாண சட்டமன்றத்தில் இருந்து, மலபார் பகுதிகள் பிரிக்கப்பட்டு, கேரள மாநில சட்ட மன்றத்துடன் இணைக்கப்பட்டன. எனவே, சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 190ஆகக் குறைந்தது.

அதே வேளையில், கேரள மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்த கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம் ஆகிய தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் வசிக்கின்ற பகுதிகள் சென்னை மாகாணத்தில் இணைக்கப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பட்டன.

நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகள், 1956-ம் ஆண்டு மறு வரையறை செய்யப் பட்டன. 1956-ம் ஆண்டு மாநிலங்கள் மறு சீரமைப்புச் சட்டத்தின்படி, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சென்னை மாகாண சட்ட மன்றத்துக்கான இடங்கள் 205ஆக உயர்த்தப்பட்டன.

அவற்றுள், 167 பொதுத் தொகுதிகளும் 37 இரட்டை உறுப்பினர் தொகுதிகளும் இடம்பெற்றன. இரட்டை உறுப்பினர் தொகுதிகளுள் ஓர் இடம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டது. ஒரேயொரு இரட்டை உறுப்பினர் தொகுதியில், ஓர் இடம் பழங்குடி வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டது.

1957-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பின்னர், சென்னை மாகாணத்தின் இரண்டாவது சட்டமன்றம், 1957-ம் ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி அமைக்கப்பட்டது. 205 இடங்களுக்கான பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஓர் உறுப்பினர் ஆளுநரால் நியமிக்கப் பட்டார்.

இந்திய விடுதலை **(1947)**

1959-ம் ஆண்டு, எல்லைகள் மறு சீரமைப்புச் சட்டத்தின்படி (Alteration of Boundaries Act 1959) ஆந்திரப்பிரதேசம் மற்றும் சென்னை மாகாணத்தின் எல்லைகள் திருத்தி அமைக்கப்பட்டன. அதன்படி ஆந்திர மாநில சட்டமன்றத்தில் இருந்து ஓர் உறுப்பினர், சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு மாற்றப் பட்டார். எனவே,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 206ஆக உயர்ந்தது.

1961-ம் ஆண்டு, இரட்டை உறுப்பினர் தொகுதிகள் (நீக்கம்) 1961 (Two Member Constituencies (Abolition) Act, 1961) சட்டத்தின்படி, 38 இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கப்பட்டன. அதே எண்ணிக்கையிலான ஒற்றை உறுப்பினர் தொகுதிகள், தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டன. ஆனால், தொகுதிகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட வில்லை. 206ஆகவே நீடித்தது.

1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பின்னர், சென்னை மாகாணத்தின் மூன்றாவது சட்டமன்றம், 1962 மார்ச் 3-ம் நாள் அமைக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 206 ஆகவே நீடித்தது.

1965-ம் ஆண்டு வகுக்கப்பட்ட, நாடாளுமன்ற, சட்டமன்றத் தொகுதிகள் மறுவரையறை ஆணையின்படி, (Delimitation of Parliamentary and Assembly Constituencies Order, 1965) சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 234ஆக உயர்த்தப்பட்டது. அவற்றுள் 42 இடங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் இரண்டு இடங்கள் பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டன. ஆங்கிலோ இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினர், இந்திய அரசியல் சட்டத்தின் 333-ம் பிரிவின்படி, ஆளுநரால் நியமிக்கப்படுவதாக உறுதி செய்யப்பட்டது.

தமிழ்நாடு

1967-ம் ஆண்டு பிப்ரவரி மாதம், சென்னை மாகாண சட்டமன்றத்துக்கான நான்காவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. மார்ச் 1-ம் நாள், நான்காவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது. இதில் தொகுதிகளின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

1967-ம் ஆண்டு, ஜூலை மாதம் 18-ம் நாள், சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறை வேற்றப்பட்ட ஒரு தீர்மானம், சென்னை மாகாணம் என்ற பெயரைத் ‘தமிழ்நாடு’ என்று மாற்றுவதற்குத்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தேவையான அரசியல் சட்டத்திருத்தம் செய்யுமாறு நடுவண் அரசைக் கேட்டுக் கொண்டது.

அதன்படி, சென்னை மாகாண (பெயர் மாற்றம்) சட்டம், (Madras State Alteration of Name Act, 1968, (Central Act 53 of 1968), (நடுவண் அரசுச் சட்டம் 53, 1968) இந்திய நாடாளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம், 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ம் நாள் தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் நன்னாள் அன்று நடைமுறைக்கு வந்தது. அதைத் தொடர்ந்து, ‘சென்னை மாகாண சட்டமன்றம்’ என்ற பெயர் மாற்றப்பட்டு, ‘தமிழ்நாடு சட்டமன்றம்’ என்ற பெயர் சூட்டப்பட்டது.

1967-ம் ஆண்டு முதல் இன்றுவரையிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 234ஆகவே நீடிக்கிறது; மாறுதல் எதுவும் இல்லை.

தலைமைச் செயலகம்

குடியரசுத் தலைவர் ஆட்சி

1971-ம் ஆண்டு தி.மு.க. அரசு, ஓராண்டுக்கு முன்னதாகவே பதவியிலிருந்து விலகி, நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலையும் நடத்தியது.

1971-ம் ஆண்டு மார்ச் மாதம், தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான ஐந்தாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. மார்ச் 15-ம் நாள் ஐந்தாவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது. தனது முழு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு முன்பாக, 1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் நாள், இந்திய அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின்படி, தமிழ்நாடு சட்டமன்றம் கலைக்கப்பட்டது. தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி முதன்முறையாக நடைமுறைக்கு வந்தது.

1977-ம் ஆண்டு ஜூன் மாதம், தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான ஆறாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. ஜூன் 30-ம் நாள் புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டது. தொகுதிகள் மறுசீரமைப்பு ஆணையத்தின் ஆணை எண் 31-ன்படி (1 ஜனவரி 1975), 1971-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில், சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மறுவரையறை செய்யப்பட்டன.

இந்தச் சட்டமன்றமும் தனது முழு பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு முன்பாக, 1980-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 17-ம் நாள், இந்திய அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின்படி, குடியரசுத் தலைவரின் ஆணையின்பேரில் கலைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப் படுத்தப்பட்டது.

1979-ம் ஆண்டு, திருச்சி மாவட்டத்தில் உள்ள உப்பிலியாபுரம் சட்டமன்ற பொதுத் தொகுதி (தொகுதி எண் 157), பழங்குடி வகுப்பினருக்கான தொகுதியாக மாற்றப்பட்டது.

1980-ம் ஆண்டு மே மாதம், தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான ஏழாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. 1971-ம் ஆண்டு மக்கள்தொகை கணக்கின்படி, தொகுதிகள் மறுவரையறை செய்யப் பட்டன. ஆனால், தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றமெதுவும் இல்லை. ஜூன் 9-ம் நாள், ஏழாவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சட்டமன்றத்தில் அண்ணாதுரை

1984-ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 24-ம் நாள் நடைபெற்ற எட்டாவது பொதுத் தேர்தலின் முடிவில், 1985-ம் ஆண்டு ஜனவரி 16-ம் நாள் எட்டாவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது.

1986-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள், 'தமிழ்நாடு சட்டமன்ற மேலவையைக் கலைக்க வேண்டும்' என்ற தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது. அதைத்தொடர்ந்து, 1986-ம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை (நீக்கம்) (Tamilnadu Legislative Council (Abolition) Bill, 1986) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவுக்கு, 1986 ஆகஸ்ட் 30-ம் நாள் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தார். 1986-ம் ஆண்டு நவம்பர் 1-ம் நாள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை கலைக்கப் பட்டது.

எனவே, 1937-ம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்படி அமைந்த இரண்டு அடுக்கு சட்டமன்றம், ஓரடுக்கு முறையாக (Unicameral Legislature) மாறியது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செனட் அரங்கம் **(1937-1938)**

இச்சட்டமன்றத்தின் காலம் முடிவதற்கு முன்பாகவே, 1988-ம் ஆண்டு ஜனவரி 30-ம் நாள், இந்தியக் குடியரசுத்தலைவரின் ஆணையின் பேரில், அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின்கீழ் தமிழ்நாடு சட்டமன்றம் கலைக்கப்பட்டது. மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைமுறைப்படுத்தப் பட்டது.

1989-ம் ஆண்டு ஜனவரி 21-ம் நாள் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்குப் பின்னர், ஜனவரி 27-ம் நாள் தமிழ்நாட்டின் ஒன்பதாவது சட்டமன்றம் அமைக்கப் பட்டது.

இந்தச் சட்டமன்றத்தில், 1989-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் நாள், தமிழ்நாட்டில் கலைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையைத் திரும்பவும் அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேச மாநிலங்களில் கலைக்கப்பட்ட சட்டமன்ற மேலவைகளை மீண்டும் அமைக்க வேண்டும் என்ற தீர்மானம், 1990-ம் ஆண்டு மே மாதம் 10-ம் தேதி இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப் பட்டு, மே 28-ம் நாள் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அந்த மசோதாவை நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேற்ற முடிய வில்லை.

இந்த அவையின் காலம் முடிவதற்கு முன்பாகவே, இந்தியக் குடியரசுத்தலைவரின் ஆணையின்பேரில், 1991-ம் ஆண்டு ஜனவரி 30-ம் நாள், அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவின் கீழ், சட்டமன்றம் கலைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் நான்காவது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முறையாக குடியரசுத்தலைவர் ஆட்சி நடைமுறைக்கு வந்தது.

தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான பத்தாவது பொதுத்தேர்தல், 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் நாள் நடைபெற்றது. ஜூன் 24-ம் நாள் பத்தாவது சட்டமன்றம் அமைக்கப்பட்டது. இச்சபையின் முதலாவது கூட்டம், ஜூலை மாதம் 1-ம் நாள் நடைபெற்றது.

அக்டோபர் 4-ம் நாள், 1989-ம் ஆண்டு பிப்ரவரி 20-ம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில், ‘தமிழ்நாடு சட்டமன்ற மேலவையைத் திரும்பவும் அமைக்க வேண்டும்’ என்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் திரும்பப் பெறுவது என்ற புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, மேலவை மீண்டும் அமைவதில் தடை ஏற்பட்டது.

இந்த மன்றத்தின் ஆயுட்காலம் 1996 ஜூன் 30-ம் நாள் நிறைவு பெறுவதாக இருந்தது. ஆனால், அதற்கு முன்பாகவே, 1996-ம் ஆண்டு ஏப்ரல் 27, மே 2 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான 11-வது பொதுத்தேர்தல் நடத்தப்பட்டதால், பத்தாவது சட்டமன்றம், 1996 மே 13-ம் நாள் ஆளுநரால் கலைக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டமன்றத்துக்கான 11-வது பொதுத்தேர்தல், 1996-ம் ஆண்டு, ஏப்ரல் 27, மே 2 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக நடத்தப்பட்டது. மே 13-ம் நாள், 11-வது சட்டமன்றம் அமைக்கப்பட்டது.

இந்த மன்றத்தின் முதலாவது கூட்டம், 1996-ம் ஆண்டு மே மாதம் 22-ம் நாள் நடைபெற்றது. எனவே, இம்மன்றத்தின் பதவிக்காலம் 2001-ம் ஆண்டு மே மாதம் 21-ம் நாள் வரையிலாகும். ஆனால், அதற்கு முன்பாகவே 2001-ம் ஆண்டு மே மாதம் 10-ம் நாள் 11-வது சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட்டதால், 11-வது சட்டமன்றம் 2001-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் ஆளுநரால் கலைக்கப்பட்டது.

இந்தச் சட்டமன்றத்தில், 1996-ம் ஆண்டு, ஜூலை 26-ம் நாள், ‘தமிழ்நாடு சட்டமன்ற மேலவையை மீண்டும் அமைக்க வேண்டும்’ என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறவில்லை.

12-வது சட்டமன்றம், 2001-ம் ஆண்டு மே மாதம் 14-ம் நாள் அமைக்கப்பட்டது. 2006-ம் ஆண்டு, ஏப்ரல் 1-ம் நாள் கடைசிக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கூட்டம் நடைபெற்றது.

13-வது சட்டமன்றத்தைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் 2006 மே மாதம் 8-ம் நாள் நடைபெற்றது. 13-வது சட்ட மன்றம், 13.05.2006 அன்று அமைக்கப்பட்டது. 14.05.2011 அன்று கலைக்கப்பட்டது.

14-வது சட்டமன்றம், 14.05.2011 அன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இந்திய விடுதலைக்குப் பின்னர், சென்னை ராஜதானி (Madras Presidency) என்ற பெயர், சென்னை மாகாணம் (Madras State) என மாறியது.

பேரவைத் தலைவரின் இருக்கை

சென்னை மாகாண சட்டசபையை, 1921 ஜனவரி 12-ம் நாள், கன்னாட் கோமகன் தொடங்கி வைத்தார். சென்னை மாகாண ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபு, தனது மனைவியுடன், 1922-ம் ஆண்டு மார்ச் 6-ம் தேதி சட்டசபைக்கு வருகை தந்தார். தேக்கு மரத்தால் செய்யப்பட்ட, வேலைப்பாடுகள் நிறைந்த பேரவைத் தலைவர் இருக்கையைப் பரிசாக அளித்தனர்.

அப்போது உரையாற்றிய வெலிங்டன் பிரபு, ‘எனது தாத்தா இங்கிலாந்து நாட்டின் மக்களவைத் (House of Commons) தலைவராக இருந்தவர்; மாமனார் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர்’ என்று குறிப்பிட்டார்.

1861-ல் சட்டமன்ற நடவடிக்கைகள் முதன்முதலில் தொடங்கிய இடம்

சட்டமன்றம் கூடிய இடங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

- 1921 முதல் 1937 வரையிலும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரங்கிலேயே, சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெற்றன.
- 1937 ஜுலை 14 முதல், 1938 அக்டோபர் 26 வரையிலும், சேப்பாக்கத்தில் உள்ள, சென்னைப் பல்கலைக்கழக செனட் அரங்கில் நடைபெற்றது.
- 1938 ஜனவரி முதல், 1939 அக்டோபர் வரையிலான காலகட்டத்தில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்து உள்ள ராஜாஜி அரங்கின் விருந்து மண்டபத்தில் நடைபெற்றது.
- 1946 மே முதல், 1952 மார்ச் வரையிலும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரங்கில் நடைபெற்றது.
- 1952 மே முதல் 1956 டிசம்பர் வரையிலும், கலைவாணர் அரங்கத்தில் (முன்பு பாலர் அரங்கம்) நடைபெற்றது.
- இந்த அரங்கம் இடிக்கப்பட்டு விட்டது. அதே இடத்தில், கலைவாணர் அரங்கம் புதிதாகக் கட்டப்படும் என அறிவிக்கப் பட்டு உள்ளது.
- 1957 ஏப்ரல் முதல், 1959 மார்ச் வரையிலும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரங்கில் நடைபெற்றது.

விருந்தினர் மாளிகை **(1938-1939-**ல் சட்டமன்றம் கூடிய இடம்**)** பின்னர் ராஜாஜி அரங்கம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

- 1959 ஏப்ரல் 20 முதல் 30 வரையிலும், கோடை காலக் கூட்டத் தொடர், உதகமண்டலத்தில் (ஊட்டி) உள்ள, அரண்மூர் மாளிகையில் நடைபெற்றது.
- 1959 ஆகஸ்ட் 31 முதல், 2010 ஜனவரி 11 வரையிலும், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரங்கிலேயே அனைத்துக் கூட்டத் தொடர்களும் நடைபெற்றன.
- 2010 மார்ச் 16 முதல் 2011 மே 15 வரையிலும், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்ட சட்டமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.
- இந்தக் கட்டடத்தை, பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றப் போவதாக, அரசு அறிவித்து உள்ளது.
- 2011 மே 16 முதல், சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள அரங்கிலேயே சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாகாணத்தில் அரசியல் விழிப்பு உணர்வு

கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் ஆளுகையில் இருந்த இந்தியப் பகுதிகளில், பிரித்தானியப் பேரரசு, படிப்படியாகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு, சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்தி வந்தது. 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், மெக்காலே பிரபுவின் பரிந்துரைகளின்படி, இந்தியாவில் ஆங்கிலக் கல்வியை அறிமுகப் படுத்தியது. இப்பள்ளிகளை நடத்தி வந்த கிறித்தவ பிரச்சார சபைகள், மதமாற்ற முயற்சிகளில் ஈடுபட்டன. மாணவர்களிடையே கிறிஸ்துவ மத போதனைகள் நடைபெற்றன. கிறித்துவ மதம் தொடர்பான கேள்விகள் கேட்கப் பட்டன. அச்சுப் பொறிகளைக் கொண்டு வந்து, அச்சுக்கூடங்களை நிறுவினர். கால்டுவெல், ஜி.யு. போப், வீரமா முனிவர் ஆகியோர், தமிழில் நூல்கள் எழுதி அச்சிட்டு, தமிழ்த்தொண்டு ஆற்றினர். கிறித்துவ மிஷனரிகள், சாதி, மத பேதம் இன்றி, கல்வி, மருத்துவச் சேவைகளையும் செய்து வந்தனர். தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகளில் கிறிஸ்துவ பிரச்சார சிற்றிதழ்களை அச்சிட்டு, பொது மக்களிடையே பரப்பி வந்தனர். ‘The Record’ என்ற ஏட்டையும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெளியிட்டு வந்தனர்.

இம்முயற்சிகளை ஊக்குவித்து வந்த அரசு, 1845-ம் ஆண்டு, ஒரு சட்டத்தை இயற்றியது. அதன்படி, ‘ஓர் இந்து, கிறிஸ்துவ மதத்தில் சேர்ந்தாலும் சொத்துரிமை உண்டு’ என்ற வழிமுறையை வகுத்தது.

இதன்மூலம், மதமாற்றத்தை அரசு ஊக்குவிக்கிறது என்று கருதிய இந்துக்கள், எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர். சென்னை பெரியமேட்டைச் சேர்ந்த பஞ்சு மற்றும் துணி வணிகரான காசுலு லட்சுமி நரசு செட்டி Native Circulator என்ற பிரசுரத்தை வெளியிட்டு வந்தார். பின்னர் அதை ‘The Crescent’ (1844) எனப் பெயர் மாற்றம் செய்து, ஆட்சியாளர்களை எதிர்த்து எழுதி வந்தார். இந்துக்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன், சென்னை ராஜதானியில் இந்தியர் ஒருவரால் தொடங்கப்பட்ட முதலாவது ஏடு இதுவேயாகும். 1836-ம் ஆண்டு தொடங்கப்பட்ட, சென்னை வணிகக் கூட்டமைப்பின் (Madras Chamber of Commerce) முதலாவது இந்திய உறுப்பினராவார்.

1846-ம் ஆண்டு அக்டோபர் 7-ம் நாள், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற ஒரு போராட்டத்தில், காசுலு லட்சுமி நரசு பங்கேற்றார். போராட்டக்காரர் கள், கிழக்கிந்திய வணிக நிறுவனத்துக்கு ஓர் எதிர்ப்பு மனுவை அனுப்பினர். அதன் விளைவாக, மாணவர்களிடையே கிறித்துவ மதப்பிரச்சார முயற்சிகள் நிறுத்தப் பட்டன.

இதே காலகட்டத்தில், கொல்கத்தாவில், ‘பிரிட்டிஷ் இந்தியா அசோசியேசன்’ என்ற அமைப்பு தொடங்கப்பட்டிருந்தது. அதன் நிறுவனரான தேவேந்திரநாத் தாகூர் (ரவீந்திரநாத் தாகூரின் தந்தை), காசுலு லட்சுமி நரசுவுக்கு ஒரு கடிதம் எழுதினார். ‘எங்கள் அமைப்பைப் போன்று, சென்னையிலும் ஓர் அமைப்பைத் தொடங்குங்கள்; இங்கிலாந்து நாடாளு மன்றத்துக்கு, நாம் கூட்டாக விண்ணப்பங்களை அனுப்புவோம்’ என்று கேட்டுக் கொண்டார்.

மெட்ராஸ் நேட்டிவ் அசோசியேஷன்

அதன்படி, 1852-ம் ஆண்டு, இந்தியர்களின் உரிமைகளை வலியுறுத்துவற்காக, Madras Native Association என்ற அமைப்பை காசுலு லெட்சுமி நரசு தொடங்கினார். இதுதான் சென்னை ராஜதானியில் தொடங்கப்பட்ட முதலாவது பொது அமைப்பாகும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வரி செலுத்த இயலாத விவசாயிகளைக் கொடுமைப் படுத்துவதாகக் கூறி, நில உடைமையாளர் களுக்கும் கிழக்கிந்திய கம்பெனிக்கும் எதிராக, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு மனுக்களை அனுப்பினார். அதுகுறித்து விசாரிப்பதற்காக, டேன்பி செய்மூர் என்ற இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியாவுக்கு வந்தார். லட்சுமி நரசு, அவரைப் பல பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார். உண்மை நிலையை உணர்ந்தார் செய்மூர்.

இந்திய தேசிய காங்கிரஸின் முதலாவது கூட்டம், மும்பை - **1885**

லட்சுமி நரசுவின் இத்தகைய நடவடிக்கைகள், சென்னை மாகாண ஆளுநருக்குப் பிடிக்கவில்லை. அதன் விளைவாக, லட்சுமி நரசு நடத்தி வந்த, கிரசன்ட் இதழை நிறுத்தும்படியாக ஆயிற்று. ஆயினும், ‘The Rising Sun என்ற ஏட்டைத் தொடங்கினார்.

1855-ம் ஆண்டு, சென்னை மாகாண ஆட்சியை பிரித்தானியப் பேரரசு நேரடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கோரி, 14,000 பேர்களிடம் கையெழுத்துப் பெற்று, பேரரசி விக்டோரியாவுக்கு அனுப்பி வைத்தார். 1857-ம் ஆண்டு சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு, பேரரசி விக்டோரியா இந்திய நிர்வாகத்தைத் தமது நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொண்டார். 1863-ம் ஆண்டு, சென்னை சட்டமன்றத்தின் உறுப்பினராக லட்சுமி நரசு நியமிக்கப் பட்டார்.

சிற்றிதழ்கள், மாத, வார இதழ்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. மெட்ராஸ் டைம்ஸ் (1860) மெட்ராஸ் மெயில் (1868) ஆகிய ஆங்கில நாளேடுகள் தொடங்கப் பட்டன. இந்த ஏடுகள்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆங்கிலேயர்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. 1878-ம் ஆண்டு, ஜி.சுப்பிரமணிய அய்யர், ‘தி இந்து’ ஆங்கில வார ஏட்டைத் தொடங்கினார். 1880-ம் ஆண்டு, சுதேசமித்திரன் என்ற தமிழ் நாளேட்டையும் தொடங்கினார்.

காசுலு லட்சுமி நரசு செட்டி

1905-ம் ஆண்டு, எஸ்.கஸ்தூரி அய்யங்கார், இந்து ஆங்கில ஏட்டை விலைக்கு வாங்கி, நாளிதழாக வெளியிடத் தொடங்கினார். சென்னை மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது முதலிய மொழிகளில் வார, மாத, நாளேடுகள் வெளிவரத் தொடங்கின. அவற்றைப் படித்த மக்களிடம் அரசியல், சமூக விழிப்பு உணர்வுகள் ஏற்படத் தொடங்கின.

மெட்ராஸ் மகாஜன சபா **(1884)**

1884-ம் ஆண்டு, மே மாதம், ‘மெட்ராஸ் மகாஜன சபா’ என்ற அமைப்பை எஸ்.ராமசாமி முதலியார், பி.அனந்தாச்சார்யலு ஆகிய இருவரும் சேர்ந்து நிறுவினர். தொடக்கத்தில் இதன் அலுவலகம், சென்னை அண்ணா சாலைஎல்லிஸ் சாலை சந்திப்பு அருகில், தி இந்து ஆங்கில நாளேட்டின் அலுவலகத்தின் ஒரு பகுதியிலேயே இயங்கி வந்தது. தற்போது, அண்ணா சிலைக்கு நேர் எதிரே இந்தச் சபையின் கட்டடம் உள்ளது.

இதன் முதலாவது மாநாடு, 1884 டிசம்பர் 29, 1885 ஜனவரி 2 ஆகிய நாட்களில் நடைபெற்றது. ஆட்சியில் இந்தியர்களுக்கான உரிமைகளை வலியுறுத்தியது. எனவே, 1895-ம் ஆண்டு, சென்னைக்கு வந்த வைஸ்ராய் எல்ஜின் பிரபு, மெட்ராஸ் மகாஜன

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சபா அளிப்பதாக இருந்த வரவேற்பைப் புறக்கணித்தார். 1896-ம் ஆண்டு அக்டோபர் 24-ம் நாள், இச்சபையின் கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார்.

அடையாறு ‘தியோசாஃபிகல் சொசைட்டி’ (Theosophical Society) வளாகத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள், அனைத்திந்திய அளவில், ஆங்கில அரசுக்கு எதிராக ஓர் அமைப்பைத் தோற்றுவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அயல்நாட்டு உறுப்பினர்கள், குறிப்பாக ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம் உள்ளிட்டோர் இந்தக் கருத்தை வலியுறுத்தினர். அதைச் செயல்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர்.

1885-ம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கம் மும்பையில் தொடங்கப்பட்டது. இதில் மொத்தம் 72 பேர் பங்கேற்றனர். அவர்களுள் 22 பேர், சென்னை மகாஜன சபை மற்றும் சென்னை ராஜதானியைச் சேர்ந்தவர்கள்.

சென்னை மாகாணத்திலும் காங்கிரஸ் இயக்க அமைப்புப் பணிகள் நடைபெற்றன; உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டனர்.

திராவிட மகாஜன சபை, பறையர் மகாஜன சபை

இதே காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை நலன்களுக்காகப் போராட, திராவிட மகாஜன சபை, பறையர் மகாஜன சபை ஆகிய இரண்டு அமைப்புகளை அயோத்திதாசப் பண்டிதரும், ரெட்டமலை சீனிவாசனும் தோற்றுவித்தனர். பஞ்சமர் (1871), திராவிட பாண்டியன் (1885), ஆன்றோர் மித்திரன் (1886) பறையன் (1893) ஆகிய ஏடுகளையும் நடத்தினர்.

தென் தமிழ்நாட்டில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி., புரட்சிக்கவி பாரதி ஆகியோர், ஆங்கிலேயே அரசுக்கு எதிராக இயங்கி வந்தனர்.

பின்னி நூற்பாலைத் தொழிலாளர் போராட்டம்

காங்கிரஸ் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்த, திரு வி. கல்யாணசுந்தரனார் 1918-ம் ஆண்டு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஏப்ரல் 3-ம் நாள், பி.பி.வாடியாவுடன் இணைந்து, பின்னி ஆலைத் தொழிலாளர்களுக்காக, சென்னை தொழிலாளர் சங்கம் (The Madras Labour Union) என்ற அமைப்பைத் தொடங்கினார். அவரது தொழிற்சங்க நடவடிக்கைகள், காங்கிரஸ் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.

1921-ம் ஆண்டு ஜூன் மாதம், சென்னையில், பக்கிங்காம் கர்னாடிக் நூற்பாலையில் (பின்னி மில்) பணியாற்றி வந்த 10,000 தொழிலாளர்கள், கூலி உயர்வும் சலுகைகளும் கேட்டு, திரு வி.க. தலைமையில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸும், நீதிக்கட்சியும் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்தன.

நீண்ட நாட்களாகப் போராட்டம் நீடித்தது. தொழிலாளர்கள் ஒற்றுமையை உடைக்க ஆலை நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகளால் தொழிலாளர்கள் இரு பிரிவுகளாயினர். சாதி இந்துக்கள், முஸ்லிம்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும், இந்தியக் கிறிஸ்துவத் தொழிலா ளர்களும் வேலைக்குத் திரும்ப முயன்றனர். இரு பிரிவினர் களுக்கும் இடையே கலவரம் மூண்டது. 1921 ஆகஸ்ட் 21-ம் நாள், காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதில் ஆறு தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப் பட்டார்கள். அதைத் தொடர்ந்து, ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் வன்முறை வெடித்தது. குடிசைகள் தீ வைத்துக் கொளுத்தப் பட்டன. சென்னை மாகாணத்தில் முதன்முதலாக நடைபெற்ற பெரும் போராட்டம் இதுவே.

அன்னிபெசன்ட்

ஹோம் ரூல் இயக்கம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இங்கிலாந்து அரசு, ஜெர்மனி மற்றும் துருக்கியின் ஒட்டோமான் பேரரசுக்கு எதிராக நடத்தி வந்த முதலாம் உலகப் போரில், இந்தியப் படைகளையும் ஈடுபடுத்தியது. அதை இந்தியத் தலைவர்கள் விரும்பவில்லை. 1916-18-ம் ஆண்டுகளில், ஜோசப் பாப்டிஸ்டா, பால கங்காதர திலகர், ஜி.எஸ்.கபார்டே, சர் எஸ்.சுப்பிரமணிய ஐயர், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோர், சுயாட்சி கோருவதற்கான அமைப்புகளை (League) சென்னை, மும்பை, புணே, டெல்லி, கொல்கத்தா போன்ற இடங்களில் உருவாக்கினர். அவர்கள் ஒரே அமைப்பாகச் சேர்ந்து இயங்குவதெனத் தீர்மானித்தனர்.

‘இந்தியர்களுக்குத் தன்னாட்சி உரிமை வேண்டும்’ என்ற கோரிக்கையுடன், ‘அனைத்திந்திய உள்ளக (தன்னாட்சி) இயக்கம்’ (All India Home Rule Movement), அனைத்திந்திய அளவில், 1916-ம் ஆண்டு தொடங்கப் பட்டது. இங்கிலாந்து ஆட்சியின் கீழ் உள்ள, ஆஸ்திரேலியா, கனடா, தெற்கு ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு வழங்கப் பட்டுள்ளது போன்று, இந்தியாவுக்கும் டொமினியன் என்ற தகுதியை வழங்க வேண்டும்; இந்தியாவில், பிரித்தானியப் பேரரசுக்குக் கட்டுப்பட்ட, இந்தியர்களின் சுய ஆட்சி அமைப்பு, ‘உள்ளக ஆட்சி’ (Home Rule) என்று ஹோம் ரூல் இயக்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

அந்த ஆண்டில் அன்னிபெசன்ட் அம்மையார் ஆற்றிய ஒரு சொற்பொழிவில், ‘ஒரு தேசியத்தை உருப்படுத்த, பூகோளம் உதவி புரிகிறது. ஒரே நாட்டில், இரண்டு நேஷன்கள் இயங்க முடியாது. ஒரு நேஷன் என்றால், அதற்குச் சொந்தமாக ஒரு தேசம் இருக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

டாக்டர் நடேசனார்

இந்தியாவில் இந்து நேஷனுக்கும், முஸ்லிம் நேஷனுக்கும் இடமில்லை. இமாலயம் முதல் கன்னியா குமரி வரை, வங்காளம் முதல் கத்தியவார் (குஜராத்) வரை, நமக்கு ஓர் இந்திய நேஷன் வேண்டும். ஆனால், அப்படிப்பட்ட ஒரு நேஷன் இந்தியாவில் ஒருபோதும் இருந்ததில்லை' என்றார். அன்னிபெசன்ட் அம்மையார் நடத்தி வந்த 'நியூ இந்தியா' ஏடு, பத்தாயிரம் படிகளுக்குமேல் விற்பனையாயிற்று. 1920-ம் ஆண்டு இந்த அமைப்பு, மகாத்மா காந்தியைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அதன் பின்னர், அப்படியே காங்கிரஸில் இணைந்துவிட்டது.

பிராமணர் அல்லாதார் அரசியல்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், அரசுப்பணிகளில் பெரும்பாலும் பார்ப்பனர்களே நிறைந்திருந்தனர். இதர வகுப்பினருக்கு ஒரு சில இடங்களே கிடைத்து வந்தன. உயர் பதவிகளில், பார்ப்பனர் அல்லாதாருக்கு வாய்ப்புகள் கிட்டவே இல்லை.

1909-ம் ஆண்டு, பி. சுப்பிரமணியம், எம்.புருஷோத்தம நாயுடு ஆகிய இரண்டு வழக்கறிஞர்கள், 'சென்னை பிராமணர் அல்லாதார் சங்கம்' (The Madras Non-Brahmin Association) என்ற அமைப்பைத் தொடங்கினார்கள்.

சென்னை நகரில் பணியாற்றிய அரசு ஊழியர்கள் சிலர், தாங்கள் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதற்காக, அரசுத் துறைகளில் புறக்கணிக்கப்படுவதாகவும், பதவி உயர்வுகள் மறுக்கப்படுவதாகவும் கருதினர். அவர்கள், கலந்துரையாடிப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பேசுவதற்கும், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்காகவும், 1912-ம் ஆண்டு, ‘சென்னை ஐக்கியக் கழகம்’ (Madras United League) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்கள்.

இந்த அமைப்புக்கு வழிகாட்டியாகவும், துணையாகவும், டாக்டர் நடேசன் விளங்கினார். அவர், அப்போது சென்னையில் புகழ்பெற்ற மருத்துவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். அவர்தான் அந்த அமைப்பின் செயலாளராகப் பொறுப்பு வகித்தார். சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் அமைந்திருந்த அவரது இல்லத்திலேயே இந்த அமைப்பின் கூட்டங்கள் நடைபெற்று வந்தன.

ஓராண்டில், சுமார் 300 உறுப்பினர்கள் சேர்ந்தனர். சரவண பிள்ளை, ஜி.வீராசாமி நாயுடு, துரைசாமி முதலியார், எஸ். நாராயணசாமி நாயுடு போன்ற அரசுப் பணியில் இருந்த பிராமணர் அல்லாதோர், இந்த அமைப்பின் முன்னணியினர்களாகத் திகழ்ந்தனர்.

ஆண்டுதோறும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெறுகின்ற, பிராமணர் அல்லாத இளைஞர்களுக்குப் பாராட்டுக் கூட்டங்கள் நடத்தினர். இதன் உறுப்பினர்கள் அனைவரும் மாலை நேரங்களில், பிராமணர் அல்லாத முதியவர்களுக்குக் கல்வி கற்பித்தனர்.

1913-ம் ஆண்டு, இந்த அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவு விழா, டாக்டர் நடேசனாரின் மருத்துவமனையில் உள்ள தோட்டத்தில் நடைபெற்றது. அப்போது, அமைப்பின் பெயரை மாற்ற வேண்டும் என்று சில உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர். ‘பிராமணர் அல்லாதார் சங்கம்’ என்ற பெயரை சிலர் முன் மொழிந்தனர். ஆனால், அது எதிர்மறைப் பெயராக இருப்பதால், மற்றவர்கள் அதை ஏற்கவில்லை. கடைசியில், ‘திராவிடர் சங்கம்’ (Dravidian Association) என்று பெயர் சூட்டுவதென ஒரு மனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

இந்த அமைப்புதான், ‘திராவிட இயக்கங்களின் தாய்’.

திராவிடர் சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்தனர். உறுப்பினர்களின் எண்ணிக்கை, 500-ஆக உயர்ந்தது. 1914-ம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு விழாவில், டாக்டர் டி.எம். நாயர் ஆற்றிய உரையில், ‘விழியுங்கள்; எழுங்கள்; இன்றேல் என்றும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நீவிர் வீழ்ந்துபட்டோராவீர்' என்று கூறினார். அவரது பேச்சு, உறுப்பினர்களைக் கவர்ந்தது. இந்த அமைப்பின் கூட்டங்களில், ம. சிங்காரவேலர், எல்.டி. சுவாமிக்கண்ணுப் பிள்ளை, திரு வி.க. போன்றோர் கலந்து கொண்டு, பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி வந்தனர்.

சங்கத்தின் சார்பில், 1915-ம் ஆண்டு இரண்டு கருத்து விளக்க நூல்கள்வெளியிடப் பட்டன.

1. பிராமணர் அல்லாதார் கடிதங்கள் **(Non-Brahmin Letters).**

இந்த நூலில், அப்போதைய சென்னை மாகாணத்தில், பிராமணர் அல்லாதாரின் இழிநிலையை விளக்கி, அவர்களை ஒன்றுபட்டு இயங்கக் கோரும் 21 கடிதங்கள் இடம் பெற்றிருந்தன. 'என்.எஸ்.கே.' என்ற புனைபெயரில் இவை எழுதப் பட்டிருந்தன.

2. திராவிடப் பெருமக்கள் **(Dravidian Worthies).**

சர் சி.சங்கரன் நாயர் எழுதியது. பிராமணர் அல்லாதாரிடம் ஒற்றுமை இல்லை; கல்வி கற்பதில் ஆர்வமில்லை; தங்கள் பரம்பரைத் தொழிலையே மேற்கொள்கின்றனர்; கூடுதலாக, மொழிபெயர்ப்பாளர்கள் (துபாஷி) பணியே போதும் என்று கருதுகின்றனர்; பிராமணர் அல்லாத முதலாளிகளே, தங்களது பிராமணர் அல்லாத தொழிலாளிகளை இழிவாக நடத்துகின்றனர்; அரசாங்க வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை; தங்கள் கேடுகெட்ட நிலைமைக்குத் தாங்களே காரணமாக இருக்கின்றார்கள்; பிராமணர் அல்லாத சமூகத்தவர்கள், சென்னை மாகாணப் பொதுவாழ்வில் தங்களுக்குரிய இடத்தைப் பெற வேண்டுமானால், திராவிடர்கள் அனைவரையும் ஓர் அமைப்பின் கீழ் ஒருங்கிணைக்க வேண்டும்; திராவிடத் தாய்மொழிகளில் கற்பிக்கும் தேசியக் கல்லூரியைத் தொடங்க வேண்டும் என்ற கருத்துகளை வலியுறுத்தி, துண்டு அறிக்கைகளை அச்சிட்டு வழங்கினர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



டி.எம்.நாயர்

திராவிடர் சங்க விடுதி

அந்தக் காலகட்டத்தில், பார்ப்பனர்கள் நடத்தி வந்த உணவு விடுதிகளில், பார்ப்பனர் அல்லாதார் உட்கார்ந்து சாப்பிட முடியாது. அவர்களுக்கு எடுப்புச் சாப்பாடுதான் வழங்கப்படும். அதை வேறு எங்காவது எடுத்துக்கொண்டு போய்த்தான் சாப்பிட வேண்டும். எனவே, உயர்கல்வி பெறுவதற்காகச் சென்னைக்கு வந்த பார்ப்பனர் அல்லாத மாணவர்கள் மிகவும் அவதியுற்றார்கள். அப்போது, சென்னை மற்றும் திருச்சியில் மட்டும்தான் முதல்தரக் கல்லூரிகள் (First Grade) இருந்தன. இந்த இரு நகரங்களிலுமே பார்ப்பனர் அல்லாத மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிகள் எதுவும் இல்லை.

இதை உணர்ந்த டாக்டர் நடேசனார், 1916-ம் ஆண்டு, ஜூன் மாதம், சென்னையில் ‘திராவிட சங்க விடுதி’ (Dravidian Association Hostel) ஒன்றைத் தொடங்கினார். சென்னை திருவல்லிக்கேணி யில், அக்பர் சாகிப் தெருவில் அமைந் துள்ள ஒரு பெரிய கட்டடத்தில் தான் அந்த விடுதி இயங்கியது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



பனகல் அரசர்

இப்போதும் அந்தத் தெருவில், பல விடுதிகளும், உணவகங்களும் இயங்கி வருகின்றன. சென்னைக்குப் புதிதாக வருகின்ற இளைஞர்கள், திருவல்லிக்கேணி பகுதி விடுதிகளில் கால் பதித்து, பின்னர்தான் வேறு இடங்களுக்குப் பெயர்ந்து போகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிக் கட்சி

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட மொழி பேசுகின்ற மக்களின் தலைவர்களாக விளங்கியவர்கள், சென்னை மாகாணத்தில், பார்ப்பனர்களின் ஆதிக்கம் இருக்கின்ற வரையிலும், மற்ற இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு விடுதலை கிடைக்காது, கல்வி கிடைக்காது, குடிமக்கள் முன்னேற முடியாது என்று கருதினார்கள்.

காங்கிரஸ் கட்சியில் தீவிரமாகச் செயல்பட்டு வந்த சர் பிட்டி. தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் போன்றோர் காங்கிரஸ் கட்சியில் பார்ப்பனர்களின் ஆதிக்கம், திராவிடர்களுக்கு அநீதி இழைத்து வருவதைக் கண்டு வெறுப்படைந்தனர். காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, பார்ப்பனர் அல்லாதாரின் நலனுக்காகப் பாடுபடத் தீர்மானித்தனர். டாக்டர் நடேசனார் அவர்களை அணுகி, திராவிடர்களின் உயர்வுக்காகப் பாடுபட ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கிச் செயல்படலாம் என அழைத்தார்.

1916-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ம் நாள், சென்னை விக்டோரியா பொது அரங்கில், சர் பி. தியாகராயர், டி.எம்.நாயர், டாக்டர் சி. நடேசனார் உள்ளிட்ட 30 தலைவர்கள் ஒன்றுகூடி, பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப் பட்டோருக்கும் வாய்ப்புகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வழங்கக் கோரி, ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ (South Indian Liberal Federation) என்ற அமைப்பைத் தொடங்கினர்.

கொள்கைகள்

பார்ப்பனர் அல்லாத, அனைத்து வகுப்பாரின் கல்வி, சமுதாய, பொருளாதார, அரசியல் மேம்பாட்டுக்குப் பாடுபடுவது; அவர்களுடைய கருத்துகளை அரசுக்கு எடுத்துரைப்பது; பொதுப்பிரச்னைகள் குறித்து, பொதுக்கூட்டங்கள் நடத்தி, மக்களிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்துவது என்பவை, இச்சங்கத்தின் குறிக்கோளாகும்.

சிவப்பு வண்ணத்தில், நடுவில் தராசு சின்னம் பொறித்த கொடி வடிவமைக்கப் பட்டது.

1917-ம் ஆண்டு, பிப்ரவரி 26-ம் நாள், இச்சங்கத்துக்காக ‘ஜஸ்டிஸ்’ (Justice) என்ற தலைப்பில், ஓர் ஆங்கில நாளேடு தொடங்கப்பட்டது. இதன் முதல் ஆசிரியர் டி.எம். நாயர். கட்சியின் முதல் தலைவராக, சர் பி. தியாகராயர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

அதே ஆண்டில், ‘திராவிடன்’ என்ற தலைப்பில், தமிழ் நாளிதழும் தொடங்கப் பட்டது. அதன் முதல் ஆசிரியர், என். பக்தவத்சலம் பிள்ளை. 1885-ம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வந்த, ‘ஆந்திர பிரகாசிகா’ என்ற தெலுங்கு இதழின் உரிமையையும் பெற்று, அதையும் நடத்தி வந்தனர். அதன் ஆசிரியர், ஏ.சி. பார்த்தசாரதி நாயுடு.

இந்த ஏடுகள் அனைத்தும், மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. ஜஸ்டிஸ் ஆங்கில நாளேடு, அன்றைய சென்னை மாகாண அரசியலில், ஒரு விழிப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியது.

அதன் விளைவாக, ‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’ என்ற கட்சியின் பெயரே, ஒரு பத்திரிகையின் பெயரில் ஆங்கிலத்தில், ‘ஜஸ்டிஸ் பார்ட்டி’ என்றும், தமிழில் ‘நீதிக்கட்சி’ என்றும் அழைக்கப்படலாயிற்று. சென்னை மாகாணம் முழுமையும் கட்சியின் கிளைகள் ஏற்படுத்தப்பட்டன.

அன்னிபெசன்ட் அம்மையார் தொடங்கிய ஹோம் ரூல் இயக்கமும், பார்ப்பனர்களின் ஆதிக்கத்துக்கே உதவுகிறது என்று குற்றம் சாட்டிய நீதிக் கட்சி, அந்த இயக்கத்தையும் எதிர்த்தது.

சென்னை அரசுத் தலைமைச் செயலகப் பணிகளில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பார்ப்பனர்களுக்கும், பார்ப்பனர் அல்லாதாருக்கும் இடையே ஒரு சம நிலையை ஏற்படுத்துவதற்காக, மூன்று ஆண்டுகளுக்கு பார்ப்பனர் அல்லாத சமூகத்திலிருந்தே அதிகாரிகள் மற்றும் எழுத்தர் வேலைகளுக்குப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியது. அதன் காரணமாகவே, சென்னை தலைமைச் செயலகத்தில் பார்ப்பனர் அல்லாதார் நுழைய முடிந்தது.

நீதிக் கட்சி மாநாடுகள்

1. பிராமணர் அல்லாதார் முதல் மாநாடு 1917 ஆகஸ்ட் 19, 20-ம் தேதிகளில் கோவை ஒப்பணக்காரத் தெரு நாடக மேடையில் நடைபெற்றது. தலைவர், பனகல் அரசர் ராமராய நிங்கார்.

2. இரண்டாவது மாநாடு கோதாவரி மாவட்டம் ‘பிக்காவோல்’ என்ற இடத்தில் 1917 அக்டோபர் 27, 28 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. 2000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். செல்லப்பள்ளி குமாரராஜா தலைமை வகித்தார்.

3. மூன்றாவது மாநாடு ராயலசீமாவில் உள்ள கடப்பா மாவட்டம் புலிவெந்தலாவில் 1917-ம் ஆண்டு நவம்பர் 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. பாரிஸ்டர் கே.சுப்பா ரெட்டி தலைமை வகித்தார்.

4. நான்காவது மாநாடு 1917, நவம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் பெஜவாடாவில், சர் பி. தியாகராயர் தலைமையில் கூடியது.

சர் பிட்டி. தியாகராயர்

5. ஐந்தாவது மாநாடு 1917, டிசம்பர் 3-ம் தேதி திருநெல்வேலி கணபதி விலாஸ் கொட்டகையில் நடைபெற்றது. 1,000 பேர் பங்கேற்றனர். தெலப்ரோல் ஜமீன்தார் தலைமை வகித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

6. ஆறாவது மாநாடு 1917, டிசம்பர் 9-ம் தேதி சேலத்தில் நடைபெற்றது. புதுக்கோட்டை ராஜகுமார் கே.எஸ்.துரைராஜ் தலைமையேற்றார்.

நீதிக் கட்சியின் சென்னை மாகாண முதல் மாநாடு 1917-ம் ஆண்டு டிசம்பர் 28-ம் நாள், சென்னை மவுன்ட்ரோடு வெல்லிங்டன் தியேட்டரில் கூடியது. இம்மாநாடுகள் அனைத்தும், ‘பார்ப்பனர் அல்லாதார் மாநாடு’ என்ற பெயரிலேயே நடத்தப்பட்டன. இந்த மாநாடுகளில், ஹோம் ரூல் இயக்கத்தவர்களின் சூழ்ச்சிகள் குறித்துப் பேசினர். ‘விடுதலை பெறுவதற்கு முன்பு, இந்தியர்கள் சீர்திருத்தம் பெற வேண்டும்’ என வலியுறுத்தப்பட்டது. ‘இந்திய விடுதலை என்பது, பிராமணர்களின் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியாகவே அமையும்; ஆங்கிலேயர் ஆட்சியே சம நீதி அளிக்கும் ஆட்சி’ என்று கருதினர். இரட்டை ஆட்சி முறையில், ஆங்கில அரசு நடத்திய முதலாவது பொதுத்தேர்தலில் நீதிக்கட்சி பங்கேற்றது.

நீதிக் கட்சி அரசுகள்

1920-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், தேர்தல் நடைபெற்ற 98 தொகுதிகளுள், நீதிக் கட்சி 63 தொகுதிகளைக் கைப்பற்றியது. வெற்றி பெற்ற நீதிக் கட்சியின் தலைவர் சர் பிட்டி. தியாகராயரை, ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் வில்லிங்டன் அழைப்பு விடுத்தார். ஆனால், ‘மக்கள் வரிப் பணத்திலிருந்து சம்பளம் வாங்க தாம் விரும்பவில்லை’ என்று கூறி, அவர் மறுத்துவிட்டார். ஏ.சுப்பராயலு ரெட்டியார் பெயரைப் பரிந்துரை செய்தார்.


The Hindu.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தி ஹிண்டு

THE SWADESAMITRAN

சுதேசமித்திரன்

1920-ம் ஆண்டு, டிசம்பர் 17-ம் நாள், ஏ.சுப்பராயலு ரெட்டியார், முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். சென்னை மாகாணத்தின் ‘முதல் பிரிமியர்’ (Premier) என்ற பெருமையைப் பெற்றார். அவர் கல்வி, பொதுப்பணித்துறை, ஆயத் தீர்வை மற்றும் பதிவுத் துறைகளை ஏற்றுக்கொண்டார்.

அமைச்சரவையில், இரண்டாவது அமைச்சராக, பனகல் அரசர், சர் ராமராய நிங்கார், உள்ளாட்சி மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்குப் பொறுப்பு வகித்தார். பனகல் என்பது, இன்றைய காளஹஸ்தி பகுதியாகும். குர்மா வெங்கடரெட்டி நாயுடு, வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

உடல்நலக் குறைவால், ஓராண்டுக்கு உள்ளாகவே சுப்பராயலு ரெட்டியார் பதவி விலகியதால், 1921 ஜூலை 11-ம் நாள், பனகல் அரசர் ராமராய நிங்கார், முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். ஒடிஸா மாநிலத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஏ.பி. பாத்ரோ, கல்வி அமைச்சரானார்.

இரண்டாவது அரசு

1923-ம் ஆண்டு, 98 இடங்களுக்கான தேர்தலில், நீதிக் கட்சி 44 இடங்களைக் கைப்பற்றியது. அக்கட்சிக்குள்ளேயே, ‘அமைச்சரவையில் பங்கேற்கக் கூடாது’ என்ற கருத்தைக் கொண்ட அணியினருக்கு 37 இடங்கள் கிடைத்தன. இந்த அணியில், சி. நடேச முதலியார், டி.ஏ. ராமலிங்கம் செட்டியார், சி.ஆர். ரெட்டி, பி. சுப்பராயன், ஆர்.கே. சண்முகம் செட்டியார்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆகியோர் முன்னிலை ஏற்று, ஆங்கில அரசுக்கு ஆதரவான, சர் பிட்டி தியாகராயரின் நடவடிக்கைகளையும் அமைச்சரவையில், தமிழர்களுக்கு இடம் அளிக்காததையும் எதிர்த்து வந்தனர்.

ஆளுநர் வில்லிங்டன் பிரபு, நீதிக் கட்சியை ஆட்சி அமைக்க அழைத்தார். பனகல் அரசர் ராமராய நிங்கார், முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். திவான் பகதூர் சிவஞானம் பிள்ளை, ஏ.பி.பாத்ரோ ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

முதலாவது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

1923-ம் ஆண்டு, நவம்பர் 27-ம் நாள், பேரவை கூடிய முதல் நாளிலேயே, அரசுமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்தியச் சட்ட மன்றங்களின் வரலாற்றிலேயே, முதலாவது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் இதுதான்.

அமைச்சரவையில் பங்கேற்கக் கூடாது என்ற கருத்தைக் கொண்டவர்கள், ‘ஐக்கிய தேசியக் கட்சி’ (United Nationalist Party) என்ற பெயரில் ஒன்றாகியிருந்தனர். அவர்கள்தாம், அரசுக்குப் பெரும்பான்மை இல்லை; பனகல் அரசர் தமது உறவினர்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறார் என்று கூறி, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

இரண்டு நாட்கள் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. நவம்பர் 28-ம் நாள் நடைபெற்ற வாக்குப்பதிவில், அரசுக்கு ஆதரவாக 65 உறுப்பினர்கள் வாக்களித்தனர். அவர்களுள் 21 பேர், நியமன உறுப்பினர்கள். 43 உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லா தீர்மானத்தை ஆதரித்தனர். 10 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர். அரசு வெற்றி பெற்றது. 1926 டிசம்பர் 3-ம் நாள் வரையிலும், பனகல் அரசர், முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

மூன்றாவது அரசு

1926-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி தோல்வி அடைந்தது. எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை. அதிக இடங்களைக் கைப்பற்றிய சுயராஜ்ய கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர், சி.வி.எஸ். நரசிம்மராஜுவை ஆட்சி அமைக்கும்படி, ஆளுநர் விஸ்கவுன்ட் கோஸ்சென் அழைப்பு விடுத்தார். இரட்டை ஆட்சி முறையை நீக்கும்வரை, ஆட்சியில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பங்கேற்பதில்லை என்ற காங்கிரஸ் கட்சியின் முடிவுக்கேற்ப, சுயராஜ்யக் கட்சியினர் ஆட்சி அமைக்குமாறு ஆளுநர் விடுத்த அழைப்பை ஏற்கவில்லை.

நீதிக் கட்சியின் கோட்டை என்று கருதப்பட்ட சென்னை மாநகரில் இருந்த நான்கு தொகுதிகளையும், சுயராஜ்யா கட்சி கைப்பற்றியது. நீதிக் கட்சித் தலைவர்களான நடேச முதலியார், தணிகாசலம் செட்டியார், குர்மா வெங்கட ரெட்டி நாயுடு, ஆர்க்காடு ராமசாமி முதலியார் ஆகியோர் அதிர்ச்சித் தோல்வி அடைந்தனர். எனவே, நீதிக் கட்சியும் ஆட்சி அமைக்க மறுத்துவிட்டது.

சுப்பராயன் அமைச்சரவை

ஆளுநர், எந்தக் கட்சியையும் சாராத பி.சுப்பராயனை ஆட்சி அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். 1926-ம் ஆண்டு, டிசம்பர் 4-ம் நாள், நீதிக் கட்சியின் ஆதரவோடு, டாக்டர் சுப்பராயன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். இரண்டாவது அமைச்சர்களாக, என்.ஆர்.ஆரோக்கியசாமி முதலியார், ஏ.அரங்கநாத முதலியார் ஆகியோர் இடம் பெற்றனர். 1930 அக்டோபர் 27 வரை, இந்த அமைச்சரவை பொறுப்பு வகித்தது. இடையில், இரண்டு அமைச்சர்களும் விலகிக்கொள்ள, எஸ்.முத்தையா முதலியார், எம்.ஆர். சேதுராம ஐயர் ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பு ஏற்றனர்.



பி.சுப்பராயன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முனுசாமி நாயுடு

இந்த அரசு, ஆளுநரின் கைப்பாவை அரசாகவே செயல்பட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

நான்காவது அரசு

1930-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி 35 இடங்களில் வெற்றி பெற்றது. ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றதால், சுயராஜ்யா கட்சி இந்தத் தேர்தலில் பங்கேற்காமல் புறக்கணித்தது.

ஆளுநர் ஜார்ஜ் ஃபிரடெரிக் ஸ்டான்லி, 32 உறுப்பினர்களை நியமித்தார். நீதிக் கட்சியை ஆட்சி அமைக்குமாறு அழைத்தார்.

1930 அக்டோபர் 27-ம் நாள், திவான் பகதூர் சித்தூர் பி. முனுசாமி நாயுடு முதலமைச்சராகவும், சர் பி.டி.ராஜன், குமாரசாமி ரெட்டியார் ஆகியோர் இரண்டாவது அமைச்சர் களாகவும் பொறுப்பு ஏற்றனர். பேரவைத் தலைவராக, பி.ராமச்சந்திர ரெட்டி தேர்ந்தெடுக்கப் பட்டார். முன்னாள் முதல்வர் பி.சுப்பராயன், எதிர்க் கட்சித் தலைவரானார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பொப்பிலி அரசர்

முதல்வர் பொல்லினி முனுசாமி நாயுடு, சித்தூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். நீதிக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவர். 1928 முதல் 1932 வரையிலும் அந்தக் கட்சியின் தலைவராகப் பணியாற்றினார்.

இவரது ஆட்சிக் காலத்தில் கடுமையான பஞ்சம் நிலவியது. நில உடைமை யாளர்களுடன் இணக்கமாக இல்லாததால், அவர்கள் இவரது ஆட்சியை எதிர்த்தனர். பார்ப்பனர்களையும் நீதிக் கட்சியில் சேர்ப்பதற்கு முயன்றதால், கட்சிக்குள் இவருக்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

பொப்பிலி அரசரையும், வெங்கடகிரி குமார ராஜாவையும் அமைச்சரவையில் சேர்க்காததால், நீதிக்கட்சிக்குள்ளேயே முதலமைச்சருக்கு எதிர்ப்புகள் தோன்றின. அவர், காங்கிரஸுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. தஞ்சாவூரில் நடந்த கட்சி மாநாட்டில், முதலமைச்சர் முனுசாமி நாயுடு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, அவர் முதல்வர் பொறுப்பிலிருந்து விலகினார்.

பொப்பிலி அரசர் ஆட்சி

1932-ம் ஆண்டு, நவம்பர் 5-ம் நாள், பொப்பிலி அரசர் முதல்வராகப் பொறுப்பேற்றார். அப்போது அவருக்கு வயது 31. இவரது முழுப் பெயர், ராஜா ஸ்ரீ ராவு ஸ்வேதாசலபதி ராமகிருஷ்ண ரங்கா ராவ். பொப்பிலி சமஸ்தானம், இன்றைய ஆந்திர மாநிலத்தின் வடகிழக்கு எல்லையில், விஜயநகரத்துக்கும் விசாகப்பட்டினத்துக்கும் இடையில் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஐந்தாவது அரசு

1934-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், பொப்பிலி அரசரின் ஆட்சிக்கெதிரான அலை வீசியது. அவர் நில உடைமையாளர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. நீதிக் கட்சிக்குள்ளே நிலவிய கருத்து வேற்றுமைகளால், அக்கட்சி தோல்வி அடைந்தது. நில உடைமை யாளர்கள் ஒரு பிரிவாகவும், மற்றவர்கள் ஒரு பிரிவாகவும் செயல்பட்டு வந்தனர்.

சுயராஜ்யா கட்சி, 29 இடங்களில் வெற்றி பெற்று, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. ஆட்சி அமைக்க ஆளுநர் அழைத்தார். ஆனால், அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே, பொப்பிலி அரசரே சிறுபான்மை அரசுக்குத் தலைமையேற்று, மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

அவரது அமைச்சரவையில் பி.டி.ராஜன், வளர்ச்சித் திட்டங்கள், பொதுப்பணித்துறை, பத்திரப்பதிவு அமைச்சராகவும், எஸ்.குமாரசாமி ரெட்டியார் (1934-36), ராஜா முத்தையா செட்டியார் ஆகியோர், கல்வி மற்றும் ஆயத்தீர்வை அமைச்சராகவும், ஏ.டி.பன்னீர்செல்வம் உள் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர்.

1937 தேர்தல் தோல்வி

1920-ம் ஆண்டு, சென்னை மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் தொடங்கி, 1937-ம் ஆண்டு வரையிலும், சென்னை மாகாணச் சட்டமன்றத்துக்கு நடைபெற்ற ஐந்து பொதுத் தேர்தல்களில், நான்கில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நீதிக் கட்சி, சுமார் 13 ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பு வகித்தது.

1935-ம் ஆண்டு வகுக்கப்பட்ட இந்திய அரசுச் சட்டத்தின்படி, 1937-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், நீதிக் கட்சி படுதோல்வி அடைந்தது.

'நீதிக்கட்சி, வெள்ளையர்களுக்கு வால் பிடிக்கும் கட்சி' என்ற காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரம், மக்களிடையே ஏற்படுத்திய மாற்றம் இது. அந்தக் காலகட்டத்தில், இந்திய விடுதலைப் போராட்டம் எழுச்சி பெற்றிருந்தது. அதன் விளைவே, நீதிக் கட்சியின் தோல்வி.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை ராஜதானியின் 215 சட்ட மன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலில், நீதிக்கட்சி 18 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. பொப்பிலி அரசர், காங்கிரஸ் வேட்பாளர் வி.வி.கிரியிடம் 6000 வாக்குகள் குறைவாகப் பெற்றுத் தோல்வி அடைந்தார். பி.டி.ராஜன், ஏ.பி. பாத்ரோ உள்ளிட்ட பல முன்னணித் தலைவர்களும் தோல்வி அடைந்தனர்.

சட்டமேலவைக்கான 46 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், 7 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அரசியலில் ஒரு சக்தியாகத் திகழ்ந்த நீதிக் கட்சி, வலுவிழந்தது. கட்சியின் செல்வாக்கு முழுமையாகச் சரிந்தது.

பொப்பிலி அரசர், 1946-ம் ஆண்டு, இந்திய அரசியல் சட்ட வரைவு நாடாளு மன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டு, 1951 வரையிலும் அதன் உறுப்பினராக இருந்தார். 1967-ம் ஆண்டு, ஆந்திர மாநிலச் சட்டமன்ற தேர்தலில், பொப்பிலி தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பல கல்வி நிலையங்களை நிறுவினார்.

திராவிடர் கழகம்

1939-ல், நீதிக்கட்சியின் தலைவராக பெரியார் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1944-ம் ஆண்டு, சேலத்தில் கூடிய நீதிக் கட்சி மாநாட்டில், அண்ணாதுரை சில தீர்மானங்களைக் கொண்டு வந்தார்.

1. ஆங்கில அரசாங்கம் கொடுத்த ‘திவான் பகதூர், ராவ் பகதூர், சர் போன்ற பட்டங்கள் அனைத்தும் துறப்பது.
2. பெயர்களுக்குப் பின்னால், சாதியைக் குறிப்பிடுவதைத் தவிர்ப்பது.
3. நீதிக் கட்சி என்ற இயக்கத்தின் பெயரை, ‘திராவிடர் கழகம்’ எனப் பெயர் மாற்றம் செய்வது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

குர்மா வெங்கட ரெட்டி நாயுடு

இந்தத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின. கட்சியின் பெயர், 'திராவிடர் கழகம்' என்று மாற்றம் பெற்றது. கட்சியின் தலைவராக பெரியார் தேர்ந்தெடுக்கப் பட்டார். 'இந்தக் கட்சி, ஒருபோதும் தேர்தலில் போட்டியிடாது' என்று தந்தை பெரியார் அறிவித்தார். ஆயினும், நீதிக் கட்சியின் ஒரு பிரிவினர், 1952-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றனர். அதற்குப் பிறகு, அக்கட்சியின் சார்பில் ஒருவரும் தேர்தலில் போட்டியிடவில்லை.

நீதிக் கட்சியின் சாதனைகள்

1. வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை (Communal G.O.)

   இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னை ராஜதானி சட்டமன்றத்தில் இட ஒதுக்கீடு தீர்மானம் நிறை வேற்றியது. (1921 செப்டம்பர் 16) பி. சுப்பராயன் தலைமையிலான அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த எஸ். முத்தையா முதலியார், அரசுப்பணிகளில் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டை நடைமுறைப் படுத்தினார்.

2. இந்தியாவிலேயே முதன்முறையாக, சட்டமன்றத்தில் பெண்களுக்கு இடமளிக்கும் தீர்மானம் (1921 ஏப்ரல் 1). இதன்படி, 1926-ம் ஆண்டு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

3. தொழில் வளம் பெருகிட, தனியார் தொழில் தொடங்குவதற்கான சலுகைகள்.

4. பஞ்சமர், பறையர் என்ற சாதிப் பெயர்களை நீக்கிவிட்டு,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அவர்களது வரலாற்றுக்குரிய சிறப்புப் பெயரான ‘ஆதிதிராவிடர்’ என்றே அழைக்கப்பட வேண்டும் என டாக்டர் சி. நடேசனார் விடுத்த கோரிக்கையை ஏற்று, 1922 மார்ச் 25-ம் நாள் பெயர் மாற்ற ஆணை.

4. இந்தியாவிலேயே முதன்முதலாக, கோயில்களைப் பாதுகாத்திட, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் 18 டிசம்பர் 1922. (The Madras Hindu Religious Endowment Act)

5. இந்தி ஆதிக்க எதிர்ப்பு முதல் மொழிப்போர்.

6. பிற்படுத்தப்பட்ட ஏழை, எளிய மாணவர்களுக்கு இலவசக் கல்வி, இலவசப் பாட நூல்கள், இலவச ஆடைகள்.

7. பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை உணவளிக்கும் திட்டத்தை, முதன் முதலில் அறிமுகப்படுத்தியது. 1920-ம் ஆண்டு, ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. பிறகு, மேலும் நான்கு பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. 1960-ம் ஆண்டு, காமராஜர் ஆட்சியில் மதிய உணவுத் திட்டமாக தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1980-ம் ஆண்டு, எம்.ஜி.ஆர். ஆட்சியில் சத்துணவுத் திட்டமாக மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

8. ஆங்கிலேயர்களின் கையில் இருந்த மருத்துவத் துறை இந்தியர்களின் கைக்கு மாற்றியது.

நீதிக் கட்சியின் ஆவணங்கள்

திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளர் க.திருநாவுக்கரசு எழுதிய, ‘நீதிக் கட்சி வரலாறு’ என்ற நூலில், பக்கம் 212-ல், நீதிக் கட்சியின் ஐந்து ஆவணங்களாக, கீழ்க்காண்பவற்றை வரையறுக்கிறார்:

1. 20.12.1816-ல், பிட்டி.தியாகராயர் வெளியிட்ட, பிராமணர் அல்லாதார் அறிக்கை; சென்னை, சேத்துப்பட்டு ஸ்பர்டாங் சாலையில், தாழ்த்தப் பட்டவர்களின் முன்னேற்றம் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில், டாக்டர் டி.எம்.நாயர் ஆற்றிய உரை.

2. சுயமரியாதை இயக்கம் தோன்றியதற்கான காரணங்களைப் பட்டியலிட்டு, தந்தை பெரியார் வெளியிட்ட அறிக்கைகள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

3. 1944-ம் ஆண்டு, சேலம் மாநாட்டில், ‘நீதிக் கட்சி’ என்ற பெயரை, ‘திராவிடர் கழகம்’ என மாற்றம் செய்த அண்ணாவின் தீர்மானம்.

4. 20.08.1944-ல் ஈரோட்டில் வெளியிடப்பட்ட திராவிட நாடு, குடியரசு இதழ்கள்.

5. 17.9.1949 அன்று, திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப் பட்டபோது, அண்ணா வெளியிட்ட அறிக்கை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தந்தை பெரியாருடைய வாழ்க்கை வரலாறில், தமிழக அரசியலின் ஒரு பகுதியும் சமூகநீதி வரலாற்றின் பெரும்பகுதியும் அடங்கியுள்ளது. அக்குறிப்புகளை இங்கே காணலாம்:

தந்தையாரின் கண்டிப்புகளால் வெறுப்புற்ற ஈ.வெ.ராமசாமி, துறவு வாழ்க்கை மேற்கொள்ளக் கருதி, 1904-ம் ஆண்டு, தமது 25-ம் வயதில், வீட்டைவிட்டு வெளியேறினார். விஜயவாடா சென்றார். அங்கிருந்து ஹைதராபாத் வழியாக, காசிக்குப் போய்ச் சேர்ந்தார். ஒரு மடத்தில் சேர்ந்து துறவியானார். ஆனால், காசி அவர் எதிர்பார்த்ததுபோல இல்லை. இந்து மதத்தின் பெயரால் நடக்கின்ற அவலங்களை எல்லாம் கண்டார். மிக அருவருப்பான, ஒழுக்கக்கேடான நடவடிக்கைகள், பரத்தைத்தொழில், ஏமாற்றுதல், பகற் கொள்ளை, கெஞ்சி பிச்சை கேட்கும் காட்சிகள், கங்கையாற்றில் மிதந்துச் செல்லும் பிணங்கள் என காசியின் அன்றாடக் காட்சிகள், பெரியாருக்கு வெறுப்பை ஏற்படுத்தின.

ஒரு சத்திரத்தில், பார்ப்பனர்களுக்கு மட்டுமே அன்னதானம் வழங்கப்படுவதைக் கண்டார். பசிக்கொடுமையால் தாமும் ஒரு பார்ப்பனர்போல் பூணூல் அணிந்து உள்ளே செல்ல முயன்றார். ஆனால், அவரது முகத்தில் இருந்த பெரிய மீசையைக் கண்ட காவலாளி, அவர் பார்ப்பனர் அல்ல என்பதைக் கண்டுபிடித்து, வெளியே தள்ளி விட்டார். வேறு வழியின்றி, குப்பையில் கொண்டுவந்து கொட்டப்பட்ட எச்சில் இலைகளில் இருந்த உணவை உண்டார். இந்த நிகழ்வு, அவரது மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்திற்று. பார்ப்பனர் அல்லாதவர்கள் கட்டிப் பராமரித்து வருகின்ற அந்தச் சத்திரத்தில், பார்ப்பனர் களுக்கு மட்டுமே அன்னதானம் வழங்கப் படுவது அவரைச் சிந்திக்கச் செய்தது.

இந்து சமயத்தின் பெயரால், இறைவனின் பெயரால், சாதிகளின் பெயரால், மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் வளர்க்கப்படுவதை உணர்ந்தார். அதுவரையிலும் இறைப்பற்றாளராக இருந்த பெரியார், இறை மறுப்பாளரானார். ஊருக்குத் திரும்பி வந்தார்.

காணாமல் போன மகனைத் திரும்பவும் கண்ட தந்தை, தமது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வணிகப் பொறுப்புகள் அனைத்தையும் இவரிடம் ஒப்படைத்தார். தமது கடைக்கு, 'ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மண்டி' எனப் பெயரிட்டார். ஈரோட்டில் பெருவணிகரானார். அப்போது, ஈரோட்டில் பிளேக்நோய் தாக்கியது. ஊரே அஞ்சி நடுங்கிய போதிலும், அந்த நோயால் இறந்தவர்களின் சடலங்களை தம் முதுகின்மீதே சுமந்துகொண்டு போய் அடக்கம் செய்தார்.

கரூரைச் சேர்ந்த மருதையாப் பிள்ளை என்ற புலவர், பௌத்தநெறி மற்றும் பகுத்தறிவுக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு, இந்து மதத்தையும் சாதி முறையையும் கடுமையாகக் கண்டித்து வந்தார். இதிகாசங்களின் கற்பனைப்புரட்டுகள், வேத சாத்திரங்கள் ஆகியவற்றின்மீது அறிவுக்கூர்மையான வாதங்களை எழுப்பி, கண்டனக் கணைகளைத் தொடுத்து வந்தார். அவருடன் ஏற்பட்ட நட்பு, பெரியாரின் உள்ளத்தில் நாத்திகம் எனும் கடவுள் மறுப்புக் கோட்பாட்டை விதைத்தது. நுண்ணறிவுப் பகுத்தறிவுச் சிந்தனையாளராக உரு மாற்றியது. தமிழறிஞர் துறவி கைவல்யம் அடிகளாரின் நட்பும், பெரியாரின் பகுத்தறிவுப் பார்வைக்குச் செழுமை சேர்த்தது.

பெரியாரின் தமக்கையின் மகளுக்கு ஒன்பது வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கப்பட்டது. கணவன் இறந்துவிட, இளம்வயதிலேயே அந்தப்பெண் விதவையானார். உறவினர்களின் எதிர்ப்பை மீறி, அந்தப் பெண்ணுக்கு பெரியார் மறுமணம் செய்து வைத்தார்.

காங்கிரஸில் பெரியார்

1918-ம் ஆண்டு, பெரியார் ஈரோடு நகர்மன்றத் தலைவரானார். அரசுத்துறை மற்றும் தனியார்துறை அமைப்புகள் பலவற்றில் பதவிகளை வகித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



பெரியார்

1919-ம் ஆண்டு, சி.வரதராஜுலு நாயுடு, ராஜாஜி ஆகியோரின் அழைப்பை ஏற்று காங்கிரஸில் இணைந்தார்.

நகர்மன்றத் தலைவர் பொறுப்பு உள்ளிட்ட 29 பொறுப்புகளை விட்டு விலகினார். 1920-ம் ஆண்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார். தாம் கதர் அணிந்ததுடன், தம் குடும்பத்தில் அனைவரையும் கதர் அணியச் செய்தார்.

1922-ம் ஆண்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவரானார். திருப்பூரில் நடைபெற்ற கட்சியின் மாநில மாநாட்டில், ‘ஆதி திராவிட மக்கள், ஆலயங்களுக்குள்ளே நுழைந்து வழிபட அனுமதிக்க வேண்டும்’ என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அப்போது காங்கிரஸ் குழுவில் பெரும்பான்மையாக இருந்த பார்ப்பனர்கள், அத்தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமல் செய்தனர்.

1923-ம் ஆண்டு, நீதிக் கட்சி கொண்டுவந்த, இந்து சமய அறநிலையத் துறை அமைக்கும் சட்டத்தை பெரியார் ஆதரித்தார். அரசு ஆணை மூலம் கல்வி, வேலைவாய்ப்புகளில் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டைச் செயல் படுத்த, நீதிக் கட்சி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆதரித்தார்.

வைக்கம் வீரர்

1924-ல் திருவண்ணாமலையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்கு, பெரியார் தலைமையேற்றார்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், ‘வைக்கம்’ என்ற சிற்றூரில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இருந்த கோயிலுக்கு உள்ளே நுழைவதற்கும் அந்த வீதியில் நடமாடுவதற்கும் அரிசன மக்களுக்கும் ஈழவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. கேரளா முழுவதுமே கோயில்களைச் சுற்றி உள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டோர் நடக்கக் கூடாது என்ற தடை இருந்தது. அதை எதிர்த்து, அந்தப் பகுதியில் இருந்தவர்கள் போராடி வந்தார்கள். காந்தியாரும் நாராயணகுருவும் அப்போராட்டத்தை ஆதரித்து வந்தனர்.

வைக்கம் பகுதியில் போராடி வந்த 19 பேர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். சிறையில் இருந்து ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகியோர் சென்னை மாகாண காங்கிரஸ் தலைவரான பெரியாருக்கு ஒரு கடிதம் எழுதினர். வைக்கத்துக்கு வந்து போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

1924 ஏப்ரல் 14-ம் நாள், பெரியார் தமது துணைவியார் நாகம்மையாருடன், வைக்கம் அறப்போரில் பங்கேற்றார். கைது செய்யப்பட்டு இருவரும் தனித்தனிச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். ஆறுமாத காலம் சிறைவாசம் அனுபவித்தனர். சிறைக்கு உள்ளே பெரியார் கைவிலங்கு பூட்டப்பட்டே இருந்தார். அதன்பிறகும் போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று வெற்றி பெற்றது. பெரியார், ‘வைக்கம் வீரர்’ என அழைக்கப்படலானார்.

அதன்பின்னர், இப்போராட்டம் கேரளாவில் இருந்த அனைத்துக் கோயில்களிலும் முன்னெடுக்கப்பட்டது. பின்னர், இந்தியா முழுமையும், காந்தியார் அரிசனங்கள் ஆலயப் பிரவேச இயக்கத்தை நடத்தினார்.

சேரன்மகாதேவி

இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், ஆங்கில அடிமைக் கல்வி முறையைக் காங்கிரஸ் கட்சி எதிர்த்தது. பண்டைய குருகுல முறைப்படி கல்வி அளிப்பதற்காக, திருநெல்வேலி அருகே சேரன்மகாதேவியில், ‘சுதந்திரப் பள்ளிக் கூடம்’ என்ற பெயரில், வ.வே.சுப்பிரமணிய ஐயர் ஒரு பள்ளியை நடத்தினார். சென்னை மாகாண காங்கிரஸ் கட்சி, இந்தப் பள்ளியை நடத்துவதற்கு நிதி உதவி அளித்து வந்தது.

ஆனால், அந்தப் பள்ளியில் வருணாசிரம முறைப்படி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பாடங்களை நடத்தினர். மேல் சாதி, சூத்திர சாதி, தாழ்த்தப்பட்ட, தீண்டத் தகாத சாதி என்று மாணவர்களைப் பிரித்து உட்கார வைத்து, தீண்டாமையை வளர்த்தனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட உணவிலும் பாகுபாடு காட்டப்பட்டது. பார்ப்பன மாணவர்களுக்கும் பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்கும் சுடு சோறு, பழைய சோறு என தனித்தனியே உணவு பரிமாறப்பட்டதை அறிந்த பெரியார் போர்க்கொடி தூக்கினார்.

இந்த வர்ணாசிரமப் பள்ளியைத் தந்தை பெரியாரும், ப.ஜீவானந்தமும் சென்று பார்த்தனர். பள்ளியில் தீண்டாமை நிலவுவதைக் கண்டித்து, அந்தப் பள்ளிக்குக் காங்கிரஸ் கட்சியில் இருந்து வழங்கிய நிதி உதவியை நிறுத்தினர்.

வகுப்புவாரி உரிமை

1920-ம் ஆண்டு முதலே, காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புவாரி இட ஒதுக்கீட்டை பெரியார் வலியுறுத்தி வந்தார். திருநெல்வேலி (1920), தஞ்சாவூர் (1921), திருப்பூர் (1922), சேலம் (1923), திருவண்ணாமலை (1924) ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடுகளில், பெரியார் கொண்டுவந்த தீர்மானம் பார்ப்பனர்களால் தோற்கடிக்கப்பட்டது.

1924-ம் ஆண்டு, சேலத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, ‘ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே இடஒதுக்கீட்டைப் பெற்றாக வேண்டும்; இல்லையேல், பார்ப்பனர்களுடைய மேலாதிக்கத்தை ஒழிக்கவே முடியாது; பின்னர் அவர்களுடைய கொடுங்கோல் ஆட்சியின்கீழ் துன்பப்பட நேரிடும். வெள்ளைக்காரர்களிடம் இருந்து இந்தியா விடுதலை பெற்றால், அந்தச் சுதந்திரம் பார்ப்பனர்களுக்குத்தான்’ என்றார்.

1925-ம் ஆண்டு நவம்பர் மாதம், காஞ்சி புரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில், பார்ப்பனர் அல்லாதாருக்கு 50 விழுக்காடு வகுப்புவாரி இடஒதுக்கீடு கோரி தீர்மானம் கொண்டு வந்தார். அங்கும் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இதனால் வெறுப்புற்ற பெரியார், காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தே வெளியேறினார்.

டிசம்பர் மாதம் காங்கிரஸ் மாநாட்டுக்குப் போட்டியாக, காஞ்சிபுரத்தில் பார்ப்பனர் அல்லாதார் மாநாட்டை நடத்தினார்.

அங்கே உரையாற்றுகையில், ‘பண்டைக்காலம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதற்கொண்டே திராவிடருக்கும் ஆரியருக்கும் தனி இன வேறுபாடு இருந்து வந்து உள்ளது; அதுவே, இன்று காங்கிரஸ் கட்சியிலும் நிலவுகிறது; ஆகவே, இந்துமத சாதிமுறை மற்றும் மூடநம்பிக்கை மூலமாக, பார்ப்பன ஆதிக்கத்தால் சீரழிக்கப்பட்ட திராவிடரின் இனம், மொழி, நாகரிகம் ஆகியவற்றின் தன்மானத்தைக் கட்டிக் காப்பாற்றிக் கொள்வதே இன்றைய கட்டாயத் தேவை' என வலியுறுத்தினார்.

1925 மே 2-ல் 'குடியரசு' தமிழ் வார இதழைத் தொடங்கினார். இந்து மதத்தின் கொடிய சாதிமுறை மற்றும் மூடநம்பிக்கை மூலம், பார்ப்பனரால் அடக்கி அடிமைப் படுத்தப்பட்ட திராவிட இனத்தவருக்கு விழிப்பு உணர்வு ஊட்டும், தன்மான எழுச்சிக் கொள்கைகளைப் பரப்பினார்.

சுயமரியாதை இயக்கம்

1925-ம் ஆண்டு, 'சுயமரியாதை இயக்கம்' என்ற சீர்திருத்தப் பாசறையைத் தோற்றுவித்தார். தமிழகத்தில் மட்டுமன்றி, உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் இந்த அமைப்புக்கு ஆதரவு திரண்டது.

1926-ம் ஆண்டு, தமிழகம் முழுவதிலும், பார்ப்பனர் அல்லாதார் இயக்க மாநாடுகள் நடைபெற்றன; பெரியார் பங்கேற்றார். 1927-ம் ஆண்டு, காந்தியடிகளைப் பெங்களூரில் சந்தித்துப் பேசினார்.

இந்தியாவின் விடுதலைக்கு முன்பு நாட்டை அச்சுறுத்தும் மூன்று பெருந் தீங்குகளை ஒழித்துக்கட்ட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

1. காங்கிரஸ் கட்சி, பார்ப்பனர்களின் பிடியில் உள்ளது.
2. சாதி முறையைக் கொண்ட இந்து மதம்
3. பார்ப்பனர்களின் மேலாதிக்கம் ஆகியவை குறித்து எச்சரித்தார்.

1928 நவம்பர் 7-ல் 'புரட்சி' (Revolt) எனும் ஆங்கில இதழைத் தொடங்கினார். டிசம்பர் 28 மற்றும் 29 ஆகிய நாட்களில் ஈரோட்டில், 'சிந்தனைச் சிற்பி' சிங்காரவேலருடன் கருத்துகளைப் பரிமாறி, சமதர்மத் திட்டம் ஒன்றை வரைந்தார். அதை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.

சுயமரியாதைத் திருமணம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1929-ம் ஆண்டு, சுயமரியாதை இயக்கத்தின் முதல் மாநில மாநாடு செங்கல்பட்டு நகரில் நடைபெற்றது. டபிள்யு.பி.ஏ.சௌந்திரபாண்டியன் மாநாட்டுக்குத் தலைமையேற்றார்.

சுயமரியாதைத் திருமணம் எனப்பெறும், பகுத்தறிவு தழுவிய ஒரு வாழ்க்கை ஒப்பந்த முறையைச் செய்து காட்டினார். இந்த நிகழ்வில், அனைத்து மதச் சடங்குகளும் கடவுள் வழிபாடும் சமஸ்கிருத மொழியில் மந்திரங்கள் ஓதுதலும் நீக்கப்பட்டது. புது மணமக்கள் எவரேனும் ஒருவர் தலைமையில் மாலை மாற்றிக்கொண்டு, வாழ்க்கை ஒப்பந்த உறுதிமொழியைத் தங்கள் தாய்மொழியில் கூறினாலே போதும். இந்தத் திருமணத்தில் பகட்டு ஆடம்பரமே கூடாது; மிகமிகச் சிக்கனமாக நடைபெற வேண்டும் என விதிமுறைகளை வகுத்தார்.

மலேசியா, சிங்கப்பூர் பயணம் மேற்கொண்டு திரும்பி வந்தபிறகு, 1930 ஜனவரியில் குடும்பக் கட்டுப்பாடு குறித்து ஒரு நூலை வெளியிட்டார். குழந்தைப் பிறப்பைக் கட்டுப்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

ஈரோடு நகரில் சுயமரியாதை இயக்கத்தின் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது. அத்துடன், இளைஞர் மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு, தமிழ் இசை ஆதரவு மாநாடுகளையும் நடத்தினார்.

தேவதாசி ஒழிப்பு

மேளம், நாயனம் ஆகிய இசைக் கருவிகளை இசைக்கும் ஒரு வகுப்பைச் சேர்ந்த இளம்பெண்களை, இந்துக் கோயில்களில் நடன நங்கையராக பொட்டுக்கட்டி, பொது மகளிராக்கினர். அவர்களை ‘தேவதாசிகள்’ என அழைத்தனர். இவ்வழக்கத்தை பெரியார் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தேவதாசி முறையை ஒழிக்கும் தீர்மானத்தை வரைந்து, சட்டமேலவையில் கொண்டுவந்து நிறைவேற்றச் செய்தார்; அதை பெரியார் ஆதரித்தார்.

1932-ம் ஆண்டு மூன்று மாதங்கள், ஐரோப்பிய நாடுகளில் பெரியார் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். எகிப்து, கிரீஸ், துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுகல் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தோழர் ஈ.வெ.ரா.

இன்றைக்குத் தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் செயல்வீரர்கள் இடையே, ‘தோழர்’ என்று அழைத்துக்கொள்கிற வழக்கம் இருக்கிறது. இதை அறிமுகப் படுத்தியவர் தந்தை பெரியார். அவர் ரஷ்யாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு திரும்பியபின்னர் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

‘இயக்கத் தோழர்களும் இயக்க அபிமான தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்ளுவதிலும் பெயருக்கு முன்னால், பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக, ‘தோழர்’ என்கின்ற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும் மகா, ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, ஸ்ரீ ஜத் என்பது போன்ற வார்த்தைகளைச் சேர்த்துப் பேசவோ, எழுதவோ கூடாது என்றும் வணக்கமாக வேண்டிக் கொள்கிறேன். குடியரசிலும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்’ என்று கேட்டுக் கொண்டார். தம்மையும் ‘தோழர் ஈ.வெ.ராமசாமி’ என்றே அழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

1933-ல் குடியரசு ஏடு தடை செய்யப்பட்டது.

1934-ம் ஆண்டு, ஈரோட்டுக்கு வந்த ஜெயப்பிரகாஷ் நாராயண், தாம் தொடங்கி இருக்கின்ற ‘காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி’யில் சேருமாறு பெரியாருக்கு அழைப்பு விடுத்தார்.

1935-ல் நீதிக்கட்சி, ‘விடுதலை’ எனும் தமிழ் வார இதழை வெளியிடத் தொடங்கியது. சிறிது காலத்தில் அதன் பொறுப்பை பெரியாரிடம் ஒப்படைத்தது. அதில், தமிழ் எழுத்துகளின் சீர்திருத்தத்தை பெரியார் அறிமுகப்படுத்தினார். 1937 முதல் விடுதலை ஏட்டை தாமே வெளியிடத் தொடங்கினார்.

தமிழ்நாடு தமிழருக்கே

1937-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ராஜாஜி, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். அதை எதிர்த்து டிசம்பர் 26-ம் நாள், திருச்சியில் தமிழர் மாநாடு கூட்டப்பட்டது. அதில் பங்கேற்ற பெரியார், ‘தமிழையும் திராவிட இனத்தையும் அடிமைப்படுத்த வரும் இந்தி ஆதிக்கத்தை ஒழித்து, அதனை முறியடிக்க வேண்டும்; அதற்கு ஒரேவழி, தமிழ்நாடு தமிழருக்கே என்கிற தனிநாடு விடுதலை தான்’ என்று முழங்கினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1938-ம் ஆண்டு, ‘ஆண் பெண் சேர்க்கை இல்லாமல், சோதனைக் குழாய் மூலம் குழந்தையை உருவாக்கும் காலம் வரும்’ என்ற கருத்தை வெளியிட்டார். அப்படி ஒரு சோதனைக் குழாய்க் குழந்தையை அட்டைப்படமாகவே போட்டு, ‘இனிவரும் உலகம்’ என்ற ஒரு நூலை வெளியிட்டார்.

1927-ல் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்ற பெயரில் உள்ள சாதியைத் துறந்து, ஈ.வெ.ராமசாமி என்றே குடியரசு இதழில் எழுதத் தொடங்கினார். அப்போது, நாகர்கோவிலைச் சேர்ந்த வழக்கறிஞர் ப.சிதம்பரம் பிள்ளை, ஈ.வெ.ராமசாமிப் பெரியார் என அழைப்போம் என்று கூறி, அவ்வாறே பேசியும், எழுதியும் வந்தார்.

1929-ல், ராமநாதபுரம், திருநெல்வேலியில் நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகளில் உரை ஆற்றியவர்கள், ‘பெரியார்’ என்றே விளித்தனர். அவ்வாறே மற்றவர்களும் அழைக்கத் தொடங்கினார்கள். 1938 நவம்பர் 13-ம் நாள், சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாடு, இவரது பொதுத் தொண்டினைப் பாராட்டி ‘பெரியார்’ எனும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது.

1937 தேர்தலில் படுதோல்வி அடைந்த நீதிக் கட்சி, 1939-ம் ஆண்டு பெரியாரை கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். பட்டுக்கோட்டை அழகிரி ஆதரவளித்தார். அப்போது பெரியார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, பெல்லாரி சிறையில் இருந்தார்.

ஆட்சி அமைக்க மறுப்பு

1939-ம் ஆண்டு, ராஜாஜி தலைமையிலான காங்கிரஸ் அரசு பதவி விலகியது. 1940 ஏப்ரல் மாதம், ஆளுநர் ஹோப் நீதிக் கட்சியின் தலைவரான பெரியாரை ஆட்சி அமைக்குமாறு கேட்டுக்கொண்டார். பெரியார் அதை ஏற்க மறுத்துவிட்டார்.

1940-ல் வட இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். மும்பையில் டாக்டர் அம்பேத்கர், முகமது அலி ஜின்னா ஆகிய தலைவர்களைச் சந்தித்தார். இந்தப் பயணத்தில் பெரியாரின் மொழிபெயர்ப்பாளராக அறிஞர் அண்ணா உடன் சென்றார்.

1940-ல் திருவாரூரில் நடைபெற்ற மாநாட்டில், திராவிட நாடு விடுதலையை வலியுறுத்தினார். ‘இந்திமொழி ஆதிக்கம், வட

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்திய இந்து முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து, திராவிட இனத்தையும் தமிழ் மொழியையும் காப்பாற்றவே விடுதலை கோரிக்கை' என்றார்.

1942-ல் ஆளுநர் ஹோப், ஆட்சி அமைக்குமாறு இரண்டாவது முறையாக பெரியாருக்கு அழைப்பு விடுத்தார். அதையும் ஏற்க மறுத்துவிட்டார்.

திராவிடர் கழகம்

1944-ம் ஆண்டு, சேலத்தில் நடைபெற்ற மாநாட்டில் நீதிக் கட்சியின் பெயர், 'திராவிடர் கழகம்' என மாற்றம் பெற்றது. பார்ப்பனரால் அடக்கிச் சீரழிக்கப்பட்ட திராவிட இனம், விடுதலை பெறுவதற்குப் போராடும் ஒரு சமுதாயப் புரட்சி இயக்கம் என்பதைக் குறிக்கவே இந்தப் பெயர் மாற்றம். முதலில் 'தமிழர் கழகம்' என்ற பெயர் பரிசீலிக்கப்பட்டது.

'தமிழர் கழகம்' என்றால், அதிலும் பார்ப்பனர்கள் புகுந்து கொள்வார்கள் என்பதால், பார்ப்பனர் களுக்கு எதிரான சொல்லாக, 'திராவிடம்' என்ற பெயரைச் சூட்டினார் பெரியார். ரவீந்திரநாத் தாகூர் இயற்றிய இந்திய தேசியகீதத்தில் 'திராவிடம்' என்றுதான் தென்னிந்தியாவை ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

விடுதலை அல்ல; துக்க நாள்

1947 ஆகஸ்ட் 15-ம் நாள், இந்தியா விடுதலை பெற்றது. நாடு முழுவதும் மக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடினர். ஆனால், பெரியார் அதை ஒரு துக்க நாள் என அறிவித்தார்.

'இந்தியாவின் விடுதலை என்பது, ஆங்கிலேயர்களிடம் இருந்து பார்ப்பனர்களும் வடஇந்திய பனியாக்கள் எனும் வணிகர்களும் அடமானம் பெற்ற நாள் (Made over day) என்பதுதானே ஒழிய, வேறு ஒன்றும் இல்லை; தமிழர்க்கு எனத் தனிநாடு அமைந்தால்தான் முழு விடுதலை அடைந்த நாளாகக் கொண்டாடலாம்' என அறிவித்தார். திராவிட விடுதலை மாநாடுகளை நடத்தினார்.

1948-ம் ஆண்டு, கருப்புச் சட்டைத் தொண்டர் படையைத் தோற்றுவித்தார். அதற்கு காங்கிரஸ் அரசு தடைவிதித்தது. மே 8 மற்றும் 9 ஆகிய இரு நாட்களில் தூத்துக்குடியில், திராவிடர் கழக மாநில மாநாடு பெரியார் தலைமையில் நடைபெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் பங்கேற்றனர். சென்னையில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார்.

காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட போது, இந்தியாவுக்கு ‘காந்தி நாடு’ எனப் பெயர் சூட்ட வேண்டும் என அறிக்கை விடுத்தார்.

அரசு அமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தம்

1950-ம் ஆண்டு, ‘நீதிக் கட்சி அரசு கொண்டுவந்த வகுப்புவாரி உரிமை செல்லாது’ என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றமும் அதை உறுதி செய்தது. அதனால் ஆர்த்தெழுந்த பெரியார், நாடு முழுவதும் சுற்றி பிரச்சாரம் செய்தார். அந்த எதிர்ப்பு உணர்ச்சியில் இருந்த நியாயத்தைப் புரிந்துகொண்ட நேரு தலைமையிலான அரசு, இந்தியாவின் அரசு அமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தது.

இந்தியாவின் பிற்படுத்தப்பட்ட மக்களின் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் காக்கப்படும் வகையில், மாநில அரசு ஆணையில் அடங்கிய விதிமுறைகளை ஏற்கக்கூடிய புதிய திருத்தம், துணை விதி 4 எனும் எண்ணுடன், அரசமைப்புச் சட்டப் பெருவிதி 15 உடன், (Sub-Clause to Article 15) இணைக்கப் பெற்றது.

1951-ம் ஆண்டு, இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தமே இதுதான்.

உருவ வழிபாட்டுக்கு எதிர்ப்பு

1953-ல் கடவுளின் ஆற்றல் எதுவும் இல்லை என்பதுடன், உருவ வழிபாட்டைக் கண்டிக்கும் வகையில், பிள்ளையார் சிலைகளை பெரியாரும் அவரது தொண்டர்களும் பொது இடங்களில் போட்டு உடைத்தனர்.

1954-ம் ஆண்டு பெரியார் பர்மா சென்றார். உலக பௌத்த நெறி மாநாட்டில் பங்கேற்றார். அம்பேத்கரைச் சந்தித்து உரையாடினார்.

1955-ல் மக்களின் விருப்பத்துக்கு எதிராக, தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்கும் திட்டத்தைக் கண்டித்து, இந்தியாவின் தேசியக் கொடியைத் தீவைத்துக் கொளுத்தப்போவதாக அறிவித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதலமைச்சர் காமராஜரைப் ‘பச்சைத் தமிழன்’ என்று பாராட்டி, அவரது அரசை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார்.

ராமாயண காவியத்தின்படி, திராவிடத் தலைவர்களை இழிவுபடுத்தும் ஆரிய ஆதிக்கத்தின் மேலாதிக்கத்தைக் கண்டிக்கும் வகையில், ராமர் படத்தைப் பொது இடங்களில் எரிக்கும் போராட்டத்தை அறிவித்தார். ராமாயண இதிகாசத்தைத் தீவைத்துக் கொளுத்தும் போராட்டத்தை நடத்தியதால் கைது செய்யப்பட்டார். 1957-ல் சென்னை உயர் நீதிமன்றத்தின் பார்ப்பன நீதிபதிகள் இருவர் வழங்கிய தீர்ப்பை விமர்சித்ததால் கைது செய்யப்பட்டார்.

‘கடவுளின் வழிபாடு, மதச்சடங்குகள், சமஸ்கிருத மந்திரங்கள் இல்லாமல் பெரியார் நடத்திய சுயமரியாதைத் திருமணங்கள் செல்லாது’ என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, 1967-ல் முதலமைச்சரான அண்ணா, ‘சுய மரியாதைத் திருமணங்கள் செல்லும்’ எனச் சட்டம் இயற்றினார்.

1969-ம் ஆண்டு, ஆலயங்களுக்குள்ளே கருவறையில் நுழையும் போராட்டத்தை பெரியார் நடத்தினார். 1970-ம் ஆண்டு, ‘உண்மை’ வார இதழைத் தொடங்கினார்.

தங்களின் உடல், மன ஒழுக்கத்திறன்களை அனைவரும் வளர்த்துக்கொள்ள, அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே பெரியார் ஈ.வெ.ராமசாமி அவர்களின் அடிப்படைத் தத்துவம். சமுதாய மறுமலர்ச்சிக்காக, திருமணங்களில் பார்ப்பனர்களின் புரோகிதத்தை ஒழித்தல்; ஆணும் பெண்ணும் சமம்; கலப்புத் திருமணம் மற்றும் கைம்பெண்கள் மறுமணத்தை ஊக்குவித்தல்; குழந்தை பேறைத் தடுத்து, குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்துதல்; கோயில்களில் பெண்களை இறைவனின் பணியாள் எனச் சொல்லிக் கொண்டு, அவர்களை பொது மகளிராக (தேரடியாள்) நடத்தி வந்த கொடுமையை ஒழித்தல்; குழந்தைத் திருமணங்களைத் தடுத்தல் என பல பணிகளை நிறைவேற்றினார்.

‘பகுத்தறிவாளர் கழகம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். ‘Modern Rationalist’ எனும் ஆங்கில இதழைத் தொடங்கினார்.

சாதிப் பெயர்கள் ஒழிப்பு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அந்த நாட்களில், தமிழகத்தில் சாதிப் பெயர்களாலேயே மக்கள் அழைக்கப்பட்டும் இனம் காணப்பட்டும் வந்தனர். இன்றைக்கும் வட இந்தியாவில், சாதிப் பெயர்களையும் சேர்த்தே எழுதுகிறார்கள்.

வங்காளத்தில் முகர்ஜி, கங்குலி, சட்டோபாத்யாயா, ஆந்திரத்தில் ரெட்டி, நாயுடு, மராட்டியத்தில் தேஷ்முக், தெண்டுல்கர் என்பனவெல்லாம் சாதிப் பெயர்களே. பஞ்சாப் மாநிலத்தில் தங்களுடைய கிராமத்தின் பெயரைச் சேர்த்து எழுதுவார்கள். பிரகாஷ்சிங் பாதல், சுர்ஜித்சிங் பர்னாலா, ஹர்சந்த்சிங் லோங்கோவால், ஜெக்தேவ் சிங் தல்வண்டி என்ற பெயர்களிலுள்ள, பாதல், பர்னாலா, லோங்கோவால், தல்வண்டி என்பன எல்லாம் அவர்களுடைய கிராமங்களின் பெயர்களே!

தமிழர்கள் சாதிப் பெயர்களை எழுதுகின்ற வழக்கத்தைக் கைவிடுமாறு பெரியார் வலியுறுத்தினார். அதன் விளைவாகவே இன்று தமிழகத்தில் பெரும்பாலும் சாதிப் பெயர்களை எழுதுவது இல்லை. வயது முதிர்ந்த பெரியவர்கள் மட்டுமே சாதிப் பெயர்களை எழுதுகிறார்கள். இளைய தலைமுறையினர் தங்களுடைய சாதி அடையாளத்தைக் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை. காதல், கலப்புத் திருமணங்கள் பெருகி வருகின்றன. சொல்லப்போனால், தமிழ்நாட்டில் தற்போது பத்து விழுக்காட்டுக்கும் அதிகமான குழந்தைகள் கலப்புத் திருமணத்தில் பிறந்தவையாகவே இருக்கக்கூடும். அவர்களை, ‘தமிழர்கள்’ என்ற புதிய பட்டியலில் சேர்த்து, அவர்களுக்குத் தனியாக இடஒதுக்கீடு அளித்துவந்தால், எதிர்காலத்தில் சாதிகள் ஒழிந்துவிடும்.

தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்

அனைத்துலகக் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பு (UNESCO), 27.6.1970 அன்று பெரியாருக்கு அளித்த சிறப்பு:

பெரியார், புது உலகின் தொலை நோக்காளர்; தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்; சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை; அறியாமை, மூட நம்பிக்கை, பொருளற்ற பழக்கவழக்கங்கள், இழிவான நடவடிக்கைகள் ஆகியவற்றின் கடும் எதிரி!

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1884-ம் ஆண்டு, 'சென்னை மகாஜன சபா' என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. 1885-ம் ஆண்டு, மும்பையில் இந்திய தேசிய காங்கிரஸ் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், சென்னை மகாஜன சபாவைச் சேர்ந்த சென்னை ராஜதானியைச் சேர்ந்த 22 பேர் கலந்துகொண்டனர்.

1. பி.ரங்கைய நாயுடு (சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர், சென்னை மகாஜன சபா தலைவர், 1882-99 சட்டமன்ற உறுப்பினர்).
2. எஸ்.சுப்பிரமணிய ஐயர் (சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர், 1884-87 சட்டமன்ற உறுப்பினர்).
3. ஜி.சுப்பிரமணிய ஐயர் (கட்டுரையாளர், தி ஹிந்து, சுதேசமித்திரன் ஏடுகளின் நிறுவனர்).
4. பி.அனந்தாச்சார்யலு (வழக்கறிஞர், கட்டுரையாளர். 1891-ல் நாக்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர்).
5. எம்.வீரராகவாச்சாரியார் (ஹிந்து ஏட்டின் துணை ஆசிரியர்).
6. சி. சிங்காரவேலு முதலியார் (வணிகர், சென்னை மாநகராட்சி ஆணையாளர்).
7. எம்.இ. ஸ்ரீ ரங்காச்சாரியார் (சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர்).
8. எஸ்.வி.அதாலே (மருத்துவர்).
9. எம்.ஒய்.ராமானுசாச்சார்யார் (செங்கல்பட்டு அரசு வழக்கறிஞர்).
10. எஸ்.பி.நரசிம்மலு நாயுடு (கட்டுரையாளர், சமூக சீர்திருத்தவாதி, சென்னை மகாஜன சபாவின் கோவை கிளைச் செயலர், தி கிரசன்ட் ஏட்டின் ஆசிரியர்).
11. எஸ்.ஏ.சாமிநாத ஐயர் (தஞ்சை வழக்கறிஞர், நிலக்கிழார், சென்னை மகாஜன சபா உறுப்பினர்).

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

12. என். நாராயணசாமி ஐயர் (நிலக்கிழார், தஞ்சை).

13. கே.பட்டாபிராம ஐயர் (நிலக்கிழார், கும்பகோணம்).

14. பி.சுப்பிரமணிய ஐயர் (நிலக்கிழார், மதுரை).

15. கிருஷ்ணசாமி (சேலம்).

16. பீட்டர் பால் பிள்ளை (தலைமை ஆசிரியர், நிலக்கிழார், திருநெல்வேலி).

இவர்கள் சென்னை திரும்பியபிறகு, சென்னை மாகாணத்தில் ‘இந்திய தேசிய காங்கிரஸ்’ அமைப்பைத் தோற்றுவித்தனர்.

1907-ம் ஆண்டு சூரத் மாநாட்டில் காங்கிரஸ் தீவிரவாதிகள், மிதவாதிகள் என இரு கூறாகப் பிரிந்தது. தமிழகத்திலும் அந்தப் பிளவு எதிரொலித்தது.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநாடுகள் 1887, 1894, 1898, 1903, 1908, 1914, 1927, 1955 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தில் நடைபெற்றிருக்கின்றன. அதேபோல, தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடுகளும் ஆண்டுதோறும் நடைபெற்று வந்தன.

தமிழ்நாடு காங்கிரஸ் மாநாடுகள்:

1920திருநெல்வேலி
1921தஞ்சாவூர்
1922திருப்பூர்
1923சேலம்
1924திருவண்ணாமலை
1925காஞ்சிபுரம்
1931மதுரை

காங்கிரஸ் நடத்திய போராட்டங்கள்:

இந்திய விடுதலைக் கோரிக்கையை முன்வைத்து, நாடு முழுமையும் காங்கிரஸ் இயக்கம் பல்வேறு அறப்போராட்டங்களை நடத்தியது.

1920-களில் கள்ளுக்கடை மறியல்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆவடி காங்கிரஸ்

1927-ல், ஆறு அங்குலத்துக்கு நீளமான கத்தியை எடுத்துச் செல்ல ஆங்கில அரசு தடை விதித்தது. அதை எதிர்த்து காங்கிரஸ் தொண்டர்கள் நீளமான கத்திகளை எடுத்துக்கொண்டு ஊர்வலமாக வந்தனர்.

1857-ல் நடந்த முதல் விடுதலைப் போரின்போது, மக்களைக் கொடுமைப் படுத்திய 'நீல்' என்ற வெள்ளை அதிகாரிக்கு சென்னை மௌன்ட் ரோட்டில் சிலை வைக்கப்பட்டிருந்தது. அதை அகற்ற வேண்டும் என அறிவித்து காங்கிரஸ் கட்சி போராட்டங்களை நடத்தியது. 1937-ம் ஆண்டு ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்றபின்னர் 'நீல்' சிலை அகற்றப்பட்டது.

1928-ம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த சைமன் ஆணையத்தில் இந்தியர் எவரும் இடம் பெறவில்லை எனக்கூறி அதைப் புறக்கணிப்பதென இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. 'சைமனே திரும்பிப் போ' என்ற முழக்கங்களுடன் நாடு முழுவதும் அந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்தியது. 1934-ம் ஆண்டு, அந்தப் போராட்டத்தைத் திரும்பப் பெற்றது.

1930-ல் உப்புக் காய்ச்சும் அறப்போர் நடைபெற்றது. மார்ச் 12-ம் நாள் காந்தியடிகள், குஜராத் மாநிலம் தண்டி கடற்கரையில் உப்புக் காய்ச்சினார். தமிழ்நாட்டில் ராஜாஜி தலைமையில் திருச்சியிலிருந்து நடைபயணமாகப் புறப்பட்ட காங்கிரஸார், ஏப்ரல் 13-ம் நாள் வேதாரண்யத்துக்குச் சென்று உப்புக் காய்ச்சினர்.

ஒவ்வொரு போராட்டத்தின்போதும் காங்கிரஸார் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவ்வாறாக,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காந்தியடிகள் (13 ஆண்டுகள்), நேரு (13 ஆண்டுகள்), காமராஜர் (10) ஆண்டுகள் சிறைக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்தனர்.

தமிழகத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை வெள்ளையரை எதிர்த்து கப்பல் நிறுவனம் நடத்தினார். சுப்பிரமணிய பாரதி, விடுதலைக் கனலை மூட்டுகின்ற பாடல்களை இயற்றினார்; கட்டுரைகள் தீட்டினார். எனவே, வெள்ளையர் அரசாங்கம் அவரைக் கைது செய்ய முனைந்தது. பாரதி, ஃபிரெஞ்சு ஆட்சி நடைபெற்றுவந்த புதுச்சேரிக்குத் தப்பிச் சென்றார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஆஷ் துரையை மணியாச்சி தொடர்வண்டி நிலையத்தில் வாஞ்சிநாதன் சுட்டுக்கொன்றார். பின்னர், வாஞ்சிநாதன் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

இடைக்கால அரசு

1937-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 159 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மை பெற்றது. அப்போது இந்தியா முழுமையும் நடைபெற்ற தேர்தல்களில் ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் வெற்றி பெற்றிருந்தது.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராஜாஜி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி, நிதி தொடர்பாகவும், அமைச்சரவை எடுக்கக்கூடிய முடிவுகளை ஏற்காமல் இருப்பது குறித்தும் ஆளுநருக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் காட்டிலும், ஆளுநருக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதைக் காரணம் காட்டி, காங்கிரஸ் அரசுகள் பதவியேற்கவில்லை.

எனவே, சென்னை ராஜதானியின் ஆளுநர் லார்டு எர்ஸ்கின் இடைக்கால அரசு ஒன்றை அமைக்கத் தீர்மானித்தார். ஆட்சி அமைக்குமாறு, வி.எஸ்.சீனிவாச சாஸ்திரிக்கு அழைப்புவிடுத்தார். ஆனால், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார். எனவே, நீதிக் கட்சியைச் சேர்ந்த குர்மா வெங்கடரெட்டி நாயுடு தலைமையில் புதிய அரசு ஒன்றை அமைத்தார்.

1937-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் நாளில் இந்த அரசு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பதவியேற்றது. ஏ.டி.பன்னீர்செல்வம் (உள்துறை, நிதி), எம்.ஏ.முத்தையா செட்டியார் (உள்ளாட்சி), பி.கலிபுல்லா சாகிப் பகதூர் (பொதுப்பணித் துறை), எம்.சி.ராஜா (வளர்ச்சிப் பணிகள்), ஆர்.எம்.பலட் (கல்வி, மக்கள்நலம்) ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பு ஏற்றனர்.

ஆட்சிப் பொறுப்பை காங்கிரஸ் ஏற்க வேண்டும் என்ற கருத்து கட்சிக்குள் வலுப்பெற்றது. முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு காந்தி, நேரு உள்ளிட்ட தலைவர்களை வலியுறுத்தினர். ஜூன் 22-ம் நாள், வைஸ்ராய் லிங்லித்தோ ஓர் அறிக்கையை வெளியிட்டார். 1935-ம் ஆண்டு அரசுச் சட்டத்தை காங்கிரஸுடன் இணைந்து முறையாக நிறைவேற்ற பிரித்தானிய அரசு உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதன் அடிப்படையில், ஜூலை 1-ம் நாள் நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதெனத் தீர்மானிக்கப் பட்டது. மூன்றரை மாதங்கள் பொறுப்பு வகித்த இடைக்கால அரசு விலகிக் கொண்டது.

ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்பு காய்ச்சும் அறப்போர்க் குழு

ஜூலை 14-ம் நாள், சென்னை ராஜதானியின் பிரதமராக ராஜாஜி பொறுப்பேற்றார். 1935-ம் ஆண்டுச் சட்டத்தின்படி, மாகாண முதல்வர்கள் ‘பிரதமர்’ என்றே அழைக்கப்பட்டனர். ஜூலை 15-ம் தேதி சட்டமன்றம் கூடியது. ‘புலுசு’ சாம்பமூர்த்தி பேரவைத் தலைவராகவும், ருக்மணி லட்சுமிபதி அம்மையார் பேரவைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ராஜாஜி அமைச்சரவை **(1937):**

1. ராஜாஜி, முதல்வர் (நிதி) 2. டி. பிரகாசம் (வருவாய்) 3. பி.சுப்பராயன் (சட்டம், கல்வி) 4. வி.வி.கிரி (தொழிலாளர் நலம், பெருந்தொழில்கள்) 5. பெஜவாடா கோபால ரெட்டி (உள்ளாட்சி) 6. டி.எஸ்.எஸ்.ராஜன் (மக்கள் நல்வாழ்வு, அறநிலையம்) 7. மௌலானா யாகூப் ஹசன் சேட் (பொதுப்பணித் துறை), 8. வி.ஐ.முனிசாமி பிள்ளை (விவசாயம், கிராமப்புற வளர்ச்சி) 9. எஸ்.ராமநாதன் பிள்ளை (பொதுத் துறை) 10. கொங்கட்டில் ராமன் மேனன் (நீதி மன்றங்கள் மற்றும் சிறைத் துறை).

1940-ல், தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தை காங்கிரஸ் நடத்தியது.



வ.உ.சிதம்பரனார்

பாரதியார்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



ராஜாஜி

1942-ல், ஸ்டாபோர்டு கிரிப்ஸ் குழுவினர் வந்தனர். இந்திய விடுதலை குறித்து அவர்கள் அளித்த திட்டத்தை காந்தியடிகள் ஏற்கவில்லை. ‘வெள்ளையனே வெளியேறு’ (Quit India Movement) அறப்போரை அறிவித்தார். ‘செய் அல்லது மடி’ (Do or Die) என்ற முழக்கத்தை முன்வைத்தார். அந்தப் போரில் கைது செய்யப்பட்ட தலைவர்கள், 1945-ம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

காங்கிரஸ் தொண்டர்கள் மீது பொய் வழக்குகளைப் போட்டுச் சிறையில் அடைத்தனர். இன்றைக்கு காவல் துறையினர் பொய்வழக்கு போடுவதற்கு வெள்ளை அரசின் காவல் துறைதான் வழிகாட்டியாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தல்கள்:

1931-ம் ஆண்டு மதுரை மாநாட்டில் காங்கிரஸில், ‘ராஜாஜி அணி, சத்தியமூர்த்தி அணி’ என இரு பிரிவுகள் தோன்றின. ராஜாஜி அணியில் பட்டதாரிகளும் செல்வந்தர்களும் இருந்தனர். சத்தியமூர்த்தி அணியில் இளைஞர்கள் முழுநேரத் தொண்டர்கள், ஏழை எளியவர்கள் இருந்தனர். காமராஜரும் அந்த அணியில் இருந்தார்.

1936-ல், காரைக்குடியில் நடந்த தேர்தலில் சத்தியமூர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது ராஜாஜி அவரை ஆதரித்தார். காமராஜரைப் பொதுச் செயலாளராக சத்தியமூர்த்தி நியமித்தார். சத்தியமூர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதை பார்ப்பனர் அல்லாதார் விரும்பவில்லை.

1937 தேர்தலில் ராஜாஜி போட்டி இடாமல் ஒதுங்கி இருந்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆனால், சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றவுடன் ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சிகளை மேற்கொண்டார். அவருக்குப் பார்ப்பனர்களின் ஆதரவு கிடைத்தது. சத்தியமூர்த்தியும் ராஜாஜியை ஏற்றுக் கொண்டார். ஆனால், காமராஜர் இதை ஏற்கவில்லை.

1940-ம் ஆண்டு, சத்தியமூர்த்தி தமது ஆதரவாளரான காமராஜரை தலைவர் தேர்தலில் நிறுத்தினார். ராஜாஜி குழுவினர், சி.பி.சுப்பையா என்பவரை நிறுத்தினர். காமராஜருக்கு 103 வாக்குகளும், சுப்பையாவுக்கு 100 வாக்குகளும் கிடைத்தன. மூன்று வாக்குகள் கூடுதலாகப் பெற்று, காமராஜர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சத்தியமூர்த்தி, பொதுச் செயலாளராக பணியாற்ற ஒப்புக்கொண்டார். அதன்பிறகு சுமார் 12 ஆண்டுகள் காங்கிரஸின் தலைவராக காமராஜர் தொடர்ந்து பணியாற்றினார்.

1946, மே மாதம் நடைபெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தேர்தலில், காமராஜர் 152 வாக்குகளும் ராஜாஜியின் வேட்பாளர் சா.கணேசன் 90 வாக்குகளும் பெற்றனர்.

1946 தேர்தல் காங்கிரஸ் வெற்றி

1946-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. காமராஜர் விருதுநகர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆந்திரகேசரி பிரகாசம், முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டார். அவர் முதல்வராவதை காந்தியடிகள் விரும்பவில்லை. அதனால் அவரை எதிர்த்து முத்துரங்க முதலியார் என்பவரை காமராஜர் தேர்தலில் நிறுத்தினார். ராஜாஜி ஆதரவாளர்கள் 33 பேர் நடுநிலை வகித்தனர். அதனால், 7 வாக்குகள் கூடுதலாகப் பெற்று பிரகாசம் முதல்வரானார்.

பிரகாசம் அமைச்சரவை

1. பிரகாசம், முதல்வர் (பொதுத் துறை, உள்துறை, காவல், உணவு, நிதி) 2. வி.வி.கிரி (தொழில்கள், தொழிலாளர், மின்சாரம், கூட்டுறவு, திட்டம், காடுகள்) 3. எம்.பக்தவத்சலம் (பொதுப்பணித் துறை, பாசனம், நெடுஞ்சாலைகள்), 4. டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார் (கல்வி). 5. கே.டி.பாஷ்யம் அய்யங்கார் (சட்டம், சிறை, சட்டமன்றம்), 6. பி.எஸ். குமாரசாமி ராஜா (விவசாயம், வளர்ச்சித் திட்டங்கள், கால்நடை, மீன் வளம்), 7. டேனியல் தாமஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(உள்ளாட்சித் துறை) 8. ருக்மணி லெட்சுமிபதி (மக்கள் நல்வாழ்வு, மருத்துவம்), 9. கே.ஆர்.கரந்த் (நில வருவாய்), 10. கே.கோட்டி ரெட்டி (இந்துசமய அறநிலையத் துறை மற்றும் நில வருவாய் தவிர்த்த இதர வருவாய்), 11. வேமுல குர்மய்யா (பொதுத் தகவல்), 12.பி. வீராசாமி (காடுகள், மீன்வளம், கிராமக் கைத்தொழில்கள்), 13. ஆர். ராகவ மேனன் (வீட்டு வசதி, மோட்டார் வாகனம், உணவு).

அமைச்சரவையில் ‘கேரள காங்கிரஸ் தலைவர் மாதவ மேனன் என்பவரை அமைச்சராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்’ என காமராஜர் கேட்டுக் கொண்டார். ஆனால், பிரகாசம் அவரைச் சேர்க்காமல் ராஜாஜியின் ஆதரவாளரான ராகவ மேனனைச் சேர்த்துக் கொண்டார்.

திராவிட இயக்கத்தினரது பிரசாரத்தின் எதிரொலி, காங்கிரஸ் பேரியக்கத்துக்கு உள்ளேயும் பாகுபாடுகளை ஏற்படுத்தியது. தமிழ்நாட்டுப் பார்ப்பனரான ராஜாஜி, ஆந்திரப் பார்ப்பனரான பிரகாசம் ஆகியோருக்கும் இடையிலான போட்டியாக மாறியது. பார்ப்பனர் அல்லாதார் காமராஜர் தலைமையில் அணி திரண்டனர். பிரகாசத்துக்கு எதிராக காமராஜர் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெற்றது. 1947 மார்ச் 14-ல் பிரகாசம் பதவி இழந்தார்.

சுதந்திரப் போராட்டத்தின்போது...

ஓமந்தூரார் அமைச்சரவை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காமராஜரின் ஆதரவுடன் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதலமைச்சரானார். 1947 மார்ச் 21-ம் நாள், அவரது அமைச்சரவை பதவி ஏற்றது. அமைச்சரவை விவரம்:

1. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் (பொது, இந்துசமய அறநிலையத் துறை, ஹரிசன மேம்பாடு), 2. எம்.பக்தவத்சலம் (பொதுப்பணித் துறை, திட்டம்), 3. பி.சுப்பராயன் (உள்ளாட்சி, சட்டம்), 4. டி.எஸ்.எஸ். ராஜன் (உணவு, மோட்டார் வாகனம், தொழிலாளர்), 5. டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் (கல்வி), 6. டேனியல் தாமஸ் (மதுவிலக்கு, ஆயத்தீர்வை, பத்திரப் பதிவு, வீட்டு வசதி), 7. வேமுல குர்மய்யா (ஹரிசன மேம்பாடு, மீன்வளம், உள்ளாட்சித் துறை), 8. எச்.சீதாராம ரெட்டி (தொழில்கள் மற்றும் தகவல்), 9. கே.சந்திரமௌலி (உள்ளாட்சித் துறை), 10. கே. மாதவ மேனன் (விவசாயம் மற்றும் காடுகள்), 11. காலா வெங்கட்டராவ் (வருவாய்), 12. ஏ.பி. ஷெட்டி (மக்கள் நல்வாழ்வு), 13. எஸ். குருபாதம் (கதர், குடிசைத் தொழில்கள், ஃபிர்கா வளர்ச்சி).

சத்தியமூர்த்தி



காமராஜர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1948-ம் ஆண்டு நடைபெற்ற முதலமைச்சர் தேர்தலில், ஓமந்தூரார் இரண்டாம் முறையாகப் போட்டியிட்டார். பிரகாசம் எதிர்த்து நின்றார். ஓமந்தூராரே வெற்றி பெற்றார்.

1948-ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தலில் காமராஜர் வெற்றி பெற்றார்.

குமாரசாமி ராஜா அமைச்சரவை

காமராஜருக்கும் முதல்வர் ஓமந்தூராருக்கும் இடையே பிணக்குகள் ஏற்பட்டன. ரெட்டியாரை பதவியிலிருந்து இறக்கிவிட்டு, பக்தவத்சலத்தை முதல்வராக்க காமராஜர் முயன்றார். ராஜாஜியும் பிரகாசமும் பி. சுப்பராயனை முதல்வராக்க முயன்றனர். அப்போது ஓமந்தூராரும் காமராஜரும் இணைந்து, ராஜபாளையம் பி.எஸ்.குமாரசாமி ராஜாவை முதல்வராக்கினர். அவர் மூன்றாண்டுகள் பொறுப்பு வகித்தார்.

1949 ஏப்ரல் 6-ம் நாள், குமாரசாமி ராஜா அமைச்சரவை பதவியேற்றது.

1. குமாரசாமி ராஜா (பொது மற்றும் காவல், 2. டி.எஸ்.எஸ்.ராஜன் (மக்கள் நல்வாழ்வு, அறநிலையம், முன்னாள் படைவீரர்கள் மறுவாழ்வு), 3. எம். பக்தவத்சலம் (பொதுப்பணித் துறை மற்றும் தகவல்), 4. எச். சீதாராம ரெட்டி (நில வருவாய், தொழிலாளர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி), 5. பெஜவாடா கோபால ரெட்டி (நிதி மற்றும் வணிக வரிகள்), 6. கே. மாதவ மேனன் (கல்வி, நீதிமன்றங்கள் மற்றும் சிறைத் துறை), 7. காலா வெங்கட்டராவ் (மக்கள் நல்வாழ்வு), 8. ஏ.பி. ஷெட்டி (விவசாயம், கால்நடைகள்), 9. பி. பரமேஸ்வரன் (ஃபிர்கா வளர்ச்சி, கதர், கிராமக் கைத்தொழில்கள், மீன்வளம், சின்கோனா, ஹரிசன மேம்பாடு), 10. சி.பெருமாள்சாமி ரெட்டியார் (தொழில்கள், சுரங்கம், கனிமவளம்), 11. பி.எல்.பி. ரோச் விக்டோரியா (உணவு, மீன்வளம்), 11. நீலம் சஞ்சீவ ரெட்டி (மதுவிலக்கு, வீட்டு வசதி).

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆந்திர கேசரி பிரகாசம்



ஓமந்தூர் ராமசாமி

1950-ல் நடைபெற்ற கட்சித் தலைவர் தேர்தலிலும் காமராஜர் வெற்றி பெற்றார்.

1952 சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்விக்குப் பொறுப்பேற்று, தலைவர் பதவியிலிருந்து காமராஜர் விலகினார். சுப்பராயன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கம்யூனிஸ்டுகளின் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஐக்கிய ஜனநாயக முன்னணியினர் (United Democratic Front) ஆட்சி அமைக்க முயன்றனர். அந்த அணியில் கம்யூனிஸ்ட், கிசான் மஸ்தூர் கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, காமன்வீல் பார்ட்டி ஆகியவை இடம் பெற்றிருந்தன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பி.எஸ்.குமாரசாமி ராஜா



ஜவஹர்லால் நேரு

ஐக்கிய ஜனநாயக முன்னணியையே ஆட்சியமைக்க அனுமதிக்க வேண்டும்; அப்படி அமைத்தால் விரைவிலேயே அந்தக் கூட்டணி சிதைந்துவிடும் என காமராஜர் கருதினார். ஆனால், ராஜாஜி தாமே ஆட்சியமைக்க விழைந்தார். காமராஜரும் அதை ஏற்றுக்கொண்டார்.

ராஜாஜி அமைச்சரவை

சட்டமன்ற மேலவை உறுப்பினராக ராஜாஜியை நியமித்த ஆளுநர், அவரையே ஆட்சியமைக்க அழைத்தார். 17 பேர் கொண்ட அமைச்சரவை பதவியேற்றது. எதிரணியில் இருந்த தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, காமன்வீல் பார்ட்டி ஆகியவற்றின் ஆதரவைப் பெற்று, ஆட்சியை நிலைநிறுத்தினார். ஆனால், மாணவர்கள் தங்கள் குடும்பத் தொழிலையும் சேர்த்தே கற்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர் கொண்டுவந்த குலக்கல்வித் திட்டத்தைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயும் எதிர்ப்புகள் தோன்றின. ராஜாஜி,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதல்வர் பதவியில் இருந்து விலகினார்.

முதல்வர் காமராஜர்

முதல்வருக்கான தேர்தல் நடைபெற்றது. 93 வாக்குள் பெற்று, காமராஜர் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ராஜாஜியின் ஆதரவுடன், காமராஜரை எதிர்த்து நின்ற சி.சுப்பிரமணியம் 41 வாக்குகள் பெற்றார். முதல்வரான காமராஜர், சி.சுப்பிரமணியத்தையும் தமது அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார்.



லால்பகதூர் சாஸ்திரி

இந்திரா காந்தி

காமராஜர் அமைச்சரவை:

1. கே.காமராஜ், முதல்வர் (பொது மற்றும் உள்துறை), 2. எம். பக்தவத்சலம் (விவசாயம், காடுகள், மீன்வளம், தொழில்துறை, தொழிலாளர் நலம், மகளிர் நலம், கால்நடைகள்), 3. சி.சுப்பிரமணியம் (நிதி, உணவு, கல்வி, சட்டம்), 4. பி. பரமேஸ்வரன் (போக்குவரத்து, பத்திரப்பதிவுத் துறை, இந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அறநிலையத் துறை, மதுவிலக்கு), 5. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி (உள்ளாட்சித் துறை), 6. எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கர் (நில வருவாய், வணிக வரிகள், ஊரக வளர்ச்சித் துறை), 7. சண்முக ராஜேஸ்வர சேதுபதி, ராமநாதபுரம் ராஜா (பொதுப்பணித் துறை, பொறியியல் கல்லூரிகள், அரசு அச்சகத் துறை), 8. ஏ.பி. ஷெட்டி (மக்கள் நல்வாழ்வு, கூட்டுறவு, வீட்டு வசதி).

எஸ்.எஸ். ராமசாமி படையாச்சியின் உழவர் உழைப்பாளர் கட்சி காங்கிரஸுடன் முழுமையாக இணைந்தது.

1955-ம் ஆண்டு, ஆவடியில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் சுமார் மூன்று லட்சம் மக்கள் கலந்து கொண்டனர். யூகோஸ்லோவியா அதிபர் மார்ஷல் டிட்டோ, ஒரு பார்வையாளராகக் கலந்துக்கொண்டார். ஒருவார காலம் திருவிழாபோல இந்த மாநாடு நடைபெற்றது.

நீலம் சஞ்சீவ ரெட்டி



வி.வி.கிரி

1957, 1962 தேர்தல்களிலும் வெற்றிபெற்று, தொடர்ந்து ஒன்பது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆண்டுகள் காமராஜர் தமிழக முதல்வராகப் பொறுப்பு வகித்தார். 1962-ம் ஆண்டு எல்லையில் சீன ஆக்கிரமிப்புக்குப் போருக்குப் பிறகு அனைத்திந்திய அளவில் நேருவின் கரத்தை வலுப்படுத்துவதற்காக காமராஜர் முதல்வர் பதவியிலிருந்து விலகினார்.

பக்தவத்சலம், முதல்வரானார்.

அமைச்சரவை

1. எம்.பக்தவத்சலம் (நிதி, கல்வி), 2. ஜோதி வெங்கடாசலம் (மக்கள் நல்வாழ்வு), 3. ஆர்.வெங்கட்ராமன் (வருவாய்), 4. எஸ்.எம்.அப்துல் மஜீத் (உள்ளாட்சித் துறை), 5. பி.கக்கன் (வேளாண்மை), 6. வி.ராமையா (பொதுப்பணித் துறை), 7. நல்லசேனாதிபதி சர்க்கரை மன்றாடியார் (கூட்டுறவு மற்றும் காடுகள்), 8. பூவராகவன் (செய்தி) ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பு ஏற்றனர்.

காமராஜர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1964-ம் ஆண்டு நேரு மறைந்த போது லால்பகதூர் சாஸ்திரியைப் பிரதமராகத் தேர்வு செய்வதிலும், 1966-ல் சாஸ்திரி மறைந்தபோது இந்திரா காந்தியைப் பிரதமராகத் தேர்வு செய்வதிலும் காமராஜர் பெரும்பங்கு வகித்தார். அனைத்திந்திய அளவில் பெருஞ்செல்வாக்குப் பெற்ற தலைவராகத் திகழ்ந்தார்.

ராதாகிருஷ்ணன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆர்.வெங்கட்ராமன்

ஆனால், 1967-ம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் காமராஜர், குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இந்தத் தோல்வி காமராஜரது அரசியல் செல்வாக்கைக் கடுமையாகப் பாதித்தது.

காங்கிரஸ் பிளவு

1969-ம் ஆண்டு குடியரசுத் தலைவர் தேர்தலில் நீலம் சஞ்சீவரெட்டி காங்கிரஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். ஆனால், எதிர்க்கட்சியினர் நிறுத்தியிருந்த வேட்பாளரான வி.வி.கிரியை, பிரதமர் இந்திரா காந்தி ஆதரித்தார். தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவோடு, மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் வி.வி.கிரி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எனவே, அனைத்திந்திய அளவில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டது. தமிழகத்தில், சி.சுப்பிரமணியம், ஈ.வெ.கி. சம்பத், கவிஞர் கண்ணதாசன், தஞ்சை ராமமூர்த்தி, கே.டி.கோசல்ராம், ஆர்.வி. சுவாமிநாதன், ஜெகவீர பாண்டியன், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் ஆகியோர் இந்திரா தலைமையிலான காங்கிரஸில் இணைந்தனர்.

நிஜலிங்கப்பா, அதுல்யா கோஷ், காமராஜர் தலைமையிலான காங்கிரஸ், ‘ஸ்தாபன காங்கிரஸ்’ (National Congress Organisation-NCO) என்று அழைக்கப்பட்டது.

1971 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தலைமையிலான காங்கிரஸ் கட்சி, தமிழகத்தில் தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்துக்கொண்டது. ஆனால், சட்டமன்றத் தேர்தலில் அந்தக் கட்சிக்கு தி.மு.க. இடங்களை ஒதுக்கவில்லை. தேர்தல் முடிவுகளில் காமராஜர் தலைமையிலான காங்கிரஸுக்கு 15 இடங்களே கிடைத்தன. நாடாளு மன்றத்தில் இந்திரா காந்தி தலைமையிலான அணியினர் ஒன்பது இடங்களில் வெற்றி பெற்றனர்.

1975-ம் ஆண்டு இந்திரா காந்தி, நெருக்கடி நிலையை அறிவித்து, எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்தார். மாரடைப்பால் காமராஜர் இயற்கை எய்தினார். தமிழக காங்கிரஸ் கட்சியை இந்திரா தலைமையிலான காங்கிரஸில் இணைக்க வேண்டும் என்று ஒரு சாராரும், ‘தனித்தே இயங்க வேண்டும்’ என மறு சாராரும் விரும்பினர்.

அப்போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக பா. ராமச்சந்திரன் இருந்தார். தொண்டர்கள் கருத்தை அறிவதற்காக ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தார். அந்தக் குழு தமிழகம் முழுமையும் சுற்றி வந்து, தொண்டர்களைச் சந்தித்தது. தனித்து இயங்குவதற்கே பெரும்பான்மை ஆதரவு என்று அறிவித்தனர்.

ஆனால், மற்றொரு குழுவினர் 1976 பிப்ரவரி 15-ம் நாள் சென்னைக் கடற்கரையில் நடந்த கூட்டத்தில், இந்திரா காந்தி தலைமையில் காங்கிரஸில் இணைந்தனர். டி.கே.பரூவா, பிரம்மானந்த ரெட்டி போன்றவர்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். தமிழக காங்கிரஸின் புதிய தலைவராக கருப்பையா மூப்பனார் அறிவிக்கப்பட்டார்.



பா.இராமச்சந்திரன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜி.கே.மூப்பனார்

ஜனதா கட்சி

சில காலம் தனித்து இயங்கி வந்த பா. ராமச்சந்திரன் தலைமையிலான அணியினர், 1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உருவாக்கப்பட்ட ஜனதா கட்சியில் இணைந்தனர். திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டனர். நான்கு தொகுதிகளில் அந்த அணி வெற்றி பெற்றது. ஜனதா கட்சி, மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவன், பா. ராமச்சந்திரன் தலைமையிலான அணியினரின் பொறுப்பிலேயே இருந்து வந்தது.

இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ், எம்.ஜி.ஆர். தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக்கொண்டது. 35 நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்த அணி வெற்றி பெற்றது.

அனைத்திந்திய அளவில் ஜனதா கட்சி வெற்றி பெற்று, மொரார்ஜி தேசாய் தலைமையில் புதிய அரசு அமைந்தது. அந்த அரசில், மத்திய சென்னை தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற பா. ராமச்சந்திரன், மின்சாரத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1980-ம் ஆண்டு அந்த அரசு கவிழ்ந்தது. இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. - இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டணி 37 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

தமிழகத்தில் பா. ராமச்சந்திரன் தலைமையில் ஓர் அணியினர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்தனர். சத்தியமூர்த்தி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பவன் மீண்டும் காங்கிரஸின் பொறுப்பில் வந்தது. பா. ராமச்சந்திரன், கேரள மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். குமரி அனந்தன், ‘காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்’ என்றும், பழ.நெடுமாறன், ‘காமராஜ் காங்கிரஸ்’ என்றும் தனித்தனியாக இரண்டு கட்சிகளைத் தொடங்கினர்.

பிறகு, 1989-ம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலைத் தவிர, தமிழகத்தில் நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி தி.மு.க., அ.தி.மு.க., ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே தேர்தலில் போட்டியிட்டு வருகிறது. ‘காமராஜர் ஆட்சி அமைப்போம்’ என்ற முழக்கத்தை அவ்வப்போது எழுப்பி வந்தாலும், ஒருமுறைகூட தனித்துப் போட்டியிடவில்லை. கூட்டணி அமைத்தே தேர்தலில் நின்றது.

1989 - நாடாளுமன்றத் தேர்தல், அ.தி.மு.க. அணி

1991 - நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்கள் அ.தி.மு.க. அணி

1996 - சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் அ.தி.மு.க. அணி

1998 - நாடாளுமன்றத் தேர்தல் தனி அணி

1999 - நாடாளுமன்றத் தேர்தல் அ.தி.மு.க. அணி

2001 - சட்டமன்றத் தேர்தல் அ.தி.மு.க. அணி

2004 - நாடாளுமன்றத் தேர்தல் தி.மு.க அணி

2006 - சட்டமன்றத் தேர்தல் தி.மு.க. அணி

2009 - நாடாளுமன்றத் தேர்தல் தி.மு.க. அணி

2011 - சட்டமன்றத் தேர்தல் தி.மு.க. அணி

தமிழ்மாநில காங்கிரஸ்

1991-ம் ஆண்டு, தமிழக காங்கிரஸ் கட்சி, ஜெயலலிதா தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்தித்தனர். சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்கள் சேர்த்தே நடத்தப்பட்டன. அந்தத் தேர்தலின்போது தமிழகத்தில் பிரசாரம் மேற்கொள்ள வந்த கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் கொல்லப் பட்டார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற வாக்குப்பதிவில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காங்கிரஸ்-அ.தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

‘ராஜீவ் காந்தி சிந்திய ரத்தத்தால் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது’ என்று காங்கிரஸ்காரர்கள் பேசினர். அதை ஜெயலலிதா மறுத்தார். “எனது தலைமைக்குக் கிடைத்த வெற்றி” என்றார். எனவே, கூட்டணிக்குள் மனக்கசப்பு தோன்றியது. அந்தக் காலகட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சி பற்றி ஏராளமான புகார்கள் எழுந்தன. அதனால், 1996-ம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றசட்டமன்றத் தேர்தலின்போது ‘அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைக்கக் கூடாது’ என தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், பிரதமர் நரசிம்மராவ் கூட்டணி நீடிக்கவே விரும்பினார். அண்ணா தி.மு.க-வுடனேயே கூட்டணி அமைத்தார்.

அதை எதிர்த்து கருப்பையா மூப்பனார் தலைமையில் பெரும்பாலான காங்கிரஸ் தொண்டர்கள் வெளியேறி, ‘தமிழ்மாநில காங்கிரஸ்’ என்ற புதிய கட்சியைத் தோற்றுவித்தனர். தி.மு.கழகத்துடன் தேர்தல் உடன்பாடு செய்துகொண்டனர். அந்தக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. தமிழ்மாநிலக் காங்கிரஸ் கட்சி, 39 சட்டமன்றத் தொகுதிகளிலும் 20 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அலுவலகமான சத்தியமூர்த்தி பவனையும் கைப்பற்றிக்கொண்டனர்.

ஆனால், அண்ணா தி.மு.க. அணியில் போட்டியிட்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஓர் இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. முதன்முறையாக தமிழகச் சட்டமன்றத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போயிற்று.

2001 சட்டமன்றத் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ், தமிழ்மாநில காங்கிரஸ் இரண்டு கட்சிகளும் அ.தி.மு.க. அணியில் இடம் பெற்றன. தமிழ்மாநில காங்கிரஸ் 23, காங்கிரஸ் 7 தொகுதிகளில் வெற்றி பெற்றன. பின்னர் தமிழ்மாநில காங்கிரஸ் கட்சி, மீண்டும் காங்கிரஸில் இணைந்தது.

2004 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம் பெற்றது. 10 இடங்களில் போட்டியிட்டு, அனைத்திலும் வென்றனர்.

2006 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம் பெற்று,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

34 இடங்களில் வெற்றி பெற்றது.

2009 நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம் பெற்று, 15 இடங்களில் போட்டியிட்டு 8 இடங்களில் வெற்றி பெற்றனர். 2011 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம் பெற்று, 63 இடங்களில் போட்டியிட்டனர். ஆனால், 5 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. அடுத்து நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தி.மு.க. தனித்துப் போட்டி இட்டதால், காங்கிரஸ் கட்சியும் தனித்துப் போட்டியிட வேண்டியதாயிற்று. குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் இல்லை.

தேனாம்பேட்டையில் காங்கிரஸ் கட்சிக்குச் சொந்தமாக பெரிய மைதானம் ஒன்று உள்ளது. அங்கே, பிரமாண்டமான அரங்கத்தைக் கட்டி, 'காமராஜர் அரங்கம்' என்று பெயரிட்டுள்ளனர்.

காங்கிரஸ் ஆதரவு ஏடுகள்:

சுதேசமித்திரன், தினசரி, நவசக்தி.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்கள்:

1. முத்துரங்க முதலியார்
2. வரதராஜுலு நாயுடு
3. ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார்
4. ஈ.வெ. ராமசாமி நாயக்கர்
5. டி.எஸ்.எஸ். ராஜன்
6. சுப்பிரமணிய சாஸ்திரி
7. சீனிவாச ஐயங்கார்
8. சி.ராஜகோபாலாச்சாரியார்
9. எஸ்.சத்தியமூர்த்தி
10. கே.காமராஜ்
11. பி.சுப்பராயன்
12. பி.கக்கன்
13. ராஜாராம் நாயுடு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

14. ஓ.வி.அழகேசன்
15. ஆர்.கிருஷ்ணசாமி நாயுடு
16. சி.சுப்பிரமணியன்
17. பா.ராமச்சந்திரன்
18. ஆர்.வி.சுவாமிநாதன்
19. ஏ.பி.சி.வீரபாகு
20. வி.ராமையா
21. கே.எஸ்.ராமசாமி
22. ஜி.கருப்பையா மூப்பனார்
23. எல்.இளையபெருமாள்
24. எம்.பி.சுப்பிரமணியம்
25. மரகதம் சந்திரசேகர்
26. எம்.பழனியாண்டி
27. வாழப்பாடி கூ.ராமமூர்த்தி
28. குமரி அனந்தன்
29. கே.வி.தங்கபாலு
30. ஈ.வெ.கி.ச.இளங்கோவன்
31. சோ.பாலகிருஷ்ணன்
32. எம்.கிருஷ்ணசாமி
33. ஜி. கே.வாசன்
34. பி.எஸ்.ஞானதேசிகன்

தமிழகம் இன்று **(2013)**

தமிழகத்தின் நிலப்பரப்பு 1,30,058 சதுர கிலோ மீட்டர்கள். 2011-ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கின்படி,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாட்டின் மக்கள் தொகை - 7 கோடியே 21 லட்சத்து 38 ஆயிரத்து 958.

மாவட்டங்கள்	- 32
வருவாய்க் கோட்டங்கள்	- 76
வட்டங்கள்	- 220
ஃபிர்கா	- 1,127
வருவாய் கிராமங்கள்	- 16,564
மாநகராட்சிகள்	- 12
நகராட்சிகள்	- 148
ஊராட்சி ஒன்றியங்கள்	- 385
பேரூராட்சிகள்	- 561
கிராம ஊராட்சிகள்	- 12,524
நாடாளுமன்றத் தொகுதிகள்	- 39
சட்டமன்றத் தொகுதிகள்	- 234

தமிழ்நாடு மாவட்டங்கள்

சென்னை மாவட்டம், 1639-ம் ஆண்டு 27 சதுர மைல்கள் நிலப்பரப்புடன் அமைக்கப்பட்டது.

8,701 சதுர மைல்களுடன் மதுரை மாவட்டம், 1761-ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

திருநெல்வேலி 5,389 சதுர மைல்களுடன் 1761-ம் ஆண்டு அமைக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், 1763-ம் ஆண்டு 5,079 சதுர மைல்கள் நிலப்பரப்புடன் அமைக்கப்பட்டது; தலைநகர் சைதாப்பேட்டை.

வட ஆற்காடு 7,386 சதுர மைல்கள்; தலைநகரம் சித்தூர். 1871-ம் ஆண்டில் மக்கள்தொகை: 20 லட்சத்து 15 ஆயிரத்து 278 பேர்.

தென் ஆற்காடு: தலைநகரம் கடலூர்; நிலப்பரப்பு 5,217 சதுர மைல்கள். 1871-ல் மக்கள்தொகை; 17 லட்சத்து 55 ஆயிரத்து 817 பேர்.

சேலம் மாவட்டம் 1792-ம் ஆண்டில் 7,530 சதுர மைல்களுடன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

19 லட்சத்து 66 ஆயிரத்து 995 பேர் மக்கள்தொகையைக் கொண்டது.

கோவை மாவட்டம் 1799-ம் ஆண்டு, 7,860 சதுர மைல்கள் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் 1799-ம் ஆண்டு, உதகையைத் தலைநகராகக்கொண்டு 9,58 சதுர மைல்கள் பரப்பில் அமைக்கப்பட்டது.

தஞ்சாவூர் 1799-ம் ஆண்டில் 3,710 சதுர மைல்கள் பரப்பும் 19,73,731 பேர் மக்கள்தொகையும் கொண்டது.

திருச்சி 2,632 சதுர மைல்கள்; 12,00,408 பேர் மக்கள்தொகை.

1,100 சதுர மைல்கள் நிலப்பரப்புடன் தனி ஆட்சிப் பகுதியாக இயங்கிவந்த புதுக்கோட்டை சமஸ்தானத்தில், 3,16,895 பேர் இருந்தனர்.

சென்னை மாநகராட்சி

சில நேரடி வரிகளை மக்களிடமிருந்து வசூலிக்கவும், கல்வி மற்றும் சாலை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும், தமிழ்நாட்டில் நகர நிர்வாகம், 1687-ம் ஆண்டு டிசம்பர் 30-ம் நாள் அறிமுகப்படுத்தப்பட்டது. ‘ஸ்ட்ரெய்ன்ஸம் மாஸ்டர்’ என்ற ஆளுநர் வரி விதிப்பை மேற்கொண்டார்.

சென்னை மாவட்டம், சென்னை மாநகராட்சி, எலிஹூ யேல் (Elihu Yale) என்பவரால் 1688-ம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கிலாந்து ஆதிக்கத்தின்கீழ் இருந்த நாடுகளின் கூட்டமைப்பான இன்றைய காமன்வெல்த் அமைப்பில், இங்கிலாந்துக்கு வெளியே அமைக்கப்பட்ட முதலாவது நகராட்சி, சென்னை மாநகராட்சிதான்.

கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் தலைவர் ஜோசையா சைல்டு என்பவரது பரிந்துரையின் பேரில், 1687-ம் ஆண்டு டிசம்பர் 30-ம் நாள், பேரரசர் இரண்டாவது ஜேம்ஸ் இதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.

முதலாவது மேயர் நதானியேல் ஹிக்கின்சன். (Nathaniel Higginson, President of Fort St.George 03.10.1692 to 07.07.1698).

1856-ம் ஆண்டு, மாநகராட்சியின் பணிகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வரையறுக்கப்பட்டன.

1880 முதல் 1884 வரையிலும் இந்திய வைஸ்ராய் பொறுப்பில் இருந்த லார்டு ரிப்பன், உள்ளாட்சி அமைப்புகளை வரைமுறைப்படுத்தினார். சென்னை மையத் தொடர்வண்டி நிலையத்துக்கு (Central Railway Station) அருகில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி அலுவலகக் கட்டடத்துக்கு ரிப்பன் பிரபுவின் பெயர்தான் சூட்டப்பட்டுள்ளது. ‘ரிப்பன் எங்கள் அப்பன்’ என்றும் மக்கள் அவரை அன்போடு அழைத்தனர்.

1919-ம் ஆண்டு, ‘ஆல்டர்மென்’ என்ற பதவி ‘கவுன்சிலர்’ என்று மாற்றம் பெற்றது. ‘மேயர்’ என்ற பதவி, ‘பிரசிடென்ட்’ என மாற்றப்பட்டது. சர் பி.தியாகராயர், பிரசிடென்ட்டாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். முதலாவது இந்தியர் இவரே.

உள்ளாட்சித் தேர்தல்கள்

வரலாற்றுக் காலந்தொட்டே இந்தியாவில் உள்ளாட்சி அமைப்புகள் இயங்கி வருகின்றன. தனிப்பட்டவர்களுக்கு இடையிலான பிரச்னைகள் மற்றும் கிராமங்களுக்கு இடையிலான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு, கிராம சபைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் குடவோலை முறையில் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெற்று, உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்த கல்வெட்டுகள் உள்ளன. ஊர்த் தலைவர்கள் ‘நாட்டாண்மை’ என்று அழைக்கப்பட்டு வருகின்றனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாடு மாவட்டங்களின் வரைபடம்

வடமொழியில் கிராம சபைகள், ‘பஞ்சாயத்து’ என்று அழைக்கப்படுகின்றன. ‘பாஞ்’ என்றால் ஐந்து; ‘ஆயத்’ என்றால் கூட்டம். எனவே, ‘ஐந்து உறுப்பினர்களின் கூட்டம்’ என்று பொருள்.

காந்தியடிகள், ‘இந்தியா முன்னேற்றம் காண வேண்டுமெனில், கிராமங்கள் தன்னிறைவு பெற வேண்டும்; தன்னாட்சி உரிமை பெற வேண்டும்; கிராமப் பஞ்சாயத்து முறையே (கிராம ஸ்வராஜ்யம்) தொடர்ந்து நீடிக்க வேண்டும்’ என வலியுறுத்தினார்.

தமிழ்நாட்டில் முதலாவது உள்ளாட்சித் தேர்தல்கள் 1969-ம் ஆண்டு நடைபெற்றன. அப்போது அது ‘ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்’ என்று அழைக்கப்பட்டது. பதவிக்காலம் மூன்று ஆண்டுகள். அதற்குப் பிறகு நெடுங்காலமாக உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்படவே இல்லை. 1977-ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு, 1986-ம் ஆண்டு வரையிலும் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தவில்லை. அதன்பிறகு மத்திய

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அரசின் வற்புறுத்தலால், 1986-ம் ஆண்டுதான் உள்ளாட்சித் தேர்தலை நடத்தியது. அந்தத் தேர்தலில் எதிர்க் கட்சியான தி.மு.க. பெரும் பான்மையான இடங்களில் வெற்றி பெற்றது.

ரிப்பன் மாளிகை

பஞ்சாயத்து ராஜ்

பிரதமர் ராஜீவ் காந்தி முயற்சியால் பஞ்சாயத்து ராஜ் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ஐந்தாண்டுகள் இடைவெளியில், கிராமப் பஞ்சாயத்துகளுக்கான தேர்தலை நடத்தினால்தான் ஊராட்சிகளுக்கு மத்திய அரசு நிதி வழங்கும் என்ற நிலைமை ஏற்பட்டது.

அதன்பிறகு, இந்தியா முழுமையும் உள்ளாட்சித் தேர்தல்கள், தொடர்ச்சியாக இடைவெளியின்றி, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு வருகின்றன.

1996-ம் ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட்டு உள்ளது.

அரசியல் சட்டம் வரைவு

தமிழக அரசியல் குறித்த ஆவணங்களைப் படித்து வந்தபோது, பல ஐயங்கள் எழுந்தன. ‘சென்னை ராஜதானி; சென்னை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மாகாணம்' ஆகிய சொற்கள் குழப்பத்தை ஏற்படுத்தின.

இந்திய விடுதலைக்கு முன்பு, 'சென்னை ராஜதானி' (Madras Presidency) என்று அழைக்கப்பட்டது; விடுதலைக்குப் பிறகு 'சென்னை மாகாணம்' (Madras State) என்று அழைக்கப்பட்டது.

அண்ணா முதல்வரானபின், 1969-ம் ஆண்டு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். அதேபோல அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றம், அரசியல் சட்ட வரைவுக்குழு ஆகிய இரண்டு சொற்களுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

'அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றம்' (Constituent Assembly) என்பதுதான் இன்றைய நாடாளுமன்ற அமைப்பின் முன்னோடி.

1946-ம் ஆண்டு பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய பகுதிகளையும் உள்ளடக்கிய இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை வரைவதற்காக அமைக்கப்பட்டது. இந்த நாடாளுமன்றம் மூன்று ஆண்டுகள் இயங்கியது. 1946 டிசம்பர் 9-ம் நாள், முதலாவது கூட்டம் நடைபெற்றது. 1949 நவம்பரில் கடைசிக் கூட்டம் நடைபெற்றது. மொத்தம் 11 அமர்வுகள். 165 நாள்கள் கூட்டம் நடைபெற்றது. 217 உறுப்பினர்கள் இருந்தனர்; அவர்களுள் 15 பேர் பெண்கள்.

1947 ஆகஸ்ட் மாதம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விடுதலை பெற்றபின் 28 முஸ்லிம் லீக் உறுப்பினர்கள் மட்டும் இந்திய அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் இடம் பெற்றனர். மற்றவர்கள் கராச்சியில் கூடிய பாகிஸ்தான் அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்றனர். விடுதலைக்குப் பிறகு, இந்திய ஒன்றியத்திலிருந்த சமஸ்தானங்களில் சார்பில், 93 உறுப்பினர்கள் அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டனர். இந்த அவையில் காங்கிரஸ் கட்சிக்கு 82 விழுக்காடு பெரும்பான்மை இருந்தது.

அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றம் அரசியல் சட்டத்தை வரைவதற்காக அமைத்த குழுதான், 'அரசியல் சட்ட வரைவுக் குழு' (Constitution Drafting Committe) அந்தக் குழுவுக்குத் தலைவராக இருந்தவர் பாபா சாகேப் அம்பேத்கர்.

அரசியல் சட்ட வரைவுக் குழுவின் உறுப்பினர்கள்:

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்
2. கன்னையாலால் மனேக்லால் முன்ஷி

   (பம்பாய் மாகாண முன்னாள் உள்துறை அமைச்சர்)
3. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்

   (சென்னை ராஜதானியின் முன்னாள் அட்வகேட் ஜெனரல்)
4. என். கோபாலசுவாமி ஐயங்கார்

   (காஷ்மீர் மாநில முன்னாள் பிரதமர், பின்னர், நேரு அமைச்சரவையில் அமைச்சர்)
5. பி. எல்.மிட்டர்

   (இந்திய முன்னாள் அட்வகேட் ஜெனரல்)
6. முகமது சாதுல்லா

   (அஸ்ஸாம் மாநில முன்னாள் முதல்வர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பு)
7. டி.பி. கெய்தான்

   (தொழிலதிபர், புகழ்பெற்ற வழக்குரைஞர்).

   அரசியல் சட்ட அறிவுரைஞர்: சர் பெனகல் நர்சிங்ராவ்

(இவர் உலக நீதிமன்றத்தில் இந்தியாவின் சார்பில் இடம்பெற்ற முதலாவது நீதிபதி).

அரசியல் சட்ட வரைவுக் குழுவிலிருந்து, பி.எல்.மிட்டர் விலகிக்கொண்டபோது, பரோடா மன்னரின் சட்ட ஆலோசகர் மாதவ்ராவ் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

டி.பி.கெய்தான் இறந்ததால், அந்த இடத்துக்கு டி.டி.கிருஷ்ணமாச்சாரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1947-ம் ஆண்டு நவம்பர் 4-ம் நாள், இந்தக் குழு சட்ட முன்வரைவினை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. அதன்பிறகு விவாதங்கள் தொடங்கின. இரண்டு ஆண்டுகளாகக் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. 2000-க்கும் மேற்பட்ட திருத்தங்கள் நிறைவேற்றப் பட்டன. 1949-ம் ஆண்டு, நவம்பர் 26-ம் நாள் அரசியல் சட்டத்தை அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது. அதில் 284 உறுப்பினர்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கையெழுத்திட்டுள்ளனர்.

இதன் பெரும்பகுதி, இங்கிலாந்து நாட்டு அரசியல் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டது. சில பகுதிகள், அமெரிக்க அரசியல் சட்டத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டன.

இடைக்கால அரசு:

அரசியல் சட்ட வரைவு நாடாளு மன்றத்தில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுள் இருந்து, 15 உறுப்பினர்களைக் கொண்டு 1946 செப்டம்பர் 2-ம் நாள் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது. அதாவது, இந்திய வைஸ்ராயின் நிர்வாகக் குழுதான், ‘இடைக்கால அரசு’ என அழைக்கப்பட்டது. அதன் துணைத் தலைவரான ஜவஹர்லால் நேரு பிரதமருக்குரிய அதிகாரங்களுடன் செயல்பட்டார்.

காங்கிரஸ், முஸ்லிம் லீக், ஷெட்யூல்டு கேஸ்ட் ஃபெடரேஷன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, யூனியனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் சார்பில் உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர்.

1946 செப்டம்பர் 2 முதல், 1947 ஆகஸ்ட் 15 வரையிலும் இயங்கியது.

ஜவஹர்லால் நேரு - வைஸ்ராயின் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர், வெளியுறவுத் துறை, காமன்வெல்த் உறவுகள்.

வல்லபாய் படேல் - உள்துறை, செய்தி மற்றும் ஒலிபரப்பு.

பல்தேவ் சிங் - பாதுகாப்புத் துறை.

ஜான் மத்தாய் - தொழில் துறை.

சி. ராஜகோபாலாச்சாரி - கல்வி.

சி.ஹெச்.பாபா - திட்டம், சுரங்கம், மின்சாரம்.

ராஜேந்திர பிரசாத் - உணவு, வேளாண்மை.

அசஃப் அலி - தொடர்வண்டித் துறை மற்றும் போக்குவரத்து.

ஜெகஜீவன் ராம் - தொழிலாளர் நலம்.

லியாகத் அலிகான் - நிதி.

இப்ராஹிம் இஸ்மாயில் சுண்ட்ரிகர் - வணிகம்.

கஸாபர் அலி கான் - மக்கள் நல்வாழ்வு.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அப்துர் ரஃப் நிஸ்டார் - அஞ்சல் மற்றும் வான்வழிகள்.

ஜோகேந்திரநாத் மண்டல் - சட்டம்

இந்தக் குழுவில், தொடக்கத்தில் இடம் பெற்றிருந்த சரத் சந்திர போஸ், ஷாஃபாத் அகமத் கான், செய்யது அலி ஜாஹிர் ஆகிய காங்கிரஸ் உறுப்பினர்கள் விலகிக்கொண்டு, 1946 அக்டோபர் 15-ம் நாள் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த லியாகத் அலிகான், இப்ராஹிம் இஸ்மாயில் சுண்ட்ரிகர், கஸாபர் அலி கான், அப்துர் ரஃப் நிஸ்டார், ஜோகேந்திரநாத் மண்டல் ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

லியாகத் அலிகான், பாகிஸ்தான் பிரதமரானார்.

தமிழக சட்டமன்றக் கட்டடம்

தமிழக சட்டப்பேரவை, தற்போது இயங்கி வருகின்ற புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டை, தமிழக அரசுக்குச் சொந்தமானது அல்ல. அது இந்திய ராணுவத்துக்குச் சொந்தமான இடம். மேலும், அந்தக் கட்டடம் அலுவலகம் நடத்துவதற்காகக் கட்டப்பட்டது அல்ல. கிழக்கிந்திய வணிக நிறுவனத்தால் இந்தியாவில் விற்பதற்காக இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட பொருட்களை பாதுகாக்கின்ற கிட்டங்கியாகத்தான் கட்டப்பட்டது. எனவே, தமிழக அரசும் சட்டப்பேரவையும் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் புனித ஜார்ஜ் கோட்டை இல்லை.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் சட்டமன்றத்துக்கென மிகப் பெரிய அளவில் புதிதாகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. புதிதாக அமைக்கப் பட்ட ஜார்கண்ட், உத்தராஞ்சல், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றம் நடத்துவதற்குத் தகுந்த கட்டடங்கள் இல்லை. இனிமேல்தான் கட்டப்பட இருக்கின்றன. கேரள மாநில சட்டமன்றக் கட்டடம், அந்த மாநிலக் கட்டடக் கலையை எடுத்துக்காட்டும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. கூட்டம் நடைபெறும் அரங்கம், மரத்தால் இழைக்கப்பட்டு, கண்ணைக் கவரும் வகையில் அமைந்திருப்பதைத் தொலைக்காட்சியில் காணலாம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதேபோல், கர்நாடக சட்டமன்றம் அமைந்திருக்கின்ற ‘விதான் சௌதா’ கட்டடத்தின் வெளிப்புறத் தோற்றம், பிரமாண்டமான அளவில் காண்போர் வியக்கும் வகையில் அமைந்திருக்கிறது. ‘இந்திய நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தையே அங்கு நடத்த வேண்டும்’ என்றும்கூட கோரிக்கைகள் எழுந்தன. தற்போது, அந்த மாநிலத்தின் வடக்கு எல்லையில் அமைந்துள்ள பெல்காம் மாவட்டத்தை மராட்டிய மாநிலத்துடன் சேர்க்க வேண்டும் என்று மராட்டிய மாநிலம் வலியுறுத்துவதால், கர்நாடக அரசு பெல்காமில் ஒருமுறை சட்டமன்றக் கூட்டத்தொடரை நடத்தியது. அதற்காக அங்கே ‘சுவர்ண சௌதா’ என்ற பெயரில் பிரமாண்டமான ஒரு கட்டடத்தைக் கட்டியுள்ளது. 2012 அக்டோபர் மாதம், அந்தக் கட்டடத்தை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி திறந்து வைத்தார்.

குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத் நகரில் நிலவும் நெருக்கடியால், 20 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் புதிதாக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே சட்டமன்றம், தலைமைச் செயலகத்தை அமைத்துள்ளனர். அது ‘காந்திநகர்’ என அழைக்கப்படுகின்றது.

இடம் தேர்வில் பிரச்னைகள்

தமிழகச் சட்டமன்ற அரங்கமும் தமிழக அரசின் தலைமைச் செயலகமும் இட நெருக்கடியின்றி, சிறப்பாகச் செயல்பட வேண்டுமெனில், பரந்த நிலப்பரப்பில், இன்றையச் சூழ்நிலைக்கு ஏற்ப, ஆயிரக்கணக்கான வண்டிகள் வந்து செல்வதற்கான வசதிகளுடன்கூடிய, புதிய கட்டடம் கட்டவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசு தலைமைச் செயலகத்துக்காக, புதிய கட்டடத்தையும் வளாகத்தையும் கட்டுவது என்ற கருத்தை, 1983-ம் ஆண்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தெரிவித்தார். சென்னைக் கடற்கரைக்கு எதிரே அந்தக் கட்டடம் அமைய வேண்டும் என அவர் விரும்பினார். சென்னை நகரில் அப்போது நிலவிய குடிநீர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டும், தமிழகத்தின் மையமாக இருக்கின்ற திருச்சிக்கு தலைநகரை மாற்றலாம் எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு பலத்த எதிர்ப்புகள் கிளம்பின.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எம்.ஜி.ஆர். ஒரு ‘துக்ளக்’ என்றும்கூட விமர்சித்தார்கள். ஆனால், எம்.ஜி-ஆருக்கு முன்பே தமிழகத்தின் தலைநகரை மதுரைக்கு மாற்ற வேண்டும் என காமராஜர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2002-ம் ஆண்டு, முதலமைச்சர் ஜெயலலிதா ‘மாமல்லபுரம் அருகே 2000 ஏக்கர் நிலப்பரப்பில், புதிய சட்டமன்ற வளாகமும் தமிழக அரசின் தலைமைச் செயலகமும் அமைக்கப்படும். அதற்காக சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவிடந்தை, தையூர் ஆகிய கிராமப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. எனவே இந்தப் பகுதிகளில் இனி நில விற்பனை பத்திரப்பதிவுகள் தடை செய்யப்படுகின்றன’ என அறிவித்தார்.

அதற்கான ஆய்வுப் பணிகளைச் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் கழகமும் மலேஷிய நிறுவனம் ஒன்றும் சேர்ந்து நடத்தின. புதிய வளாகம் கட்டுவதற்கு, 15 முதல் 20 ஆண்டுகள் ஆகும் எனவும், எனவே, இரண்டு ஆண்டுகளில் சென்னைக் கடற்கரைக்கு எதிரே தற்காலிகமாக சட்டமன்றக் கட்டடம் அமைக்கப்படும் என்றும் முதல்வர் அறிவித்தார்.

முதலில், 15 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள லேடி வெல்லிங்டன் கல்லூரி இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், 30 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இராணிமேரி கல்லூரியைத் தேர்ந்தெடுத்துள்ளதாக, 2003 ஏப்ரல் மாதம் அறிவிப்பு வெளியானது. ஆனால், புகழ்பெற்ற பெண்கள் கல்லூரியை இடிப்பதற்கு பொதுமக்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பின. எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின. எனவே, கோட்டூர்புரத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பொறியியல் கல்லூரி வளாகத்தில் உள்ள 43 ஏக்கர் நிலப்பரப்பைத் தேர்ந்தெடுத்தனர்.

புதிய சட்டமன்றக் கட்டடம்

2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது. கருணாநிதி முதலமைச்சரானார். புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டுவது குறித்த ஆய்வுகள் தொடர்ந்தன. அண்ணா தி.மு.க. அரசு, சட்டமன்றம் கட்டுவதற்காகத் தேர்ந்தெடுத்த கோட்டூர்புரம் இடத்தில், 175 கோடி ரூபாய் செலவில், பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தை உலகத் தரத்தில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அமைத்தனர்.

கடைசியாக, சென்னை அண்ணா சாலையில் உள்ள ஓமந்தூரார் அரசினர் தோட்டத்துக்கு உள்ளேயே புதிய சட்டமன்றத்தைக் கட்டுவது எனத் தீர்மானித்தனர். கட்டட மாதிரி வரைபடங்கள் வரவேற்கப்பட்டன. உலக அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. ‘ஜி எம் பி’ என்ற ஜெர்மானியக் கட்டட நிறுவனம் வடிவமைத்த வரைபடம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிழக்குக் கடற்கரை கட்டுமானம் மற்றும் தொழில் நிறுவனத்திடம் கட்டுமானப் பணிகள் ஒப்படைக்கப்பட்டன.

இரவு பகலாகப் பணிகள் நடைபெற்றன. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் இருந்த பழைய கட்டடங்கள் அனைத்தும் இடித்து அகற்றப்பட்டன. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதி, அப்படியே வைத்துக்கொள்ளப்பட்டது. அரசினர் தோட்டத்தின் மேற்குப் பகுதியில், அண்ணா சாலையை ஒட்டி, புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டப்பட்டது. அதே வளாகத்தில், கிழக்குப் பகுதியில் ஏழு மாடிகள் கொண்ட ஏழு கட்டடங்களில் அமைச்சர்கள் இயங்கிடும் வகையில், தலைமைச் செயலகத்தையும் கட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கான பணிகளும் தொடங்கின.

முன்னாள் தலைமைச் செயலகம்

நாள்தோறும் சுமார் 6,000 தொழிலாளர்கள் கட்டுமானப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுள் 4,000 பேர் வட இந்தியத் தொழிலாளர்கள். கூவத்தின் கரைகளில் தகரக் கொட்டகைகள் அமைக்கப்பட்டு அங்கேயே தங்க வைக்கப்பட்டனர். பகலில் சுமார் 3000 பேரும், இரவில் சுமார் 3000 பேருமாகக் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப் பட்டனர். வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 2,000 தமிழகத் தொழிலாளர்களும் இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

2010-ம் ஆண்டு, மார்ச் 13-ம் நாள், சட்டமன்றக் கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது. இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் கட்டடத்தைத் திறந்து வைத்தார். தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் மு. கருணாநிதி, ஆந்திர முதல்வர் ரோசையா, கர்நாடக முதல்வர் எடியூரப்பா, இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

புனித ஜார்ஜ் கோட்டையில் இருந்த சட்டமன்ற அரங்கம், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நூலகமாக மாற்றப்பட்டது. கோட்டையில் இருந்த தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தின் பெயர்ப்பலகையும் அகற்றப்பட்டு, ‘மத்திய தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்’ என்ற பெயர்ப்பலகை வைக்கப்பட்டது.

புதிய சட்டமன்றக் கட்டடத்தில், சட்டமன்றக் கூட்டத்தொடரும் நடைபெற்றது.

2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றிபெற்று, ஆட்சி அமைத்த அண்ணா தி.மு.க. அரசு, ‘புனித ஜார்ஜ் கோட்டையிலேயே சட்டமன்றம் நடைபெறும்; புதிய சட்டமன்றக் கட்டடம், பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்படும்’ என அறிவித்தது. தற்போது சட்டமன்றக் கூட்டம் புனித ஜார்ஜ் கோட்டையிலேயே நடைபெற்று வருகின்றது. புதிய கட்டடம் எந்தவிதப் பயன்பாடுமின்றி மூடி வைக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் நடைபெற்றுவந்த தலைமைச் செயலகக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

சட்டமன்றக் கட்டடத்தை மருத்துவமனையாக மாற்றக்கூடாது என, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அரசின் முடிவைச் செயல்படுத்த நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. பின்னர் அந்தத் தடையை விலக்கிக்கொண்டது. மருத்துவமனை கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அரசு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முயன்ற வேளையில், பசுமைத் தீர்ப்பாயம் தடைவிதித்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தலைவர்கள்

1. புலுசு சாம்பமூர்த்தி (1937-42)
2. ஜே.சிவசண்முகம் பிள்ளை (1946-51), (1952-55)
3. என்.கோபால மேனன் (1955-56)
4. கிருஷ்ணா ராவ் (1957-61)
5. செல்லபாண்டியன் (1962-67)
6. சி.பா.ஆதித்தனார் (1967-68)
7. புலவர் கா.கோவிந்தன் (1969-71)
8. கே.ஏ.மதியழகன் (1971-72)
9. சீனிவாசன் (1972-73) இடைக்காலத் தலைவர்
10. புலவர் கா.கோவிந்தன் (1973-77)
9. முனு ஆதி (1977-80)
10. க.ராசாராம் (1980-85)
11. பி.எச்.பாண்டியன் (1985-89)
12. தமிழ்க்குடிமகன் (1989-91)
13. சேடப்பட்டி முத்தையா (1991-96)
14. பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் (1996-2001)
15. கா.காளிமுத்து (2001-06)
16. இரா.ஆவுடையப்பன் (2006-11)
17. டி.ஜெயகுமார் (2011-12)
18. ப.தனபால் (2012 அக்டோபர் 12 முதல்...)

ஆகியோர் சட்டப்பேரவைத் தலைவர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

சட்ட மேலவை

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை, சட்டமன்ற வளாகத்திலேயே உள்ள ஓர் அரங்கில் செயல்பட்டு வந்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1952-53-ம் ஆண்டு, மொத்தம் 72 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். 1953 அக்டோபர் 1-ம் நாள், ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்ட பிறகு, உறுப்பினர்களின் எண்ணிக்கை 51 ஆகக் குறைந்தது.

1956-ம் ஆண்டு, 50 ஆகக் குறைந்தது; பின்னர், 63 ஆக உயர்ந்தது. அவர்களுள் 21 உறுப்பினர்கள் சட்டமன்றத்தாலும், 21 உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளாலும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆசிரியர்கள் சார்பில் 6, பட்டதாரிகள் சார்பில் 6 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 9 பேர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

இந்த அவையின் உறுப்பினர்களான ராஜாஜி, சி.என்.அண்ணாதுரை ஆகியோர் முதலமைச்சர்களாகப் பொறுப்பு வகித்துள்ளனர்.

1986-ம் ஆண்டு, தமிழ்நாடு சட்ட மேலவை கலைக்கப்பட்டது. 2006-ம் ஆண்டு முதல் தமிழக அமைச்சரவைக் கூட்டங்கள் இந்த அரங்கில் நடைபெற்று வருகின்றன.

சட்டமேலவைத் தலைவர்கள்:

1. ராஜாஜி (1920-23)
2. எல்.டி.சுவாமிகண்ணுப் பிள்ளை (1923-25)
3. எம்.இரத்தினசாமி (1925-26)
4. சி.வி.எஸ்.நரசிம்மராஜு (1926-30)
5. பி.ராமச்சந்திர ரெட்டி (1930-37)
6. யு.ராமராவ் (1937-45)
7. ஆர்.பி.ராமகிருஷ்ண ராஜு (1946-52)
8. பி.வி.செரியன் (1952-64)
9. எம்.ஏ.மாணிக்கவேலு நாயக்கர் (1964-70)
10. சி.பி.சிற்றரசு (1970-76)
11. ம.பொ.சிவஞானம் (1976-86)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக கட்சிகள்

பொது உடைமை இயக்கம்

தமிழகத்தில் பொது உடமை இயக்கமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை, 1936-ம் ஆண்டு அமைக்கப்பட்டது. பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ், ப.ஜீவானந்தம், எஸ்.ஏ.கே.ஐயங்கார், சி.எஸ்.சுப்பிரமணியம், கே.முருகேசன், நாகர்கோவில் சி.பி.இளங்கோ, டி.ஆர். சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி முருகேசன் உள்ளிட்டோர் அந்தக் கிளையின் உறுப்பினர்களாக இருந்தனர். செயலாளர் யாரும் இல்லை. கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பேட்டை சி.எஸ்.சுப்பிரமணியம் எழுதியதால், அவரே செயலாளராகக் கருதப்பட்டார். எஸ்.வி.காட்டே, ஏ.கே.கோபாலன், பி.சுந்தரய்யா போன்ற தலைவர்கள் தமிழகத்துக்கு வந்து, கம்யூனிஸ்ட் தோழர்களை ஒருங்கிணைக்கும் பணிகளை மேற்கொண்டனர். என்.சி.சேகர், கோவை மாவட்டப் பொறுப்புகளையும் ராமச்சந்திர நெடுங்காடி, நெல்லை மாவட்டப் பொறுப்புகளையும் மேற்கொண்டு புதிய உறுப்பினர்களைச் சேர்த்தனர்.

சாம்பவர் வடகரையில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த கோவில் பிள்ளை என்ற ஆசிரியரின் வீட்டில், தலைமறைவாக முதல் மாநாடு நடைபெற்றது. 1939-ம் ஆண்டு, இரண்டாம் உலகப்போர் வெடித்த போது போர் எதிர்ப்புப் பிரச்சாரங்களை மேற்கொண்ட பொது உடைமை இயக்கத் தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 1942-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் கட்சியின் தலைமைக் குழு மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்று, சிறையில் இருந்த தோழர்களை அரசு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விடுதலை செய்தது.

விவசாயக் கடனுக்காக வீட்டு உடைமைகள் பறிமுதல்

அன்றைய நாட்களில், கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களிடம் இருந்து நகை, பண்ட பாத்திரங்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தார்கள். வீட்டுக் கதவுகளைக்கூடப் பெயர்த்து எடுத்துப் போனார்கள். அவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களை வருவாய் அலுவலகங்களில் வைத்து ஏலம் விடுவார்கள். உழவு மாடுகளையும் பறிமுதல் செய்தார்கள்.

நம்பூதிரிபாட்

ப.ஜீவானந்தம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எம்.கல்யாணசுந்தரம்

பண்ணையார்களின் நிலங்களில் வேலை பார்த்து வந்த விவசாயத் தொழிலாளர்கள், விவசாயக் கடன் தள்ளுபடிக்காகவும் கூலி உயர்வு கேட்டும் போராட்டங்களை நடத்தினர். பொது உடைமைக் கட்சியினரும் அரசியல் இயக்கங்களும் விவசாயிகளுக்கு ஆதரவுக்குரல் கொடுத்து வந்தன. பண்ணையார்களுக்கு ஆதரவாக காவல் துறை விவசாயிகள்மீது அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டது. எராளமான தொழிலாளர் போராட்டங்களை இக்கட்சி நடத்தியது.

1952-ம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாகாண சட்டமன்றத்தேர்தலில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 62 இடங்களைக் கைப்பற்றி முதன்மை எதிர்க்கட்சியாக உருவானது.

1957 தேர்தலில், எட்டு இடங்களை மட்டுமே கைப்பற்றியது. 1962 தேர்தலில் 6 தொகுதிகள், 1967 தேர்தலில் 2 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தமிழகத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது எனலாம். இல்லையேல், மேற்கு வங்கம், கேரளா மாநிலங்களைப்போல, தமிழகத்திலும் கம்யூனிஸ்ட் கட்சியே ஆட்சியைப் பிடித்திருக்கக் கூடும்.

கம்யூனிஸ்ட் பிளவு

1962 இந்திய- சீன எல்லைப் போர் வெடித்த போது, இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் கருத்து வேற்றுமைகள் எழுந்தன. 1964-ம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அகில இந்திய அளவில் இரண்டாகப் பிரிந்தபோது, தமிழகத்திலும் இரு கம்யூனிஸ்ட் இயக்கங்கள் உருவாகின.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

‘மக்கள் ஆட்சியின் மாண்புகளை ஒட்டி, பொது உடைமைக் கருத்துகளை மக்கள் மன்றத்தில் பதிவுசெய்ய வேண்டும்’ என்றனர் வலதுசாரிகள் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி).

‘தீவிரமான கொள்கைகளை முன்னெடுத்து, ஆளுகின்ற அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி, இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும்’ என்றனர் இடதுசாரிகள் (இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி).

அதிலும் தீவிரமாக இருப்பவர்கள்தாம் இன்றைய மாவோயிஸ்டுகள். ஆயுதத்தைக் கையில் எடுக்காமல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்பதே அவர்களுடைய முழக்கமாக இருக்கின்றது. நிலச்சுவான்தார்களையும் பெரு முதலாளிகளையும் ஆயுதங்களால் வீழ்த்த வேண்டும் என்பதே இவர்களது வழிமுறை. கார்ல் மார்க்ஸின் தத்துவத்தை வலியுறுத்தினாலும் இவர்களுக்கிடையே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளும் பாகுபாடுகளும் இவர்களையே ஒரு நேர்க் கோட்டில் இணைக்க முடியவில்லை.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் முதல் செயலாளராக மணலி கந்தசாமி பொறுப்பு வகித்தார். அவருக்குப் பின்னர், 1968-ம் ஆண்டு எம்.கல்யாணசுந்தரம் செயலாளரானார். அவர் பத்து ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் தொடர்ந்து செயல்பட்டார். 1978-ம் ஆண்டு பி.மாணிக்கம் செயலாளர் ஆனார். பின்னர் ஆர்.நல்லகண்ணு மாநிலச் செயலாளர் ஆனார்.

காங்கிரஸ் ஆதரவு நிலையை மேற்கொண்டு வந்ததால், எம். கல்யாண சுந்தரம், தா.பாண்டியன் உள்ளிட்ட பலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். அவர்கள் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கி சிலகாலம் தனித்துச் செயல்பட்டு, மீண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலேயே வந்து இணைந்தனர். தா.பாண்டியன், மாநிலக் குழுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டாவது முறையாகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

இக்கட்சி ‘ஜனசக்தி’ என்ற பெயரில் தமிழ் நாளிதழ் ஒன்றை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நடத்தி வருகிறது. தொடக்கத்தில் வார இதழாக வெளிவந்து, தற்போது நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. ‘தாமரை’ என்ற பெயரில் இலக்கிய மாத இதழ் ஒன்றையும், ‘சமூக விஞ்ஞானம்’ என்ற பெயரில் அறிவியல் செய்திகள் அடங்கிய இதழ் ஒன்றை மூன்று மாதங்களுக்கு ஒருமுறையும் வெளியிட்டு வருகிறது.

1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் அ.தி.மு.க-காங்கிரஸ் அணியில் இடம்பெற்று, மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. திருச்சி நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து, எம்.கல்யாணசுந்தரம் தேர்ந்தெடுக்கப் பட்டார். கோவை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து, பார்வதி கிருஷ்ணன் வெற்றி பெற்றார்.

1980-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றது. ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. சட்டமன்றத் தேர்தலில் அதே அ.தி.மு.க. உடன் கூட்டணி அமைத்து, 9 இடங்களில் வெற்றி பெற்றனர்.

1984 தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று 2 இடங்கள்

1989 அ.தி.மு.க. (ஜானகி அணி) 3 இடங்கள்

1991 தி.மு.க. அணி 1 இடம்

1996 தி.மு.க. அணி 8 இடங்கள்

2001 அ.தி.மு.க. அணி 5 இடங்கள்

2006 தி.மு.க. அணி 6 இடங்கள்

1989 நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. அணி 1 இடம்

1996 தி.மு.க. அணியில் 2 இடங்கள்

1998 தி.மு.க. அணியில் 1 இடம்

2004 தி.மு.க. அணியில் 2 இடங்கள்

2009 அ.தி.மு.க. அணியில் 1 இடம்

தமிழக மாநாடுகள்

7-வது மாநாடு, மதுரை 1965

8 ” ” வேலூர் 1968

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

9	”	”	திருச்சி 1971
10	”	”	சென்னை 1974
11	”	”	கோவை 1978
12	”	”	ராஜபாளையம் 1982
13	”	”	திருநெல்வேலி 1986
14	”	”	திருச்சி
15	”	”	மதுரை
16	”	”	சென்னை
17	”	”	கடலூர்
18	”	”	தர்மபுரி

துணை அமைப்புகள்

1. அனைத்திந்திய மாணவர் பெருமன்றம்
   (All India Students Federation - AISF)
2. அனைத்திந்தியத் தொழிற்சங்க காங்கிரஸ்
   (All India Trade Union Congress - AITUC)
3. அனைத்திந்திய விவசாயிகள் சங்கம்
   (All India Kisan Sabha)
4. அனைத்திந்திய விவசாயிகள் தொழிலாளர் சங்கம்
   (Bharatiya Khet Mazdoor Union)
5. இந்திய தேசிய மாதர் சம்மேளனம்
   (National Federation of Indian Women)
6. அனைத்து இந்திய இளைஞர் பெருமன்றம்
   (All India Youth Federation)
7. அகில இந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம்
8. தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1965 முதல் பி.ராமமூர்த்தி, தமிழ் மாநிலக் குழுவின் செயலராகப் பொறுப்பேற்றார். பி.ராமமூர்த்தி மறைவுக்குப் பின்னர், எம்.ஆர்.வெங்கட்ராமன், ஏ.பாலசுப்பிரமணியன், ஏ.நல்லசிவன் ஆகியோர் பொதுச்செயலாளர் ஆனார்கள். அதற்குப்பின், என். சங்கரய்யா, திண்டுக்கல் என்.வரதராஜன் ஆகியோர் மாநிலப் பொதுச்செயலாளராகப் பணியாற்றினர். 2010 பிப்ரவரி முதல், ஜி.ராமகிருஷ்ணன் மாநிலச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, தற்போது இரண்டாவது முறையாகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

1967-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியில் இடம்பெற்று, 11 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

பி.இராமமூர்த்தி

1971 சட்டமன்றத் தேர்தலில் 37 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. ஆனால், ஒரு இடத்திலும் வெற்றி பெறவில்லை.

1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், தி.மு.க., ஜனதா அணியில் இடம் பெற்றது. அந்தத் தேர்தலில் மூன்று இடங்களில் போட்டி இட்டு, ஓரிடத்திலும் வெற்றி பெறவில்லை. சட்டமன்றத் தேர்தலில், அண்ணா தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து, 20 தொகுதிகளில் போட்டியிட்டு, 12 இடங்களில் வெற்றி பெற்றது. (2.79 விழுக்காடு வாக்குகள்).

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1980-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், அண்ணா தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று ஓரிடத்திலும் வெற்றி பெறவில்லை. சட்டமன்றத் தேர்தலிலும், அதே அணியில் இடம் பெற்று, 16 இடங்களில் போட்டியிட்டு, 11 இடங்களில் வெற்றி பெற்றது.

1984-ம் ஆண்டு, தி.மு.க. கூட்டணியில் 16 இடங்களில் போட்டியிட்டு, ஐந்து இடங்களில் வெற்றி பெற்றது. (2.76 விழுக்காடு வாக்குகள்).

1989-ம் ஆண்டு தி.மு.க. உடன் கூட்டணி. 21-ல் போட்டியிட்டு, 15 தொகுதிகளில் வெற்றி. (3.53 விழுக்காடு வாக்குகள்).

1991-ல் தி.மு.க. கூட்டணி; 22 தொகுதிகளில் போட்டியிட்டு, ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றது. (3.15 விழுக்காடு வாக்குகள்).

1996 தேர்தலில், ம.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்று, 40 தொகுதிகளில் போட்டியிட்டது. ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது. (1.68 விழுக்காடு வாக்குகள்).

2001-ல் அ.தி.மு.க. கூட்டணி 8 இடங்களில் போட்டியிட்டு, 6 இடங்களில் வெற்றி பெற்றது.

2006-ல் தி.மு.க. கூட்டணி 13 தொகுதிகளில் போட்டியிட்டு, 9 தொகுதிகளில் வெற்றி பெற்றது. (2.65 விழுக்காடு வாக்குகள்).

2004-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான அணியில் இடம்பெற்று, மதுரை தொகுதியில் பி.மோகன், நாகர்கோவில் தொகுதியில் பெல்லார்மின் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், இக்கட்சி தி.மு.க.அணியில் இடம்பெற்று, 9 இடங்களில் வெற்றி பெற்றது.

2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க. அணியில் இடம்பெற்று, கோவை, மதுரை, நாகர்கோவில் ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டனர். கோவை தொகுதியில் பி.ஆர். நடராஜன் வெற்றி பெற்றார்.

2011 சட்டமன்றத் தேர்தலிலும், அ.தி.மு.க. அணியில் இடம் பெற்று, 10 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கட்சி வெளியீடுகள்

இக்கட்சி 'தீக்கதிர்' என்ற பெயரில் தமிழ் நாளிதழ் ஒன்றினை வெளியிட்டு வருகிறது. 'People's Democracy' என்ற பெயரில் அகில இந்திய அளவில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றினையும், 'சிஐடியு செய்தி' என்ற பெயரில் தொழிற்சங்கச் செய்திகள் அடங்கிய தமிழ் செய்தித்தாள், 'மகளிர் சிந்தனை' என்ற பெயரில் ஜனநாயக மாதர் சங்கத்தின் செய்திகள் அடங்கிய செய்தித் தாளினையும், வாலிபர் சங்கத்தின் சார்பில் 'இளைஞர் முழக்கம்' என்ற செய்தித்தாள், விவசாய சங்கத்தின் சார்பில் 'உழவன் உரிமை' என்ற செய்தித்தாள், 'போக்கு வரத்துத் தொழிலாளி' என்ற செய்தித்தாள், 'மின் ஊழியர் செய்தி' என்ற செய்தித் தாளினையும் வெளியிட்டு வருகிறது. 'செம்மலர்' என்ற இலக்கிய மாத ஏடு, 'மார்க்சிஸ்ட்' என்ற தத்துவ ஏடு (மாத இதழ்) உள்ளிட்ட பல செய்தி இதழ்களையும் வெளியிட்டு வருகின்றது.



ஆர்.உமாநாத்

துணை அமைப்புகள்:

1. இந்தியத் தொழிற்சங்க மையம்
   (Centre of Indian Trade Unions-CITU)
2. ஜனநாயக வாலிபர் சங்கம்
   (Democratic Youth Federation of India-DYFI)
3. இந்திய மாணவர் சங்கம்
   (Students Federation of India-SFI)
4. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(All India Democratic Women‘s Association - AIDWA)

5. அகில இந்திய விவசாயிகள் சங்கம்

(All India Kissan Sangh-AIKS)

ஆகிய துணை அமைப்புகளும் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு துணை அமைப்புக்கும் தனிக்கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம்

திராவிடர் கழகத்தில், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தன. இந்த நிலையில், 72 வயதான பெரியார், 29 வயதான மணியம்மையாரைத் திருமணம் செய்துகொள்ளப்போவதாக அறிவித்தார்.



அண்ணா

அவரது முடிவை, அண்ணா உள்ளிட்ட முன்னணித் தோழர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. எதிர்ப்புகளைப் பொருட் படுத்தாமல், பெரியார்-மணியம்மை திருமணம் நடைபெற்றது.

எனவே, அண்ணா தலைமையில் பல முன்னணித் தலைவர்கள், திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தனர். சமஅளவில் கருப்பு, சிவப்பு வண்ணத்தில் கட்சியின் கொடியை வடிவமைத்தனர். கட்சியின் பொதுச்செயலாளராக, அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார். 'எங்கள் கட்சிக்குத் தலைவர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெரியார்தான்; எனவே, அவரது இடம் காலியாக வைக்கப்பட்டிருக்கும்' என அறிவித்தார்.

கட்சியின் தொடக்கவிழாப் பொதுக் கூட்டம், 1949-ம் ஆண்டு செப்டம்பர் 18-ம் நாள், சென்னை ராயபுரத்திலுள்ள 'ராபின்சன் பூங்கா' என்ற இடத்தில் நடை பெற்றது. கொட்டும் மழையில் தலைவர்கள் உரையாற்றினார்கள்.

அண்ணாவும் தம்பியரும்

திராவிட முன்னேற்றக் கழகத்தை, ஒரு குடும்பப் பாசம் நிறைந்த இயக்கமாகக் கட்டி வளர்த்தார் அண்ணா. நாம் எல்லோரும் ஒரே தாயின் வயிற்றில் பிறக்க முடியாது என்பதால், தனித்தனித் தாய் வயிற்றில் பிறந்து, அண்ணன் தம்பிகளானோம் என்றார். தொண்டர்களை, 'தம்பி' என்று பாசத்தோடு அழைத்தார்.

எனவே, தொண்டர்கள் அவரை 'அண்ணா' என்று அன்போடும், மதிப்போடும் அழைத்தனர். அண்ணாவின் அழகுத் தமிழ் எழுத்தாலும் அடுக்குமொழிப் பேச்சாலும் ஈர்க்கப்பட்ட பாமர மக்கள், லட்சக்கணக்கான புதிய தலைமுறை இளைஞர்கள், அரசியலில் ஆர்வம் காட்டத் தொடங்கினர். முன்னணித் தலைவர்கள் பலரும் தங்களது வடமொழிப் பெயர்களை மாற்றி தமிழ்ப் பெயர்களைச் சூட்டிக்கொண்டனர்.

தொண்டர்கள் இயக்கம்

அப்போது காங்கிரஸ் கட்சியில் நில உடைமையாளர்கள், பண்ணையார்களே பொறுப்புகளை வகித்து வந்ததால், சமூகத்தின் அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், ஏழை எளிய மக்களின் கட்சியாக தி.மு.க. வளர்ச்சி பெறத் தொடங்கியது.

தி.மு.க. தொண்டர்கள், ஐந்து பத்து என பொதுமக்களிடம் நன்கொடை திரட்டி, பொதுக்கூட்டங்களை நடத்தினார்கள். இரவு நேரங்களில் அவர்களே சுவரொட்டிகள் ஒட்டுவார்கள். கூட்டம் நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே மண் பானை வாங்கி, கூழ் காய்ச்சி வைத்துக்கொண்டு வேலை பார்க்கின்ற தொண்டர்களுக்குக் கொடுப்பார்கள்.

சிறுவர்களை வைத்துக் கொண்டு காகிதக் கொடிகளைச் சணல் கயிற்றில் ஒட்டி, அதை அழகாக சுலபமாகப் பிரிப்பதற்கு ஏற்றவாறு சுற்றி வைத்துக் கொண்டு, பொதுக்கூட்டம் நடக்கும் பகுதியிலுள்ள சாலைகளில், விளக்குக் கம்பத்தில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பழக்கப்பட்டவர்களை ஏற்றி கொடிகளைக் கட்டுவார்கள். கூட்டம் நடப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே இந்த வேலைகள் தொடங்கி விடும். இதனால் பொதுக்கூட்டச் செய்திகள் மக்களிடம் விரைவாகப் பரவிவிடும். ஆற்றல்மிகு சொற்பொழிவாளர்களின் உரைகளைக் கேட்பதற்காக மக்கள் திரண்டு வந்தார்கள்.

இவ்வாறு சுவர்களில் வரைவது, சுவரொட்டிகள் ஒட்டுவது, தட்டியில் பொதுக்கூட்டச் செய்தியை எழுதிக் கட்டுவது, கொடி கட்டுவது, ‘மெகா போன்’ என்று அழைக்கப்பட்ட கை ஒலிபெருக்கியை வைத்துக்கொண்டு, குடிசைப் பகுதிகளில் பிரசாரம் செய்வது, சைக்கிள் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவது, அந்தந்தப் பகுதி ஊர்ப் பிரச்னைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்கள், உண்ணாநிலைப் போராட்டங்கள் நடத்துவது, ஊர் முழுக்க உண்மைச் சம்பவங்களைப் பரப்புவது, சிறிய அளவிலும் பெரிய அளவிலும் பொதுக்கூட்டம், நாடகம், கலைநிகழ்ச்சி, கருத்தரங்கம், மாநாடு நடத்துவது, அரசியல் பேச்சிலேயே இலக்கியத்தைக் குழைத்துச் சொற்பெருக்காற்றுவது, எதிர்கட்சியினரும் கேட்டு மகிழும்படியான பண்போடு தம் கருத்துகளை எடுத்து வைப்பது இதுபோன்ற இலக்கண வரைமுறை மரபுகளை தி.மு.க. தொண்டர்கள் செயல்படுத்தினார்கள்.

அன்றைய நாட்களில் திராவிட இயக்க எழுத்தாளர்கள், பேச்சாளர்களுடைய பேச்சுகளை எந்தச் செய்தித்தாளும் ஒரு வரிகூட வெளியிடாது. எனவே, திராவிடக் கழகத்தாரும் திராவிட முன்னேற்றக் கழகத்தாரும் ஆங்காங்கே சிற்றிதழ்களைத் தொடங்கி நடத்தினர். அவற்றில் பெரியார், அண்ணா பேச்சை எழுதி வெளியிட்டனர்.

1946-ல், சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடைபெற்ற இரண்டாவது எழுத்தாளர் மாநாட்டில் தாம் கேட்ட அண்ணா உரையை அப்படியே எழுதி, புதுக்கோட்டையில் க.நாராயணன் என்பவர் நடத்தி வந்த ‘தாய்நாடு’ என்ற இதழில், வணங்காமுடி என்ற புனைபெயரில் வெளியிட்டதாக, ‘நான் பார்த்த அரசியல்’ என்ற தமது நூலில் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ளார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



இரா.நெடுஞ்செழியன்

தி.மு.க. ஏடுகள்

தி.மு.க. முன்னணித் தலைவர்கள் அனைவரும் தனித்தனியாக ஏடுகளை நடத்தி வந்தனர்.

திராவிட நாடு,

காஞ்சி	- அண்ணா
மன்றம்	- நாவலர் நெடுஞ்செழியன்
முரசொலி	- கருணாநிதி
தென்றல்	- கண்ணதாசன்
தென்னகம்	- கே.ஏ.மதியழகன்
போர்வாள்	- காஞ்சி மணிமொழியார்
அன்னை	- சத்தியவாணிமுத்து
இன முழக்கம்	- சி.பி.சிற்றரசு

ஆகியவற்றுடன் நூற்றுக்கணக்கான சிற்றிதழ்கள் வெளிவந்தன. கழகக்குரல், முத்தாரம், தோழன், நகர தூதன், தாய்நாடு, தனியரசு (ஏ.வி.பி.ஆசைத்தம்பி), மாலைமணி (பி.எஸ். இளங்கோ), நம்நாடு, பிறப்புரிமை, நக்கீரன், அண்ணா (எம்.ஜி.ஆர்), தென்புலம், முல்லை, நீட்டோலை (அடியார்), புதுவாழ்வு, தம்பி, மக்களாட்சி, அறப்போர், முன்னணி, பகுத்தறிவு, உரிமை வேட்கை, மக்களரசு, தீப்பொறி, ஈட்டி, திராவிடத்தான், தமிழரசு, தென்னரசு, திராவிட ஏடு, அருவி, பொன்னி, ஞாயிறு, பூம்புகார், வெள்ளி வீதி, கனவு, அமிர்தம், தஞ்சை அமுதம், தென்னாடு, முன்னேற்றம், தீச்சுடர், களஞ்சியம், திருவிடம்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பூமாலை, சங்கநாதம், எரியீட்டி, புரட்சிக் குயில், திருவிளக்கு ஆகியவை திராவிட இயக்க ஏடுகளுள் குறிப்பிடத்தக்கவை.

என்.வி.நடராசன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேகமான வளர்ச்சிக்கு, கட்சியின் உள் அமைப்புகளான, தலைவர்களின் பெயர்களால் அமைக்கப்பட்ட மன்றங்களிலும், தமிழகம் முழுவதும் முடிதிருத்தகங்களில் படிப்பதற்குக் கிடைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெளியீடுகள் அதிக அளவில் மக்களைச் சென்றடைவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

இதுபோன்ற அடிப்படை வேலைகளில், கட்சிப் பணிகளில் அன்றைய நாளில் தி.மு.க. தொண்டர்களை வெல்ல எந்தக் கட்சியிலும் ஆளில்லை. அதனால்தான் தி.மு.க. புயல் வேகத்தில் வளர்ந்தது எனலாம். ‘ஒரு டீயை சாப்பிட்டுக்கொண்டு இரவும் பகலும் கட்சிப்பணி ஆற்றும் தொண்டர்கள் தி.மு.க-வில் மட்டுமே’ உண்டு என்றார், அன்றைய முதல்வர் பக்தவத்சலம்.

தேர்தல் களத்தில் தி.மு.க.

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில், தி.மு.க. போட்டியிட வில்லை. ஆனால், ‘திராவிட நாடு’ கோரிக்கையை ஆதரிப்பவர்களுக்கு, தேர்தலில் ஆதரவு அளிப்போம்’ என்று அறிவித்தது. அவ்வாறு தி.மு.கழகத்தின் ஆதரவு பெற்ற தனி வேட்பாளர்கள் சிலர் உதயசூரியன், சேவல் ஆகிய சின்னங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். தஞ்சாவூர் சுயம்பிரகாசம், முகையூர் கோவிந்தசாமி உள்ளிட்ட சில உறுப்பினர்கள், ‘திராவிட நாடாளுமன்றக் கட்சி’ (Dravidian Parliamentary Party) என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மும்முனைப் போராட்டம்

1953-ல் தி.மு.க. வலியுறுத்திய சில கோரிக்கைகள் குறித்து பிரதமர் நேருவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, Nonsense' என்று அவர் பதில் கூறினார். அதற்காக பண்டித நேருவுக்குச் சென்னையில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை தி.மு.க. நடத்தியது.

குலக்கல்வித் திட்டத்தை அறிவித்த ராஜாஜியைக் கண்டித்து, அவர் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம்; அத்துடன் ‘கல்லக்குடி’ என்ற ஊரில் அமைக்கப்பட்ட தொடர்வண்டி நிலையத்துக்கு, அரியலூரில் உள்ள டால்மியா சிமென்ட் நிறுவனத்தின் உரிமையாளர், வடநாட்டவரான டால்மியா பெயரில் ‘டால்மியாபுரம்’ என்று பெயர் சூட்டியதை நீக்குதல். இந்த மூன்று போராட்டங்களையும் ஒருங்கிணைத்து தி.மு.க. ‘மும்முனைப் போராட்டம்’ என்று அழைத்தது.

திருச்சியில் திருப்புமுனை

தி.மு.கழகத் தொண்டர்கள், தமிழகம் முழுவதும் ஆளுங்கட்சிக்கு எதிராக பொதுக்கூட்டங்களை நடத்தி பிரச்சாரம் செய்து வந்தனர். அப்போது காங்கிரஸ்காரர்கள், ‘வெட்டவெளியில் நின்றுகொண்டு பேசாதீர்கள்; உங்களால் சட்டசபைக்கு உள்ளே நுழைய முடியுமா?’ என்று சவால் விடுத்தனர். எனவே, ‘தி.மு.கழகம் தேர்தலில் போட்டியிட வேண்டும்’ என்று தொண்டர்கள் விழைந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் தி.மு.க. மாநாடுகள், தென்னை ஓலைப் பந்தலில்தான் நடைபெற்றது. தொண்டர்கள் குடும்பத்தோடு வந்து, மாநாட்டுப் பந்தலிலேயே தங்கியிருப்பார்கள். பந்தலில் ஆங்காங்கே தொட்டில் கட்டி குழந்தைகளைத் தூங்க வைத்திருப்பார்கள். 1956-ம் ஆண்டு மே மாதம், திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் குடும்பத்தோடு பங்கேற்றனர். அந்த மாநாட்டில், தேர்தலில் கட்சி போட்டியிடுவதா? வேண்டாமா? என்பது குறித்து, மே 20-ம் நாள், ஒரு கருத்துக்கணிப்பு வாக்குப்பதிவை நடத்தினார் அண்ணா. மே 22-ம் தேதி முடிவு அறிவிக்கப் பட்டது.

மாநாட்டுக்கு வருகை தந்தோரில், 56,942 பேர் தேர்தலில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

போட்டியிட வேண்டும் எனவும் 4,203 பேர், தேர்தலில் போட்டியிடக் கூடாது எனவும் வாக்களித்தனர்.

பெரும்பாலான தொண்டர்களின் விருப்பப்படி, 1957-ம் ஆண்டு, முதன் முறையாக சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டது.

1952 தேர்தலில், தி.மு.க. ஆதரவைப்பெற்று, ‘உதயசூரியன்’ சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்த ஏ.கோவிந்தசாமி, தமது கட்சியைத் தி.மு.க-வுடன் இணைத்தார். உதயசூரியன் சின்னத்தையே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னமாகப் பயன்படுத்திக்கொள்ள இசைவளித்தார். எனவே, 1957 தேர்தலில், தி.மு.க. வேட்பாளர்கள் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டனர். ஆனால், போட்டியிட்ட தொகுதிகள் அனைத்திலும் ஒரே சின்னம் கிடைக்கவில்லை. பல இடங்களில் சுயேட்சை சின்னங்களே கிடைத்தன.

15 சட்டப் பேரவைத் தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெற்றது. அண்ணா (காஞ்சிபுரம்), மு. கருணாநிதி (குளித்தலை), க. அன்பழகன் (எழும்பூர்), ஏ.வி.பி.ஆசைத் தம்பி (ஆயிரம் விளக்கு), சத்தியவாணிமுத்து (பெரம்பூர்) ப.உ.சண்முகம் (திருவண்ணாமலை) வெற்றி பெற்றனர்.

நாடாளுமன்றத் தேர்தலில், திருவண்ணாமலை தொகுதியிலிருந்து தர்மலிங்கம், நாமக்கல் தொகுதியிலிருந்து ஈ.வி.கே. சம்பத் ஆகிய இருவரும் தி.மு.க. சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஈ.வெ.கி.சம்பத்

1962-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தி.மு.க. 50 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், கட்சியின் தலைவர் அண்ணா காஞ்சி புரம் தொகுதியில் தோல்வியடைந்தார்.

1962 நாடாளு மன்றத் தேர்தலில், ஏழு தொகுதிகளில் வெற்றி பெற்றது. நாஞ்சில் கி.மனோகரன் (வட சென்னை), பி.சிவ சங்கரன் (ஸ்ரீபெரும் புதூர்), தர்மலிங்கம் (திருவண்ணாமலை), ராமபத்திர நாயுடு (கடலூர்), க. ராசாராம் (கிருஷ்ணகிரி), இரா.செழியன் (பெரம்பலூர்), முத்து கவுண்டர் (திருப்பத்தூர்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

திராவிட நாடு கோரிக்கை

தி.மு.கழகத்தின் திராவிட நாடு கோரிக்கை, 1962-ம் ஆண்டு வரையிலும் நீடித்தது. 1963 மே 3-ம் நாள், இந்திய அரசியல் சட்டத்தின் 16-வது திருத்தத்தின் படி, 9-வது பிரிவு திருத்தப்பட்டு, பிரிவினை கோருகின்ற இயக்கங்களைத் தடை செய்வதற்கான சட்டம் வந்தது. சீனப் படையெடுப்பின்போது, நேரு விடுத்த வேண்டுகோளை ஏற்று, தி.மு.க. இந்திய அரசை ஆதரித்தது. அப்போது வேலூர் சிறையிலிருந்த அண்ணா, ‘வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும்; இப்போது வீட்டுக்கே ஆபத்து வந்து விட்டது’ என்று கூறினார். திராவிட நாடு கோரிக்கையை ஒத்திவைத்து இருப்பதாக அறிவித்தார்.



மு.கருணாநிதி

தேர்தல் கூட்டணி

1967-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் பல கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. இந்தக் கூட்டணியில், ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(மார்க்சிஸ்ட்), ம.பொ.சி. தலைமையிலான தமிழரசுக் கழகம், சி.பா.ஆதித்தனார் தலைமையிலான நாம் தமிழர் கட்சி, காயிதே மில்லத் தலைமையிலான இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அகில இந்திய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் இணைந்தன. தமிழ்நாட்டு அரசியலில் அமைந்த முதலாவது தேர்தல் கூட்டணி இதுதான்.

இதில், சுதந்திரா கட்சி தனி உடைமையை ஆதரித்தது; இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஒரு பொது உடைமை இயக்கம். இந்த இரண்டு துருவங்களையும் இணைத்து ஒரே கூட்டணிக்குள் கொண்டு வந்தார் அண்ணா. அதேபோல, ம.பொ.சிக்கும் சி.பா.ஆதித்தனாருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்களையும் அந்தக் கூட்டணியில் கொண்டு வந்து சேர்த்தார்.

ஆளுங்கட்சி

173 தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு.க. 138 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தனித்தே பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும் உரிமை பெற்றது. அனைத்து இந்தியாவிலும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைத் தவிர, ஒரு மாநிலச் சட்ட மன்றத்தில் தனிப் பெரும்பான்மை பெற்ற முதல் கட்சி தி.மு.க. என்ற சாதனையைப் படைத்தது.

சட்டமன்றத் தேர்தலோடு சேர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 25 இடங்களிலும் தி.மு.க. வெற்றிபெற்றது. தென்சென்னை தொகுதியிலிருந்து அண்ணா நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதால், நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகினார். தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ம் தேதி முதல்வராக அண்ணா பதவியேற்றுக் கொண்டார்.

அண்ணாவின் அமைச்சரவை

1. அண்ணா (முதல்வர்)

2. இரா.நெடுஞ்செழியன்
(கல்வி மற்றும் தொழில் துறைகள்)

3. கே.ஏ.மதியழகன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(உணவு மற்றும் வருவாய்த் துறைகள்)

4. செ.மாதவன்
(சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறைகள்)

5. மு.கருணாநிதி
(போக்குவரத்து மற்றும் பொதுப்பணித் துறைகள்)

6. ஏ.கோவிந்தசாமி
(வேளாண்மைத் துறை)

7. சத்தியவாணிமுத்து
(ஆதிதிராவிடர் நலன், செய்தித் துறைகள்)

8. எஸ்.ஜே.சாதிக் பாட்சா
(சுகாதாரத் துறை)

9. பாவலர் மா.முத்துசாமி
(உள்ளாட்சித் துறை)

1967 சட்டமன்றத் தேர்தலில் பெரியார், காங்கிரஸுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். ஆனால், முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றவுடன், திருச்சிக்குச் சென்று தந்தை பெரியாரைச் சந்தித்து, 'தி.மு.க. ஆட்சி பெரியாருக்குக் காணிக்கை' என்று அண்ணா அறிவித்தார்.

சாதனைகள்

பெரியாரின் வேண்டுகோளின்படி, சுயமரியாதைத் திருமணத்துக்குச் சட்ட ஒப்புதல் வழங்கினார்; அதுவரை 'சென்னை மாகாணம்' என்றிருந்த பெயரை மாற்றி, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். தமிழை ஆட்சி மொழியாக்கினார்; மும்மொழித் திட்டத்தை நிராகரித்து, இருமொழித் திட்டத்தை நடைமுறைப் படுத்தினார்; பெண்களுக்குச் சொத்தில் பங்கு வழங்கிடச் சட்டம், பேருந்துகள் நாட்டுடைமை என பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்தார்.

27.06.1967 அன்று, முதலமைச்சர் அண்ணா சட்டமன்றத்தில் உரையாற்றும் போது, 'நான் திராவிட நாடு கோரிக்கையை விட்டுவிட்டேன். ஆனால், அதற்கான காரணங்கள் அப்படியே உள்ளன' என்றார்.

1969-ம் ஆண்டு, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னையில் சிறப்பாக நடத்திக் காட்டினார். உலக அளவிலான பொருட்காட்சி சென்னையில் நடை பெற்றது. அரசுப் பேருந்துகளில் திருக்குறள் எழுதும்படி ஆணை பிறப்பித்தார்.

அண்ணா மறைவு; கருணாநிதி முதல்வர்

முதலமைச்சராக இருந்த அண்ணாவுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவத்துக்காக அமெரிக்கா சென்றார். அவருக்குப் புற்று நோய் இருப்பது கண்டறியப்பட்டது. சிகிச்சைக்குப் பின் ஓரளவு நலம்பெற்று நாடு திரும்பினார். இருப்பினும் நோயின் தீவிரத்தால், 1969-ம் ஆண்டு பிப்ரவரி 3-ம் நாள் இயற்கை எய்தினார். அவருக்குப் பின்னர் முதலமைச்சர் பதவிக்கு கலைஞர் மு.கருணாநிதியும், நாவலர் இரா. நெடுஞ்செழியனும் போட்டியிட்டனர். எம்.ஜி.ஆர். ஆதரவுடன் கலைஞர் மு.கருணாநிதி முதல் அமைச்சர் ஆனார். நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அமைச்சர் ஆனார்.

கருணாநிதி அமைச்சரவை

1. மு.கருணாநிதி, முதல்வர்

(நிதி, பொதுப் பணிகள், போக்குவரத்து)

2. கே.ஏ.மதியழகன் (உணவு, வருவாய்)

3. எ.கோவிந்தசாமி (வேளாண்மை)

4. சத்தியவாணி முத்து (செய்தி, ஆதிதிராவிடர் நலன்)

5. செ.மாதவன் (சட்டம்)

6. எஸ்.ஜெ.சாதிக் பாட்சா (சுகாதாரம்)

7. மா.முத்துசாமி (உள்ளாட்சி)

8. ப.உ.சண்முகம் (தொழிலாளர் நலன்)

9. சி.பா.ஆதித்தனார் (கூட்டுறவு)

10. கே.வி.சுப்பையா (அறநிலையம்).

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



க.அன்பழகன்

1971-ம் ஆண்டு நாடாளு மன்றத்துக்குத் தேர்தல் நடத்தப்பட்டபோது, தமிழ் நாட்டிலும் ஓராண்டுக்கு முன்பாகவே சட்டப்பேரவைத் தேர்தல்களை நடத்துவதென்று தி.மு.க. முடிவு செய்தது. அமைச்சரவை பதவி விலகியது.

1971 தேர்தல்

1971-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் 200 இடங்களில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 184 இடங்களில் வெற்றிபெற்று வரலாறு படைத்தது. இன்றுவரை வேறு எந்தக் கட்சியும் இந்த அளவு இடங்களில் வெற்றி பெறவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 25 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது.

மு.கருணாநிதி 15.03.1971 அன்று, இரண்டாவது முறை முதல்வராகப் பொறுப்பேற்றார்.

அமைச்சரவை

1. மு. கருணாநிதி (முதல்வர்)
2. இரா.நெடுஞ்செழியன் (கல்வி)
3. க.அன்பழகன் (சுகாதாரம்)
4. என்.வி. நடராசன் (பிற்பட்டோர் நலன்)
5. சத்தியவாணிமுத்து (ஆதிதிராவிடர் நலன்)
6. ப.உ.சண்முகம் (உணவு)
7. செ.மாதவன் (தொழில்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

8. எஸ்.ஜெ.சாதிக் பாட்சா (வருவாய்)

9. சி.பா.ஆதித்தனார் (வேளாண்மை)

10. அன்பில் தர்மலிங்கம் (உள்ளாட்சி, செய்தி)

11. க.ராசாராம் (தொழிலாளர் நலன்)

12. ஓ.பி.ராமன் (மின்சாரம்)

13. பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன் (போக்குவரத்து)

14. மு.கண்ணப்பன் (அறநிலையம்).

எம்.ஜி.ஆர். நீக்கம்

அதற்குப் பிறகு மக்கள் செல்வாக்குப் பெற்ற கட்சியின் பொருளாளரான எம்.ஜி.ஆரைப் புறக்கணித்து; கட்சியிலிருந்து ஒதுக்கும் முயற்சிகளை கருணாநிதி மேற்கொண்டார். தமது மூத்த மகன் மு.க.முத்துவை, திரைப்படங்களில் கதாநாயகனாக்கினார். ‘பிள்ளையோ பிள்ளை’ என்ற தலைப்பில் ஒரு படம் தயாரிக்கப்பட்டது. அந்தப் படத்தில், எம்.ஜி.ஆரைப் போலவே மு.க.முத்துவுக்கு இரட்டை வேடம் அளிக்கப்பட்டது. எம்.ஜி.ஆருடன் கதாநாயகிகளாக நடித்த மஞ்சுளா, லட்சுமி ஆகியோரே இப்படத்தில் மு.க.முத்துவுடன் நடிக்க வைக்கப்பட்டனர். அந்தப் படம் வெளிவருவதற்கு முன்பே ‘அகில உலக மு.க.முத்து ரசிகர் மன்றத்’தை கோபாலபுரம் இல்லத்தில் கருணாநிதி தொடங்கினார். மேலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள தி.மு.க. தொண்டர்களை ‘மு.க.முத்து ரசிகர் மன்றம்’ தொடங்குமாறு வலியுறுத்தினார்கள். 1971 தேர்தலில், கட்சியின் பொருளாளரான எம்.ஜி.ஆருக்குத் தெரியாமல் தி.மு.க. தலைமை, வேட்பாளர்களுக்கு நேரடியாகப் பணத்தை வழங்கியது.

கருணாநிதியின் இத்தகைய செயல்பாடுகள் எம்.ஜி.ஆருக்கு மன வருத்தத்தை ஏற்படுத்திற்று. 1972 அக்டோபர் 8-ம் நாள், திருக்கழுக்குன்றத்திலும் அதைத் தொடர்ந்து சென்னை திருவல்லிக்கேணி லாயிட்ஸ் குடியிருப்பிலும் நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டங்களில், கட்சியின் பொருளாளர் எம்.ஜி.ஆர்.பேசியபோது, ‘தி.மு.க. தலைவர் பொறுப்பிலிருந்து கிளைக்கழகச் செயலாளர் வரை, தங்கள் சொத்துக் கணக்கைக் காட்ட வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது சொல்லப் படுகின்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

குற்றச்சாட்டுகளைப் பொய்யாக்க முடியும்' என்று பேசினார்.

'முரசொலி'யில் இந்தப் பேச்சு வெளியிடப்பட்டது. கட்சி நிர்வாகிகளிடம் எம்.ஜி.ஆர். கணக்குக் கேட்கிறார் என்பது போல, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகிகளை கோபமுறச் செய்கின்ற வகையில் கருணாநிதி அறிக்கை வெளியிட்டார். விளக்கம் எதுவும் கேட்காமலேயே, 1972-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் தி.மு.கழகத்தில் இருந்து எம்.ஜி.ஆரை நீக்கினார்.

'அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற புதிய கட்சியை எம்.ஜி.ஆர். தொடங்கினார். தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக விலகி, எம்.ஜி.ஆருக்கு ஆதரவு தெரிவிக்கத் தொடங்கினர். அவ்வாறு மொத்தம் 17 சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ஜி.ஆருக்கு ஆதரவளித்தனர். சட்டப்பேரவைத் தலைவராக இருந்த கே.ஏ.மதியழகன், எம்.ஜி.ஆர் ஆதரவாளராக மாறினார். சட்டப்பேரவையில், கருணாநிதி அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வெற்றி பெற்றதாக மதியழகன் அறிவித்தார். ஆனால், அதே நேரத்தில் அவருக்கு முன்பாக ஒரு நாற்காலி போடப்பட்டு, அப்போது சட்டப்பேரவைத் துணைத்தலைவராக இருந்த விருதுநகர் பெ.சீனிவாசனைக் கொண்டு சபையை நடத்தி, 'ஆட்சிக்கு ஆதரவு இருப்பதாக' கருணாநிதி அறிவித்தார்.

ஒரே நாளில் இரண்டு பேர் தலைமையில் சட்டப்பேரவைக் கூட்டங்கள் நடைபெற்ற வேடிக்கை நடந்தது. அரசுக்குப் பெரும்பான்மை இருப்பதை ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

பின்னர், கே.ஏ.மதியழகன் பேரவைத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். செய்யாறு புலவர் கா. கோவிந்தன் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

தி.மு.க-வில் தாழ்த்தப்பட்டோர் நலன்கள் புறக்கணிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டிய சத்தியவாணிமுத்து, தி.மு.க-வில் இருந்து விலகி, 'தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்' என்ற கட்சியைத் தொடங்கினார்.

1975-ம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிக்கப் பட்டது. அப்போது இந்தியாவில் தமிழ்நாட்டில் மட்டுமே காங்கிரஸ் அல்லாத ஓர் அரசு பதவியில் இருந்தது. 1975-ம் ஆண்டு டிசம்பர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மாத இறுதியில் கோவையில் தி.மு.க. மாநில மாநாடு நடைபெற்றது. அதில் பேசிய சொற்பொழிவாளர்கள் அனைவரும் இந்திராகாந்தியைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர்.

எனவே, இந்திராகாந்தி அம்மையார் 1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் நாள் தி.மு.க. அரசைக் கலைத்துவிட்டு, தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தினார். தி.மு.கழக முன்னணியினர், மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப் பட்டனர். 500-க்கும் மேற்பட்டோர் ஓராண்டுக்கும் மேல் சிறைவாசம் ஏற்றனர். சென்னை, மதுரை சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தி.மு.க-வினர் கடுமையாகத் தாக்கப்பட்டனர். சென்னை சிறையிலிருந்த சிட்டிபாபு (சென்னை மாநகர முன்னாள் மேயர்) மதுரைச் சிறையில் இருந்த சாத்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறைக்கு உள்ளேயே இறந்தனர்.

சர்க்காரியா கமிஷன்

நெருக்கடி நிலையின்போது, 'தி.மு. கழகத்தைவிட்டு விலகினால், அவர்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப் படுவார்கள்' என்று ஆளுநர் ஆட்சி மறைமுகமாகக் காவல்துறையைக் கொண்டு மிரட்டியது. அவ்வாறு பலர் கட்சியைவிட்டு வெளியேறினார்கள். நாள்தோறும் செய்தித் தாள்களில் அவர்களின் விலகல் அறிக்கைகள் வெளியாகின. அவர்கள் அண்ணா தி.மு.க உள்ளிட்ட பிற கட்சிகளில் இணைந்தனர்.

தி.மு.க. ஆட்சியின் ஊழல்கள் குறித்து விசாரிப்பதற்காக உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்த ஆர்.எஸ். சர்க்காரியா என்பவரது தலைமையில், ஒரு விசாரணைக் குழுவை மத்திய அரசு நியமித்தது. இந்த விசாரணையில் தி.மு.க. பங்கேற்கவில்லை. சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை விவரங்கள் நாளிதழ்களில் விரிவாக வெளியாகின.

இறுதியில் கமிஷன் அளித்த அறிக்கையின்படி, பூச்சி மருந்து ஊழல், கோதுமை பேர ஊழல் போன்றவற்றில் கருணாநிதி, அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி ஆகியோருக்கு எதிராக சென்னையில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப் பட்டன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நெருக்கடி நிலைக்குப் பின்னர் 1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. வடசென்னை தொகுதியில் மட்டும் ஆசைத்தம்பி வெற்றி பெற்றார். அதைத் தவிர போட்டியிட்ட மற்ற அனைத்து இடங்களிலும் தி.மு.கழகம் தோல்வி அடைந்தது. கூட்டணிக் கட்சியான ஜனதா கட்சி மத்திய சென்னை, வேலூர், நாகர் கோவில் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றது.

எதிர்க்கட்சி

1977-ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு. கழகம் தனித்துப் போட்டியிட்டது. 48 இடங்களில் வெற்றி பெற்றது.

தேர்தலில் கட்சியின் தோல்விக்குப் பொறுப்பேற்று, தலைவர் பொறுப்பிலிருந்து கருணாநிதியும், பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து நெடுஞ்செழியனும் விலகினர். பின்னர், கருணாநிதி தமது முடிவைத் திரும்பப் பெற்றுக்கொண்டார். ஆனால், நெடுஞ்செழியன் தமது விலகலைத் திரும்பப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். கட்சியில் இருந்தும் விலகியதுடன், ‘மக்கள் திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். அவருடன் முன்னணித் தலைவர்கள் பலரும் கட்சியை விட்டு விலகினர். சில காலம் தனித்து இயங்கிய பின்னர் அந்தக் கட்சி, அ.தி.மு.க-வுடன் இணைந்தது.

தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி வெற்றி

1980-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.கழகம் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய இந்திரா காந்தி அம்மையார், நெருக்கடி நிலையின் போது நடைபெற்ற தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்துப் பேசினார்.

தேர்தல் முடிவுகளில் தி.மு.கழகம் - காங்கிரஸ் கூட்டணி தமிழகம், புதுவையில் உள்ள மொத்தம் 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் 38 தொகுதிகளில் வெற்றி பெற்றது. தி.மு.கழகம் போட்டியிட்ட 16 இடங்களிலும் வெற்றிபெற்றது. இந்தக் கட்சியைச் சேர்ந்த ஜி.லட்சுமணன், நாடாளுமன்றத்தின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சர்க்காரியா கமிஷனில் பெறப்பட்ட வாக்குமூலங்கள் மாற்றப்பட்டன. மீண்டும் புதிதாகச் சாட்சியங்கள் பெறப்பட்டன. அதன்படி, கருணாநிதிக்கும் மற்றவர்களுக்கும் எதிராக வழக்குத் தொடர போதிய ஆவணங்கள் இல்லை என்று கூறி, வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட்டன.

தி.மு.க-வின் வற்புறுத்தலின் பேரில், தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப் பட்டது. 1980-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்தது.

ஆனால், தி.மு.கழகத்துக்கு அதிக இடங்கள் தருவதற்கு காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டு கட்சிகளும் தலா 109 இடங்களில் போட்டியிட்டன. தி.மு.க. தனக்கு ஒதுக்கப் பட்ட இடங்களிலிருந்து கூட்டணிக் கட்சியான முஸ்லிம் லீக் கட்சிக்கு 4 இடங்களை விட்டுக் கொடுத்தது. இந்தக் கூட்டணி வெற்றி பெற்றால் கருணாநிதிதான் முதலமைச்சர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், தேர்தல் முடிவுகள் யாரும் எதிர்பாராத வகையில் அமைந்தன. தி.மு. கழகம் 38 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. காங்கிரஸ் 30 இடங்களில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. 130 இடங்களில் வெற்றி பெற்று, தனிப்பெரும்பான்மை பெற்றது. எம்.ஜி.ஆர். மீண்டும் முதலமைச்சரானார். கருணாநிதி எதிர்க் கட்சித் தலைவரானார்.

1983-ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். லட்சக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக ராமேஸ்வரம் வந்து இறங்கினர். தமிழ்நாட்டு அரசியலில் புயல் வீசியது. கலைஞர் கருணாநிதியும், பேராசிரியர்அன்பழகனும் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினர்.

1984-ம் ஆண்டு இந்திராகாந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்டார். தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற ராஜீவ்காந்தி உடனடியாக நாடாளு மன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்தினார். தமிழகத்தில் அ.தி.மு.க-வுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துக் கொண்டது. அதே வேளையில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எம்.ஜி.ஆருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்றார். அண்ணா தி.மு.க. அமைச்சரவையும் பதவி விலகி, சட்டமன்றத் தேர்தலைச் சந்தித்தது.

இந்திராகாந்தி படுகொலை எம்.ஜி.ஆர். உடல்நலக்குறைவு ஆகிய இரு காரணங்களினால் வீசிய அனுதாப அலையில் தி.மு.க. 22 இடங்களில் மட்டுமே வெற்றி பெற முடிந்தது. சட்டப்பேரவையில் கட்சியின் இடங்கள் படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தன.

1989-ல் தி.மு.க. ஆட்சி

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு, அண்ணா தி.மு.க இரு அணிகளாகப் பிளவுபட்டதால், 1989-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் நிலவிய நான்கு முனைப் போட்டியில், தி.மு.க. 146 இடங்களில் வெற்றி பெற்றது. 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு கருணாநிதி மீண்டும் முதலமைச்சரானார்.

அமைச்சரவை

1. மு.கருணாநிதி (முதல்வர்)

2. க.அன்பழகன் (கல்வி)

3. ஆர்க்காடு நா.வீராசாமி (மக்கள் நல்வாழ்வு)

4. நாஞ்சில் கி.மனோகரன் (வருவாய்)

5. மு.கண்ணப்பன் (போக்குவரத்து)

6. கோ.சி.மணி (உள்ளாட்சித் துறை)

7. வீரபாண்டி ஆறுமுகம் (விவசாயம்)

8. துரைமுருகன் (பொதுப்பணித் துறை)

9. பொன்.முத்துராமலிங்கம் (கூட்டுறவு)

10. சுப்புலெட்சுமி ஜெகதீசன் (சமூகநலம்)

11. க.பொன்முடி (மக்கள் நல்வாழ்வு)

12. கே.என்.நேரு (மின்சாரம்)

13. ச.தங்கவேலு (கைத்தறி)

14. ராமகிருஷ்ணன் (ஆதி திராவிடர் நலத்துறை)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதே ஆண்டு நவம்பர் மாதம் நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. ஓர் இடத்தில்கூட வெற்றி பெறவில்லை. ஆனால், பிரதமராகப் பொறுப்பேற்ற வி.பி.சிங், தேசிய முன்னணியில் இடம் பெற்றிருந்த கட்சிகளின் பிரதிநிதிகளையும் அமைச்சர்களாக்கினார். அதன்படி, தி.மு.க. சார்பில் முரசொலி மாறன், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றார். இந்திய அரசியலில் முதன் முறையாக தி.மு.க. நடுவண் அமைச்சரவையில் பங்கேற்றது.

ஜெயலலிதாவின் ஆதரவில் நடுவண் அரசின் தலைமை அமைச்சராயிருந்த சந்திரசேகர், பொய்க்குற்றச்சாட்டுகளைக் கூறி, 1991-ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார்.

1991-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தின்போது முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார். தமிழகம் முழுவதும் தி.மு.க-வினர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அவர்களது சொத்துகள் சூறையாடப் பட்டன.

ராஜீவ் கொலையால் எழுந்த பலத்த அனுதாப அலையில் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில், துறைமுகம் தொகுதியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி மட்டுமே வெற்றிபெற முடிந்தது. அவரும் சட்ட சபைக்குச் செல்ல விரும்பாமல் தோல்விக்குப் பொறுப்பேற்று, உடனடியாக தமது பதவியை விட்டு விலகினார். துறைமுகம் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், அ. செல்வராசன் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஒரு சுயேட்சை வேட்பாளர் படுகொலை செய்யப்பட்டதால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எழும்பூர் (தனி) தொகுதிக்கு நடைபெற்ற தேர்தலில் பரிதி இளம்வழுதி வெற்றி பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நாஞ்சில் மனோகரன்

வைகோ நீக்கம்!

1993-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் மூன்றாம் நாள் கலைஞர் கருணாநிதி செய்தியாளர்களைச் சந்தித்து ஒரு அறிக்கை வெளியிட்டார். கட்சியின் தேர்தல் பணிச் செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான வை.கோபால்சாமியின் அரசியல் ஆதாயத்துக்காக விடுதலைப் புலிகள் தம்மைக் கொலை செய்யத் திட்டமிடுவதாக, மத்திய அரசின் உளவுத்துறை அனுப்பிய ஊர்ஜிதமாகாத தகவலை மாநில அரசு தமக்கு அனுப்பி இருப்பதாகத் தெரிவித்தார். தமிழக அரசு அளித்த காவல் பாதுகாப்பை ஏற்றுக்கொண்டார்.

வை.கோபால்சாமியை கட்சியை விட்டு நீக்கவேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வாறு அறிவித்திருக்கின்றார் என நாடெங்கும் தொண்டர்கள் குமுறினர். வை.கோ. விளக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டார். கருணாநிதிக்காகத் தம் உயிரையே கொடுப்பதற்கும் ஆயத்தமாக இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார். ‘வைகோவைக் கட்சியை விட்டு நீக்காதே என்று தி.மு.க-வில் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. இதுவரை இல்லாத அளவுக்கு கட்சிக்குள்ளே பெரும் குழப்பம் நிலவியது.

கருணாநிதியின் அறிவிப்பைக் கண்டித்து, அக்டோபர் 8-ம் நாள், திருச்சி மாவட்டம் விழுப்பணங்குறிச்சி என்ற ஊரில் இடிமழை உதயன் (19 வயது) என்ற தி.மு.க. சொற்பொழிவாளர் தன் உடலில் பெட்ரோலை ஊற்றித் தீவைத்துக் கொண்டார். 9-ம் நாள் இரவு, அரவக்குறிச்சியைச் சேர்ந்த நொச்சிப்பட்டி தண்டபாணி என்ற தி.மு.க. தொண்டர், சென்னை அண்ணா நகர் வைகோ இல்லம் முன்பு தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தீவைத்துக்கொண்டு, ‘வை.கோ. வாழ்க, வை.கோ.வைக் கட்சியைவிட்டு நீக்காதே’ என்று முழங்கினார்.

கீழ்ப்பாக்கம் அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவர், நீதிபதியை வரவழைத்து ‘வைகோவை கட்சியை விட்டு நீக்கக்கூடாது என்பதற்காகத் தீக்குளித்தேன்’ என்று தன் மரண வாக்குமூலத்தைப் பதிவு செய்துவிட்டு அக்டோபர் 10-ம் நாள் காலையில் இறந்துபோனார். அடுத்த நாள் காலையில் உதயனும் இறந்து போனார். தொடர்ந்து கோவை காமராஜபுரம் பாலன், உப்பிலியாபுரம் ஆசிரியர் வீரப்பன், மேலப்பாளையம் ஜஹாங்கிர் ஆகிய தி.மு.க. தொண்டர்களும் கருணாநிதியின் அறிவிப்பைக் கண்டித்துத் தீக்குளித்து மடிந்தனர்.

இதைத்தொடர்ந்து, தி.மு.க. இரண்டு அணிகளாகப் பிளவுபடத் தொடங்கியது. சட்டமன்றத்தில் தி.மு.க-வின் இரண்டு உறுப்பினர்களுள் ஒருவரான அ. செல்வ ராசன் வை.கோ.வை ஆதரித்தார். எனவே, பேரவைத்தலைவர் தி.மு.க. 1, 2 என இரு பிரிவுகளாக அறிவித்தார். நாடாளுமன்ற மாநிலங்களவையில் முரசொலி மாறனும் வைகோவும் உறுப்பினர்களாக இருந்தனர்.

1993 டிசம்பர் மாதம் 24-ம் நாள், காவிரிக் கரையில் திருச்சி மாநகரில் கூடிய தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள், ‘கருணாநிதி, அன்பழகன் ஆகியோரை கட்சிப் பொறுப்புகளில் இருந்து நீக்குவதாகவும் வை. கோபால்சாமியை, தி.மு.க. பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுப்பதாகவும்’ அறிவித்தனர். டிசம்பர் 29-ம் நாள், கருணாநிதி தஞ்சாவூரில் பொதுக் குழுவைக் கூட்டினார்.

இரண்டு அணிகளுக்கும் இடையே குழப்பங்கள் நீடித்து வந்த நிலையில், தேர்தல் ஆணையம் ஆவணங்களை ஆய்வு செய்தது. கருணாநிதி தலைமையிலான தி.மு.கழகத்துக்கே பெரும்பான்மை இருப்பதாக அறிவித்தது. இந்நிலையில் வைகோ தலைமையிலான அணியினர், ‘மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினர்.

1996 தேர்தல் வெற்றி

1996-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. தி.மு.க. 176 இடங்களைக் கைப்பற்றியது. கலைஞர் மு. கருணாநிதி நான்காவது முறையாக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதலமைச்சரானார்.

அமைச்சரவை

1. மு.கருணாநிதி (முதல்வர்)
2. க.அன்பழகன் (கல்வி)
3. ஆர்க்காடு நா. வீராசாமி (மக்கள் நல்வாழ்வு, மின்சாரம்)
4. நாஞ்சில் கி.மனோகரன் (வருவாய்)
5. கோ.சி.மணி (உள்ளாட்சித் துறை)
6. வீரபாண்டி ஆறுமுகம் (விவசாயம்)
7. துரைமுருகன் (பொதுப்பணித் துறை)
8. க.பொன்முடி (போக்குவரத்து)
9. மு.தமிழ்க்குடிமகன் (தமிழ் வளர்ச்சி)
10. கே.என்.நேரு (உணவு)
11. க.சுந்தரம் (பால் வளம்)
12. ஏ.ரகுமான்கான் (தொழிலாளர் நலம்)
13. ஆலடி அருணா (சட்டம்)
14. வே.தங்கபாண்டியன் (கூட்டுறவு)
15. சற்குணபாண்டியன்
16. ஜெனிபர் சந்திரன் (மீன்வளம்)
17. சுரேஷ் ராஜன் (சுற்றுலா)
18. கு.பிச்சாண்டி (வீட்டு வசதி)
19. என்.கே.கே.பெரியசாமி (சுற்றுச்சூழல்)
20. முல்லைவேந்தன் (செய்தி மற்றும் விளம்பரம்)
21. அந்தியூர் செல்வராஜ் (கதர்)
22. சமயநல்லூர் செல்வராஜ் (ஆதி திராவிடர் நலம்)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 16 இடங்களிலும் வெற்றி பெற்றது. தேவகவுடா தலைமையிலான மத்திய அமைச்சரவையிலும் இடம் பெற்றது. முரசொலி மாறன், தொழில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மற்றும் வணிகத்துறை அமைச்சரானார். மேலும், திண்டிவனம் வெங்கட்ராமன், தரை வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராகவும், என்.வி.என்.சோமு, பாதுகாப்புத் துறை இணை அமைச்சராகவும், டி.ஆர்.பாலு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சராகவும் பொறுப்பேற்றனர்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு உள்ளாகவே, காங்கிரஸ் கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டதால், தேவே கவுடா அரசு கவிழ்ந்தது. குஜ்ரால் அரசு பொறுப்பு ஏற்றது. தி.மு.க. அமைச்சர்கள் தொடர்ந்து நீடித்தனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக விசாரிப்பதற்காக நியமிக்கப் பட்ட ஜெயின் கமிஷன் தனது அறிக்கையைத் தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில், தி.மு.கழகத்தின் மீது குற்றம் சாட்டப்பட்டு உள்ளது; எனவே, தி.மு.க. அமைச்சர்களைப் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என, காங்கிரஸ் அறிவித்தது. ஆனால், குஜ்ரால் இதை ஒப்புக்கொள்ள வில்லை. எனவே, அவரது அரசுக்கு அளித்து வந்த ஆதரவை காங்கிரஸ் விலக்கிக்கொண்டது. குஜ்ரால் அரசு கவிழ்ந்தது.



தி.மு.க. தனது ஆதரவை வழங்கியபோது...

1998-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு 9 இடங்களே கிடைத்தன. தி.மு.க. ஐந்து இடங்களில் வெற்றி பெற்றது.

பாரதிய ஜனதாவுடன் கூட்டணி

வாஜ்பாய் தலைமையிலான கூட்டணிக்கு அளித்து வந்த ஆதரவை, 13 மாதங்களில் அண்ணா தி.மு.க. திரும்பப் பெற்றுக்கொண்டபோது, நாடாளு மன்றத்தில் வாஜ்பாய் அரசு மீதான நம்பிக்கைத் தீர்மானம் வந்தது. அந்த வேளையில், தி.மு.க. தனது ஆதரவை வாஜ்பாய் அரசுக்கு வழங்கியது. ஆயினும், ஒரேயொரு வாக்கு குறைவாகப் பெற்று, தீர்மானம் தோல்வி அடைந்தது. வாஜ்பாய் அரசு கவிழ்ந்தது.

1999-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு 26 இடங்கள் கிடைத்தன. வாஜ்பாய் மீண்டும் ஆட்சி அமைத்தார். தி.மு.க. சார்பில் முரசொலி மாறன், டி.ஆர்.பாலு, ஆ.ராசா ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். ஆனால், முரசொலி மாறன் உடல்நலக் குறைவால் நினைவு இழந்தார். சுமார் ஒன்றரை ஆண்டுகள் நினைவு இல்லாமல் அவர் மருத்துவமனையில் இருந்தபோதும், தி.மு.க. அவரை அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவிக்கவில்லை.

இலாகா இல்லாத அமைச்சராக அறிவிக்கச் செய்தனர். அமெரிக்காவில் சிகிச்சை மேற்கொள்வதற்கான செலவுகள் அனைத்தையும் இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. சிகிச்சை பலனளிக்காமல் மாறன் இயற்கை எய்தினார். அவரது உடல் அடக்கத்துக்கு பிரதமர் வாஜ்பாய் சென்னைக்கு வந்து நேரில் அஞ்சலி செலுத்தினார்.

அதற்கு மறுநாள், தி.மு.க. வாஜ்பாய் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக்கொண்டது. காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தது.

காங்கிரஸ் கூட்டணி

2004-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையில் வலுவான கூட்டணி அமைந்தது. காங்கிரஸ், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் இடம்பெற்ற அந்தக் கூட்டணி, தமிழகம், புதுவையின் நாற்பது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தொகுதிகளிலும் வெற்றி பெற்றது.

திமுக. 15 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த முறை தி.மு.க. சார்பில் டி.ஆர். பாலு, தயாநிதி மாறன், ஆ. ராசா ஆகியோர் கேபினெட் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். பழனி மாணிக்கம், சுப்புலட்சுமி ஜெகதீசன், எஸ்.ரகுபதி, ராதிகா செல்வி ஆகியோர் இணை அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

2001-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சாதிக் கட்சிகளை இணைத்து ஒரு கூட்டணியை அமைத்தது. பாட்டாளி மக்கள் கட்சி, புதிய தமிழகம், புதிய நீதிக்கட்சி, மக்கள் தமிழ் தேசம், காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை என பல கட்சிகள் இடம் பெற்றன.

தி.மு.க. 31 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று, ஆட்சியை இழந்தது. பேராசிரியர் அன்பழகன் சட்டப்பேரவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மைனாரிட்டி அரசு

2006-ம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில், தி.மு.க-வுக்கு 95 இடங்களே கிடைத்தன. தி.மு.க. தலைமையிலான கூட்டணி 163 தொகுதிகளைக் கைப்பற்றியது. முடிவுகள் வெளிவந்த இரண்டாம் நாளே தி.மு.க. அமைச்சரவை பொறுப்பேற்றது. கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்படவில்லை. கருணாநிதி ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தனிப் பெரும்பான்மை இல்லாத தி.மு.க. அரசை, ‘மைனாரிட்டி தி.மு.க. அரசு’ என்று அ.தி.மு.க. விமர்சித்தது.

அமைச்சரவை

1. மு.கருணாநிதி (முதல்வர்)

2. மு.க.ஸ்டாலின் (துணை முதல்வர்)

3. க.அன்பழகன் (நிதி)

4. ஆர்க்காடு நா. வீராசாமி (மின்சாரம்)

5. கோ.சி.மணி (கூட்டுறவு)

6. வீரபாண்டி ஆறுமுகம் (விவசாயம்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

7. க.பொன்முடி (உயர்கல்வி)

8. கே.என்.நேரு (போக்குவரத்து)

9. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் (மக்கள் நல்வாழ்வு)

10. பொங்கலூர் பழனிச்சாமி (ஊரகத் தொழில்கள், கால்நடை)

11. ஐ.பெரியசாமி (வருவாய், வீட்டு வசதி)

12. என்.சுரேஷ்ராஜன் (சுற்றுலா, பத்திரப் பதிவுத் துறை)

13. பரிதி இளம்வழுதி (செய்தி)

14. எ.வ.வேலு (உணவு)

15. சுப. தங்கவேலன் (குடிசைமாற்று வாரியம்)

16. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் (பிற்பட்டோர் நலத்துறை)

17. தா.மோ.அன்பரசன் (தொழிலாளர் நலம்)

18. கே.ஆர்.பெரியகருப்பன் (அறநிலையத் துறை)

19. தங்கம் தென்னரசு (பள்ளிக் கல்வி)

20. எஸ்.என்.எம்.உபயதுல்லா (வணிக வரிகள்)

21. டி.பி.எம்.மைதீன்கான் (சுற்றுச் சூழல்)

22. என்.செல்வராஜ் (காடுகள்)

23. வெள்ளக்கோவில் சாமிநாதன் (நெடுஞ் சாலைகள்)

24. பூங்கோதை (தகவல் தொழில் நுட்பம்)

25. கீதா ஜீவன் (சமூக நலம்)

26. தமிழரசி (ஆதி திராவிடர் நலம்)

27. கே.பி.பி.சாமி (மீன்வளம்)

28. மதிவாணன் (பால்வளம்)

29. கே.ராமச்சந்திரன் (கதர்).

30. செங்குட்டுவன் (கால்நடை பராமரிப்பு)

31. என்.கே.கே.பி.ராஜா (கைத்தறி)

சாதனைகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. ‘நீராருங் கடலுடுத்த’ எனும் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை இயற்றிய பாடலை, தமிழ்நாட்டு அரசின் மொழி வணக்கப் பாடலாக அரசின் நிகழ்ச்சிகளில் பாடும்படி ஆணை.

2. இந்திய விடுதலைத் திருநாளில், மாநில முதல்வர்கள் தேசியக்கொடி ஏற்ற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வெற்றி. 1969 ஆகஸ்ட் 15-ல், இந்தியாவிலேயே முதன்முறையாக தேசியக்கொடி ஏற்றிய முதல்வர் கருணாநிதி.

3. குடிசைமாற்று வாரியம் அமைத்தல், பிச்சைக்காரர் மறுவாழ்வு, கண்ணொளித் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்பு.

4. அரசு ஊழியர்கள் பணியின்போது இறந்தால், அவர்களது குடும்பத்தினருக்கு ரூ 10,000 உதவித் தொகை.

6. மன்னர் மானியம் ஒழிப்பு, வங்கிகள் நாட்டுடைமைக்கு ஆதரவு.

7. மாநிலத் திட்டக் கமிஷன் அமைப்பு

8. பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை

9. ஏழை மகளிர் திருமண உதவித் தொகை ரூ. 10,000

10. ஆதி திராவிடர்களுக்கு இலவச வீடுகள்

11. கலப்புத் திருமணம் செய்த தம்பதியருக்குத் தங்கப் பதக்கம், உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு சமூகநலத் திட்டங்களைச் செயல்படுத்தியது.

கருணாநிதி மீதான விமர்சனம்!

தொடக்கத்திலிருந்தே தி.மு.கழகத்தில், கருணாநிதி, தமது உறவினர்களை அரசுப் பொறுப்புகளில் அமர்த்தினார்.

தமது மூத்த மகன் மு.க.முத்துவை அடுத்த வாரிசாக்க முயன்றார். மருமகன் முரசொலி மாறனை தொடர்ந்து நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராக்கியதுடன், மத்திய அமைச்சரவையிலும் இடம் பெறச் செய்தார்.

மற்றொரு மகன் மு.க.ஸ்டாலினை இளைஞர் அணிச்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செயலாளராக நியமித்து வாரிசு அரசியலை ஊக்குவித்தார். தி.மு.க. சட்டதிட்டங்களின்படி, 35 வயதுக்கு மேற்பட்டோர் இளைஞர் அணியில் இடம்பெற முடியாது. ஆனால், ஸ்டாலின் 60 வயது வரையிலும் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பு வகித்தார். அதற்குப் பின்னர் வேறு எவரும் அந்தப் பொறுப்பில் நியமிக்கப்படவில்லை. இளைஞர் அணி, ஸ்டாலின் மேற்பார்வையிலேயே இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருந்த மு.க.ஸ்டாலினை சென்னை மாநகரத் தேர்தலிலும் போட்டியிட வைத்து மேயராக்கினார். ஸ்டாலின் இரண்டாவது முறையாகப் பொறுப்புக்கு வந்தபோது, தமிழகத்தில் அமைந்த அண்ணா தி.மு.க. அரசு, அவரை மேயர் பொறுப்பிலிருந்து நீக்கியது. அதை எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கில், சட்டமன்ற உறுப்பினராக உள்ள ஒருவர் மேயராகப் பொறுப்பு வகிக்க முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

எதிர்பாராதவிதமாக உடல்நலக் குறைவுற்ற முரசொலி மாறன் இயற்கை எய்தியதால், அதுவரையிலும் கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லாத தயாநிதி மாறனை, மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கினார்.

2006-ல் ஆட்சி அமைத்தபோது மூத்த தலைவரான அன்பழகனைப் புறக்கணித்து, ஸ்டாலினைத் துணை முதல்வராக்கினார். கட்சியின் பொருளாளர் பொறுப்பிலிருந்து ஆர்க்காடு வீராசாமியை நீக்கிவிட்டு, ஸ்டாலினைக் கட்சியின் பொருளாளர் ஆக்கினார். கருணாநிதியின் மற்றொரு மகன் மு.க. அழகிரி, 2006-ம் ஆண்டு வரையிலும் கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லை. 2001 தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு எதிராகச் செயல்பட்டதால் அவரைக் கட்சியிலிருந்து நீக்கினார்.

கட்சியின் சிவகங்கை மாவட்டச் செயலாளர் பசும்பொன் தா.கிருட்டிணன் கொலை வழக்கில், மு.க.அழகிரி கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார். அவர் மீதான வழக்கில் அரசுத் தரப்பு சாட்சிகள் பல்டியடித்தனர். அழகிரி விடுதலை பெற்றார். அந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசுத் தரப்பு மேல் முறையீடு செய்யவில்லை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பின்னர் அழகிரி மீண்டும் கட்சியில் சேர்ந்தார். அவரைத் தென்மாவட்ட அமைப்புச் செயலாளராகப் பொறுப்பில் நியமித்தார். கருணாநிதியின் மகள் கனிமொழி, தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.

கட்சியிலும் அவருக்குப் பதவி வழங்கப்பட்டது. ஸ்டாலினை முன்னிறுத்துகிற வகையில், திருநெல்வேலியில் தி.மு.க. இளைஞர் அணி மாநாடும், கனிமொழிக்கு ஆதரவாக கடலூரில் மகளிர் அணி மாநாடும் நடத்தப்பட்டது.

இதற்குப்பிறகு, தி.மு.கழகத்தில் கருணாநிதி குடும்பத்துக்கு உள்ளேயே கருணாநிதிக்குப் பிறகு, தி.மு.க. தலைமையைக் கைப்பற்றுவது யார்? என்கிற அளவுக்கு மோதல்கள் வெடித்தன.

தினகரன் கருத்துக் கணிப்பு மோதல்

2007-ம் ஆண்டு மே மாதம், ‘தினகரன்’ நாளிதழில் ஒரு கருத்துக்கணிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, தி.மு.கழகத்தில் கருணாநிதிக்கு அடுத்த வாரிசாக ஸ்டாலினுக்கு 32 விழுக்காடு ஆதரவு, தயாநிதி மாறனுக்கு 20 விழுக்காடு ஆதரவு, அழகிரிக்கு வெறும் 2 விழுக்காடு மட்டுமே ஆதரவு இருப்பதாகவும் செய்திகள் வெளி யிடப்பட்டன. தி.மு.க. தலைமைக் கான போட்டியில் தயாநிதி மாறனும் செல்வாக்குப் பெற்று இருப்பதாகத் தெரிவித்தனர்.



முரசொலி மாறன்

இதன் விளைவாக, மதுரையில் தினகரன் நாளிதழ் அலுவலகம் தாக்கப்பட்டது. தீவைத்து எரிக்கப்பட்டது. இந்த வன்முறைகளில் கோபி, வினோத், முத்துராமலிங்கம் ஆகிய மூன்று இளைஞர்கள் படுகொலை செய்யப் பட்டனர். ‘முதல் அமைச்சர் கருணாநிதியின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மகன் அழகிரி ஏவிய குண்டர்களால், தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது' என சன் தொலைக்காட்சி செய்தி ஒளி பரப்பியதைத் தொடர்ந்து பிரச்னைகள் முற்றின.

கலைஞர் தொலைக்காட்சி

மத்திய அமைச்சரவையிலிருந்து தயாநிதி மாறனைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக கருணாநிதி அறிவித்தார். தயாநிதி மாறன், அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார். கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாள், மகள் கனிமொழி ஆகியோரைப் பங்குதாரர்களாகக் கொண்டு கலைஞர் தொலைக்காட்சி என்ற நிறுவனம் தொடங்கப்பட்டது. அடுத்தடுத்து முரசு, சிரிப்பொலி, கலைஞர் செய்திகள், இசையருவி, சித்திரம் ஆகிய தொலைக் காட்சிகள் தொடங்கப்பட்டன.

பின்னர், நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக, கருணாநிதியுடன் சமரசம் ஏற்பட்டதால் மத்திய சென்னைத் தொகுதியில் தி.மு.க. சார்பில் தயாநிதி மாறன் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். மதுரை தொகுதியில் மு.க.அழகிரி வேட்பாளராக ஆக்கப்பட்டார். நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. 18 இடங்களில் வெற்றி பெற்றது.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில், ராஜா கைதானபோது

இம்முறை மத்திய அரசில் கருணாநிதியின் மகன் மு.க.அழகிரி (உரத் துறை), பேரன் தயாநிதி மாறன் (ஜவுளித் துறை), ஆ.ராசா (தகவல் தொடர்பு) ஆகியோர் கேபினெட் அமைச்சர்களாக ஆக்கப் பட்டனர். மேலும், பழனிமாணிக்கம், ஜெகத்ரட்சகன், காந்தி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செல்வன், நெப்போலியன் ஆகியோர் இணை அமைச்சர்களாகப் பொறுப்பு ஏற்றனர். ஆங்கிலம் பேசத் தெரியாத அழகிரி, மத்திய அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்வதையும், நாடாளுமன்றத்தில் கேள்விகளுக்குப் பதில் சொல்வதையும் தவிர்த்தார்.

ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கு

தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு 2 ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசையை ஒதுக்கீடு செய்ததில், 1 லட்சத்து 76 ஆயிரம் கோடி ஊழல் நடைபெற்றதாக மத்திய அரசின் கணக்குத் தணிக்கைத்துறை தெரிவித்தது. இவ்வழக்கு விசாரணையை உச்சநீதிமன்றம் தனது மேற்பார்வையில் கொண்டு வந்தது. தி.மு.க. அமைச்சர் ஆ. ராசா, மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார். அவரும் கருணாநிதியின் மகள் கனிமொழியும் கைது செய்யப்பட்டு, தில்லி திகார் சிறையில் அடைக்கப் பட்டனர்.

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ஆதாயம் பெற்ற ஒரு நிறுவனத்திடம் இருந்து, 215 கோடி பெற்றதாக கலைஞர் தொலைக் காட்சி மீது குற்றம் சாட்டப்பட்டது. சொத்துகள் முடக்கப்பட்டன. அந்தத் தொகையைக் கடனாகப் பெற்றதாகவும் திருப்பிச் செலுத்தியதாகவும் கலைஞர் தொலைக்காட்சி அறிவித்தது. ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

கடந்தமுறை தொலைத் தொடர்புத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த தயாநிதி மாறன், ஏர்செல் தொலைத் தொடர்பு நிறுவனத்தை, மலேசிய நிறுவனத்துக்கு விற்கும்படிச் செய்தார் என்றும், தமது நிறுவனத்துக்கு லைசென்ஸ் வழங்காமல் ஒன்றரை ஆண்டுகள் இழுத்தடித்து, ஒரே மாதத்தில் மலேசிய நிறுவனத்துக்கு அனுமதி கொடுத்தார் என்றும் சிவசங்கரன் கொடுத்த புகாரை அடுத்து, தயாநிதி மாறன் மத்திய அமைச்சரவையில் இருந்து விலக்கப் பட்டார்.

2009-ம் ஆண்டு மே மாதம், ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் தீவிரமாக நடந்தன. தமிழர் பகுதிகளில் சிங்கள ராணுவம் குண்டு மழை பொழிந்தது. தமிழகம் கொதித்தெழுந்தது. தாக்குலைக் கண்டித்து வரிசையாக இளைஞர்கள் பலர் தீக்குளித்து மடிந்தனர். அவர்களுக்கு இரங்கல் எதுவும் தெரிவிக்காத கருணாநிதி, தமக்கு முதுகு வலி இருப்பதாகக் கூறி போரூர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ராமச்சந்திரா மருத்துவமனையில் ஒரு மாதம் தங்கி சிகிச்சை பெற்றார்.

பின்னர், ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தக்கோரி சென்னைக் கடற்கரையில் சில மணி நேரம் உண்ணா நிலை அறப்போர் நடத்தினார்.

இலங்கை அரசு போரை நிறுத்த ஒப்புக்கொண்டதாகக் கூறி, உண்ணாநிலை அறப்போரை விலக்கிக்கொண்டார். ஆயினும் தாக்குதல்கள் நிற்கவில்லை. லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர். 1,37,000 பேர் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா. மன்றம் அமைத்த மூவர் குழு அறிக்கை தெரிவித்தது.

ஈழத் தமிழர்கள் படுகொலையைத் தடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு தி.மு.க. உள்ளானது.

2011 சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. 23 இடங்களை மட்டுமே கைப்பற்றி சட்ட மன்றத்தில் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது. முதன்மை எதிர்க் கட்சி என்ற தகுதியையும் பறிகொடுத்தது.

தி.மு.க. வரலாறு குறித்து படிக்க வேண்டிய நூல்கள்

1. தி.மு.க. வரலாறு - டி.எம். பார்த்தசாரதி (1961)
2. பிட்டி தியாகராயர் முதல் கலைஞர் வரை - மாலைமணி பி.எஸ்.இளங்கோ (1976)
3. திராவிட இயக்க வரலாறு - முரசொலி மாறன் (1991)
4. திராவிட இயக்க வரலாறு - கே.ஜி.ராதாமணாளன்
5. தி.மு.க. - க.திருநாவுக்கரசு எழுதிய நூல்கள்
6. அதிகாரபூர்வ நாளிதழ்: முரசொலி

தலைமை அலுவலகம்:

திராவிட முன்னேற்றக் கழகம்,

‘அண்ணா அறிவாலயம்’

அண்ணா சாலை,

தேனாம்பேட்டை, சென்னை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்பது யார்? என்ற பிரச்னை எழுந்தது. நாவலர் நெடுஞ்செழியனுக்கும், மு.கருணாநிதிக்கும் இடையே போட்டி ஏற்பட்டது. அப்போது, எம்.ஜி.ஆர். கருணாநிதிக்கு ஆதரவு அளித்தார். கருணாநிதி முதலமைச்சரானார். பின்னர், தி.மு.க-வின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். எம்.ஜி.ஆர். பொருளாளர் ஆனார்.

1972-ம் ஆண்டு அக்டோபர் மாதம், தி.மு.க-விலிருந்து எம்.ஜி.ஆர். நீக்கப்பட்டார். தமிழகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பான சூழ்நிலை நிலவியது. ஆங்காங்கே பேருந்துகள், லாரிகள் உள்ளிட்ட வண்டிகளை நிறுத்தி, அதில் எம்.ஜி.ஆரை ஆதரித்து எழுதினார்கள். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் லட்சக்கணக்கில் அணி திரண்டார்கள். தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டார்கள். கை வண்டி இழுப்பவர்கள், கடலை விற்பவர்கள் என அடித்தட்டு மக்கள் அனைவரும் அவரை ஆதரித்தனர்.

அக்டோபர் 17-ம் நாள், ‘அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். தொண்டர்களாகவே கருப்பு சிவப்பு வண்ணத்தில் தாமரைச் சின்னத்தைப் பதித்து, கொடியை உருவாக்கினர். சில நாட்களில் கருப்பு சிவப்பு வண்ணத்திலேயே அமைந்த கட்சியின் கொடியின் நடுவில் வெள்ளை நிறத்தில் அண்ணாவின் படத்தை இடம்பெறச் செய்தார் எம்.ஜி.ஆர். கட்சிக்காரர்கள் கருப்பு, வெள்ளை, சிவப்பு வண்ணத்தில் பார்டர் அமைத்த வேட்டிகளை அணிந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எம்.ஜி.ராமச்சந்திரன்

உலகத்திலேயே ‘அண்ணா’ என்ற ஒரு மனிதரின் பெயரில் கட்சி தொடங்கியவர் எம்.ஜி.ஆர்.தான். ‘கம்யூனிஸம், கேபிடலிசம்’ என்பது போல, தன் கட்சியின் கொள்கைகளை ‘அண்ணாயிசம்’ என அறிவித்தார்.

திண்டுக்கல் இடைத் தேர்தல்

1971-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் எம்.ராஜாங்கம் திடீரென இயற்கை எய்தியதால், 1973-ம் ஆண்டு, மே 21-ம் நாள் திண்டுக்கல் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அண்ணா தி.மு.க. தேர்தலில் போட்டியிட்டது. கட்சியின் தேர்தல் சின்னம் வரைவதற்கு மிகவும் எளிதாக இருக்கின்ற வகையில், இரட்டை இலை சின்னத்தை எம்.ஜி.ஆர். தேர்ந்தெடுத்தார். இரவு பகல் பாராது தொகுதி முழுவதும் சுற்றி வந்து பிரச்சாரம் செய்தார். அவரது கூட்டங்களில் பெருமளவில் மக்கள் திரண்டார்கள்.

கட்சியின் வேட்பாளர் மாயத்தேவர், 2,60,824 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் வேட்பாளர் சித்தன், 1,19,032 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடம் பெற்றார். அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க. வேட்பாளர் பொன்.முத்துராமலிங்கம் 93,496 வாக்குகள் மட்டுமே பெற்று மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். இந்திரா காங்கிரஸுக்கு 11 ஆயிரத்து 423 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

அதேபோல கோவை நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றது; 1974-ம் ஆண்டு கோவை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் அண்ணா தி.மு.க. வேட்பாளர் செ. அரங்க நாயகம், காங்கிரஸ் வேட்பாளரைவிட 517 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் மூன்றாம் இடம் பெற்றார்.

புதுச்சேரி மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. டி.ராமசாமி, முதல் அமைச்சர் ஆனார். இதைத் தொடர்ந்து தமிழகத்தில் அ.தி.மு.கழகத்தின் செல்வாக்கு பெருகத் தொடங்கியது. அடித்தட்டு மக்கள் கட்சியில் இணைந்தனர்.

எம்.ஜி.ஆர். சபதம்

சட்டமன்றத்தில் எம்.ஜி.ஆர். பேசும் போது, பார்வையாளர் மாடத்தில் இருந்து தி.மு.க.வினர் செருப்பை வீசினர். எனவே, ‘சட்டமன்றத்தில் ஜனநாயக மாண்பு செத்துப்போய்விட்டது’ என்று சொன்ன எம்.ஜி.ஆர். இனிமேல் நான் இந்தச் சட்ட மன்றத்துக்கு உள்ளே எதிர்க் கட்சித் தலைவராக வரமாட்டேன்’ என உறுதி பூண்டார். அதற்குப்பிறகு அவர் 1977-ம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று முதலமைச்சராகத்தான் சட்டமன்றத்துக்கு வந்தார்.

1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட அ.தி.மு.க, 20 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 15 இடங்களில் வெற்றி பெற்றன.

அ.தி.மு.க. ஆட்சி

அதே ஆண்டு ஜூன் மாதம் 12 மற்றும் 14 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. காங்கிரஸ் இடையே தொகுதிப் பங்கீடு ஏற்படவில்லை; கூட்டணி அமைய வில்லை. தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாகப் போட்டி இட்டன. அ.தி.மு.க. அணியில் பொது உடைமை இயக்கங்களும் இடம் பெற்றன. 200 இடங்களில் போட்டியிட்ட அ.தி.மு.க, 131 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. 30.48 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அருப்புக் கோட்டை சட்டமன்றத் தொகுதியில், 29,378 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றிபெற்ற எம்.ஜி.ஆர். முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து முதல்வராக எம்.ஜி.ஆர். பொறுப்பேற்ற போது லட்சக்கணக்கான மக்கள் திரண்டனர்.

30.06.1977 அன்று தமிழகத்தின் முதல்வராக எம்.ஜி.ஆர். பதவியேற்றார். அப்போது அவருக்கு வயது 60.

எம்**.**ஜி**.**ஆர்-ரின் அமைச்சரவை **(1977-1980)**

1. எம்.ஜி.ஆர். (முதல்வர்)

2. நாஞ்சில் கி.மனோகரன் (நிதி)

3. பண்ருட்டி ராமச்சந்திரன் (பொதுப்பணிகள்)

4. கே.நாராயணசாமி (சட்டம்)

5. ஜி.ஆர்.எட்மண்ட் (உணவு, கூட்டுறவு)

6. ஆர்.எம்.வீரப்பன் (செய்தி, விளம்பரம்)

7. எஸ்.அரங்கநாயகம் (கல்வி)

8. கா.காளிமுத்து (உள்ளாட்சி)

9. மு.ராகவானந்தம் (தொழிலாளர் நலன்) 10. டி.சௌந்திர பாண்டியன் (ஆதி திராவிடர் நலன்)

11. சி.பொன்னையன் (போக்குவரத்து)

12. பி.டி.சரஸ்வதி (சமூக நலன்)

13. வி. குழந்தைவேலு (வேளாண்மை)

14. கே.ராஜா முகமது (கைத்தறி).

மத்திய அமைச்சரவையில் அ**.**தி**.**மு**.**க**.**

1979-ம் ஆண்டு மத்தியில் ஜனதா கட்சியின் ஆட்சி கவிழ்ந்து, சரண்சிங் பிரதமரானார். ஆனால் 25 நாட்களுக்குள் அந்த ஆட்சியும் கவிழ்ந்தது. கவிழ்வதற்கு முதல் நாள் நாடாளுமன்றத்தில் சரண்சிங் ஆட்சியை ஆதரிக்கப்போவதாக எம்.ஜி.ஆர். அறிவித்தார். அந்தக் கட்சியைச் சேர்ந்த சத்தியவாணிமுத்து, பாலாபழனூர் இருவரும் சரண்சிங் அமைச்சரவையில் கேபினெட் அமைச்சர்களாகப் பொறுப்பு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஏற்றனர்.

மறுநாளே ஆட்சி கவிழ்ந்ததால் ஒரே நாளில் அவர்கள் பதவியிழந்தனர். இருப்பினும், நாடாளுமன்றத் தேர்தல் வரையிலும் இடைக்காலத் தலைமை அமைச்சராகப் பொறுப்பு வகிக்கும்படி சரண்சிங்கிடம் குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார். அந்த இடைக்கால அரசில் அ.தி.மு.க-வினரும் அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தனர். திராவிட இயக்கத்திலிருந்து முதன்முதலாக மத்திய அமைச்சர் பொறுப்பு வகித்தவர்கள் என்ற பெருமையைப் பெற்றனர். நான்கு மாதங்களில் அமைச்சர் பொறுப்பை விட்டு விலகினர்.

அ.தி.மு.க. ஆட்சி கலைப்பு

1980-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, அ.தி.மு.க., ஜனதா கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. ஆனால் அந்தத் தேர்தலில் அக்கட்சி கோபிசெட்டிப்பாளையம், சிவகாசி ஆகிய இரு தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற முடிந்தது. அனைத்திந்திய அளவில் தனிப் பெரும்பான்மை பெற்று தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற இந்திரா காந்தி அம்மையார், எதிர்க்கட்சிகளின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த 9 மாநில அரசுகளைக் கலைத்துவிட்டு, சட்டப்பேரவைத் தேர்தலை அறிவித்தார். தமிழ்நாட்டில் அ.தி.மு.க. அரசும் கலைக்கப் பட்டது.

1980 சாதனை வெற்றி

1980-ம் ஆண்டு தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதும் எம்.ஜி.ஆர். சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டார். பட்டி, தொட்டிகளுக்கெல்லாம் சென்று மக்களைச் சந்தித்தார். அதற்கு முன்பு, இரவில் மட்டுமே மஞ்சள் விளக்கு வெளிச்சத்தில் பொதுக்கூட்டங்களில் பேசிவந்த எம்.ஜி.ஆர். இந்தத் தேர்தலின்போது காலையிலிருந்தே தன் பிரச்சாரத்தைத் தொடங்கி, இரவு பகல் பாராது பொதுக் கூட்டங்களில் பேசினார்.

‘நான் செய்த குற்றம் என்ன? எதற்காக என்னுடைய ஆட்சியைக் கலைத்தார்கள்? நான் வேண்டுமா? கருணாநிதி வேண்டுமா? என்று மக்களைப் பார்த்துக் கேள்வி கேட்டார். தேர்தல் முடிவுகளின்போது, யாருமே எதிர்பாராதவகையில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அ.தி.மு.க. 179 இடங்களில் போட்டியிட்டு, 129 தொகுதிகளில் மகத்தான வெற்றி பெற்றது. 38.94 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. 09.06.1980 அன்று இரண்டாவது முறையாக எம்.ஜி.ஆர். முதல்வராகப் பதவியேற்றார்.

1. எம்.ஜி.ஆர். (முதல்வர்)
2. இரா.நெடுஞ்செழியன் (நிதி)
3. பண்ருட்டி ராமச்சந்திரன் (மின்சாரம்)
4. கே.ஏ.கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில்)
5. எஸ்.டி.சோமசுந்தரம் (வருவாய்த்துறை)
6. ஆர்.எம்.வீரப்பன் (செய்தி, அறநிலையம்)
7. எஸ்.அரங்கநாயகம் (கல்வி)
8. கா.காளிமுத்து (வேளாண்மை)
9. சி.பொன்னையன் (சட்டம், கூட்டுறவு)
10. பா.குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை)
11. ராகவானந்தம் (தொழிலாளர் நலன்)
12. ஹெச்.வி.ஹண்டே (சுகாதாரம்)
13. கே.ராஜா முகமது (கைத்தறி)
14. எஸ்.முத்துச்சாமி (போக்குவரத்து)
15. எஸ்.திருநாவுக்கரசு (தொழில்)
16. எஸ்.என்.ராஜேந்திரன் (கைத்தறி)
17. மா.விஜயசாரதி (ஆதிதிராவிடர் நலன்)
18. கோமதி சீனிவாசன் (சமூகநலன்)
19. எஸ்.ஆர்.ராதா
20. எம்.ஆர்.கோவேந்தன் (பிற்பட்டோர் நலன்)
21. பி.விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்)
22. ஆர்.சௌந்திரராஜன் (சத்துணவு)
23. ஒய்.எஸ்.எம்.யூசுப் (பாசனம்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

24. ஆர்.அருணாசலம் (ஊரகத் தொழில்)

25. கே.கலைமணி (மீன்வளம்)

26. டி.வீராசாமி (உணவு)

27. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் (கூட்டுறவு, பொதுப் பணிகள்).

பெரியகுளம் நாடாளுமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ்.டி.கே. ஜக்கையன் வெற்றி பெற்றார்.

ஜெயலலிதா அறிமுகம்

முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த எம்.ஜி.ஆர். முன்புபோல் சுற்றுப்பயணம் செய்து பொதுக்கூட்டங்களில் பேச முடியாத நிலை ஏற்பட்டது. கட்சிப் பிரச்சாரத்தை வலுவாக்கத் திட்டமிட்ட அவர், ஜெயலலிதாவை அரசியலுக்கு அழைத்து வந்தார்.

கடலூரில் நடைபெற்ற மாநாட்டில், அவர் கட்சியில் இணைந்தார். அண்ணா தி.மு.க-வின் கொள்கை பரப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார். தமிழக அரசின் சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினராகவும் ஜெயலலிதா நியமிக்கப்பட்டார்.

ஜெயலலிதா தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார். தொண்டர்கள் உற்சாகம் அடைந்தனர்.

1984 தேர்தல் வெற்றி

1984-ம் ஆண்டு எம்.ஜி.ஆருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சைக்காக அமெரிக்காவின் நியூயார்க் நகரில் புருக்ளின் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அதே வேளையில் டெல்லியில் இந்திராகாந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்டார். அவருக்குப் பின்னர் இந்தியத் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்ற ராஜீவ் காந்தி, நாடாளு மன்றத் தேர்தலுக்கு ஓராண்டுகாலம் இருந்தபோதிலும் ஆட்சியைக் கலைத்து விட்டு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினார்.

தமிழகத்தில், அ.தி.மு.க. அமைச்சரவையும் ஓராண்டுக்கு முன்னதாகவே பதவியிலிருந்து விலகி, நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலையும் சந்திப்பதென முடிவு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செய்தது.

இந்தத் தேர்தலின்போது, ‘தாயில்லாப் பிள்ளைக்கு ஒரு ஓட்டு வாயில்லாப் பிள்ளைக்கு ஒரு ஓட்டு’ என்று அண்ணா தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியினர் பிரச்சாரம் செய்தனர். இந்தியா முழுமையும் வீசிய இந்திரா அனுதாப அலையும், அத்துடன் எம்.ஜி.ஆரின் உடல்நலக்குறைவு ஏற்படுத்திய அனுதாப அலையும் சேர்ந்து கொண்டதால் அக்கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது.

அ.தி.மு.க. 155 இடங்களில் போட்டியிட்டு, 132 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 37.03 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

ஜெயலலிதா

அமெரிக்காவில் இருந்து எம்.ஜி.ஆர். நாடு திரும்பினார். ஆனால், அவரால் இயல்பாகப் பேச முடியவில்லை. எனவே, அவர் பதவியேற்பு உறுதிமொழியை எப்படி வாசிப்பார்? வாசிக்காவிட்டால், அவரது பதவியேற்பு செல்லுமா? என்று எதிர்க் கட்சியினர் கேள்வி எழுப்பினார்கள். ஆனால், ஆளுநர் எம்.ஜி.ஆரை. ஆட்சி அமைக்க அழைத்தார்.

10.02.1985 அன்று, மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றார். தமிழக அரசியலில் தொடர்ந்து மூன்று முறை முதல்வராகப் பொறுப்பேற்றவர் என்ற சாதனையை எம்.ஜி.ஆர். படைத்தார்.

எம்.ஜி.ஆரின் மூன்றாவது அமைச்சரவை

1. எம்.ஜி.ஆர். (முதலமைச்சர்)

2. இரா.நெடுஞ்செழியன் (நிதி)

3. பண்ருட்டி ராமச்சந்திரன் (மின்சாரம்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

4. கே.ஏ.கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலன்)

5. ஆர்.எம்.வீரப்பன் (செய்தி, அறநிலையம்)

6. செ.அரங்கநாயகம் (கல்வி)

7. கா.காளிமுத்து (வேளாண்மை)

8. சி.பொன்னையன் (சட்டம்)

9. ஹெச்.வி. ஹண்டே (சுகாதாரம்)

10. எஸ்.முத்துச்சாமி (போக்குவரத்து)

11. எஸ்.திருநாவுக்கரசு (உணவு)

12. ஆர்.சௌந்தரராஜன் (வீட்டு வசதி)

13. எம்.ஆர்.கோவேந்தன் (பிற்பட்டோர் நலன்)

14. கோமதி சீனிவாசன் (சமூக நலம்)

15. விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்)

16. ஒய்.எஸ்.எம்.யூசுப் (பொதுப் பணிகள்)

17. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் (கூட்டுறவு)

18. க.ராசாராம் (தொழில், வேளாண்மை)

19. வி.வி. சுவாமிநாதன் (கைத்தறி, சுற்றுலா, மதுவிலக்கு, மின்சாரம்)

20. டி.வீராசாமி (வணிக வரிகள்)

21. என்.நல்லுசாமி (வீட்டு வசதி)

22. ஆனூர் பி.ஜெகதீசன் (ஊரகத் தொழில்கள்)

23. டி.ராமசாமி (மறுவாழ்வு, வேலைவாய்ப்பு)

24. ஏ.அருணாசலம் (ஆதிதிராவிடர் நலன்)

25. ப.உ.சண்முகம் (உள்ளாட்சி, மக்கள் நல்வாழ்வு).

வழக்கமாக வெளிப்படையாக, பொது இடங்களில் நடைபெற்று வந்த முதலமைச்சர் பதவியேற்பு விழா, இம்முறை கோட்டையில் சட்டப்பேரவைத் தலைவரின் அலுவலகத்திலேயே நடந்தது. அந்த அறைக்கு உள்ளே சுமார் 20 பேர்களே அனுமதிக்கப்பட்டனர். எம்.ஜி.ஆர்., பதவியேற்பு உறுதிமொழியை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாசித்ததாக அறிவிக்கப்பட்டது. ஆனால், பேசவே முடியாத அவர், பதவியேற்பு உறுதிமொழியை வாசிக்கவில்லை என்று எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டினர்.

எம்.ஜி.ஆர். மறைவு

அதற்குப் பின்னர் எம்.ஜி.ஆர் பொது நிகழ்ச்சிகளில் பேசவில்லை. கட்சிக்கு உள்ளே பிரிவுகள் தோன்றின. அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் தலைமையில் ஓர் அணியாகவும், ஜெயலலிதா தலைமையில் மற்றொரு அணியாகவும் செயல்பட்டு வந்தனர்.

திடீரென ஒரே நாளில், தமது அமைச்சரவையிலிருந்து ஆர்.எம்.வீரப்பன் உள்ளிட்ட பத்து அமைச்சர்களை எம்.ஜி.ஆர். நீக்கினார். தமிழக அரசியலில் அதிர்ச்சி அலைகள் பரவின. சிறிது காலம் கழித்து, அவர்களை மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டார்.

உயர்கல்வி வளர்ச்சிக்கு எம்.ஜி.ஆர். அமைத்த அடித்தளம்.
எம்.ஜி.ஆர். அரசின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

1. சென்னை நகரின் தெருப் பெயர்ப் பலகைகளிலிருந்து சாதிப் பெயர்களை அகற்றினார்.

2. கல்வி நிலையங்கள், வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 31 விழுக்காட்டில் இருந்து, 50 விழுக்காடாக உயர்த்தினார்.

3. சத்துணவுத் திட்டத்தை விரிவுபடுத்தினார்.

4. ஏழு பல்கலைக்கழகங்களை உருவாக்கினார். பொறியியல் கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் தொடங்கும் அதிகாரம், மாநில அரசுகளிடமிருந்து பறிபோகும் நிலையில், மராட்டியம், கர்நாடக மாநில அரசுகளைப் பின்பற்றி, தமிழ்நாட்டில் சுயநிதிப் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்குமாறு ஊக்குவித்தவர் எம்.ஜி.ஆர். மேலும், அண்ணா தி.மு.க-வினருக்கு வாய்ப்புகள் அளித்தார்.

   இன்று ஏராளமான பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, கல்வித் துறையில் தமிழகம் முன்னேறி, பொருளாதாரத்திலும் முன்னேறிய மாநிலமாகத் திகழ்கிறது.

5. பள்ளி இறுதி ஆண்டுப் படிப்புக்குப் பின், 11 மற்றும் 12-ம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வகுப்புகளை கல்லூரிகளில்தான் தொடங்க வேண்டும் என்று பெரும்பான்மையான கல்வியாளர்கள் அறிவுறுத்தியபோது, கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருதி பள்ளிகளில் தான் தொடர வேண்டும் என்று எம்.ஜி.ஆர். உத்தரவிட்டார். அதனால், இன்று ஆண்டுக்கு 8 லட்சம் மாணவர்கள் தேர்வெழுதி, 85 விழுக்காட்டினர் வெற்றி பெறுகிறார்கள்.

6. தமிழகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில், கிராம முன்சீப், கர்ணம் ஆகிய பதவிகளில் இருந்தவர்கள், ஜமீன்தார் மனப்பான்மையோடு ஆதிக்கம் செலுத்தி வந்தனர். எனவே, அந்தப் பதவிகளை ஒரே நாளில் ரத்து செய்தார் எம்.ஜி.ஆர். ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் நடத்தினார். சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

7. தந்தை பெரியார் தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தங்களைச் செய்தார். எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தங்களைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டது. 247 எழுத்துகள், 232ஆகக் குறைந்தன. மேலும் பல எழுத்துகளை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தபோதிலும், அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

8. பாரதி நூற்றாண்டு விழா தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை அ.தி.மு.க. அரசு சிறப்பாகக் கொண்டாடியது. மாவட்டத் தலைநகரங்களில், மையமான இடங்களில் பெரியார் சுடரை நிறுவியது. பெரியாருக்குப் பல சிறப்புகள் செய்யப்பட்டன.

எம்.ஜி.ஆர். மறைவு

1987-ம் ஆண்டு டிசம்பர் 24-ல் எம்.ஜி.ஆர் இயற்கை எய்தினார். அவருக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஆர்.எம்.வீரப்பனும், ஜெயலலிதாவும் திட்டங்களை வகுத்தனர். ஆர்.எம்.வீரப்பன் தலைமையிலான அணிக்கு 108 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தது. அவர்கள், எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகி அம்மையாரைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். 27 சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெயலலிதாவை ஆதரித்தனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜானகி முதல்வர்

ஆளுநராக இருந்த எஸ்.எல்.குரானா, ஜானகி எம்.ஜி.ஆருக்கு 07.01.1988 அன்று முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்து, சட்டப்பேரவையில் பெரும்பான்மையை உறுதிசெய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

ஜானகி அம்மையாருடன் ஏழு அமைச்சர்களும் பொறுப்பேற்றனர்.

1. ஜானகி அம்மையார் (முதல்வர்)
2. ஆர்.எம்.வீரப்பன் (உள்ளாட்சி)
3. ப.உ.சண்முகம் (மக்கள் நல்வாழ்வு)
4. சி.பொன்னையன் (கல்வி, சட்டம்)
5. சு.முத்துசாமி (போக்குவரத்து)
6. வி.வி.சுவாமிநாதன் (மின்சாரம், சுற்றுலா)
7. டி.ராமசாமி (வணிக வரிகள்)
8. எ.அருணாசலம் (ஆதிதிராவிடர் நலன்).

அதேவேளையில், அண்ணா தி.மு.க. தலைமைக் கழகக் கட்டடத்துக்கு அருகில் அமைந்திருக்கின்ற ஹேமமாலினி திருமண மண்டபத்தில் கூடியவர்கள், அ.தி.மு.க. கட்சியின் பொதுச்செயலாளராக ஜெயலலிதாவைத் தேர்ந்தெடுத்ததாக அறிவித்தனர். எம்.ஜி.ஆரின் அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்த எஸ்.திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் அந்த 27 சட்டமன்ற உறுப்பினர்களையும் வட மாநிலங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

ஜானகி அம்மையார் நம்பிக்கை வாக்குக் கோருவதற்காக சட்டப்பேரவைக் கூட்டம் கூடியபோது, பேரவைக்குள் அதுவரையிலும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடந்திராத வன்முறை வெடித்தது. உறுப்பினர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். பலருக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது. உறுப்பினர்கள் அல்லாத குண்டர்களும் சட்டசபைக்கு உள்ளே நுழைந்து உறுப்பினர்களைத் தாக்கினர். பல உறுப்பினர்கள் வெளியேறிவிட்டனர், மேலும் பலர் வெளியேற்றப்பட்டனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜானகி ராமச்சந்திரன்

அதற்குப்பின்னர், ஜானகி எம்.ஜி.ஆரின் நம்பிக்கைத் தீர்மானம் வெற்றி பெற்றதாக பேரவைத் தலைவர் பி.ஹெச்.பாண்டியன் அறிவித்தார். ஆனால், சட்டப்பேரவையில் நடந்த வன்முறையைக் காரணம் காட்டி மத்திய அரசு, ஜானகி அரசை பதவி நீக்கம் செய்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை நடைமுறைப்படுத்தியது.

ஓராண்டு காலம் நடைபெற்ற குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பின்னர், 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் சட்டப்பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது. அ.தி.மு.க. ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையில் ஓர் அணியாகவும், ஜெயலலிதா தலைமையில் மற்றொரு அணியாகவும் போட்டியிட்டது. சிவாஜி கணேசன் தலைமையிலான ‘தமிழக முன்னேற்ற முன்னணி’ என்ற கட்சி ஜானகி எம்.ஜி.ஆருடன் கூட்டணி அமைத்துக்கொண்டது. அந்தத் தேர்தலில் இரட்டை இலை சின்னம் முடக்கப்பட்டது. ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையிலான அணிக்கு ‘இரட்டைப் புறா’ சின்னமும், ஜெயலலிதா தலைமையிலான அணிக்கு ‘சேவல்’ சின்னமும் வழங்கப்பட்டது.

அ.தி.மு.க. பிளவினால் வாக்குகள் சிதறி, அந்தத் தேர்தலில் தி.மு.க. தனிப் பெரும்பான்மை பெற்று, ஆட்சியைப் பிடித்தது. ஜானகி எம்.ஜி.ஆர் தலைமையிலான அணியில் பி.ஹெச். பாண்டியன் மட்டும் வெற்றி பெற்றார். ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அணி 27 இடங்களில் வெற்றி பெற்றது. ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவரானார். தேர்தல் தோல்வியால் ஜானகி எம்.ஜி.ஆர். அரசியலை விட்டு விலகுவதாக அறிவித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரு அணிகளும் ஒன்றாக இணைந்தன. ஜெயலலிதா கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இரட்டை இலை சின்னம் மீண்டும் கிடைத்தது. அதைத் தொடர்ந்து நடைபெற்ற மதுரை (கிழக்கு), மருங்காபுரி சட்டப்பேரவைத் தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. இவ்வெற்றி கட்சித் தொண்டர்களுக்குப் புதிய தெம்பை அளித்தது.

இருப்பினும் சில மாதங்களில் ஜெயலலிதா சட்டப்பேரவை உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகுவதாகக் கூறி எழுதிய கடிதம் தமக்கு வந்ததாகக் கூறி, அதை ஏற்றுக்கொள்வதாக சட்டப்பேரவைத் தலைவர் அறிவித்தார்.

போலீஸார் அத்துமீறி தன்னுடைய வீட்டுக்குள்ளே புகுந்து அக்கடிதத்தைக் கைப்பற்றிக் கொண்டு போனதாக ஜெயலலிதா கண்டித்தார். இதனால் அ.தி.மு.க. தொண்டர்கள் கொதித்தார்கள்.

1989-90-ம் ஆண்டுக்கான தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்வதற்காக சட்டமன்றம் கூடியது. நிதி அமைச்சராகவும் இருந்த முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்வதற்காக எழுந்தபோது, எதிர்க் கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா எழுந்து ‘ஒரு கிரிமினல் வரவு செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்யக்கூடாது’ என்று கூறி எதிர்த்தார். அதைத் தொடர்ந்து பேரவையில் வன்முறை வெடித்தது. சட்டமன்றத்துக்கு உள்ளேயே தி.மு.க. உறுப்பினர்களால் ஜெயலலிதா தாக்கப்பட்டார்.

அதற்குப்பின்னர், ஜெயலலிதா சட்டசபைக்குச் செல்லவில்லை. தி.மு.க. ஆட்சியை வீழ்த்திவிட்டு, தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர்தான் சட்டப் பேரவைக்குள்ளே செல்லப்போவதாக அறிவித்தார்.

ஜெயலலிதா முதல்வர்

1991-ம் ஆண்டு ஜெயலலிதாவின் வற்புறுத்தலால், இந்தியத் தலைமை அமைச்சர் சந்திரசேகர், தி.மு.க. ஆட்சியைக் கலைத்தார். சட்டப்பேரவைத் தேர்தல் நடத்தப்பட்டது. அதே வேளையில் டெல்லியிலும் சந்திரசேகர் ஆட்சி கவிழ்ந்து நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அ.தி.மு.க., காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துக்கொண்டது. அ.தி.மு.க. 168 இடங்களில் போட்டியிட்டு, 164 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. 44.39

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க-வுக்கு 11 இடங்கள் கிடைத்தன. இந்தக் கட்சியைச் சேர்ந்த தம்பிதுரை, நாடாளுமன்றத்தின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

24.06.1991 அன்று ஜெயலலிதா முதல்வராகப் பதவியேற்றார்.

1. ஜெ.ஜெயலலிதா (முதல்வர்)

2. இரா.நெடுஞ்செழியன் (நிதி)

3. கே.ஏ.கிருஷ்ணசாமி (சட்டம்)

4. ஆர்.எம்.வீரப்பன் (கல்வி, பிற்பட்டோர் நலன், உணவு, கால்நடை)

5. க.ராசாராம் (உணவு, கூட்டுறவு)

6. செ. அரங்கநாயகம் (தொழிலாளர் நலன், கல்வி)

7. சு.முத்துசாமி (மக்கள் நல்வாழ்வுத் துறை)

8. கே.ஏ. செங்கோட்டையன் (போக்குவரத்து, வனம்)

9. இ.மதுசூதனன் (கைத்தறி)

10. எஸ். கண்ணப்பன் (பொதுப்பணிகள், மின்சாரம்)

11. அழகு திருநாவுக்கரசு (உள்ளாட்சி)

12. டி.எம்.செல்வகணபதி (வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி, உள்ளாட்சி)

13. முகமது ஆஷிப் (ஊரகத் தொழில்)

14. இந்திரகுமாரி (சமூக நலன்)

15. எம்.ஆனந்தன் (ஆதி திராவிடர் நலன்)

16. டி.ஜெயக்குமார் (மீன்வளம்)

17. ஜி.விஸ்வநாதன் (உணவு, கூட்டுறவு)

18. நாகூர்மீரான் (சுற்றுலா)

19. எஸ்.ரகுபதி (தொழிலாளர் நலன், வீட்டுவசதி)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

20. துரை.ராமசாமி (ஊரகத் தொழில்)

21. சத்தியமூர்த்தி (வணிக வரிகள்)

22. ம.சின்னச்சாமி (தொழில்)

23. கு.லாரன்ஸ் (வனம், பிற்பட்டோர் நலன்)

24. மு.தென்னவன் (செய்தி, விளம்பரம்)

25. க.பொன்னுசாமி (கல்வி)

26. நடேசன் பால்ராஜ் (அறநிலையம்)

27. பி.ஈஸ்வரமூர்த்தி (கைத்தறி)

28. எம்.சி.தாமோதரன் (கால்நடை)

29. அம்ம முத்து பிள்ளை (அறநிலையம்).

அமைச்சரவையில் அவ்வப்போது மாற்றங்கள் நிகழ்ந்தன. பலரது துறைகள் மாற்றப்பட்டன. சிலர் நீக்கப்பட்டு புதிய அமைச்சர்கள் சேர்க்கப்பட்டனர்.

இந்த ஆட்சி மிகக் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானது. தமிழகம் முழுவதும் ஜெயலலிதாவின் கட்அவுட்டுகள் 50 அடி உயரத்துக்கு வைக்கப்பட்டன. தலைநகர் சென்னையில் எங்கு பார்த்தாலும் ஜெயலலிதாவின் கட்அவுட்டுகளாகவே காட்சி அளித்தன. அமைச்சர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுகள் எழுந்தன. சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியினரின் உணர்வுகள் மதிக்கப்படவில்லை என்ற விமர்சனங்கள் எழுந்தன.

இத்தகைய காரணங்களால், 1996-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்தது. அறந்தாங்கி, ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன்கோவில், ராசிபுரம் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. தர்மபுரி மாவட்டம் பர்கூர் தொகுதியில் போட்டியிட்ட ஜெயலலிதா தோல்வி அடைந்தார். தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

டான்சி நில வழக்கு

ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்குகளை விசாரிப்பதற்காக மூன்று தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா, 'அரசாங்கத்துக்குச் சொந்தமான டான்சி நிலத்தை வாங்கியது குற்றம்' என்று தொடரப்பட்ட வழக்கில், அக்குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டது என்றும் எனவே, ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை' என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு வெளியானபோது, தருமபுரி மாவட்டத்தில் இலக்கியம்பட்டி என்ற இடத்தில் அண்ணா தி.மு.க. தொண்டர்கள், கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் பயணித்து வந்த பேருந்தின்மீது பெட்ரோல் ஊற்றித் தீவைத்துக் கொளுத்தினர். அதில், கோகிலவாணி, காயத்ரி, ஹேமலதா ஆகிய மூன்று மாணவிகள் உயிரோடு கருகி இறந்தனர்.

அனைத்திந்திய ஊடகங்களில், இந்தக் காட்சி திரும்பத் திரும்பக் காண்பிக்கப்பட்டது. தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து ஜெயலலிதா மேல்முறையீடு செய்தார். அடுத்த ஐந்து ஆண்டுகளும், தொடர்ந்து வழக்குகளுக்காக நீதிமன்றம் சென்று வந்தார்.

மத்திய அமைச்சரவையில் அ.தி.மு.க.

மத்தியில் பிரதமராகப் பொறுப்பேற்ற தேவகவுடா தலைமையிலான ஆட்சி 13 மாதங்களிலும், அவருக்குப் பின்னர் பொறுப்பேற்ற குஜ்ரால் ஆட்சி ஏழு மாதங்களிலும் கவிழ்ந்தன. இதனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது.

1998-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி ஆகியவற்றைச் சேர்த்துக்கொண்டு, ஒரு வலுவான கூட்டணியை அமைத்தது. இக்கூட்டணி 27 இடங்களில் வெற்றி பெற்றது. அண்ணா தி.மு.க. 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அனைத்திந்திய அளவில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக பாரதிய ஜனதா கட்சி, 174 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. வாஜ்பாய்க்கு ஆதரவுக் கடிதங்களைக் கொண்டு வந்து தருமாறு குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார். அதற்கான முயற்சிகளில் அக்கட்சியினர் ஈடுபட்ட

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

போது, ஆதரவுக் கடிதங்களை அளிக்க ஜெயலலிதா தாமதித்தார். இதனால், அனைத்திந்திய அளவில் அரசியல் பரபரப்பாயிற்று. பின்னர் ஆதரவளித்தார்.

அண்ணா தி.மு.க. சார்பில், மு. தம்பிதுரை, சேடபட்டி முத்தையா ஆகியோர் கேபினெட் அமைச்சர்களாகவும், ஆர்.கே.குமார், கடம்பூர் இரா.ஜனார்த்தனம் ஆகியோர் இணை அமைச்சர்களாவும் பொறுப்பேற்றனர்.

ஓராண்டுக்குள்ளாகவே, வாஜ்பாய் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை ஜெயலலிதா திரும்பப் பெற்றுக்கொண்டார். நாடாளுமன்றத்தில் நடந்த நம்பிக்கை வாக்குத் தீர்மானத்தில் ஒரு வாக்குக் குறைவாகப் பெற்று, வாஜ்பாய் அரசு பதவி இழந்தது.

1999-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் அ.தி.மு.க-வுக்குப் பத்து இடங்கள் கிடைத்தன.

2001 தேர்தல் வெற்றி

2001-ல் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. மூப்பனார் தலைமையிலான தமிழ் மாநில காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சிகளை ஓரணியில் கொண்டு வந்து, பெரிய கூட்டணி அமைத்து, ஜெயலலிதா தேர்தலைச் சந்தித்தார். கிரிமினல் குற்ற வழக்கு ஒன்றில் இரண்டு ஆண்டுகளுக்குமேல் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது தெரிந்திருந்தும், ஜெயலலிதா சட்டப் பேரவைத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் போட்டியிட விண்ணப்பம் செய்தார். அவை தள்ளுபடியாகக் கூடும் என்ற அச்சத்தில், 8 தொகுதிகளில் போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்தார். அனைத்து இடங்களிலும் ஜெயலலிதாவின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட்டது.

2001-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில், அ.தி.மு.க. தலைமையில் தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, முஸ்லிம் லீக் மற்றும் பல கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. அ.தி.மு.க. 141 இடங்களில் போட்டியிட்டு 133 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. கட்சியின் சட்டப்பேரவைத் தலைவராக ஜெயலலிதா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆளுநர் ஃபாத்திமா பீவி, ஜெயலலிதாவுக்கு முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

ஆனால், ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்றது செல்லாது என்று அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இவ்வழக்கில் செப்டம்பர் மாதம் தீர்ப்பளித்த உச்சநீதி மன்றம், 'மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு, சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட தகுதி இல்லாத ஒருவருக்கு, முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தது தவறு' என்று தீர்ப்பளித்தது. ஜெயலலிதா பதவி விலகினார்.

பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அமைச்சரவை அப்படியே நீடித்தது.

தமக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து, உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா முறையீடு செய்தார். அவ்வழக்கில் ஜெயலலிதா விடுதலை செய்யப்பட்டார்.

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற தங்க.தமிழ்ச் செல்வன், தமது உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகினார். அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதைத் தொடர்ந்து, முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தமது பொறுப்பை விட்டு விலகினார்.

14.04.2001 அன்று இரண்டாவது முறையாக ஜெயலலிதா முதல்வராகப் பொறுப்பேற்றார்.

1. ஜெ.ஜெயலலிதா (முதல்வர்)

2. சி. பொன்னையன் (நிதி, சட்டம்)

3. மு.தம்பி துரை (கல்வி)

4. டி.ஜெயக்குமார் (மின்சாரம்)

5. எஸ்.செம்மலை (மக்கள் நல்வாழ்வு)

6. சி. துரைராஜ் (உள்ளாட்சி)

7. பொள்ளாச்சி ஜெயராமன் (தொழில்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

8. நத்தம் ஆர். விஸ்வநாதன் (உணவு)
9. பி.சி.ராமசாமி
10. ஓ.பன்னீர் செல்வம் (வருவாய்)
11. அய்யாறு வாண்டையார் (அறநிலையம்)
12. தளவாய் சுந்தரம் (பொதுப் பணிகள்)
13. ஏ.அன்வர்ராஜா (தொழிலாளர் நலன்)
14. கே.பாண்டுரங்கன் (ஊரகத் தொழில்)
15. எஸ்.எஸ்.திருநாவுக்கரசு (செய்தி,வனம்)
16. பி.தனபால் (கூட்டுறவு)
17. ஆர்.சரோஜா (சுற்றுலா)
18. பி.வளர்மதி (சமூக நலன்)
19. வி.சுப்பிரமணியம் (ஆதி திராவிடர் நலன்)
20. நயினார் நாகேந்திரன் (போக்குவரத்து)
21. கே.பி.ராஜேந்திர பிரசாத் (மீன்வளம்)
22. சி.வி.சண்முகம் (வணிக வரிகள்)
23. எஸ்.பி.சண்முகநாதன் (கைத்தறி)
24. ஏ.கே.செல்வராஜ் (வீட்டு வசதி)
25. ஏ.வெங்கடாசலம் (பிற்பட்டோர் நலன்).



ஓ.பன்னீர்செல்வம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அமைச்சர்கள் அடிக்கடி மாற்றப் பட்டனர். அய்யாறு வாண்டையார் 13 நாட்கள் மட்டுமே அமைச்சராக இருந்தார்.

இம்முறை ஆட்சியில் லஞ்ச ஊழல் கட்டுப்படுத்தப்பட்டாலும், 1,75,000 அரசு ஊழியர்கள் கைது, டிஸ்மிஸ், சென்னை மெரினா கடற்கரையில் இருந்த கண்ணகி சிலையை அகற்றியது, மக்களிடையே கடும் வெறுப்பை ஏற்படுத்தியது. ஆயினும் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவந்து சேர்த்தது, அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தியது, கைத்தொழில் செய்ய பெண்களுக்குக் கடனுதவிகள் போன்ற திட்டங்களால் ஆட்சிக்கு நற் பெயர் கிட்டியது.

2006 தேர்தலில் தோல்வி

2006 சட்டமன்றத் தேர்தலில், 188 தொகுதிகளில் போட்டியிட்டு, 61 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று ஆட்சியை இழந்தது. 32.64 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

2009 நாடாளுமன்றத் தேர்தலில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு போட்டியிட்டது. 23 தொகுதிகளில் போட்டியிட்டு, ஒன்பது தொகுதிகளில் வெற்றி பெற்றது.

2011 தேர்தலில் வெற்றி

2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு போட்டியிட்டது. 160 தொகுதிகளில் போட்டியிட்டு, 151 தொகுதிகளில் வெற்றி பெற்றது. ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜெயலலிதா, மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்றார்.

அமைச்சரவை

1. ஓ.பன்னீர்செல்வம் (நிதி)

2. கே.ஏ. செங்கோட்டையன் (விவசாயம்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

3. நத்தம் ஆர். விஸ்வநாதன் (மின்சாரம்)
4. கே.பி.முனுசாமி (உள்ளாட்சி)
5. சி.சண்முகவேலு (தொழில்)
6. ஆர்.வைத்திலிங்கம் (வீட்டு வசதி)
7. அக்ரி கிருஷ்ணமூர்த்தி (உணவு)
8. சொ.கருப்பசாமி (கால்நடை)
9. பி.பழநியப்பன் (உயர்கல்வி)
10. சி.வி.சண்முகம் (பள்ளிக் கல்வி)
11. செல்லூர் ராஜு (கூட்டுறவு)
12. கே.டி.பச்சைமால் (காடுகள்)
13. எடப்பாடி பழனிச்சாமி (நெடுஞ்சாலைகள்)
14. எஸ்.வி. சண்முகநாதன் (இந்துசமய அறநிலையத் துறை)
15. கே.வி.ராமலிங்கம் (பொதுப்பணித்துறை)
16. எஸ்.வி. வேலுமணி (சிறப்புத் திட்டங்கள்)
17. டி.கே.எம்.சின்னையா (பிற்பட்டோர் நலம்)
18. எம்.சி. சம்பத் (கிராமத் தொழில்கள்)
19. பி.தங்கமணி (வருவாய்)
20. ஜி.செந்தமிழன் (செய்தி, விளம்பரம்)
21. கோகுல இந்திரா (வணிக வரிகள்)
22. ராமஜெயம் (சமூகநலம்)
23. பி.வி. ரமணா (கைத்தறி)
24. ஆர்.வி. உதயகுமார் (தகவல் தொழில் நுட்பம்)
25. என். சுப்பிரமணியன் (ஆதிதிராவிடர் நலத்துறை)
26. வி.செந்தில் பாலாஜி (போக்குவரத்து)
27. என்.மரியம் பிச்சை (சுற்றுச்சூழல்)
28. கே.ஏ.ஜெயபால் (மீன்வளம்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

29. இ. சுப்பையா (சட்டம்)

30. புத்தி சந்திரன் (சுற்றுலா)

31. டாக்டர் எஸ். விஜய் (மக்கள் நல்வாழ்வு

32. என்.ஆர்.சிவபதி (விளையாட்டு, இளைஞர் நலம்).

இந்த அமைச்சரவையில் ஓர் ஆண்டுக்குள்ளாகவே பல மாற்றங்கள் நிகழ்ந்தன. சொ.கருப்பசாமி, மரியம் பிச்சை ஆகிய அமைச்சர்கள் இறந்து விட்டனர். பத்துக்கும் மேற்பட்ட அமைச்சர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப் பட்டு, புதிய அமைச்சர்கள் பொறுப்பு ஏற்றனர். சட்டத்துறைக்கு மட்டும் 15 மாதங்களில் நான்கு அமைச்சர்கள் பொறுப்பு வகித்தனர். இரண்டு ஆண்டுகளுக்குள் 17 அமைச்சர்கள் நீக்கப்பட்டுவிட்டனர்.

தலைமை அலுவலகம்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்,

அவ்வை சண்முகம் சாலை,

ராயப்பேட்டை, சென்னை.

அதிகாரபூர்வ நாளிதழ்: நமதுஎம்.ஜி.ஆர்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

1960-களின் தொடக்கத்தில், மாணவப் பருவந் தொட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட வை.கோபால்சாமி, இந்தி எதிர்ப்பு அறப் போர்க் களத்திலும் மாணவர் தி.மு.க. பணிகளிலும் தீவிரமாக இயங்கி வந்தார்.

1976-ம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி கலைக்கப் பட்டபோது கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை, சேலம் மத்தியச் சிறைகளில், மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் ஏற்றார். தி.மு.க. நடத்திய அனைத்துப் போராட்டக் களங்களிலும் பங்கேற்று சிறைவாசம் அனுபவித்தார். 1978-ம் ஆண்டு, கட்சியின் சார்பில் நாடாளு மன்ற மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பின்னர், கட்சியின் தேர்தல் பணிச் செயலாளராகவும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நியமிக்கப்பட்டார். மாநிலங்களவையில் இவர் எடுத்து வைத்த வாதங்கள், மாநிலம் முழுவதும் உள்ள தி.மு.கழகத் தொண்டர்களால் விரும்பிப் படிக்கப் பட்டது. தேர்தல் களங்களில் இவரது செயல்பாடுகளும், தமிழகம் முழுவதும் சுற்றிச் சுழன்று பொதுக் கூட்டங்களில் உரையாற்றியதும், கட்சியின் அடிமட்டத் தொண்டர்கள் இடையே, இவருக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்திற்று. தொண்டர்களால், ‘வைகோ’ என்று அன்போடு அழைக்கப் பட்டார்.

தி.மு.க. தொண்டர்களிடையே வைகோவுக்கு செல்வாக்குப் பெருகியது. எனவே, வைகோவைக் கட்சியிலிருந்து ஓரங்கட்ட கருணாநிதி முயன்றார். 1990-களின் தொடக்கத்தில், ‘ஒழுங்கு நடவடிக்கை’ என்ற பெயரில், வைகோவின் ஆதரவாளர்கள் பலர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். வைகோவின் பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு, தலைமைக் கழகத்திடம் அனுமதி பெறவேண்டும் என்ற புதிய அறிவிப்பு வெளியானது. அவரை வைத்துப் பொதுக்கூட்டங்களை நடத்தியவர்களை, தலைமைக் கழகம் எதிரிகளாகக் கருதியது.

‘ஓர் உறையில் இரண்டு வாட்கள் இருக்க முடியாது’ என்று அறிவித்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, 1993-ம் ஆண்டு, அக்டோபர் 3-ம் நாள், தமிழக அரசின் உளவுத்துறை அனுப்பிய, ஊர்ஜிதமாகாத ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு, ‘வைகோவின் அரசியல் ஆதாயத்துக்காக, விடுதலைப் புலிகள் என்னைக் கொலை செய்ய முயற்சிக்கிறார்கள்’ என்றார். அதற்கு அடுத்த நாளே, கட்சியின் சிவகங்கை மாவட்டக் குழு, ‘துரோகியைக் கட்சியிலிருந்து நீக்க வேண்டும்’ எனத் தீர்மானம் நிறைவேற்றியது.

கொலைப் பழி

‘தனது மூத்த மகன் மு.க.முத்துவை அரசியலிலும், திரை உலகிலும் வளர்க்க முயன்ற கருணாநிதி, வருமானவரி நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள, கட்சிக்காரர்களிடம் கணக்குக் கேட்கிறார் எம்.ஜி.ஆர். என்று பழிசுமத்தி, எம்.ஜி.ஆரைக் கட்சியை விட்டு நீக்கியதுபோல், இளைய மகனின் அரசியல் வளர்ச்சிக்கு நான் குறுக்கே நிற்பதாகக் கருதி, தன்னைக் கொல்ல முயன்றதாக என்மீது கொலைப்பழி போட்டு, துரோகிப் பட்டம் சுமத்தி, கட்சியிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கிறார்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கருணாநிதி' என்று வைகோ குற்றம் சாட்டினார்.

திமு.க. தொண்டர்கள் தீக்குளிப்பு

தி.மு.க. தொண்டர்கள் வெகுண்டு எழுந்தனர். வைகோவைக் கட்சியை விட்டு நீக்கக்கூடாது என்று கூறி, கருணாநிதியைக் கண்டித்து, நொச்சிப்பட்டி தண்டபாணி, இடிமழை உதயன், கோவை காமராஜபுரம் பாலன், உப்பிலியாபுரம் வீரப்பன், மேலப்பாளையம் ஜகாங்கீர் ஆகிய ஐந்து தி.மு.க. தொண்டர்கள் தீக்குளித்து இறந்தார்கள்.

தமிழக அரசியலில், கட்சி சார்பற்ற இளைஞர்கள் லட்சக்கணக்கில் வைகோவுக்கு ஆதரவாகத் திரண்டனர். ஒரு புதிய எழுச்சி அலை பரவியது. நாடு முழுவதும் வைகோ சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரது கூட்டங்களுக்குப் பெருந்திரளாக மக்கள் கூடினார்கள். அக்டோபர் 8-ம் நாள், திருவாரூர் மாவட்டம் குடவாசல் கிராமத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் வைகோ பேசினார். அந்தக் கூட்டத்துக்கு, தமிழ்நாடு முழுவதும் இருந்து தி.மு.க. தோழர்கள் திரண்டு வந்தார்கள். தமிழக அரசியல் வரலாறு காணாத அளவில் அந்தக் கூட்டம் நடந்தது.

தமிழகம் முழுவதும் தி.மு.க. தோழர்கள் இரண்டு பிரிவுகளாக அணிவகுத்தனர். இந்நிலையில், நவம்பர் 11-ம் நாள், தி.மு.க-வில் இருந்து வைகோவை நீக்கினர்.

திருச்சி பொதுக்குழு

வைகோவுக்கு ஆதரவாக, தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்கள் அணி திரண்டனர். அவர்கள், 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் நாள், திருச்சி நகரில் கட்சியின் பொதுக்குழுவைக் கூட்டி கலைஞர் கருணாநிதி, க.அன்பழகன் ஆகிய இருவரையும் முறையே கட்சியின் தலைவர், பொதுச்செயலாளர் பொறுப்புகளிலிருந்து நீக்கிவிட்டு, வைகோவைக் கட்சியின் பொதுச் செயலாளராகவும், எல்.கணேசனை அவைத் தலைவராகவும் மு.கண்ணப்பனை பொருளாளராகவும் தேர்ந்தெடுத்து அறிவித்தனர். 'தாங்கள்தான் உண்மையான தி.மு.க.' என்று கூறி, தி.மு.க. என்ற பெயரிலேயே அவர்கள் இயங்கி வந்தனர். செய்தித்தாள்கள், தி.மு.க. (வைகோ) பிரிவு என்று குறிப்பிட்டு வந்தன.

அதற்கு இரண்டு நாட்கள் கழித்து, டிசம்பர் 29-ம் நாள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தஞ்சாவூரில், கருணாநிதி தலைமையில் கூடிய பொதுக் குழுவில், வைகோவின் நீக்கத்துக்கு ஏற்பு அளிக்கப்பட்டது.

இரண்டு அணியினரும் தனித்தனியாகச் செயல்பட்டு வந்தனர். இந்தியத் தேர்தல் ஆணையம், இரண்டு அணிகளையும் அழைத்து விசாரித்தது. இறுதியில், 'கருணாநிதியின் தலைமையிலான கட்சியே, பெரும்பான்மை பெற்ற தி.மு.க.' என்று அறிவித்தது.

ம.தி.மு.க. தோற்றம்

இதனால், வைகோ தலைமையிலான அணியினர், 1994-ம் ஆண்டு, மே மாதம் 6-ம் நாள், சென்னை தியாகராய நகரில் அமைந்துள்ள தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டடத்தில் கூடி 'மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற பெயரில், புதிய கட்சியைத் தொடங்குவதாக அறிவித்தனர்.

சிவப்பு கருப்பு சிவப்பு வண்ணத்தில், கட்சியின் கொடி வடிவமைக்கப்பட்டது. பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்றப் பாடுபடுவதாக உறுதி கொண்டனர். 'அரசியலில் நேர்மை; பொது வாழ்வில் தூய்மை; லட்சியத்தில் உறுதி' என்ற முழக்கங்களை, வைகோ முன்வைத்தார்.



வைகோ

கட்சி தொடங்கிய அதேநாளில், சென்னை மயிலாப்பூர், ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஆகிய தொகுதிகளில் நடைபெற இருந்த சட்டப்பேரவை இடைத் தேர்தல்களில் போட்டியிடுவது என முடிவு செய்தது. அன்று மாலை மயிலை மாங்கொல்லையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், வேட்பாளர்களை வைகோ அறிவித்தார். ஆனால், இரண்டு தொகுதிகளிலும் ஒரே சின்னம் கிடைக்க வில்லை. மயிலாப்பூரில் 'பேருந்து' சின்னத்திலும்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெருந்துறையில் ‘பம்பரம்’ சின்னத்திலும் கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். பெருந்துறை தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளர் கந்தசாமி, 23 ஆயிரம் வாக்குகள் பெற்று இரண்டாவது இடம் பெற்றார். தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர், 20,000 வாக்குகள் பெற்று மூன்றாம் இடம் பெற்றார். மயிலாப்பூரில் ம.தி.மு.க. 10,000 வாக்குகளைப் பெற்றது.

எழுச்சிப் பேரணி

1994-ம் ஆண்டு, ஏப்ரல் 16-ம் நாள், சென்னையில் மறுமலர்ச்சி தி.மு.க. நடத்திய ‘எழுச்சிப் பேரணி’, தமிழக அரசியலில் முதன்முறையாக, விடியவிடிய நடைபெற்று, புதிய வரலாறு படைத்தது. இன்றுவரையிலும், தமிழகத்தில் நடைபெற்ற அரசியல் பேரணியில் அதிக அளவில் மக்கள் திரண்ட பேரணி என்ற பெயரைப் பெற்றுள்ளது.

1994-ம் ஆண்டு ஜூலை மாதம், பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் கன்னியாகுமரியில் இருந்து புறப்பட்ட வைகோ, திருநெல்வேலி, மதுரை, கோவை, சேலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக, 1600 கி.மீ. தொலைவு, 51 நாட்கள் ‘எழுச்சி நடை பயணம்’ மேற்கொண்டு, செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாளில், சென்னையில் நிறைவு செய்தார். வழிநெடுகிலும் லட்சக் கணக்கான மக்களைச் சந்தித்து, அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டு, எதிர்ப்பு அலையை உருவாக்கினார். இந்த நடைபயணமும், தமிழக அரசியலில் புதிய வரலாறு படைத்தது.

கட்சியின் முதலாவது மாநில மாநாடு, 1995-ல் திருச்சியில் ஜூன் 30, ஜூலை 1, 2 ஆகிய நாட்களில் எழுச்சியுடன் நடைபெற்றது. ஈழத்தமிழர் பிரச்னைக்கு, ‘தனித்தமிழ் ஈழமே தீர்வு’ என நிறைவேற்றப் பட்ட தீர்மானம், உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்தது.

1996 தேர்தல் தோல்வி

1996-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), ஜனதா தளம் ஆகிய கட்சிகள் இணைந்து, புதிய கூட்டணி அமைந்தது. தியாகராய நகர், பனகல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பூங்காவில் நடைபெற்ற மாநாட்டில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. அந்தக் கூட்டத்தில், கேரள முன்னாள் முதல்வர் இ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு, ராம் விலாஸ் பஸ்வான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆனால், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் வருகையும், நடிகர் ரஜினிகாந்த் மேற்கொண்ட அரசியல் நிலைப்பாடும், தேர்தல் முடிவுகளையே மாற்றி அமைத்தன. மறுமலர்ச்சி தி.மு.கழகம், 15,69,168

(5.8 விழுக்காடு) வாக்குகளைப் பெற்றபோதிலும் ஓர் இடத்திலும் வெற்றி பெற முடியவில்லை. இக்கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வேட்பாளர், விளவன்கோடு தொகுதியிலும் ஜனதா தளம் கட்சி, ஓசூர் தொகுதியிலும் வெற்றி பெற்றது. முதன்முறையாக, தமிழகத்தில் மூன்றாவது அணி ஒன்று,

28 லட்சம் வாக்குகளைப் பெற்றுச் சாதனை படைத்தது.

நாடாளுமன்றத்தில் ம.தி.மு.க.

இதற்குப் பின்னர், ம.தி.மு.க. 1998-ம் ஆண்டு அ.தி.மு.க.வுடன், கூட்டு இயக்கப் போராட்டங்களை நடத்தியது. 1998-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து, ஐந்து இடங்களில் போட்டியிட்டது. சிவகாசி, பழநி, திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றது. வைகோ, அ.கணேசமூர்த்தி, செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பாரதிய ஜனதா தலைமையிலான கட்சிகள் கூடி, ‘தேசிய ஜனநாயகக் கூட்டணி’ என்ற புதிய அணியை அமைத்தன. வாஜ்பாய் பிரதமரானார். அ.தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி ஆகியவை அந்த அரசில் பங்கேற்றன. ஆனால், மத்திய அரசில் பங்கேற்பதில்லை என்றும், அரசுக்கு வெளியிலிருந்து ஆதரவு அளிப்பதென்றும் ம.தி.மு.க. முடிவு செய்தது.

1998-ம் ஆண்டு, தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழாவினை மறுமலர்ச்சிப் பேரணி, கடற்கரைப் பொதுக்கூட்டமாக நடத்தியது. பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி, பஞ்சாப் முதல்வர் பிரகாஷ்சிங் பாதல், காஷ்மீர் முதல்வர் ஃபரூக் அப்துல்லா ஆகியோர் இதில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பங்கேற்றனர். இந்த விழாவில்தான், அண்ணாவின் கனவுத் திட்டமான சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுமாறு வைகோ விடுத்த வேண்டுகோளை ஏற்று, மத்திய அரசு செயல்படுத்தும் என பிரதமர் வாஜ்பாய் அறிவித்தார்.

அந்த ஆட்சி 13 மாதங்களே நீடித்தது. அரசுக்கு அளித்து வந்த ஆதரவை அ.தி.மு.க. விலக்கிக் கொண்டதால், ஆட்சி கவிழ்ந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறியதால், நம்பிக்கை வாக்குப் பதிவில் தி.மு.க. அரசை ஆதரித்தது. இருப்பினும், ஒரேயொரு வாக்குக் குறைவாகப் பெற்றதால், ஆட்சி கவிழ்ந்தது.

மத்திய அமைச்சரவையில் ம.தி.மு.க.

1999-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தமிழகத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தி.மு.கழகம் தலைமையேற்றது. ஏற்கனவே அந்த அணியிலிருந்த மறுமலர்ச்சி தி.மு.கழகம், இந்த முறையும் ஐந்து நாடாளு மன்றத் தொகுதிகளில் போட்டியிட்டது. சிவகாசி, திண்டிவனம், திருச்செங்கோடு, பொள்ளாச்சி ஆகிய நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது. வைகோ, மு.கண்ணப்பன், செஞ்சி ந.ராமச்சந்திரன், டாக்டர் சி.கிருஷ்ணன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு பெற்றனர். அனைத்திந்திய அளவில், தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் பெரும்பான்மை பெற்றது.

இந்த முறை அரசில் பங்கேற்பதென, ம.தி.மு.கழகம் தீர்மானித்தது. மத்திய அமைச்சரவையில், முக்கிய இலாகாவுடன் அமைச்சர் பொறுப்பை வழங்க வாஜ்பாய் முன்வந்தபோதும் வைகோ அதனை ஏற்கவில்லை. கட்சியின் சார்பில்,

மு. கண்ணப்பன் (மரபுசாரா எரிசக்தித்துறை, தனிப்பொறுப்பு), செஞ்சி ராமச்சந்திரன் (ஜவுளி, நிதி) ஆகியோர் வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

2000 ஆண்டில், அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் மாநில சுயாட்சி மாநாடு, 2001-ல் பெரியார் பிறந்த ஈரோட்டில் தமிழக எழுச்சி மாநாடுகளை நடத்தியது. அனைத்திந்தியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

2001-ம் ஆண்டு நடைபெற்ற தமிழகச் சட்டமன்றத் தேர்தலில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ம.தி.மு.கழகம் 213 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை. 13,04,469 (4.7) வாக்குகளைப் பெற்றது.

2002-ம் ஆண்டு, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்க மத்திய அரசு முடிவெடுத்தபோது, பிரதமர் வாஜ்பாயிடம் வைகோ வற்புறுத்தியதன் விளைவாக, அப்போது அத்திட்டம் கைவிடப்பட்டது.

2002-ம் ஆண்டு மார்ச் மாதம் குஜராத் மாநிலத்தில் நடைபெற்ற மதக் கலவரங்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது, வைகோ ஆளும் கூட்டணியின் சார்பில் உரையாற்றினார். அவ்விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் அய்யர், ‘வைகோ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்’ என்று சொன்னார். அதை ஒப்புக்கொண்ட வைகோ, ‘நான் நேற்றைக்கும் புலிகளை ஆதரித்தேன்; இன்றைக்கும் ஆதரிக்கிறேன்; நாளையும் ஆதரிப்பேன்’ என்று சொன்னார்.

அதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் 29.06.2002 அன்று நடைபெற்ற ம.தி.மு.கழகத்தின் ஒன்பதாம் ஆண்டுத் தொடக்கவிழா பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது, நாடாளு மன்றத்தில் தாம் சொன்ன கருத்தை மேற்கோள் காட்டிப் பேசினார். அதனால் அவர் விடுதலைப் புலிகளை ஆதரித்ததாகக் குற்றம் சாட்டி, தமிழக அரசு அவரை ‘பொடா’ சட்டத்தின்கீழ் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தது. அவருடன் அ.கணேசமூர்த்தி, புலவர் செவந்தியப்பன், வீர.இளவரசன், மு. பூமிநாதன், க. அழகுசுந்தரம், பி.எஸ்.மணியம், கணேசன், நாகராசன் உள்ளிட்ட கட்சியின் முன்னணிப் பொறுப்பாளர்கள் எட்டு பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 19 மாத சிறை வாசத்துக்குப் பிறகு அவர்கள் விடுவிக்கப் பட்டாலும், பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் இவ்வழக்கு நடைபெற்று வருகிறது. திராவிட இயக்கத் தலைவர்களுள், ஒட்டுமொத்தமாக நான்காண்டுகள் சிறைவாசம் ஏற்றவர் வைகோ.

2004-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான கூட்டணியில், ம.தி.மு.க. இடம் பெற்றது. பெருவெற்றிக்கான வாய்ப்புகள் இருந்த போதும்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வைகோ தேர்தலில் போட்டியிட வில்லை. ம.தி.மு.க. நான்கு இடங்களில் போட்டியிட்டு, நான்கிலும் வெற்றி பெற்றது. எல். கணேசன் (திருச்சி), செஞ்சி ராமச்சந்திரன் (வந்தவாசி), டாக்டர் கிருஷ்ணன் (பொள்ளாச்சி), சிப்பிப்பாறை இரவிச்சந்திரன் (சிவகாசி) ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மத்திய அமைச்சரவையில், ம.தி.மு.க. பங்கேற்கவில்லை. ஈழத் தமிழர்களுக்காக, 2006 நவம்பர் 27, 2009 பிப்ரவரி 9 ஆகிய நாட்களில், தலைநகர் டெல்லியில் ம.தி.மு.க. நடத்திய உண்ணாநிலை அறப்போர்களில், காங்கிரஸ் தவிர்த்த அகில இந்தியக் கட்சித் தலைவர்கள் பங்கேற்று, ஆதரவுக் குரல் தந்தனர்.

2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.க. அணியில் இணைந்து, 35 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு, ஆறு இடங்களில் வெற்றி பெற்றது. மு.கண்ணப்பன் (தொண்டாமுத்தூர்), என். ராமகிருஷ்ணன் (கம்பம்), வீர.இளவரசன் (திருமங்கலம்), ஞானதாஸ் (சிவகாசி), வரதராஜன் (விருதுநகர்), டாக்டர் சதன் திருமலைக்குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு பெற்றனர். தமிழகச் சட்டமன்றத்தில் முதன்முறையாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்றது.

2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், அ.தி.மு.க. அணியில் இடம்பெற்று, நான்கு தொகுதிகளில் போட்டியிட்டது. ஈரோடு தொகுதியிலிருந்து, அ.கணேசமூர்த்தி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2011 சட்டமன்றத் தேர்தலில் ம.தி.மு.க. போட்டியிடவில்லை. சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பை வலியுறுத்தி, பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் நகரில் 2011 ஜூன் 1-ல், ஐரோப்பிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற மாநாட்டில் வைகோ ஆற்றிய உரை, அடுத்த கட்ட நகர்வுக்கு வழி காட்டும் உரை என தரணி எங்கும் உள்ள ஈழத் தமிழர்கள் வரவேற்றனர். சிங்கள அதிபர் ராஜபக்ஷே இந்திய வருகையை எதிர்த்து, மத்தியப் பிரதேச மாநிலம் சாஞ்சியில் வைகோ தலைமையில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் தேசிய நெடுஞ்சாலையில் மூன்று நாட்கள் நடத்திய மறியல் அறப்போரும், திருப்பதில் நடத்திய ஆர்ப்பாட்டமும், ஈழத் தமிழர் பிரச்னையில், அனைத்திந்தியாவின் கவனத்தையும் ஈர்த்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தியாவின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுதான், இலங்கைக்கு உடந்தையாகச் செயல்பட்டு, பெருமளவு ஆயுதம் கொடுத்து, ஈழத் தமிழர்களுக்கு எதிரான யுத்தத்தை இயக்கியது என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து எழுத்திலும், பேச்சிலும் கூறி வந்ததற்காக வைகோ மீது தேசத் துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார்.

வைகோ-வின் நடைபயணங்கள்

1996-ம் ஆண்டு, காவிரியில் தமிழகத்தின் உரிமையை மறுக்கும் மத்திய, கர்நாடக மாநில அரசுகளைக் கண்டித்து பூம்புகாரில் இருந்து கல்லணை வரையிலும் ஏழு நாட்கள் 180 கிலோமீட்டர் நடைபயணம்; 1997-ல் ஸ்டெர்லைட் நச்சு ஆலையை மூடக் கோரி ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து தூத்துக்குடி வரையிலும் நான்கு நாட்கள் 120 கிலோ மீட்டர் நடைபயணம்; 2004-ம் ஆண்டு, நதிநீர் இணைப்பு, மதுவிலக்கை வலியுறுத்தி, சீருடை அணிந்த 3,000 தொண்டர்களுடன், திருநெல்வேலியில் இருந்து புறப்பட்டு மதுரை, திருச்சி, தஞ்சை, கடலூர், புதுச்சேரி, திண்டிவனம் வழியாக, சென்னை வரையிலும் 42 நாட்கள் 1200 கிலோமீட்டர் மறுமலர்ச்சி நடைபயணம்; முல்லைப் பெரியாறு அணையை உடைக்க முயற்சிக்கும் கேரள அரசின் முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்காகவும், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டுவதற்காகவும், மதுரையில் இருந்து கூடலூர் வரையிலும், 2008 டிசம்பர் மாதம் ஆறு நாட்கள் 150 கிலோ மீட்டர் நடைபயணம் என, பல நடைபயணங்களை வைகோ மேற்கொண்டார். தமிழகத்தின் ஏழு மாவட்டங்களில் 500 கிலோமீட்டர் சைக்கிள் பயணமும் மேற்கொண்டுள்ளார்.

மதுவிலக்கை வலியுறுத்தி, 2012-ம் ஆண்டு, டிசம்பர் 12 முதல் 25 வரையிலும் 14 நாட்கள், தூத்துக்குடி மாவட்டம் உவரியில் இருந்து மதுரை வரையிலும் 400 கிலோ மீட்டர் நடைபயணம்; 2013 பிப்ரவரி 18 முதல் 28 வரையிலும் காஞ்சிபுரம் மாவட்டம் கோவளத்தில் இருந்து மறைமலை நகர் வரையிலும் 350 கிலோ மீட்டர் நடைபயணம்; ஏப்ரல் 14 முதல் 28 வரையிலும் 15 நாட்கள், பொள்ளாச்சியில் இருந்து ஈரோடு வரையிலும் 450 கிலோ மீட்டர் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் நடைபயணங்களை மேற்கொண்டுள்ளார். ‘மறுமலர்ச்சி ரத்த தானக் கழகம்’ என்ற அமைப்பையும் இக்கட்சி நடத்தி வருகின்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தலைமை அலுவலகம்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்,

‘தாயகம்’

எண். 12, ருக்மணி லட்சுமிபதி சாலை,

எழும்பூர், சென்னை 600 008.

அதிகாரபூர்வ வார ஏடு: சங்கொலி

இணையதளம்: www.mdmk.org.in

பாட்டாளி மக்கள் கட்சி

தமிழகத்தின் வட மாவட்டங்களில் பெரும்பான்மை சமுதாயமாக வாழ்கின்ற வன்னிய சமூக மக்கள் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவது என்ற குறிக்கோளுடன், 1980-ம் ஆண்டு திண்டிவனத்தைச் சேர்ந்த மருத்துவர் ராமதாஸ், ‘வன்னியர் சங்கம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். வன்னிய சமூக மக்களுக்குத் தமிழக அரசின் வேலைவாய்ப்புகளில் 20 விழுக்காடு, நடுவண் அரசின் வேலைவாய்ப்புகளில் 2 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, வன்னியர் சங்கம் பல போராட்டங்களை நடத்தியது.

வன்னியர் சமூக மக்கள் வசித்து வருகின்ற பகுதிகளில், கிராமம் கிராமமாகச் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு மக்களைச் சந்தித்தார். ‘நானோ என் மனைவியோ குடும்பத்தாரோ அரசியலுக்கு வர மாட்டோம்; அப்படி மீறி அரசியலுக்கு வந்தால், இந்தச் சவுக்கால் என்னை அடியுங்கள்’ என்று தாம் பேசுகின்ற மேடைகளில் ஒரு சவுக்கைத் தொங்கவிட்டு, ஊர்கள்தோறும் பேசினார். அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் மிகக் கடுமையாக ஒரு போராட்டம் நடத்துவதற்கு மக்களைத் திரட்டினார்.

1987-ம் ஆண்டு, தமிழ்நாட்டின் உயிர்க்கோடுபோல அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை 7-ல், சாலை மறியல் போராட்டம் நடத்திட அழைப்பு விடுத்தார். தேசிய நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் உயர்ந்து வளர்ந்து நின்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பிரமாண்டமான புளிய மரங்களை வெட்டி சாலையின் குறுக்கே போட்டு, வண்டிகள் நகர முடியாமல் செய்தனர். காவல் துறையினர் மரங்களை அகற்ற முயன்ற போது வன்னிய இளைஞர்கள் தடுத்தனர். வன்முறை வெடித்தது. காவல் துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. 22 வன்னிய இளைஞர்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

போக்குவரத்து முற்றிலுமாக நின்று போனது. வட இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய பொருள் போக்குவரத்து தடைபட்டது. எனவே, இந்தியாவின் கவனத்தை இப்போராட்டம் ஈர்த்தது. ஏறத்தாழ ஒரு வாரம் சாலை மறியல் நடைபெற்றது.

1989-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு, தனி இட ஒதுக்கீடு வேண்டும் என்ற வன்னியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. தமிழகத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் என்று ஒரு புதிய பட்டியலை உருவாக்கி, வன்னியர்கள் மற்றும் பட்டியல் இடப்பட்ட பல சமூகங்களை இணைத்து, அவர்கள் எல்லோருக்குமாகச் சேர்த்து 20 விழுக்காடு இடங்களை ஒதுக்குவதாக அறிவித்தார் முதலமைச்சர் கருணாநிதி. இதனால் வன்னியர் போராட்டத்தின் சூடு தணிந்தது.

வன்னியர் சங்கம், ‘பாட்டாளி மக்கள் கட்சி’ என்ற பெயரில் அரசியல் கட்சியாக புது வடிவம் பெற்றது. நீலம், மஞ்சள், சிவப்பு வண்ணத்திலான கொடி அறிமுகப் படுத்தப்பட்டது. ‘தேர்தல் பாதை திருடர் பாதை’ என்று முழங்கினர். முற்போக்கான பல கொள்கைகளை அறிவித்தனர்.

தமிழ்வழிக் கல்வி பயின்றோருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை, தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை, உழைக்கும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுதல், சாதி மறுப்புத் திருமணங்களை ஊக்குவித்தல், சாதிவாரிக் கணக்கெடுப்பு; அதற்கேற்ற இட ஒதுக்கீடு, வருமானத்தை மிஞ்சி சொத்துக்குவிக்கும் மக்கள் பிரதிநிதிகளின் சொத்துகளைப் பறிமுதல் செய்தல், பினாமி நிலங்கள் ஒழிப்பு, வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்துகளுக்கு இந்தியாவிலும் தடை போன்றவை இக்கட்சியின் கொள்கைகள். ‘தமிழ்நாட்டை இரண்டாகப் பிரிக்க வேண்டும்’ எனவும் இக்கட்சி வலியுறுத்தி வருகிறது.

1992 தமிழர் வாழ்வு உரிமை மாநாடு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற இந்த மாநாடு, கட்சியின் வலுவைப் பறைசாற்றியது. 1989 நாடாளுமன்றத் தேர்தலில், பத்து தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு 15 லட்சத்து 36 ஆயிரத்து 350 வாக்குகளைப் பெற்றது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை.

1991-ம் ஆண்டு நடைபெற்ற தமிழ் நாடு சட்டப் பேரவைத் தேர்தலில், 21 தொகுதிகளில் போட்டியிட்டு 14 லட்சத்து 52 ஆயிரத்து 982 வாக்குகளைப் பெற்றது. பண்ருட்டி தொகுதியில் பண்ருட்டி ராமச்சந்திரன் வெற்றி பெற்றார். அவரைக் கட்சியின் சின்னமான யானைமீது அமரவைத்து சட்டமன்றத்துக்கு அழைத்துச் சென்றனர். அதே ஆண்டில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில், 16 தொகுதிகளில் போட்டியிட்டு 12 லட்சத்து 69 ஆயிரத்து 690 வாக்குகளைப் பெற்றது.

1996-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிபெற்று, தமிழக மக்களின் கவனத்தை ஈர்த்தது. 10 லட்சத்து 42 ஆயிரத்து 333 வாக்குகளைப் பெற்றது.

1998-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், அ.தி.மு.க., கூட்டணியில் ஐந்து நாடாளுமன்றத் தொகுதிகளில் மாங்கனி சின்னத்தில் போட்டியிட்டது. நான்கு இடங்களில் வெற்றி பெற்றது. சிதம்பரம் (தனி) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட தலித் எழில்மலை மக்கள் நல்வாழ்வுத் துறையின் இணை அமைச்சராகவும், வேலூர் தொகுதியில் இருந்து வெற்றி பெற்ற என்.டி. சண்முகம் நிலக்கரித் துறையின் தனிப் பொறுப்புடன் இணை அமைச்சர் ஆகவும் பொறுப்பு வகித்தனர்.

1999-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், பா.ம.க., தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்து தேர்தலைச் சந்தித்தது. இந்த முறை எட்டு நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு, 5 இடங்களில் வெற்றி பெற்றது. பொன்னுசாமி (சிதம்பரம் தனி), பெட்ரோலியத் துறையின் இணை அமைச்சராகவும், என்.டி. சண்முகம் (வேலூர்) உணவு பதப்படுத்துதல் துறையின் இணை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர்.

2001-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து பா.ம.க. விலகியது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அமைச்சர்கள் இருவரும் பொறுப்பிலிருந்து விலகினர்.

அ.தி.மு.க, தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, 27 இடங்களில் போட்டியிட்டது.

20 சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதற்குப்பின்னர், அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து விலகி, மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்தது.

அ.கி. மூர்த்தி தொடர்வண்டித்துறையின் இணை அமைச்சராகவும் என்.டி.சண்முகம், உணவு பதப்படுத்துதல் துறையின் இணை அமைச்சராகவும் பொறுப்பு வகித்தனர்.



ராமதாஸ்

2004-ம் அண்டு நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இடம்பெற்று, 6 இடங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். கட்சியின் நிறுவனர் ராமதாஸின் மகன் மருத்துவர் அன்புமணி, மாநிலங்களவை உறுப்பினர் ஆனார். மன்மோகன்சிங் அமைச்சரவையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கேபினெட் அமைச்சராகப் பொறுப்பேற்றார்; இ.வேலு (இ.ஆ.ப.), தொடர்வண்டித் துறையின் இணை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. அணியிலிருந்து பா.ம.க. விலகி அ.தி.மு.க. அணியில் இணைந்தது. ஏழு நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டு, ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. ஐந்தே மாதங்களில் அதிமுக கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்தனர். ‘பசுமைத் தாயகம்’ என்ற அறக்கட்டளையை நிறுவி மரக் கன்றுகள் நடுதல், ஏரி, குளங்களைத் தூர்வாருதல், உடல்நல

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மருத்துவ முகாம்கள் நடத்துதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர். 'மாங்கனி' சின்னத்தில் போட்டியிட்டு வருகின்றனர்.

தலைமை அலுவலகம்

பாட்டாளி மக்கள் கட்சி,

63, நாட்டுமுத்து தெரு,

வன்னிய தேனாம்பேட்டை,

சென்னை.

தேசிய முற்போக்கு திராவிடக் கழகம்

திரைப்பட நடிகர் விஜயகாந்த் தலைமையில், 2005-ம் ஆண்டு, செப்டம்பர் 14-ம் நாள் மதுரையில் தொடங்கப் பட்டது. சிவப்பு-கறுப்பு வண்ணக் கொடியின் நடுவில் மஞ்சள் வட்டத்துக்குள்ளே ஒரு தீபச்சுடர் இருப்பது போல கட்சியின் கொடி வடிவமைக்கப் பட்டுள்ளது.



விஜயகாந்த்

சென்னை கோயம்பேடு பகுதியில், விஜயகாந்த் திருமண மண்டபத்தில் கட்சியின் தலைமையகம் இயங்கி வருகிறது. 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டு, 27 லட்சத்து 64 ஆயிரத்து 223 வாக்குகளைப் பெற்றது. பதிவான வாக்குகளுள் 8.38 விழுக்காடு தே.மு.தி.க. பெற்றது. கட்சியின் தலைவர் விஜயகாந்த்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விருத்தாசலம் தொகுதியிலிருந்து சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மதுரை மத்தியச் சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், 17,000 வாக்குகளைப் பெற்றது. 2009-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 39 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்டது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை என்றபோதிலும், 30 லட்சத்து 73 ஆயிரத்து 479 வாக்குகளைப் பெற்றது. (10.09 விழுக்காடு).

ஒன்பது நாடாளுமன்றத் தொகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் கூடுதலான வாக்குகளையும், 19 தொகுதிகளில் 75 ஆயிரத்துக்கும் கூடுதலான வாக்குகளையும் பெற்றது.

2011-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து, 41 தொகுதிகளில் போட்டி இட்டது. 29 தொகுதிகளில் வெற்றி பெற்றது. சட்டமன்றத்தில் முதன்மை எதிர்க் கட்சி என்ற தகுதியைப் பெற்றது. கட்சியின் தலைவர் விஜயகாந்த், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் இக்கட்சியின் வேட்பாளர்கள் முரசு சின்னத்தில் போட்டியிட்டனர்.

தலைமை அலுவலகம்

125/7, ஜவஹர்லால் நேரு சாலை

கோயம்பேடு, சென்னை 600 107.

பாரதிய ஜனதா கட்சி

பாரதிய ஜனசங்கம் கட்சியின் தமிழகக் கிளை, வி.கே.ஜான் என்பவரால், 1958-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. வி. ராஜ கோபாலாச்சாரி (1958), டி.வி. சிவக்கொழுந்து முதலியார் (1959), பி.சி. கல்யாணசுந்தரம் (1965), என்.பி. வாசுதேவன் (1968), திருச்சி எம்.சுப்பையா (1972), எஸ்.ஏ. பழனிச்சாமி (1974), ஜனா.கிருஷ்ணமூர்த்தி (1975) ஆகியோர் தலைவர்களாகப் பொறுப்பு வகித்துள்ளனர்.

பாரதிய ஜனசங்கம், 1977-ம் ஆண்டு, அனைத்திந்திய அளவில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜனதா கட்சியோடு இணைந்தது. மொரார்ஜி தேசாய் தலைமையிலான மத்திய அரசில் பங்கேற்றது. வாஜ்பாய் (வெளியுறவு), அத்வானி (இரும்பு, எஃகு) ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

1980-ம் ஆண்டில் ஜனதா கட்சி பிளவு பட்டது. முந்தைய ஜனசங்க ஆதரவாளர்கள் ஒருங்கிணைந்து, ‘பாரதிய ஜனதா கட்சி’ என்ற புதிய பெயரில் இயங்கத் தொடங்கினர். வாஜ்பாய் முதல் தலைவராகவும், அத்வானி இரண்டாவது தலைவராகவும் பொறுப்பு வகித்தனர். தமிழகத்தைச் சேர்ந்த ஜனா. கிருஷ்ண மூர்த்தி, பாரதிய ஜனதா கட்சியின் அகில இந்தியத் தலைவராகப் பொறுப்பு வகித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர்கள்:

1981 கே.நாராயணராவ்

1986 கே.என்.லட்சுமணன்

1991 வி.விஜயராகவலு

1994 என்.எஸ்.சந்திரபோஸ்

1996 கே.என்.லட்சுமணன்

2000 எஸ்.பி.கிருபாநிதி

2003 சி.பி.ராதாகிருஷ்ணன்

2006 இல.கணேசன்

தற்போது, பொன்.ராதா கிருஷ்ணன்

1996-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், பாரதிய ஜனதா கட்சி தனித்துப் போட்டியிட்டு, தமிழகத்தில் பதிவான வாக்குகளுள் 1.8 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து, சி.வேலாயுதன் வெற்றி பெற்றார். தமிழகச் சட்டமன்றத்தில் பாரதிய ஜனதா கட்சி முதன்முறையாக இடம் பெற்றது.

1998 நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று, ஐந்து தொகுதிகளில் போட்டியிட்டு, மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றது. திருச்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட ரங்கராஜன் குமாரமங்கலம், வாஜ்பாய்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அமைச்சரவையில் அமைச்சராகப் பொறுப்பேற்றார். மாஸ்டர் மாதன் (நீலகிரி), சி.பி.ராதாகிருஷ்ணன் (கோவை) ஆகியோர், மற்ற இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

இல. கணேசன்



பொன்.ராதாகிருஷ்ணன்

1999 தேர்தலில், தி.மு.க. அணியில், ஆறு இடங்களில் போட்டியிட்டு, நான்கு இடங்களில் வெற்றி பெற்றது. ரங்கராஜன் குமாரமங்கலம், இரண்டாவது முறையாக மத்திய அமைச்சரானார். மாஸ்டர் மாதன் (நீலகிரி), சி.பி.ராதாகிருஷ்ணன் (கோவை), பொன்.ராதாகிருஷ்ணன் (நாகர்கோவில்) ஆகியோரும் வெற்றி பெற்றனர்.

ரங்கராஜன் குமாரமங்கலம் திடீரென இயற்கை எய்தியதால், பொன்.ராதாகிருஷ்ணன், இணை அமைச்சரானார். இளைஞர் நலம், வீட்டுவசதி, சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் துறைகளுக்குப் பொறுப்பு வகித்துள்ளார்.

2001 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அணியில் இணைந்து, 21 தொகுதிகளில் போட்டியிட்டது. நான்கு தொகுதிகளில் வெற்றி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றது. 2004 நாடாளுமன்றத் தேர்தலில், அண்ணா தி.மு.க. அணியில், ஐந்து தொகுதிகளில் போட்டியிட்டது. ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை.

2006 சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு, 6,66,823 (2.0 விழுக்காடு) வாக்குகளைப் பெற்றது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை.

2009 நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு, 7,11,790 (2.3 விழுக்காடு) வாக்குகளைப் பெற்றது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை.

2011 சட்டமன்றத் தேர்தலில், தனித்துப் போட்டியிட்டு, 8,19,577 (2.2 விழுக்காடு) வாக்குகளைப் பெற்றது. ஓர் இடத்திலும் வெற்றி பெறவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இக்கட்சி வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. கடந்த பல தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டாலும், இம்மாவட்டத்தில் உள்ள தொகுதிகளில் கணிசமான வாக்குகளைப் பெற்று வருகின்றது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

இந்திய விடுதலைக்குப் பின்னர் இந்தியாவில் வாழுகின்ற முஸ்லிம்கள், இதர சிறுபான்மை மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலன்களைப் பாதுகாப்பது என்ற குறிக்கோளோடு, 1948-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, ஓர் அரசியல் இயக்கமாக உருவானது. சென்னை அரசினர் தோட்டத்தில் அமைந்து உள்ள ராஜாஜி அரங்கில் இந்தக் கட்சி தொடங்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



காயிதே மில்லத்

பச்சை நிறத்தில் அமைந்து உள்ள இந்தக் கட்சிக் கொடியின் இடது மேல்மூலையில், வெள்ளை பிறத்தில் பிறையும், நட்சத்திரமும் இடம் பெற்று உள்ளன. தொடக்கத்தில் இக்கட்சி, ஏணி சின்னத்தில் போட்டியிட்டது. தற்போது, கேரள மாநிலத்தில் மட்டும் ஏணி சின்னம் அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.

1948-ம் ஆண்டு இந்தக் கட்சியைத் தொடங்கியது முதல், கண்ணியத் தென்றல் காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப், தாம் இயற்கை எய்தும் வரையிலும் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

இந்திய அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில், காயிதேமில்லத், பொக்கர், மெஃபூப் அலி, கே.டி.எம். அகமது இப்ராஹிம் ஆகியோர் இடம் பெற்று, அருமையான வாதங்களை எடுத்து வைத்தனர். இந்தியாவின் ஆட்சிமொழியாக ஆவதற்கு உரிய அனைத்துத் தகுதிகளும் பெற்ற எங்கள் தமிழ் மொழியையே, இந்தியாவின் ஆட்சிமொழியாக ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை, காயிதே மில்லத் அவர்கள் அரசியல் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் எழுப்பிப் பதிவு செய்தார்.

திருநெல்வேலி நகரின் ஒரு பகுதியான பேட்டையில் பிறந்த காயிதே மில்லத், 1962, 67, 71 ஆகிய தேர்தல்களில், கேரள மாநிலம் மஞ்சேரி தொகுதியில் இருந்து நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டார். ஒவ்வொரு முறையும், வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்காக மட்டுமே அந்தத் தொகுதிக்குச் சென்றார். பிரசாரம் செய்யவில்லை. அந்த அளவுக்கு, அனைத்து இந்தியாவிலும் முஸ்லிம்களின் தலைவராக, பெருஞ்செல்வாக்குப் பெற்று இருந்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1946 முதல் 1952 வரையிலும் சென்னை மாகாண சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகப் பொறுப்பு வகித்தார். 1952 முதல் 1958 வரையிலும் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

1957-ல், பேரறிஞர் அண்ணா என்று விளித்து, நாடாளுமன்றத்தில் முதலில் பேசியவர் காயிதே மில்லத். கையிலே காசு இல்லாதவர்; மனதிலே மாசு அற்றவர் காயிதே மில்லத் என்று, அண்ணாவால் போற்றப்பட்டார்.

1967-ம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டில் காங்கிரஸை எதிர்த்து அண்ணா வலுவான கூட்டணி அமைத்தபோது, ராஜாஜியும், காயிதேமில்லத்தும் இருபெரும் தூண்களாக அந்தக் கூட்டணியை வலுப்படுத்தினார்கள். அந்தத் தேர்தலில், காங்கிரசை வீழ்த்தி தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியது. பின்னர் காயிதே மில்லத்துடன் கருத்து வேறுபாடு கொண்ட சென்னை மாநகர மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், செய்குத்தம்பி ஆகியோர், தமிழ்நாடு முஸ்லிம் லீக் என்ற கட்சியைத் தொடங்கி, காங்கிரஸுடன் உறவு வைத்துக் கொண்டனர்.

காயிதே மில்லத் அவர்களுடைய மறைவுக்குப் பின்னர், 1972-ம் ஆண்டு, ஏ.கே.அப்துல் சமது அவர்கள் தலைவராகப் பொறுப்பு ஏற்றார். 1999-ம் ஆண்டு இயற்கை எய்துகின்ற வரையிலும், தமிழகப் பிரிவின் தலைவராகப் பொறுப்பு வகித்தார். 1964 முதல் 76 வரையிலும் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராகவும் 1984, 1989-ம் ஆண்டுகளில் வேலூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும்; 1988-ல் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தார். ‘மணிச்சுடர்’ என்ற நாளிதழை நிறுவினார். 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியாகிறது.

1994 முதல் 99 வரையிலும், கட்சியின் அனைத்து இந்தியப் பொதுச் செயலாளராகவும் இருந்தார். நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து உள்ளார். 1979-ல், செங்கம் ஜப்பார், ‘முற்போக்கு முஸ்லிம் லீக்’ என்ற கட்சியைத் தொடங்கி, எம்.ஜி.ஆருடன் கூட்டணி வைத்துக் கொண்டார்.

அப்துல் லத்தீப் தனியாகப் பிரிந்து சென்று, இந்திய தேசிய லீக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்ற கட்சியைத் தொடங்கினார். அந்தக் கட்சி தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து, 1989 சட்டமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது. கடலாடி, சேப்பாக்கம், வாணியம்பாடி, பூம்புகார் ஆகிய நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது.



அப்துல் சமது

23.1.1993 அன்று, திருச்சியில் நடைபெற்ற , இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாடு மாநில செயற்குழு கூட்டத்தில், இரண்டு அணிகளும் இணைந்தன. தலைவராக, ஆ.கா.அ. அப்துல் சமது, பொதுச் செயலாளராக எம்.ஏ. லத்தீப் தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

இப்ராகிம் சுலைமான் சேட், 'தேசிய லீக்' என்ற கட்சியைத் தொடங்கினார். தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்டார்.

1999 நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. பாரதிய ஜனதாவுடன் உறவு வைத்துக் கொண்டதால், அப்துல் லத்தீப், மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டார். 2001-ல் அண்ணா தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்து, இராணிப்பேட்டை தொகுதியில், இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2002-ல் இயற்கை எய்தினார்.

தற்போது, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் அனைத்து இந்தியத் தலைவராக யு.எம். பனத்வாலா உள்ளார். தமிழ்நாடு கிளையின் தலைவராக பேராசிரியர் கே.எம். காதர் முகைதீன் செயல்படுகிறார். இந்தக் கட்சியைச் சேர்ந்த அப்துர் ரஹ்மான், வேலூர் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தல்கள்

விடுதலைக்கு முன்பு

முதலாவது பொதுத் தேர்தல் **1920**

சென்னை ராஜதானி சட்டமன்றத்துக்கு 127 உறுப்பினர்கள் என வரையறுக்கப் பட்டது. 61 தொகுதிகளில் இருந்து 98 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 29 உறுப்பினர்கள் நியமனம்; அவர்களுள் 19 பேர் அரசு அலுவலர்கள்; பறையர், பள்ளர், வள்ளுவர், மல, மடிக, சக்கிலியர், தோட்டியர், செருமான், ஹொலய ஆகிய சமுதாயங்களின் சார்பில் 5 பேர்; இது தவிர, அரசின் நிர்வாகக் குழுவுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

தேர்தல் தொகுதிகள் முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், பார்ப்பனர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், நில உடைமையாளர்கள், பல்கலைக்கழகம், வணிகர்கள் சங்கம் எனத் தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருந்தது. பார்ப்பனர் அல்லாதாருக்கு 28 இடங்கள் ஒதுக்கப்பட்டன.

பேரவைக்கான முதலாவது பொதுத் தேர்தல் 1920-ம் ஆண்டு நவம்பர் 20-ம் நாள் நடைபெற்றது. தொகுதிகள் விவரம் வருமாறு:

I. நியமனம் **- 34**

சாதி, மதம் மற்றும் இதர வகைகள - 23

தாழ்த்தப்பட்டோர் -

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

10

தாழ்த்தப்பட்ட சமூகத்தில், பின்தங்கிய மாவட்டங்களில் உள்ளோர் பிரதிநிதித்துவம் - 1

II. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

நகரங்களில் வாழும் முஸ்லிம்கள்	- 2
மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்கள்	- 2
ஆங்கிலோ இந்தியர்களை	- 1
இந்திய கிறிஸ்துவர்கள்	- 5
ஐரோப்பியர்களை	- 1
தனித் தொகுதிகள் நில உடைமையாளர்கள்	- 6
பல்கலைக்கழகங்கள்	- 1
பொதுத் தொகுதிகள்	
முஸ்லிம்கள் அல்லாதவர் களுடைய நகரத் தொகுதிகள்	- 9
முஸ்லிம்கள் அல்லாதவர்களுடைய மாவட்டத் தொகுதிகள்	- 56
வணிக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு	- 6

வாக்காளர்கள்

22 வயதுக்கு உட்பட்டோர் மற்றும் பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது.

சொத்து வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே, அரசுக்குச் செலுத்துகின்ற வரியின் அடிப்படையில், வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

கிராமப்புறங்களில், ரூ. 10 நிலவரியாகக் கட்டுவோர் மட்டுமே வாக்காளர்கள்.

நகர்ப்புறங்களில், நகராட்சிக்கு ரூ. 3 வரி செலுத்துவோர்க்கு மட்டுமே வாக்குரிமை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அந்த நாட்களில் சென்னை மாகாணத்தின் மக்கள் தொகை, 40 மில்லியன் (4 கோடி) என்ற அளவில் இருந்தது. ஆனால், 12 லட்சத்து 48 ஆயிரத்து 156 பேர் மட்டுமே வாக்களிக்கும் தகுதி பெற்றிருந்தனர்.

நீதிக் கட்சி தேர்தலில் போட்டியிட்டது. அவர்கள், பார்ப்பனர் ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். ஒத்துழையாமை இயக்கம் நடத்தி வந்த காங்கிரஸ் கட்சி, இந்தத் தேர்தலில் பங்கேற்காமல் புறக்கணித்தது. 'வாக்களிக்க வேண்டாம்' என வாக்காளர்களைக் கேட்டுக்கொண்டது. சில இடங்களில் வாக்காளர்களைத் தடுக்கும் முயற்சிகள் நடைபெற்றன. நீதிக் கட்சி நடத்திய கூட்டங்களில், காங்கிரஸார் புகுந்து குழப்பம் விளைவித்தனர். அதனால், நீதிக்கட்சியினரும் காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டங்களுக்கு இடையூறுகள் செய்தனர்.

ஹோம் ரூல் இயக்கத்தினரும் தேர்தலில் பங்கேற்றனர். ஆனால், அவர்களுக்கு அவ்வளவாக செல்வாக்கு இல்லை. தேர்தலில் அச்சமின்றி மக்கள் வாக்கு அளிப்பதற்காக, காவல் துறையினர் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். ஆளுநர் வில்லிங்டன், மக்கள் வாக்களிக்கும் காட்சிகளைக் காண்பதற்காக சென்னை மாநகருக்கு உள்ளே வலம் வந்தார்.

வாக்காளர்கள் இடையே தேர்தல் குறித்த விழிப்பு உணர்வு இல்லை. பரபரப்பான பிரச்சாரங்கள், விளம்பரங்கள் எதுவும் இல்லை. எனவே, 3 லட்சத்து 3 ஆயிரத்து 558 பேர் மட்டுமே தங்களுடைய வாக்கை அளித்தனர். எந்தவொரு தொகுதியிலும் 25 விழுக்காட்டுக்கு மேல் வாக்குகள் பதிவாகவில்லை. சில தொகுதிகளில் 12 விழுக்காட்டுக்கும் குறைவான வாக்குகளே பதிவாகியிருந்தன. சென்னை மயிலாப்பூர் தொகுதியில் மட்டும்தான் 52 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.

டிசம்பர் 6-ம் தேதி முடிவுகள் அறிவிக்கப் பட்டன. 'தராசு' சின்னத்தில் போட்டியிட்ட நீதிக் கட்சி, 63 இடங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை பெற்றது. எந்தக் கட்சியையும் சாராமல் தனித்துப் போட்டியிட்ட 18 பேர் வெற்றி பெற்றனர். பின்னர் அவர்கள், நீதிக்கட்சி அரசமைக்க ஆதரவளித்தனர். அமைச்சரவையில் பங்கேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த 17 பேர் வெற்றி பெற்றனர்.

சென்னை மாநகரில்...

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னை மாநகரில் நான்கு தொகுதிகள் இருந்தன. ஆயினும் அது ஒரே தொகுதியாகத்தான் கருதப்பட்டது. அவற்றுள் இரண்டு இடங்கள் பார்ப்பனர் அல்லாதாருக்கு ஒதுக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொரு வாக்காளரும் நான்கு வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டும்.

அதிக வாக்குகள் பெறுகின்ற முதல் இரண்டு பார்ப்பனர் அல்லாத வேட்பாளர்கள், பார்ப்பனர் அல்லாதாருக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடங்களுக்குத் தேர்வு பெறுவர்.

அவர்களுக்கு அடுத்தபடியாக வாக்குகள் பெறுகின்ற மேலும் இருவர், இரு பொது இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்கள், பார்ப்பனராகவும் இருக்கலாம்; பார்ப்பனர் அல்லாதவராகவும் இருக்கலாம். ஒன்பது வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

போட்டியிட்ட வேட்பாளர்களும் பெற்ற வாக்குகளும்

1. பி.தியாகராய செட்டியார்	- 4996
2. சி.பி.ராமசாமி ஐயர்	- 4953
3. டாக்டர் ராமராவ்	- 4408
4. தணிகாசலம் செட்டியார்	- 4127
5. டாக்டர் சி.நடேசன்	- 3311
6. திருமலைப்பிள்ளை	- 3226
7. சல்லா குருசாமி ரெட்டி	- 2982
8. டாக்டர் விஜயராகவன்	- 1135
9. வியாசராவ்	- 235

இவர்களுள், தியாகராச செட்டியாரும் தணிகாசலம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செட்டியாரும், பார்ப்பனர் அல்லாதாருக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சி.பி.ராமசாமி ஐயர், டாக்டர் ராமராவ் ஆகியோர் இரண்டு பொது இடங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான நடேசனார் தோல்வியடைந்தார்.

மதுரை மாவட்டம் முழுவதும் ஒரே தொகுதியாகக் கருதப்பட்டது. அதில், மூன்று தொகுதிகள் இருந்தன. அவற்றுள் ஒன்று பார்ப்பனர் அல்லாதாருக்கும், மற்ற இரண்டு இடங்கள் பொதுவாகவும் இருந்தது.

போட்டியிட்ட வேட்பாளர்களும் பெற்ற வாக்குகளும்

1. பி.டி.ராஜன்	-	5962
2. சி.பொன்னுசாமி நாயுடு	-	5378
3. கே.பி.கோபால மேனன்	-	4605
4. திருமலைசாமி நாயுடு	-	2686
5. ஏ.ரெங்கசாமி ஐயங்கார்	-	2238
6. எம்.எஸ்.ராமசாமி ஐயர்	-	1125
7. கே. ராம அய்யங்கார்	-	584

பார்ப்பனர் அல்லாதார் இடத்துக்கு பி.டி.ராஜனும் மற்ற இரண்டு பொது இடங்களுக்கு, பொன்னுசாமி நாயுடு மற்றும் கோபால மேனன் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை நகரத்துக்கு ஒரு பொது இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1835 வாக்குகள் பெற்று, கே.வி.ராமாச்சாரி வெற்றி பெற்றார்.

திருச்சி திருவரங்கத்துக்கு ஒதுக்கப்பட்டு இருந்த ஒரு பொது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இடத்தில், நீதிக் கட்சி வேட்பாளர் டி.சி.தங்கவேலுப் பிள்ளை, 834 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். ஹோம் ரூல் லீக் சார்பில் போட்டியிட்ட கணபதி ஐயர், 406 வாக்குகள் பெற்றுத் தோல்வி அடைந்தார்.

திருநெல்வேலி பாளையங்கோட்டை பொதுத்தொகுதியில், நீதிக்கட்சி வேட்பாளர் என்.ஏ.வி.சோமசுந்தரம் பிள்ளை வெற்றி பெற்றார். விசாகப்பட்டினம் தொகுதியில், நீதிக் கட்சி வேட்பாளர் கே.சூரியநாராயணமூர்த்தி நாயுடு வெற்றி பெற்றார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் மூன்று தொகுதிகள் இருந்தன. ஒன்று, பார்ப்பனர் அல்லாதாருக்கும் இரண்டு பொதுத் தொகுதிகளும் ஆகும். நீதிக் கட்சியின் சார்பில், ஏ.சுப்பராயலு ரெட்டியார், ஏ.ஜே.முத்துக்குமாரசாமி செட்டியார், பார்த்தசாரதி முதலியார் ஆகியோர் நிறுத்தப்பட்டனர். ஹோம் ரூல் சார்பில் ஆர்.சீனிவாச ஐயங்கார், ராமச்சந்திர படையாச்சி, பொன்னுசாமி முதலியார் ஆகியோர் போட்டியிட்டனர்.

வாக்குகள் விவரம்

ஏ.சுப்பராயலு ரெட்டியார்	-	6936
ஏ.ஜே.முத்துக்குமாரசாமி செட்டியார்	-	5505
ஆர்.சீனிவாச ஐயங்கார்	-	5283
ராமச்சந்திர படையாச்சி	-	4282
பார்த்தசாரதி முதலியார்	-	4118
பொன்னுசாமி முதலியார்	-	3907

இவர்களுள் ஏ.சுப்பராயலு ரெட்டியார், பார்ப்பனர் அல்லாதார் இடத்துக்கான உறுப்பினர் என்றும், ஏ.ஜே.முத்துக் குமாரசாமி செட்டியார், ஆர்.சீனிவாச ஐயங்கார் ஆகியோர், பொது இடங்களுக்கான உறுப்பினர்கள் எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொது வாக்குரிமை அடிப்படையில் நடந்த இந்தத் தேர்தலில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தனி வகுப்பு வாக்குரிமையும், தொகுதி உரிமையும் பெற்றிருந்த முஸ்லிம்களுக்கான தேர்தலும் நடைபெற்றது. இத்தேர்தலில் முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். மொத்தம் 14 தொகுதிகள் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் முஸ்லிம் லீக், சுயேட்சை, நீதிக் கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர். நீதிக் கட்சியின் சார்பில் 5 பேர் வெற்றி பெற்றனர்.

அதேபோல, கிறிஸ்துவர்களுக்கான தனி வாக்கு உரிமைத் தொகுதிகள் 5. வடக்கு மாவட்டங்களுக்கான தொகுதியில் ஏ.டி.பால்மர், மத்திய மாவட்டங்களுக்கான தொகுதியில் எம்.டி.தேவதாஸ், மேற்கு மாவட்டங்களுக்கான தொகுதியில் ஈ.சி.எம்.மஸ்கார்னஸ், தஞ்சை, திருச்சி, மதுரை மாவட்டங்களுக்கான ஓர் இடத்துக்கு அற்புதசாமி உடையார், ராமநாதபுரம், திருநெல்வேலி தொகுதியில் எட்வின் பெரியநாயகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்களுள், பால்மரைத் தவிர மற்ற நான்கு பேரும் நீதிக் கட்சியின் ஆதரவு பெற்றவர்கள்.

நில உடைமையாளர்களுக்கு ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. வடக்கு மத்தியப் பகுதியிலிருந்து பி.ராமராய நிங்கார், தெற்கு மத்தியப் பகுதியில் டாக்டர் பி.சுப்பராயன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இருவரும் நீதிக் கட்சியைச் சேர்ந்தவர்கள். வடக்குப் பகுதியில் மந்தாசா ஜமீன்தார் எஸ்.ராஜாமணி ராஜா திவோ, வையூறு ஜமீன்தார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தெற்குப் பகுதியிலிருந்து ராமநாதபுரம் ராஜா தேர்ந்தெடுக்கப் பட்டார். இவர் பின்னர் நீதிக் கட்சியில் சேர்ந்தார். மேற்குப் பகுதியிலிருந்து குதிவெட்டா பிரபாகரன் தம்பான் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தோட்ட முதலாளிகளுக்காக ஒதுக்கப் பட்டிருந்த ஓர் இடத்துக்கு, ஜேம்ஸ் ஆர்தர் ரிச்சர்ட்சன் என்ற ஆங்கிலேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 5 இடங்களுக்கு, சென்னையில் இருந்து அலெக்சாண்டர் மக்லீன் மாக்டொகல், தென்னிந்திய வர்த்தகக் கழகத்தின் சார்பில் திவான் பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜ தாஸ், சென்னை வர்த்தகக் கழகத்தின் சார்பில் வில்லியம் அலெக்சாண்டர், ஜேம்ஸ் பிளட்சர் சிம்சன், நாட்டுக்கோட்டை நகரத்தார் சார்பில் எம்.எம்சிடி. முத்தையா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செட்டியார் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஓர் இடத்தில், ஹோம் ரூல் சீனிவாச ஐயங்கார் தேர்ந்தெடுக்கப் பட்டார். அதுமுதல் பல்கலைக்கழக இடம், பார்ப்பனர்களின் பிடியிலேயே இருந்து வந்தது.

டெல்லி சட்டசபைத் தேர்தல்

சென்னை ராஜதானி சட்டசபைக்கான தேர்தலுடன், டெல்லி சட்டசபைக்கும் தேர்தல் நடத்தப்பட்டது. அது கவுன்சில், அசெம்பிளி என இரு சபைகளைக் கொண்டது. கவுன்சிலுக்கு முஸ்லிம்கள் அல்லாத நான்கு உறுப்பினர்கள், ஒரு முஸ்லிம் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை சென்னை ராஜதானி பெற்றிருந்தது.

அண்ணாமலை செட்டியார், வி.ராம பத்திர நாயுடு, கே.வி.ரெங்கசாமி ஐயங்கார், வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் இருவர் பார்ப்பனர்கள். முஸ்லிம்களுக்கான இடத்தில், நீதிக் கட்சியைச் சேர்ந்த நாகை அகமது தம்பி மரைக்காயர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

டெல்லி அசெம்பிளி முடிவுகள்

டெல்லி அசெம்பிளிக்கு, சென்னை ராஜதானியின் சார்பில் 16 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முஸ்லிம்கள் 3, ஐரோப்பியர் 1, வணிகர்கள் 1, நில உடைமையாளர்கள் 1, முஸ்லிம் அல்லாத பொது உறுப்பினருக்கு 10 இடங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டிருந்தன.

முஸ்லிம்களுக்கான இடங்களுக்கு டி.எஸ்.முகம்மது உசேன் சாகிப், ஆசாத் அலிகான் பகதூர், முகம்மது சம்நத் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஐரோப்பியர்களின் சார்பில், பிரபல வழக்கறிஞர் எர்ட்லி நார்ட்டன், சென்னை வணிகர்களின் சார்பில் நாராயணதாஸ் கிரிதர்தாஸ், சென்னை நில உடைமை யாளர்கள் சார்பில் ராமவர்ம வலியராஜா ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

முஸ்லிம்கள் அல்லாத 10 பொது உறுப்பினர்கள் தொகுதிகளில் இருந்து, டி.இரங்காச்சாரியார், சி.வேங்கடபதி ராஜு,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வி.சீனிவாசராவ் பத்ரி, சி.எஸ்.சுப்பிரமணியராவ் பந்துலு, சம்பந்த முதலியார், எம்.கிருஷ்ணசாமி ரெட்டியார், பி.எஸ்.சிவசாமி அய்யர், எம்.ஜி.முகந்தராஜ் ஐயங்கார், காவலப்பாலீ மூப்பில் நாயர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தலில், சராசரியாக 24.9 விழுக்காடு வாக்குகளே பதிவாகின. சென்னை மாநகரில் மொத்தம் இருந்த 16,555 வாக்காளர்களுள், 8,644 பேர் வாக்களித்தனர்.

தேர்தல் பிரச்சாரத்தின்போது, சில இடங்களில் வன்முறைகளும் நிகழ்ந்தன. சி.பி.ராமசாமி ஐயருடைய கூட்டங்களில் கலவரங்கள், கல்வீச்சுகள் நிகழ்ந்தன. சிலர் தாக்கப்பட்டனர். அதன்பிறகு, ஒவ்வொரு கூட்டத்திலும், சி.பி.ராமசாமி ஐயர் தமது கைத்துப்பாக்கியை எடுத்துச் சுழற்றிக் காட்டினார். இந்தத் தேர்தலில் மாவட்டங்களில் ஒவ்வொரு வேட்பாளரும் 1,000 ரூபாய் வரையிலும் செலவு செய்தனர். ஆனால், தாம் 29,500 செலவழித்ததாக சி.பி.ராமசாமி ஐயர் கூறினார்.

பேரவையில்....

பேரவையின் 127 உறுப்பினர்களுள், 22 பேர் பார்ப்பனர்; 65 பேர் பார்ப்பனர் அல்லாதார். முஸ்லிம்கள் 14, இந்திய கிறிஸ்துவர்கள் 6, ஆங்கிலோ இந்தியர்கள் 15 இடங்களைப் பெற்றிருந்தனர்.

சட்டப்பேரவைத் தலைவர், ‘பிரசிடென்ட்’ என்று அழைக்கப்பட்டார். முதலாவது தலைவராக ராஜாஜி நியமிக்கப் பட்டார். 1920-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் முதல், 1925-ம் ஆண்டு வரையிலும் அவர் அந்தப் பொறுப்பில் நீடித்தார்.

எட்வின் பெரியநாயகம், ஆர்க்காடு ராமசாமி முதலியார், பி.சுப்பராயன் ஆகியோர், பேரவைச் செயலர்களாக நியமிக்கப்பட்டனர். சி.பி.ராமசாமி ஐயர், அட்வகேட் ஜெனரலாக நியமிக்கப் பட்டார்.

ஆளுநரின் நிர்வாகக் குழுவில் (Executive Council of the Governor) (சர் லயோனல் டேவிட்சன் (உள்ளாட்சி), சர் சார்லஸ் டாட்ஹன்டர் (நிதி), முகமது ஹபிபுல்லா (வருவாய்), சீனிவாச ஐயங்கார் (சட்டம்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

(குறிப்பு: அண்ணா சாலையில், சைதாப்பேட்டை பாலம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அருகிலுள்ள அரசுக் குடியிருப்புக்கு ‘டாட்ஹன்டர்’ பெயர்தான் சூட்டடப்பட்டுள்ளது. அது இப்போது, ‘தாடண்டர் நகர்’ என்று மருவி உள்ளது.)

1923 செப்டம்பர் 11-ம் நாள் பதவிக் காலம் முடிந்தவுடன், பேரவை கலைக்கப் பட்டது.

2-வது பொதுத்தேர்தல் **1923**

சென்னை ராஜதானி சட்ட மன்றத்துக்கான இரண்டாவது பொதுத் தேர்தல் 1923-ம் அக்டோபர் 31-ம் நாள் நடைபெற்றது. 20 தொகுதிகளில், போட்டி இன்றி வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். 44 தொகுதிகளுக்கு மட்டுமே வாக்குப்பதிவு நடைபெற்றது. சராசரியாக 36.2 விழுக்காடு வாக்குகள் பதிவாகின. சென்னை மாநகரில் 58.8 விழுக்காடு. திருநெல்வேலி பாளையங் கோட்டை தொகுதியில் மட்டும் 77 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.

98 இடங்களுக்கான தேர்தலில், நீதிக் கட்சி 44 இடங்களைக் கைப்பற்றியது. அக்கட்சிக்குள்ளேயே, ‘அமைச்சரவையில் பங்கேற்கக் கூடாது’ என்ற கருத்தைக் கொண்ட அணியினருக்கு 37 இடங்கள் கிடைத்தன.

தேர்தலில் பங்கேற்று ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து, சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு ஆகியோர் தலைமையில், காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே புதிதாக உருவாகி இருந்த அணியான, ‘சுயராஜ்ய கட்சி’ 11 இடங்களில் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றது.

பேரவைச் செயலர்களாக அப்துல்லா கடாலா சாகிப் பகதூர், எஸ்.அறுபடைசாமி உடையார், டி.சி.தங்கவேலு பிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஆளுநரின் புதிய நிர்வாகக் குழுவில், சி.ஜி.டாட்ஹண்டர், ஏ.ஆர்.நாப், சி.பி.ராமசாமி ஐயர், வாசுதேவ ரவிவர்மா வலிய ராஜா ஆகியோர் இடம்பெற்றனர். எல்.டி.சுவாமிக் கண்ணுப் பிள்ளை பேரவையின் தலைவராக நியமிக்கப் பட்டார்.

1927-ம் ஆண்டு, நவம்பர் 27-ம் நாள் வரையிலும் இந்தப் பேரவை இயங்கியது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

3-வது பொதுத்தேர்தல் **1926**

1926-ம் ஆண்டு, நவம்பர் மாதம் மூன்றாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 132.

எந்தக் கட்சியையும் சாராத 22 பேர், நீதிக் கட்சி 1, அரசு அதிகாரிகள் 11 என ஆளுநரால் 34 உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டனர்.

61 தொகுதிகளிலிருந்து 98 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சிக்கு 21 இடங்களே கிடைத்தன. ஸ்ரீனிவாச ஐயங்கார் தலைமையிலான சுயராஜ்ய கட்சி 41 இடங்களைக் கைப்பற்றி, தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தது. எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர்கள் 36 பேர் வெற்றி பெற்றனர்.

தேர்தல் களம்

இந்தத் தேர்தலில்தான் முதன்முறையாக சுயராஜ்ய கட்சியினர் வீட்டுக்கு வீடு சென்று வாக்காளர்களைச் சந்தித்தனர். தெருக்களில் ஊர்வலங்களை நடத்தினர்; குழுவாகச் சேர்ந்து பஜனைப் பாடல்களைப் பாடி வாக்குச் சேகரித்தனர். ஆனால், நீதிக் கட்சியினர் வழக்கம்போல ஊரிலுள்ள பெரிய மனிதர்களை மட்டுமே சந்தித்து ஆதரவு கேட்டனர். அதுவே அவர்களது தோல்விக்குக் காரணமாயிற்று. மேலும், திரு வி.கல்யாண சுந்தரனார், சத்தியமூர்த்தி, ம.பொ.சிவஞானம் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியின் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்தனர்.

முத்துலட்சுமி ரெட்டி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதல் பெண் உறுப்பினர் முத்துலட்சுமி ரெட்டி

சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து தேர்ச்சி பெற்ற முதல் பெண் மருத்துவர் என்ற பெருமையைப் பெற்ற டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, 1926-ம் ஆண்டு ஆளுநரால் சட்டமன்றத்தின் முதலாவது பெண் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அதுமட்டும் அல்ல, இந்தியாவிலேயே சட்டமன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதலாவது பெண் உறுப்பினர் என்ற பெருமையையும் பெற்றார்.

அத்துடன் பேரவையின் துணைத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, உலகிலேயே சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் துணைத்தலைவர் என்ற பதவியைப் பெற்ற முதலாவது பெண் என்ற பெருமையும் கிடைத்தது. 1929-ம் ஆண்டு தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறவும், இந்தியாவில் பெண்களுக்கான திருமண வயதை உயர்த்தவும், முத்துலட்சுமி ரெட்டி காரணமாக இருந்தார்.

1930-ம் ஆண்டு மகாத்மா காந்தியைச் சிறையில் அடைத்ததைக் கண்டித்து பேரவை உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினார். சென்னை மாநகராட்சியின் முதலாவது ‘ஆல்டர் உமன்’ (இன்றைய கவுன்சிலர்) என்ற சிறப்பையும் பெற்றார்.

1930-ம் ஆண்டு, சென்னை அடையாரில் ஆதரவற்ற பெண்கள், குழந்தைகளுக்காக ‘அவ்வை இல்லம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். இன்றுவரையிலும் அந்த அமைப்பு சிறப்பாக இயங்கி வருகின்றது.

4-வது பொதுத் தேர்தல் **1930**

1930 செப்டெம்பர் 30-ம் நாள், நான்காவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. 43 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.

பெரும்பாலான இடங்களில் எந்தக் கட்சியையும் சாராத வேட்பாளர்களே வெற்றி பெற்றனர். 35 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

45 இடங்களில் போட்டியிட்ட நீதிக்கட்சிக்கு 35 இடங்கள் கிடைத்தன. பி.சுப்பராயன் தலைமையிலான தேசியக் கட்சிக்கு, (Independent Nationalist Party) பத்துக்கும் குறைவான இடங்களே கிடைத்தன.

ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றதால், சுயராஜ்ய கட்சி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தத் தேர்தலைப் புறக்கணித்தது.

5-வது பொதுத் தேர்தல் **1934**

1933-ம் ஆண்டு இரட்டை ஆட்சி முறையை நீக்குவதென இங்கிலாந்து அரசு முடிவு செய்தது. அதனால் நான்காவது சட்டமன்றத்தின் காலம் ஓராண்டு நீட்டிக்கப்பட்டது.

1934-ம் ஆண்டு, நவம்பர் மாதம் தேர்தல் நடைபெற்றது. சத்தியமூர்த்தி தலைமையிலான சுயராஜ்ய கட்சிக்கு 29 இடங்கள் கிடைத்தன.

1936-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் நாள் சென்னை ராஜதானியில் இருந்து கஞ்சம் மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு, புதிதாக அமைக்கப்பட்ட ஒடிஸா மாநிலத்துடன் சேர்க்கப்பட்டது.

பொதுத்தேர்தல் **1934**

இரட்டை ஆட்சி முறையில் அமைக்கப் பட்ட சென்னை ராஜதானி சட்ட மன்றத்துக்கான முதலாவது பொதுத்தேர்தல், 1937-ம் ஆண்டு நடைபெற்றது. மொத்தம் இருந்த 215 இடங்களுள், 159 இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை அமைந்தது.

‘இரண்டாவது உலகப்போரில் இந்தியாவை ஈடுபடுத்துவது’ என்று இங்கிலாந்து அரசு மேற்கொண்ட முடிவை எதிர்த்து 1939-ம் ஆண்டு அக்டோபர் 29-ம் தேதி இந்தியா முழுவதும் காங்கிரஸ் கட்சி அமைச்சரவைகள் பொறுப்பிலிருந்து விலகின.

பொதுத்தேர்தல் **1946**

இரட்டை ஆட்சி முறையில் அமைக்கப் பட்ட சென்னை ராஜதானி சட்ட மன்றத்துக்கான, இரண்டாவது பொதுத் தேர்தல், 1946-ம் ஆண்டு மார்ச் மாதம் நடந்தது.

215 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், பிரகாசம் தலைமையில் காங்கிரஸ் கட்சி 163 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் தலைமையிலான இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி 28 இடங்களைக் கைப்பற்றி, இரண்டாவது இடத்தைப் பெற்றது. பிரகாசம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

சட்டமேலவைக்கும் தேர்தல் நடை பெற்றது. மொத்தம் இருந்த

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

46 இடங்களுள், காங்கிரஸ் கட்சிக்கு 32 இடங்களும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு 7 இடங்களும் கிடைத்தன.

இந்திய அரசியல் சட்ட வரைவு மன்றம்

1946-ம் ஆண்டுத் தேர்தலில் தேர்ந்து எடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களில் இருந்து, ‘இந்திய அரசியல் சட்ட வரைவு மன்றத்துக்கு’ (Indian Constituent Assembly), 1946 டிசம்பர் மாதம் கீழ்க்காணும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காங்கிரஸ்: 1. ஓ.வி.அழகேசன் 2. அம்மு சுவாமிநாதன் 3. மாடபூசி அனந்தசயனம் ஐயங்கார் 4. மோட்டூரி சத்யநாராயணா 5. தாட்சாயனி வேலாயுதன் 6. ஜி.துர்காபாய் 7. காலா வெங்கட்ட ராவ் 8. என்.கோபால சுவாமி ஐயங்கார் 9. டி.கோவிந்த தாஸ் 10. ரெவரெண்ட் ஜெரோம் டி சௌஸா 11. பி.கக்கன் 12. கே.காமராஜர் 13. வி.சி.கேசவராவ் 14. டி.டி.கிருஷ்ணமாச்சாரி 15. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் 16. எல்.கிருஷ்ணசாமி பாரதி 17. பி.குன்ஹிராமன் நாயர் 18. எம்.திருமலா ராவ் 19. வி.ஐ.முனி சுவாமி பிள்ளை 20. எம்.ஏ.முத்தையா செட்டியார் 21. வி.நாடிமுத்துப் பிள்ளை 22. எஸ்.நாகப்பா 23. பி.எல்.நரசிம்ம ராஜு 24. போகராஜு பட்டாபி சீதாராமய்யா 25. சி.பெருமாள்சாமி ரெட்டி 26. டி.பிரகாசம் 27. ஆர்.கே.சண்முகம் செட்டி 28. டி.ஏ.ராமலிங்கம் செட்டியார் 29. ராம்நாத் கோயங்கா 30. ஓ.பி.ராமசாமி ரெட்டியார் 31. என்.ஜி.ரங்கா 32. நீலம் சஞ்சீவ ரெட்டி 33. கே.சந்தானம் 34. பி.சிவராவ் 35. கல்லூர் சுப்பாராவ் 36. உல்லால் ஸ்ரீ நிவாஸ் மல்லய்யா 37. பி.சுப்பராயன் 38. சி.சுப்பிரமணியம் 39. வி.சுப்பிரமணியம் 40. எம்.சி.வீரபாகு பிள்ளை 41. பி.எம்.வேலாயுதபாணி 42. ஏ.கே.மேனன் 43. டி.ஜே.எம்.வில்சன்.

முஸ்லிம் லீக்: 1. காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் 2. கே.டி.எம்.அகமது இப்றாஹிம் 3. மகபூப் அலி பெய்க் 4. பி.பொக்கர்

மேலும், ஸ்டேன்லி ஹென்ரி பிராட்டர் என்ற ஆங்கிலோ இந்தியரும் பொப்பிலி அரசரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதலாவது பொதுத்தேர்தல் - **1952**

இந்திய விடுதலைக்குப் பின்னர், தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள் குறித்த செய்திகளைக் காண்போம்.

இந்திய அரசியல் சட்ட வரைவு மன்றம்

இந்தியா, குடியரசாக அறிவிக்கப் பட்டதற்குப் பின்னர் சென்னை மாகாண சட்டமன்றத்துக்கான (Madras Legislative Assembly) முதலாவது பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு, 1952-ம் ஆண்டு நடைபெற்றது. ஆனால், தேர்தல் தொடர்பான நடைமுறைகள் 1951-ம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டதால், இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஆவணங்களில், 'சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தல் - 1951' என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. 1952 ஜனவரி மாதம் 2,5,8,9,11,12,16,21,25 ஆகிய நாட்களிலும், தொடர்ந்து மார்ச் மாதம் 27-ம் நாள் வரையிலும் பல்வேறு நாட்களில் வாக்குப்பதிவு நடைபெற்றது.

மொத்தம் 309 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. அவற்றுள் 301 பொதுத் தொகுதிகள் (ஒற்றை உறுப்பினர் தொகுதி 236, இரட்டை உறுப்பினர் தொகுதி 65). தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக 7 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. (ஒற்றை உறுப்பினர் 6; இரட்டை உறுப்பினர் 1). பழங்குடியினருக்காக 1 இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. எனவே, 309 தொகுதிகளிலிருந்து, 375 உறுப்பினர்களைத் தேர்ந்து எடுப்பதற்காகத் தேர்தல் நடைபெற்றது.

இரட்டை உறுப்பினர் தொகுதி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரட்டை உறுப்பினர் தொகுதியில், ஒரு பொது வேட்பாளரையும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு வேட்பாளரையும் தேர்வு செய்யவேண்டும். எனவே, ஒரு வாக்காளர் இரண்டு வாக்குகள் அளிக்க வேண்டும்.

முதல் இரண்டு இடங்களில் பொது வேட்பாளர்கள் மட்டுமே கூடுதல் வாக்குகள் பெற்றிருந்தால், அவர்களுள் அதிக வாக்குகள் பெற்றவர் மட்டுமே வெற்றி பெற்றதாகக் கருதப்படும். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர் மூன்றாவது அல்லது அதற்கு அடுத்த இடத்தில் வாக்குகள் பெற்று இருந்தாலும் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுவார்.

ஒருவேளை, முதல் இரண்டு இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்கள் இருவர் மட்டுமே அதிக வாக்குகள் பெற்றிருந்தால், அவர்கள் இருவருமே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும். மேலும் ஒரு பொது உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படமாட்டார். வெற்றி பெறுகிற இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுள் அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டதாகக் கருதப்படுவார்.

அரசியல் கட்சிகள்

இந்தியத் தேர்தல் ஆணையத்தில் அனைத்திந்தியக் கட்சிகளாகப் பதிவு பெற்றிருந்த, அகில இந்திய பாரதீய ஜன சங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்டு பிளாக் (மார்க்சிஸ்ட் ஆதரவு), ஃபார்வர்டு பிளாக் (ருய்கர் பிரிவு), அகில பாரத ஹிந்து மகா சபா, இந்திய தேசிய காங்கிரஸ், கிருஷிகர் லோக் பார்ட்டி (விவசாய மக்கள் கட்சி), கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி (விவசாயத் தொழிலாளர்கள் மக்கள் கட்சி), அகில பாரத ராம ராஜ்ய பரிஷத், சோசலிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகள் சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டன.

காமன்வீல் கட்சி (Commonwheel Party), சென்னை மாகாண முஸ்லிம் லீக், அகில இந்திய குடியரசுக் கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி (Tamilnadu Toilers Party) ஆகிய கட்சிகள் மாநிலக் கட்சிகளாகப் பதிவு பெற்றிருந்தன. நீதிக் கட்சியும், யூனியன் கட்சியும் பதிவு செய்யப்பட்ட, ஆனால் அங்கீகாரம் பெறாத கட்சிகளாக இருந்தன. எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர்களும் (சுயேட்சைகள்) களத்தில் இருந்தனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தேர்தல் களத்தில் முதன்மையான கட்சிகளாகத் திகழ்ந்தன. ‘இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தரவேண்டும் என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் குறிக்கோள் நிறைவேறிவிட்டதால், காங்கிரஸ் கட்சியைக் கலைத்துவிட வேண்டும்’ என்று மகாத்மா காந்தி அறிவித்திருந்தார். ஆனால், அதை காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வில்லை.

எனவே, இந்திய விடுதலையைப் பெற்றுத்தந்த கட்சி என்ற புகழுடன் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி தேர்தல் களத்தில் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது. அந்தக் கட்சியை எதிர்ப்பதற்கு வலுவான போட்டியாளர்கள் இல்லை. காங்கிரஸ் கட்சி மட்டுமே அனைத்துத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்த முடிந்தது. அவர்களுக்கு எதிராக, கம்யூனிஸ்ட் கட்சியினர்தான் அப்போது முதன்மையான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டு வந்தனர். அவர்களாலும் அனைத்துத் தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்த முடியாத நிலைதான் இருந்தது. பெரும்பான்மையான தொகுதிகளில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர்கள்தான் களத்தில் இருந்தனர்.

தேர்தல் பிரசாரம்

இந்திய விடுதலைக்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில், ஒவ்வொரு கட்சிக்கும் சின்னம் கிடையாது. வாக்குச் சாவடியில் பல வண்ணங்களில் வாக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. ‘காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு முத்திரை பதித்த வாக்குச்சீட்டுகளை, மங்களகரமான மஞ்சள் பெட்டியில் போடுங்கள்’ என்றும், ‘கம்யூனிஸ்ட் வேட்பாளர்களுக்கு பச்சைப் பெட்டியில் வாக்கு அளியுங்கள்’ என்றும் பிரசாரம் செய்தனர்.

1952-ம் ஆண்டு தேர்தலில் வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் வழங்கப் பட்டிருந்தன. இருப்பினும், ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனியாகப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பெட்டியில் வேட்பாளருடைய சின்னமும் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பெட்டிக்கு வண்ணங்கள் கிடையாது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பகலில் மட்டும்தான் நடைபெற்றன. மின்சார வசதி இல்லாததால், மாலை ஆறு மணிக்குமேல் பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாது. இரவுநேரக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கூட்டங்களுக்கு, பெட்ரோமாக்ஸ் அல்லது அரிக்கேன் விளக்குகளை எடுத்துக்கொண்டுதான் செல்ல வேண்டும். கிராமங்களில் உள்ள வாக்காளர்களைச் சந்திப்பதற்காக வேட்பாளர்கள் மாட்டு வண்டிகளில்தான் சென்றனர். காமராஜர் உள்ளிட்ட தலைவர்கள்கூட சைக்கிளில்தான் கிராமங்களுக்குச் சென்று பிரசாரம் செய்தனர். பிரசாரச் சுவரொட்டிகள் மிகக் குறைந்த அளவிலேயே ஒட்டப்பட்டன. துண்டு அறிக்கைகள் வழங்கப்பட்டன.

தேர்தல் களம்

1,677 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர். காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் ஒரு வேட்பாளர் மட்டுமே வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தார். எனவே, அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். கூடுதலாக, சென்னை ஆயிரம்விளக்கு தொகுதியில் 17 வேட்பாளர்கள் களத்தில் இருந்தனர்.

மாநிலம் முழுமையும் வாக்களிக்கத் தகுதி பெற்ற வாக்காளர்கள் 2,69,81,825 பேர். இரட்டை உறுப்பினர் தொகுதிகளில், இரண்டு வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களையும் கணக்கில்கொண்டால், 3,66,00,165 வாக்குகள்.

சராசரியாக ஒரு தொகுதியில் 60,000 வாக்குகள் முதல் 90,000 வாக்குகள் இருந்தன. இரட்டை உறுப்பினர் தொகுதிகளில், சராசரியாக 1,50,000 வாக்குகள் இருந்தன. தேர்தலில் பதிவான வாக்குகள் 2,00,38,423 ஆகும். இது மொத்த வாக்குகளில் 54.75 விழுக்காடு.

ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனிப் பெட்டிகளில் வாக்குகள் போடப்பட்டதால், செல்லாத வாக்குகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு முடிந்த மறுநாளே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டுவிடும். அந்தப் பெட்டிகளை எடுத்துக்கொண்டுபோய், அடுத்தத் தொகுதியில் வாக்குப்பதிவு நடத்துவார்கள். இப்படியாக அனைத்துத் தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தி முடிப்பதற்கு மூன்று மாதங்களுக்கும் மேலானது.

1952 தேர்தலில், அதிகபட்சமாக கடலூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை 1,73,887 ஆகும். நரசபூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் வாக்காளர்களின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எண்ணிக்கை 1,53,263. அந்தத் தொகுதியில் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை 2,70,462. எனவே, பதிவான வாக்குகளின் சதவிகிதம் 176.47 % ஆகும். திருப்போரூர் (தனி) தொகுதியில் 25,570 வாக்குகளே பதிவாயின. இதுவே மிகக் குறைந்த வாக்குப்பதிவு 37.88 % ஆகும்.

முடிவுகள்

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, 367 வேட்பாளர்களைக் களத்தில் நிறுத்தியது. 'நுகத்தடி பூட்டிய இரட்டைக் காளை' சின்னத்தில் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 152 இடங்களில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகள் 69,88,701. இது பதிவான வாக்குகளுள் 34.88 விழுக்காடு ஆகும். காங்கிரஸ் கட்சி 15 தொகுதிகளில் கட்டுத் தொகையை இழந்தது. ஆந்திரா பகுதியிலிருந்த 140 தொகுதிகளுள், காங்கிரஸ் கட்சி 43 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 131 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியது. 62 இடங்களில் வெற்றி பெற்றது. 26,40,337 (13.18 %) வாக்குகளைப் பெற்றது.

ஆந்திரா பகுதியில் 60 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்திய கம்யூனிஸ்ட் கட்சி, 40 இடங்களில் வெற்றி பெற்றது. கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள், கதிர் அரிவாள் சின்னத்தில் போட்டியிட்டனர்.

எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர்கள் (சுயேச்சைகள்) 667 பேர் தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களுள் 62 பேர் வெற்றி பெற்றனர். சுயேச்சை வேட்பாளர்களுக்குக் கிடைத்த வாக்குகள் 47,58,768 (23.75 %) ஆகும்.

கிஸான் மஸ்தூர் பிரஜா கட்சி, 148 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்தியது. 35 இடங்களில் வெற்றி பெற்றது. 18,03,377 வாக்குகள் கிடைத்தன. (9.00 %). சோசலிஸ்ட் கட்சி 163 இடங்களில் போட்டியிட்டு, 13 இடங்களில் வெற்றி பெற்றது.

12,99,282 (6.48%) வாக்குகளைப் பெற்றது. அந்தக் கட்சியினர் 'ஆலமரம்' சின்னத்தில் போட்டியிட்டார்கள். ஆலமரக் கிளையை வண்டியில் ஏற்றிக்கொண்டு பிரசாரம் செய்தார்கள்.

கிருஷிகார் லோக் பார்ட்டி, 63 இடங்களில் போட்டியிட்டு, 15 இடங்களில் வெற்றி பெற்றது. 6,29,893 (3.14%) வாக்குகளைப் பெற்றது. அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் கூட்டு அமைப்பு (All

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

India Scheduled Caste Federation), 37 இடங்களில் போட்டியிட்டு, 2 இடங்களில் வெற்றி பெற்றது. பாரதீய ஜன சங்கம் இரண்டு தொகுதிகளில் மட்டும் போட்டியிட்டது. 8,216 (0.04%) வாக்குகளைப் பெற்றது.

தமிழ்நாடு பகுதியில், காமன்வீல் கட்சி 13 இடங்களில் போட்டியிட்டு 6 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்கு 2,18,288 (1.09%) வாக்குகள் கிடைத்தன.

தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி (Tamilnadu Toilers Party), 34 இடங்களில் போட்டியிட்டு 19 இடங்களில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்கு, 8,52,330 வாக்குகள் (4.25%) கிடைத்தன.

மலபார் பகுதியில் போட்டியிட்ட சென்னை மாகாண முஸ்லிம் லீக் (எம்.எல்.பி.) கட்சி 13 இடங்களில் போட்டியிட்டு, 5 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்கு 1,86,546 வாக்குகள் (0.93%) கிடைத்தன.

6 இடங்களில் போட்டியிட்ட குடியரசுக் கட்சி 1 இடத்திலும் வெற்றி பெறவில்லை. அந்தக் கட்சிக்கு 48,233 (0.24%) வாக்குகள் கிடைத்தன.

இந்திய விடுதலைக்கு முன்பு சென்னை மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நீதிக் கட்சி, விடுதலைக்குப் பின் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் (1952) 9 இடங்களில் மட்டுமே போட்டியிட்டது. 1 தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்கு, 82,231 வாக்குகள் (0.41%) கிடைத்தன. அந்தக் கட்சியின் வேட்பாளர்கள் தராசு சின்னத்தில் போட்டியிட்டனர். முன்னாள் முதலமைச்சரும், நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவருமான பி.டி.ராஜன், மதுரை வடக்கு, கம்பம் ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். கம்பம் தொகுதியில் வெற்றி பெற்ற அவர், மதுரை வடக்கு தொகுதியில் தோல்வியடைந்தார்.

ஐக்கிய ஜனநாயக முன்னணி **(United Democratic Front-UDF)**

கம்யூனிஸ்ட் கட்சி, கிஸான் மஸ்தூர் பிரஜா கட்சி, சோசலிஸ்ட், கிருஷிகார் லோக் பார்ட்டி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி ஆகியவற்றை இணைத்து, ‘ஐக்கிய ஜனநாயக முன்னணி’ என்ற அமைப்பை தேர்தலுக்கு முன்பே உருவாக்கியிருந்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1952 சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடவில்லை. ஆனால், ‘திராவிட நாடு’ கோரிக்கையை ஆதரித்து கையெழுத்துப் போட்டுக் கொடுக்கின்ற வேட்பாளர்களை ஆதரிப்போம் என்று அறிவித்தது.

பறிபோன வாய்ப்புகள்!

1952 தேர்தலுக்கு முன்பு மூன்று ஆண்டுகள் சென்னை மாகாண முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த, பி.எஸ்.குமாரசாமி ராஜா, ஸ்ரீ வில்லிபுத்தூர் தொகுதியில் போட்டியிட்டார். அந்தத் தொகுதியில் எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர் டி.கே.ராஜா, 35,473 வாக்குகளும், பி.எஸ்.குமாரசாமி ராஜா (காங்கிரஸ்) 35,355 வாக்குகளும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர் ஏ.வைகுண்டம் (காங்கிரஸ்) 25,172 வாக்குகளும் பெற்றனர்.

முதல் இரண்டு இடங்களில் பொது வேட்பாளர்கள் அதிக வாக்குகள் பெற்றிருந்தபோதிலும், டி.கே.ராஜாவும், ஏ.வைகுண்டமும் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. முதல் இடத்துக்கான போட்டியில், 118 வாக்குகள் குறைவாகப் பெற்ற குமாரசாமி ராஜா தோல்வி அடைந்தார். மீண்டும் முதலமைச்சராகும் வாய்ப்பையும் இழந்தார்.

1952 தேர்தலின்போது, காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த காமராஜர், நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான எல்.சட்டநாதக் கரையாளர், சங்கரநயினார் கோவில் (தற்போது சங்கரன்கோவில்) இரட்டை உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டார். வெற்றி பெற்றால் முதலமைச்சராகும் வாய்ப்பு அவருக்கு இருப்பதாகப் பிரசாரம் செய்யப்பட்டது. தேர்தலில் அவரை எதிர்த்து நின்ற, எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர் ராமசுந்தர கருணாலய பாண்டியனை (ஆர்.எஸ்.கே.பாண்டியன், கூசா பெட்டி சின்னம்) ஆதரித்து, தந்தை பெரியார் பிரசாரம் செய்தார். அவர், 56,256 வாக்குகள் பெற்றார். சட்டநாதக் கரையாளர் 37,603 வாக்குகள் பெற்றார்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டிருந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர் ஊர்காவலன், 29,967 வாக்குகள் பெற்றார். அதிக வாக்குகள் பெற்ற ஆர்.எஸ்.கே. பாண்டியனும், மூன்றாவது இடத்தைப் பெற்ற ஊர்க்காவலனும் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு பெற்றனர். இரண்டாவது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இடத்தைப் பெற்ற சட்டநாதக் கரையாளரால் வெற்றி பெற முடியவில்லை. முதலமைச்சராகும் வாய்ப்பையும் இழந்தார்.

வெற்றி - தோல்விகள்

பால்நாட் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் காசு பிரம்மானந்த ரெட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரிடம் தோல்வியடைந்தார். இவர் பின்னர், 1964 முதல் ஏழு ஆண்டுகள் ஆந்திர முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

அனந்தபூர் தொகுதியில், என்.சஞ்சீவ ரெட்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான நாகி ரெட்டியிடம் தோல்வியடைந்தார். நாகி ரெட்டியின் மூத்த சகோதரியைச் சஞ்சீவ ரெட்டியும், சஞ்சீவ ரெட்டியின் சகோதரியை நாகி ரெட்டியும் திருமணம் செய்து கொண்டவர்கள். சஞ்சீவ ரெட்டி, 1977-ல் இந்திய நாடாளுமன்றத் தலைவராகத் தேர்வு பெற்றார். அதே ஆண்டில் இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் தேர்வு பெற்றார்.

கர்னூல் இரட்டை உறுப்பினர் தொகுதியில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டில், டி.சஞ்சீவய்யா வெற்றி பெற்றார். இவர், 1962-64-ல் ஆந்திர முதல்வராகப் பொறுப்பு வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான நம்பூதிரிபாட், (ஈ.எம்.சங்கரன் நம்பூதிரிபாட்) கோழிக்கோடு தொகுதியில், 477 வாக்குகள் குறைவாகப் பெற்று தோல்வியடைந்தார். அந்தக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் நாகி ரெட்டி (அனந்தபூர்), சீதாராமையா (மதனபள்ளி), ஹனுமந்தையா (ரேப்பள்ளி) கல்யாணசுந்தரம் (திருச்சி வடக்கு), பி.ராமமூர்த்தி (மதுரை வடக்கு), மணலி கந்தசாமி, உமாநாத் (நன்னிலம் இரட்டை உறுப்பினர் தொகுதி) வெற்றி பெற்றனர். மோகன் குமாரமங்கலம், சேலம் தொகுதியில் தோல்வியடைந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் எஸ்.சி.சி. அந்தோணிப் பிள்ளை (சூளை), பி.ஜி.கருத்திருமன் (நம்பியூர்), டி.எம்.காளியண்ணன் (ராசிபுரம்), சி.சுப்பிரமணியம் (கோவை), நா.மகாலிங்கம் (பொள்ளாச்சி), நாடிமுத்து (பட்டுக் கோட்டை), கிருஷ்ணசாமி (எதிர்க் கோட்டை), எஸ்.ராமசாமி (சாத்தூர்), சாமிநாதன் (சிவகங்கை), சண்முக ராஜேஸ்வர சேதுபதி (ராமநாதபுரம்), எஸ்.செல்லப்பாண்டியன் (சேரன்மாதேவி),

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சோமையாஜுலு (திருநெல்வேலி), ரோச் விக்டோரியா (தூத்துக்குடி), கோசல்ராம் (சாத்தான்குளம்), பழனியாண்டி (அரியலூர்) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

ஃபார்வர்டு பிளாக் (மார்க்சிஸ்ட் ஆதரவு) வேட்பாளர் மூக்கையா, பெரியகுளம் இரட்டை உறுப்பினர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

உடுப்பி, மங்களூர் உள்ளிட்ட, தற்போது கர்நாடக மாநிலத்தில் இடம்பெற்றுள்ள தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். தற்போது கேரள மாநிலத்தில் உள்ள பல தொகுதிகளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

கூடுதல் - குறைவு

நரசபூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் படேலா சியாம்சுந்தர் ராவ் 89,557 வாக்குகள் பெற்றார். இதுதான், சென்னை மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் ஒரு வேட்பாளர் பெற்ற அதிக வாக்குகள். அதே தொகுதியில், இரண்டாவது இடம்பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் பூபதிராஜு லட்சுமி நரசராஜு, 50,746 வெற்றி பெற்றார்.

அமலாபுரம் இரட்டை உறுப்பினர் தொகுதியில், கிஸான் மஸ்தூர் பிரஜா கட்சி வேட்பாளர் 80,180 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதே தொகுதியில் எஸ்.சி.எஃப் கட்சி வேட்பாளர் 66,742 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தில் வெற்றி பெற்றார்.

கல்யாண்துர்க் (மொத்த வாக்குகள் 1,48,629; பதிவானது 1,35,526) சித்தூர் 1,61,933 வாக்குகள் இருந்தன. குடிவாடா இரட்டை உறுப்பினர் தொகுதியில், குங்கி ராமராவ் 63,915 கத்ரகடியா ராஜகோபாலராவ் 59,382 இந்திய கம்யூனிஸ்ட் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

பரவாடா தொகுதியில், இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர் வீரபத்ரம் 7,064 வாக்குகள் மட்டுமே பெற்று வெற்றி பெற்றார். இதுதான் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர் ஒருவர் பெற்ற மிகக் குறைந்த வாக்குகள். நரசன்னபேட்டா தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் 9,650 வாக்குகள் மட்டுமே பெற்று வெற்றி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றார். தெக்காலியில் சுயேட்சை வேட்பாளர் 9,113 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

தமிழ்நாடு

முதுகுளத்தூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில், ஃபார்வர்ட் பிளாக் (மார்க்சிஸ்ட் ஆதரவு) வேட்பாளர்கள், மொட்டைய குடும்பன் (தாழ்த்தப்பட்ட வகுப்பு) 38,412 வாக்குகளும், முத்துராமலிங்கத் தேவர் 37,011 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றனர்.

காமன்வீல் கட்சியின் தலைவர் மாணிக்கவேலு நாயக்கர், போளூர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

1,73,887 வாக்குகள் கொண்ட கடலூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில், தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி வேட்பாளர்கள் ரத்தினம் 64,446, எஸ்.ராமசாமி படையாச்சி 56,866 வாக்குகள் பெற்று வென்றனர்.

திருச்சி தெற்கு தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ராமசாமி 8,710 வாக்குகள் மட்டுமே பெற்று வெற்றி பெற்றார். பென்னாகரம் தொகுதியில் தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி வேட்பாளர் கந்தசாமி 8,050 வாக்குகளும், திருப்போரூர் (தனி) தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் 9,580 வாக்குகளும் மட்டுமே பெற்று வெற்றி பெற்றனர்.

1952 தேர்தலின்போது சட்டமன்றத் தொகுதிகளாக வரையறுக்கப்பட்டிருந்த, வண்ணாரப்பேட்டை, சூளை, பரமத்தி, மேச்சேரி, உத்தனப்பள்ளி, கொள்ளேகால், நம்பியூர், மதுக்கரை, கோயில்பாளையம், கொடுமுடி, ஊத்துக்குளி, விக்கிரவாண்டி, அதிராமப்பட்டினம், சாலியமங்கலம், ஆடுதுறை, நீடாமங்கலம், மணப்பாறை, மண்ணச்சநல்லூர், வடமதுரை, உத்தமபாளையம், எதிர்க்கோட்டை, பழவூர், கடம்பூர் ஆகிய தொகுதிகள், சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மறு சீரமைப்பின்போது வேறு பெயர்களில் மாறிவிட்டன.

2-வது பொதுத்தேர்தல் **- 1957**

1957-ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் மொத்தம் 167 தொகுதிகள் மட்டுமே இருந்தன. அவற்றுள், 128 பொதுத் தொகுதிகள், தாழ்த்தப் பட்டோருக்கு 38, பழங்குடியினருக்கு 1 என தொகுதிகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஒதுக்கப்பட்டிருந்தன. தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில், பொது உறுப்பினர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே, உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 205.

தேர்தலில் 887 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்திய தேசிய காங்கிரஸ், பிரஜா சோசலிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை தேசியக் கட்சிகளாக அறிவிக்கப்பட்டன.பெரம்பலூர் தொகுதியில் 15 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

2 கோடியே 39 லட்சத்து 5,575 பேர், வாக்களிக்கும் தகுதி பெற்றிருந்தனர். ஆனால், 1 கோடியே 11 லட்சத்து 30 ஆயிரத்து 996 வாக்குகள் மட்டுமே பதிவாகியிருந்தன. (46.56 விழுக்காடு). இதில், செல்லாத ஓட்டுகள் ஒன்றுகூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சி, 151 தொகுதிகளில் வெற்றி பெற்றது. காமராஜர் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். முதல்முறையாகத் தேர்தல் களத்தில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 15 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், இந்தக் கட்சி ஒரே சின்னத்தில் போட்டியிடவில்லை. சில இடங்களில் ‘உதயசூரியன்’ சின்னத்திலும், சில இடங்களில் ‘சேவல்’ சின்னத்திலும் போட்டியிட்டது.

எம்.பக்தவத்சலம் (திருபெரும்புதூர்), அண்ணாதுரை (காஞ்சிபுரம்), எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கர் (துரிஞ்சா புரம்), எம்.கல்யாணசுந்தரம் (திருச்சி 2), மு.கருணாநிதி (குளித்தலை), முத்துராமலிங்கத் தேவர் (முதுகுளத்தூர்), கு.காமராஜ் (சாத்தூர்), லூர்தம்மாள் (குளச்சல்), நேசமணி (கிள்ளியூர்), சட்டநாதக் கரையாளர் (தென்காசி), பி.ஜி.கருத்திருமன் (கோபிச்செட்டி பாளையம்) ஆகியோர் வெற்றி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஏ.ஆர்.மாரிமுத்து, அதிராமப்பட்டினம் தொகுதியில் பிரஜா சோசலிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, பின்னர் காங்கிரஸில் சேர்ந்தார்.

வண்ணாரப்பேட்டை தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் மாயாண்டி நாடார், கட்சி சாராத தனி வேட்பாளர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்.ஜீவரத்தினத்தைவிட 491 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். கும்மிடிப்பூண்டி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் கமலாம்புஜம்மாள், தனி வேட்பாளர் வேணுகோபால ரெட்டியை விட 94 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். தர்மபுரி கந்தசாமி கவுண்டர் காங்கிரஸ் (202 வாக்குகள்), சேலம் 1 மாரியப்பன் காங்கிரஸ் 207 வாக்குகள் மட்டுமே கூடுதல்.

கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட நேசமணியை எதிர்த்து, வேறு எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை. எனவே, அவர் போட்டியின்றித் தேர்வானார். அதேபோல, விளவங்கோடு தொகுதியிலும் காங்கிரஸ் வேட்பாளர் வில்லியத்தை எதிர்த்து யாரும் மனுத் தாக்கல் செய்யவில்லை.

உத்தமபாளையம் தொகுதியில் தனி வேட்பாளராகப் போட்டியிட்ட நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பி.டி.ராஜன் தோல்வியடைந்தார்.

ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளில், காங்கிரஸ் வேட்பாளர்கள் பலர் வெற்றி பெற்றார்கள்.

சிதம்பரம் இரட்டை உறுப்பினர் (தனி) தொகுதியில், மொத்தமிருந்த 1,65,203 வாக்காளர்களுள், 1,63,787 வாக்குகள் பதிவாகின. அதாவது, 99.14 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.

சீர்காழி (தனி) தொகுதியில், 1,58,328 வாக்காளர்கள். ஆனால், பதிவான வாக்குகள், 1,67,411. அதாவது 105.75 விழுக்காடு வாக்குகள். அனைத்துமே செல்லத்தக்கவை. திருத்துறைப்பூண்டி, 125.23 விழுக்காடு வாக்குகள் பதிவு.

3-வது பொதுத்தேர்தல் - 1962

207 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில்தான், இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கப்பட்டன. பொதுத் தொகுதிகள் 168, தாழ்த்தப்பட்டோருக்கு 37, பழங்குடியினருக்கு 1 என தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. மொத்தம் 798 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில்தான், ஒரே வாக்குச் சீட்டில் வேட்பாளரின் பெயருக்கு அருகிலேயே முத்திரை குத்துகின்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சுதந்திரா கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், திராவிட முன்னேற்றக் கழகம், ஃபார்வர்டு பிளாக், ஜனசங்கம், பிரஜா சோசலிஸ்ட் கட்சி, குடியரசுக் கட்சி, தமிழ் தேசியக் கட்சி, சோஷலிச தொழிலாளர் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் போட்டியிட்டன.

23 தொகுதிகளில் இரண்டு வேட்பாளர்கள் மட்டுமே போட்டி இட்டனர். 1 கோடியே 86 லட்சத்து 75 ஆயிரத்து 436 பேர், வாக்களிக்கும் தகுதி பெற்றிருந்தனர்.

1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. 1 கோடியே 31 லட்சத்து 94 ஆயிரத்து 649 பேர் வாக்களித்தனர்.

17 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டதில், 10 பேர் வெற்றி பெற்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 206 இடங்களில் போட்டியிட்டு, 139 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. பதிவான வாக்குகளுள், 46.14 விழுக்காடு வாக்குகளை அந்தக் கட்சி பெற்றது. காமராஜர்,மீண்டும் முதலமைச்சரானார்.

திராவிட முன்னேற்றக் கழகம், 143 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி, 50 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், கட்சியின் தலைவர் அண்ணாதுரை, காஞ்சிபுரம் தொகுதியில் தோல்வி அடைந்தார். அந்தக் கட்சிக்கு 27.10 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன. இந்தக் கட்சி வெற்றி பெற்ற தொகுதிகள் பெரும்பாலும் சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களிலேயே அமைந்திருந்தன. தென் மாவட்டங்கள், காங்கிரஸ் கட்சியின் கோட்டையாகவே திகழ்ந்தன.

68 இடங்களில் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சிக்கு, 2 இடங்களில் மட்டுமே வெற்றி கிடைத்தது. அந்தக் கட்சிக்கு 7.72 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன. அதாவது, இதற்கு முந்தைய தேர்தல்களில் காங்கிரஸுக்கு மாற்றாக கம்யூனிஸ்ட் கட்சிகள் பெற்றுவந்த வாக்குகளை, இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கைப்பற்றிக் கொண்டது.

ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி, 94 இடங்களில் வேட்பாளர்களை நிறுத்தி 6 இடங்களில் வெற்றி பெற்றது. 7.83

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

குடியரசுக் கட்சி 24 இடங்களிலும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி 21 இடங்களிலும், ஜனசங்கம் 4 இடங்களிலும் போட்டியிட்டன. ஆனால், 1 இடத்திலும் வெற்றி பெறவில்லை. 7 இடங்களில் போட்டியிட்ட சோஷலிஸ்ட் கட்சி ஒரே 1 இடத்தில் வெற்றி பெற்றது.

பெண்கள்

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த டி.என்.அனந்தநாயகி (பேசின் பிரிட்ஜ்), ஜோதி வெங்கடாசலம் (எழும்பூர்), என்.கே. ரங்கநாயகி (பவானி), பார்வதி (தாராபுரம்), குழந்தையம்மாள் (சூலூர்), கிருஷ்ணவேணி (ஆண்டிபட்டி தனி), பி.கே.ஆர். லெட்சுமிகாந்தம் (மதுரை கிழக்கு), பொன்னம்மாள் (சோழவந்தான் தனி), ராஜாத்தி குஞ்சிதபாதம் (திருநெல்வேலி) ஆகிய பத்து பெண்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த மனோன்மணி, உளுந்தூர்ப்பேட்டை தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார்.

செல்லாத வாக்குகள்: பெரணமல்லூர் (2919), ஆற்காடு (3478). செல்லாத வாக்குகளைத் தவிர, காணாமல்போன வாக்குகள் என ஒரு பட்டியலும் இடம் பெற்றது.

4-வது பொதுத்தேர்தல் **- 1967**

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கான நான்காவது பொதுத் தேர்தல் 1967-ம் ஆண்டு நடைபெற்றது. இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தலும் சேர்ந்தே நடைபெற்றது.

சட்டப்பேரவையில், 189 பொதுத் தொகுதிகள், தாழ்த்தப்பட்டோருக்கு 43, பழங்குடியினருக்கு 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. 778 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். 2 கோடியே 7 லட்சத்து 99 ஆயிரத்து 362 பேர், வாக்களிக்கும் தகுதி பெற்றிருந்தனர். 1 கோடியே 59 லட்சத்து 25 ஆயிரத்து 796 வாக்குகள் பதிவாகின.

இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் ஆகிய இரண்டு கட்சிகள் மட்டுமே, மாநிலக் கட்சிகளாக ஏற்கப்பட்டிருந்தன. இந்திய தேசிய காங்கிரஸ், பாரதீய ஜனசங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), சுதந்திரா கட்சி, பிரஜா சோஷலிஸ்ட்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கட்சி, குடியரசுக் கட்சி, சங்காட்டா சோஷலிஸ்ட் கட்சி ஆகிய தேசிய கட்சிகளும் போட்டியிட்டன.

தேர்தல் பிரசாரம்

தேர்தல் பிரசாரத்தில் அரிசி விலை உயர்வு, முதன்மையானப் பிரச்னையாக முன்வைக்கப்பட்டது. 1965-ம் ஆண்டு நடைபெற்ற மொழிப் போராட்டம், இந்தத் தேர்தலில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. இளைஞர்களும் மாணவர்களும் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாகத் திரண்டனர். எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள், இந்தக் கூட்டணியின் பிரசாரத்தில் பெரும்பங்கு வகித்தன.

காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக, சிவாஜி கணேசன், நாகேஷ் ஆகியோர் பிரசாரம் செய்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தக் காலகட்டத்தில் எம்.ஜி.ஆரை நடிகர் எம்.ஆர்.ராதா துப்பாக்கியால் சுட்டது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது. கழுத்தில் கட்டுடன் இருக்கும் எம்.ஜி.ஆர். படத்தைப் போட்டு ‘உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்’ என தி.மு.க. ஒட்டிய சுவரொட்டிகள், இந்தத் தேர்தலில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

பிப்ரவரி 05,18,21 ஆகிய நாட்களில், மூன்று கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. 76.57 விழுக்காடு வாக்குகள் பதிவாகின.

1967-ம் ஆண்டு பிப்ரவரி 23-ம் நாள், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம், 174 இடங்களில் போட்டியிட்டு, 138 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அண்ணா முதலமைச்சரானார். நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 25 வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான ‘ஐக்கிய முன்னணி’ கூட்டணியில், சுதந்திரா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய யூனியன் முஸ்லிம் லீக், அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் இடம் பெற்றிருந்தன.

இந்தக் கூட்டணி, 179 இடங்களில் வெற்றி பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம், 62 லட்சத்து 30 ஆயிரத்து 556 வாக்குகளைப் பெற்றது. 40.69 விழுக்காடு.

சுதந்திரா கட்சி, 27 இடங்களில் போட்டியிட்டு, 20 இடங்களில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றி பெற்றது. 8 லட்சத்து 11 ஆயிரத்து 232 வாக்குகளைப் பெற்றது. 5.30 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி 22 தொகுதிகளில் போட்டியிட்டு, 11 இடங்களில் வெற்றி பெற்றது. 6 லட்சத்து 23 ஆயிரத்து 114 வாக்குகளைப் பெற்றது. 4.07 விழுக்காடு.

பிரஜா சோசலிஸ்ட் கட்சி, 4 தொகுதிகளில் போட்டியிட்டு, அனைத்திலும் வெற்றி பெற்றது. 1 லட்சத்து 36 ஆயிரத்து, 188 வாக்குகளைப் பெற்றது. 0.89 விழுக்காடு.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி, 3 இடங்களில் போட்டியிட்டு, அனைத்திலும் வெற்றி பெற்றது. 95 ஆயிரத்து 494 வாக்குகளைப் பெற்றது. 0.62 விழுக்காடு.

சங்காட்டா சோஷலிஸ்ட் கட்சி, 3 இடங்களில் போட்டியிட்டு, 2 இடங்களில் வெற்றி பெற்றது. 84,188 வாக்குகளைப் பெற்றது. 0.55 விழுக்காடு.

இரண்டு தொகுதிகளில், தி.மு.க. ஆதரவு பெற்ற சுயேட்சைகள் வெற்றி பெற்றனர்.

இந்திய தேசிய காங்கிரஸ், 232 தொகுதிகளில் போட்டியிட்டு, 51 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 62 லட்சத்து 93 ஆயிரத்து 378 வாக்குகளைப் பெற்றது. 41.10 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 32 தொகுதிகளில் போட்டியிட்டு, 2 இடங்களில் வெற்றி பெற்றது. சுயேட்சை வேட்பாளர் 1 இடத்தில் வெற்றி பெற்றார். ஃபார்வர்டு பிளாக் கட்சி, 1 இடத்தில் வெற்றி பெற்றது.

அதிர்ச்சிகள்

இந்தத் தேர்தலில், அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர், விருதுநகர் தொகுதியில் தி.மு.க. மாணவர் தலைவரான பெ.சீனிவாசனிடம் 1,285 வாக்குகள் குறைவாகப் பெற்றுத் தோல்வியடைந்தார். அவரது தோல்வி, இந்திய அரசியலில் மிகப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதேபோல், முதலமைச்சராக இருந்த எம்.பக்தவத்சலம், பூவிருந்தவல்லி தொகுதியில் தி.மு.க. வேட்பாளர், டி.ஆர்.ஆர்.ராஜரத்தினத்தை விட, 8926 வாக்குகள் குறைவாகப் பெற்றுத் தோல்வியடைந்தார். அவரது அமைச்சரவையில் இடம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றிருந்த ஜி.பூவராகவனைத் தவிர, அனைத்து அமைச்சர்களும் தோல்வி அடைந்தனர்.

கூடுதல் - குறைவு

காட்டுமன்னார்கோவில் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் சிவசுப்பிரமணியம் 134 வாக்குகளும், காங்கேயம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ஏ.எஸ்.கவுண்டர் 146 வாக்குகளும் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றனர். கிருஷ்ணகிரியில் காங்கிரஸ் வேட்பாளர் பி.எம்.எம்.கவுண்டர் 185 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

வானூர் தொகுதியில், தி.மு.க. வேட்பாளர் ஏ.ஜி.பாலகிருஷ்ணன், 70 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார். மாநிலத்திலேயே அதிக அளவாக, உசிலம்பட்டி தொகுதியில் ஃபார்வர்டு பிளாக் வேட்பாளர் பி.கே.மூக்கையாத் தேவர் 28, 489 வாக்குகளும், அரவக்குறிச்சி தொகுதியில் சுதந்திரா கட்சி வேட்பாளர் எஸ்.கே.கவுண்டர் 24,132 வாக்குகளும் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றனர்.

5-வது பொதுத்தேர்தல் - 1971

கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சி, ஓராண்டுக்கு முன்பே பொறுப்பிலிருந்து விலகி, நாடாளுமன்றத் தேர்தலுடன் சட்டமன்றத் தேர்தலையும் நடத்த முன்வந்தது. 1971-ம் ஆண்டு ஜனவரி 3-ம் நாள், ஐந்தாவது பொதுத் தேர்தலில் நாடாளுமன்றம், சட்டமன்றம் இரண்டுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்தது. அந்தக் கூட்டணியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஃபார்வர்டு பிளாக், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளும் இடம் பெற்றன. ஏழு கட்சிக் கூட்டணிக்கு ‘முன்னேற்ற முன்னணி’ (Progressive Front) என்று பெயர் சூட்டப்பட்டது.

இந்தக் கூட்டணியில், நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்கு 9 இடங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், சட்டப்பேரவைத் தேர்தலில் 1 இடம்கூட ஒதுக்கவில்லை.

தி.மு.க. கூட்டணி அமோக வெற்றி பெற்றது. தி.மு.க. 184 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணிக் கட்சிகள் 21

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இடங்களில் வெற்றி பெற்றன.

திராவிட முன்னேற்றக் கழகம், 76 லட்சத்து 54 ஆயிரத்து 935 வாக்குகளைப் பெற்றது. 48.58 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 10 இடங்களில் போட்டியிட்டு, 8 இடங்களில் வெற்றி பெற்றது. 3 லட்சத்து 64 ஆயிரத்து 803 வாக்குகளைப் பெற்றது. 2.32 விழுக்காடு.

அகில இந்திய ஃபார்வர்டு பிளாக், 9 இடங்களில் போட்டியிட்டு, 7 இடங்களில் வெற்றி பெற்றது. 2 லட்சத்து 68 ஆயிரத்து 721 வாக்குகளைப் பெற்றது. 1.71 விழுக்காடு.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, 4 இடங்களில் போட்டியிட்டு, அனைத்திலும் வெற்றி பெற்றது. 1 லட்சத்து 47 ஆயிரத்து 985 வாக்குகளைப் பெற்றது. 0.94 விழுக்காடு.

நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க. சார்பில் போட்டியிட்ட 25 வேட்பாளர்களும் வெற்றி பெற்றனர். தொடர்ந்து இரண்டாவது முறையாக நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றுச் சாதனை படைத்தது.

காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் கட்சி, ‘ஸ்தாபன காங்கிரஸ்’ (National Congress Organisation) என்று அழைக்கப் பட்டது. மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சிதான், ‘இந்திய தேசிய காங்கிரஸ்’ என்று அழைக்கப்பட்டது.

‘ஸ்தாபன காங்கிரஸ்’ தலைமையிலான கூட்டணிக்கு, ‘ஜனநாயக முன்னணி’ (Democratice Front) என்று பெயரிடப்பட்டது. ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, கோவை மாவட்ட விவசாயிகள் சங்கம் ஆகியவை அந்தக் கூட்டணியில் இடம் பெற்றிருந்தன. இந்தக் கூட்டணி, 21 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

ஸ்தாபன காங்கிரஸ், 201 தொகுதிகளில் போட்டியிட்டு, 15 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. 55 லட்சத்து 13 ஆயிரத்து, 894 வாக்குகளைப் பெற்றது. 34.99 விழுக்காடு.

சுதந்திரா கட்சி 19 தொகுதிகளில் போட்டியிட்டு, 6 இடங்களில் வெற்றி பெற்றது. 4 லட்சத்து 65 ஆயிரத்து 145 வாக்குகளைப் பெற்றது. 2.95 விழுக்காடு.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சுயேட்சைகள், எட்டு தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), 37 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு, 1 இடத்திலும் வெற்றி பெறவில்லை. 2 லட்சத்து 59 ஆயிரத்து 298 வாக்குகளைப் பெற்றது. 1.65 விழுக்காடு.

கூடுதல் - குறைவு

சங்கராபுரம் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் நாச்சியப்பன் 72 வாக்குகளும், மேலூர் (வடக்கு) தொகுதியில், தி.மு.க. வேட்பாளர் மலைச்சாமி 127 வாக்குகளும், சேரன்மாதேவி தொகுதியில், சுதந்திரா கட்சி வேட்பாளர் டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் 193 வாக்குகளும் மட்டுமே கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றனர்.

மாநிலத்திலேயே அதிக அளவாக, உசிலம்பட்டியில் ஃபார்வர்டு பிளாக் வேட்பாளர் மூக்கையாத் தேவர், 32,383 வாக்குகளும், தி.மு.க. வேட்பாளர்கள் வெள்ளக்கோவில் பழனிச்சாமி, 25,836 வாக்குகளும், வேதாரண்யம் மீனாட்சி சுந்தரம் 24,309 வாக்குகளும், உத்திரமேரூர் ராஜகோபால் 28,566 வாக்குகளும், அரியலூர் சிவபெருமாள் 25,580 வாக்குகளும், அச்சரப்பாக்கம் பாலசுந்தரம் 26,359 வாக்குகளும் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றனர்.

காங்கிரஸ் கூட்டணியின் தலைவர் காமராஜர், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

பொன்னப்ப நாடார் (விளவங்கோடு), ஜோதி வெங்கடாசலம் (ஸ்ரீரங்கம்), டி.என். அனந்தநாயகி (மயிலாப்பூர்) ஆகியோரைத் தவிர, பெரும்பாலான காங்கிரஸ் தலைவர்கள் தோல்வியடைந்தனர்.

தாழ்த்தப்பட்டோர் தொகுதியில் வென்ற பார்ப்பனர்

காங்கிரஸ் வேட்பாளரான ஜோதி வெங்கடாசலம், பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர். இவரது கணவர் வெங்கடாசலம், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்.

ஹிந்து திருமணச் சட்டத்தின்படி, கணவரது வகுப்பாகவே மனைவி கருதப்படலாம் என்ற அடிப்படையில், பார்ப்பனரான ஜோதி வெங்கடாசலம், தாழ்த்தப் பட்டோருக்காக ஒதுக்கப்பட்டு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இருந்த ஸ்ரீரங்கம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

6-வது பொதுத்தேர்தல் **- 1977**

1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் நாள், தி.மு.க. அமைச்சரவை கலைக்கப் பட்டது. தமிழ்நாட்டிலும் நெருக்கடி நிலை நடைமுறைக்கு வந்தது. ஆளுநருக்கு ஆலோசனைகள் கூறுவதற்காக ஆர்.வி. சுப்பிரமணியம், பி.கே. தவே என்ற இரண்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டார்கள். கே. கே. ஷா ஆளுநராக இருந்தார். பின்னர் அவர் மாற்றப்பட்டு, ராஜஸ்தான் மாநில முன்னாள் முதலமைச்சரான மோகன்லால் சுகாதியா ஆளுநராக நியமிக்கப்பட்டார்.

1977-ம் ஆண்டு நெருக்கடி நிலை விலக்கிக்கொள்ளப்பட்ட பின்னர், நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன.

1977 மே மாதம் இறுதியில், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. ஜூன் மாதம் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் அமைந்த கூட்டணிகள் தனித்தனியாகப் பிரிந்துச் சென்றன. தேர்தலில் செல்லுபடியான வாக்குகள், 1 கோடியே 71 லட்சத்து 8 ஆயிரத்து 146. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி, 144 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அண்ணா தி.மு.க., 130 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 51 லட்சத்து 94 ஆயிரத்து 876 வாக்குகளைப் பெற்றது. 30.4 விழுக்காடு.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), 12 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 4 லட்சத்து 77 ஆயிரத்து 835 வாக்குகளைப் பெற்றது. 2.8 விழுக்காடு.

ஃபார்வர்டு பிளாக் 1 இடத்தில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. ஆதரவு சுயேட்சை வேட்பாளர் 1 இடத்தில் வெற்றி பெற்றார்.

234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிட்ட தி.மு.க., 48 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 42 லட்சத்து 58 ஆயிரத்து 771 வாக்குகளைப் பெற்றது. 24.9 விழுக்காடு.

இந்திய தேசிய காங்கிரஸ் 27 தொகுதிகளிலும், அதன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கூட்டணிக் கட்சியான, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 5 இடங்களிலும் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு, 34 லட்சத்து 91 ஆயிரத்து 490 வாக்குகள் கிடைத்தன. 20.4 விழுக்காடு.

தனித்துப் போட்டியிட்ட ஜனதா கட்சி, 10 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 28 லட்சத்து 51 ஆயிரத்து 884 வாக்குகளைப் பெற்றது. 16.8 விழுக்காடு.

திராவிடக் கட்சிகளுக்கு 54 விழுக்காடு, அனைத்திந்தியக் கட்சிகளுக்கு 36 விழுக்காடு வாக்குகள் கிடைத்தன.

இளையாங்குடி தொகுதியில், தி.மு.க. வேட்பாளர் மலைக்கண்ணன் 59 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். தமக்குப் பதிவான வாக்குகளை செல்லாத வாக்குகளாக அறிவித்துவிட்டார்கள்; அதை மட்டும் மீண்டும் எண்ணினாலேயே நான் வெற்றி பெறுவேன் என்று அவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

நீதிமன்றம், செல்லாத வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு உத்தரவிட்டது. வாக்குகள் எண்ணப்பட்டன. அதில் அவருக்கு 58 வாக்குகள் கிடைத்தன. எனவே, ஒரு வாக்கு வித்தியாசத்தில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் செம்மலை, 19 வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.நாராயணனிடம் தோல்வியடைந்தார்.

7-வது பொதுத்தேர்தல் - 1980

டெல்லியில் ஜனதா ஆட்சி கவிழ்ந்ததால், நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. இந்தியத் தலைமை அமைச்சராகப் பொறுப்பு வகித்த இந்திரா காந்தி அம்மையார், ஜனதா கட்சி ஆட்சி நடத்தி வந்த மாநில அரசுகளைக் கலைத்து சட்டமன்றத் தேர்தல்களை நடத்தினார். தமிழகத்தில் எம்.ஜி.ஆரின் அரசும் கலைக்கப்பட்டது.

1980-ம் ஆண்டு, தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. எம்.ஜி.ஆரின் தலைமையில், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி மற்றும் சில கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன.

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி, 37 தொகுதிகளில் வெற்றி பெற்றிருந்ததால், சட்டமன்றத் தேர்தலிலும் அந்தக் கூட்டணியே வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

யாரும் எதிர்பாராத வகையில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணி, 162 தொகுதிகளில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. 129 இடங்களில் வெற்றி பெற்றது.

கூட்டணியில் இடம் பெற்றிருந்த, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 11, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 9, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் 6, காமராஜ் காங்கிரஸ் 4, ஃபார்வர்டு பிளாக் 1, சுயேட்சைகள் 2 இடங்களில் வெற்றி பெற்றனர்.

தேர்தலில் செல்லுபடியான வாக்குகள், 1 கோடியே 88 லட்சத்து 45 ஆயிரத்து 6 வாக்குகள். அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு, 93 லட்சத்து 28 ஆயிரத்து 839 வாக்குகள் கிடைத்தன. 48.9. விழுக்காடு.

திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டணிக்கு, 69 இடங்கள் மட்டுமே கிடைத்தன. முந்தைய சட்டமன்றத்தில் 48 இடங்களைப் பெற்றிருந்த தி.மு.க., இந்தத் தேர்தலில் 37 இடங்களையே கைப்பற்ற முடிந்தது. காங்கிரஸ் 31, சுயேட்சை 1 வெற்றி பெற்றன.

இந்தக் கூட்டணிக்கு, 83 லட்சத்து 71 ஆயிரத்து 718 வாக்குகள் கிடைத்தன. 44.4 விழுக்காடு. ஜனதா கட்சி, 2 இடங்களில் வெற்றி பெற்றது. 5 லட்சத்து 22 ஆயிரத்து 641 வாக்குகள் கிடைத்தன. 6.9 விழுக்காடு.

8-வது பொதுத்தேர்தல் **- 1984**

1984 அக்டோபர் 31-ம் நாள், பிரதமர் இந்திரா காந்தி, டெல்லியில் அவரது வீட்டில் மெய்க்காப்பாளர்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அன்று மாலையே ராஜீவ் காந்தியைப் பிரதமராக அறிவித்து, குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங் பதவியேற்பு உறுதிமொழி செய்வித்தார். ராஜீவ் காந்தி பிரதமரானார். அடுத்த மாதமே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலைச் சந்தித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதே வேளையில், தமிழகத்தில் அண்ணா தி.மு.க. அரசு, ஓராண்டுக்கு முன்னதாகவே பதவியிலிருந்து விலகி, சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டுத் தேர்தலைச் சந்தித்தது.

தேர்தல் பிரசாரம்

இந்தத் தேர்தலில் அண்ணா தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி அமைந்தது. ‘சட்டமன்றத் தொகுதிகளில் 70 விழுக்காடு இடங்களில் அ.தி.மு.க. போட்டியிடுவது என்றும் நாடாளுமன்றத் தேர்தலில் 70 விழுக்காடு இடங்களில் காங்கிரஸ் போட்டியிடுவது’ என்றும் உடன்பாடு கண்டனர். அவர்களுடைய தேர்தல் பிரசாரத்தில், இரண்டு திரைப்படப் பாடல்களை மட்டுமே ஒலிபரப்பினார்கள்.

‘ஒளிவிளக்கு’ திரைப்படத்தில், எம்.ஜி.ஆர். உடல்நலக் குறைவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பார். அவர் உடல் நலம் பெறுவதற்காக, சௌகார் ஜானகி இறைவனை வேண்டிப் பாடுவதாக ஒரு பாடல்; ‘ஆண்டவனே உன் பாதங்களை நான் கண்ணீரில் நீராட்டுவேன்; இந்த ஒருயிரை நீ வாழ வைக்க உன்னிடம் கை ஏந்தினேன்...’ என்ற அந்தப் பாடலை மட்டுமே அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியின் தொண்டர்கள், தங்கள் பிரசாரத்தில் ஒலிபரப்பினார்கள்.

அதேபோல ‘உழைக்கும் கரங்கள்’ என்ற திரைப்படத்தில் இடம்பெற்ற, ‘இது நாட்டைக் காக்கும் கை, உன் வீட்டைக் காக்கும் கை; இந்தக் கை நாட்டின் நம்பிக்கை, இது எதிர்காலத் தாயகத்தின் வாழ்ககை’ என்ற பாடலில் கையைப் பற்றி எம்.ஜி.ஆர். வர்ணிப்பார். காங்கிரஸ் கட்சியின் சின்னம் கை. ‘தாயில்லாப் பிள்ளைக்கு ஓர் ஓட்டு; வாயில்லாப் பிள்ளைக்கு ஓர் ஓட்டு’ என்று சுவரொட்டிகளை ஒட்டினார்கள். அதாவது, தாயை இழந்த ராஜீவ் காந்திக்கு ஓர் ஓட்டு; வாய்பேச முடியாத எம்.ஜி.ஆருக்கு ஓர் ஓட்டு.

இந்தப் பிரசாரம் வாக்காளர்களிடையே வலிய தாக்கத்தை ஏற்படுத்திற்று. எனவே, தி.மு.கழகத்தினர் “எம்.ஜி.ஆர். உயிரோடு இல்லை; தேர்தலில் வெற்றி பெற்ற பிறகுதான் அதை அறிவிப்பார்கள்; எனவே எங்களுக்கு வாக்களியுங்கள்” என்று பிரசாரம் செய்தனர். அதிலும் கூடுதலாக, “ஆட்சியை என்னிடம் தாருங்கள்; எம்.ஜி.ஆர். உயிரோடு திரும்பி வந்தால் அவரிடம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆட்சியை ஒப்படைத்து விடுகிறேன்” என்றுகூட கருணாநிதி பேசினார்.

எனவே, அண்ணா தி.மு.க-வினர், பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில், அமெரிக்க மருத்துவமனையில் படுக்கையில் உட்கார்ந்தவாறு, தொப்பி அணியாத எம்.ஜி.ஆர். இரண்டு விரல்களைக் காட்டுவது போன்ற வீடியோ காட்சிகளைப் பதிவுசெய்து கொண்டுவந்து, அதைத் தெருத்தெருவாகப் போட்டுக் காட்டினார்கள். இது பிரசாரத்தில் பெருந்திருப்பத்தை ஏற்படுத்திற்று.

1984-ம் ஆண்டு, டிசம்பர் 24-ம் நாள் தேர்தல் நடைபெற்றது. அனுதாப அலை வீசியது; அண்ணா தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது. 195 தொகுதிகளைக் கைப்பற்றியது.

தேர்தல் முடிவுகள்

2 கோடியே 16 லட்சத்து 86 ஆயிரத்து 437 வாக்குகள் செல்லுபடியானவை.

அண்ணா தி.மு.க. 132, காங்கிரஸ் 61, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் 2 இடங்களில் வெற்றி பெற்றன. 1 கோடியே 16 லட்சத்து 81 ஆயிரத்து 221 வாக்குகள் கிடைத்தன.

தி.மு.க. கூட்டணிக்கு, 34 இடங்களே கிடைத்தன.

முந்தைய தேர்தலில் 37 இடங்களைப் பெற்றிருந்த தி.மு.க., இந்த முறை 24 தொகுதிகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 5, ஜனதா கட்சி 3, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களில் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு, 80 லட்சத்து 21 ஆயிரத்து 293 வாக்குகள் கிடைத்தன.

இந்தத் தேர்தலில், அனுதாப அலையையும் மீறி 4 இடங்களில் சுயேட்சை வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

9-வது பொதுத்தேர்தல் **- 1989**

ஒன்பதாவது சட்டப்பேரவைத் தேர்தல், 1989-ம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் கூட்டணிகள் அமையவில்லை. நான்கு முனைப் போட்டி நிலவியது.

3,046 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஈரோடு தொகுதியில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

50 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தலில் செல்லுபடியான வாக்குகள், 2 கோடியே 41 லட்சத்து 11 ஆயிரத்து 468. செல்லாதவை 4 லட்சத்து 83 ஆயிரத்து 548.

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி 169 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க. 146, அதன் கூட்டணிக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 15, ஜனதா கட்சி 4, முஸ்லிம் லீக் 4 இடங்களில் வெற்றி பெற்றன. 91 லட்சத்து 35 ஆயிரத்து 220 வாக்குகள் கிடைத்தன. 37.9 விழுக்காடு.

அண்ணா தி.மு.க. இரு அணிகளாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிட்டது. ஜெயலலிதா தலைமையிலான அணியினர் சேவல் சின்னத்திலும், ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையிலான அணியினர் இரட்டைப் புறா சின்னத்திலும் போட்டியிட்டனர்.

ஜெயலலிதா தலைமையிலான அணிக்கு 27 இடங்கள் கிடைத்தன. ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையிலான அணிக்கு ஒரேயொரு தொகுதி மட்டுமே கிடைத்தது. ஜெயலலிதா, போடிநாயக்கனூர் தொகுதியில் வெற்றி பெற்றார். ஜெயலலிதா தலைமையிலான அணிக்கு 50 லட்சத்து 98 ஆயிரத்து 687 வாக்குகள் கிடைத்தன. 22.2 விழுக்காடு.

ஆண்டிப்பட்டி தொகுதியில் போட்டியிட்ட ஜானகி அம்மையார், மூன்றாவது இடத்தைப் பெற்றுத் தோல்வியடைந்தார். அந்தக் கட்சியைச் சேர்ந்த பி.எச்.பாண்டியன், சேரன்மாதேவி தொகுதியில் வெற்றி பெற்றார். ஜானகி அம்மையார் அணி, 22 லட்சத்து 14 ஆயிரத்து 965 வாக்குகளைப் பெற்றது. 12.2 விழுக்காடு.

நடிகர் சிவாஜி கணேசன் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி, ‘தமிழக முன்னேற்ற முன்னணி’ என்ற கட்சியைத் தொடங்கி ஜானகி எம்.ஜி.ஆர். தலைமையிலான அண்ணா தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டார். இந்தக் கட்சி 50 இடங்களில் போட்டியிட்டது. ஆனால், 1 இடத்திலும் வெற்றி பெறவில்லை. தம் வாழ்நாளில் ஒரேயொரு முறை தேர்தலில் போட்டியிட்ட சிவாஜி கணேசன், திருவையாறு தொகுதியில் தோல்வியடைந்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களில் வெற்றி பெற்றது.

மூப்பனார் தலைமையில் தனித்துப் போட்டியிட்ட காங்கிரஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கட்சி, 26 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 47 லட்சத்து 80 ஆயிரத்து 714 வாக்குகளைப் பெற்றது. 19.8 விழுக்காடு. தம் வாழ்நாளில் ஒரேயொரு முறை தேர்தலில் போட்டியிட்ட மூப்பனார், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்றார்.

10-வது பொதுத்தேர்தல் **- 1991**

1991-ம் ஆண்டு, இந்திய நாடாளுமன்றத்துக்கும் தமிழ்நாடு சட்டப்பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெற்றது. அ.தி.மு.கழகமும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் கூட்டணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டன.

இந்தத் தேர்தல் பிரசாரத்தின்போது, 1991 மே 21-ம் நாள், ஸ்ரீ பெரும்புதூரில் ராஜீவ் காந்தி மனித வெடிகுண்டால் படுகொலை செய்யப்பட்டார். அவரது கொலைக்கு தி.மு.க-வினர்தான் காரணம் என்று கூறி, தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. முன்னணித் தலைவர்களது வீடுகளைத் தாக்கினர். பலர் கொல்லப்பட்டனர். தி.மு.க. பலத்த இழப்பைச் சந்தித்தது.

வாக்குப்பதிவு தள்ளி வைக்கப்பட்டு, ஜுன் 21-ம் நாள் தேர்தல் நடைபெற்றது.

ராஜீவ் காந்தியின் உடல் சிதறிக் கிடக்கின்ற படத்தை வண்ணச் சுவரொட்டிகளாக அச்சிட்டு, தமிழகம் முழுவதும் ஒட்டினர். அதனால் ஏற்பட்ட அனுதாப அலையால் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

மொத்தமுள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுள் 225 இடங்களை இந்தக் கூட்டணி கைப்பற்றியது. அ.தி.மு.க. 164, காங்கிரஸ் 60 இடங்களில் வெற்றி பெற்றது. அந்தக் கூட்டணிக்கு 1 கோடியே 47 லட்சத்து 38 ஆயிரத்து 42 வாக்குகள் கிடைத்தன. 59.8 விழுக்காடு.

தி.மு.க. கூட்டணிக்கு ஏழு இடங்களே கிடைத்தன. தி.மு.க. இரண்டு தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. கூட்டணிக்கு 74 லட்சத்து 5 ஆயிரத்து 935 வாக்குகள் கிடைத்தன.

தனித்துப் போட்டியிட்ட பாட்டாளி மக்கள் கட்சி, 1 இடத்தில் வெற்றி பெற்றது. 14 லட்சத்து 52 ஆயிரத்து 952 வாக்குகளைப் பெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

11-வது பொதுத்தேர்தல் **- 1996**

1996-ம் ஆண்டு பதினோராவது சட்டப் பேரவைத் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

ஐந்து ஆண்டுகள் அண்ணா தி.மு.க. ஆட்சியில், ஊழல் கோரத்தாண்டம் ஆடியது. அதனால், தேர்தலில் ஆட்சிக்கு எதிரான அலை பலமாக வீசியது. கடந்த தேர்தல் முடிவுகள் அப்படியே தலைகீழாக மாறின.

திராவிட முன்னேற்றக் கழகம் - தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக் கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. மொத்தமுள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுள், இந்தக் கூட்டணி 221 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. 173 இடங்களிலும், தமிழ் மாநில காங்கிரஸ் 39 தொகுதிகளிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 7, ஃபார்வர்டு பிளாக் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றன.

இந்தக் கூட்டணிக்கு, 1 கோடியே 46 லட்சத்து 78 வாக்குகள் கிடைத்தன. 53.8 விழுக்காடு.

அண்ணா தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டணிக்கு, நான்கு இடங்கள் மட்டுமே கிடைத்தன. காங்கிரஸ் கட்சிக்கு 1 இடம்கூடக் கிடைக்கவில்லை. இந்தக் கூட்டணிக்கு, 73 லட்சத்து 54 ஆயிரத்து 723 வாக்குகள் கிடைத்தன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், 15 லட்சத்து 69 ஆயிரத்து 168 வாக்குகளைப் பெற்றது. 1 இடம்கூடக் கிடைக்கவில்லை. அதன் கூட்டணியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 1 இடத்தில் வெற்றி பெற்றது. 4 லட்சத்து 56 ஆயிரத்து 172 வாக்குகளைப் பெற்றது. ஜனதா தளம் 1 இடத்தில் வெற்றி பெற்றது; 1 லட்சத்து 17 ஆயிரத்து 801 வாக்குகளைப் பெற்றது.

பாட்டாளி மக்கள் கட்சி, நான்கு தொகுதிகளில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சிக்கு 10 லட்சத்து 42 ஆயிரத்து 333 வாக்குகளும், அதன் கூட்டணிக் கட்சியான தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சிக்கு 2 லட்சத்து 9 ஆயிரத்து 942 வாக்குகளும் கிடைத்தன.

மொடக்குறிச்சி தேர்தல் வேடிக்கை

இந்தத் தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதியில், 1,033

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேட்பாளர்கள் போட்டியிட்டனர். விவசாயி சங்கத்தைச் சேர்ந்த இவர்கள், தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி, அனைத்திந்தியாவின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்வாறு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். அவர்களுள், 60 பழனிச்சாமி, 30 ராமசாமி, 28 சண்முகம், 27 சுப்பிரமணியன், 26 சின்னச்சாமி, 19 துரைசாமி, 13 குப்புசாமி இடம் பெற்றனர்.

வாக்குச்சீட்டுகளை உரிய காலத்தில் அச்சிட இயலவில்லை. எனவே, மே 2-ம் நாள் நடக்கவிருந்த தேர்தல் தள்ளி வைக்கப்பட்டு, ஜூன் 1-ம் தேதி தனியாக நடத்தப்பட்டது.

தி.மு.க. வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன், 64,436 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அ.தி.மு.க. வேட்பாளர் கிட்டுசாமிக்கு 24,896 வாக்குகளும், மறுமலர்ச்சி தி.மு.க. வேட்பாளர் இளஞ்செழியனுக்கு 20,403 வாக்குகளும் கிடைத்தன.

1,030 சுயேட்சை வேட்பாளர்கள், கட்டுத் தொகையை இழந்தனர். அவர்கள் பெற்ற மொத்த வாக்குகள், 7,480 மட்டுமே. பெரும்பாலான சுயேட்சை வேட்பாளர்கள் 10, 20 வாக்குகளே பெற்றிருந்தனர்.

அதிலும் வேடிக்கையாக, 24 பேர் 10 வாக்குகளும், 39 பேர் 9 வாக்குகளும், 33 பேர் 8 வாக்குகளும், 50 பேர் 7 வாக்குகளும், 70 பேர் 6 வாக்குகளும், 70 பேர் 5 வாக்குகளும், 79 பேர் 4 வாக்குகளும், 112 பேர் 3 வாக்குகளும், 156 பேர் 2 வாக்குகளும் மட்டுமே பெற்றனர்.

212 பேர் ஒரேயொரு வாக்கு மட்டுமே பெற்றார்கள். அதாவது, அந்த வேட்பாளரைத் தவிர, அவரது மனைவி, குடும்பத்தினர் யாருமே அவருக்கு வாக்களிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் சிகரமாக, 87 வேட்பாளர்கள் ஒரேயொரு வாக்குக்கூடப் பெறவில்லை. அதாவது, அந்த வேட்பாளர்கூட அவருக்கு ஓட்டுப் போடவில்லை.

12-வது பொதுத்தேர்தல் **- 2001**

பன்னிரண்டாவது சட்டப்பேரவைத் தேர்தல், 2001-ம் ஆண்டு மே மாதம் 10-ம் நாள் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. - தமிழ்மாநில காங்கிரஸ், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் பாரதிய ஜனதா, புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க., புதிய நீதிக் கட்சி, மக்கள் தமிழ் தேசம் ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், 213 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டது. அண்ணா தி.மு.க. கூட்டணி 196 தொகுதிகளில் வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியது.

அண்ணா தி.மு.க. 132, தமிழ்மாநில காங்கிரஸ் 23, பாட்டாளி மக்கள் கட்சி 20, இந்திய தேசிய காங்கிரஸ் 7, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 6, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 5 தொகுதிகளில் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு 1 கோடியே 40 லட்சத்து 43 ஆயிரத்து 980 வாக்குகள் கிடைத்தன. 50.1 விழுக்காடு.

தி.மு.க. கூட்டணிக்கு 37 இடங்கள் மட்டுமே கிடைத்தன. தி.மு.க. 31, பாரதிய ஜனதா கட்சி 4, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. 2 தொகுதிகளில் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு 1 கோடியே 8 லட்சத்து 41 ஆயிரத்து 157 வாக்குகள் கிடைத்தன. 38.7 விழுக்காடு.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், 13 லட்சத்து 4 ஆயிரத்து 469 வாக்குகளைப் பெற்றது.

13-வது பொதுத்தேர்தல் - 2006

பதிமூன்றாவது சட்டப்பேரவைத் தேர்தல், 2006-ம் ஆண்டு மே 8-ம் நாள் நடைபெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி, 157 தொகுதிகளில் வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. தி.மு.க-வுக்கு 95 இடங்களே கிடைத்தன. அதன் கூட்டணிக் கட்சிகளான, இந்திய தேசிய காங்கிரஸ் 34, பாட்டாளி மக்கள் கட்சி 18, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 9, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 6 தொகுதிகளில் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு 1 கோடியே 47 லட்சத்து 62 ஆயிரத்து 647 வாக்குகள் கிடைத்தன. 44.8 விழுக்காடு.

அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி, 69 இடங்களில் வெற்றி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றது. அண்ணா தி.மு.க. 61 தொகுதிகளிலும், ம.தி.மு.க. 6 இடங்களிலும், விடுதலைச் சிறுத்தைகள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றன. இந்தக் கூட்டணிக்கு 1 கோடியே 31 லட்சத்து 66 ஆயிரத்து 445 வாக்குகள் கிடைத்தன. 39.9 விழுக்காடு.

தனித்துப் போட்டியிட்ட தேசிய முற்போக்கு திராவிட கழகம், 8.38 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. விருத்தாசலம் தொகுதியில் மட்டும் வெற்றி பெற்றது.

புதுச்சேரி மாநிலத்தில், காங்கிரஸ் ஆட்சி அமைத்தது. 'அங்கே கூட்டணி ஆட்சியில் நாங்கள் பங்கு கேட்கமாட்டோம். எனவே, தமிழ்நாட்டில் தி.மு.க. அரசில் காங்கிரஸ் கட்சிக்கு இடமில்லை' என்பதாக தி.மு.க. தரப்பினர் தெரிவித்தனர். எனினும், ஆட்சியில் பங்கு வேண்டும் என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் விழைந்தனர். ஆனால், தி.மு.க. அதற்கு இடம் அளிக்கவில்லை.

14-வது பொதுத்தேர்தல் - 2011

மொத்த வாக்காளர்கள் 4 கோடியே 71 லட்சத்து 15 ஆயிரத்து 846 பேர். வாக்களித்தவர்கள் 3 கோடியே 67 லட்சத்து 56 ஆயிரத்து 813 பேர். 78 விழுக்காடு. அஞ்சல் வாக்குகளையும் சேர்த்து, 3 கோடியே 68 லட்சத்து 45 ஆயிரத்து 373 பேர். அஞ்சல் வாக்குகளில் தள்ளுபடி செய்யப்பட்டவை 23 ஆயிரத்து 319. மின்னணு வாக்குப்பதிவுக் கருவியிலிருந்து, 17,534 வாக்குகளைக் கணக்கிட முடியவில்லை. 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 2,748 பேர் போட்டியிட்டனர்.

அ.தி.மு.க. 165 தொகுதிகளில் போட்டியிட்டு, 150 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 1 கோடியே 41 லட்சத்து 50 ஆயிரத்து 289 வாக்குகளைப் பெற்றது. 38.40 விழுக்காடு.

தி.மு.க. 124 தொகுதிகளில் போட்டியிட்டு, 23 இடங்களில் வெற்றி பெற்றது. 82 லட்சத்து 49 ஆயிரத்து 991 வாக்குகளைப் பெற்றது. 22.39 விழுக்காடு.

பாட்டாளி மக்கள் கட்சி 30 தொகுதிகளில் போட்டியிட்டு, 3 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 19 லட்சத்து 27 ஆயிரத்து 783 வாக்குகளைப் பெற்றது. (5.23 விழுக்காடு வாக்குகள்)

தேசிய முற்போக்கு திராவிட கழகம் 41 தொகுதிகளில் போட்டியிட்டு, 29 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 29 லட்சத்து 3 ஆயிரத்து 828 வாக்குகளைப் பெற்றது. 7.88 விழுக்காடு.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளில் போட்டியிட்டு, 5 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 34 லட்சத்து 26 ஆயிரத்து 432 வாக்குகளைப் பெற்றது. 9.30 விழுக்காடு.

பாரதிய ஜனதா கட்சி, 204 தொகுதிகளில் போட்டியிட்டது. ஆனால், ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. 8 லட்சத்து 19 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்றது. 2.22 விழுக்காடு வாக்குகள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 10 தொகுதிகளில் போட்டியிட்டு, 9 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 7 லட்சத்து 27 ஆயிரத்து 394 வாக்குகளைப் பெற்றது. 1.97 விழுக்காடு வாக்குகள்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 12 தொகுதிகளில் போட்டியிட்டு, 10 இடங்களில் வெற்றி பெற்றது. 8 லட்சத்து 88 ஆயிரத்து 364 வாக்குகளைப் பெற்றது. 2.41 விழுக்காடு வாக்குகள்.

இந்தத் தேர்தலில் அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணியில், தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், சமத்துவ மக்கள் கட்சி ஆகியவை இணைந்து போட்டியிட்டன.

மனிதநேய மக்கள் கட்சி 2, புதிய தமிழகம் 2, சமத்துவ மக்கள் கட்சி 2 ஆகியவை அ.தி.மு.கழகத்தின் தேர்தல் சின்னமான இரட்டை இலை சின்னத்திலேயே போட்டியிட்டனர்.

அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் ஒரு தொகுதியில் வெற்றி பெற்றது. அந்தக் கட்சி, தங்களது சிங்கம் சின்னத்திலேயே போட்டியிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, கொங்குநாடு முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன.

இந்திய ஜனநாயகக் கட்சி 126 தொகுதிகளில் போட்டியிட்டு, 2 லட்சத்து 18 ஆயிரத்து 865 வாக்குகளைப் பெற்றது. 0.59 விழுக்காடு.

இந்தத் தேர்தலில், சுவரொட்டிகள் ஒட்டுவது, சுவர் விளம்பரங்கள் செய்வது, கொடிகளைக் கட்டுவது போன்றவற்றைத் தேர்தல் ஆணையம் தடை செய்தது. அனுமதி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்ற தனியார் சுவர்களில் மட்டுமே சுவர் விளம்பரங்ளை எழுதலாம். ஆனால், தேர்தல் செலவுக் கணக்கில் இடம் பெறக்கூடும் என்பதால், அதையும் வேட்பாளர்கள் தவிர்த்தனர் என்றே சொல்லலாம்.

ஒரு தேர்தல் நடப்பதற்கான பரபரப்போ, அறிகுறியோ இல்லாத அளவுக்கு இந்தத் தேர்தல் நடைபெற்றது. சாலைகளில் செல்கின்ற வாகனங்கள் சோதனை இடப்பட்டன. உரிய ஆவணங்களின்றி கொண்டுச் செல்லப்பட்ட பணம், பறிமுதல் செய்யப்பட்டது. அவற்றைக் கணக்குக் கொடுத்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

திருச்சியில் சாலையில் நின்று கொண்டிருந்த ஒரு பேருந்தின் மேற்கூரையில் வைக்கப்பட்டிருந்த ஐந்து கோடி%பாய் பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதுதான் தமிழகத் தேர்தல் வரலாற்றில் கைப்பற்றப்பட்ட மிகப் பெரிய தொகை.

கூடுதல் வாக்குகளில் வெற்றி

சோழிங்கநல்லூர் தொகுதியில், கே.கே. பாண்டியன் (அ.தி.மு.க.) 67 ஆயிரம் வாக்குகள்; உளுந்தூர்பேட்டை குமரகுரு (அ.தி.மு.க.) 53,508 வாக்குகள்; கள்ளக்குறிச்சி (தனி) அழகுவேலு (அ.தி.மு.க.) 60,352 வாக்குகள்; சேலம் தெற்கு செல்வராஜ் (அ.தி.மு.க.) 60,437 வாக்குகள்; அவிநாசி (தனி) கருப்புசாமி (அ.தி.மு.க.) 61,410 வாக்குகள்; திருப்பூர் (வடக்கு) ஆனந்தன் (அ.தி.மு.க.) 73,271 வாக்குகள்; பல்லடம் பரமசிவம் (அ.தி.மு.க.) 69,776 வாக்குகள்; கவுண்டம்பாளையம் ஆறுக்குட்டி (அ.தி.மு.க.) 69,525 வாக்குகள்; தொண்டாமுத்தூர் வேலுமணி (அ.தி.மு.க.) 53,297 வாக்குகள்; ஆத்தூர் ஐ.பெரியசாமி (திமுக) 53,932 வாக்குகள்; வேடசந்தூர் பழனிச்சாமி (அ.தி.மு.க.) 50,911 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுச் சாதனை படைத்தனர்.

குறைந்த வாக்குகளில் வெற்றி

எழும்பூர் (தனி) தொகுதியில் தே.மு.தி.க. வேட்பாளர் நல்லதம்பி 202 வாக்குகளும், செங்கல்பட்டு தொகுதியில் தே.மு.தி.க. வேட்பாளர் முருகேசன் 291 வாக்குகளும் மட்டுமே கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றனர்.

நத்தம் தொகுதியில், எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர் ஆண்டி அம்பலம், 29,825 வாக்குகள் பெற்று

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரண்டாம் இடம் பெற்றார்.

ஓசூர் தொகுதியில் சத்யா என்கிற கட்சி சாராத தனி வேட்பாளர், 24,639 வாக்குகள் பெற்றார். மணப்பாறை தொகுதியில், அண்ணா தி.மு.க. முன்னாள் அமைச்சர் பொன்னுசாமி தனித்துப் போட்டியிட்டு, 52,138 வாக்குகள் பெற்றார். இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளர் ஒருவர் பெற்ற அதிக வாக்குகள் இதுவே. இவர் அ.தி.மு.க. ஆட்சியில் கல்வி அமைச்சராக இருந்தபோது ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, நீதிமன்றத்தில் தண்டனை பெற்று, மூன்று ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்துவிட்டு வெளியே வந்தவர். அதற்குப்பின்னரும் தனிப்பட்ட செல்வாக்கால் இவ்வளவு வாக்குகள் பெற்றிருக்கின்றார்.

திருச்சி மாவட்டத்தில், தி.மு.க. முன்னாள் மாவட்டச் செயலாளரும் தொட்டியம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான முசிறி கண்ணையன் சுயேட்சையாக 19,193 வாக்குகள் பெற்றார்.

சட்டமன்ற இடைத்தேர்தல்கள்

இந்திய விடுதலைக்குப் பிறகு அமைந்த தமிழகச் சட்டமன்றத்துக்கு, இதுவரையிலும் 46 இடைத்தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. தொடக்கத்தில், ஆட்சியைப் பற்றிய மக்கள் மதிப்பீட்டை எடுத்துக்காட்டுகின்ற வகையில், இடைத்தேர்தல்கள் அமைந்தன. எனவே, தேர்தல் பிரசாரத்தில் அனல் பறந்தது. எனினும், எட்டுத் தொகுதிகளைத் தவிர, இதுவரையிலும் இடைத்தேர்தல்களில் அதிகார பலம், பண பலத்தின் துணையோடு ஆளுங்கட்சிகளே தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாக, 1990-க்குப் பிறகு, இடைத்தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறவே முடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

2008-ம் ஆண்டு, தி.மு.க. ஆட்சியின்போது நடைபெற்ற திருமங்கலம் இடைத்தேர்தலில், தொகுதியின் அனைத்து வாக்காளர்களுக்கும் பணமும் பரிசுப் பொருட்களும் கொடுக்கப்பட்டன. அனைத்திந்திய அளவில் இந்தத் தேர்தல், மாபெரும் சீர்கேட்டுக்கு வழிவகுத்தது எனலாம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தல்கள் குறித்த சில குறிப்புகளைக் காணலாம்.

குடியாத்தம் இடைத்தேர்தல்

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ராஜாஜி முதல்வராகப் பொறுப்பேற்றார். ‘பள்ளிகளில் கல்வி பெறும் மாணவர்கள், அவர்களது குலத்தொழிலிலும் பயிற்சிபெற வேண்டும்’ என அறிவித்தார். இந்தக் குலக்கல்வித் திட்டத்தை பெரியார் கடுமையாக எதிர்த்துப் பிரசாரம் செய்தார். பல முனைகளிலும் ராஜாஜிக்கு எதிர்ப்பு வலுத்தது. காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயும் எழுந்த எதிர்ப்பால், ராஜாஜி முதல்வர் பதவியைவிட்டு விலகினார்.

காமராஜர், முதல்வராகப் பொறுப்பேற்றார். ஆனால், அப்போது அவர் சட்டமன்ற உறுப்பினராக இல்லை. அவருக்காக குடியாத்தம் தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பதவி விலகினார்.

எனவே, 1956-ம் ஆண்டு குடியாத்தம் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் காமராஜர் போட்டியிட்டார். அவருக்குத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் ஆதரவு அளித்தனர். காமராஜர் வெற்றி பெற்றார்.

1963-ம் ஆண்டு, திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், தி.மு.க. வேட்பாளர் ப.உ.சண்முகம் காங்கிரஸ் வேட்பாளர் பத்ராசலம் பிள்ளையைவிட, 1,475 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1962-ல் திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளர் ப.சுப்பராயனை குடந்தை அரசு கலைக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த செ.கந்தப்பன், தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தென்காசி சட்டமன்றத் தொகுதி உறுப்பினரான ஈஸ்வரன்பிள்ளை இறந்ததால், 1969-ம் ஆண்டு அந்தத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தல் பிரசாரத்துக்காகவே, எம்.ஜி.ஆர். ‘புதியபூமி’ என்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

திரைப்படத்தை உருவாக்கி, முதன்முறையாக தென்காசியில் வெளியிட்டுப் பிரசாரமும் செய்தார். அந்தப் படத்தில் கதாநாயகன் எம்.ஜி.ஆரின் பெயர் கதிரவன். அதுதான், தி.மு.க. வேட்பாளரின் பெயர். வில்லன் நம்பியாரின் பெயர், காங்கேயன். அதாவது, ‘காங்கிரஸ்’ என்ற கட்சியைக் குறிக்கின்ற வகையில் அந்தப் பெயரைச் சூட்டியிருந்தார்கள்.

அண்ணா தலைமையிலான தி.மு.க. ஆட்சி, பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கியிருந்தது. 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வாக்குறுதி அளித்தபடி, கோவை மாவட்டத்தில் ஒரு படி அரிசித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தது. இந்த இரண்டு சாதனைகளையும் கூறி, தி.மு.க-வினர் வாக்குக் கேட்டனர். இடைத்தேர்தலில், தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட கா.மு.கதிரவன் என்கிற சம்சுதீன் வெற்றி பெற்றார்.

1974-ம் ஆண்டு, கோவை மேற்கு சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்த செ.அரங்கநாயகம் வெற்றி பெற்றார். காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் இரண்டாம் இடம் பெற்றது. ஆளுங்கட்சியான தி.மு.க. வேட்பாளர், மூன்றாம் இடம் பெற்றார். தமிழகத்தின் அரசியலில், எம்.ஜி.ஆரின். செல்வாக்கு மேலும் உறுதிப்பட்டது.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது, மயிலாடுதுறை, அண்ணா நகர், உப்பிலியா புரம், மருங்காபுரி ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் ஒரே நேரத்தில் சட்டமன்ற இடைத்தேர்தல்கள் நடைபெற்றன. இதில், மயிலாடுதுறை, அண்ணா நகர் ஆகிய தொகுதிகளில் தி.மு.க-வும், உப்பிலியா புரம், மருங்காபுரி ஆகிய தொகுதிகளில் அண்ணா தி.மு.க-வும் வெற்றி பெற்றன.

1980-ம் ஆண்டு மார்ச் மாதம், திருச்செந்தூர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், அண்ணா தி.மு.க. வேட்பாளர் அமிர்தராஜ், தி.மு.க. வேட்பாளர் நெல்லை நெடுமாறனை விட, 1,710 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1980-ம் ஆண்டு மே மாதம், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளர் இராம. அருணகிரியை, தி.மு.க., அண்ணா தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளுமே ஆதரித்தன. அவர் வெற்றி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றார். ‘ஒரு கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் இறந்தால், அதே கட்சியைச் சேர்ந்தவரே தேர்ந்தெடுக்கப்படுவதை அ.தி.மு.க. ஆதரிக்கிறது’ என்று எம்.ஜி.ஆர். புதிய விளக்கம் கொடுத்தார். ஆனால், அதற்குப் பின்னர் நடைபெற்ற இடைத்தேர்தல்களில், அ.தி.மு.க. இந்தக் கொள்கையைப் பின்பற்றவில்லை.

பெரணமல்லூர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், அ.தி.மு.க. வேட்பாளர் சின்னக்குழந்தை வெற்றி பெற்றார். இவர், ஆரணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் முன்பு பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி சட்டப்பேரவை உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட பாளை நாராயணன், மாரடைப்பால் இயற்கை எய்தினார். 1986-ம் ஆண்டு இந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட ஆர்.எம். வீரப்பன் வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளராக ஏ.எல்.சுப்பிரமணியன் போட்டியிட்டார்.

1989 பொதுத் தேர்தலின்போது வேட்பாளர்கள் இறந்ததால், தள்ளி வைக்கப்பட்ட மருங்காபுரி, மதுரை கிழக்கு ஆகிய தொகுதிகளில் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தொகுதிகளில், மீண்டும் இரட்டை இலைச் சின்னம் கிடைத்ததால், அ.தி.மு.க. தொண்டர்கள் எழுச்சியோடு தேர்தல் பணி ஆற்றினார்கள். இரண்டு தொகுதிகளிலும் அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றார்கள்.

1991-ம் ஆண்டு, எழும்பூர் தொகுதியில் ஒரு வேட்பாளர் படுகொலை செய்யப்பட்டதால், தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டு, தனியாக வாக்குப் பதிவு நடந்தது. தி.மு.க. வேட்பாளர் பரிதி இளம்வழுதி வெற்றி பெற்றார்.

1991-ம் ஆண்டு, ஜெயலலிதா இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர், காங்கேயம் தொகுதி உறுப்பினர் பொறுப்பைவிட்டு விலகினார். அந்தத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் (1992) போட்டியிட்ட ஆர்.எம்.வீரப்பன், சுமார் 90,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1991-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. சார்பில் கலைஞர் கருணாநிதி மட்டுமே வெற்றி பெற்றார். எனவே,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கட்சியின் தோல்விக்குப் பொறுப்பேற்று, “நான் சட்டப்பேரவை உறுப்பினர் பொறுப்பைவிட்டு விலகுகிறேன்” என்று அறிவித்தார். அதனால் அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் அ.செல்வராசன் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தஞ்சாவூர் இடைத்தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளர் அய்யாறு வாண்டையார் வெற்றி பெற்றார்.

1994-ம் ஆண்டு நடைபெற்ற பெருந்துறை, மயிலாப்பூர் சட்டமன்றத் தேர்தல்களில், அ.தி.மு.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

1996-ம் ஆண்டு புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் இயற்கை எய்தியதால், இடைத்தேர்தல் நடைபெற்றது. தி.மு.க. வேட்பாளர் மாரி அய்யா வெற்றி பெற்றார்.

ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில், ஜெயலலிதா வெற்றி பெற்றார்.

கும்மிடிப்பூண்டி, காஞ்சிபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில், அ.தி.மு.க. வெற்றி பெற்றது.

வாணியம்பாடியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், அ.தி.மு.க. வேட்பாளர் ஆர்.வடிவேலு வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளராக நாகூர் ஹனீபா போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

சாத்தான்குளம் சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், அ.தி.மு.க. வேட்பாளர் நீலமேகவர்ணம் வெற்றி பெற்றார். சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் நடிகர் ராதாரவி (அ.தி.மு.க.) வெற்றி பெற்றார்.

2006-ம் ஆண்டு, பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அமைச்சராகப் பொறுப்பேற்று, மதுரைக்குச் சென்ற வழியில் ரயிலிலேயே மாரடைப்பால் இயற்கை எய்தினார். ரயில் நிலையத்தில் வரவேற்பு, இறுதி ஊர்வலமாக மாறிற்று. அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், தி.மு.க. வேட்பாளர் கவுஸ் பாட்சா வெற்றி பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மதுரை மேற்கு தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சண்முகம் மாரடைப்பால் இயற்கை எய்தினார். அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ராஜேந்திரன் வெற்றி பெற்றார்.

2008-ம் ஆண்டு, திருமங்கலம் தொகுதியின் ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருந்த வீர.இளவரசன், மாரடைப்பால் திடீரென இயற்கை எய்தியதால், திருமங்கலம் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில்தான், இந்தியாவிலேயே முதன்முறையாக 90 விழுக்காடு வாக்குகள் பதிவாகின. வாக்குப்பதிவு அன்று கடைசி ஒரு மணி நேரத்தில் 30 விழுக்காடு வாக்குகள் பதிவாகின. பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றன. அதுபற்றிய செய்திகளைத் தமிழக மக்கள் விரிவாக அறிவர்.

கம்பம், தொண்டாமுத்தூர் ஆகிய தொகுதிகளில் ம.தி.மு.கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற, கம்பம் ராமகிருஷ்ணன், மு.கண்ணப்பன் ஆகியோர் அந்தக் கட்சியிலிருந்து விலகி தி.மு.க-வில் சேர்ந்ததால், தங்கள் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினர். இதனால் அந்தத் தொகுதிகளில் இடைத்தேர்தல் வந்தது.

ஸ்ரீவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான, ஊர்வசி செல்வராஜ் மாரடைப்பால் இயற்கை எய்தினார். இளையாங்குடி தொகுதியில், தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் கண்ணப்பன், அந்தக் கட்சியிலிருந்து விலகி அ.தி.மு.க-வில் சேர்ந்ததால் பதவி விலகினர்.

பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த தம்பிதுரை, நாடாளுமன்றத் தேர்தலில் கரூர் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பைவிட்டு விலகினார். இந்த இடைத்தேர்தல்களை அ.தி.மு.க. புறக்கணித்தது. ஆளுங்கட்சிக் கூட்டணியே வெற்றி பெற்றது.

நிறுத்தி வைக்கப்பட்ட தேர்தல்

முன்பு, ஒரு தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் யாரேனும் இறந்துவிட்டால், அந்தத் தொகுதியில் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தற்போது, தேர்தல் ஆணையத்தால் ஏற்பு அளிக்கப்பட்ட முதன்மையான கட்சிகளின் வேட்பாளர்கள் இறந்தால் மட்டுமே தேர்தல் நிறுத்தி வைக்கப்படும். எந்தக் கட்சியையும் சாராத வேட்பாளர்கள் இறந்தால், தேர்தல் நிறுத்தி வைக்கப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

உலகின் பல நாடுகளில், ஒரு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் இறந்தால், அந்தக் கட்சியே வேறு ஒருவரை அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக நியமனம் செய்கின்றன. அதே முறையைப் பின்பற்றி, இந்தியாவிலும் இடைத் தேர்தல்கள் தேவையில்லை என்று பல கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள்

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் 62 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தன.

வெற்றி பெற்ற வேட்பாளர்கள்

ஆந்திரா

1. பாதபட்ணம் - வி.வி.கிரி (காங்கிரஸ்)
2. ஸ்ரீகாகுளம் - பி.ராஜகோபாலராவ் (சுயேச்சை)
3. பார்வதிபுரம் - என்.ராமசேஷையா (சுயேச்சை)
4. விஜயநகரம் - கண்டால சுப்பிரமணியம் (எஸ்பி)
5. விசாகப்பட்டினம் - இரட்டை உறுப்பினர் தொகுதி

   (அ) இலங்கா சுந்தரம் (சுயேச்சை)
6. காகிநாடா - சி. வெங்கடராமராவ் (இந்திய கம்யூனிஸ்ட்)
7. ராஜமுந்திரி - இரட்டை உறுப்பினர் தொகுதி

   (அ) கானட்டி மோகனராவ்
8. ஏலுரு - இரட்டை உறுப்பினர் தொகுதி

   (அ) கே. சுப்பாராவ் (இந்திய கம்யூனிஸ்ட்)
9. மசூலிப்பட்டினம் - சங்கா புத்தேகி கோட்டையா (இந்திய கம்யூனிஸ்ட்)
10. குடிவாடா - கே. கோபாலராவ் (இந்திய கம்யூனிஸ்ட்)
11. விஜயவாடா - ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா (சுயேச்சை)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

12. தெனாலி - கோட்டா ரகுராமையா (காங்கிரஸ்)
13. குண்டூர் - எஸ்.வி.லட்சுமி நரசிம்மம் (சுயேச்சை)
14. நரசராவ்பேட் - சப்பலமடுகு ராமைய செளத்திரி (சுயேச்சை)
15. ஓங்கோல் - இரட்டை உறுப்பினர் தொகுதி
(அ). எம். நானாதாஸ் (சுயேச்சை)
16. நெல்லூார் - பெஜவாடா ராமச்சந்திர ரெட்டி (சுயேச்சை)
17. நந்தியால் - சேஷகிரிராவ் (சுயேச்சை)
18. கர்னூல் - ஹெச்.சீதாராம ரெட்டி (காங்கிரஸ்)
19. பெல்லாரி - டி.சுப்பிரமணியம் (காங்கிரஸ்)
20. அனந்தப்பூர் - பி.லெட்சுமையா (காங்கிரஸ்)
21. பெனுகொண்டா - கே.எஸ். ராகவாச்சாரி (கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி)
22. கடப்பா - எடுலா ஈஸ்வர ரெட்டி (இந்திய கம்யூனிஸ்ட்)
23. சித்தூர் - இரட்டை உறுப்பினர் தொகுதி
(அ) டி.என்.விஸ்வநாத ரெட்டி (காங்கிரஸ்)
24. திருப்பதி - எம்.அனந்தசயனம் ஐயங்கார் (காங்கிரஸ்)

அப்போதைய தமிழகப் பகுதிகளில், 31 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தன.

25. மெட்ராஸ் - டி.டி.கிருஷ்ணமாச்சாரி.
26. திருவள்ளூர் - இரட்டை உறுப்பினர் தொகுதி
(அ). மரகதம் சந்திரசேகர் (காங்கிரஸ்)
27. செங்கல்பட்டு - ஓ.வி.அழகேசன் (காங்கிரஸ்)
28. காஞ்சிபுரம் - ஏ. கிருஷ்ணசாமி (சி.டபுள்யு.எல்)
29. வேலூார் - இரட்டை உறுப்பினர் தொகுதி
(அ) முத்துகிருஷ்ணன் (காங்கிரஸ்)
30. வந்தவாசி - முனிசாமி (சி.கீ.லி.)
31. கிருஷ்ணகிரி - சி.ஆர்.நரசிம்மன் (காங்கிரஸ்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

32. தர்மபுரி - என்.சத்யநாதன் (சுயேச்சை)

33. சேலம் - எஸ்.வி.ராமசாமி (காங்கிரஸ்)

34. ஈரோடு - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ). பாலகிருஷ்ணன் (காங்கிரஸ்)

35. திருச்செங்கோடு - பேபி (எ) கந்தசாமி (சுயேச்சை)

36. திருப்பூர் - டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார்.

37. பொள்ளாச்சி - தாமோதரம் (காங்கிரஸ்)

38. கோவை, டி.ஏ.ராமலிங்கம் செட்டியார் (காங்கிரஸ்) போட்டியின்றித் தேர்வு

39. புதுக்கோட்டை - கே.எம்.வல்லத்தரசு (கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி)

40. பெரம்பலூர் - பூரா ரங்கசாமி படையாச்சி (தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி)

41. திருச்சிராப்பள்ளி - இ.மதுரம் (சுயேச்சை)

42. தஞ்சாவூர் - ஆர்.வெங்கட்ராமன் (காங்கிரஸ்) (பின்னாளில் குடியரசுத் தலைவர்)

43. கும்பகோணம் - சி.ராமசாமி முதலியார் (காங்கிரஸ்)

44. மாயூரம் - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ). கே.அனந்த நம்பியார் (இந்திய கம்யூனிஸ்ட்)

45. கடலூர் - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) கோவிந்தசாமி கச்சிராயர் (தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி)

46. திண்டிவனம் - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) ஏ.ஜெயராமன் (தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி)

47. திருநெல்வேலி - தாணுப்பிள்ளை (காங்கிரஸ்)

48. ஸ்ரீவைகுண்டம் - ஏ.வி.தாமஸ் (காங்கிரஸ்)

49. சங்கரநயினார்கோவில் - எம். சங்கரபாண்டியன் (காங்கிரஸ்)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

50. அருப்புக்கோட்டை - உ.முத்துராமலிங்கத் தேவர் (ஃபார்வர்டு பிளாக் எம்ஜி)

51. ராமநாதபுரம் - நாகப்ப செட்டியார் (காங்கிரஸ்)

52. ஸ்ரீவில்லிபுத்தூர் - கே.காமராஜ் நாடார் (காங்கிரஸ்)

(கோவை விஞ்ஞானி ஜி.டி.நாயுடு, காமராஜரை எதிர்த்து சுயேச்சையாக போட்டியிட்டு, இரண்டாம் இடம் பெற்றார்.)

53. மதுரை - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) பாலசுப்பிரமணியம் (காங்கிரஸ்)

(ஆ) பி.எம்.கக்கன் (காங்கிரஸ்)

54. பெரியகுளம் - சக்திவடிவேல் கவுண்டர் (காங்கிரஸ்)

55. திண்டுக்கல் - அம்மு சுவாமிநாதன் (காங்கிரஸ்)

(நேதாஜி படையின் மகளிர் பிரிவு கேப்டன் லட்சுமியின் தாயார்.)

குடகு, மலபார், வடக்குக் கேரளா

56. தெற்கு கனரா (வடக்கு) - ஸ்ரீநிவாச மல்லையா (காங்கிரஸ்)

57. தெற்கு கனரா (தெற்கு) - பி. சிவராவ் (காங்கிரஸ்)

58. கண்ணனூர் - ஏ.கே.கோபாலன் (இந்திய கம்யூனிஸ்ட்)

59. தலைச்சேரி - எம்.தாமோதரன் (கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி)

60. கோழிக்கோடு - அச்சுதன் தாமோதரன் மேனன் (கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி)

61. மலப்புரம் - பி.பொக்கர் (முஸ்லிம் லீக்)

62. பொன்னானி - இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) கேளப்பன் கோயாபள்ளி (கிஸான் மஸ்தூர் பிரஜா பார்ட்டி)

நாடாளுமன்றத் தேர்தல் **1957**

இந்தத் தேர்தலில் சென்னை மாகாணத்தில், 34 தொகுதிகளிலிருந்து 41 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

செங்கல்பட்டு, வேலூர், சிதம்பரம், நாகப்பட்டினம், ஸ்ரீவில்லிபுத்தூர், திண்டுக்கல், நாமக்கல் ஆகியவை இரட்டை உறுப்பினர் தொகுதிகளாகும்.

சராசரியாக ஒவ்வொரு தொகுதியிலும், 4 முதல் 5 லட்சம் வாக்காளர்கள் இருந்தனர். காங்கிரஸ் கட்சியை எதிர்த்து பெரும்பாலான தொகுதிகளில் சுயேச்சைகளே போட்டியிட்டனர். சில தொகுதிகளில் மட்டுமே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. தி.மு.க. வேட்பாளர்கள், சுயேச்சை சின்னத்தில் போட்டியிட்டனர்.

1. சென்னை (வடக்கு), எஸ்.சி.சி. அந்தோணி பிள்ளை (சுயேச்சை)
2. சென்னை (தெற்கு), டி.டி.கிருஷ்ண மாச்சாரி (காங்கிரஸ்)
3. செங்கல்பட்டு, இரட்டை உறுப்பினர் தொகுதி

   (அ) டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி (சுயேச்சை)
4. திருவள்ளூர், ஆர்.கோவிந்தராஜுலு (காங்கிரஸ்)
5. வேலூர், இரட்டை உறுப்பினர் தொகுதி

   (அ). என்.ஆர். முனிசாமி காங்கிரஸ்)
6. திருவண்ணாமலை, தர்மலிங்கம் (சுயேச்சை)
7. திருப்பத்தூர், ஏ.துரைசாமி (காங்கிரஸ்)
8. கிருஷ்ணகிரி, சி.ஆர்.நரசிம்மன் (காங்கிரஸ்)
9. திருச்செங்கோடு, டாக்டர் பி. சுப்பராயன் (காங்கிரஸ்)
10. சேலம், எஸ்.வி.ராமசாமி (காங்கிரஸ்)
11. சிதம்பரம், இரட்டை உறுப்பினர் தொகுதி

    (அ). ஆர்.கனகசபை

    (ஆ) இளையபெருமாள் (காங்கிரஸ்)
12. திண்டிவனம், சண்முகம் (சுயேச்சை)
13. கடலூர், டி.டி.முத்துக்குமாரசாமி (சுயேச்சை)

இந்தத் தொகுதியில், முத்துக்குமாரசாமி 98,605 வாக்குகளும் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் 98,546 வாக்குகளும்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெற்றனர். 59 வாக்குகள் கூடுதலாகப் பெற்று, முத்துக்குமாரசாமி நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

14. நாகப்பட்டினம், இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) கே.ஆர்.சம்பந்தம்

(ஆ) எம். அய்யாக்கண்ணு

15. கும்பகோணம், சி.ஆர். பட்டாபிராமன் (காங்கிரஸ்)

16. தஞ்சாவூர், ஆர்.வெங்கட்ராமன் (காங்கிரஸ்)

17. பெரம்பலூர், எம்.பழநியாண்டி (காங்கிரஸ்)

18. கரூர், கே.பெரியசாமி (காங்கிரஸ்)

19. திருச்சி, எம்.கே.எம்.அப்துல் சலாம் (காங்கிரஸ்)

20. புதுக்கோட்டை, ராமநாதன் (காங்கிரஸ்)

21. ராமநாதபுரம், சுப்பையா (காங்கிரஸ்)

22. ஸ்ரீவில்லிபுத்தூர், இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) உ.முத்துராமலிங்கத் தேவர் (சுயேச்சை)

(ஆ) எஸ்.எஸ்.நடராஜன் (காங்கிரஸ்)

23. நாகர்கோவில், தாணுலிங்க நாடார் (காங்கிரஸ்)

24. திருச்செந்தூர், டி. கணபதி (காங்கிரஸ்), போட்டியின்றித் தேர்வு

25. திருநெல்வேலி, பி.டி. தாணுப்பிள்ளை (காங்கிரஸ்)

26. தென்காசி, எம்.சங்கரபாண்டியன் (காங்கிரஸ்)

27. பெரியகுளம், ஆர்.நாராயணசாமி (காங்கிரஸ்)

28. மதுரை, கே.டி.கே.தங்கமணி (இந்திய கம்யூனிஸ்ட்)

29. திண்டுக்கல் இரட்டை உறுப்பினர் தொகுதி

(அ) எம்.குலாம் முகைதீன்

(ஆ) எஸ்.சி.பாலகிருஷ்ணா (காங்கிரஸ்)

30. பொள்ளாச்சி, பி.ஆர்.ராமகிருஷ்ணன் (காங்கிரஸ்)

31. நாமக்கல், இரட்டை உறுப்பினர் தொகுதி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(அ) ஈ.வி.கே.சம்பத் (சுயேச்சை)

தி.மு.க. தலைவர்களுள் ஒருவரான சம்பத், சுயேச்சை சின்னத்தில் போட்டியிட்டதால், ‘சுயேச்சை’ என்றே ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

32. கோபிசெட்டிப்பாளையம், ராமசாமி கவுண்டர் (காங்கிரஸ்)

33. கோவை, பார்வதி (இந்திய கம்யூனிஸ்ட்)

34. நீலகிரி, சி.நஞ்சப்பன் (காங்கிரஸ்)

நாடாளுமன்றத் தேர்தல் **1962**

இந்தத் தேர்தலில், இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கப்பட்டு, தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்திய தேசிய காங்கிரஸ்

1. வடசென்னை, பி.ஸ்ரீநிவாசன்

2. செங்கல்பட்டு, ஓ.வி.அழகேசன்

3. திருவள்ளூர், வி.கோவிந்தசாமி நாயுடு

4. வேலூர், அப்துல் வாஹித்

5. வந்தவாசி (தனி), ஜெயராமன்

6. திண்டிவனம், கே. வெங்கடசுப்பா ரெட்டியார்

7. சிதம்பரம், ஆர்.கனகசபை

8. திருக்கோயிலூர் (தனி), எல்.இளைய பெருமாள்

9. சேலம், எஸ்.வி.ராமசாமி

10. திருச்செங்கோடு, பி.சுப்பராயன்

11. நாமக்கல் (தனி), வி.கே.ராமசாமி

12. ஈரோடு, பரமசிவ கவுண்டர்

13. கோபிசெட்டிபாளையம், பி.ஜி.கருத்திருமன்

14. நீலகிரி, அக்கம்மாதேவி

15. கோவை, பி.ஆர்.ராமகிருஷ்ணன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

16. பொள்ளாச்சி, சி. சுப்பிரமணியம்

17. பெரியகுளம், மலைச்சாமி தேவர்

18. மதுரை, என்.எம்.ஆர். சுப்புராமன்

19. மேலூர் (தனி), மருதையா

20. திண்டுக்கல், சௌந்தரம் ராமச்சந்திரம்

21. கரூர், ஆர். ராமநாதன் செட்டியார்

22. கும்பகோணம், சி.ஆர்.பட்டாபிராமன்

23. மாயூரம் (தனி), மரகதம்

24. நாகப்பட்டினம், கோபால்சாமி தென்கொண்டார்

25. தஞ்சாவூர், வைரவ தேவர்

26. ராமநாதபுரம், என்.அருணாசலம்

27. கோவில்பட்டி (தனி), எஸ்.சி.பாலகிருஷ்ணன்

28. திருநெல்வேலி, முத்தையா

29. தென்காசி, எம்.பி.சாமி

30. நாகர்கோவில், ஏ.நேசமணி

திராவிட முன்னேற்றக் கழகம்

1. தென்சென்னை, நாஞ்சில் கி.மனோகரன் 2. ஸ்ரீபெரும்புதூர் (தனி), பி.சிவசங்கரன் 3. திருவண்ணாமலை, தர்மலிங்கம் 4. கடலூர், டி.ராமபத்திர நாயுடு 5. திருப்பத்தூர், ஆர்.முத்து கவுண்டர் 6. கிருஷ்ணகிரி, க.ராசாராம் 7. பெரம்பலூர், இரா.செழியன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

1. திருச்சிராப்பள்ளி, கே.அனந்தநம்பியார் 2. புதுக்கோட்டை, ஆர்.உமாநாத்.

ஃபார்வர்டு பிளாக்

1. அருப்புக்கோட்டை, உ. முத்து ராமலிங்கத் தேவர்

1962 நாடாளுமன்றத் தேர்தலில், தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே கூட்டணி ஏதுமில்லை என்றாலும், திருச்சி தொகுதியில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேட்பாளர், தொழிற்சங்கத் தலைவர் அனந்தன் நம்பியாரை தி.மு.க. ஆதரித்தது. அவர் வெற்றி பெற்றார். ரயில்வே தொழிலாளர்களுக்காக அவர் ஆற்றிய பணிகளுக்காக, அவர் நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்று கருதுவதால், தி.மு.க. ஆதரவளித்ததாக அண்ணா கூறினார்.

நாடாளுமன்றத் தேர்தல் **1967**

தி.மு.கழகம் 25 தொகுதிகளில் போட்டியிட்டு, அனைத்திலும் வெற்றி பெற்றது.

அக்கட்சியின் சார்பில், 1. நாஞ்சில் கி.மனோகரன் (வடசென்னை) 2. சி.என்.அண்ணாதுரை (தென்சென்னை) 3. பி.சிவசங்கரன் (ஸ்ரீபெரும்புதூர் தனி) 4. சி.சிட்டிபாபு (செங்கல்பட்டு) 5. எஸ்.கே.சம்பந்தன் (திருத்தணி) 6. குசேலர் (வேலூர் தனி), 7. ஆர்.எம்.கவுண்டர் (திருப்பத்தூர்) 8. ஜி.விஸ்வநாதன் (வந்தவாசி) 9. டி.டி.ஆர்.நாயுடு (திண்டிவனம்) 10. வி.கே.கவுண்டர் (கடலூர்) 11. வி.மாயவன் (சிதம்பரம் தனி) 12. எம்.தெய்வீகன் (கள்ளக்குறிச்சி) 13. எம்.கமலநாதன் (கிருஷ்ணகிரி) 14. க.ராசாராம் (சேலம்) 15. செ.கந்தப்பன் (மேட்டூர்) 16. க.அன்பழகன் (திருச்செங்கோடு) 17. நாராயணன் (பொள்ளாச்சி) 18. சி.டி.தண்டபாணி (தாராபுரம் தனி) 19. பி.ஏ.சாமிநாதன் (கோபிச்செட்டி பாளையம்) 20. என்.அன்புச்செழியன் (திண்டுக்கல்) 21. ஏ.துரைராசு (பெரம்பலூர்) 22. இரா.செழியன் (கும்பகோணம்) 23. கா.சுப்ரவேலு (மாயூரம் தனி) 24. டி.சோமசுந்தர கோபாலர் (தஞ்சாவூர்) 25. தா.கிருட்டிணன் (சிவகங்கை) ஆகியோர் வெற்றி பெற்றனர்.

சுதந்திரா கட்சி

1. எம்.கே.என்.கவுடர் (நீலகிரி) 2. அஜ்மல்கான் (பெரியகுளம்) 3. எம்.கவுண்டர் (கரூர்) 4. பி.ராமமூர்த்தி (சிவகாசி) 5. எஸ்.சேவியர் (திருநெல்வேலி) 6. சந்தோஷம் (திருச்செந்தூர்).

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி **(**மார்க்சிஸ்ட்**)**

1. கே.ரமணி (கோவை) 2. பி.ராமமூர்த்தி (மதுரை), 3. கே.அனந்த நம்பியார் (திருச்சி) 4. ஆர்.உமாநாத் (புதுக்கோட்டை)

ஷெரீப் (சுயேச்சை) ராமநாதபுரம்.

காங்கிரஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. வி.சாம்பசிவம் (நாகப்பட்டினம்) 2. ஆர்.எஸ்.ஆறுமுகம் (தென்காசி) 3. ஏ.நேசமணி (நாகர்கோவில்).

நாடாளுமன்றத் தேர்தல் **1971**

தி.மு.க.

1. நாஞ்சில் கி.மனோகரன் (வடசென்னை) 2. முரசொலி மாறன் (தென்சென்னை) 3. டி.எஸ்.லட்சுமணன் (ஸ்ரீபெரும்புதூர்,தனி) 4. சிட்டிபாபு (செங்கல்பட்டு) 5. ஆர்.பி.உலகநம்பி (வேலூர் தனி) 6. சி.கே.சின்னராஜு கவுண்டர் (திருப்பத்தூர்) 7. ஜி.விஸ்வநாதன் (வந்தவாசி) 8. வி.மாயவன் (சிதம்பரம்) 9. எம்.தெய்வீகன் (கள்ளக்குறிச்சி) 10. ஈ.ஆர்.கிருஷ்ணன் (சேலம்) 11. மா.முத்துசாமி (திருச்செங்கோடு) 12. ஜே.மாதா கவுடர் (நீலகிரி) 13. நாராயணன் (பொள்ளாச்சி) 14. சி.டி.தண்டபாணி (தாராபுரம் தனி) 15. பி.ஏ.சாமிநாதன் (கோபிச்செட்டி பாளையம்) 16. எம்.ராஜாங்கம் (திண்டுக்கல்) 17. ஏ.துரைராசு (பெரம்பலூர்) 18. கே.வீரையா (புதுக்கோட்டை) 19. இரா.செழியன் (கும்பகோணம்) 20. கா.சுப்ரவேலு (மாயூரம் தனி) 21. எஸ்.டி.சோமசுந்தரம் (தஞ்சாவூர்) 22. தா.கிருட்டிணன் (சிவகங்கை) 23. எம்.எஸ்.சிவசாமி (திருச்செந்தூர்).

இந்திய தேசிய காங்கிரஸ் **(**இந்திரா காந்தி பிரிவு**)**

1. ஓ.வி.அழகேசன் (திருத்தணி) 2. எம்.ஆர்.லட்சுமிநாராயணன் (திண்டிவனம்) 3. எஸ்.ராதாகிருஷ்ணன் (கடலூர்) 4. தீர்த்தகிரி கவுண்டர் (கிருஷ்ணகிரி) 5. ஜி.பூவராகன் (மேட்டூர்) 6. ஆர்.வி. சுவாமிநாதன் (மதுரை) 7. கோபால் (கரூர்) 8. வி.ஜெயலட்சுமி (சிவகாசி) 9. ஏ.எம்.செல்லச்சாமி (தென்காசி தனி).

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

1. கே.பாலதண்டாயுதம் (கோவை) 2. எம்.கல்யாணசுந்தரம் (திருச்சி) 3. கே.காத்தமுத்து (நாகப்பட்டினம்) 4. எஸ்.ஏ. முருகானந்தம் (திருநெல்வேலி).

சுயேச்சை: எஸ். முகமது ஷெரீப், பெரியகுளம்.

ஃபார்வர்டு பிளாக்: பி.கே. மூக்கையாத் தேவர், ராமநாதபுரம்

ஸ்தாபன காங்கிரஸ்: கே.காமராஜர், நாகர்கோவில்.

இந்தத் தேர்தலில், திருச்செந்தூர் தொகுதியில் வெற்றிபெற்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தி.மு.க. வேட்பாளர் சிவசாமி, 2,02,783 வாக்குகளும் எதிர்த்துப் போட்டியிட்ட டாக்டர் மத்தியாஸ் (சுதந்திரா கட்சி), 2,02, 757 வாக்குகளும் பெற்றனர். 26 வாக்குகள் மட்டுமே கூடுதலாகப் பெற்று, தி.மு.க. வெற்றி பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல் **1977**

அ.தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ் கூட்டணி 35 தொகுதிகளிலும், தி.மு.க., ஜனதா கட்சி கூட்டணி நான்கு தொகுதிகளிலும் வெற்றி பெற்றன.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. எஸ்.ஜெகநாதன் (ஸ்ரீபெரும்புதூர்) 2. இரா.மோகனரங்கம் (செங்கல்பட்டு) 3. சி.விஸ்வநாதன் (திருப்பத்தூர்) 4. வேணுகோபால் கவுண்டர் (வந்தவாசி) 5. ஏ.முருகேசன் (சிதம்பரம் தனி) 6. பி.வி.பெரியசாமி (கிருஷ்ணகிரி) 7. பி.கண்ணன் (சேலம்) 8. ஆர். குழந்தைவேலு (திருச்செங்கோடு) 9. பி.எஸ்.ராமலிங்கம் (நீலகிரி) 10. கே.ஏ.ராஜு (பொள்ளாச்சி) 11. கே.மாயத்தேவர் (திண்டுக்கல்) 12. எஸ்.ராமசாமி (பெரியகுளம்) 13. ஏ.அசோக்ராஜ் (பெரம்பலூர் தனி) 14. எஸ்.டி.சோமசுந்தரம் (தஞ்சாவூர்) 15. வி.எஸ். இளஞ்செழியன் (புதுக்கோட்டை) 16. பி.தியாகராஜன் (சிவகங்கை) 17. பொ.அன்பழகன் (ராமநாதபுரம்) 18. ஆலடி அருணா (எ) வி.அருணாசலம் (திருநெல்வேலி).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. ஆர்.வெங்கட்ராமன் (தென்சென்னை) 2. ஓ.வி.அழகேசன்(அரக்கோணம்) 3. எம்.ஆர்.லட்சுமிநாராயணன் (திண்டிவனம்) 4. ஜி.பூவராகன் (கடலூர்) 5. கே.ராமமூர்த்தி (தர்மபுரி) 6. ஜி.தேவராஜன் (ராசிபுரம் தனி) 7. கே.எஸ்.ராமசாமி (கோபிச்செட்டிபாளையம்) 8. சி.சுப்பிரமணியம் (பழநி) 9. ஆர்.வி.சுவாமிநாதன் (மதுரை) 10. கே.கோபால் (கரூர்) 11. குடந்தை என். ராமலிங்கம் (மயிலாடுதுறை) 12. வி.ஜெயலட்சுமி (சிவகாசி) 13. மூ.அருணாச்சலம் (தென்காசி தனி) 14. கே.டி.கோசல்ராம் (திருச்செந்தூர்).

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

1. பார்வதி கிருஷ்ணன் (கோவை) 2. எம்.கல்யாணசுந்தரம் (திருச்சிராப்பள்ளி) 3. எஸ்.ஜி.முருகையன் (நாகப்பட்டினம் தனி).

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜனதா கட்சி

1. பா.ராமச்சந்திரன் (மத்திய சென்னை) 2. வி.தண்டாயுதபாணி (வேலூர்) 3. குமரிஅனந்தன் (நாகர்கோவில்).

தி.மு.க. சார்பில், வடசென்னை தொகுதியில் போட்டியிட்ட ஏ.வி.பி. ஆசைத்தம்பி மட்டுமே வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் **1980**

மத்தியில் ஆட்சியிலிருந்த ஜனதா கட்சி அரசு கவிழ்ந்ததால், 1980-ம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்துக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது, தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காந்தி தலைமையிலான இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது.

அந்தத் தேர்தலில், மொத்தமுள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 37 இடங்களில் இக்கூட்டணி வெற்றி பெற்றது. இந்திய தேசிய காங்கிரஸ் 22 தொகுதிகளில் போட்டியிட்டு, 20 இடங்களில் வெற்றி பெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் 16 தொகுதிகளில் போட்டியிட்டு, அனைத்து இடங்களிலும் வெற்றி பெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. ஜி.லட்சுமணன் (வடசென்னை) 2. டாக்டர் அ.கலாநிதி (மத்திய சென்னை) 3. டி.நாகரத்தினம் (ஸ்ரீபெரும்புதூர் தனி) 4. எஸ்.முருகையன் (திருப்பத்தூர்) 5. வி.குழந்தைவேலு (சிதம்பரம் தனி) 6. கே.அர்ஜுனன் (தர்மபுரி) 7. சி. பழனியப்பன் (சேலம்) 8. எம். கந்தசாமி (திருச்செங்கோடு) 9. இரா.மோகன் (கோவை) 10. சி.டி.தண்டபாணி (பொள்ளாச்சி தனி) 11. கே.மாயத்தேவர் (திண்டுக்கல்) 12. கம்பம் என்.நடராஜன் (பெரியகுளம்) 13. என்.செல்வராஜ் (திருச்சி) 14. தாழை மு.கருணாநிதி (நாகப்பட்டினம் தனி) 15. எம்.எஸ்.கே.சத்தியேந்திரன் (ராமநாதபுரம்) 16. டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் (திருநெல்வேலி).

இந்திய தேசிய காங்கிரஸ் **(**இந்திரா**)**

1. ஆர்.வெங்கட்ராமன் (தென் சென்னை) 2. இரா.அன்பரசு (செங்கல்பட்டு) 3. ஏ.எம்.வேலு (அரக்கோணம்) 4. டி.பட்டுசாமி (வந்தவாசி) 5. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி (திண்டிவனம்) 6. ஆர்.முத்துக்குமரன் (கடலூர்) 7. கே.ராமமூர்த்தி (கிருஷ்ணகிரி) 8.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பி.தேவராஜன் (ராசிபுரம் தனி) 9. ஆர்.பிரபு (நீலகிரி) 10. சேனாபதி கவுண்டர் (பழநி) 11. ஏ.ஜி.சுப்புராமன் (மதுரை) 12. துரை செபாஸ்டியன் (கரூர்) 13. கே.பி.எஸ்.மணி (பெரம்பலூர் தனி) 14. குடந்தை என்.ராமலிங்கம் (மயிலாடுறை) 15. எஸ்.சிங்காரவடிவேல் (தஞ்சாவூர்) 16. வி.என்.சுவாமிநாதன் (புதுக்கோட்டை) 17. ஆர்.வி.சுவாமிநாதன் (சிவகங்கை) 18. மூ.அருணாசலம் (தென்காசி தனி) 19. கே.டி.கோசல்ராம் (திருச்செந்தூர்) 20. என்.டென்னிஸ் (நாகர்கோவில்).

முஸ்லிம் லீக்

ஏ.கே.எ.அப்துல் சமது (வேலூர்)

அ.இ.அ.தி.மு.க.

1. ஜி.சின்னசாமி (கோபிச்செட்டி பாளையம்) 2. வி.நல்லவன்(எ) சௌந்திரராஜன் (சிவகாசி).

அண்ணா தி.மு.க., ஜனதா கட்சி கூட்டணி இரண்டு இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

நாடாளுமன்றத் தேர்தல் **1984**

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. எஸ். ஜெகத்ரட்சன் (செங்கல்பட்டு) 2. ஏ.சி.சண்முகம் (வேலூர்) 3. எம்.தம்பிதுரை (தர்மபுரி) 4. பி.கண்ணன் (திருச்செங்கோடு) 5. பி.குழந்தைவேலு (கோபிச்செட்டிபாளையம்) 6. ஆர்.அண்ணாநம்பி (பொள்ளாச்சி தனி) 7. கே.ஆர்.நடராஜன் (திண்டுக்கல்) 8. பி.செல்வேந்திரன் (பெரியகுளம்) 9. எஸ்.தங்கராஜ் (பெரம்பலூர் தனி) 10. எம்.மகாலிங்கம் (நாகப்பட்டினம் தனி) 11. என்.சௌந்தர்ராஜன் (சிவகாசி) 12. கடம்பூர் இரா.ஜனார்த்தனம் (திருநெல்வேலி).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. வைஜெயந்திமாலா (தென்சென்னை) 2. மரகதம் சந்திரசேகர் (ஸ்ரீபெரும்புதூர், தனி) 3. ஆர்.ஜீவரத்தினம் (அரக்கோணம்) 4. ஏ.ஜெயமோகன் (திருப்பத்தூர்) 5. எல்.பலராமன் (வந்தவாசி) 6. எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சி (திண்டிவனம்) 7. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் (கடலூர்) 8.பி.வள்ளல்பெருமான் (சிதம்பரம் தனி) 9. கே.ராமமூர்த்தி (கிருஷ்ணகிரி) 10. பி.தேவராஜன் (ராசிபுரம் தனி) 11. ரங்கராஜன் குமாரமங்கலம் (சேலம்) 12. ஆர்.பிரபு (நீலகிரி) 13.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சி.கே. குப்புசாமி (கோவை) 14. சேனாபதி கவுண்டர் (பழநி) 15. ஏ.ஜி.சுப்புராமன் (மதுரை) 16. ஏ.ஆர்.முருகையா (கரூர்) 17. எல்.அடைக்கலராஜ் (திருச்சி) 18. இ.எஸ்.எம். பக்கீர் முகமது (மயிலாடுதுறை) 19. சிங்காரவடிவேல் (தஞ்சாவூர்) 20. என். சுந்தர்ராஜன் (புதுக்கோட்டை) 21. ப. சிதம்பரம் (சிவகங்கை) 22. வி.ராஜேஸ்வரன் (ராமநாதபுரம்) 23. மூ.அருணாசலம் (தென்காசி தனி) 24. கே.டி.கோசல்ராம் (திருச்செந்தூர்) 25. என்.டென்னிஸ் (நாகர்கோவில்).

திராவிட முன்னேற்றக் கழகம்

1. என்.வி.என்.சோமு (வடசென்னை) 2. டாக்டர் அ.கலாநிதி (மத்திய சென்னை).

நாடாளுமன்றத் தேர்தல் **1989**

இத்தேர்தலில் அண்ணா தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி 38 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. காஞ்சி பன்னீர்செல்வம் (செங்கல்பட்டு) 2. எம்.ஜி.சேகர் (தர்மபுரி) 3. கே.சி. பழனிச்சாமி (திருச்செங்கோடு) 5. பி.ஜி.நாராயணன் (கோபிச்செட்டி பாளையம்) 6. ராஜா ரவிவர்மா (பொள்ளாச்சி தனி) 7. சி. சீனிவாசன் (திண்டுக்கல்) 8. சேடபட்டி இரா.முத்தையா (பெரியகுளம்) 9. எம்.தம்பிதுரை (கரூர்) 10. ஏ.அசோக்ராஜ் (பெரம்பலூர் தனி) 10. எம். மகாலிங்கம் (நாகப்பட்டினம் தனி) 11. கா.காளிமுத்து (சிவகாசி) 12. கடம்பூர் இரா.ஜனார்த்தனம் (திருநெல்வேலி).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. இரா.அன்பரசு (மத்திய சென்னை) 2. வைஜெயந்திமாலா (தென்சென்னை) 3. மரகதம் சந்திரசேகர் (ஸ்ரீபெரும்புதூர், தனி) 4. ஆர்.ஜீவரத்தினம் (அரக்கோணம்) 5. ஏ.ஜெயமோகன் (திருப்பத்தூர்) 6. எல்.பலராமன் (வந்தவாசி) 7. எஸ்.எஸ்.ஆர்.ராமதாஸ் (திண்டிவனம்) 8. பி.ஆர்.எஸ்.வெங்கடேசன் (கடலூர்) 9. பி.வள்ளல்பெருமான் (சிதம்பரம் தனி) 10. வாழப்பாடி கே.ராமமூர்த்தி (கிருஷ்ணகிரி) 11. பி.தேவராஜன் (ராசிபுரம் தனி) 12. ரங்கராஜன் குமாரமங்கலம் (சேலம்) 13. ஆர்.பிரபு (நீலகிரி) 14. சி.கே. குப்புசாமி (கோவை) 15. சேனாபதி கவுண்டர் (பழநி) 15. ஏ.ஜி.எஸ். ராம்பாபு (மதுரை) 16.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எல்.அடைக்கலராஜ் (திருச்சி) 17. இ.எஸ்.எம். பக்கீர் முகமது (மயிலாடுதுறை) 18. எஸ்.சிங்காரவடிவேல் (தஞ்சாவூர்) 19. என். சுந்தர்ராஜன் (புதுக்கோட்டை) 21. ப.சிதம்பரம் (சிவகங்கை) 22. வி.ராஜேஸ்வரன் (ராமநாதபுரம்) 23. மூ.அருணாச்சலம் (தென்காசி தனி) 24. தனுஷ்கோடி ஆதித்தன் (திருச்செந்தூர்) 25. என்.டென்னிஸ் (நாகர்கோவில்)

ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியைச் (United Communist Party) சேர்ந்த தா.பாண்டியன், வடசென்னை தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் கை சின்னத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதேபோல, முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த ஏ.கே.ஏ.அப்துல் சமது வேலூர் தொகுதியில், கை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தி.மு.க. அணியில் இடம்பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செல்வராஜ் (நாகப்பட்டினம் தனி) வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் **1991**

அண்ணா தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி 38 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. இரா.ஸ்ரீதரன் (தென்சென்னை) 2. எஸ்.எஸ்.ஆர்.ராஜேந்திரகுமார் (செங்கல்பட்டு) 3. கே.எஸ்.சௌந்தரம் (திருச்செங்கோடு) 4. பி.ஜி.நாராயணன் (கோபிச்செட்டிபாளையம்) 5. ராஜா ரவிவர்மா (பொள்ளாச்சி தனி) 6. சி.சீனிவாசன் (திண்டுக்கல்) 7. ஆர்.ராமசாமி (பெரியகுளம்) 8. என்.முருகேசன் (கரூர்) 9. ஏ.அசோக்ராஜ் (பெரம்பலூர் தனி) 10. ஆர்.கனக கோவிந்தராஜுலு (சிவகாசி) 11. கடம்பூர் இரா.ஜனார்த்தனம் (திருநெல்வேலி).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. இரா.அன்பரசு (மத்திய சென்னை) 2. மரகதம் சந்திரசேகர் (ஸ்ரீபெரும்புதூர், தனி) 3. ஆர்.ஜீவரத்தினம் (அரக்கோணம்) 4. ஏ.ஜெயமோகன் (திருப்பத்தூர்) 5. எம்.கிருஷ்ணசாமி (வந்தவாசி) 6. கே.ராமமூர்த்தி (திண்டிவனம்) 7. பி.பி.கலியபெருமாள் (கடலூர்) 8. பி.வள்ளல்பெருமான் (சிதம்பரம் தனி) 10. கே.வி.தங்கபாலு (தர்மபுரி) 11. வாழப்பாடி கே.ராமமூர்த்தி (கிருஷ்ணகிரி) 12.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பி.தேவராஜன் (ராசிபுரம் தனி) 13. ரங்கராஜன் குமாரமங்கலம் (சேலம்) 14. ஆர்.பிரபு (நீலகிரி) 14. சி.கே. குப்புசாமி (கோவை) 15. சேனாபதி கவுண்டர் (பழநி) 15. ஏ.ஜி.எஸ்.ராம்பாபு (மதுரை) 16. எல்.அடைக்கலராஜ் (திருச்சி) 17. மணிசங்கர் ஐயர் (மயிலாடுதுறை) 18. பத்மா (நாகப்பட்டினம் தனி) 19. கே.துளசி ஐயா வாண்டையார் (தஞ்சாவூர்) 20. என்.சுந்தர்ராஜன் (புதுக்கோட்டை) 21. ப.சிதம்பரம் (சிவகங்கை) 22. வி.ராஜேஸ்வரன் (ராமநாதபுரம்) 23. மூ.அருணாசலம் (தென்காசி தனி) 24. தனுஷ்கோடி ஆதித்தன் (திருச்செந்தூர்) 25. என்.டென்னிஸ் (நாகர்கோவில்).

ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தா.பாண்டியன், வடசென்னை தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் கை சின்னத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதேபோல, முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த அக்பர் பாஷா வேலூர் தொகுதியில், கை சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

தி.மு.க. அணியில் இடம்பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செல்வராஜ் (நாகப்பட்டினம் தனி) வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் **1996**

தி.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி 39 தொகுதிகளையும் கைப்பற்றியது.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. என்.வி.என்.சோமு (வடசென்னை) 2. முரசொலி மாறன் (மத்திய சென்னை) 3. டி.ஆர்.பாலு (தென்சென்னை) 4. டி.நாகரத்தினம் (ஸ்ரீபெரும்புதூர் தனி) 5. கே.பரசுராமன் (செங்கல்பட்டு) 6. பி.சண்முகம் (வேலூர்) 7. த.வேணுகோபால் (திருப்பத்தூர்) 8. ஜி.வெங்கட்ராமன் (திண்டிவனம்) 9. வி.கணேசன் (சிதம்பரம்) 10. கே.பி.ராமலிங்கம் (திருச்செங்கோடு) 11. வி.பி.சண்முகசுந்தரம் (கோபிச்செட்டி பாளையம்) 12. எம்.ராமநாதன் (கோவை) 13. ஞானகுருசாமி (பெரியகுளம்) 14. ஆ.ராசா (பெரம்பலூர் தனி) 15. எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் (தஞ்சாவூர்) 16. என்.சிவா (புதுக்கோட்டை) 17. டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் (திருநெல்வேலி).

தமிழ் மாநில காங்கிரஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. ஏ.எம்.வேலு (அரக்கோணம்) 2. எல்.பலராமன் (வந்தவாசி) 3. பி.ஆர்.எஸ். வெங்கடேசன் (கடலூர்) 4. தீர்த்தராமன் (தர்மபுரி) 5. சி.நரசிம்மன் (கிருஷ்ணகிரி) 6. கே.கந்தசாமி (ராசிபுரம்) 7. தேவதாஸ் (சேலம்) 8. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன் (நீலகிரி) 9. வி.கந்தசாமி (பொள்ளாச்சி தனி) 10. எஸ்.கே.கார்வேந்தன் (பழநி) 11. என்.எஸ்.வி.சித்தன் (திண்டுக்கல்) 12. ஏ.ஜி.எஸ்.ராம்பாபு (மதுரை) 13. கே.நாட்றாயன் (கரூர்) 14. எல்.அடைக்கலராஜ் (திருச்சி) 15. பி.வி.ராஜேந்திரன் (மயிலாடுதுறை) 16. ப.சிதம்பரம் (சிவகங்கை) 17. எஸ்.பி.உடையப்பன் (ராமநாதபுரம்) 18. மூ.அருணாசலம் (தென்காசி) 19. தனுஷ்கோடி ஆதித்தன் (திருச்செந்தூர்) 20. என்.டென்னிஸ் (நாகர்கோவில்)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

1. எம்.செல்வராஜ் (நாகப்பட்டினம் தனி) 2. வி.அழகிரிசாமி (சிவகாசி).

நாடாளுமன்றத் தேர்தல் **1998**

தி.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி 9 தொகுதிளைக் கைப்பற்றியது.

அண்ணா தி.மு.க., ம.தி.மு.க, பா.ம.க., பாரதிய ஜனதா கூட்டணி 30 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. செ.குப்புசாமி (வடசென்னை) 2. முரசொலி மாறன் (மத்திய சென்னை) 3. டி.ஆர்.பாலு (தென்சென்னை) 4. த.வேணுகோபால் (திருப்பத்தூர்) 5. எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் (தஞ்சாவூர்).

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. கே.வேணுகோபால் (ஸ்ரீபெரும்புதூர், தனி) 2. காஞ்சி பன்னீர்செல்வம் (செங்கல்பட்டு) 3. சி.கோபால் (அரக்கோணம்) 4. எம்.சி.தாமோதரன் (கடலூர்) 5. கே.பி. முனுசாமி (கிருஷ்ணகிரி) 6. சரோஜா (ராசிபுரம் தனி) 7. கே.பழனிசாமி (திருச்செங்கோடு) 8. வி.கே.சின்னசாமி (கோபிச்செட்டி பாளையம்) 9. எம்.தியாகராஜன் (பொள்ளாச்சி தனி) 10. சி.சீனிவாசன் (திண்டுக்கல்) 11. சேடபட்டி முத்தையா (பெரியகுளம்) 12. எம்.தம்பிதுரை (கரூர்) 13. பி.ராஜரத்தினம் (பெரம்பலூர் தனி) 14. ராஜா பரமசிவம் (புதுக்கோட்டை) 15. வி.சத்தியமூர்த்தி (ராமநாதபுரம்) 16. கடம்பூர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜனார்த்தனம் (திருநெல்வேலி) 17. முருகேசன் (தென்காசி தனி) 18. ராமராஜன் (திருச்செந்தூர்).

பாட்டாளி மக்கள் கட்சி

1. என்.டி.சண்முகம் (வேலூர்) 2. எம்.துரை (வந்தவாசி) 3. தலித் எழில்மலை (சிதம்பரம் தனி) 4. பாரிமோகன் (தர்மபுரி).

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

1. செஞ்சி என்.ராமச்சந்திரன் (திண்டிவனம்) 2. வைகோ (சிவகாசி) 3. அ.கணேசமூர்த்தி (பழநி).

பாரதிய ஜனதா கட்சி

1. மாஸ்டர் மாதன் (நீலகிரி) 2. சி.பி.ராதாகிருஷ்ணன் (கோவை) 3. ரங்கராஜன் குமாரமங்கலம் (திருச்சி).

தமிழ் மாநில காங்கிரஸ்

1. கிருஷ்ணமூர்த்தி (மயிலாடுதுறை) 2. ப.சிதம்பரம் (சிவகங்கை) 3. என்.டென்னிஸ் (நாகர்கோவில்).

சேலம் தொகுதியில், வாழப்பாடி கே.ராமமூர்த்தி (தமிழக ராஜீவ் காங்கிரஸ்), மதுரை தொகுதியில் சுப்பிரமணிய சுவாமி (ஜனதா) வெற்றி பெற்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி: எம்.செல்வராஜ் (நாகப்பட்டினம் தனி).

நாடாளுமன்றத் தேர்தல் **1999**

இந்த முறை தி.மு.க., பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா, எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க. ஆகிய கட்சிகள் ஓர் அணியாகவும், அண்ணா தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) ஓர் அணியாகவும் களத்தில் இறங்கின.

தி.மு.க., அணி 26, அ.தி.மு.க, அணி 13 தொகுதிகளைக் கைப்பற்றின.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. செ.குப்புசாமி (வடசென்னை) 2. முரசொலி மாறன் (மத்திய சென்னை) 3. டி.ஆர்.பாலு (தென்சென்னை) 4. ஏ.கிருஷ்ணசாமி (ஸ்ரீபெரும்புதூர்) 5. ஜெகத்ரட்சகன் (அரக்கோணம்) 6.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆதிசங்கர்(கடலூர்) 7. வி.வெற்றிச்செல்வன் (கிருஷ்ணகிரி) 8. த.வேணுகோபால் (திருப்பத்தூர்) 9. ஆ.ராசா (பெரம்பலூர் தனி) 10. ஏ.கே.எஸ்.விஜயன் (நாகப்பட்டினம், தனி) 11. எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் (தஞ்சாவூர்) 12. ஏ.டி.கே.ஜெயசீலன் (திருச்செந்தூர்).

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. சரோஜா (ராசிபுரம் தனி) 2. டி.எம்.செல்வகணபதி (சேலம்) 3. கே.கே.காளியப்பன் (கோபிச்செட்டி பாளையம்) 4. பி.குமாரசாமி (பழநி) 5. சி.சீனிவாசன் (திண்டுக்கல்) 6. டி.டி.வி.தினகரன் (பெரியகுளம்) 7. எம்.சின்னசாமி (கரூர்) 8. கே.மலைச்சாமி (ராமநாதபுரம்) 9. பி.எச்.பாண்டியன் (திருநெல்வேலி) 10. முருகேசன் (தென்காசி தனி).

பாட்டாளி மக்கள் கட்சி

1. ஏ.கே.மூர்த்தி (செங்கல்பட்டு) 2. என்.டி.சண்முகம் (வேலூர்) 3. எம்.துரை (வந்தவாசி) 4. இ.பொன்னுசாமி (சிதம்பரம் தனி) 5. பு.தா.இளங்கோவன் (தர்மபுரி).

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

1. வைகோ (சிவகாசி) 2. மு.கண்ணப்பன் (திருச்செங்கோடு) 3. செஞ்சி என்.ராமச்சந்திரன் (திண்டிவனம்) 4. டாக்டர் சி.கிருஷ்ணன் (பொள்ளாச்சி).

பாரதிய ஜனதா கட்சி

1. மாஸ்டர் மாதன் (நீலகிரி) 2. சி.பி.ராதாகிருஷ்ணன் (கோவை) 3. ரங்கராஜன் குமாரமங்கலம் (திருச்சி) 4. பொன்.ராதாகிருஷ்ணன் (நாகர்கோவில்).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. மணிசங்கர் ஐயர் (மயிலாடுதுறை) 2. சுதர்சன நாச்சியப்பன் (சிவகங்கை).

புதுக்கோட்டை தொகுதியில் திருநாவுக்கரசரும் (எம்.ஏ.டி.எம்.கே) மதுரை தொகுதியில் பி.மோகனும் (இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) வெற்றி பெற்றனர்.

நாடாளுமன்றத் தேர்தல் **2004**

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இம்முறை தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகள் ஓர் அணியாகவும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா கட்சி மற்றொரு அணியாகவும் போட்டியிட்டன.

தி.மு.க. அணி, 39 தொகுதிகளையும் கைப்பற்றியது. அ.தி.மு.க. அணிக்கு ஓர் இடம்கூடக் கிடைக்கவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. செ. குப்புசாமி (வடசென்னை) 2. தயாநிதி மாறன் (மத்திய சென்னை) 3. டி.ஆர்.பாலு (தென்சென்னை) 4. ஏ.கிருஷ்ணசாமி (ஸ்ரீபெரும்புதூர்) 5. த.வேணுகோபால் (திருப்பத்தூர்) 6. கே.வேங்கடபதி (கடலூர்) 7. இ.ஜி.சுகவனம் (கிருஷ்ணகிரி) 8. சுப்புலட்சுமி ஜெகதீசன் (திருச்செங்கோடு) 9. ஆ.ராசா (பெரம்பலூர்) 10. ஏ.கே.எஸ்.விஜயன் (நாகப்பட்டினம்) 11. எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் (தஞ்சாவூர்) 12. எஸ்.ரகுபதி (புதுக்கோட்டை) 13. எம்.எஸ்.கே.பவானி ராஜேந்திரன் (ராமநாதபுரம்) 14. ராதிகா செல்வி (திருச்செந்தூர்) 15. கே.சி.பழனிச்சாமி (கரூர்) 16. கே.எம்.காதர் முகைதீன் (வேலூர்) இந்திய யூனியன் முஸ்லிம் லீக்.

இந்திய தேசிய காங்கிரஸ்

1. கே.ராணி (ராசிபுரம் தனி) 2. கே.வி.தங்கபாலு (சேலம்) 3. ஆர்.பிரபு (நீலகிரி) 4. ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் (கோபிச்செட்டிபாளையம்) 5. எஸ்.கே.கார்வேந்தன் (பழநி) 6. என்.எஸ்.வி.சித்தன் (திண்டுக்கல்) 7. ஜே.எம்.ஆரூண் ரஷீத் (பெரியகுளம்) 8. மணிசங்கர் ஐயர் (மயிலாடுதுறை) 9. ப.சிதம்பரம் (சிவகங்கை) 10. தனுஷ்கோடி ஆதித்தன் (திருநெல்வேலி).

பாட்டாளி மக்கள் கட்சி

1. ஏ.கே.மூர்த்தி (செங்கல்பட்டு) 2. ஆர்.வேலு (அரக்கோணம்) 3. கே.தனராஜு (திண்டிவனம்) 4. இ.பொன்னுசாமி (சிதம்பரம் தனி) 5. டாக்டர் ஆர்.செந்தில் (தர்மபுரி).

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

1. செஞ்சி ந.ராமச்சந்திரன் (வந்தவாசி) 2. டாக்டர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சி.கிருஷ்ணன் (பொள்ளாச்சி) 3. எல்.கணேசன் (திருச்சி) 4. சிப்பிப்பாறை அ.இரவிச்சந்திரன் (சிவகாசி).

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

1. கே.சுப்பராயன் (கோவை) 2. அப்பாதுரை (தென்காசி தனி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

1. பி. மோகன் (மதுரை) 2. பெல்லார்மின் (நாகர்கோவில்).

நாடாளுமன்றத் தேர்தல் **2009**

இம்முறை தி.மு.க., இந்திய தேசிய காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஓர் அணியாகவும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஓர் அணியாகவும் போட்டியிட்டன.

பாரதிய ஜனதா கட்சி தனித்துப் போட்டியிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்

1. டி.கே.எஸ்.இளங்கோவன் (வடசென்னை) 2. தயாநிதி மாறன் (மத்திய சென்னை) 3. டி.ஆர். பாலு (ஸ்ரீபெரும்புதூர்) 4. ஜெகத்ரட்சகன் (அரக்கோணம்) 5. இ.ஜி.சுகவனம் (கிருஷ்ணகிரி) 6. ஆர். தாமரைச் செல்வன் (தர்மபுரி) 7. த.வேணுகோபால் (திருவண்ணாமலை) 8. ஆதிசங்கர் (கள்ளக்குறிச்சி) 9. எஸ்.காந்திசெல்வன் (நாமக்கல்) 10. ஆ.ராசா (நீலகிரி தனி) 11. நெப்போலியன் (பெரம்பலூர்) 12. ஏ.கே.எஸ்.விஜயன் (நாகப்பட்டினம் தனி) 13. எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் (தஞ்சாவூர்) 14. மு.க.அழகிரி (மதுரை) 15. சிவகுமார் (எ) ஜே.கே.ரித்தீஷ் (ராமநாதபுரம்) 16. எஸ்.ஆர்.ஜெயதுரை (தூத்துக்குடி) 17. ஜெ.ஹெலன் டேவிட்சன் (கன்னியாகுமரி).

இந்திய தேசிய காங்கிரஸ்

1. பி.விசுவநாதன் (காஞ்சிபுரம்) 2. எம்.கிருஷ்ணசாமி (ஆரணி) 3. என்.எஸ்.வி.சித்தன் (திண்டுக்கல்) 4. கே.எஸ்.அழகிரி (கடலூர்) 5. ப. சிதம்பரம் (சிவகங்கை) 6. ஆரூண் ரஷீத் (தேனி) 7. மாணிக் தாகூர் (விருதுநகர்) 8. எஸ்.ராம சுப்பு (திருநெல்வேலி).

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. அப்துல் ரகுமான் (வேலூர்)

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

1. பி.வேணுகோபால் (திருவள்ளூர் தனி) 2. சி.ராஜேந்திரன் (தென்சென்னை) 4. எம்.ஆனந்தன் (விழுப்புரம் தனி) 5. எஸ்.செம்மலை (சேலம்) 6. சிவசாமி (திருப்பூர்) 7. கே.சுகுமார் (பொள்ளாச்சி) 8. எம்.தம்பிதுரை (கரூர்) 9. பி.குமார் (திருச்சி) 10. ஓ.எஸ்.மணியன் (மயிலாடுதுறை).

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

அ.கணேசமூர்த்தி (ஈரோடு)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

பி.லிங்கம் (தென்காசி தனி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

நடராஜன் (கோவை)

விடுதலைச் சிறுத்தைகள்

தொல்.திருமாவளவன் (சிதம்பரம் தனி)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1952 கோவை

கோவை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற டி.ஏ.ராமலிங்கம் செட்டியார், இயற்கை எய்தியதால் இடைத்தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் வேட்பாளர் என்.எம்.லிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் பார்வதி கிருஷ்ணனைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

1964 அருப்புக்கோட்டை

1962 நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில், அருப்புக்கோட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பசும்பொன் முத்து ராமலிங்கத் தேவர் இயற்கை எய்தியதால், அந்தத் தொகுதிக்கு 1964-ம் ஆண்டு இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில், கே. வேலாயுதம் நாயர் பார்வர்டு பிளாக் வேட்பாளராகப் போட்டியிட்டார். அவருக்கு, தி.மு.க., சுதந்திரா கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவளித்தன. காங்கிரஸ் வேட்பாளர், ராமநாதபுரம் ராஜாவின் சகோதரர் ஆர்.கே.துரையைத் தோற்கடித்து, வேலாயுதம் நாயர் வெற்றி பெற்றார்.

1967-ம் ஆண்டு பொதுத்தேர்தலில், தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து வெற்றிபெற்ற அண்ணா துரை, தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். எனவே, தமது நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகினார். அதனால், அந்தத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அதில் தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட முரசொலி மாறன் வெற்றி பெற்றார்.

1973 திண்டுக்கல்

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ராஜாங்கம் இயற்கை எய்தியதால், இடைத்தேர்தல் நடைபெற்றது. முதன் முறையாகத் தேர்தல் களத்தில் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் கே.மாயத்தேவர் வெற்றி பெற்றார். காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் கட்சி இரண்டாம் இடத்தையும், தி.மு.க. மூன்றாம் இடத்தையும், இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சி நான்காம் இடத்தையும் பெற்றன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1974 கோவை

1971-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், கோவை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் பாலதண்டாயுதம், விமான விபத்தொன்றில் திடீரென இயற்கை எய்தினார். அதைத் தொடர்ந்து, 1974-ம் ஆண்டு கோவை தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் வேட்பாளர் பார்வதி கிருஷ்ணனை, அண்ணா தி.மு.க. ஆதரித்தது. அவர் வெற்றி பெற்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை

1980-ம் ஆண்டு, நாகப்பட்டினம் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முருகையன், குடும்பத் தகராறு காரணமாக, கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் படுகொலை செய்யப்பட்டது, தமிழகத்தையே அதிர வைத்தது. அரசியல் பொதுக்கூட்ட மேடைகளில், பலத்த கண்டனங்கள் ஒலித்தன. அதைத் தொடர்ந்து நடைபெற்ற இடைத்தேர்தலில், தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் முருகையன், அ.தி.மு.க. வேட்பாளர் மகாலிங்கத்தைவிட 15,941 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1982 பெரியகுளம்

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கம்பம் நடராசன் இயற்கை எய்தியதால், இடைத்தேர்தல் நடைபெற்றது. அ.தி.மு.க. வேட்பாளர் எஸ்.டி.கே.ஜக்கையனுக்கு ஆதரவாக, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். கம்பம் நடராஜனின் தம்பியான கம்பம் ராமகிருஷ்ணன், தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டார். 69,260 வாக்குகள் கூடுதலாகப் பெற்று, அண்ணா தி.மு.க. வேட்பாளர் ஜக்கையன் வெற்றி பெற்றார்.

தஞ்சாவூர்

அதே ஆண்டில், தஞ்சாவூர் நாடாளு மன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அ.தி.மு.க. ஆதரவுடன் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட சிங்காரவடிவேலு, தி.மு.க. வேட்பாளர் அன்பில் தர்மலிங்கத்தைவிட, 92,848 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1985 திருச்செந்தூர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.கோசல்ராம் இயற்கை எய்தியதால், இடைத்தேர்தல் நடைபெற்றது. அ.தி.மு.க. ஆதரவுடன், காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட தனுஷ்கோடி ஆதித்தன், ஜனதா கட்சி வேட்பாளர் விஜயராகவனைவிட 75,819 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1993 பழநி

பழநி தொகுதியிலிருந்து நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் உறுப்பினர் சேனாபதி கவுண்டர் இயற்கை எய்தியதால், 1993-ம் ஆண்டு பழநி தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட குமாரசாமி, தி.மு.க. வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசனைவிட, 44,925 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

வாஜ்பாய் தலைமையிலான நடுவண் அமைச்சரவையில், பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த ரெங்கராஜன் குமாரமங்கலம், புற்றுநோயால் இயற்கை எய்தியதால், 2001-ம் ஆண்டு திருச்சி நாடாளுமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது.

இந்தத் தேர்தலில், அ.தி.மு.க. 12,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றது. பாட்டாளி மக்கள் கட்சியில் பொதுச் செயலாளராகப் பொறுப்பு வகித்து, பின்னர் அந்தக் கட்சியிலிருந்து விலகி, அ.தி.மு.க-வில் சேர்ந்த தலித் எழில்மலை, அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதற்குப் பின்னர், அவர் தீவிர அரசியலில் இல்லை.

மாநிலங்களவைத் தேர்தல் **1952**

1952-ம் ஆண்டு, நாடாளுமன்ற மாநிலங்களவை அமைக்கப்பட்டது. அதன் உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர், இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சென்னை மாகாணத்திலிருந்து, நாடாளு மன்ற மாநிலங்களவைக்கு, 18 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

எனவே, முதலாவது தேர்தலின்போது, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுள், ஆறு ஆண்டுகள், நான்கு ஆண்டுகள், இரண்டு ஆண்டுகள் பொறுப்பு வகிப்பவர்கள் யார் என்பதைத் தேர்வு செய்ய குலுக்கல் முறை பயன்படுத்தப் பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இதுவரையிலும் தமிழகத்திலிருந்து நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் இடங்களைப் பெற்ற கட்சிகள் விவரம் வருமாறு:

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் **59** பேர்

1. எம்.வின்சென்ட் 2. ஜி.வரதராஜ் 3. டி.எம்.வெங்கடாசலம் 4. வி.வி.சுவாமிநாதன் 4. ஜி. சுவாமிநாதன் 5. தளவாய் சுந்தரம் 6. எஸ்.சௌந்தர்ராஜன் 7. தங்க.தமிழ்ச்செல்வன் 8. இரா. சாம்பசிவம் 9. நூர்ஜஹான் ரசாக் 10. வி. ராமநாதன் 11. ஆர்.ராமகிருஷ்ணன் 12. என். ராஜேந்திரன். 13. என். ராஜாங்கம் 14. சி.பெருமாள் 15. என்.தங்கராஜ் பாண்டியன் 16. எஸ்.நிறைகுளத்தான் 17. பி.ஜி.நாராயணன் 18. சத்தியவாணி முத்து 19. இரா.மோகனரங்கம் 20. டி.மஸ்தான். 21. ஆர்.மார்கபந்து 22. ஓ.எஸ்.மணியன் 23. எஸ். முத்துமணி 24. கே.மலைச்சாமி 25. டாக்டர்

வி.மைத்ரேயன் 26. செ.மாதவன் 27. ஆர்.கே.குமார் 28. கே.ஏ.கிருஷ்ணசாமி 29. யூ.ஆர்.கிருஷ்ணன் 30. ஈ.ஆர். கிருஷ்ணன் 31. எஸ்.பி.எம்.சையதுகான் 32. ஆர்.காமராஜ் 33. எம்.காதர்ஷா 34. வலம்புரி ஜான் 35. என்.ஜோதி 36. ஜெ.ஜெயலலிதா 37. ஏ.பி.ஜனார்த்தனம் 38. எஸ்.கோகுல இந்திரா 39. டி.ஹீராசந்த் 40. என்.ஆர்.கோவிந்தராஜர் 41. ஆர்.டி.கோபாலன் 42. டி.டி.வி. தினகரன் 43. வி.பி.துரைசாமி 44. வி.வி.ராஜன் செல்லப்பா 45. எஸ்.எஸ்.சந்திரன் 46. எம்.பாலகங்கா 47. எம்.சி.பாலன் 48. எஸ்.ஆஸ்டின் 49. எஸ்.அன்பழகன் 50. பி.அன்பழகன் 51. ஆலடி அருணா (எ) வி.அருணாசலம் 52. எம்.எஸ்.அப்துல் காதர் 53. ரபி பெர்னார்டு 54. பால் மனோஜ் பாண்டியன் 55. என்.பாலகங்கா 56. ஏ. இளவரசன், 57.டி.ரத்தின வேலு, 58. கே.ஆர்.அர்ஜுனன், 59. டாக்டர் லட்சுமணன்.

திராவிட முன்னேற்றக் கழகம் **36**

1. சி.என்.அண்ணாதுரை 2. டி.கே.சீனிவாசன் 3. முரசொலி மாறன் 4. வைகோ (வை.கோபால்சாமி) 5. விடுதலைவிரும்பி 6. திண்டிவனம் ஜி.வெங்கட்ராமன் 7. வி.வெங்கா 8. கே.கே.வீரப்பன் 9. க.ரா. சுப்பையன் 10. வசந்தி ஸ்டேன்லி 11. திருச்சி சிவா 12. எஸ்.சிவசுப்பிரமணியன் 13. ஆர்.சண்முகசுந்தரம் 14. ஆர். சரத்குமார் 15. பி.என்.சிவா 16. எம். சங்கரலிங்கம் 17. ஜே.எஸ்.ராஜு 18. எஸ்.எஸ்.ராஜேந்திரன் 19. சி.டி.நடராஜன் 20. எஸ்.எஸ்.மாரிசாமி 21. ஜி.லட்சுமணன் 22. கே.பி.கே.குமரன் 23.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கனிமொழி 24. எம்.கமலநாதன் 25. காஞ்சி கல்யாணசுந்தரம் 26. எம்.ஏ.காதர் 27. மிசா ஆர்.கணேசன் 28. எல்.கணேசன் 29. டி.ஆர்.பாலு 30. ஜி.ஏ.அப்பன் 31. எஸ்.அக்னிராஜ் 32. டாக்டர் கே.பி.ராமலிங்கம் 33. ஏ.ஏ.ஜின்னா 34. டி.எம்.செல்வகணபதி 35. ச.தங்கவேலு 36. டி.வி.கமலசுவாமி.

இந்திய தேசிய காங்கிரஸ் **23**

1. வி.கே.கிருஷ்ண மேனன் 2. மாதவ மேனன் 3. டி.எஸ்.பட்டாபிராமன் 4. டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார் 5. ஜி.கே.மூப்பனார் 6. தாவூத் அலி மிர்சா 7. எம்.மோசஸ் 8. எம்.பழனியாண்டி 9. அம்மு சுவாமிநாதன் 10. என்.எம்.அன்வர் 11. நரசிம்ம கோபாலசாமி ஐயங்கார் 12. டி.செங்கல்வராயன் 13. ஆர்.கோபால கிருஷ்ணன் 14. எம்.எஸ்.ராமச்சந்திரன் 15. எஸ்.கே.டி.ராமச்சந்திரன் 16. எம்.ஹென்ஸ்மேன் 17. டாக்டர் எஸ்.சந்திரசேகர் 18. பி.எஸ்.ஞானதேசிகன் 19. ஜெயந்தி நடராஜன் 20. இ.எம்.சுதர்சன நாச்சியப்பன் 21. ஜி.கே.வாசன் 22. எஸ்.பீட்டர் அல்போன்ஸ் 23. எம்.ஜே.ஜமால் முகைதீன்

தமிழ் மாநில காங்கிரஸ் **2**

1. அப்துல் காதர் 2. பீட்டர் அல்போன்ஸ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி **4**

1. இ.கே.இம்பிச்சிபாவா 2. பி.பி. காக்கிலாயா 3. எம்.கல்யாணசுந்தரம் 4. டி.ராஜா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி **(மார்க்சிஸ்ட்) 2**

1. பி.ராமமூர்த்தி 2. டி.கே. ரங்கராஜன்

ஸ்தாபன காங்கிரஸ் **1**

1. டி.வி.ஆனந்தன்

ஜனதா கட்சி **1**

1. இரா.செழியன்

பாட்டாளி மக்கள் கட்சி **1**

1. அன்புமணி ராமதாஸ்

முஸ்லிம் லீக் **3**

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1. எஸ்.ஏ.காஜா மொகிதீன் 2. ஏ.கே.ஏ.அப்துஸ் சமது 3. ஏ.கே.ரிஃபாயி.

மற்றவர்கள்

1. அப்துல் ரகீம் 2. எஸ். குருசாமி 3. கே.எஸ்.ஹெக்டே 4. எம். பரமேஸ்வரன் 5. ஜி. பார்த்தசாரதி 6. ஆர்.டி. பார்த்தசாரதி 7. பார்வதி கிருஷ்ணன் 8. சிவசண்முகம் பிள்ளை 9. எஸ். ரெங்கநாதன்.

வலம்புரி ஜான்

தமிழ்நாட்டிலேயே மிகக்குறைந்த வயதில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் வலம்புரி ஜான். மாநிலங்களவை வேட்பாளராவதற்கு 25 வயது நிரம்பியிருக்க வேண்டும். ஆனால், வலம்புரி ஜான் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, அவருக்கு 24 வயதுதான் ஆகிறது என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. தி.மு.க. வேட்பாளராக அவர் நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அவர் அண்ணா தி.மு.க-வில் சேர்ந்தார். அந்தக் கட்சியின் சார்பிலும் ஒருமுறை நாடாளுமன்ற மாநிலங் களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஃபார்வர்டு பிளாக்

ஆங்கிலேயர் ஆட்சியின்போது, குற்றப் பரம்பரைச் சட்டம் என்ற ஒரு கொடுஞ்சட்டத்தின்கீழ், தமிழகத்தின் தென்மாவட்டங்களில் பெரும்பான்மையாக உள்ள, மறவர்குல ஆண் மக்களின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்து வந்தனர். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், ஆங்கில அரசின் இந்த ரேகைச் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். அதற்காக மக்களைத் திரட்டி வந்தார். 1920-ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நீதிக்கட்சி அரசிடம், குற்றப் பரம்பரைச் சட்டத்தை நீக்குமாறு கோரிக்கை வைத்தார். ஆனால், அவர்கள் விலக்கிக் கொள்ளவில்லை. எனவே, நீதிக்கட்சியை எதிர்க்கத் தொடங்கினார். பர்மாவுக்குச் சென்று திரும்பி வந்த தேவர், காங்கிரஸை ஆதரித்தார். 1936-ம் ஆண்டு, ‘ஜில்லா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

போர்டு' என்று அழைக்கப்பட்ட, அன்றைய மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பொறுப்புக்கு, முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து போட்டியிட்டு, நீதிக்கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

தேவரின் அரசியல் நடவடிக்கைகளால் அச்சமுற்ற நீதிக்கட்சி அரசு, அவர் 'ராமநாதபுரம் மாவட்டத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்றும், பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது' என்றும் வாய்ப்பூட்டுச் சட்டத்தைப் போட்டது.

1937-ம் ஆண்டு, சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு நடைபெற்ற பொதுத்தேர்தலில், தேவர் காங்கிரஸுக்கு ஆதரவாக இளைஞர் படையைத் திரட்டி பணியாற்றினார். ராமநாதபுரம் தொகுதியிலிருந்து போட்டியிட்டார். அவரை எதிர்த்து ராமநாதபுரம் மன்னர் போட்டியிட்டார். ஆனால், தேவர் 11,942 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். மன்னருக்கு, 6,057 வாக்குகளே கிடைத்தன.

மாகாணத்தில், காங்கிரஸ் கட்சி வெற்று பெற்று ஆட்சியமைத்தது. இம்முறை, காங்கிரஸ் அரசு குற்றப் பரம்பரைச் சட்டத்தை நீக்கிவிடும் என்ற தேவரின் எதிர்பார்ப்பு பொய்த்துப் போனது. பிரிமியர் ராஜாஜி, தேவரின் கோரிக்கையை ஏற்கவில்லை. எனவே, காங்கிரஸ் கட்சியை எதிர்க்கத் தொடங்கினார் தேவர். 'காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி' உருவானபோது அக்கட்சியில் சேர்ந்தார்.

மதுரை பசுமலை மகாலெட்சுமி நூற்பாலைத் தொழிலாளர்களுக்காக நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, ஏழு மாதங்கள் சிறைதண்டனை பெற்றார். இதனால், தொழிலாளர்களிடையே அவரது செல்வாக்கு பெருகியது. மதுரையைச் சுற்றிலுமுள்ள மேலும் பல நூற்பாலைகளிலும் தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றினார். 1945-ம் ஆண்டு, டி.வி.எஸ் நிறுவனத்தில், தொழிற்சங்கத்தின் நிறுவனத் தலைவரானார்.

1939-ம் ஆண்டு, குஜராத் மாநிலம், ஹரிபுராவில் நடைபெற்ற 52-வது காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்புக்குத் தேர்தல் நடைபெற்றது. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் போட்டியிட்டார். அவரை எதிர்த்து, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த பட்டாபி சீதாராமையா போட்டியிட்டார். மகாத்மா காந்தி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அவரை ஆதரித்தார். ஆனால், தேவர் நேதாஜியின் வெற்றிக்காகப் பாடுபட்டார்.

சென்னை மாகாண காங்கிரஸாரின் வாக்குகள் நேதாஜிக்கு ஆதரவாகக் கிடைப்பதற்காகப் பிரச்சாரம் செய்தார். தேர்தலில் நேதாஜி வென்றார். தென்மாநில காங்கிரஸாரின் பெரும்பான்மையான வாக்குகள் அவருக்கே கிடைத்தன. ஆனால், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும், நேதாஜி-காந்தி மோதல் நிற்கவில்லை. நேதாஜியின் செயல்பாடுகளுக்கு, காந்தி ஆதரவாளர்கள் இடையூறு விளைவித்து வந்தனர்.

ஃபார்வர்டு பிளாக் தோற்றம்

இதனால் வெறுப்புற்ற நேதாஜி, தலைவர் பொறுப்பிலிருந்து விலகியதுடன், காங்கிரஸ் இயக்கத்திலிருந்தே வெளியேறினார். ‘ஃபார்வர்டு பிளாக்’ என்ற புதிய கட்சியைத் தோற்றுவித்தார். இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். மதுரைக்கு அவர் வந்தபோது, பிரமாண்டமான கூட்டத்தைக் கூட்டி, நேதாஜிக்கு வரவேற்பளித்தார் தேவர். ஃபார்வர்டு பிளாக் கட்சியிலும் தேவர் இணைந்தார். தேவரின் பிரச்சாரங்களால் தென் மாவட்டங்களில், இக்கட்சி வலுப்பெற்றது.

முத்துராமலிங்கத் தேவர்

காங்கிரஸ் அரசுக்கு எதிரான தேவரின் பிரச்சாரங்கள் தீவிரமடைந்தன. எனவே, ‘தேவர் மதுரையை விட்டு வெளியில் எங்கும் செல்லக்கூடாது’ என அரசு தடை விதித்தது. அதை மீறி தமது சொந்த ஊருக்குச் சென்ற தேவர், 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கைது செய்யப்பட்டு, திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். அவரது கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. 18 மாதங்கள் சிறையில் இருந்தார். சிறையில் இருந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விடுதலையானதும், மீண்டும் அவரை இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். 1945-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம்தான் விடுதலை பெற்று வெளியில் வந்தார்.

அதே ஆண்டில், திருப்பரங்குன்றத்தில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. ராஜாஜி மீண்டும் தலைவராக முயற்சித்தார். ஆனால், காமராஜருக்கு ஆதரவாக தேவர் தலையிட்டதால், மீண்டும் காமராஜரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946-ம் ஆண்டு, மார்ச் மாதம் சென்னை மாகாண சட்டமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில், முதுகுளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தேவர், போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இம்முறை பொறுப்பேற்ற காங்கிரஸ் அரசு, குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் திரும்பப் பெற்றது.

1948-ம் ஆண்டு பிப்ரவரி மாதம், ஃபார்வர்டு பிளாக் ஆதரவாளர்கள் அனைவரும் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஃபார்வர்டு பிளாக் முழுமையான தனிக்கட்சியாகச் செயல்படத் தொடங்கியது. சென்னை மாகாண ஃபார்வர்டு பிளாக் தலைவராக, தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஃபார்வர்டு பிளாக் பிளவு

1948-ம் ஆண்டு, ஃபார்வர்டு பிளாக் கட்சியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. பார்வர்டு பிளாக் (மார்க்சிஸ்ட்), பார்வர்டு பிளாக் (ருய்கர்) என கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

1949-ம் ஆண்டு ஜனவரி 23-ம் நாள் நடைபெற்ற நேதாஜி பிறந்தநாள் விழாவில், நேதாஜி உயிருடன் இருப்பதாகவும், தாம் அவரைச் சந்தித்ததாகவும் தேவர் அறிவித்தார். அதற்குப்பிறகு தேவர் தலைமறைவானார். 1950-ம் ஆண்டு, அக்டோபர் மாதம்தான் அவர் மீண்டும் அரசியல் களத்துக்கு வந்தார். இடைப்பட்ட காலத்தில் எங்கே சென்றார் என்பதை எவரும் அறிய முடியவில்லை.

1951 ஜூன் 23-ம் நாள், கொல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் இரண்டு பிரிவுகளும் ஒன்றாக இணைந்தன. கட்சியின் மத்தியக்குழு உறுப்பினர்களுள் ஒருவராக தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ம் ஆண்டு இந்தியாவின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காங்கிரஸ் அல்லாத அரசை அமைப்பதற்கு, ஃபார்வர்டு பிளாக் கட்சி பாடுபட்டது. அருப்புக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் வேட்பாளராகப் போட்டியிட்ட தேவர், இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். ஆனால், மாகாண அரசியலில் கவனம் செலுத்துவதற்காக, அருப்புக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகினார். அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில், ஃபார்வர்டு பிளாக் வேட்பாளரே வெற்றி பெற்றார்.

1952-ம் ஆண்டு, சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸுக்குத் தனிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. கம்யூனிஸ்டுகள் ஆதரவுடன் புதிய அரசு அமைவதற்கு தேவர் பாடுபட்டார். ஆனால், ஆளுநர், ராஜாஜியை அரசமைக்க அழைப்பு விடுத்து, முதலமைச்சராகப் பொறுப்பேற்கும்படிச் செய்தார். சென்னையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில், சோசலிசக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது என்று காங்கிரஸ் தீர்மானித்தது.

இதன்விளைவாக 1955-ம் ஆண்டு, பார்வர்டு பிளாக் கட்சிக்குள்ளே மீண்டும் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. கட்சியின் தலைவராக இருந்த மோகன்சிங், ஷீல் பத்ர யாஜி ஆகியோர், ‘நாம் மீண்டும் காங்கிரஸ் கட்சியிலேயே இணைந்து பணியாற்றுவதற்கு இது நல்ல வேளை’ என்று கருதினார்கள். ஆனால், அந்தக் கருத்துக்குக் கட்சிக்குள்ளே சரியான வரவேற்பு கிடைக்கவில்லை. ஆயினும், பார்வர்டு பிளாக் கட்சி, காங்கிரஸில் இணைந்து விட்டது என்று தாங்களாகவே அறிவித்துக் கொண்டார்கள்.

1955 மே 11-15 ஆகிய நாட்களில் நாக்பூரில், கட்சியின் மத்தியக் குழு கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட்டது. மோகன்சிங், ஷீல் பத்ர யாஜி மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் அனைவரும் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். கட்சியின் புதிய தலைவராக ஹேமந்த் குமார் போஸ், துணைத் தலைவராக பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், பொதுச்செயலாளராக ஹல்துல்கர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1955-ம் ஆண்டு டிசம்பர் மாதம், ‘அனைத்து பர்மா தமிழ் சங்க’த்தினரின் அழைப்பை ஏற்று, தேவர் பர்மாவுக்குச் சென்றார். அந்த அமைப்பினர் நடத்திய அரசியல் மற்றும் மத நிகழ்ச்சிகளில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பங்கேற்றார். 1956-ம் ஆண்டு பிப்ரவரி மாதம், தமிழ்நாட்டுக்குத் திரும்பி வந்தார். இந்த வேளையில், காமராஜருடன் ஏற்பட்ட மோதலால் முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிய ராஜாஜி, ‘காங்கிரஸ் சீரமைப்புக் குழு’ என்ற அமைப்பை ஏற்படுத்திச் செயல்பட்டு வந்தார்.

1957-ம் ஆண்டு நடைபெறவிருந்த சட்டமன்றத் தேர்தலில், காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தேவர், தமது முன்னாள் எதிரியான ராஜாஜியுடன் கைகோர்த்துக் கொண்டார். 1957-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், தேவர் அருப்புக் கோட்டை நாடாளுமன்றத் தொகுதியிலும், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி பெற்றார். ஆனால், இம்முறை சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகி, நாடாளுமன்றம் சென்றார்.

முதுகுளத்தூர் கலவரம்

1957 ஜூலை முதல் நாள், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. ஃபார்வர்டு பிளாக் வேட்பாளர் டி.வி. சசிவர்ணத் தேவர் வெற்றி பெற்றார். முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளையில், தொகுதி முழுவதும் பதற்றமான சூழ்நிலை நிலவியது. ஃபார்வர்டு பிளாக் கட்சியினருக்கும், காங்கிரஸ் ஆதரவு தலித் சமூகத்தினருக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. பலர் கொல்லப்பட்டனர். ஏராளமான வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக, ஜூலை 17-ம் நாள் தில்லிக்குச் சென்ற தேவர், செப்டம்பர் 9-ம் நாள் திரும்பி வந்தார். செப்டம்பர் 10-ம் நாள், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னிலையில் அமைதிக்கூட்டம் நடைபெற்றது. ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் பசும்பொன் தேவர், சசிவர்ணத் தேவர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பார்வர்டு பிளாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் வேலு ஆகியோர் அமைதிப் பேச்சுகளில் பங்கேற்றனர்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஆறு பேர்களும், நாடார் சமூகத்தினரும் பேச்சுகளில் பங்கேற்றனர். ‘அனைத்து சமூகங்களும் அமைதியாக வாழ வேண்டும்’ என்று தீர்மானிக்கப்பட்டது. அதற்கு மறுநாள்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பேச்சுவார்த்தைகளின்போது, தாழ்த்தப்பட்டோரின் குழுவுக்குத் தலைமை தாங்கிய இமானுவேல் சேகரன் வெட்டிக் கொல்லப்பட்டார். மீண்டும் கலவரம் வெடித்தது. சுமார் 20 நாட்கள் வன்முறைகள் நிகழ்ந்தன.

செப்டம்பர் 28-ம் நாள், ராஜாஜியின் ‘இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ்’ கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய தேவர், கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். புதுக்கோட்டை நீதிமன்றத்தில் அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்டது. இமானுவேல் சேகரனைக் கொல்லத் திட்டம் வகுத்ததாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. ஆனால், 1959-ம் ஆண்டு ஜனவரி மாதம், அவர் மீதான குற்றச்சாட்டுகளைத் தள்ளுபடி செய்து, நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தல்

அந்த வேளையில், மதுரை மாநகராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற அந்தத் தேர்தலில், தேவரின் முயற்சியால் ஃபார்வர்டு பிளாக், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ராஜாஜியின் இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ், தி.மு.க. ஆகிய கட்சிகளின் கூட்டணி அமைந்தது. தேர்தலில், இக்கூட்டணி மகத்தான வெற்றி பெற்றது. முதன்முறையாக காங்கிரஸ் தோல்வியடைந்தது.

தேவர் மறைவு

இதற்குப் பிறகு, தேவரின் உடல்நலம் குன்றத் தொடங்கியது. 1962-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் அருப்புக்கோட்டை தொகுதியில் ஃபார்வர்டு பிளாக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டார். ஆனால், ராஜாஜியுடன் ஒரேயொரு பொதுக்கூட்டத்தில் மட்டுமே கலந்துகொண்டு பேசிய தேவரால், மேற்கொண்டு தொகுதியில் பிரச்சாரப் பயணங்களை மேற்கொள்ள இயலவில்லை. அப்போது, ராஜாஜி, ‘சுதந்திரா கட்சி’ என்ற புதிய கட்சியைத் தொடங்கியிருந்தார். அதனுடன், பார்வர்டு பிளாக் கூட்டணி அமைத்தது.

தேர்தலில் தேவர் வெற்றி பெற்றபோதிலும், நாடாளுமன்றத்துக்குச் செல்லக்கூடிய அளவுக்கு உடல் நலம் இல்லாதவராக இருந்தார். 1963-ம் ஆண்டு அக்டோபர் 30-ம் நாள், தமது 55-வது வயதிலேயே தேவர் இயற்கை எய்தினார். அவரது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சொந்த ஊரான பசும்பொன்னில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தேவர் குருபூசை

ஆண்டுதோறும் அக்டோபர் 30-ம் நாள், பசும்பொன் கிராமத்தில் தேவர் குருபூசை நடத்தப்படுகிறது. அந்த நாளில், லட்சக்கணக்கான மக்கள் திரண்டு, அவரது நினைவிடத்தை வணங்கி வழிபடுகிறார்கள். 1990-ம் ஆண்டுக்குப் பின்னர், இந்தக் குருபூசையில் தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் பங்கேற்று வருகிறார்கள். தேவர் குருபூசை, தென் மாவட்டங்களில் ஒரு குறிப்பிடத்தக்க அரசியல் நிகழ்வாக அமைந்திருக்கிறது.

தேவரது மறைவுக்குப் பிறகு, தென்மாவட்டங்களிலும், தி.மு.க. வளர்ச்சி பெறத் தொடங்கியது. 1967 சட்டமன்றத் தேர்தலில், பார்வர்டு பிளாக் கட்சி, தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. அதன்பிறகு, ஃபார்வர்டு பிளாக் கட்சி, தி.மு.க. அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வருகிறது.

உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியில், அக்கட்சியைச் சேர்ந்த வேட்பாளர்கள், ஆதரவாளர்களே தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றனர். பி.கே. மூக்கையாத் தேவர் (1971, 77), எஸ். ஆண்டித் தேவர் (1980), பி.கே.எம். முத்துராமலிங்கம் (சுயேச்சை,அ.தி.மு.க. ஆதரவு 1984), பி.என். வல்லரசு (தி.மு.க. ஆதரவு), பி.என். வல்லரசு (1996), எல். சந்தானம் (2001), பி.வி. கதிரவன் (2011) ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். 1991, 2006 தேர்தல்களில், அ.தி.மு.க. வெற்றி பெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அயோத்திதாச பண்டிதர்

1845-ம் ஆண்டு, சென்னை தேனாம் பேட்டையிலுள்ள மக்கீஸ் தோட்டத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்தார். தந்தை கந்தசாமி இவருக்குச் சூட்டிய பெயர், காத்தவராயன். சித்த மருத்துவப் பயிற்சி பெற்றார்.

இவருக்கு அந்தப் பயிற்சியை அளித்தவர், அந்நாளில் புகழ்பெற்ற சித்த மருத்துவர் அயோத்திதாச பண்டிதர். எனவே, அவரது பெயரையே தமக்குச் சூட்டிக்கொண்ட காத்தவராயன், அயோத்திதாசரானார்.

ரெவரென்ட் ஜான் ரத்தினம் என்பவரோடு சேர்ந்து, ‘திராவிட பாண்டியன்’ என்ற பெயரில், ஒரு ஏட்டினைத் தொடங்கினார். ‘தமிழன்’ என்ற இதழை நடத்தினார்.

1886-ம் ஆண்டு, தீண்டாமைக் கொடுமைக்கு உள்ளான ஒடுக்கப்பட்ட மக்கள், இந்துக்கள் அல்ல என்று அறிவித்தார்.

1981-ம் ஆண்டு, ‘திராவிட மகாஜன சபா’ என்ற அமைப்பை நிறுவினார். அதே ஆண்டில், ஆங்கில அரசு மேற்கொண்ட மக்கள் தொகைக் கணக்குப்பதிவின்போது, ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களை இந்து என்று பதிவு செய்யாமல், ‘சாதிகளற்ற திராவிடர்’ என்று பதிவு செய்யுமாறு அறிக்கை விடுத்தார்.

‘பறையர்கள் பௌத்தர்களே; அவர்களுக்கு உரிமையாக இருந்த நிலங்களை ஆரியர்கள் பறித்துக் கொண்டார்கள்’ என்று கூறினார். அடையாறு தியோசாஃபிகல் சொஸைட்டியின் நிறுவனர்களுள் ஒருவரான ஆல்காட் அவர்களைச் சந்தித்து, பறையர் இன மக்களை பௌத்த சமயத்துக்கு மாற்றுவது குறித்துப் பேசினார். இலங்கைக்குச் சென்று, சுமங்கல நாயகே என்ற பௌத்த பிக்குவிடம் தீட்சை பெற்றார்.

சென்னைக்குத் திரும்பி வந்து, 1898-ம் ஆண்டு, ‘சாக்கிய பௌத்த சங்கம்’ என்ற அமைப்பை நிறுவினார். இது, இந்திய பௌத்த சங்கம் (Indian Buddhist Association) என்றும் அழைக்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அயோத்திதாச பண்டிதர்

சுதேசி இயக்கத்தை எதிர்த்தார். தாம்பரத்திலுள்ள, தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு, அயோத்திதாசரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ரெட்டமலை சீனிவாசன்

1860-ம் ஆண்டு, மதுராந்தகத்தில் ஒடுக்கப்பட்ட பறையர் வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை, நீலகிரி மாவட்டத்தில், தேயிலைத் தோட்டம் ஒன்றில் பணியாற்றினார். எனவே, சீனிவாசன் கோவையில் படித்துப் பட்டம் பெற்றார். அப்போது அவருடன் படித்த 400 மாணவர்களுள், பத்துப்பேர் தவிர, 390பேர் பார்ப்பன மாணவர்கள் என்பதைக் கண்டார். தீண்டாமைக் கொடுமைகளை உணர்ந்தார்.

1891-ம் ஆண்டு, ‘பறையர் மகாஜன சபை’ என்ற ‘ஆதி திராவிட மகாஜன சபை’ அமைப்பதில் பங்கேற்று, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றார்.

1893-ம் ஆண்டு, ‘பறையன்’ என்ற பெயரில், நான்கு பக்கங்கள் கொண்ட மாத ஏட்டினைத் தொடங்கினார். விலை இரண்டணா; முதல் பதிப்புக்குச் செலவு பத்து ரூபாய். இரண்டு நாட்களில், சென்னையில் 400 படிகள் விற்கப்பட்டன. மூன்று ஆண்டு களுக்குப் பிறகு வார ஏடாக மாறியது. சொந்தமாக அச்சுக்கூடம் அமைத்துக் கொண் டார். ஏழு ஆண்டுகள் இந்த இதழ் வெளி வந்துள்ளது. ஒடுக்கப்பட்டோரின் முன்னேற்றத்துக்காகக் குரல் கொடுத்து வந்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ரெட்டமலை சீனிவாசன்

அந்நாட்களில் வருவாய், நீதித்துறை உள்ளிட்ட ஆட்சிப்பணித் தேர்வுகள் (Civil Services), லண்டனில் மட்டுமே நடைபெற்று வந்தன. அத்தேர்வுகளை, இந்தியாவிலும் நடத்த வேண்டுமென காங்கிரஸ்காரர்கள், இங்கிலாந்து நாடாளுமன்றத்திடம் ஒரு கோரிக்கை வைத்தார்கள். அவ்வாறு தேர்வுகள் இந்தியாவிலும் நடத்தப் படுமானால், அதில் சாதி இந்துக்களான உயர்சாதியினரே பெருமளவில் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வார்கள் என்பதால், பறையர் மகாஜன சபை அதை எதிர்த்தது.

1895-ம் ஆண்டு, அக்டோபர் 7-ம் நாள், பறையர் இன மக்கள், பேண்டு வாத்தியங்கள் முழங்க, ஒரு பேரணியாகத் திரண்டு வந்து, விக்டோரியா அரங்கத்தில் முதன் முறையாகக் கூடினர். தனது மக்களின் முன்னேற்றத்துக்கு வழிகாணும் வகையில், லண்டனுக்குச் சென்றுவரத் தீர்மானித்த ரெட்டமலை சீனிவாசன், 1890-ம் ஆண்டு, தென்னாப்பிரிக்காவுக்குச் சென்று, அங்கே 16 ஆண்டுகள் வசித்தார். மகாத்மா காந்தியின் மொழி பெயர்ப்பாளராகத் திகழ்ந்தார். மீண்டும் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். ஆங்கில அரசு, அவரைச் சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக நியமித்தது; ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுள் ஒருவராக, வட்டமேசை மாநாட்டில் கலந்துக்கொள்ள, லண்டனுக்கு அனுப்பி வைத்தது.

தீண்டாமை ஒழிப்புக்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களை மதுவின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவும், அவர்களின் சமூக முன்னேற்றத்துக்கும் பாடுபட்டார்.

ஆங்கில அரசு, ‘ராவ்சாஹிப்’, ‘ராவ் பகதூர்’, ‘திவான் பகதூர்’ ஆகிய பட்டங்களை அவருக்களித்தது. 1945 செப்டம்பர் 15-ம் நாள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயற்கை எய்தினார்.

குடியரசு கட்சி

ஒடுக்கப்பட்டோ ரின் உரிமைக்காக, பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களால் தொடங்கப்பெற்ற குடியரசு கட்சியின் கிளை, தமிழ்நாட்டிலும் அமைக்கப்பட்டது. பல பிரிவுகளும் தோன்றின. தற்போது தமிழகச் சட்டமன்றத்தில் செ.கு.தமிழரசன் உறுப்பினராக உள்ளார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

புதிய தமிழகம்

உடுமலைப் பேட்டை அருகே உள்ள மசக்கவுண்டம் புதூர் கிராமத்தைச் சேர்ந்த, டாக்டர் க. கிருஷ்ணசாமி 1984-ம் ஆண்டு பொள்ளாச்சி (தனி) நாடாளுமன்றத் தொகுதியில், தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோற்றார். 1988-ம் ஆண்டு, அக்கட்சியிலிருந்து விலகினார். 1991-ல், ‘தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பை’ நிறுவினார்.

31.08.1995 தூத்துக்குடி மாவட்டம் கொடியங்குளம் கிராமத்தில் நடைபெற்ற சாதிக் கலவரத்தின்போது, தாழ்த்தப்பட்ட மக்கள் காவலர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களுடைய வீடுகள் உடைத்து நொறுக்கப்பட்டன.

இந்தப் பிரச்சனை, 1996 சட்டமன்றத் தேர்தலில் எதிரொலித்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தொடர்ந்து வாக்களித்து வந்த தாழ்த்தப்பட்ட மக்கள், அக்கட்சியைப் புறக்கணித்தனர். ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில், தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் சார்பில் தனித்துப் போட்டியிட்ட டாக்டர் கிருஷ்ணசாமி வெற்றி பெற்றார்.

15.12.1997-ல் ‘புதிய தமிழகம்’ கட்சியைத் தொடங்கினார்.

கொள்கைகள்

பட்டியல் சாதி மக்களின் அடிப்படை மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு; தாழ்த்தப்பட்டோருக்கு கான்கிரீட் வீடு; இலவச மனைப்பட்டா; தொழில் தொடங்கக் கடனுதவிகள்; பட்டியல் சாதிகளில் உள்ள இழிவை நீக்க நடவடிக்கை; பழங்குடியினர் வசம் காடுகள் பாதுகாப்பு; தனியார் பள்ளிகளில் நன்கொடை வாங்குவதற்குத் தடை; அனைத்துத் துறைகளிலும் தமிழ் பயிற்றுமொழி; இட ஒதுக்கீட்டைக் கண்காணிக்கக் குழு; போதைப் பொருட்கள் ஒழிப்பு; தலித் கிறித்தவர் களுக்கு இட ஒதுக்கீடு ஆகியவை இக்கட்சியின் கொள்கைகளாகும்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

டாக்டர் கிருஷ்ணசாமி

அரசுப் பணிகளில் தாழ்த்தப் பட்டோருக்கான இட ஒதுக்கீடு முறையாக நிரப்பப்பட்டுள்ளதா என்பது குறித்து, வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று சட்டப்பேரவையில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். நெல்லை மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சனை, ஆதி திராவிடர்கள் மீதான தாக்குதல், கிராமங்களில் தேநீர் கடைகளில் இரட்டைத் தம்ளர் முறை ஆகியவற்றை எதிர்த்து, புதிய தமிழகம் போராட்டங்களை நடத்தியது.

1998-ல் மக்களவைத் தேர்தலில் தனித்தும், 99 தேர்தலில் தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியில் இணைந்தும் தேர்தலைச் சந்தித்தது. தென்காசி தொகுதியில் போட்டியிட்ட டாக்டர் கிருஷ்ணசாமி, 2004 தேர்தலில் 1,01,122 வாக்குகளும், 2009 தேர்தலில் 1.26 லட்சம் வாக்குகளும் பெற்றார்.

2011-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், அண்ணா தி.மு.க. கூட்டணியில் இணைந்து தேர்தலைச் சந்தித்தது. டாக்டர் கிருஷ்ணசாமி (ஒட்டப்பிடாரம்), ராமசாமி (நத்தம்) ஆகிய இருவரும் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு பெற்றனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கடலூர் மாவட்டம் மங்களூர் அருகே உள்ள அங்கனூரில் பிறந்த திருமாவளவன், கல்லூரியில் படிக்கின்ற காலத்திலேயே அரசியல் ஆர்வத்தில், திராவிடர் கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டார். தி.மு.க-வில் இணைந்தார். ‘விடுதலைப்புலி’ என்கிற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தி வந்தார். 1989-ம் ஆண்டு, வரகூர் தொகுதியில், தி.மு.க. சார்பில் போட்டியிட விண்ணப்பித்தார். அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. எம்.ஏ., பி.எல் பட்டம் பெற்றார்.

திருமாவளவன்

மதுரையில், ‘பாரதீய தலித் சிறுத்தைகள்’ என்ற இயக்கத்தை வழக்கறிஞர் மலைச்சாமி என்பவர் நடத்தி வந்தார். 1989-ம் ஆண்டு, அவர் காலமானபோது அந்த இயக்கத்தைத் திருமாவளவன் தலைமையேற்று தொடர்ந்து நடத்த வேண்டும் என்று அவரது ஆதரவாளர்கள் கேட்டுக் கொண்டனர். 1990-ம் ஆண்டு, அந்த இயக்கத்தின் பெயரை, ‘இந்திய ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள் இயக்கம்’ என மாற்றி, அதை நடத்தி வந்தார். 1988 முதல் 1999 வரை தமிழக அரசின் தடய அறிவியல் துறையில் உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திருமாவளவன், இரவு நேரங்களில் குடிசை மக்களைச் சந்தித்து, கூட்டங்களை நடத்தினார். கடற்கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவ இளைஞர்களுக்கு, மாலைநேரத்தில் கல்வி போதிக்கும் பணியை மேற்கொண்டார்.

1991-ம் ஆண்டு, அமைப்பின் பெயர் ‘விடுதலைச் சிறுத்தைகள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயக்கம்' என்று மாறியது. நீலம், சிவப்பு வண்ணத்தில் நடுவில் வெள்ளை நட்சத்திரம் பொறிக்கப்பட்ட புதிய கொடி அறிமுகப்படுத்தப்பட்டது.

கொள்கைகள்

தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரம்; சாதி ஒழிப்புக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை; இரட்டைக்குவளை முறை அடியோடு ஒழிப்பு; அனைத்துக் கோயில்களிலும் சுதந்திர வழிபாடு; மனைப்பட்டா இல்லாத குடும்பங்களுக்கு 5 சென்ட் நிலம்; போலி சாதிச்சான்று மூலம் தாழ்த்தப்பட்டோர் வேலையைப் பறித்தவர்களைக் கண்டறிந்து நடவடிக்கை; தனியார் துறையில் கட்டாய இட ஒதுக்கீடு; மாநிலப்பட்டியலில் கல்வி; பிணம் சுடுவோர், மாடு உறிப்போர், மலம் அள்ளுவோர், தண்டோரா போடுவார் என வருமானம் இல்லாமல் குற்றேவல் செய்வோருக்கு அரசு ஊதியம்; சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அனைத்து சாதியினருக்கும் இட ஒதுக்கீடு; மகளிர்க்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு; ஊனமுற்றோருக்கு 10 விழுக்காடு இட ஒதுக்கீடு ஆகியவை இக்கட்சியின் கொள்கைகளாகும்.

தேர்தலில் போட்டி

1999 நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்று சிதம்பரம் (தனி), பெரம்பலூர் (தனி) ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டது. சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட திருமாவளவன், 2.25 லட்சம் வாக்குகள் பெற்றார்.

2004-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் சின்னத்தில், சிதம்பரம் தொகுதியில் போட்டியிட்ட திருமாவளவன், 2.57 லட்சம் வாக்குகள் பெற்றார்.

2006 சட்டமன்றத் தேர்தலில் இக்கட்சி, அண்ணா தி.மு.க. கூட்டணியில் இணைந்து, ஒன்பது இடங்களில் போட்டியிட்டது. ரவிகுமார் (காட்டுமன்னார்கோவில்) செல்வப் பெருந்தகை (மங்களூர்) ஆகியோர் சட்டமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு பெற்றனர். பின்னர் செல்வப்பெருந்தகை, கட்சியிலிருந்து விலகினார்.

உள்ளாட்சித் தேர்தல்களின்போது, தி.மு.க. கூட்டணியில் இணைந்தது. 2009 நாடாளுமன்றத் தேர்தலில், சிதம்பரம் (தனி),

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விழுப்புரம் ஆகிய இரு நாடாளுமன்றத் தொகுதிகளில் போட்டியிட்டது. சிதம்பரம் தொகுதியிலிருந்து திருமாவளவன் வெற்றி பெற்றார்.

தமிழக தேர்தல் சாதனையாளர்கள்!

முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி, 12 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்தலில் வெற்றி பெற்று உள்ளார். அதுவும், குளித்தலை (1957), தஞ்சாவூர் (1962), சைதாப்பேட்டை (1967, 71), அண்ணா நகர் (1977, 80), துறைமுகம் (1989, 91), சேப்பாக்கம் (1996, 2001, 2006), திருவாரூர் (2011) என பல தொகுதிகளில் இருந்து அவர் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார்.

1952 தேர்தலில், தி.மு.கழகம் போட்டியிடவில்லை. 1984-ம் ஆண்டு, இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக, சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பைவிட்டு விலகினார். பின்னர், சட்ட மேலவை உறுப்பினர் ஆனார்.

எனவே, 1984-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கருணாநிதி போட்டியிடவில்லை. 1991 தேர்தலில் தி.மு.கழகம் இரண்டே தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. அந்த நிலையிலும் வெற்றி பெற்ற கருணாநிதி, தி.மு.க. தோல்விக்குப் பொறுப்பு ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகினார்.

தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழ கன், 9 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார் (1957, 1971, 1977, 1980, 1984, 1989, 1996, 2001, 2006). எழும்பூர், பூங்கா நகர், துறைமுகம் உள்ளிட்ட பல தொகுதிகளில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டார். 1962-67-ல் தமிழகச் சட்டமேலவை உறுப்பினராகவும், 1967-71-ல் திருச்செங்கோடு தொகுதி நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் பொறுப்பு வகித்துள்ளார்.

ஃபார்வர்டு பிளாக் தலைவர்களுள் ஒருவரான பி.கே.மூக்கையாத் தேவர், 1957, 1962, 1967, 1971, 1977 சட்டமன்றத் தேர்தல் களில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தொகுதியில் இருந்து தொடர்ச்சியாக ஐந்து முறை தேர்ந்து எடுக்கப்பட்டார்.

சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியில் இருந்து, தி.மு.க. தலைவர்களுள் ஒருவரான கே.ஏ.மதியழகன் தொடர்ச்சியாக மூன்று முறையும், அவரது மறைவுக்குப் பின்னர் அவரது உடன்பிறந்த தம்பி கே.ஏ.கிருஷ்ணசாமி மூன்று முறையும் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்து எடுக்கப்பட்டனர்.

இரா.நெடுஞ்செழியன், சென்னை திருவல்லிக்கேணி தொகுதியில் இருந்து மூன்று முறையும், ஆத்தூர், தேனி, திருநெல்வேலி ஆகிய தொகுதிகளில் இருந்து தலா ஒரு முறையும் தமிழகச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார்.

குமரி அனந்தன் திருவொற்றியூர், ராதாபுரம், சாத்தான்குளம் தொகுதிகளில் இருந்து சட்டப்பேரவைக்கும், ஒருமுறை நாகர்கோவில் நாடாளுமன்றத் தொகுதியில் இருந்தும் வெற்றி பெற்று உள்ளார்.

பண்ருட்டி எஸ். ராமச்சந்திரன்



https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பண்ருட்டி எஸ்.ராமச்சந்திரன், பண்ருட்டி தொகுதியில் இருந்து, ஆறு முறை தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார். தற்போது, சென்னை ஆலந்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக உள்ளார். தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க. ஆகிய நான்கு கட்சிகளின் சார்பிலும் அவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார்.

1962 முதல் 1977 வரை, தொடர்ச்சியாக நான்கு முறை செய்யாறு தொகுதியில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட புலவர் கா.கோவிந்தன், தமிழகச் சட்டமன்றப் பேரவைத் தலைவராகவும் பணியாற்றி உள்ளார்.

1977 முதல் 1991 வரையிலும், வெள்ளகோயில் தொகுதியில் இருந்து முன்னாள் அமைச்சர் துரை.ராமசாமி, தொடர்ச்சியாக ஐந்து முறை தேர்ந்து எடுக்கப்பட்டார்.

கோபிசெட்டிபாளையம் தொகுதியில் இருந்து 1980, 1984, 1988, 1991, 2011 ஆகிய தேர்தல்களில் கே.ஏ.செங்கோட்டையன் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார்.

நத்தம் தொகுதியில் இருந்து எம்.ஆண்டி அம்பலம், 1977 முதல் 1996 வரையிலும் தொடர்ச்சியாக ஆறு முறை தேர்ந்து எடுக்கப்பட்டார். 1967, 1971, 1977, 1980 தேர்தல்களில், மயிலாடுதுறையில் இருந்து என்.கிட்டப்பா தேர்ந்து எடுக்கப்பட்டார். 1977, 1980, 1984, 1989, 1991 தேர்தல்களில், அறந்தாங்கி தொகுதியில் இருந்து தமிழகச் சட்டப்பேரவைக்கு ஆறு முறை தேர்ந்து எடுக்கப்பட்ட திருநாவுக்கரசர், 2004 தேர்தலில் புதுக்கோட்டை தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கும் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பி.கே. மூக்கையாத் தேவர்



கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்

1957, 1962, 1984, 1989, 1991, 1996 தேர்தல்களில், நிலக்கோட்டை (தனி) தொகுதியில் இருந்து ஏ.எஸ்.பொன்னம்மாள் ஆறு முறை தேர்ந்து எடுக்கப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை (தனி) தொகுதியில் இருந்து, 1980, 1989, 1991, 1996 ஆகிய தேர்தல்களிலும், 1962 தேர்தலில் சோழவந்தான் தொகுதியில் இருந்தும் தேர்ந்து எடுக்கப்பட்டார்.

கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சாத்தூர் தொகுதியில் இருந்து ஆறு முறை தமிழகச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளார். தாமரைக்கனி, ஐந்து முறை திருவில்லிபுத்தூர் தொகுதியில் இருந்து வெற்றி பெற்று உள்ளார்.

1996 சட்டமன்றத் தேர்தலில் வில்லிவாக்கம் தொகுதியில் இருந்து தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர் ஜே.எம்.ஆரூண், 1,47,474 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தற்போது அந்தத் தொகுதி பிரிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாட்டு அரசியலில், பெண்கள்

அனைத்திந்திய அளவில், இதர மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழக மகளிர் பல்வேறு துறைகளிலும் வெகுவாக முன்னேறி வருகின்றனர். ஆட்சி, அதிகாரங்களிலும் அவர்களுடைய பங்கு வலுப்பெற்று வருகின்றது.

சங்க காலத்திலேயே தமிழகப் பெண்டிர், கல்வி-கேள்விகளில் சிறந்து விளங்கினர்.

1. அஞ்சியத்தை மகள் நாகையார்
2. காக்கைபாடினி நச்செள்ளையார்
3. ஔவையார்
4. காவற் பெண்டு
5. காமக்கணிப் பசலையார்
6. குமிழி ஞாழலார் நப்பசலையார்
7. குறமகள் இளவெயினி
8. குறமகள் குறியெயினி
9. நக்கண்ணையார்
10. பாரி மகளிர்
11. பாவைக் கொட்டிலார்
12. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
13. பெருங்கோழிநாய்கன் மகள் நக்கண்ணையார்
14. பேய்மகள் இளவெயினி
15. மதுரைக் காமக்கணி நப்பசலையார்
16. மாறோக்கத்து நப்பசலையார்

உள்ளிட்ட பல பெண்பாற் புலவர்கள் இயற்றிய பாடல்கள்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சங்க இலக்கியத் தொகுப்புகளில் இடம் பெற்றுள்ளன. கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியன் அவையில் வாதிட்டுச் சரித்திரம் படைத்தார்.

ஔவையார், பாரி உள்ளிட்ட குறுநில மன்னர்களுக்கு அறிவுரை பகரும் இடத்தில் இருந்தார். பிற்காலச் சோழப் பேரரசன் ராஜராஜ சோழனின் தமக்கையார் குந்தவை நாச்சியார், ஆட்சி நடத்துவதில் அரிய ஆலோசனைகள் வழங்கி வந்தார்.

16-ம் நூற்றாண்டில் ராணி மங்கம்மாள் மதுரையிலும், 17-ம் நூற்றாண்டில் வீரத்தாய் வேலு நாச்சியார் சிவகங்கையிலும் பெண் அரசிகளாக இருந்து ஆண்டுள்ளனர். சமஸ்தானங்கள் எனப்படும் சில சிற்றரசுகளையும் பெண்கள் ஆட்சி புரிந்துள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டில், வி.என். ஜானகி 23 நாள்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பு வகித்துள்ளார். ஜெயலலிதா, மூன்று முறை தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளார். தற்போதும், முதல் அமைச்சராகப் பொறுப்பு வகித்து வருகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில், தமிழக அரசியலில் தமிழக அரசியலில் தடம் பதித்த பெண்களைப் பற்றிய சிறு குறிப்புகளைக் காண்போம்.

அன்னிபெசன்ட் அம்மையார்

சொற்பொழிவாளராகவும், எழுத்தாளராகவும் இங்கிலாந்து நாட்டு அரசியலில் தீவிரமாக ஈடுபட்டு வந்த அன்னிபெசன்ட் அம்மையார், ‘தியோசஃபிகல் சொசைட்டி’யின் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, 19-ம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்தார். ‘பிரம்ம ஞான சபை’ என்று அழைக்கப்பட்ட தியோசஃபிகல் சொசைட்டியின் உலகத் தலைமையகம், சென்னை அடையாறுதான். 1902-ம் ஆண்டு, அச்சங்கத்தின் தலைவராக அன்னிபெசன்ட் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

‘நியூ இந்தியா’ என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியரான அம்மையார், இந்தியர்களின் முன்னேற்றத்துக்காக, ஏராளமான கட்டுரைகளை எழுதியும் பேசியும் வந்தார். ஆட்சி அதிகாரங்களில் இந்தியர்களுக்குப் பங்களிக்க வேண்டும்; பிரித்தானியப் பேரரசுக்கு உட்பட்ட இந்தியர்களின் தன்னாட்சி என்ற கொள்கையை வலியுறுத்தி, ஹோம்ரூல் என்ற ‘உள்ளக ஆட்சி’ இயக்கத்தை, 1916-ம் ஆண்டு தோற்றுவித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1917-ம் ஆண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், சென்னை மாகாண அரசியலில் மட்டுமன்றி, ஒட்டுமொத்த இந்திய அரசியலிலும் மதிக்கத்தக்க ஒரு தலைவராக, செல்வாக்கோடு திகழ்ந்தார். 1933-ம் ஆண்டு இயற்கை எய்தினார். அவரது நினைவாக, அடையாறை ஒட்டி உருவான புதிய விரிவாக்கப் பகுதிக்கு, ‘பெசன்ட் நகர்’ எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

முத்துலெட்சுமி ரெட்டி

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிறந்த முத்துலெட்சுமி, வீட்டில் இருந்தபடி தந்தையிடமே கல்வி கற்று, மெட்ரிகுலேசன் தேர்வைத் தனித்தேர்வராக எழுதி வெற்றி பெற்றார். அப்போது, அது பெரிய செய்தியாகப் பேசப்பட்டது. புகுமுக வகுப்புக்காகக் கல்லூரியில் சேர விழைந்தார். பலத்த எதிர்ப்புகளுக்கு இடையிலும், அவரது தந்தை நாராயணசாமி ஐயர், முத்துலெட்சுமியைக் கல்லூரியில் சேர்க்கத் தீர்மானித்தார். முத்துலெட்சுமியின் தாய், இசை வேளாளர் வகுப்பைச் சேர்ந்தவர். முத்துலெட்சுமியின் பெற்றோர், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள்.

ஆண்கள் மட்டுமே படித்து வந்த புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் சேருவதற்காக முத்துலெட்சுமி விண்ணப்பித்தபோது, கல்லூரி முதல்வர் அதை விரும்பவில்லை. ‘ஒரு பெண்ணைக் கல்லூரியில் சேர்த்தால், ஆண் மாணவர்களின் கவனம் சிதறும்’ என்று அவர் கருதினார். ஆனால், இவரது விண்ணப்பத்தைக் கேள்வியுற்ற புதுக்கோட்டை மன்னர், முத்துலெட்சுமியைக் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளச் செய்தார். அவர் கல்லூரிக்கு வருகையிலும், திரும்பிச் செல்கையிலும், ஆண் மாணவர்களின் கண்களில் பட்டு விடாதபடி ஏற்பாடு செய்திருந்தார்கள். வகுப்பறையில், முத்துலெட்சுமிக்கும் ஆண் மாணவர்களுக்கும் இடையே திரை கட்டப்பட்டிருந்தது.

அங்கே புகுமுக வகுப்பை முடித்தபிறகு, 1907-ம் ஆண்டு, சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து, 1912-ம் ஆண்டு மருத்துவர் பட்டம் பெற்றார். இந்தியாவில் மருத்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற முதலாவது பெண் மருத்துவர் என்ற சிறப்பும் அவருக்குக் கிடைத்தது. சென்னை அரசினர் மகளிர்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

குழந்தைகள் மருத்துவமனையில் மருத்துவராகப் பணியில் சேர்ந்தார். இங்கிலாந்து நாட்டுக்குச் சென்று மேல்படிப்பையும் முடித்தார்.

சென்னை மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த நீதிக்கட்சி, பெண்களுக்கும் வாக்குரிமை அளிக்க வேண்டும் என, 1921-ம் ஆண்டு, சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது. ஆயினும், 1927-ம் ஆண்டுதான், அந்தத் தீர்மானத்துக்கு ஒப்புதல் கிடைத்தது.

1927-ம் ஆண்டு, சென்னை மாகாண சட்ட மேலவை உறுப்பினராக முத்துலெட்சுமி நியமிக்கப்பட்டார். இந்தியாவிலேயே சட்டமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்ட முதலாவது பெண் மற்றும் உலகச் சட்டமன்றங்களின் வரலாற்றிலேயே துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் ஆகிய பெருமைகளைப் பெற்றார்.

குழந்தைத் திருமணங்களுக்குத் தடை, பெண்களின் திருமண வயதை உயர்த்துதல் உள்ளிட்ட மகளிர் நலன் சார்ந்த பல சட்டங்களை நிறைவேற்றுவதில் பெரும்பங்கு வகித்தார்.

‘தேவர் அடியாள்’ என்ற பெயரில், திருக்கோயில்களில் பெண்கள் பொதுமகளிராக்கப்பட்டு வந்த கொடுமையை ஒழிப்பதற்காக, இழிவைத் துடைப்பதற்காக, தேவதாசி ஒழிப்புச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். அப்போது உரையாற்றிய சத்தியமூர்த்தி, ‘ஆகம விதிகளை மாற்றக்கூடாது’ என்று கூறி அதை எதிர்த்தபோது, ‘அப்படியானால் இனி உயர்சாதிப் பெண்களை தேவதாசிகளாக ஆக்குங்கள்’ என்று முத்துலெட்சுமி பதிலடி கொடுத்தபோது, சட்டமன்றமே அதிர்ந்தது. தேவதாசி நடைமுறை ஒழிந்தது.

1930-ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டிலும், 1932-ம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற உலக பெண்கள் மாநாட்டிலும் பங்கேற்றார். 1930-ம் ஆண்டு, மகாத்மா காந்தி உப்புக் காய்ச்சும் அறப்போரை அறிவித்து கைதானபோது, சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து முத்துலெட்சுமி ரெட்டி விலகினார். விடுதலைப் போரில் பங்கேற்றுச் சிறை சென்றார். ஆதரவற்ற மகளிருக்காக, 1930-ம் ஆண்டு சென்னை அடையாறில் ‘அவ்வை இல்லம்’ என்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மகளிர் விடுதியை நிறுவினார். இந்த விடுதி, தற்போதும் சிறப்பாக இயங்கி வருகின்றது. சென்னையில் புற்றுநோய் மருத்துவமனையைத் தொடங்கினார். அனைத்திந்திய அளவில், அரசியலில் மகளிரின் பங்கேற்புக்கு அடித்தளம் அமைத்தவர் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி. இவர், நடிகர் ஜெமினிகணேசனின் அத்தை ஆவார். ஆந்திராவைச் சேர்ந்த 'ரெட்டி' சமூகத்தவரைத் திருமணம் செய்ததால் பெயருடன் 'ரெட்டி' சேர்ந்தது.

திராவிடர் இயக்கத்தில் பெண்கள்

நாகம்மை, கண்ணம்மை, மணியம்மை

'கள்ளுக்கடை மறியலை நிறுத்துகின்ற முடிவு என் கையில் இல்லை; ஈரோட்டில் உள்ள இரண்டு பெண்கள் கையில் இருக்கின்றது' என்றார் மகாத்மா காந்தி. அந்த இருவர்: நாகம்மையார், பெரியாரின் மனைவி; கண்ணம்மையார், பெரியாரின் தங்கை.

நாகம்மை

பெண்கள் பொது இடங்களுக்கு வருவது இழிவாகக் கருதப்பட்ட அந்தக் காலத்தில், நாகம்மையார், மேடைகளில் ஏறி, பெரியாரின் கருத்துகளுக்கு ஆதரவாகப் பேசினார். கலப்பு மணம், விதவை மணம் குறித்துப் பேசி ஊக்கமளித்தார். சுயமரியாதை இயக்க இதழ், வெளி அச்சகங்களில் அச்சாகி வந்த நிலை மாறி, 09.01.1927 முதல், நாகம்மையாரை அச்சக உரிமையாளராகக் கொண்டு, 'உண்மை விளக்கம்' என்ற சொந்த அச்சகத்தின் மூலம் வெளிவரத் தொடங்கியது. பெரியார் ஐரோப்பியச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோதும், குடியரசு இதழைத் தொடர்ந்து வெளிக்கொண்டு வந்தார். பெரியாரின் கீழைநாட்டுச்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சுற்றுப்பயணங்களில் பங்கேற்றார்.

இன்றைய ஆட்சி ஒழிய வேண்டும். ஏன்? என்ற தலைப்பில் பெரியார் எழுதிய கட்டுரைக்காக, பெரியாரும், பதிப்பாளர் கண்ணம்மையாரும் கைது செய்யப்பட்டனர்.

பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு இயக்கத்தில் இணைந்த மணியம்மையார், 1944-ம் ஆண்டு, சேலம் மாநாட்டில் ஆற்றிய உரை குறிப்பிடத்தக்கது. சிறந்த கட்டுரையாளராகவும் திகழ்ந்தார். 1944-ம் ஆண்டில், குடியரசு இதழில், கந்தபுராணம், ராமாயணம் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். பெரியாரின் உற்ற துணையான உதவியாளராகத் தொண்டாற்றி வந்த மணியம்மையாரை, 1949-ம் ஆண்டு, பெரியார் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். அதன்பிறகு, மணியம்மையார் பெரியாரின் சுற்றுப்பயணங்கள் அனைத்திலும் பங்கேற்றார்.

கண்ணம்மை



மணியம்மை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

19.01.1958-ல் விடுதலையில் எழுதிய ஒரு கட்டுரைக்காக ஒரு மாதம் சிறைவாசம் அடைந்தார். பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பல மாதங்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளார். பெரியார் மறைவுக்குப் பின்னர், திராவிடர் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றார். நெருக்கடி நிலை காலத்தில், திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு, ஓராண்டுச் சிறைவாசம் அனுபவித்தபோது, மணியம்மையார் நெஞ்சுரத்தோடு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு, கழகத்தைக் கட்டிக் காத்தார். 1978-ம் ஆண்டு இயற்கை எய்தினார்.

திராவிடர் இயக்க மாநாடுகளில் கலந்துக்கொண்ட தோழர்கள், தங்கள் மனைவி, குழந்தைகளோடு பங்கேற்றனர்; குடும்பத்தோடு சிறை புகுந்தனர். அந்த வகையில் நூற்றுக்கணக்கான பெண்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளனர்.

குஞ்சிதம் குருசாமி, ஏ.பி.ஜெ.மனோரஞ்சிதம், ‘முத்தமிழ்த் தொண்டர்’ தாமரைக்கண்ணி அம்மையார், லீலாவதி ராமசுப்பிரமணியம், மீனாம்பாள் சிவராஜ், உண்ணாமுலையம் மாள், பட்டம்மாள், ஏமலதா தேவி, சரஸ்வதி அம்மையார், குமுதவல்லி, மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் அம்மை யார், சத்தியவாணிமுத்து, மருத்துவர் தருமாம்பாள், மலர்முகத்தம்மையார், அலர்மேலு அப்பாதுரை, சிவசங்கரி அம்மையார், பரிபூரணத் தம்மையார், லட்சுமி அம்மையார், நீலாம்பிகை அம்மையார் ஆகியோர் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட திராவிட இயக்கப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்துக்கொண்டு பலமுறை சிறைவாசம் ஏற்றுள்ளனர்.

விடுதலைப் போரில், பெண்கள்

கே.பி. சுந்தராம்பாள், எம்.எஸ். சுப்புலெட்சுமி ஆகியோர் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்க மேடைகளில், தேசபக்திப் பாடல்களைப் பாடி வந்தனர்.

தில்லையாடி வள்ளியம்மை, தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகளோடு சிறைவாசம் ஏற்று, உடல்நலக்குறைவால் சிறைக்குள்ளேயே இறந்தார். நூற்றுக்கணக்கான பெண்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விடுதலைப் போரில் பங்கேற்றனர்.

கருவுற்ற சிலரும், கைக்குழந்தைகளோடு பலரும் சிறையில் இருந்துள்ளனர். சரஸ்வதி பாண்டுரங்கம் அம்மையார், சட்ட மறுப்பு இயக்கம், தனிநபர் அறப்போர், வெள்ளையனே வெளியேறு போன்ற போராட்டங்களில் கலந்துக்கொண்டு கைது செய்யப்பட்டு, ஒட்டுமொத்தமாக இரண்டாண்டுகள் நான்கு மாதங்கள் சிறையில் இருந்துள்ளார்.

ருக்மணி லட்சுமிபதி

சென்னையைச் சேர்ந்த ருக்மணி, மகளிர் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ. பட்டம் பெற்றார். 1923-ம் ஆண்டு காங்கிரஸில் சேர்ந்தார்.

1926-ம் ஆண்டு, பாரிஸில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் பங்கேற்றார். 1930-ல் உப்புக் காய்ச்சும் அறப்போரில் ஈடுபட்டார்; கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைதண்டனை அடைந்தார். அந்த அறப்போரில் கைது செய்யப்பட்ட முதலாவது பெண், ருக்மணி.

1934-ம் ஆண்டு, சென்னை மாகாணச் சட்டமேலவைக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் வெற்றி பெற்றார். 1937-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பேரவையின் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1946-47-ல், பிரகாசம் அமைச்சரவையில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். சென்னை மாகாண அரசில் அமைச்சரான முதல் பெண் என்ற பெருமையைப் பெற்றார். 1951-ம் ஆண்டு இயற்கை எய்தினார். அதுவரையிலும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். சென்னை எழும்பூரில், அரசு கண் மருத்துவமனை அமைந்துள்ள சாலைக்கு, ‘ருக்மணி லட்சுமிபதி சாலை’ (பழைய மார்ஷல் சாலை) எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ருக்மணி லட்சுமிபதி

கிளப்வாலா ஜாதவ்

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் ஆர்.டி.பட்டேல் என்ற பார்சி வகுப்பினரின் மகளாகப் பிறந்த மேரி, 1926-ம் ஆண்டு, நோகிபுரோசி கிளப்வாலா என்பவரைத் திருமணம் செய்துக் கொண்டார். அவரது மறைவுக்குப் பின்னர், 1935-ம் ஆண்டு, மேஜர் ஜாதவ் என்பவரை மறுமணம் செய்துக் கொண்டார். சென்னையில் பல தொண்டு நிறுவனங்களின் தலைவராக இருந்து, ஏராளன சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வந்த மேரி கிளப்வாலா ஜாதவ், 1949-ம் ஆண்டு, சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1948-ல், சென்னை மாநகரத்தின் 'ஷெரீப்' ஆக நியமிக்கப்பட்ட முதலாவது பெண்; 1955-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருது பெற்ற முதலாவது பெண் என்ற பெருமைகளைப் பெற்றார். பின்னர் பத்மபூஷண் விருதும் பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஜோதி வெங்கடாசலம்

பார்வதி கிருஷ்ணன்

அம்மு சுவாமிநாதன்

கேரள மாநிலம் பாலக்காடு அருகே உள்ள அணக்கராவில் நாயர் வகுப்பில் பிறந்த அம்மு, 13 வயதிலேயே சென்னையைச் சேர்ந்த பாரிஸ்டர் சுவாமிநாதனுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டார். கணவரது ஆதரவில், இந்திய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு வந்தார். சென்னை மாகாண காங்கிரஸின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இந்திய அரசியல் சட்ட வரைவு மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952-ம் ஆண்டு தேர்தலில், திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். பல்வேறு சமூக நல இயக்கங்களிலும், அறப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். பாரத சாரணர் இயக்கத்தின் தலைவராக, ஐந்தாண்டுகள் (1960-65) பொறுப்பு வகித்தார்.

அம்மு சுவாமிநாதனின் மகள் கேப்டன் லெட்சுமி, நேதாஜி அமைத்த இந்திய தேசிய ராணுவத்தில் ஜான்சிராணி மகளிர் படைப்பிரிவின் தலைவராகத் திகழ்ந்தார். இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில், அப்துல் கலாமை எதிர்த்துப் போட்டியிட்டார். பிரபல நடன மங்கை மல்லிகா சாராபாய், பொது உடைமை இயக்கத் தலைவர்களுள் ஒருவரான சுபாஷினி அலி ஆகியோர், அம்மு சுவாமிநாதனின் பேரப் பிள்ளைகள் ஆவர்.

ஜோதி வெங்கடாசலம்

ஜோதி வெங்கடாசலம், 1953-ம் ஆண்டு ராஜாஜி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அமைச்சரவையில், மகளிர் நலம், மதுவிலக்குத் துறை அமைச்சராக ஏழு மாதங்களும், பின்னர் 1962-ல் காமராஜர் அமைச்சரவையிலும், 1963 முதல் பக்தவத்சலம் அமைச்சரவையிலும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக பொறுப்பு வகித்தார். பின்னர், 1977 முதல் 82 வரையிலும் கேரள மாநில ஆளுநராக ஐந்தாண்டுகள் பொறுப்பு வகித்துள்ளார்.

1957 சட்டமன்றத் தேர்தலில், கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட லூர்தம்மாள் சைமன், காமராஜர் அமைச்சரவையில் உள்ளாட்சி மற்றும் மீன்வளத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

ராஜாத்தி குஞ்சிதபாதம் (திருநெல்வேலி), சாவித்திரி சண்முகம், ஹேமலதா தேவி, டி.என். அனந்தநாயகி (எழும்பூர்), கமலா அம்புஜம்மாள், லட்சுமிகாந்தம், குழந்தையம்மாள், ஏ. எஸ். பொன்னம்மாள் (நிலக்கோட்டை), டி.யசோதா (திருபெரும்புதூர்) ரமணி நல்லதம்பி (ராதாபுரம்) ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் சார்பில் சட்டமன்றத்தில் இடம் பெற்று, குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளனர்.

பார்வதி கிருஷ்ணன்

தமிழகத்தின் முதலாவது முதலமைச்சர் டாக்டர் பி.சுப்பராயன் அவர்களின் மகள் பார்வதி கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். 1957, 1977 பொதுத் தேர்தல்களிலும், 1974-ம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலிலும், கோவை நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து மூன்று முறை இந்திய நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

1952 இடைத்தேர்தல், 1962, 1980, 1984 பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். 1954-ம் ஆண்டு, இந்திய நாடாளுமன்ற மாநிலங்க ளவைக்குத் தெரிவு பெற்று, 57 வரையிலும் மூன்று ஆண்டுகள் பொறுப்பு வகித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் (மார்க்சிஸ்ட்), மதுரை கே.பி. ஜானகி அம்மாள், பாப்பா உமாநாத், மீனா கிருஷ்ணசாமி, மைதிலி சிவராமன், உ.வாசுகி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். திண்டுக்கல் பாலபாரதி மூன்று முறை சட்ட மன்றத்துக்குத் தேர்வானார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சத்தியவாணி முத்து

திராவிட இயக்கத்தின் அனைத்துப் போராட்டக் களங்களிலும் முன்னணியில் நின்ற சத்தியவாணி முத்து, பலமுறை சிறைவாசம் அனுபவித்துள்ளார். சென்னை பெரம்பூர் தொகுதியிலிருந்து மூன்று முறை (1952, 67, 71) தமிழகச் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1967-ல் அண்ணா அமைச்சரவையிலும், 1969-ல் கருணாநிதி அமைச்சரவையிலும் இடம் பெற்று, ஆதி திராவிடர் நலன் செய்தித்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 1971-ல் மீண்டும் கருணாநிதி அமைச்சரவையில் ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1974-ம் ஆண்டு, அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகி, ‘தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்’ (தா.மு.க.) என்ற கட்சியைத் தொடங்கி சில காலம் இயங்கியபின்னர், அண்ணா தி.மு.க-வில் சேர்ந்தார். மாநிலங்களவை உறுப்பினராகத் (1978-84) தேர்வு பெற்றார்.

1980-ம் ஆண்டு, பிரதமர் சரண்சிங் அமைச்சரவையில் இடம் பெற்று, நான்கு மாதங்கள் பொறுப்பு வகித்தார். ‘ஆகாஷ்வாணி’ என்று அழைக்கப்பட்டதை நிறுத்தி, ‘அகில இந்திய வானொலி’ என அறிவிக்கும்படிச் செய்தார்.

சுப்புலெட்சுமி ஜெகதீசன்

1977-80 எம்.ஜி.ஆர். அமைச்சரவையில், பி.டி.சரஸ்வதி (திருமங்கலம்), சுப்புலெட்சுமி ஜெகதீசன் (மொடக்குறிச்சி) ஆகியோர் அமைச்சர்களாக இடம் பெற்றனர். பின்னர், சுப்புலெட்சுமி ஜெகதீசன் தி.மு.க-வில் சேர்ந்தார். 1989-ல், கருணாநிதி அமைச்சரவையில் சமூகநலத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 2004 நாடாளுமன்றத் தேர்தலில், திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். மன்மோகன்சிங் அமைச்சரவையில் சமூகநலத்துறை அமைச்சராக ஐந்தாண்டுகள் பொறுப்பு வகித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சுப்புலெட்சுமி ஜெகதீசன்

1980-84 எம்.ஜி.ஆர். அமைச்சரவையில், விஜயலெட்சுமி பழனிச்சாமி, கோமதி சீனிவாசன் ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

ஜெயந்தி நடராஜன்

தமிழக முன்னாள் முதல்வர் பக்தவத்சலத்தின் பேத்தி ஜெயந்தி நடராசன். 1986-ம் ஆண்டு முதன்முறையாக, தமிழகத்திலிருந்து இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1997-ம் ஆண்டு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேவகவுடா அமைச்சரவையில், நிலக்கரி, விமானப் போக்குவரத்து, நாடாளுமன்ற விவகாரத்துறைகளில் இணை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். தற்போது மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, மன்மோகன் சிங் அமைச்சரவையில், சுற்றுச்சூழல் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து வருகின்றார்.

1991-96 ஜெயலலிதா அமைச்சரவையில், புலவர் இந்திரகுமாரி மட்டுமே இடம் பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



ஜெயந்தி நடராஜன்

1996-ல் அமைந்த கருணாநிதி அமைச்சரவையில், சற்குணபாண்டியன், ஜெனிபர் சந்திரன் அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

2001-06 ஜெயலலிதா அமைச்சரவையில் பா. வளர்மதி இடம் பெற்றார்.

2006-ல், கருணாநிதி தலைமையில் அமைந்த தி.மு.க. அரசில், ஆலங்குளம் பூங்கோதை ஆலடி அருணா (தகவல் தொழில்நுட்பம்), தூத்துக்குடி கீதா ஜீவன் (சமூக நலம்), சமயநல்லூர் தமிழரசி (ஆதி திராவிடர் நலம்) ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

2011-ல் அமைந்த ஜெயலலிதா அமைச்சரவையில், கோகுல இந்திரா (சென்னை அண்ணா நகர்), செல்வி ராமஜெயம் (புவனகிரி) ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். பின்னர் இருவருமே அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டனர். தற்போது, பா. வளர்மதி மட்டுமே தமிழக அமைச்சரவையில் உள்ள ஒரே பெண்; சமூகநலத்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து வருகின்றார்.

தமிழக அமைச்சரவைகளில் பெண்கள் இடம் பெற்று இருந்தாலும், இதுவரையிலும் அவர்களுக்கு முதன்மையான துறைப் பொறுப்புகள் வழங்கப்படவில்லை. சமூக நலம், மகளிர் நலம், ஆதி திராவிடர் நலம் போன்ற துறைகள் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

அமைச்சர்கள் வரிசையிலும் அவர்கள் கடைசியாகத்தான்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இடம் பெறுகின்றனர். மூன்று முறை முதல்வராகப் பொறுப்பு வகித்தபோதிலும் ஜெயலலிதா அமைச்சரவையிலும் இதுதான் நிலைமை.

தமிழகச் சட்டமன்றத்தில் இடம்பெற்ற அளவுக்கு, இந்திய நாடாளுமன்றத்தில் தமிழகத்தின் சார்பில் ஒரு சில பெண் உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளனர். தற்போது, தி.மு.க.வைச் சேர்ந்த ஹெலன் டேவிட்சன், கன்னியாகுமரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகித்து வருகின்றார். வசந்தி ஸ்டேன்லி, மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார்.

தமிழக சட்டமன்றத்தில் இடம்பெற்ற பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை:

1937 - 9

1946 - 9

1952 - 2

1957 - 14

1962 - 13

1967 - 6

1971 - 6

1977 - 3

1980 - 7

1984 - 8

1989 - 9

1991 - 31

1996 - 12

2006 - 22

2011 - 17

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

புதுவை அரசியலில் பெண்கள்

புதுவையின் விடுதலைப் போராட்டக் களத்தில், ருக்குமணி, சௌந்தரவல்லி, முனியம்மாள், பாக்கியம், அந்தோணியம்மாள், ராஜாபாய், தனபாக்கியம், லட்சுமி, ஜூலியத், வீரம்மாள், சம்பூரணம், மனோரஞ்சிதம், சௌந்தரவல்லி (காரைக்கால்), மாஹே பகுதியிலிருந்து கார்த்தியாயினி, கோட்டக்கரத்தி நானி, சுனந்தா, அடியேறி ஜானகி, குஞ்னி கொரும்பி, முச்சிக்கல் தேவகி ஆகியோர் வீராங்கனைகளாகத் திகழ்ந்தனர். புதுவை அரசு இவர்களை, விடுதலைப் போராட்ட வீராங்கனைகளாக அறிவித்துச் சிறப்பித்துள்ளது.

புதுவை சட்டப்பேரவையில், இதுவரையிலும் பத்து பெண்கள் மட்டுமே சட்டமன்ற உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

புதுவை விடுதலைக்குப் பிறகு அமைந்த, 30 உறுப்பினர்களைக் கொண்ட புதுவை சட்டப்பேரவைக்கு, 1963-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது தேர்தலில் போட்டியிட்ட, மக்கள் முன்னணியின் தலைவர் வ. சுப்பையாவின் துணைவியார் சரஸ்வதி, சுதந்திரப் போராட்ட வீரர் காமிச்செட்டியின் மகள் சாவித்திரி (ஏனாம்) ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பிரெஞ்சு இந்தியாவில் பெரும் செல்வந்தராகத் திகழ்ந்த செல்வராஜூலு செட்டியார் மகள் பத்மினி, 1964-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் குரூசுகுப்பம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே தேர்தலில், ஏம்பலம் (தனி) தொகுதியில் அங்கம்மாள் என்பவரும் வெற்றி பெற்றார். 1969 தேர்தலில், ஏம்பலம் (தனி) தொகுதியில் வீரம்மாள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

புதுவை அரசில் அமைச்சராகப் பொறுப்பு வகித்த முதல் பெண்மணி ரேணுகா அப்பாதுரை. 1980 தேர்தலில், ரெட்டியார்பாளையம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று, அமைச்சரானார்.

1985-ம் ஆண்டுத் தேர்தலில், தி.மு.க. வேட்பாளர் கோமளா, திருபுவனை (தனி) தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த செல்வி சி. சுந்தரம், 1985-ம் ஆண்டு, புதுவை சட்டமன்ற உறுப்பினராக அரசால் நியமிக்கப்பட்டார்.

1991-ம் ஆண்டுத் தேர்தலில், ஏம்பலம் (தனி) தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடட பக்கிரி அம்மாள் வெற்றி பெற்றார்.

1996 தேர்தலில், திருபுவனை (தனி) தொகுதியில், அண்ணா தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிட்ட அரசி, வெற்றி பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக முதல் அமைச்சர்கள்

பி.சுப்பராயன்

பி.சுப்பராயன், சேலம் மாவட்டம் குமாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர். விடுதலைப் போராட்ட வீரர். சென்னை மாநிலக் கல்லூரியிலும், அயர்லாந்து நாட்டின் டப்ளின் பல்கலைக்கழகம், இங்கிலாந்து நாட்டின் கிரைஸ்ட் சர்ச், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகங்களிலும் படித்துப் பட்டம் பெற்றவர்.

1922-ம் ஆண்டு, சென்னை ராஜதானி சட்டமன்றத்துக்கு ஆளுநரால் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1933-ம் ஆண்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். 1937-ம் ஆண்டு, ராஜாஜி தலைமையிலான அமைச்சரவையில், சட்டம் மற்றும் கல்வித் துறை அமைச்சர்; 1947-48-ல், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அமைச்சரவையில் உள்துறை அமைச்சர்; 1949 முதல் 1951 வரையிலும் இந்தோனேஷிய நாட்டில் இந்தியத் தூதர்; 1957-ம் ஆண்டு தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 59 முதல் 62 வரையிலும், பண்டித நேருவின் அமைச்சரவையில் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்புத் துறை அமைச்சர்; 62-ம் ஆண்டில், ஐந்து மாதங்கள் மராட்டிய மாநில ஆளுநர் ஆகிய பொறுப்புகளை வகித்துப் பெருமை சேர்த்துள்ளார்.

இவரது மூத்த மகன், ஜெனரல் பரமசிவ பிரபாகர் குமாரமங்கலம், இந்திய ராணுவத்தின் தலைமைத் தளபதியாகப் பொறுப்பு வகித்துள்ளார். இரண்டாவது மகன் மோகன் குமாரமங்கலம், இந்திரா காந்தி அமைச்சரவையில், இரும்பு மற்றும் சுரங்கத் துறை அமைச்சராக ஓராண்டு பொறுப்பு வகித்துள்ளார். 1973-ம் ஆண்டு, விமான விபத்தில் காலமானார்.

மகள் பார்வதி கிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சார்பில், 1977-ம் ஆண்டு, கோவை நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பேரன் ரங்கராஜன் குமாரமங்கலம், சேலம் (காங்கிரஸ்) திருச்சி (பா.ஜ.க) நாடாளுமன்ற உறுப்பினராகவும், வாஜ்பாய் அரசில் கேபினெட் அமைச்சராகவும் பொறுப்பு வகித்துள்ளார். தமிழக அரசியலில் பெரும்புகழ் குவித்த குடும்பங்களுள் ஒன்றாக சுப்பராயன் குடும்பம் திகழ்கிறது.

ராஜாஜி

1879-ம் ஆண்டு, டிசம்பர் 9-ம் நாள், அன்றைய சேலம் மாவட்டத்தில், ஓசூருக்கு அருகிலுள்ள, தொரப்பள்ளி என்ற கிராமத்தில், வைதீகக் குடும்பத்தில் பிறந்தார். இப்போது அந்த ஊர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது. நிறைய நிலபுலன்களைக் கொண்டிருந்த இவரது தந்தை, கிராம மணியக்காரராகவும் இருந்தார்.

ராஜாஜி, மாநிலக் கல்லூரியில் பட்டம் பெற்று, சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார். ஆங்கில நூல்களை நிரம்ப வாசித்துத் தேர்ந்தார். சேலத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றி, வாதத் திறமையால் புகழ் பெற்றார். மாவட்ட நீதிமன்றங்களில், ஒரு வழக்குக்கு 3,000 ரூபாய் வரையிலும் கட்டணம் பெற்றார்.

சேலத்தின் புகழ்பெற்ற சி.விஜய ராகவாச்சாரியாரின் அறிமுகம் கிடைத்தது. அன்னிபெசன்ட் அம்மையாரின் ‘ஹோம் ரூல்’ இயக்கத்தில் இணைந்தார். சேலம் நகரமன்றத் தேர்தலில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு, பின் தலைவரானார். 1915-ம் ஆண்டு ராஜாஜியின் மனைவி இறந்த போது, அவர்களுக்கு ஐந்து குழந்தைகள். இருப்பினும், ராஜாஜி மறுமணம் செய்து கொள்ளவில்லை.

1907-ல் சூரத் நகரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் முதன்முறையாகப் பங்கேற்று, காங்கிரஸ் பேரியக்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார். காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்புகளை வளர்த்துக்கொண்டார். தீவிர அரசியலில் ஈடுபடுவதற்காக, சென்னையில் குடியேறினார்.

1917-ம் ஆண்டு சென்னைக்கு வந்த காந்தியடிகளைச் சந்தித்தார். ஒத்துழையாமை இயக்கக் கொள்கைப்படி, வழக்குரைஞர் தொழிலைவிட்டு விலகினார். சட்ட மறுப்பு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயக்கத்தில் சேருவதற்கு முன்பு, நகர்மன்றத் தலைவர் பதவியைவிட்டு விலகினார்.

சிறந்த சொற்பொழிவாளரான ராஜாஜி, தெளிவான சிந்தனை, உறுதியான வாதங்களால் வெகுவிரைவில் அரசியலில் புகழ் பெற்றார்.

வேலூரில் தடை உத்தரவை மீறியதால், மூன்று மாத சிறைத் தண்டனை பெற்றார். அந்தச் சிறைவாசத்தின்போது, அவர் எழுதிய குறிப்புகளைக்கொண்டு, ‘சிறை டைரி’ எனும் நூலை எழுதினார். காந்தி நடத்திய ‘யுவ இந்தியா’ இதழைச் சிறிது காலம் நடத்தினார். அந்தக் காலகட்டத்தில், காங்கிரஸுக்கும் ராஜாஜிக்கும் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் வந்தன.

மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, கதர் இயக்கப் பணிகளில் ஈடுபட்டார். திருச்செங்கோட்டுக்கு அருகில் ‘புதுப்பாளையம்’ என்ற கிராமத்தில், காந்தி ஆசிரமத்தை நிறுவினார். கிராம மக்களுடன் அமர்ந்து, தினமும் காலை முதல் மாலை வரையிலும், ராட்டையில் நூல் நூற்றல், கதர் நெசவு போன்ற பணிகளில் ஈடுபட்டார். ‘மதுவிலக்கு விமோசனம்’ என்ற பத்திரிகையை நடத்தினார்.

1930-ல் மீண்டும் காந்தியடிகளின் அழைப்பை ஏற்று, காங்கிரஸில் இணைந்தார். காந்தியடிகள் தண்டியில் உப்புக் காய்ச்சும் அறப்போரை நடத்திய போது, ராஜாஜி வேதாரண்யத்தில் அந்தப் போராட்டத்தை நடத்தினார். அதற்காக, திருச்சியிலிருந்து 16 தொண்டர்களுடன் நடைபயணமாகப் புறப்பட்டார். அவர்களுக்கு உணவோ, தங்கும் இடமோ அளிக்கக்கூடாதென ஆங்கில அரசு பிறப்பித்திருந்த உத்தரவையும் மீறி, வழிநெடுகிலும் மக்கள் சிறப்பான வரவேற்பளித்தனர்.

உப்புக் காய்ச்சியதற்காக ஒன்பது மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார். சிறையிலிருந்து விடுதலையானதும், ராஜாஜியின் இளைய மகள் லட்சுமிக்கும், காந்தியடிகளின் இளைய மகன் தேவதாஸுக்கும் திருமணம் நடைபெற்றது. 1936-ம் ஆண்டு, ஜூன் 16-ம் நாள், புனே அருகிலுள்ள ‘பர்ணகுடி’ என்ற இடத்தில் அந்தத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள், கதர் ஆடைகளை அணிந்து, கதர் நூல் மாலைகளை மாற்றிக் கொண்டனர்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தத் திருமணத்துக்குப்பின், ராஜாஜி அனைத்திந்திய அரசியலில் புகழ் பெற்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1937-ம் ஆண்டு, சென்னை மாகாண முதல்வரானார். மதுவிலக்கு, கைத்தொழில் பாதுகாப்புத் திட்டம், ஆலய நுழைவுச் சட்டம், கடன் நிவாரண சட்டங்களை நிறைவேற்றினார். திருநெல்வேலி, சங்கரன்கோயிலும், திருச்செந்தூர் முருகன் கோயிலும் தீண்டத்தகாதவர்களுக்குத் திறந்துவிடப்பட்டன. பள்ளிகளில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். அதற்குக் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

உலகப்போர் முடிந்தவுடன், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கின்ற பகுதிகளுக்குச் சுயநிர்ணய உரிமை அளிக்க வேண்டும் என்றார். அதனால், காங்கிரஸ் கட்சிக்குள் இவருக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்துக்கு ஆதரவளிக்காமல், காங்கிரஸிலிருந்து வெளியேறினார். மூன்று ஆண்டுகள் கழித்து, 1945-ல், மீண்டும் காங்கிரஸில் இணைந்தார். நேருவின் அமைச்சரவையில் அமைச்சரானார். 1948-ல், கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்றார். அந்தப் பதவியை வகித்த, ஒரே இந்தியர் ராஜாஜி. 1947-48-ல், மேற்கு வங்க ஆளுநராகப் பணியாற்றினார்.

சர்தார் படேலின் திடீர் மறைவை அடுத்து, நேருவின் அமைச்சரவையில், உள்துறை அமைச்சரானார். தடுப்புக் காவல் மசோதா, பத்திரிகைகள் மசோதாவைக் கொண்டு வந்தார். அவை, கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாயிற்று.

1952 தேர்தலில், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ‘ஐக்கிய ஜனநாயக முன்னணி’ என்ற பெயரில், கம்யூனிஸ்டுகள், சிறு கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றபோது, ஆளுநரின் ஆதரவோடு, ராஜாஜி முதல்வரானார். எதிர் முகாமிலிருந்த காமன்வீல் கட்சியின் மாணிக்கவேலர், உழைப்பாளர் கட்சியின் ராமசாமி படையாச்சி ஆகியோரின் ஆதரவைப் பெற்று, ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டார். சர்க்கரைக்கு ரேஷன் முறையை ரத்து செய்தார். நியாய விலைக் கடைகள் திறப்பு, மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, விவசாயக் கடன் ஒழிப்புச் சட்டங்களை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இயற்றினார்.

குலக்கல்வித் திட்டம்

பள்ளிகளில் குழந்தைகள் காலையில் பள்ளிப் படிப்பு, மாலையில் தங்கள் குடும்பத் தொழிலில் பயிற்சி பெற வேண்டும் என்ற ராஜாஜியின் திட்டத்தை, பெரியார் கடுமையாக எதிர்த்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. ராஜாஜி பதவி விலகினார். காமராஜர் முதல்வரானார்.

“காங்கிரஸ் கட்சி, சர்வாதிகாரியாகி விட்டது. அதற்குச் சரியான எதிர்க்கட்சி தேவை” என்று கூறி, 1959-ம் ஆண்டு, ‘சுதந்திரா கட்சி’யைத் தொடங்கினார். எதிர்க்கட்சிகளை ஒன்றுதிரட்டும் பணியில் ஈடுபட்டார். இந்தக் கட்சி அனைத்திந்திய அளவில் பல மாநிலங்களில் வலுப்பெற்று இருந்தது. நாடாளுமன்றத் தேர்தலிலும், பல மாநிலங்களிலிருந்து இந்தக் கட்சியின் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.

‘காங்கிரஸ் கட்சியை வீழ்த்த வேண்டும்’ என்பதற்காகவே, 1967-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், அண்ணாவுக்கு ஆதரவளித்தார். அந்தத் தேர்தலில் காங்கிரஸை வீழ்த்தி, தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. இன்றுவரையிலும், தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை.

1972-ம் ஆண்டு, டிசம்பர் 25-ம் நாள், தமது 94-ம் வயதில் ராஜாஜி இயற்கை எய்தினார். ‘சக்கரவர்த்தித் திருமகன்’, ‘வியாசர் விருந்து’ உள்ளிட்ட பல சிறந்த நூல்களை எழுதியுள்ளார்.

‘ஆந்திர கேசரி**’** பிரகாசம்

ஆந்திர மாநிலம், குண்டூருக்கு அருகிலுள்ள ‘கனபர்தி’ என்ற கிராமத்தில் 1872-ம் ஆண்டு பிறந்தவர். ராஜமுந்திரியில் சட்டக்கல்வி பயின்று வழக்கறிஞரானார். ஓங்கோலில் வழக்கறிஞராகப் பணியாற்றிப் புகழ் பெற்றார். கப்பலில் லண்டன் சென்று பாரிஸ்டர் கல்வி பயின்றார். 1904-ம் ஆண்டு, லண்டன் பார் கவுன்சில் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்றார். அதற்காக, ஐம்பது பவுன் பரிசு பெற்றார்.

அதே நாட்டில் ஒரு வழக்கில் சிறப்பாக வாதாடி வெற்றி பெற்றதற்காக, 70,000 ரூபாய் ஊதியம் கிடைத்தது. அந்தக் காலத்தில் அது மிகப்பெரும் தொகை. ஃபிரான்ஸ், ஹாலந்து, டென்மார்க், இத்தாலி, கிரீஸ், ஜெர்மனி ஆகிய பல நாடுகளில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சுற்றுப்பயணம் செய்து, இந்தியாவுக்குத் திரும்பி வந்து, சென்னையில் குடியேறினார்.

திருநெல்வேலி கலெக்டராக இருந்த ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார். அந்த வழக்கில் ஆஜராகி, சிறப்பாக வாதாடி, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குக் குறைந்த தண்டனை கிடைக்கும்படிச் செய்தார். வழக்கறிஞர் தொழிலில் மிகவும் புகழ் பெற்றார். அந்தக் காலத்திலேயே ஒரு நாளைக்கு ரூ. 500, 1000 என வருமானம் குவிந்தது. செல்வந்தரானார். ராஜமுந்திரி நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

‘லா டைம்ஸ்’ என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கினார். இரண்டு முறை வழக்குகளுக்காக லண்டன் சென்று திரும்பினார். அப்போது, காந்தியைச் சந்தித்தார். அதன்பின்பு, அவரது வாழ்க்கை திசை மாறியது. காந்தியின் அழைப்பை ஏற்று, பெரும்பணம் குவித்த சட்டத் தொழிலைக் கைவிட்டு, காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்தார்.

1921-ம் ஆண்டு, ‘சுயராஜ்யா’ என்ற ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கினார். மக்களின் குரலாக ஒலித்த அந்த ஏடு, புகழ் பெற்றது. உப்புக் காய்ச்சும் அறப்போரில் ஈடுபட்டு, ஓராண்டு சிறைத் தண்டனை பெற்றார். 1928-ம் ஆண்டு, சைமன் ஆணையம் சென்னைக்கு வந்தபோது, காங்கிரஸ் கட்சி அதை எதிர்த்து, அறப்போராட்டங்களை நடத்தியது. 1928 பிப்ரவரி 3-ம் நாள், சென்னை பாரிமுனையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். ஆங்கில அரசின் காவலர்கள் துப்பாக்கியால் சுட்டனர். பார்த்தசாரதி என்கிற இளைஞர், குண்டடிபட்டு இறந்துபோனார். நிலைமை கட்டுக்கு அடங்காமல் போனது.

அப்போது, பிரகாசம் முன்னே வந்து, ‘என்னைச் சுடு’ என்று சட்டையைக் கழற்றி நெஞ்சைக் காட்டினார். காவல் துறை பின்வாங்கியது. இந்த நிகழ்வுக்குப் பிறகு, ஆந்திர மக்கள் அவரை, ‘ஆந்திரச் சிங்கம்’ என்று அழைக்கத் தொடங்கினர். காங்கிரஸ் மகாசபையின் பொதுச் செயலாளர், ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் பொறுப்புகள் தேடி வந்தன. மத்திய சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு, 19,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

1937-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. முதலமைச்சராக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆகக்கூடிய வாய்ப்பு பிரகாசத்துக்கு இருந்தபோதிலும், காங்கிரஸ் தலைமை, தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருந்த ராஜாஜியை முதலமைச்சராக்கியது. பின்னர், பட்டதாரிகள் தொகுதியின் மூலமாக ராஜாஜி, மேல்சபை உறுப்பினரானார். ராஜாஜியின் அமைச்சரவையில் பிரகாசம், பொதுப்பணித் துறை அமைச்சரானார்.

இரண்டாம் உலகப்போரில், இந்திய ராணுவத்தை ஈடுபட வைத்த ஆங்கிலேய அரசைக் கண்டித்து, காங்கிரஸ் அமைச்சரவைகள் பதவி விலகின. 1942-ம் ஆண்டு, ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தில் பங்கேற்று, மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார்.

1946-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி, ராஜாஜியை மீண்டும் முதல்வராக்க எண்ணியது. ஆனால், அவர் அதை ஏற்கவில்லை. பிரகாசத்தை எதிர்த்து பக்தவத்சலத்தின் மாமாவான முத்துலிங்க முதலியாரை, காமராஜர் வேட்பாளராக நிறுத்தினார். 148 வாக்குகளைப் பெற்று, பிரகாசம் வெற்றி பெற்றார். எதிர்த்து நின்ற முத்துரங்க முதலியாருக்கு, 38 வாக்குகளே கிடைத்தன.

1946 ஏப்ரல் 29-ம் நாள், பிரகாசம் சென்னை மாகாண முதல்வரானார். இவரது அமைச்சரவையில், வி.வி.கிரி (தொழில் மற்றும் தொழிலாளர் நலம்), ருக்மணி லட்சுமிபதி (மக்கள் நல்வாழ்வு), டி.எஸ்.எஸ்.ராஜன் (உணவு) அமைச்சர்களாகப் பொறுப்பு வகித்தனர்.

தாலுக்கா வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தினார். கூட்டுறவு சங்கங்களைத் தொடங்கினார். நேர்மையாகவும் கண்டிப்பாகவும் செயல்பட்ட பிரகாசம், பரிந்துரைகளுக்குச் செவிசாய்க்க மாட்டார். அதனால், காங்கிரஸ் பேரவை உறுப்பினர்களிடையே அவருக்கு எதிர்ப்பு எழுந்தது. காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளைகளை ஏற்காமல், தாமே முடிவுகளை மேற்கொண்டு செயல் படுத்தினார். எனவே, கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்தது.

தமது அமைச்சரவையின் இரண்டு அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தினார். ஆனால், உயர் நீதிமன்ற விசாரணையில், குற்றம் உறுதி செய்யப்படவில்லை. ‘பிரகாசம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமது சொந்த நலனுக்காக அன்பளிப்புகளைப் பெற்றார்' என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன. காங்கிரஸ் மேலிடம் அதை ஏற்றுக்கொண்டது. காமராஜர் கையெழுத்து வேட்டையாடி, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து, பிரகாசத்தைப் பதவியிலிருந்து இறக்கினார். 1947-ம் ஆண்டு மார்ச் 23-ம் நாள் பதவியிலிருந்து விலகினார். அப்போதெல்லாம், ஒவ்வோர் ஆண்டிலும் தேர்தல் நடைபெற்று வந்தது. அடுத்த ஆண்டு, காமராஜரின் எதிர்ப்பால் மீண்டும் தேர்வுபெற முடியவில்லை. 1947-ல், இந்தியா விடுதலை பெற்றது. காங்கிரஸ் கட்சிக்குள் எழுந்த எதிர்ப்பால், அந்தக் கட்சியைவிட்டு விலகி, 'பிரஜா சோஷலிஸ்ட் கட்சி'யில் சேர்ந்தார்.

1952-ம் ஆண்டுத் தேர்தலில், ஆந்திர மாநிலத்தில் இவரது கட்சியும், கம்யூனிஸ்டுகளும் கூடுதல் இடங்களைப் பெற்றனர். காங்கிரஸ் தோல்வியடைந்தது. இரண்டு அணிகளுக்கும் சமமாக 152 இடங்கள் கிடைத்தன. 'ஐக்கிய முன்னணி' என்ற பெயரில் ஆட்சியமைக்க பிரகாசம் முயன்றார். ஆளுநரின் உதவியோடு காங்கிரஸ் ஆட்சியில் அமர்ந்தது.

அப்போது, சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திர மாநிலத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது. பிரகாசம் அதை ஆதரித்தார். ஆந்திர மாநிலம் உருவானது. 1953 அக்டோபர் 1 முதல், 1954 நவம்பர் 15 வரையிலும், ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தார். இவரது பதவிக்காலத்தில், வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், ஆந்திர உயர் நீதிமன்றம், நாகார்ஜுன சாகர் மற்றும் கிருஷ்ணா நதி அணைக்கட்டுகள் என இவரது பணிகள் புகழ் பெற்றன. இரண்டாயிரம் கைதிகளின் ஆயுள் தண்டனையைக் குறைத்து, அவர்களை நல்வழிப்படுத்த உதவினார்.

பெரும் செல்வத்தைக் குவித்த பிரகாசம், இறுதி நாட்களில் வறுமையில் வாடினார். மத்திய அரசு, மாதம் 750 ரூபாய் உதவித் தொகை அளித்து வந்தது. இவரது நினைவாக, ஆந்திர அரசு, 'பிரகாசம் மாவட்டம்' அமைத்துள்ளது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

திண்டிவனம் அருகேயுள்ள ஓமந்தூர் கிராமத்தில், 1892-ல் பிறந்தார். மணியக்காரர் பரம்பரை என்பதால், கிராம மணியக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காரரானார். சிறந்த நிர்வாகியாகத் திகழ்ந்தார். அந்த நாட்களில், ஐ.சி.எஸ். (இன்றைய ஐ.ஏ.எஸ்.) தேர்வில் வெற்றி பெறுபவர்கள், முதலில் கிராம மணியக்காரர் களிடம் பயிற்சி பெறுவார்கள்.

சென்னையில் தமது சித்தப்பா வீட்டில் தங்கி, திருவல்லிக்கேணி ஹிந்துப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தார். பொதுநலப் பணிகளில் ஆர்வம் உண்டாயிற்று. ஊருக்குத் திரும்பி வந்து, விவசாயப் பணிகளை மேற்கொண்டார்.

திருமணமாகி ஆறு ஆண்டுகள் கழித்து ஒரு மகனும், பின்னர் ஒரு மகளும் பிறந்தனர். இவரது தாயும் மனைவியும் அடுத்தடுத்த ஆண்டுகளில் இறந்தனர். பின்னர் இரண்டு குழந்தைகளுமே இறந்து விட்டன. எனவே, வாழ்க்கையில் வெறுப்புற்ற ரெட்டியார், ஊருக்கு வெளிப்புறமாக ஆசிரமம் ஒன்றை அமைத்துக்கொண்டு அங்கேயே வாழ்ந்து வந்தார்.

காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்து பணியாற்றி வந்தார். காந்தியடிகளின் படத்தையும், பாரத மாதாவின் படத்தையும் கைகளில் வைத்துக்கொண்டு, தொண்டர்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று மதுவிலக்கு பிரசாரம் செய்தார்; கதர்த் துணிகளை விற்று வந்தார். தமது ஆசிரமத்தில் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்தார்.

தென்னாற்காடு பகுதியில், காங்கிரஸ் இயக்கப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டார். வேதாரண்யத்தில் நடைபெற்ற உப்புக் காய்ச்சும் அறப்போரில் பங்கேற்று சிறைத் தண்டனை பெற்றார். சட்ட மறுப்பு இயக்கம், அயல்நாட்டுத் துணிகளுக்கு எதிர்ப்பு, தனி நபர் அறப்போர் எனப் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு, சிறைவாசம் அனுபவித்தார்.

நிறைய புத்தகங்களைப் படித்து, சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தார். மாநில காங்கிரஸ் துணைத் தலைவரானார். ராஜபாளையம் காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

1946-ம் ஆண்டு, சட்ட மேலவை உறுப்பினரானார். 1947-ம் ஆண்டு, பிரகாசம் பதவியிலிருந்து விலகியபோது, ராஜாஜி, காமராஜரின் ஆதரவுடன் ஓமந்தூரார் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948-ம் ஆண்டுத் தேர்தலில், ராஜாஜியின் ஆதரவு பெற்ற பி.சுப்பராயன், ஓமந்தூராரை எதிர்த்துப் போட்டியிட்டபோதிலும், மீண்டும் வெற்றி பெற்ற ஓமந்தூரார்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரண்டாவது முறையாக முதல்வரானார்.

ஓமந்தூரார் ஒரு விவசாயி என்பதால், விவசாய மேம்பாட்டுத் திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தினார். கால்நடைத் துறை, விவசாயத் துறை, ஊராட்சித் துறை ஆகிய மூன்று துறைகளையும் கிராம அளவில் ஒருங்கிணைத்தது, இவரது சாதனையாகும்.

ஆடு, மாடு வளர்ப்பு, சாலை ஓரங்களில் மரம் நடுவது, ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்துதல், அரசாங்கப் பழத்தோட்டம், மரவள்ளிக்கிழங்கு பயிரிடுதல், தூர்ந்துபோன ஏரி, குளங்கள் பராமரிப்பு, நன்செய் நிலத்தில் தொழிற்சாலைகள் கட்டத் தடை விதித்தது போன்ற திட்டங்களால், 'விவசாய முதலமைச்சர்' என்று பெயர் பெற்றார். தமிழகம் முழுவதும் 11,701 நியாயவிலைக் கடைகளைத் திறந்தார்.

1949-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் நாள் பதவி விலகினார். அன்றே, முதலமைச்சரின் இல்லமான 'கூவம் மாளிகை'யைக் காலி செய்துவிட்டு சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார். இந்தக் கூவம் மாளிகை, அரசினர் தோட்டத்தின் வடபுறத்தில் இருந்தது. 2009-ம் ஆண்டு, இடித்துத் தரைமட்டம் ஆக்கப்பட்டது.

தமிழக அரசின் முத்திரையாக, ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரத்தைத் தேர்ந்தெடுத்தவர் ஓமந்தூர் ராமசாமி ஆவார்.

பி.எஸ்.குமாரசாமி ராஜா

1898-ம் ஆண்டு, ராஜபாளையத்தில் பிறந்தார். பெற்றோருக்கு ஒரே மகன். பிறந்த எட்டாம் நாளில் தாயையும், மூன்றாம் வயதில் தந்தையையும் இழந்தார். எனவே, தந்தையைப் பெற்ற பாட்டியிடமே வளர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தும், தேர்வு எழுதவில்லை. 14 வயதில் திருமணமாகி, 21 வயதில் மனைவியை இழந்தார். பின்னர், மனைவியின் சகோதரியை மறுமணம் செய்தார்.

1919-ம் ஆண்டு, சாத்தூருக்கு வந்த மகாத்மா காந்தியைப் பார்த்தபிறகு, பொதுவாழ்வில் நாட்டம் கொண்டார். நிறைய நூல்களைப் படித்ததால், நன்கு சொற்பொழிவாற்றும் திறமை பெற்றார். பள்ளி மாணவனாக இருந்தபோதே, அன்னிபெசன்ட் அம்மையார் தலைமையில் இயங்கிய 'ஹோம் ரூல்' இயக்கத்தில் இணைந்து பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டார். அம்மையாரின் படத்தைக் கையில் ஏந்திக்கொண்டு, தெருத் தெருவாகப் பிரசாரப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பணிகளில் ஈடுபட்டார். பிரம்ம ஞான சபையில் உறுப்பினரானார். முதியோர், பெண்கள் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். கல்வி நிறுவனங்களை அமைத்தார்.

ராஜபாளையத்தில், ‘காந்தி கலை மன்றம்’ என்ற அமைப்பையும் நூலகத்தையும் நிறுவினார். இவை இன்றைக்கும் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. ராஜபாளையம் பகுதியில் தொழில் வளர்ச்சிக்கு வித்து ஊன்றினார்.

அன்னிபெசன்ட் அம்மையார், கொல்கத்தா காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைமை வகித்தபோது, ராஜாவும் காங்கிரஸ் பேரியக்கத்தில் இணைந்தார். பல போராட்டங்களில் பங்கேற்று, சிறைக் கொட்டடிகளில் அடைபட்டுக் கிடந்தார்.

அப்போது, காங்கிரஸ் கட்சியில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என இரு பிரிவாக இயங்கி வந்தனர். காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொண்டதால், அதை எதிர்த்து அன்னிபெசன்ட் அம்மையார், காங்கிரஸிலிருந்து விலகினார். ஆனால், குமாரசாமி ராஜா விலகவில்லை. காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்புகளை வளர்த்துக்கொண்டார். அகில இந்திய காங்கிரஸ் மகாசபை உறுப்பினரானார்.

1934-ம் ஆண்டு, மத்திய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937-ம் ஆண்டுத் தேர்தலில், சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவு பெற்றார். 1946-ம் ஆண்டுத் தேர்தலில், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இருந்து போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டு, ஆந்திர கேசரி பிரகாசம் தலைமையிலான அமைச்சரவையில், விவசாயத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். ஓராண்டுக்குள்ளாகவே அமைச்சரவையில் இருந்து விலகினார்.

1949 ஏப்ரல் 6-ம் நாள், சென்னை மாகாண முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்றார். செயற்பணிகளில் இருந்து, நீதித் துறையைத் தனியாகப் பிரித்தார். தீண்டத் தகாதவர்களாகக் கருதப்பட்டவர்கள், ஆலயங்களுக்குள்ளே நுழையலாம் எனச் சட்டம் இயற்றினார். 1952 வரையிலும், மூன்று ஆண்டுகள் முதல்வராகப் பொறுப்பு வகித்தார்.

1952 சட்டமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்ததால், மீண்டும் முதலமைச்சராகக் கூடிய வாய்ப்பை இழந்தார். 1954-ம் ஆண்டு,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஒடிஸா மாநில ஆளுநராகப் பொறுப்பேற்று, நான்கு ஆண்டுகள் பணியாற்றினார். உடல் நலக்குறைவால், தமது பதவி விலகல் கடிதத்தை, தந்தியில் மத்திய அரசுக்கு அனுப்பிவிட்டு, ஊருக்குத் திரும்பி வந்தார். வழியில், சென்னை சேப்பாக்கம், அரசு விருந்தினர் மாளிகையில், தங்கியிருந்தபோது இயற்கை எய்தினார். அப்போது அவருக்கு வயது 59.

தமிழ்நாட்டு அரசியலில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்

தமிழ்நாட்டு அரசியலில் ஏற்பட்ட திருப்புமுனைகளை, கட்சிகளைப் பற்றிய குறிப்புகளில் கண்டோம். தவிரவும், சில நிகழ்வுகள், தமிழக அரசியலில் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

1. இந்தியாவின் முதல் கூட்டணி

1952 பொதுத் தேர்தல் முடிவுகளில், சென்னை மாகாணத்தில் எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காததால், ஆட்சியமைப்பதில் குழப்பம் ஏற்பட்டது. சட்டமன்றத்தில் காங்கிரஸ் அல்லாத 164 உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து, 'ஆந்திர கேசரி' டி.பிரகாசம் தலைமையில் 'ஐக்கிய ஜனநாயக முன்னணி (United Democratic Front) என்ற அமைப்பை உருவாக்கி, ஆட்சி அமைக்க முயற்சித்தனர்.

இந்தியாவில் முதன்முதலாக, தேர்தலுக்கு முன்பே அமைக்கப்பட்ட கூட்டணி இதுவாகும். அவர்கள் ஆட்சி அமைக்க உரிமை கோரியபோதிலும், சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ராஜாஜியை, சட்ட மேலவை உறுப்பினராக ஆளுநர் நியமனம் செய்ததுடன், அவரது தலைமையில் காங்கிரஸ் கட்சியை ஆட்சி அமைக்கவும் அழைப்பு விடுத்தார்.

10.04.1952 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ராஜாஜி, மாணிக்கவேலரின் காமன்வீல் கட்சி, ராமசாமி தலைமையிலான தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி ஆகிய கட்சிகளைக் காங்கிரஸ் கட்சியுடன் சேர்த்துக்கொண்டார். மாணிக்கவேலர், ராமசாமி ஆகிய இருவருக்கும் அமைச்சரவையில் இடமளித்தார். காமன்வீல் கட்சி வடஆற்காடு மாவட்டத்திலும், உழைப்பாளர் கட்சி தென்னாற்காடு மாவட்டத்திலும் தளம் அமைத்து இயங்கி வந்தன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இரண்டு தலைவர்களும் வன்னிய இனத்தைச் சேர்ந்தவர்கள்; வன்னிய இன மக்களின் நலன்களுக்காகக் குரல் கொடுத்து வந்தனர்.

2. ஓட்டுக்குக் காசு

இன்றைக்குத் தேர்தல் என்பது திருவிழாபோல ஆகிவிட்டது. கத்திச் சண்டைகள், வெட்டுக் குத்துகள், கலவரங்கள், கள்ள ஓட்டுகள் என ஊரே பரபரப்பாகிவிடுகின்றன.

ஆனால், 1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தல், அமைதியாக நடைபெற்றது. வாக்களிக்கும் ஆர்வம் மக்களிடம் இல்லை. அப்போது நாள் ஒன்றுக்குக் குறைந்த அளவு விவசாயக் கூலி ஆறு அணா. கூலி வேலைக்குச் சென்றால்தான் சாப்பாடு. எனவே, வேலையை விட்டுவிட்டு வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களிக்க மக்கள் ஆர்வம் காட்டவில்லை. தங்களிடம் வாக்குக் கேட்டு வந்த கட்சிக்காரர்களைப் பார்த்து, “நாங்கள் வேலைக்குப் போனால்தான் கஞ்சி; வேலைக்குப் போகாவிட்டால் கூலி ஆறு அணாவை நீ தருவாயா?” என்று கேட்டார்கள்.

எனவே, முதலாவது தேர்தலிலேயே அரசியல் கட்சியினர், வாக்களிக்க வர மறுத்தவர்களை, வாக்குச்சாவடிக்கு அழைத்து வந்து காங்கிரஸுக்கு வாக்களிப்பதற்காகக் காசு கொடுப்பதென்று தீர்மானித்தனர். நான்கு அணா கொடுத்தனர். (25 பைசா). தேர்தல் சின்னங்கள் ஒட்டப்பட்ட தனித்தனிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

நான்கைந்து வாக்காளர்களை அழைத்துச் செல்லும் அரசியல் கட்சித் தொண்டர், நான்கு பேருக்குப் பின்னாடி நின்றுகொண்டு, முன்னே சென்றவர்களிடம் வாக்குக்காகக் கொடுக்கும் அட்டைகளை, மேசையின்மேல் வைக்கச்சொல்லிவிட்டு, தமது முறை வரும்போது அந்த அட்டைகள் அனைத்தையும் எடுத்து, தமது வேட்பாளரது பெட்டியில் போட்டுவிடுவார். அதற்குப் பின்னர்தான் வாக்களித்தவர்களுக்குத் தலா நான்கு அணா கொடுத்து அனுப்புவார்.

3. ஓர் ஓட்டில் தோல்வி!

1999-ம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்குப்பதிவில், வாஜ்பாய் அரசு ஒரு வாக்கு குறைவாகப் பெற்றுத் தோல்வியடைந்தது. ஆனால், 1952-ம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆண்டிலேயே சென்னை மாகாணச் சட்டமன்றத்தின் முதலாவது கூட்டத்திலேயே, நம்பிக்கை வாக்குக் கோரும் தீர்மானம் மிகவும் விறுவிறுப்பாக அரங்கேறி இருக்கிறது.

பேரவை கூடியபோது, அரசின்மீது நம்பிக்கை வாக்குக் கோரும் தீர்மானத்தை முதலமைச்சர் ராஜாஜி முன்மொழிந்தார். அதன்மீது வாக்குப்பதிவு நடைபெற்றது. ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் சமமாக 152 வாக்குகள் கிடைத்தன. பேரவைத் தலைவராக இருந்த சிவசண்முகம் பிள்ளை, ராஜாஜி அமைச்சரவைக்கு ஆதரவாகத் தமது வாக்கை அளித்து, நம்பிக்கைத் தீர்மானத்தை வெற்றி பெறச் செய்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களுள் ஒருவரான பி.ராமமூர்த்தி, வாக்குப்பதிவில் கலந்து கொள்ளவில்லை. அவர் எதிர்த்து வாக்களித்திருந்தால், ராஜாஜி அமைச்சரவை நம்பிக்கைத் தீர்மானத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது. வாக்குப் பதிவில் கலந்துகொள்ளாததற்கு, ராமமூர்த்தி தமது சொந்த அலுவல்களைக் காரணமாகக் காட்டினாலும், தேர்தலில் அவர் வெற்றி பெறுவதற்கு உயர்சாதியினரின் வாக்குகள் உதவின என்பதால்தான் அவர் ராஜாஜிக்கு எதிராக வாக்களிக்கவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினர்.

4. மொழிவாரி மாநிலங்கள் அமைப்பு

‘சென்னையைத் தலைநகராகக் கொண்டு ஆந்திர மாநிலம் அமைக்க வேண்டும்’ என்ற கோரிக்கையை வலியுறுத்தி, 1952-ம் ஆண்டு, அக்டோபர் 14-ம் நாள், சென்னை ராயப்பேட்டை நெடுஞ்சாலையிலிருந்த ‘புலுசு சாம்பமூர்த்தி’ என்ற ஆந்திரத் தலைவரின் இல்லத்தில் தனது உண்ணாநிலை அறப்போரைத் தொடங்கினார், பொட்டி ஸ்ரீ ராமுலு. ‘மதராஸ் மனதே’ என்ற முழக்கத்தையும் முன்வைத்தார்.

அவரைக் காண ம.பொ.சி. சென்றார். ஆந்திர கேசரி பிரகாசம், ‘ஸ்ரீ ராமுலுவின் உயிரைக் காப்பாற்ற உதவி செய்ய வேண்டும்’ என்று கேட்டுக்கொண்டார். அதற்கு ம.பொ.சி., “சென்னை நகரின்மீது உரிமை கொண்டாடுவதை விட்டுவிட்டு, ஆந்திர மாநிலம் கோரினால், தமிழரசுக் கழகம் முழுமையாக ஒத்துழைக்கும்” என்றார். “தற்காலிகமாக ஆந்திர அரசு சென்னையில் அமையட்டும். தெலுங்கானா உள்ளிட்ட விசால ஆந்திரா அமைந்தால், ஹைதராபாத் நகருக்கு நாங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தலைநகரை மாற்றிக்கொள்வோம்” என்றார்கள்.

1952 டிசம்பர் 15-ம் நாள், பொட்டி ஸ்ரீ ராமுலு இறந்தார். ஆந்திரத்தில் பெரும் கலவரம் வெடித்தது. நிலைமை மேலும் மோசமாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, 02.10.1953 முதல், ‘சென்னை நகரம் அல்லாத தெலுங்கு பேசும் மாவட்டங்களைக் கொண்டு சித்தூர் மாவட்டம் முழுமையும் சேர்த்து, ஆந்திர மாநிலம் அமையும் என்றும், தலைநகர் பின்னர் அறிவிக்கப்படும்’ என்றும் பிரதமர் நேரு அறிவித்தார்.

‘கூவம் ஆற்றை எல்லையாகக் கொண்டு, வடசென்னையை ஆந்திராவுக்கும், தென்சென்னையைத் தமிழகத்துக்கும் வழங்க வேண்டும் அல்லது சென்னை நகரை, ஆந்திராவுக்கும் தமிழகத்துக்கும் பொதுவான நகரமாக அறிவிக்க வேண்டும்’ என்று பிரகாசம் அறிக்கை விடுத்தார்.

சென்னை மாநகர் மன்றத்தில் ஆல்டெர்மேனாக இருந்த ம.பொ.சி. ‘தலையைக் கொடுத்தேனும், தலைநகரைக் காப்போம்’ என்ற முழக்கத்தை முன்வைத்தார். 1956-ம் ஆண்டு, நவம்பர் முதல் தமிழகம் தனி மாநிலமானது.

‘சித்தூர் மாவட்டத்தின் தெற்குப் பகுதிகளை, தமிழகத்தில் சேர்க்க வேண்டும்’ என்று தமிழரசுக் கழகம் கோரிக்கை விடுத்தது. அதன்படி, திருத்தணி தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.

5. சென்னை யாருக்குச் சொந்தம்**?**

சென்னை நகரம் யாருக்குச் சொந்தம்? என்ற பிரச்னை தீவிரமடைந்தது. ‘மதராஸ் மனதே’ என்று ஆந்திரர்கள் முழங்கினார்கள். அந்தக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. பிரதமர் நேருவால் இந்தப் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க முடியவில்லை.

முதலில் சென்னையை ஆந்திரத்துக்கே தந்துவிடுவதென்ற யோசனை வைக்கப்பட்டது. பின்னர் அந்தக் கருத்து மாற்றப்பட்டு, ‘இரு மாநிலங்களுக்கும் பொதுவான தலைநகரமாக ஆக்கலாம் அல்லது நேரடியாக நடுவண் அரசின் ஆட்சிப் பகுதியாக, சண்டிகர், புதுச்சேரி நகரங்களைப்போல, சென்னை நகரை நடுவண் அரசின் நேரடிப் பார்வைக்கு உட்பட்ட பகுதியாக ஆக்கலாமா?’ என்ற எண்ணம் எழுந்தது.

“இந்தக் கருத்துக்கு உடன்பட முடியாது. கர்னூலைத்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தலைநகராகக் கொள்ளுங்கள்” என்றார் ராஜாஜி. மாநகராட்சி மேயர் பொறுப்பிலே இருந்த செங்கல்வராயன், கட்சி சார்பற்ற முறையில் ஒரு பொதுக் கூட்டத்தைக் கடற்கரையில் கூட்டினார். தந்தை பெரியார், ம.பொ.சி. உள்ளிட்டோர் பங்கேற்றனர். கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார்கள்.

நேருவின் கருத்து

பிரச்னையைத் தீர்க்க, பண்டித நேரு ‘தட்சிணப் பிரதேசம்’ என்ற யோசனையைத் தெரிவித்தார். ஆந்திரம் தனியாக மாநிலமானதற்குப் பிறகு, கர்நாடகத்தையும், கேரளத்தையும், தமிழகத்தையும் உள்ளடக்கிய பகுதிகளை ஒருங்கிணைத்து, ‘தட்சிணப் பிரதேசம்’ என்ற அமைப்பை உருவாக்கலாம் என்றார்.

ஆனால், இந்தக் கருத்தை காமராஜர் ஏற்கவில்லை. இந்த முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று கருதினார்கள். 1956 ஜனவரி திங்கள் 27-ம் நாள், சிலம்புச் செல்வர் அவர்களின் முயற்சியால், ஜி.உமாபதி வீட்டில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், என்.வி. நடராஜன் ஆகியோர் கலந்துக் கொண்டனர். புரட்சிக் கவிஞர் பாவேந்தர், கம்யூனிஸ்ட் கட்சியின் தீரம் மிக்க தலைவர்களான மணலி கந்தசாமி, ஜீவா, நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி.பா.ஆதித்தனார், பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

‘தட்சிணப் பிரதேசம் என்ற கருத்தை ஏற்பதற்கில்லை’ என்று தீர்மானித்தார்கள். இவ்வாறு தமிழகத் தலைவர்கள் ஒன்றாகக் குரல் கொடுத்ததால், தட்சிணப் பிரதேசம் அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டது. சென்னையும் தமிழகத்தின் தலைநகர் ஆனது.

6. குலக்கல்வித் திட்டம்

ராஜாஜி, ‘குலக்கல்வித் திட்டத்தை’ அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டத்தின்படி, ‘ஒவ்வொரு சாதியினரும், தங்கள் சாதியினர் செய்துவந்த குலத்தொழிலை மட்டுமே செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகளில் பயிலும் தச்சர் மகன், பள்ளியில் தச்சுத் தொழிலைக் கற்க வேண்டும்; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உயர்கல்வி கற்கக்கூடாது’ என்பது குலக்கல்வித் திட்டத்தின்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அடிப்படை.

இந்தத் திட்டத்தை, தந்தை பெரியார் மிகக் கடுமையாக எதிர்த்தார். நாடு முழுவதும் பிரசாரம் செய்தார். காங்கிரஸ் கட்சிக்குள்ளேயும் ராஜாஜிக்குப் பலத்த எதிர்ப்பு உருவானது.

குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து, தி.மு.க. ஆதரவுடன் வெற்றி பெற்ற திராவிட நாடாளுமன்றக் கட்சியினர், சட்டமன்றத்தில் கொண்டுவந்த தீர்மானம் வெற்றி பெற்றது. ஆனால், சட்ட மேலவையில் ராஜாஜி ஒரு தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி, தமக்கு ஆதரவு இருப்பதாகக் காட்டிக்கொண்டார். இருப்பினும், எதிர்ப்பு வலுக்கவே, 13.04.1954 அன்று, ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகினார். அதே நாளில், காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். சி.சுப்பிரமணியம், ஆர்.வெங்கட்ராமன் ஆகிய இருவரும் ராஜாஜியின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தார்கள். அவர்கள் இருவரையும், காமராஜர் தமது அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டார்.

முதல்வராகப் பொறுப்பேற்றபோது, காமராஜர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். எனவே, குடியாத்தம் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ‘பச்சைத் தமிழர் காமராஜ்’ என்று தந்தை பெரியாரும், ‘குணாளா வருக... குலக்கொழுந்தே வருக!’ என்று அண்ணாவும் கூறி, இடைத்தேர்தலில் காமராஜரை ஆதரித்தனர். காங்கிரஸ் ஆட்சி ஐந்தாண்டுகள் முழுமையாகப் பொறுப்பு வகித்தது.

7. முதலாவது ஹிந்தி எதிர்ப்புப் போர்

1937-ம் ஆண்டு, சென்னை மாகாணத்தில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அரசு அமைந்தது. பொறுப்பேற்ற ஒரே மாதத்தில் வெளியிட்ட கொள்கைக் குறிப்பில், ‘இடைநிலைப் பள்ளிகளில் ஹிந்தி மொழி கற்பிக்கப்படும்; மாணவர்கள் ஹிந்தி படிக்க வேண்டும்’ என அறிவித்தார். 1938 ஏப்ரல் 21-ம் நாள், 125 பள்ளிகளில், ஹிந்தி கட்டாயப் பாடம் என அரசு ஆணை வெளியிடப்பட்டது.

ஈழத்து சிவானந்த அடிகள், அரசின் அறிவிப்பை எதிர்த்து அறிக்கை வெளியிட்டார். திருச்சி தி.பொ.வேதாசலம், கி.ஆ.பெ.விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள் உள்ளிட்ட தமிழ் அறிஞர்கள், ஹிந்தியை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்தனர்.

தந்தை பெரியார் தலைமையில் ஹிந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. “தமிழர்களை இந்தியாவின் இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்கும் முயற்சி இது” என்றார் பெரியார். அவரது தலைமையில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டக் களம் அமைந்தது. இந்தப் போராட்டம் 20 மாதங்கள் தொடர்ந்து நடைபெற்றது.

சுயமரியாதை இயக்கமும், எதிர்க்கட்சியான நீதிக் கட்சியும், அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தின. தமிழ் அறிஞர்களான மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார், முடியரசன், இலக்குவனார் போன்றோரும் இந்தி எதிர்ப்புப் போருக்கு ஆதரவளித்தனர். கிளர்ச்சி பரவிற்று.

அறவழிப் போராட்டங்களில் மகளிரும் பெருமளவில் அணிவகுத்தனர். நாடெங்கிலும் உண்ணாநிலை அறப்போர், கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஏற்கெனவே சென்னை ராஜதானியில் நடைபெற்று வந்த, பிராமண எதிர்ப்புப் பிரசாரமும், இதற்குப் பின்புலமாயிற்று. தமிழுக்குப் பதிலாக, சம்ஸ்கிருதத்தை முன்னிறுத்த அவர்கள் முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

நாள்தோறும் இரண்டு பேர் இந்தியை எதிர்த்து முழக்கங்களை எழுப்பி, கைதாகி சிறைக்குச் சென்றனர். இவ்வாறு, 1,230 பேர் சிறை சென்றனர். அவர்களுள் 73 பேர் பெண்கள், 32 குழந்தைகள். 1,938 டிசம்பர் 6-ம் நாள், பெரியாருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

‘சோற்றுக்கு வழி இல்லாதவர்களும், படிப்பறிவு இல்லாதவர்களும்தான் ஹிந்தியை எதிர்த்துச் சிறைக்குச் செல்கின்றனர்’ என்று ராஜாஜி பேசியது, மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

உடல் நலம் குன்றிய நடராசன், தாளமுத்து ஆகிய இரண்டு தோழர்கள் சிறைக்குள்ளேயே இறந்துவிட்டனர்.

ஆறு மாத சிறைவாசத்துக்குப் பிறகு, உடல்நலக் குறைவால் சிறையிலிருந்து பெரியார் விடுவிக்கப்பட்டார். இரண்டாம் உலகப்போரில் இந்தியப் படைகளை ஈடுபடுத்துவதைக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கண்டித்து, 1939 அக்டோபர் 29-ம் நாள், காங்கிரஸ் அரசு, பதவி விலகியது. கட்டாய ஹிந்தி அறிவிப்பைத் திரும்பப் பெறுமாறு பெரியார், ஆளுநரைக் கேட்டுக் கொண்டார்.

1940 பிப்ரவரி 21-ம் நாள், ஆளுநர் எர்ஸ்கின் அந்த வேண்டுகோளை ஏற்று, அரசாணை வெளியிட்டார். இவ்வாறு, முதலாவது ஹிந்தி எதிர்ப்புப் போர் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது.

8. இரண்டாவது ஹிந்தி எதிர்ப்புப் போர்

1946-க்குப் பிறகு அமைந்த காங்கிரஸ் அரசுகளும் ஹிந்தித் திணிப்பு முயற்சிகளை மேற்கொண்டன. 1947-ம் ஆண்டிலேயே, மத்திய காங்கிரஸ் அரசு, இந்தியா முழுவதும் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குமாறு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டது. அதை ஏற்று, சென்னை மாகாணத்தில் 1948-ம் ஆண்டு முதல், பள்ளிகளில் ஹிந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என்று, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அரசு அறிவித்தது.

மீண்டும் போராட்டங்கள் வெடித்தன. கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி சென்னைக்கு வந்தபோது, திராவிடர் கழகம் அவருக்குக் கறுப்புக் கொடி காட்டியது. பெரியாரும் அண்ணாவும் கைது செய்யப்பட்டனர். 1951-ம் ஆண்டு, ‘ஹிந்தி கட்டாயப் பாடம் அல்ல’ என்று அரசு அறிவித்தது. இரண்டாவது ஹிந்தி எதிர்ப்புப் போர் நிறைவு பெற்றது.

அதே வேளையில், ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என, வட இந்தியாவின் அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வந்தன. எனவே, மத்திய அரசு பலமுனைகளிலும் ஹிந்தித் திணிப்பு முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. அரசாங்கச் செலவில், அனைத்துத் துறைகளிலும் ஹிந்தி கற்பிக்கும் முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டன.

நேரு அரசால், பி.ஜி.கேர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆட்சிமொழிகள் ஆணையம், படிப்படியாக ஹிந்தியை ஆட்சிமொழியாக்கிடும் பரிந்துரைகளை வழங்கியது. அந்தக் குழுவின் உறுப்பினர்களான, பி.சுப்பராயன் (சென்னை), சுனித்குமார் சட்டர்ஜி (மேற்கு வங்கம்) ஆகியோர், எதிர்க்கருத்துகளை வழங்கியிருந்தனர். கோவிந்த் வல்லப பந்த் தலைமையிலான நாடாளுமன்றக் குழு, ‘ஹிந்தியை முதல்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மொழியாகக் கற்பிக்க வேண்டும்’ என்ற பரிந்துரையை வழங்கியது.

ஹிந்தியை எதிர்த்த ராஜாஜி

சென்னை ராஜதானியில் ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக முன்பு அறிவித்த ராஜாஜி, அனைத்திந்திய அளவில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். ஹிந்தி பேசாத தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டி, அஸ்ஸாமி, பெங்காலி

மொழிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். ‘எப்படி ஹிந்தி பேசுபவர்களுக்கு ஆங்கிலம் அந்நிய மொழியோ, அதுபோல எங்களுக்கு ஹிந்தியும் அந்நிய மொழியே’ என்று இந்தியை எதிர்த்துப் பிரகடனத்தை வெளியிட்டார்.

ஆங்கிலோ இந்திய நாடாளுமன்ற உறுப்பினரான ஃபிராங்க் அந்தோணி, ‘ஆங்கில மொழியை, அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையில் சேர்க்க வேண்டும்’ என்று கொண்டுவந்த தீர்மானத்தின் மீது உரையாற்றிய பிரதமர் நேரு, “ஹிந்தி பேசாத மாநில மொழி மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்கிறேன்.

ஹிந்தி கட்டாயமாகத் திணிக்கப்பட மாட்டாது; அவர்கள் விரும்புகின்ற வரையில், ஆங்கிலமும் இந்தியாவின் ஆட்சிமொழியாக நீடிக்கும்” என உறுதிமொழியை அளித்தார்.

“ஹிந்தியை ஆட்சிமொழியாக்க, இரண்டு ஆண்டுகளாக நான் பட்ட பாடுகளை, இரண்டே நிமிடங்களில் நேரு கெடுத்து விட்டார்” என உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த கோவிந்த் வல்லப பந்த் கூறினார்.

1957 செப்டம்பர் 21-ம் நாள், ஹிந்தி எதிர்ப்பு மாநாட்டை, தி.மு.க. நடத்தியது. அக்டோபர் 13-ம் நாளை ஹிந்தி எதிர்ப்பு நாளாக அறிவித்தது. 1960 ஜூலை 31-ம் நாள், சென்னை கோடம்பாக்கத்தில் ஹிந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது.

1963-ம் ஆண்டு, ஆட்சிமொழிகள் சட்டத்தைத் (Official Languages Act, 1963) தாக்கல் செய்த அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, “இனி ஹிந்தி மொழிதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கும். ஆங்கிலம் அகற்றப்படும்” என்று அறிவித்தார்.

அவரது இந்த அறிவிப்பு, தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஏற்படுத்திற்று. தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த செ.மாதவன், “ஹிந்திதான் ஆட்சி மொழி என்றால், இந்தியா என்ற அமைப்பே இருக்காது” என்று நாடாளுமன்றத்தில் எச்சரித்தார். அதற்குப் பின்னர், தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. பொதுக்கூட்டங்கள் நடத்தி, மாதவனை ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

தமிழ்நாட்டில் மாணவர் போராட்டம் வெடித்தது. பள்ளி, கல்லூரிகளைப் புறக்கணித்து வீதிக்கு வந்தனர். மத்திய அரசு அலுவலகங்களைக் கைப்பற்றிக் கொண்டனர். வன்முறைகள் நிகழ்ந்தன. இதனால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்திய ராணுவம் தமிழகத்துக்குள்ளே வந்தது. பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

9. கீழ வெண்மணி படுகொலை

இன்றைய தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்கள், முன்பு ‘தஞ்சாவூர்’ என்ற ஒரே மாவட்டமாகச் சேர்ந்திருந்தன. இன்றைக்கும் இந்தப் பகுதி, தமிழகத்தின் நெற்களஞ்சியமாகத் திகழ்கின்றது. நிலப்பிரபுத்துவப் பண்ணை முதலாளிகள் ஆதிக்கத்தை எதிர்த்து, விவசாயத் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தி வந்தனர்.

1967-ம் ஆண்டு, தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற சில மாதங்களில், அன்று ‘கீழத்தஞ்சை’ என்று அழைக்கப்பட்ட, இன்றைய நாகப்பட்டினம் மாவட்டத்தில், விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடியை ஏற்றினர்.

அப்போது, 1968 டிசம்பர் 25-ம் நாள், பண்ணை முதலாளிகளின் அடியாட்கள் ‘கீழ வெண்மணி’ என்ற ஒரு கிராமத்தையே தீ வைத்துக் கொளுத்தினர். தாழ்த்தப்பட்ட, தேவேந்திர குல வேளாளர் வகுப்பைச் சேர்ந்த தொழிலாளிகள் ஒரு வீட்டுக்குள் தஞ்சம் புகுந்தனர். அந்த வீட்டையே தீ வைத்து எரித்தனர். 22 குழந்தைகள், 14 பெண்கள் உள்ளிட்ட 44 பேர் உயிரோடு எரிந்து சாம்பலாயினர். இந்தப் படுகொலைகள், தமிழகத்தை மட்டும் அல்ல, இந்தியாவையே உலுக்கியது.

10. காவிரிப் பிரச்னை

தமிழகத்தின் மிகப் பெரிய பிரச்னை, காவிரிப் பிரச்னை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மேற்குத் தொடர்ச்சி மலையில், குடகு மாவட்டத்திலிருந்து பொங்கிப் பெருகி வருகின்ற காவிரி ஆறு, சுமார் 760 கிலோ மீட்டர் தொலைவு ஓடி, பூம்புகார் அருகே கடலில் கலக்கிறது. தொடக்கத்தில், காவிரி பாயும் முழுப் பகுதியுமே தமிழ் மன்னர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. பின்னர் அந்தப் பகுதியில் உள்ள கன்னடர்கள், காவிரியில் அணைக் கட்டி நீரைத் தடுக்க முயன்றபோது, சோழ மன்னர்கள் படை எடுத்துச் சென்று, அந்த அணைகளை உடைத்தனர்.

1892, 1924 ஆகிய ஆண்டுகளில், அப்போதைய சென்னை ராஜதானி அரசுக்கும், மைசூர் சமஸ்தானத்துக்கும் இடையே காவிரி நீரைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை 50 ஆண்டுகளுக்குப் பின்னர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால், 1974-ம் ஆண்டு அந்த ஒப்பந்தத்தின் காலம் முடிவுற்றபோது, இரு மாநில அரசுகளுக்கும் இடையே, புதிய ஒப்பந்தம் ஏற்படவில்லை. கர்நாடகம், புதிய அணைகளைக் கட்டி, தமிழகத்துக்கு வந்துகொண்டிருந்த தண்ணீரைத் தடுத்தது. காவிரி நீரை, கர்நாடக மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் கொண்டு செல்லத் தொடங்கியது. ஏராளமான சிறு சிறு தடுப்பு அணைகளைக் கட்டியது. தமிழகத்துக்கு வந்துகொண்டிருந்த தண்ணீரை முழுமையாகத் தடுக்கின்ற முயற்சிகளிலும் ஈடுபட்டது.

வெள்ளம் வருகின்றபோது மட்டுமே தண்ணீரைத் திறந்துவிட்டு, தமிழகத்தைக் காவிரியின் வடிகால் மாநிலமாக்க முயன்றது. எத்தனையோ முறை இரண்டு அரசுகளுக்கு இடையிலும் பேச்சுவார்த்தை நடைபெற்ற போதிலும், கர்நாடக மாநிலம், முன்புபோலத் தமிழகத்துக்குத் தண்ணீர் வழங்க மறுத்துவிட்டது. புதிய ஒப்பந்தம் செய்துகொள்ளவும் முன்வரவில்லை.

எனவே, தமிழ்நாடு அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. இந்தியா-பாகிஸ்தான் இரு நாடுகளுக்கு இடையே சிந்து நதி நீரைப் பங்கிடுவதில் ஒப்பந்தம் ஏற்பட்டது. கங்கை நீரைப் பகிர்ந்துகொள்வதில், இந்தியாவுக்கும் வங்கதேசத்துக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால், இந்தியாவுக்குள்ளேயே இருக்கின்ற இந்த இரு மாநிலங்களுக்கும் இடையே உள்ள

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காவிரிப் பிரச்னையில் ஓர் உடன்பாட்டை எட்ட முடியவில்லை.

தமிழ்நாட்டு அரசியல் மேடைகளில், அதிகமாகப் பேசப்பட்டது காவிரிப் பிரச்னைதான். அதற்காக நடைபெற்ற போராட்டங்களும் கணக்கற்றவை. விவசாய அமைப்புகள் இன்றுவரையிலும் போராடி வருகின்றன.

தமிழகத்தில் நடைபெற்ற தொடர் போராட்டங்களின் விளைவாக, வி.பி.சிங் தலைமையிலான அரசு, 1990 'காவிரி நடுவர் மன்றம்' என்ற அமைப்பை ஏற்படுத்தியது. அந்த மன்றம், இரு மாநிலங்களிலும் காவிரி நீர் வேளாண் பரப்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு, 2007 பிப்ரவரி 5-ம் நாள், ஒரு தீர்ப்பை அளித்தது.

அந்தத் தீர்ப்பையும் கர்நாடக அரசு செயல்படுத்தவில்லை. மத்திய அரசு இதழில், மத்திய அரசு வெளியிடவில்லை. எனவே, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. உச்ச நீதிமன்ற ஆணையின்பேரில், பல ஆண்டுகளுக்குப் பிறகு, மத்திய அரசு இதழில் வெளியிட்டது.

11. சட்டப்பேரவைக்குள் குழப்பம்

1973-ம் ஆண்டு, கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியின்மீது ஊழல் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, அண்ணா தி.மு.க. மற்றும் பொது உடைமைக் கட்சிகள் சட்டப்பேரவையில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவராக இருந்த கே.ஏ.மதியழகன், அந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு அனுமதி அளித்தார்.

எனவே, அவர்மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை, கருணாநிதி தலைமையிலான சட்டப்பேரவை உறுப்பினர்கள் கொண்டு வந்தனர். அந்தத் தீர்மானம் நிறைவேறியதாக அறிவித்து, அவரைப் பதவியிலிருந்து நீக்கி, சட்டப்பேரவையின் துணைத் தலைவராக இருந்த விருதுநகர் பெ.சீனிவாசனை சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தனர். சட்டப்பேரவைத் தலைவராக, இரண்டு நாற்காலிகளில் மதியழகனும் சீனிவாசனும் அமர்ந்திருந்தனர்.

கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நிறைவேறியது என மதியழகன் அறிவித்தார். 'சபாநாயகர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிறைவேறியது' என துணை சபாநாயகர் சீனிவாசன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் குழப்பம் நிலவியது. பேரவையை ஒத்திவைப்பதாக அறிவித்துவிட்டு, பேரவைத் தலைவர் கே.ஏ.மதியழகன், சபையிலிருந்து வெளியேறினார். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளியேறிவிட்டனர்.

அதற்குப் பின்னரும் சீனிவாசன் தலைமையில், பேரவை நடவடிக்கைகள் தொடர்ந்தன. கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசுக்கு, சட்டமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை இருந்ததால், தி.மு.க. அரசு தொடர்ந்து நீடித்தது.

12. கச்சத் தீவு இலங்கைக்குத் தாரை வார்ப்பு!

ராமேஸ்வரம், மன்னார் வளைகுடாவில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நடுவில் உள்ள கச்சத் தீவு, ராமநாதபுரம் மன்னர் சேதுபதிக்குச் சொந்தமானது.

1974-ம் ஆண்டு, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, அப்போதைய இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, கச்சத் தீவை இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார். தமிழக அரசின் ஒப்புதலையோ, இந்திய நாடாளுமன்றத்தின் ஒப்புதலையோ கேட்கவும் இல்லை; பெறவும் இல்லை.

கச்சத் தீவுக்குத் தமிழக மீனவர்கள் தடையின்றி வந்து செல்லலாம்; வலைகளை உலர்த்திச் செல்லலாம்; அந்தோணியார் கோயில் திருவிழாவில் பங்கேற்கலாம் என ஒப்புக்கொள்ளப்பட்டது. படிப்படியாக இலங்கை அரசு, தமிழக மீனவர்கள் கச்சத் தீவுக்கு வருவதைத் தடை செய்தது. அதை இந்திய அரசு தட்டிக் கேட்கவில்லை.

கச்சத் தீவை இலங்கைக்குக் கொடுத்ததால், அவர்களுடைய கடல் எல்லையும் நீண்டு வந்தது. எனவே, தமிழக மீனவர்களைத் தாக்கி விரட்டியடிக்கத் தொடங்கினர். பன்னூறு ஆண்டுகளாக மேற்கொண்டு வந்த மீன்பிடித் தொழிலை, இலங்கைக் கடற்படையினர் தடுத்ததால், பிரச்னைகள் தோன்றின. கச்சத் தீவைத் திரும்பப் பெற வேண்டும் என தமிழகத்தில் கோரிக்கை ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது. கச்சத் தீவைத் திரும்பப் பெற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேண்டும் என, தமிழக அரசு சட்டமன்றத்தில் தீர்மானமும் நிறைவேற்றியுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடுத்துள்ளது.

13. தமிழகத்தில் நெருக்கடி நிலை

நெருக்கடி நிலை காலத்தின்போது, தமிழக அரசு நிர்வாகத்தை நடத்துவதற்கு, ஆளுநருக்கு ஆலோசனை கூறுவதற்காக, ஆர்.வி.சுப்பிரமணியம், பி.கே.தவே என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மத்திய அரசு நியமித்தது. அவர்கள் இருவரும், ஓர் அமைச்சரவையைப்போலவே இயங்கினார்கள். தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் சென்றார்கள். தமது துணைவியர்களோடு, அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

14. மாவட்டப் பிரிவினைகள்

இந்தியா விடுதலை பெற்றபோது தமிழகத்தில், 12 மாவட்டங்களே இருந்தன. கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஈரோடு தலைநகராகக் கொண்டு, ‘பெரியார் மாவட்டம்’ அமைக்கப்பட்டது.

பின்னர், திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்டு ‘சிதம்பரனார்’ மாவட்டம் அமைக்கப் பட்டது. ராமநாதபுரம் மாவட்டம், மூன்றாகப் பிரிக்கப்பட்டது. சிவகங்கையைத் தலைநகராகக் கொண்டு ‘பசும்பொன்’ மாவட்டம், விருதுநகரைத் தலைமை இடமாகக் கொண்டு, காமராஜர் மாவட்டம் ஆகியவை அமைக்கப்பட்டன. பின்னர், ‘பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இதற்குப் பின்னர், ஒவ்வொரு சாதியினரும், தங்களுடைய சாதித் தலைவர்களின் பெயர்களில் மாவட்டங்கள் அமைக்க வேண்டும் என்று கோரிக்கைகளை எழுப்பிப் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். தமிழகத்தில் எங்கு பார்த்தாலும், சாதிப் பெயர் மாவட்டங்கள் கோரிய சுவரொட்டிகளே கண்ணில் பட்டன. அதற்கானப் போராட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன.

இதனால், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திடீரென வெளியிட்ட அறிவிப்பில், தமிழகத்தின் பல மாவட்டங்களைப் பிரித்து, பல்வேறு பெயர்களில் புதிய மாவட்டங்களை அறிவித்தார். பழைய மாவட்டங்களுக்கும் புதியப் பெயர்களைச் சூட்டினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதன்படி, திருநெல்வேலி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் என்றும் திருச்சி, பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம் என்றும், கடலூர், வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரம், ராமசாமி படையாச்சி மாவட்டம் என்றும், திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்டம் எனவும் அழைக்கப்பட்டது.

வட ஆர்க்காடு மாவட்டம், வேலூர், திருவண்ணாமலை என இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. திண்டுக்கல், அண்ணா மாவட்டம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் வந்த தி.மு.க. ஆட்சி, திண்டுக்கல் மாவட்டத்துக்கு, காயிதேமில்லத் மாவட்டம் என்றும், செங்கல்பட்டு மாவட்டத்துக்கு அண்ணா மாவட்டம் என்றும் பெயர் சூட்டியது.

அதேபோல, தமிழகம் முழுவதும் இருந்த அரசுப் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பெயர்களைச் சூட்டினர்.

தமிழகத்தில், அவ்வப்போது சாதிக் கலவரங்கள் நிகழ்ந்துள்ளன. அதன் விளைவுகள் அரசியலிலும் எதிரொலித்தன. ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை மாவட்டங்கள் சாதிக் கலவரங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வந்தன.

சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் அமைக்கக் கோரி நடைபெற்ற வன்முறைகளில், தென்மாவட்டங்களில் சாதி மோதல்கள் ஏற்பட்டன; பலர் கொல்லப்பட்டார்கள். எனவே தி.மு.க. அரசு, அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் மாவட்டங்களிலும் இருந்த தலைவர்களின் பெயர்களை நீக்கியது.

15. சட்ட மேலவை ஒழிப்பு

சட்டமேலவை அமைப்பு குறித்து, ‘சட்டமன்றங்களின் கதை’ என்ற பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. சென்னை மாகாணத்தில், இந்த அவையில் 60 உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர். 1952-53-ம் ஆண்டில் 72 உறுப்பினர்கள் இருந்தனர். 1953-ம் ஆண்டு அக்டோபர் 1-ம் நாள், ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்ட பிறகு, இந்த அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 51-ஆகக் குறைந்தது.

1956-ம் ஆண்டு 50-ஆகவும், 1957-ம் ஆண்டில் 63-ஆகவும் உறுப்பினர்களின் எண்ணிக்கை திருத்தி அமைக்கப்பட்டது. சட்டம் இயற்றும் அதிகாரம் இந்த அவைக்குக் கிடையாது. சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள் மீது, கருத்துப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பரிமாற்றங்களை நிகழ்த்தி, திருத்தங்களுடன் நிறைவேற்றியது. ஏதேனும் ஒரு பிரச்னை குறித்து, இரண்டு அவைகளுக்கும் இடையே கருத்து மாறுபாடுகள் எழுமானால், சட்ட மன்றத்தின் முடிவே இறுதியானதாகும்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., தன்னுடன் திரைப்படங்களில் நடித்த 'வெண்ணிற ஆடை' நிர்மலா என்ற நடிகையை, சட்டமேலவை உறுப்பினராக நியமித்தார். 1986-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் நாள், அவர் பதவியேற்க இருந்த சூழலில், அவர் நீதிமன்றத்தால் திவால் ஆனவர் என்று அறிவிக்கப்பட்டவர் என்றும், எனவே, அவரை மேலவை உறுப்பினராக நியமித்தது செல்லாது என்றும் ஒரு வழக்குரைஞர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்தார்.

வெண்ணிற ஆடை நிர்மலாவின் கடன்களை அடைப்பதற்காக, அண்ணா தி.மு.க. கட்சி நிதியிலிருந்து, 4,65,000 ரூபாய் கடன் உதவி வழங்கப்பட்டது. நீதிமன்றத்துக்கு இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின் தேதியிட்டு, நிர்மலாவின் கடன்களைத் தள்ளுபடி செய்வதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆளுநர் குரானா, இதுகுறித்து அரசிடம் விளக்கம் கேட்டார். இந்தப் பின்னணியில், 'வெண்ணிற ஆடை' நிர்மலா, தமது வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். எனவே, சட்ட மேலவையைக் கலைப்பதென்று எம்.ஜி.ஆர். முடிவு செய்தார். மே 14-ம் நாள், தமிழகச் சட்டமன்றத்தில் அதற்கான தீர்மானம் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டது. பின்னர், நாடாளுமன்றத்தில் அதற்கான ஏற்பு அளிக்கப்பட்டு, ஆகஸ்ட் 30-ம் நாள், இந்தியக் குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. நவம்பர் 1-ம் நாள் முதல், சட்ட மேலவை கலைக்கப்பட்டது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி, சட்டப்பேரவை உறுப்பினர் பொறுப்பை விட்டு விலகியதற்குப் பின்னர், சட்ட மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அப்போது மேலவையில், தி.மு.க. 5 இடங்களைப் பெற்று, முதன்மை எதிர்க்கட்சி என்ற தகுதியைப் பெறக்கூடிய நிலையிலிருந்தது. கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக வந்துவிடக் கூடாது என்பதற்காகவே, எம்.ஜி.ஆர். மேலவையைக் கலைத்தார் என்று தி.மு.க-வினர் குற்றம் சாட்டினார்கள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

16. இட ஒதுக்கீடு

கல்வி, வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு 50 விழுக்காட்டுக்கும் மேல் இருக்கக்கூடாது என, 1993-ம் ஆண்டு, நவம்பர் 14-ம் நாள் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

இதையடுத்து, தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகின்ற 69 விழுக்காடு இடஒதுக்கீட்டை நிலைநாட்ட வகை செய்யும் சட்ட முன்வடிவு, அந்தத் தேதியிலிருந்து செல்லுபடியாகத்தக்க வகையில், தனிச்சட்டம் 1994-ம் ஆண்டு கொண்டு வந்தது. இந்தச் சட்ட முன்வடிவை, முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார்.

மதமாற்றம்:

2002-ம் ஆண்டு அக்டோபர் மாதம், தமிழ்நாட்டில் கட்டாய மதமாற்றத்தைத் தடுக்க, தமிழக அரசு அவசரச் சட்டம் பிறப்பித்தது. அதன்படி, மதமாற்றத்தில் ஈடுபட்டால், மூன்று ஆண்டு சிறை, ரூ. 50,000 ஆயிரம் அபராதம்.

முஸ்லிம் - கிறிஸ்தவர் இடஒதுக்கீடு:

2007 செப்டம்பர் மாதம், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாமியர் களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் தலா மூன்றரை சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கி தி.மு.க. அரசு அவசரச் சட்டம் பிறப்பித்தது.

17. தாமிரபரணி ஆற்றில் **17** பேர் சாவு

திருநெல்வேலி மாவட்டம், மாஞ்சோலை தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றிய தொழிலாளர்கள் கூலி உயர்வு, பணி நிரந்தரம், மருத்துவம், குடியிருப்பு வசதிகள் கோரிப் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தை ஆதரித்து, புதிய தமிழகம் கட்சி, திருநெல்வேலியில் பேரணி நடத்தியது. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மனு கொடுக்கச் சென்றனர். அப்போது, காவல் துறையினர் ஊர்வலத்தில் வந்தவர்கள்மீது கண்மூடித்தனமாகத் குண்டாந்தடிகளால் தாக்கினர். அதனால், தாமிரபரணி ஆற்றுப்பாலத்தில் வந்தவர்கள், ஆற்றில் குதித்தனர். 17 பேர் உயிரிழந்தனர்.

18. மதுவிலக்கு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்திய விடுதலைக்குப் பின்னர், காங்கிரஸ் ஆட்சியில் மதுவிலக்கு நடைமுறையில் இருந்தது. கள், சாராய விற்பனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், கருணாநிதி முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், அரசுக்கு வருவாய் ஈட்டுவதற்காக, மதுக்கடைகளைத் திறந்தார். இதனால், புதிய தலைமுறை இளைஞர்கள் மது அருந்தப் பழகினர். எழுபதுகளின் தொடக்கத்தில், மது எதிர்ப்புப் பிரசாரம் உச்சக்கட்டத்தில் இருந்தது.

‘காமராஜர் படிக்க வைத்தார்; கருணாநிதி குடிக்க வைத்தார்’ என்று காங்கிரஸார் பிரசாரம் செய்தனர். 1977-ம் ஆண்டு தேர்தலில் தி.மு.க. தோல்விக்கு, இத்தகைய மது விலக்குப் பிரசாரமும் ஒரு காரணமாக அமைந்தது.

19. உலகத் தமிழ் மாநாடுகள்

‘உலகத் தமிழ் ஆராய்ச்சி நிலையம்’ என்ற அமைப்பு, உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது. இந்த அமைப்பின் தலைமையகம், சென்னை, தரமணியில் அமைந்துள்ளது. இதுவரையிலும் எட்டு உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, 1968-ம் ஆண்டு, சென்னையில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது 1980-ம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மதுரையிலும், ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது 1995-ம் ஆண்டு எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரிலும் நடைபெற்றன.

2009-ம் ஆண்டு, உலகத் தமிழ் மாநாட்டை கருணாநிதி நடத்த முயற்சித்தபோது, மாநாட்டை நடத்துவதற்கு கால அவகாசம் தேவை என்றும், 2011-ம் ஆண்டில்தான் மாநாட்டை நடத்த முடியும் என்றும், அந்த அமைப்பின் தலைவரான ஜப்பானியத் தமிழ்ப் பேராசிரியர் நோபுரு கரஷிமா தெரிவித்தார். எனவே, கருணாநிதி, ‘உலகத் தமிழ் செம்மொழி மாநாடு’ என்ற புதிய பெயரில் கோவையில் மாநாட்டை நடத்தினார்.

20. ஈழத்தமிழர் பிரச்னை

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற ஈழத்தமிழர்கள், அந்த நாட்டின் பூர்வகுடிமக்கள் ஆவர். வரலாற்றுக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காலந்தொட்டே, அவர்கள் தனி அரசு அமைத்து ஆட்சி புரிந்து வந்தனர். அப்போது, தென் இலங்கையில் இரண்டு சிங்கள அரசுகள் இருந்தன.

16-ம் நூற்றாண்டுக்குப் பின்னர், போர்ச்சுக்கீசியர்கள், ஒல்லாந்தர்கள், கடைசியாக ஆங்கிலேயர்கள், அடுத்தடுத்து இலங்கையைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் வருகைக்கு முன்பு, இந்தியாவில் 565 சிற்றரசுகள் ஆட்சி நடத்தி வந்ததுபோல, இலங்கையும் ஒரே நாடாக இருந்தது இல்லை.

ஆங்கிலேயர்கள்தாம், இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தனர். தொடக்கத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சிப் பகுதியாகவே இலங்கை சில காலம் இருந்தது.

18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இலங்கையின் மலைப்பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதற்காக, ஆங்கிலேயர்களால் தமிழகத்திலிருந்து இலங்கைக்குக் கொண்டுச் செல்லப்பட்ட தொழிலாளர்கள், இலங்கையின் மத்திய மலை மாவட்டங்களில் குடி அமர்த்தப்பட்டனர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் விளைவுகள் இலங்கையிலும் எதிரொலித்தன. இலங்கையின் விடுதலைப் போராட்டக் களத்தில், ஈழத்தமிழ்த் தலைவர்களே முன்னணியில் இருந்தனர். இந்தியாவைத் தொடர்ந்து, 1948 பிப்ரவரி 4-ம் நாள் இலங்கையும் விடுதலை பெற்றது. ஆங்கிலேயர்கள், சிங்களத் தலைவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றனர். அடுத்தடுத்து ஆட்சிப் பொறுப்புக்கு வந்த சிங்கள அரசுகள், படிப்படியாகத் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கத் தொடங்கின.

1948-ம் ஆண்டிலேயே வகுக்கப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் 18-வது பிரிவின்படி, இந்தியாவிலிருந்து வந்த தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுள் பத்து இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை கிடையாது; அவர்களை இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துக்கொள்ள வேண்டும் என்று அறிவித்தனர்.

அமெரிக்காவில் பிறக்கின்ற குழந்தைகள் அமெரிக்கர்களே. ஆனால், மூன்று நான்கு தலைமுறைகளாக அங்கேயே பிறந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வளர்ந்து வாழ்ந்துவந்த தமிழர்கள் பத்து லட்சம் பேர்களது குடியுரிமையை இலங்கை அரசு, ஒரே அறிவிப்பின் மூலம் பறித்தது. இதை, இந்திய அரசு கண்டிக்கவில்லை.

மாறாக, இந்தியப் பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி, தமிழக அரசைக் கலந்து ஆலோசிக்காமல், தமிழகச் சட்டமன்றத்தின் ஒப்புதலின்றி, தேயிலைத் தோட்டங்களிலிருந்து ஆறு லட்சம் தமிழர்களை, இந்தியாவுக்குத் திருப்பி அழைத்துக்கொள்வதாக இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகவோடு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் பத்து லட்சம் பேரது குடியுரிமைப் பறிக்கப்பட்டது இல்லை. ஆறு லட்சம் பேரைத் திருப்பி அழைத்துக்கொள்வதாக இரு நாடுகளுக்கு இடையே இத்தகைய உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதும் இல்லை.

அடுத்து, இலங்கையில் இனி சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்றனர். உயர்கல்வி வாய்ப்புகளில், தமிழ் மாணவர்களுக்குக் குறைந்த இடங்களே ஒதுக்கப்படும் என்று அறிவித்தனர். அதன் விளைவாக, மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்ற தமிழ் மாணவர்களுக்கு, பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி வாய்ப்புகள் அறவே மறுக்கப்பட்டன. தேர்வு பெற்று இருந்தாலும், குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் மாணவர்கள் மட்டுமே உயர்கல்வி கற்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது.

சிங்கள ராணுவத்தில் தமிழர்களுக்கு இடம் அளிக்கவில்லை. காவல் துறையிலும் தமிழர்களின் எண்ணிக்கையைக் குறைத்தனர். படிப்படியாக ஈழத்தமிழர்களது உரிமைகளைப் பறித்தனர். சிங்களக் கலை, கலாசார வளர்ச்சிக்கு மட்டுமே, அரசின் உதவிகள் கிடைத்தன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில், சிங்களர்களைக் கொண்டு வந்து குடி அமர்த்தி, படிப்படியாகத் தமிழர்களது நிலங்களையும் பறிக்கத் தொடங்கினர். இலங்கையில், தமிழர்களின் வரலாற்று ஆவணங்களை, அடையாளங்களை அழிக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

தொடக்கத்தில், உரிமைகளைக் கேட்டு அறவழியில் தமிழர்கள் போராடி வந்தனர். அப்போது, ‘தமிழர் தந்தை’ செல்வநாயகம் அவர்களோடு, இரண்டு ஒப்பந்தங்களை சிங்கள அரசு செய்துகொண்டது. முதலாவது ஒப்பந்தத்தை, புத்த பிக்குகளின் வற்புறுத்தலால், அவர்களது முன்னிலையிலே பிரதமர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பண்டாரநாயகா கிழித்தெறிந்தார். இரண்டாவது ஒப்பந்தத்தையும் இலங்கை அரசு நிறைவேற்றவில்லை.

1972-ம் ஆண்டில்தான் இலங்கை, குடியரசானது. அப்போது வகுக்கப்பட்ட புதிய அரசியல் சட்டத்தின்படி, நாடாளுமன்றத்தில் தமிழர்களது பிரதிநிதித்துவத்தை வெகுவாகக் குறைத்தனர்.

அறவழியில் தமிழர்கள் போராடியபோது, சிங்கள ராணுவமும் காவல் துறையும் அடக்குமுறையைக் கையாண்டன. தமிழர் தலைவர்கள் தாக்கப்பட்டனர். 1976-ம் ஆண்டு, வட்டுக்கோட்டையில் தமிழர் அமைப்புகள் ஒன்றுகூடி, 'தனித் தமிழ் ஈழமே தீர்வு' என வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். 'இனி இந்தக் கோரிக்கையை, இளைய தலைமுறையினர் முன்னெடுத்துச் செல்வர்' என்று தந்தை செல்வா அறிவித்தார்.

வெலிக்கடைச் சிறையில் அடைக்கப் பட்டிருந்த குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உள்ளிட்ட 58 தமிழ்க் கைதிகள், சிங்களக் கைதிகளால் சிறைக்குள்ளேயே பயங்கர ஆயுதங்களால் தாக்கிக் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள், பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர்; பச்சிளம் குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டனர். கொதித்தெழுந்த தமிழ் இளைஞர்கள், ஆயுதவழிப் போராட்டத்தை மேற்கொண்டனர். தொடக்கத்தில் அவர்கள் பல குழுக்களாக இயங்கி வந்தனர்.

1983-ம் ஆண்டு ஜூலை மாதம், வடகிழக்கு மாகாணங்களில் தமிழர்களுக்கு எதிராக, திட்டமிட்ட இனப்படுகொலைத் தாக்குதல்கள் அரங்கேறின. ஒரே மாதத்தில் 3000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்கள், படகுகள் மூலமாகத் தப்பி, தமிழகக் கரைக்கு வந்து சேர்ந்தனர்.

ஈழத்தமிழர்கள் படுகொலையைக் கண்டித்து, தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் போராட்டக் களத்தில் குதித்தன. தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும், ஈழத்தமிழர்களுக்கும் விடுதலைப் போராட்டக் குழுக்களுக்கும் மக்கள் ஆதரவளித்தனர்; அடைக்கலம் வழங்கினர்.

தமிழக அரசு சிறப்பு முகாம்களை அமைத்தது. இவ்வாறு, தமிழகத்தில் தற்போது 1½ லட்சம் ஈழத்தமிழர்கள் அகதிகளாக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு அரசு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தின் வழியாக, லட்சக்கணக்கான ஈழத்தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அடைக்கலம் பெற்றனர்.

ஈழத்தமிழ் இளைஞர்கள், ‘தமிழ் ஈழம்’ என்ற தனி நாடு அமைப்பதற்கான ஆயுதப் போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்., அவர்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்து வந்தார். பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தது. பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் இயக்கம் வலுப்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, 13 முறை கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானங்களின்போது ஒருமுறை உரையாற்றிய பிரதமர் இந்திரா காந்தி, “ஈழத் தமிழர்கள், இலங்கையின் பூர்வீகக் குடிமக்கள்; தற்போது அங்கே நடப்பது இனப்படுகொலை” என்று அறிவித்தார்.

அவரது மறைவுக்குப் பின்னர் பிரதமரான ராஜீவ் காந்தி, 1987-ம் ஆண்டு, இலங்கைக் குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனேவோடு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். ‘அமைதிப்படை’ என்ற பெயரில் இந்திய ராணுவத்தை அனுப்பினார். பின்னர், விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைப் பறிக்க முயன்றார். இந்திய ராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சுட்டுக் கொல்லுமாறு, இந்திய ராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தமிழகத்தின் நான்கு, ஐந்து மாவட்டங்கள் அளவிலான நிலப்பரப்புக்குள், விடுதலைப்புலிகளை வேட்டையாட ஒரு லட்சம் இந்தியத் துருப்புகள் குவிக்கப்பட்டன. ‘தேடுதல் வேட்டை’ என்ற பெயரில், ஈழத்தமிழர்கள் அடக்குமுறைக்கு உள்ளாயினர். பின்னர் இலங்கை அரசு வலியுறுத்தலால், 1989-ம் ஆண்டு, இந்திய ராணுவம் இலங்கையை விட்டு வெளியேறியது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட கடல் பரப்பில், தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்கிக் கொன்று வந்தது. 500-க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்திய அரசு ஒருமுறையேனும், இலங்கை அரசைக்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கண்டிக்கவில்லை.

இத்தாலிய அரசிடமிருந்து கேரள மீனவர்களுக்கு இழப்பீடு பெற்றுத் தந்தது போல, இலங்கை அரசிடமிருந்து இழப்பீடு எதுவும் பெற்றுத் தரவில்லை. இன்று வரையிலும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடருகின்றன. குஜராத் மீனவர்கள் எத்தனையோ முறை எல்லை கடந்து சென்ற போதிலும், பாகிஸ்தான் அரசு அவர்களைக் கைதுசெய்து திருப்பி அனுப்புகின்றது. ஒரு மீனவரையும் சுட்டுக் கொன்றதில்லை.

இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை, இலங்கை உச்ச நீதிமன்றம் தன்னிச்சையாக ரத்து செய்தது. அதுகுறித்து, இந்திய அரசு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

1991-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்துக்காக ராஜீவ் காந்தி வந்தபோது, ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டார். அதற்கு தி.மு.க-வினரே காரணம் என்று பழி சுமத்தினர்; தமிழகம் முழுவதும் தி.மு.க-வினர் தாக்குதலுக்கு உள்ளாயினர். ஏராளமான சொத்துகள் நாசமாக்கப்பட்டன.

ஈழத்தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாகத் திகழ்ந்த விடுதலைப்புலிகள், வடகிழக்கு மாகாணங்களில் பெரும் பகுதியைக் கைப்பற்றி, தமிழ் ஈழ அரசை நிறுவினர். பின்னர், போர் நிறுத்தம் அறிவித்து, இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி வந்தனர். ஆனால், இலங்கை அரசு போர் நிறுத்தத்தை முறித்து, விடுதலைப்புலிகளை முற்றாக ஒழிக்க முயன்றது. இந்திய அரசு நிதி மற்றும் ஆயுத உதவிகளைச் செய்தது.

2009-ம் ஆண்டு, மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்பாக, விடுதலைப்புலிகளை ஒழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டு, தாக்குதலைத் தீவிரப்படுத்தினர். இலங்கை ராணுவத்தின் விமானங்கள், தமிழர் பகுதிகளில் குண்டுமழை பொழிந்து பல்லாயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்றுக் குவித்தது. ஈழத்தமிழர்களைக் காப்பாற்றக் கோரி, தமிழகத்தில் 17 இளைஞர்கள் தீக்குளித்து மடிந்தனர்.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் அமைத்த மூவர் குழு, ஈழத்தமிழர் படுகொலை குறித்த விசாரணை அறிக்கையைத்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தாக்கல் செய்தது. ஒட்டுமொத்தமாக, இலங்கையில் 1,37,000 தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் ஈழம் அமைவதற்கான பொது வாக்கெடுப்பை நடத்த வேண்டும்; உலகெங்கும் வாழுகின்ற ஈழத்தமிழர்கள் வாக்களிக்க வகை செய்யவேண்டும் என்ற கருத்தை, பெல்ஜியம் நாட்டின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றக் கட்டட அரங்கில் நடைபெற்ற மாநாட்டில் வைகோ முன்வைத்தார்.

‘இலங்கைமீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்; தமிழ் ஈழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்’ என, தமிழகச் சட்டமன்றம், தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த இலங்கை அரசை குற்றக்கூண்டில் நிறுத்தக் கோரியும், இலங்கை அதிபர் ராஜபக்ஷேவைத் தண்டிக்கக் கோரியும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் நடவடிக்கை மேற்கொள்ளவும் வலியுறுத்தி, தமிழகத்தில் மாணவர் போராட்டம் வெடித்தது. மாணவர்கள் வீதிக்கு வந்தனர்.

ஈழத்தமிழர்களுக்குத் தொடர்ந்து தமிழகம் ஆதரவளித்து வருகின்றது.

தமிழக அரசியலில் குறிப்பிடத்தக்கக நிகழ்வுகள் என்ற தலைப்பில் 21 ஆவதாக சேர்க்கவும்.

இதர நிகழ்வுகள்:

* பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தபோது (3 பிப்ரவரி 1969) அவரது இறுதி ஊர்வலத்தில் பத்து லட்சம் பேர் பங்கேற்றனர். உலக அளவில் நான்காவது பெரிய இறுதி ஊர்வலமாக இது அமைந்தது.

* சென்னை மாநகரம் ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்று அழைக்கப்பட்டு வந்ததை மாற்றி, ‘தமிழ்நாடு’ என பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து விருதுநகரில் உண்ணாவிரதம் இருந்த சங்கரலிங்கனார் இறந்ததால், அந்தக் கோரிக்கை வலுப்பெற்றது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழகத்தில் முன்பு இயங்கிய கட்சிகள்

தமிழக அரசியலில், எத்தனையோ கட்சிகள் தோன்றி மறைந்திருக்கின்றன. இப்போதும், நூற்றுக்கணக்கான கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவற்றுள் சில கட்சிகள் மட்டுமே, ஓரளவு அடித்தளத்தைக் கொண்டுள்ளன.

சிங்காரவேலர்

கடந்த காலங்களில், தமிழக அரசியலில் இயங்கிய சில கட்சிகளைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

ஹிந்துஸ்தான் லேபர் கிஸான் கட்சி

1860-ம் ஆண்டு, சென்னையில் ஒரு வணிகக் குடும்பத்தில் பிறந்த சிங்காரவேலர், 1881-ம் ஆண்டு, மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். அந்த நாட்களில் உயர்கல்வி கற்ற சில தமிழர்களுள் ஒருவரான சிங்காரவேலர், சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று, 1884-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ., பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து, தமது 47-வது வயதில், 1907-ம் ஆண்டு, பி.எல்., பட்டம் பெற்றார். சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

‘பாசிச, நாசிச அரசுகளுக்கு எதிராக உலகத் தொழிலாளர்கள் குரல் கொடுக்க வேண்டும்’ என்று, லெனின் விடுத்த அழைப்பை ஏற்று, 1917-ம் ஆண்டிலேயே சென்னைத் துறைமுகத் தொழிலாளிகளைத் திரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மகாத்மா காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டு, காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்தார். கருத்துரிமையைத் தடை செய்யவும் விசாரணையின்றி ஒருவரைச் சிறையில் அடைக்கும் வகையிலும், 1918-ம் ஆண்டு, ஆங்கில அரசால் கொண்டுவரப்பட்ட வாய்ப்பூட்டுச் சட்டமான ரௌலட் சட்டத்தை எதிர்த்து, காங்கிரஸ் இயக்கம் அறப் போராட்டங்கள் பல நடத்தியது. அத்தகையப் போராட்டக் களங்களில் சென்னையில் சிங்காரவேலர் முன்னின்றார்.

1919-ம் ஆண்டு நடைபெற்ற ஜாலியன் வாலாபாக் படுகொலையை எதிர்த்து, நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று வந்தன. 1921-ம் ஆண்டு, சென்னையில் நடைபெற்ற ஒரு போராட்டத்தில் பங்கேற்ற சிங்காரவேலர், ‘இனி ஆங்கில அரசாங்கத்தின்கீழ் வழக்கறிஞராகப் பணியாற்றப் போவதில்லை’ என்று அறிவித்து, தமது வழக்கறிஞர் உடையைத் தீ வைத்துக் கொளுத்தினார்.

1922-ம் ஆண்டு, கயாவில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். அங்கே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றத் தொடங்குகையில், இந்தியாவில் அதுவரை யாரும் பயன்படுத்தாத, ‘காம்ரேட்’ என்ற சொல்லைப் பயன்படுத்தினார். “உலக கம்யூனிஸ்டுகள் சார்பாக, இந்த மாநாட்டில் அவர்களின் வாழ்த்தைச் சொல்வதற்காக வந்துள்ளேன்” என்று கூறினார்.

‘இந்த மாநாட்டில் சிங்காரவேலர், இந்தியர்களுக்கு வேண்டியது முழு விடுதலை என்று குறிப்பிட்டது அதிசயம்’ என்று, வங்கத்தைச் சேர்ந்த எம்.என்.ராய் நடத்திவந்த ‘வேன்கார்டு’ இதழில் செய்தி பதிவாகியுள்ளது.

செங்கொடி

1923-ம் ஆண்டு, மே முதல் நாள், ‘ஹிந்துஸ்தான் லேபர் கிஸான் கட்சி’ என்ற கட்சியைத் தொடங்கினார். (லேபர்-தொழிலாளர்; கிஸான்-விவசாயி) ‘இந்திய தொழிலாளர், விவசாயிகள் கட்சி’ என்பது இதன் பொருளாகும். பொது உடைமைக் கொள்கைகளையே வலியுறுத்தினார். சென்னையில் இரண்டு இடங்களில் மே தினத்தைக் கொண்டாடி, 1923-ல் காங்கிரஸ் கொடியுடன், கம்யூனிஸ்ட் கொடியான கதிர்-அரிவாள் சின்னம் பொறித்த செங்கொடியை ஏற்றினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1925 டிசம்பர் மாதம், கான்பூரில் கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடத்தத் திட்டமிடப்பட்டது. இந்த மாநாட்டைத் தொடங்கி வைக்க வருவதாக ஒப்புக்கொண்ட, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் சக்லத்வாலா வரவில்லை. எனவே, அந்த மாநாட்டை சிங்காரவேலர்தான் தொடங்கி வைத்தார்.

ஏங்கெல்ஸ், காரல் மார்க்ஸ் ‘கம்யூனிஸ்ட் அறிக்கை’யை வெளியிட்டதைப்போலவே, சிங்காரவேலர் ‘ஹிந்துஸ்தான் லேபர் கிஸான் கெஜட்’ (Hindustan Labour Kissan Gazatte) என்ற பத்திரிகையையும், தமிழில் ‘தொழிலாளி’ என்ற பத்திரிகையும் வெளியிட்டார். அதற்கு முன்னர் ‘நான் கோவாப்பரேட்டர்’ (Non-co operator) என்ற பத்திரிகை, பிரிட்டிஷ் அரசால் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதாகத் தெரிகிறது.

சிங்காரவேலரின் அரசியல் நடவடிக்கைகளால் ஆத்திரமுற்ற பிரிட்டிஷ் அரசு, கான்பூர் சதி வழக்கில், சிங்கார வேலரையும் குற்றவாளியாகச் சேர்த்தது.

சம்ஸ்கிருதம், பாலி, ஜெர்மன், ஃபிரெஞ்சு, ஆங்கிலம் உட்பட பன்மொழிகளில் பேசவும் எழுதவும் தெரிந்த சிங்காரவேலர், 20,000-க்கும் மேற்பட்ட நூல்களைச் சேகரித்து வைத்திருந்தார். அந்த நாட்களில், தென்னாட்டில் தனிப்பட்டவர்களின் நூலகங்களில் மிகப் பெரிய நூலகம் அதுதான். ப.ஜீவானந்தம், குத்தூசி குருசாமி, அண்ணா, திரு.வி.க., ஏ.எஸ்.கே. எனப் பலர், அந்த நூலகத்துக்கு வந்து சென்றனர்.

‘தமது புத்தகங்கள் அனைத்தையும், பொது உடைமை இயக்கத்துக்கே உரிமையாக வேண்டும்’ என்று சிங்காரவேலர் உயில் எழுதி வைத்தார். சரியான முயற்சி இன்மையால் அவ்வளவு புத்தகங்களும் பகத் ஹவுஸில் சேர்க்கப்பட்டு அழிந்துபோயின. ஆனாலும், ரஷ்ய ஆய்வாளர் மித்ரோகின் முயற்சியால், நாகை கே.முருகேசன் பேருழைப்பால், மாஸ்கோவில் உள்ள மிகப் பெரிய லெனின் நூலகத்தின் உட்பிரிவில், ‘சிங்காரவேலர் நூலகம்’ என்று அவரின் சில புத்தகங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

1925-ல் காங்கிரஸின் சுயராஜ்யக் கட்சி வேட்பாளராக, யானைக்கவுனி தொகுதியில் நின்ற மதனகோபால் நாயுடுவைத் தோற்கடித்து, வெற்றி பெற்று நகர சபை உறுப்பினராகத் தேர்வு செய்யப் பெற்றார். நகரசபையில் தன் கன்னிப் பேச்சைத் தமிழில் பேசினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1925-களில் மின்சாரம், டெலிபோன், டிராம்வே இவையெல்லாம் தனிப்பட்டவர் களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும்தான் உரிமையாக இருந்தன. இவை பொது உடைமை ஆக்கப்பட்டு, நகரசபையால் நிர்வாகம் செய்யப்பட வேண்டும் என்று முதன்முதல் தீர்மானம் தந்தார். அதன்பின்தான் அவை தனி உடைமையில் இருந்து பொது உடைமையாயின.

நீல் சிலை நீக்கத்துக்கும் நகரசபையிலுள்ள பீரங்கிகளை அப்புறப்படுத்தவும் முதல் தீர்மானம் தந்தார். 1925-ல் நகரசபையில் ஏழை-எளிய குழந்தைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தை முதன்முதலில் அறிமுகம் செய்தவர் சிங்காரவேலர்.

சுயமரியாதை இயக்கத்தோடு சுழன்று கொண்டிருந்த தந்தை பெரியாருக்கு, ‘பொது உடைமை’ என்னும் புத்தொளியைப் பாய்ச்சி, ரஷ்யாவுக்கு பரிந்துரைக் கடிதத்துடன் அனுப்பி வைத்தவர் சிங்காரவேலர். அதனால்தான் ‘ஈ.வெ.ராமசாமி கெட்டுவிட்டான்; சிங்காரவேலு அவனைக் கெடுத்துக் கம்யூனிஸ்டாக்கி விட்டான்’ என ரகசியக் காவலர்கள் குறிப்பு எழுதினர்.



எம்.ஏ.மாமணிக்கவேலு

பெரியாரின் சுயமரியாதை இயக்கமும், சிங்காரவேலரின் சமதர்ம இயக்கமும் 1932 முதல் 1934 வரை தமிழகத்தில் பேரியக்கங்களாகச் செயல்பட்டன. 400-க்கும் மேற்பட்ட சமதர்ம கிளைகள் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டன. பெரியார், சிங்காரவேலரின் செயல்பாடு கண்டு பிரிட்டிஷ் அரசு கம்யூனிஸ்ட் இயக்கத்தை 1934-ல் தடை செய்தது.

மிகச்சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் இருந்த சிங்காரவேலர், வட இந்திய ரயில்வே போராட்டத்துக்கு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முகுந்தலால் சர்க்காருடன் இணைந்து அரும்பாடுபட்டார். தென்னிந்திய சதி வழக்கில் தலைமைத் தாங்கி, பத்து ஆண்டுகள் சிறைதண்டனையும் பெற்றார்.

இவரது கட்டுரைகள் குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, புதுவை முரசு, புதுவுலகம், சுதர்மா, தொழிலாளன், ஹிந்து, சுதேசமித்திரன், நவசக்தி ஏடுகளில் வெளியாகின. இவர் பயன்படுத்திய புனைப்பெயர்கள் தோழர், சமதர்மி, அப்சர்வர், எமினென்ட் லாயர், இமாலய தவசி, பூகைவாதி, சிந்தனாவாதி, சோஷலிஸ்ட், சைன்டிஸ்ட், யுக்திவாதி, முகமூடி, சிங்கிரண்டு என்பனவாகும்.

உலகத் தொழிலாளர்களை ஒருங்கிணைக்கப் பாடுபட்ட சிங்காரவேலர், அநியாயமாகக் கொல்லப்பட்ட சாக்கோ, வான்சிட்டி என்ற அமெரிக்கத் தொழிலாளர்களுக்காகவும் சென்னையில் கண்டனக் கூட்டங்கள் நடத்தினார். மிகக் கொடுமையாகக் கொல்லப்பட்ட ஏழு பி அண்டு சி மில் தொழிலாளர்கள் சவ அடக்கத்துக்குத் தலைமை தாங்கினார். வீட்டில் அடைக்கப்பட்ட நிலையிலும், வீட்டிலிருந்தே சைமனுக்குக் கறுப்புக் கொடி காட்டிய சிங்காரவேலரின் வீரம், ஈடு இணையில்லாதது.

அயோத்திதாச பண்டிதர், லட்சுமணராசு நாயுடு ஆகியோருடன் இணைந்து புத்தகப் பணியாற்றினார். இவரிடமிருந்து மார்க்சியத்தையும் டார்வினிசத்தையும் கற்றதால் சிங்காரவேலருக்கு மாணவரானதாகத் திரு.வி.க. குறிப்பிடுகின்றார். மகாகவி பாரதியார், சிங்காரவேலர் மடியில்தான் உயிர் துறந்தார்.

இவருடைய தீவிரவாதத்தைப் பொறுக்கமுடியாத வெலிங்டன் பிரபு, சிங்காரவேலரை, அவர் வாழ்விடமான நடுக்குப்பத்திலிருந்து அப்புறப்படுத்தினார். இன்றைக்கும் வெலிங்டன் வளாகத்தில் சிங்காரவேலரின் முன்னோர்கள் கந்தப்பச் செட்டி, அருணாச்சலச் செட்டி சமாதிகளைக் காண முடியும். ‘உலகில் போர் ஒழியட்டும்; அமைதி தழைக்கட்டும்’ என்றே சிங்காரவேலரின் இறுதி மூச்சு, 1946 பிப்ரவரி 11-ல் அடங்கியது.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி

1934-ம் ஆண்டு, காங்கிரஸ் கட்சி நடத்திய போராட்டங்களில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பங்கேற்ற இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு, மராட்டிய மாநிலத்திலுள்ள நாசிக் நகர சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அந்த இளைஞர்களின் மனதில், நாடு விடுதலை பெற்றவுடன், இந்தியாவின் அரசியல் அமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. சிறைக்குள்ளேயே அவர்களது கருத்துப் பரிமாற்றங்கள் தொடர்ந்தன. முடிவில், ‘இந்தியா’ என்ற நாடு, ஒரு சமதர்ம நாடாக, சோஷலிசக் கொள்கைகளைப் பின்பற்றுகின்ற நாடாக இருக்க வேண்டும். அந்தக் கொள்கையை நிறை வேற்றுவதற்காக, காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே இருந்துகொண்டு, தனியாக மேடை அமைத்து, சோஷலிசக் கொள்கைகளைப் பேசி, மக்களைத் திரட்டுவதென்று தீர்மானித்தனர். சிறையிலேயே ‘காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி’ என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர்.

ஜெயப்பிரகாஷ் நாராயண், அசோக் மேத்தா, அச்சுத பட்வர்த்தன், ஆசார்யா நரேந்திர தேவா, மேகர் அலி, டாக்டர் ராம் மனோகர் லோகியா போன்றவர்கள், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்தனர்.

தமிழ்நாடு சமதர்மக் கட்சி

தந்தை பெரியாருடன் இணைந்து பணியாற்றி வந்த ஜீவா, திருத்துறைப்பூண்டி மாநாட்டில் பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால், சுயமரியாதை இயக்கத்திலிருந்து விலகி, ‘தமிழ்நாடு சமதர்மக் கட்சி’ என்ற அமைப்பை உருவாக்கினார். பின்னர், பொது உடைமை இயக்கத்தில் இணைந்தார்.

காமன்வீல் கட்சி

எம்.ஏ.மாணிக்க வேலு நாயக்கர், இளங்கலை பட்டம் பெற்று, வழக்கறிஞராகப் பயிற்சி பெற்று வந்தார். காங்கிரஸ் கட்சிக்கு உள்ளேயே இயங்கி வந்த, சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து பணியாற்றி வந்தார். அந்தக் கட்சியின் சார்பில், 1926-ம் ஆண்டு, சென்னை மாகாண சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937-ம் ஆண்டு வரையிலும், அந்த மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.

1951-ம் ஆண்டு, செங்கல்பட்டு மற்றும் வடஆற்காடு மாவட்டங்களில் வாழ்கின்ற, வன்னிய சமூக மக்களின் நலன்களை முன்னிறுத்தி, ‘காமன்வீல்’ (Commonwheel Party) என்ற கட்சியைத்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தொடங்கினார். உலகின் பல நாடுகளில், இதே பெயரில், கட்சிகள் இயங்கி வருகின்றன. எனவே, அந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தார். .

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில், மூன்று இடங்களில் வெற்றி பெற்றது. 1952-ல் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற முதலாவது சட்டப் பேரவைத் தேர்தலில், இந்தக் கட்சி 6 இடங்களில் வெற்றி பெற்றது. ராஜாஜி அரசு அமைப்பதற்கு ஆதரவளித்தது. நில வருவாய்த் துறை அமைச்சராக மாணிக்கவேலு நாயக்கர் பொறுப்பேற்றார்.



நேசமணி

1954-ம் ஆண்டு, ராஜாஜி முதலமைச்சர் பொறுப்பிலிருந்து விலகி, காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, மாணிக்கவேலு நாயக்கர், காமன்வீல் கட்சியைக் காங்கிரஸ் கட்சியுடன் இணைத்துக்கொண்டார். 1962-ம் ஆண்டு வரையிலும், அதே துறைக்கு அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 1962-ம் ஆண்டு, இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 64-ம் ஆண்டு வரையிலும், இரண்டு ஆண்டுகள் உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார்.

தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி

தமிழகத்தின் வட மாவட்டங்களில் இந்தக் கட்சி இயங்கி வந்தது. எஸ்.எஸ். ராமசாமி படையாச்சி, தென் ஆற்காடு மாவட்டத்தில், 1918-ம் ஆண்டு பிறந்தவர். 1951-ம் ஆண்டு, 'தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி' (Tamilnadu Toilers Party) என்ற கட்சியைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 33. அதே காலகட்டத்தில், வன்னிய மக்களின் கட்சியாகத் திகழ்ந்த,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காமன்வீல் கட்சி காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துக்கொண்டதை, ராமசாமி படையாச்சி எதிர்த்தார். ஆனால், காமராஜர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக ராமசாமி படையாச்சி பொறுப்பேற்றார்.

1962-ம் ஆண்டு, காங்கிரஸிலிருந்து விலகி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை மீண்டும் தொடங்கினார். அந்தத் தேர்தலில், ராஜாஜி தலைமையிலான சுதந்திரா கட்சியுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு, தேர்தலில் போட்டியிட்டார். ஆனால், அவர் தோல்வி அடைந்தார்.

1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்து, தேர்தலில் போட்டியிட முனைந்தார். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தில் போதிய அளவுக்கு வன்னியர்கள் தேர்தலில் போட்டியிடுவதால், அவரது ஆதரவை தி.மு.க. ஏற்கவில்லை.

அதற்குப்பிறகு, 1980-ம் ஆண்டு வரையிலும், தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்த ராமசாமி படையாச்சி, 1980-ம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், திண்டிவனம் நாடாளுமன்றத் தொகுதியில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மீண்டும் 1984-ம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்று, 1989-ம் ஆண்டு வரையிலும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பொறுப்பு வகித்தார். அதே ஆண்டில், இயற்கை எய்தினார்.

அவருக்குப் பின்னர், அவரது மகன், எஸ்.எஸ்.ஆர்.ராமதாஸ், திண்டிவனம் தொகுதியில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டு, நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி

சோஷலிஸ்ட் கட்சியின் தலைவர்களான ஜெயபிரகாஷ் நாராயண், ஆசார்ய நரேந்திர தேவா, பசவோன் சிங் (சின்ஹா) ஆகியோரின் தலைமையில் இயங்கி வந்த சோஷலிஸ்ட் கட்சியும், இந்திய தேசிய காங்கிரஸின் முன்னாள் தலைவராகப் பொறுப்பு வகித்த ஜே.பி.கிருபளானி நடத்தி வந்த விவசாயிகள் தொழிலாளர்கள் குடிமக்கள் கட்சியும் (கிஸான் மஸ்தூர் பிரஜா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பார்ட்டி) 1952-ம் ஆண்டு இணைந்து, ‘பிரஜா சோஷலிஸ்ட் கட்சி’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினர்.

சோஷலிசக் கொள்கைகளை வலியுறுத்திய இந்தக் கட்சி, தமிழகத்திலும் குறிப்பிடத்தக்க செல்வாக்குப் பெற்றிருந்தது. 1952-ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில், இந்தக் கட்சி அனைத்திந்திய அளவில் 19 தொகுதிகளில் வெற்றி பெற்றது. 10.41 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

1955-ம் ஆண்டு, ராம் மனோகர் லோகியா இந்தக் கட்சியிலிருந்து விலகி, மீண்டும் ‘சோஷலிஸ்ட் கட்சி’ என்ற பெயரிலேயே செயல்படத் தொடங்கினார். 1960-ம் ஆண்டு, கிருபளானி கட்சியிலிருந்து விலகினார். 1964-ம் ஆண்டு, அசோக் மேத்தா கட்சியிலிருந்து விலகி, மீண்டும் காங்கிரஸ் கட்சியிலேயே இணைந்தார்.

தொழிற்சங்கத் தலைவரான ஜார்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் ஒரு குழுவினர், இந்தக் கட்சியிலிருந்து விலகி, ‘சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினர்.

1962-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 12 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது. 6.81 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்றது.

1967-ம் ஆண்டுத் தேர்தலில், இது மேலும் சரிந்தது. 13 தொகுதிகளில் வெற்றி பெற்றபோதிலும், வாக்குகள் 3.06 விழுக்காடாகக் குறைந்தது. 1971-ம் ஆண்டுத் தேர்தலில், வெறும் 1.04 விழுக்காடு வாக்குகளை மட்டுமே பெற்று, இரண்டே தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றது.

1972-ம் ஆண்டு, பிரஜா சோஷலிஸ்ட் கட்சியும், சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியும் மீண்டும் இணைந்து, ‘சோஷலிஸ்ட் கட்சி’ என்ற பெயரிலேயே செயல்படத் தொடங்கினர். இந்தக் கட்சி, 1977-ம் ஆண்டு, ‘ஜனதா கட்சி’யில் இணைந்தது. மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில், ஜார்ஜ் பெர்னாண்டஸ், தொழில் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி

‘தமிழ்நாடு காங்கிரஸ்’ என்ற கட்சி, குமரி மாவட்டத்தில் இயங்கி வந்தது. மார்ஷல் நேசமணி, இந்தக் கட்சியின் தலைவராக

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இருந்தார். இந்தக் கட்சியினர், கன்னியாகுமரி மாவட்டத்தைக் கேரளத்திலிருந்து பிரித்து, தமிழ்நாட்டுடன் இணைக்க வேண்டும் என்பதற்கான போராட்டங்களை நடத்தினர். அதன் விளைவாக கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாட்டுடன் இணைந்தது.

கன்னியாகுமரி மாவட்ட மக்களின் மதிப்புக்குரிய மாபெரும் தலைவராகத் திகழ்ந்த மார்ஷல் நேசமணி, நாகர்கோவில் தொகுதியிலிருந்து, தொடர்ந்து மூன்று முறை இந்திய நாடாளு மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு, மறையும் வரையிலும் பணியாற்றினார்.

சீர்திருத்த காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்குள்ளே நிலவி வந்த குழுத் தகராறுகளால், முதலமைச்சர் பொறுப்பிலிருந்து ராஜாஜி விலக நேர்ந்தது. காமராஜர் முதலமைச்சரானார்.

ராஜாஜி ஆதரவாளர்கள், காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே கலகக்குரல் எழுப்பி வந்தனர். 1957-ம் ஆண்டு, சட்டப்பேரவைத் தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பு, ‘சீர்திருத்த காங்கிரஸ்’ (Congress Reform Committee) என்ற அமைப்பை உருவாக்கினர். ராஜாஜியின் பெயர்ச்சுருக்கத்தைக் (C.Rajagopalachari) குறிப்பதாகவும், இந்தச் சொல் அமைந்தது.

1957-ம் ஆண்டு, செப்டம்பர் 28 மற்றும் 29 ஆகிய நாட்களில் நடைபெற்ற கட்சியின் மாநாட்டில், தங்கள் அமைப்பின் பெயரை, இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் (Indian National Democratic Congress-INDC) என மாற்றிக்கொண்டனர்.

1957-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், இந்தக் குழு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில், முத்துராமலிங்கத் தேவர் தலைமையிலான அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது. 12 குறிக்கோள்கள் கொண்ட தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர். கூட்டணியின் சார்பில் 59 வேட்பாளர்கள் தேர்தலில் நிறுத்தப்பட்டனர். 54 இடங்களில் சீர்திருத்த காங்கிரஸ் கட்சியும், 5 இடங்களில் அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியும் போட்டியிட்டன.

பார்வர்டு பிளாக் கட்சியின் பி.கே. மூக்கையாத் தேவர், இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சின்னத்திலேயே போட்டியிட்டார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சீரமைப்புக் குழுவின் வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்தது.

தேர்தலில், சீர்திருத்த காங்கிரஸ் கட்சி 14 தொகுதிகளிலும் ஃபார்வர்டு பிளாக் கட்சி 3 தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. ஆனால், இந்தக் கூட்டணி வெற்றி பெற்ற தொகுதிகளுள் சரிபாதி, மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களிலேயே அமைந்திருந்தன. சட்டமன்றத்தில் இந்தக் குழு வலுவாகத் திகழ்ந்தது.

அப்போது, திராவிட முன்னேற்றக் கழகம் 15 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. சட்டமன்றத்தில் ‘எதிர்க்கட்சி’ என்ற தகுதி, அந்தக் கட்சிக்குக் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக, சீர்திருத்த காங்கிரஸ் குழுவினர், ஐந்து சுயேட்சை உறுப்பினர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டு, ‘முதன்மை எதிர்க்கட்சி’ என்ற தகுதியைப் பெற்றனர். இந்தக் குழுவின் தலைவராக, வி.கே.ராமசாமி முதலியார் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

1959-ம் ஆண்டு, மார்ச் மாதம், மதுரை மாநகராட்சித் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில், இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ், அகில இந்திய ஃபார்வர்டு பிளாக், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை உடன்பாடு செய்துகொண்டன. ஃபார்வர்டு பிளாக் கட்சியின் வேட்பாளர்கள், இந்திய தேசிய ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களாகவே போட்டியிட்டனர்.



ம.பொ.சி.

தேர்தல் முடிவுகளில், இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் 12, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 12, திராவிட முன்னேற்றக் கழகம் 2 தொகுதிகளில் வெற்றி பெற்றன. ஆளும் கட்சியான இந்திய தேசிய

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

காங்கிரஸ் கட்சிக்கு பத்து இடங்கள் மட்டுமே கிடைத்தன.

1959-ம் ஆண்டு, ஜுலை மாதம் தொடங்கப்பட்ட சுதந்திரா கட்சியில், இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் முழுமையாக இணைந்தது. சட்டமன்றத்தில், சுதந்திரா கட்சி உறுப்பினர்களும், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் உறுப்பினர்களும் சேர்ந்தே பணியாற்றினர். இந்தக் குழுவின் தலைவராக, பி.கே. மூக்கையாத் தேவர் திகழ்ந்தார்.

தமிழரசுக் கழகம்

சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில், சால்வான் குப்பத்தில் பிறந்தவர் மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம். (ம.பொ.சி.) சித்தாள், நெசவுத் தொழிலாளி, அச்சுத் தொழிலாளி என பல வேலைகள் செய்தார். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டார். சிறந்த மேடைப் பேச்சாளராகத் திகழ்ந்தார். காங்கிரஸ் கட்சிக்குள் இருந்தபடியே, 1946-ம் ஆண்டு நவம்பர் 21-ம் நாள் ‘தமிழரசுக் கழகம்’ என்ற அமைப்பை, ஒரு பண்பாட்டு இயக்கமாகத் தொடங்கினார்.

நமதே மனதே போராட்டம்

1947-ம் ஆண்டு இந்தியா, விடுதலை பெற்றது. அதற்குப் பின்னர், இந்திய அரசியலின் திசை மாறியது. விடுதலைக்காக ஒன்று சேர்ந்து போராடிய பல்வேறு தேசிய இனங்கள், தங்கள் மொழி வளர்ச்சிக்காகத் தனி மாநிலங்கள் அமைக்க வேண்டும் என்று கோரின. அந்தப் போராட்டத்தில் ஆந்திரா முன்னிலை வகித்தது. அத்தகைய கோரிக்கையை, தமிழகத்தில் ம.பொ.சி. முன்வைத்தார்.

அதற்காக, ‘உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்’ என்ற முழக்கத்தை எழுப்பினார். தேசிய உணர்ச்சி, மொழி உணர்ச்சி இரண்டையும் வலியுறுத்தினார்.

‘மதராஸ் மனதே’ என்ற முழக்கத்தை, ஆந்திர மாநிலத்தவர் முன்வைத்தபோது, ‘திருத்தணி நமதே’ என்ற முழக்கத்தை ம.பொ.சி. முன்வைத்தார். இது, ‘நமதே மனதே’ போராட்டம் என்று அழைக்கப்பட்டது. தமிழில் ‘நமது’ என்ற சொல், தெலுங்கில் ‘மனது’ எனத் திரியும்.

சிலம்புச் செல்வர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சிலப்பதிகாரத்தை விரிவாக ஆராய்ந்து மேடைதோறும் முழங்கி வந்தவர் ம.பொ.சி. தமது இரு மகள்களுக்கும் கண்ணகி, மாதவி என்றே பெயர் சூட்டினார். ‘சிலம்புச் செல்வர்’ என்றே அழைக்கப்பட்டார். அதேபோல், வீரபாண்டிய கட்டபொம்மன் சரிதத்தையும் தமிழகம் முழுவதும் பேசியவர், பேச வைத்தவர் ம.பொ.சி.

1967-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சின்னத்தில், தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1971 தேர்தலில், தி.மு.க. சின்னத்தில், மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

அதன்பிறகு, எம்.ஜி.ஆருக்கு ஆதரவாகச் செயல்பட்டார். அதனால், சட்டமேலவை உறுப்பினரானார். அந்த அவையின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1986-ம் ஆண்டு, தமிழகத்தில் சட்ட மேலவை கலைக்கப்படுகின்ற வரையிலும், அதன் தலைவராகத் திகழ்ந்தார்.

ம.பொ.சி., சென்னை மாநகர ‘ஆல்டெர்மேன்’ (Alderman) என்ற பொறுப்பை வகித்திருக்கிறார். பின்னாளில், இந்தப் பதவி, ‘ஷெரீப்’ என்று மாற்றப்பட்டது. எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில் அந்தப் பதவி நீக்கப்பட்டது.

சுதந்திரா கட்சி

1959-ம் ஆண்டு, ராஜாஜியும் ஆந்திராவின் முன்னணி காங்கிரஸ் தலைவர்களுள் ஒருவரான பேராசிரியர் என்.ஜி.ரங்காவும் சேர்ந்து, காங்கிரஸுக்கு மாற்றாக, ‘சுதந்திரா கட்சி’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினர். நீல நிறக் கொடியின் நடுவே, வெள்ளை நட்சத்திரம் இடம் பெற்றது. அனைத்திந்திய அளவில், பல மாநிலங்களில் குறிப்பிடத்தக்க செல்வாக்கை இந்தக் கட்சி பெற்றிருந்தது. நேருவின் சோஷலிசக் கொள்கைகளை எதிர்த்தது. லைசென்ஸ் ராஜ்யத்தை ஒழிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 21 கொள்கைகளை வரையறுத்தனர்.

கட்சி தொடங்கிய மூன்று ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியைப் பெற்றது. 1962-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இந்தக் கட்சி அனைத்திந்திய அளவில் 6.8 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, 18 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பீகார்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ராஜஸ்தான், குஜராத், ஒடிஸா ஆகிய மாநிலச் சட்டமன்றங்களில், இந்தக் கட்சி ‘முதன்மை எதிர்க்கட்சி’ என்ற தகுதியைப் பெற்றது.

1967-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், 8.7 விழுக்காடு வாக்குகளைப் பெற்று, 44 நாடாளுமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது. நாடாளுமன்றத்திலும், ‘முதன்மை எதிர்க்கட்சி’ என்ற தகுதியைப் பெற்றது. காங்கிரஸுக்கு மாற்றாக இந்தக் கட்சி வளர்ந்தது.

1967 தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக்கொண்டு போட்டியிட்டது. ‘பார்ப்பனர்கள், தங்கள் பூணூலைப் பிடித்துக்கொண்டு, தி.மு.க-வுக்கு வாக்களிக்க வேண்டும்’ என்று ராஜாஜி பேசினார். தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. ஆனால், 1971-ம் ஆண்டு தேர்தலில், சுதந்திரா கட்சி, காமராஜர் தலைமையிலான காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துக்கொண்டது. 19 தொகுதிகளில் போட்டியிட்டு, 6 தொகுதிகளில் வெற்றி பெற்றது. மூன்று விழுக்காடு வாக்குகளைப் பெற்றது.

1972-ம் ஆண்டு, ராஜாஜி இயற்கை எய்திய பின்பு, கட்சியின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. 1974-ம் ஆண்டு, சரண்சிங் தலைமையிலான, ‘பாரதிய கிராந்தி தளம்’ கட்சியுடன் சுதந்திரா கட்சி முழுமையாக இணைந்துவிட்டது.

நாம் தமிழர் இயக்கம்

தூத்துக்குடி மாவட்டம் காயா மொழியைச் சேர்ந்த சி.பா.ஆதித்தனார், திருச்சி புனித வளனார் கல்லூரியில், எம்.ஏ., பட்டம் பெற்றார். லண்டனுக்குச் சென்று, பாரிஸ்டர் பட்டம் பெற்றார். சிங்கப்பூருக்குச் சென்று, அங்கே வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

1942-ம் ஆண்டு, இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். லண்டனில் வெளியாகின்ற ‘டெய்லி மிர்ரர்’ ஆங்கில நாளேட்டைப்போல, தமிழிலும் ஒரு நாளேட்டைத் தொடங்கினார். ‘தினத்தந்தி’ என்று அதற்குப் பெயர் சூட்டினார்.

இந்த நாளிதழில், தமிழை மிக எளிமையாக எழுதச் செய்தார். செய்திகளில், எந்த ஒரு சொல்லும் 12 எழுத்துகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என வரையறுத்தார். இதனால், பாமர மக்களும் எளிதாகப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டினார். ‘மாலை முரசு’

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்ற மாலை நாளிதழையும், ‘ராணி’ என்ற வார இதழையும், ‘ராணிமுத்து’ என்ற மாத இதழையும் தொடங்கினார். ‘தமிழ் ராஜ்யம்’ என்ற கட்சியைத் தொடங்கினார்.



சி.பா.ஆதித்தனார்

1947-ம் ஆண்டு, சென்னை மாகாண சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1952-ம் ஆண்டு வரையிலும் உறுப்பினராக இருந்தார். 1954 முதல் 57-ம் ஆண்டு வரையிலும் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தார்.

ஆந்திர கேசரி பிரகாசம் தலைமையில் இயங்கி வந்த, ‘கிஸான் மஸ்தூர் பிரஜா கட்சி’யில் சேர்ந்து பணியாற்றினார்.

1957-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சாத்தான்குளம் தொகுதியில் கட்சி சாராத தனி வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1958-ம் ஆண்டு, ‘தனித் தமிழ்நாடு’ என்ற கோரிக்கையை முன்வைத்து, ‘நாம் தமிழர் இயக்கம்’ என்ற அமைப்பைத் தொடங்கினார். திராவிட நாடு என்ற கோரிக்கையிலிருந்து மாறுபட்டு, தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற தமிழ்நாடு, அத்துடன் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளை இணைத்து, ‘தனித் தமிழ்நாடு’ என்ற கோரிக்கையை வலியுறுத்தினார்.

கட்சியின் தலைமையகத்துக்கு ‘தமிழன் இல்லம்’ என்று பெயர் சூட்டினார். 1960-ம் ஆண்டு, தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தினார். தமிழ்நாடு நீங்கலாக, இந்திய வரைபடத்தை நாடு முழுவதும் தீயிட்டுக் கொளுத்தியதற்காக கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சென்னை மாகாணத்துக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையையும் ஆதரித்தார். 1962-ம் ஆண்டு நடைபெற்ற

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சட்டமன்றத் தேர்தலில், திருச்செந்தூர் தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். 16 தொகுதிகளில் போட்டியிட்ட இந்தக் கட்சி, 1 லட்சத்து 17 ஆயிரத்து 640 வாக்குகள் பெற்றது.

1967-ம் ஆண்டு, தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றது. நாம் தமிழர் இயக்க வேட்பாளர்கள், தி.மு.க-வின் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிட்டனர். நான்கு பேர் வெற்றி பெற்றனர். ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து, ஆதித்தனார் சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தபோது, சி.பா. ஆதித்தனார், சட்டப்பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், நாம் தமிழர் இயக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைத்துக்கொண்டு, அந்தக் கட்சியின் உறுப்பினரானார்.

அண்ணா மறைவுக்குப் பின்னர், 1969-ம் ஆண்டு, கருணாநிதி தலைமையில் அமைந்த ஆட்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1971-ம் ஆண்டு தேர்தலிலும் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; வேளாண்மைத் துறை அமைச்சர் ஆனார்.

1977-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சாத்தான்குளம் தொகுதியில் எந்தக் கட்சியையும் சாராத தனி வேட்பாளராகப் போட்டியிட்டார். ஜனதா கட்சி வேட்பாளர் நெல்லை ஜெபமணியிடம், 800 வாக்குகள் குறைவாகப் பெற்றுத் தோல்வியடைந்தார். 1982-ம் ஆண்டு இயற்கை எய்தினார்.

தமிழ் தேசியக் கட்சி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராக விளங்கிய சம்பத், தந்தை பெரியாரின் உடன்பிறந்த அண்ணன் ஈ.வெ.கிருஷ்ணசாமியின் மகனாவார். திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா வெளியேறிய போது, சம்பத்தும் அண்ணாவுடன் வெளியே வந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்.

அந்தக் கட்சி முதன்முதலில் போட்டியிட்ட 1957-ம் ஆண்டு தேர்தலில், நாமக்கல் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நாடாளுமன்றத்தில் அவருடைய வாதங்கள் சிறப்பாக அமைந்தன. திராவிட நாடு பிரிவினைக்கான காரணங்களை வலியுறுத்தி அவர் ஆற்றிய உரையைக் கேட்ட பிரதமர் நேரு, “சம்பத் இன்னும் ஒரு மணி நேரம் பேசி இருந்தால், திராவிட நாட்டைப் பிரித்துக் கொடுத்திருப்பேன்” என்று குறிப்பிட்டார்.

அந்த அளவுக்கு அவரது உரை அமைந்திருந்தது. தமிழ்நாடு முழுவதும் மேடைகளில் சம்பத்தின் சங்கநாதம் ஒலித்தது. ‘சொல்லின் செல்வர்’ என்று அழைக்கப்பட்டார். ஆனால், டெல்லி நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டதற்குப் பிறகு, அவருடைய கருத்துகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

“திராவிட நாடு கிடைக்காது; எனவே, அந்தக் கோரிக்கையைக் கைவிட வேண்டும்” என்று பேசினார். ஆனால், அண்ணா அந்தக் கருத்தை ஏற்கவில்லை. “காஞ்சிபுரம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டாவது, திராவிட நாடு கேட்பேன். அடைந்தால் திராவிட நாடு; இல்லையேல் சுடுகாடு” என்று பேசினார்.

அறுபதுகளின் தொடக்கத்தில், அவருக்கும் அண்ணாவுக்கும் கருத்து வேற்றுமைகள் வளர்ந்தன. ‘ஒரு விடுதலை இயக்கத்துக்கான எந்தவித அடையாளங்களும் தி.மு.க. தலைவர்களிடம் இல்லை’ என்ற சம்பத், தி.மு.க-வில் உட்கட்சி ஜனநாயகம் இல்லை; திரைப்பட நடிகர்களின் ஆதிக்கமே மேலோங்கி இருக்கிறது என்று கூறி, அண்ணாவை எதிர்த்து, சென்னை நுங்கம்பாக்கம் ஏரிக்கரையில் உண்ணாநிலைப் போராட்டம் நடத்தினார்.

அந்த இடத்துக்கே அண்ணா சென்று, ‘உண்ணாநிலை அறப்போரைக் கைவிடுமாறு சம்பத்திடம் கேட்டுக் கொண்டார். ஆனால், சம்பத் அதை ஏற்கவில்லை. ஆயினும், “சம்பத், என்னைவிட்டு எங்கும் செல்லமாட்டார்” என்று அண்ணா நம்பிக்கை தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குள்ளே, குழுத் தகராறுகள் வளர்ந்தன. சிலர் ஏற்படுத்திய மன இறுக்கங்களால், சம்பத் தி.மு.க.வை விட்டு வெளியேறினார். இதன் பின்னணி குறித்து கவிஞர் கண்ணதாசன் ‘வனவாசம்’ என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சம்பத் தி.மு.கழகத்தில் இருந்து விலகி, 1961 ஏப்ரல் 19-ம் நாள், 'தமிழ் தேசியக் கட்சி' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். சென்னை வால்டாக்ஸ் சாலையிலுள்ள ஒற்றைவாடைத் தியேட்டரில் இந்தக் கட்சி தொடங்கப் பட்டது.

கவிஞர் கண்ணதாசன், எம்.பி.சுப்பிரமணியம், பழ.நெடுமாறன், கோவை செழியன் உள்ளிட்ட சில தலைவர்களும் தி.மு.க-வில் இருந்து விலகி, இந்தக் கட்சியில் இணைந்தனர்.

7000 கிளைக் கழகங்கள் அமைந்ததாகவும், 1½ லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்ததாகவும் கட்சி அறிவித்தது. திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் போட்டி என்பதோடு, காங்கிரஸுக்கு ஆதரவாக, தேசியவாதக் கருத்துகளை முன்வைத்தனர்.

1962-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில், காங்கிரஸுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டனர். தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட சம்பத், தி.மு.க. வேட்பாளர் நாஞ்சில் மனோகரனிடம் தோல்வியடைந்தார்.

பண்டித நேருவின் மறைவுக்குப்பின், அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர், 'சோஷலிச சக்திகள் ஒன்றாக இணைய வேண்டும்' என்று விடுத்த வேண்டுகோளை ஏற்று, தமிழ் தேசியக் கட்சியைக் காங்கிரஸுடன் இணைப்பதென்று சம்பத் முடிவெடுத்தார். பெரியார் திடலில் இணைப்பு விழா நடைபெற்றது. அதற்குப் பிறகு, காங்கிரஸின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். 'தமிழ் செய்தி', 'அலைகள்', 'ஜெயபேரிகை' போன்ற இதழ்களை நடத்தினார்.

காங்கிரஸுக்கு ஒரு புதிய எழுச்சி கிடைத்தது. கவிஞர் கண்ணதாசன், ஜெயகாந்தன், நாத்திகம் ராமசாமி ஆகியோர் தி.மு.க.வை எதிர்த்து காங்கிரஸ் மேடைகளில் சண்டமாருதமாகச் சுழன்றார்கள். ஆயினும், 1967, 71 தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெற்றது.

1977-ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 2-ம் நாள், சம்பத் இயற்கை எய்தினார். அவரது மகன் ஈ.வெ.கி.ச.இளங்கோவன், பின்னாளில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சராகவும் பொறுப்பு வகித்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மக்கள் தி.மு.க.

1977-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகம் தோல்வியடைந்து எதிர்க்கட்சியானது. கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் கட்சியைவிட்டு விலகினார். அவருடன், க.ராசாராம், பண்ருட்டி ராமச்சந்திரன், கோவை செழியன், விருதுநகர் பெ.சீனிவாசன் உள்ளிட்ட கட்சியின் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் விலகினார்கள்.

‘மக்கள் தி.மு.க.’ என்ற கட்சியைத் தொடங்கினர். தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, பொதுக் கூட்டங்களை நடத்தி வந்தனர். ஆனால், ஓராண்டு முடிவதற்குள்ளாகவே அந்தக் கட்சியை அண்ணா தி.மு.கழகத்துடன் இணைத்து, அந்தக் கட்சியில் சேர்ந்துவிட்டனர். எம்.ஜி.ஆர். அமைச்சரவையில், நெடுஞ்செழியன் நிதி அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

ஜனதா கட்சி, ஜனதா தளம்

பா.ராமச்சந்திரன், 1957 முதல் 67 வரையிலும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். 1969-ம் ஆண்டு, காங்கிரஸ் பிளவுபட்டபோது காமராஜர் தலைமையிலான, பழைய காங்கிரஸ் கட்சியிலேயே நீடித்தார். மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1975-ம் ஆண்டு, காமராஜர் மறைந்தபோது, ‘இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியில் இணைய வேண்டும்’ என்ற கோரிக்கை எழுந்தது.

பா.ராமச்சந்திரன், தமிழ்நாடு முழுவதும் தொண்டர்களைச் சந்தித்து கருத்துகளைக் கேட்பதற்காக ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தார். ‘ஆய்வுக்குழுவே வர வேண்டும்; அழகிய பாதை தர வேண்டும்’ என்று காங்கிரஸ் கட்சியினர் சுவரொட்டிகளை ஒட்டினர். ஆனால், அந்த ஆய்வுக் குழுவை ஏற்காத மற்றொரு பிரிவினர், நேரடியாக இந்திரா காந்தி தலைமையில் இணைவதெனத் தீர்மானித்தனர். கருப்பையா மூப்பனார் தலைமையில் அவர்கள், இந்திரா காந்தி முன்னிலையில் இணைந்தனர். சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இணைப்பு விழாவுக்கு, இந்திரா காந்தி வந்திருந்தார். கருப்பையா மூப்பனாரை, தமிழ்நாடு பிரிவுக்குத் தலைவராக அறிவித்தார்.

ஆய்வுக் குழுவில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின்படி, பழைய காங்கிரஸ் தொண்டர்கள் தனி அமைப்பாகவே செயல்பட

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விழைவதாக பா.ராமச்சந்திரன் அறிவித்தார். ஆனால், நெருக்கடி நிலைக்குப் பின்னர், ஜனதா கட்சி உருவானபோது, அந்தக் கட்சியோடு பா.ராமச்சந்திரன் தலைமையிலான காங்கிரஸ் தொண்டர்கள் இணைந்தனர்.

1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜனதா கட்சி, தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் அமைத்த கூட்டணியில், மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில், ஜனதா கட்சி வேட்பாளராக பா.ராமச்சந்திரன் போட்டியிட்டார். நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமிழகத்தில் மூன்று இடங்களில் ஜனதா கட்சி வெற்றி பெற்றது. ஆனால், சட்டமன்றத் தேர்தலில் தி.மு.கழகத்துடன் கூட்டணி அமைக்காமல் ஜனதா கட்சி தனித்துப் போட்டியிட்டது. பத்து இடங்களில் வெற்றி பெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தமுள்ள ஏழு தொகுதிகளில், நான்கு தொகுதிகளில் இந்தக் கட்சி வெற்றி பெற்றது.

1980-ம் ஆண்டு, ஜனதா கட்சி கவிழ்ந்து சிதறியபோது, இந்திரா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியில் தமது ஆதரவாளர்களுடன் சேர்ந்தார். 1981-ம் ஆண்டு, கேரள மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டார். 1988-ம் ஆண்டு வரையிலும் அந்தப் பொறுப்பில் நீடித்தார்.

பா.ராமச்சந்திரன், காங்கிரஸில் சேர்ந்தபின்னர், 1981-ம் ஆண்டு, நெல்லை ஜெபமணி, தமிழக ஜனதா கட்சியின் தலைவரானார். பின்னர் அவர், ‘காமராஜ் தேசியக் கட்சி’ என்ற தனிக்கட்சியைத் தொடங்கினார்.

ஜனதா கட்சியினர், 1989-ம் ஆண்டு வி.பி.சிங், தலைமையில் ஜனதா தளம் கட்சியில் சேர்ந்தனர். நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் அந்தக் கட்சியில் இணைந்தார். மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்

1977-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், குமரி அனந்தன், நாகர்கோவில் தொகுதியில் ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அந்தக் கட்சி, ஜனதா கட்சியில் இணைந்தது. குமரி அனந்தனுக்குத் துணை அமைச்சர் பொறுப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆனால், கிடைக்கவில்லை.



குமரி அனந்தன்

1980-ம் ஆண்டு, ஜனதா கட்சி ஆட்சி கவிழ்ந்து, ஜனதா கட்சி சிதறுண்டபோது, குமரி அனந்தன் அந்தக் கட்சியிலிருந்து விலகி, ‘காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்’ என்ற கட்சியைத் தொடங்கினார். 1980-ம் ஆண்டு, தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், எம்.ஜி.ஆர். தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி அமைத்துக்கொண்டு, ரோஜாப்பூ சின்னத்தில் போட்டியிட்டனர். ஆறு தொகுதிகளில் வெற்றி பெற்றனர். குமரி அனந்தன், திருவொற்றியூர் (1980), ராதாபுரம் (1984) தொகுதிகளில் வெற்றி பெற்றார்.

பின்னர் இந்தக் கட்சி, காங்கிரஸில் இணைந்தது. சாத்தான்குளம் (1989, 91) தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகவும் குமரி அனந்தன் பொறுப்பு வகித்தார். பின்னர் காங்கிரஸிலிருந்து விலகி, ‘தொண்டர்கள் காங்கிரஸ்’ என்று ஒரு கட்சியைத் தொடங்கி, தி.மு.க. அணியில் சேர்ந்து, திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிட்டுத் தோற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary



பழ.நெடுமாறன்

குமரி அனந்தன் பல நடைப் பயணங்களை மேற் கொண்டுள்ளார். காந்தியம் பரப்ப, குமரி முதல் சென்னை வரை (1967); தீண்டாமையை ஒழிக்க, சென்னை முதல் கோவை வரை (1978); உழவர்களுக்கு இலவச மின்சாரம் கோரி களக்காடு முதல் ராதாபுரம் வரை; வன்முறையைக் கண்டித்து ஆலங்குளம் முதல் திருச்செந்தூர்; பஞ்சாயத்து ஆட்சியை வலுப்படுத்த குமரி முதல் சென்னை வரை (1992); பாரத மாதா ஆலயம் கட்டக் கோரி, சென்னை முதல் தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டி(2001); சபர்மதி தண்டி யாத்திரை நூற்றாண்டு விழா 24 நாட்கள் நடைப்பயணம்.

காமராஜ் காங்கிரஸ்

குமரி அனந்தனைப்போலவே காங்கிரஸ் கட்சியின் மற்றொரு தலைவரான பழ.நெடுமாறன், ‘காமராஜ் காங்கிரஸ்’ என்ற கட்சியைத் தொடங்கினார். அந்தக் கட்சி, 1980-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், எம்.ஜி.ஆருடன் கூட்டணி அமைத்துக் கொண்டு, மீன் சின்னத்தில் போட்டியிட்டது. நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றி பெற்றது.

மதுரை மத்தியத் தொகுதியிலிருந்து பழ.நெடுமாறன் வெற்றி பெற்றார். 1983-ம் ஆண்டு, பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோது, தமிழர் படையைத் திரட்டி, மதுரையிலிருந்து ராமேஸ்வரம் வரை நடைப்பயணம் சென்றார். தமிழ்த் தேசிய உணர்வுடன், ‘தமிழர் தேசிய இயக்கம்’, ‘உலகத் தமிழர் பேரமைப்பு’ ஆகிய அமைப்புகளையும், ‘தென்செய்தி’ என்ற வார இதழையும் நடத்தி வருகிறார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உழவர் உழைப்பாளர் கட்சி

1977-ம் ஆண்டு, அண்ணா தி.மு.க. ஆட்சி அமைந்தது. அப்போது, நாராயணசாமி நாயுடு தலைமையில், ‘தமிழக விவசாயிகள் சங்கம்’ என்ற அமைப்பு வலுவாக இயங்கியது. விவசாயிகளுக்காகத் தொடர் போராட்டங்களை நடத்தி வந்தது. நாராயணசாமி நாயுடு மற்றும் கட்சியின் பொதுச்செயலாளரான சிவசாமி, பொருளாளரான மயில்சாமி ஆகியோர் சிறந்த பேச்சாளர்களாகத் திகழ்ந்தனர். இந்த மூன்று சாமிகளும், தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு, பொதுக்கூட்டங்களில் பேசி வந்தனர். விவசாயிகளை ஓரணியில் திரட்டினர். கிடுகிடு போராட்டங்களை நடத்தி வந்தனர். 1980-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், எம்.ஜி.ஆரின் தோல்விக்கு, இது ஒரு காரணமாக அமைந்தது.

எனவே, 1980 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, எம்.ஜி.ஆர்., நாராயணசாமி நாயுடுவை அவரது இல்லத்துக்கே சென்று சந்தித்து ஆதரவு கேட்டார். அதைத் தொடர்ந்து, ‘விவசாயிகள் சங்கம், சட்டமன்றத் தேர்தலில் நடுநிலை வகிக்கும்’ என நாராயணசாமி நாயுடு அறிவித்தார். அந்தத் தேர்தலில், எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார். அதற்குப் பின்னர், நாராயணசாமி நாயுடு, விவசாயிகள் சங்கத்தை, ‘உழவர் உழைப்பாளர் கட்சி’ என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கினார். 1984-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இந்தக் கட்சி, தி.மு.க-வுடன் கூட்டணியில் சேர்ந்து போட்டியிட்டது. ஆனால்,

1 இடத்திலும் வெற்றி பெறவில்லை. நாராயணசாமி நாயுடு இயற்கை எய்தியபிறகு, இந்தக் கட்சி பல பிரிவுகளாகப் பிரிந்து வலு இழந்தது.

நமது கழகம்

அ.தி.மு.க-வில் இருந்து நீக்கப்பட்ட எஸ்.டி.சோமசுந்தரம், ‘நமது கழகம்’ என்ற கட்சியை நடத்தினார். பின்னர் மீண்டும் அ.தி.மு.க-வில் சேர்ந்து, ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராக இடம் பிடித்தார்.

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.

1977-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், அறந்தாங்கி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சு.திருநாவுக்கரசர், மிக இளம்வயதில், தமிழக சட்டப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1980 முதல் 1987 வரையிலும், எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் தொழில், உணவு, வீட்டுவசதி, கூட்டுறவு, கைத்தறி உள்ளிட்ட பல துறைகளுக்கு அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 1989-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில், ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. சார்பில், அறந்தாங்கி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1987-ம் ஆண்டு, அண்ணா தி.மு.க. பிளவின்போது, ஜெயலலிதாவைத் தீவிரமாக ஆதரித்தார். அ.தி.மு.க. பொருளாளராகவும், துணைப் பொதுச்செயலாளராகவும் இருந்தார். 1990-ம் ஆண்டு, அந்தக் கட்சியிலிருந்தே நீக்கப்பட்டார். ‘எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.’ என்ற கட்சியைத் தொடங்கினார். ஆனால், அந்தப் பெயரை தேர்தல் ஆணையம் ஏற்கவில்லை. எனவே, அண்ணா புரட்சித்தலைவர் ‘தமிழக முன்னேற்றக் கழகம்’ (அபுததமுக) என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்.

1991-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்று, 9 இடங்களில் போட்டியிட்டது. 2 இடங்களில் வெற்றி பெற்றது. தேர்தல் முடிந்தபிறகு, கட்சியின் பெயரை மீண்டும் ‘எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.’ என்று மாற்றினார். 1996-ம் ஆண்டு, கட்சியைக் கலைத்துவிட்டு, மீண்டும் அ.தி.மு.க-வில் இணைந்தார்.

ப.சிதம்பரம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வாழப்பாடி ராமமூர்த்தி

அந்தத் தேர்தலிலும் வெற்றிபெற்ற இவர், சட்டமன்றத்தில் அ.தி.மு.க. தலைவராகவும் இருந்தார். மீண்டும் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டிலேயே, 1997-ல் மீண்டும் அ.தி.மு.க-வில் இருந்து நீக்கப்பட்டார். மீண்டும் ‘எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க.’ கட்சியைத் தொடங்கினார்.

அந்தத் தேர்தலிலும் வெற்றிபெற்ற இவர், சட்டமன்றத்தில் அ.தி.மு.க. தலைவராகவும் இருந்தார். மீண்டும் துணைப் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். அடுத்த ஆண்டிலேயே, 1997-ல் மீண்டும் அ.தி.மு.க-வில் இருந்து நீக்கப்பட்டார். மீண்டும் ‘எம்.ஜி.ஆர். அண்ணா தி.மு.க.’ கட்சியைத் தொடங்கினார்.

1999-ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் இணைந்து, புதுக்கோட்டை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். வாஜ்பாய் அரசில், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில், மத்தியப் பிரதேச மாநிலத்திலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பின்னர் அந்தக் கட்சியிலிருந்து விலகி, காங்கிரஸில் இணைந்தார். 2011 சட்டமன்றத் தேர்தலில், அறந்தாங்கி தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார்.

தமிழ்நாடு ராஜீவ் காங்கிரஸ்

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்ட வாழப்பாடி ராமமூர்த்தி, ‘தமிழ்நாடு ராஜீவ் காங்கிரஸ்’ என்ற பெயரில் தனிக்கட்சி ஒன்றைத் தொடங்கினார். 1998

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நாடாளுமன்றத் தேர்தலில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்று, சேலம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். வாஜ்பாய் அமைச்சரவையில், பெட்ரோலியத் துறை அமைச்சராக 13 மாதங்கள் பொறுப்பு வகித்தார்.

கண்ணப்பன்

ஏ.சி.சண்முகம்

தமிழ் மாநில காங்கிரஸ்

1996-ம் ஆண்டு, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப் பட்டபோது, பெரும் பான்மையான காங்கிரஸ் தொண்டர்கள், ஊழல் மலிந்த ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைப்பதை விரும்பவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சியின் அனைத்திந்தியத் தலைமை, ‘அண்ணா தி.மு.க-வுடனேயே கூட்டணி’ என்று அறிவித்தது. அந்த அறிவிப்பை எதிர்த்து, கருப்பையா மூப்பனார் தலைமையில், பெரும்பான்மையான காங்கிரஸ்காரர்கள், அந்தக் கட்சியிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

விலகி, ‘தமிழ் மாநில காங்கிரஸ்’ என்ற புதிய கட்சியைத் தோற்றுவித்தனர்.

தி.மு.கழகத்துடன் கூட்டணி அமைத்தனர். 20 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 40 சட்டமன்றத் தொகுதிகளிலும் இந்தக் கட்சி, சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்டது. 20 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், 39 சட்டமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெற்றது.

தேர்தலுக்குப் பிறகு, தேவகவுடா தலைமையில் அமைந்த மத்திய அரசில், இந்தக் கட்சியைச் சேர்ந்த ப.சிதம்பரம், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், தனுஷ்கோடி ஆதித்தன், ஜெயந்தி நடராஜன் ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். 1998-ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், இந்தக் கட்சி மூன்றாவது அணி ஒன்றை அமைத்தது. வெற்றி பெற முடியவில்லை.

2001-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நிலைமை தலைகீழானது. எந்த ஜெயலலிதாவை எதிர்த்துத் தனி இயக்கம் கண்டார்களோ, அதே அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்தனர். பின்னர், காங்கிரஸ் கட்சியுடன் இணைந்தது. உடல்நலக் குறைவுற்றிருந்த மூப்பனாரின் மறைவை அடுத்து, அவரது மகன் ஜி.கே.வாசன், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மக்கள் தமிழ் தேசம்

1991-96 காலகட்டத்தில், ஜெயலலிதா அமைச்சரவையில், பொதுப்பணி, நெடுஞ்சாலை, மின்சாரம் ஆகிய துறைகளுக்கு அமைச்சராகப் பொறுப்பு வகித்த எஸ்.கண்ணப்பன், 1996-ம் ஆண்டு தேர்தலில் கட்சி படுதோல்வி அடைந்தவுடன், கட்சித் தலைமையை எதிர்க்கத் தொடங்கினார். அதனால், கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்தும், பின்னர் கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டார். 20.08.2000-ல், ‘மக்கள் தமிழ் தேசம்’ என்ற கட்சியைத் தொடங்கினார். 2001 சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இணைந்து தேர்தலைச் சந்தித்தது. ஆனால், எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. பின்னர் கட்சியைக் கலைத்த கண்ணப்பன், தி.மு.க-வில் சேர்ந்தார். அங்கிருந்து விலகி மீண்டும் அ.தி.மு.க-வில் இணைந்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ் மாநில காங்கிரஸ் (ஜனநாயகப் பேரவை)

2001-ம் ஆண்டு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, அண்ணா தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்ததை எதிர்த்து, அந்தக் கட்சியிலிருந்து வெளியேறிய ப.சிதம்பரம், ‘தமிழ் மாநில காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை’-யைத் தொடங்கினார்.

தி.மு.கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்று, மூன்று தொகுதிகளில் போட்டியிட்டது. எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை. தேர்தலுக்குப் பின்னர், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்தது.

புதிய நீதிக் கட்சி

1972 முதல், மாணவப் பருவந்தொட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் செயல்பட்டு வந்த ஏ.சி.சண்முகம், 1980-85 ஆரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார். 1985-89 அரக்கோணம் மக்களவைத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு, சிறிது காலம் அரசியலிலிருந்து ஒதுங்கி, ‘எம்.ஜி.ஆர். பாசறை’ என்ற அமைப்பை நடத்தி வந்தார். எம்.ஜி.ஆர். பெயரில், பல தொழிற்கல்வி நிறுவனங்களைத் தொடங்கினார். சாதி அமைப்புகளில் இணைந்து செயல்பட்டு வந்தார்.

15.09.2000-ல், ‘புதிய நீதிக் கட்சி’ என்ற பெயரில், அரசியல் கட்சியைத் தொடங்கி, நாடு முழுவதும் பேரணிகள் நடத்தினார். 2001 சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. தலைமையிலான கூட்டணியில், ஐந்து இடங்களில் போட்டியிட்டது. எந்த இடத்திலும் வெற்றி பெறவில்லை.

எம்.ஜி.ஆர். கழகம்

1953-ம் ஆண்டு முதல், எம்.ஜி.ஆரின் மேலாளராக இருந்த ஆர்.எம்.வீரப்பன், அவரது அமைச்சரவையிலும் இடம் பெற்றிருந்தார். சட்டமேலவை உறுப்பினராக இருந்தார். எம்.ஜி.ஆர். உடல்நலக் குறைவுற்று, அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபோது கட்சியை வழிநடத்தினார். 1984-ம் ஆண்டு, அண்ணா தி.மு.க. வேட்பாளர் பட்டியலை உறுதி செய்வதில் பெரும்பங்கு வகித்தார். 1986-ம் ஆண்டு, மேலவை கலைக்கப்பட்டபோது, திருநெல்வேலி தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஆர்.எம்.வீரப்பன்

ராம.கோபாலன்

1987-ம் ஆண்டு, எம்.ஜி.ஆர். இயற்கை எய்தியபோது, கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், இவரது அணியில்தான் இருந்தனர். எம்.ஜி.ஆரின் மனைவி, ஜானகி அம்மையாரை முதல்வராகத் தேர்ந்தெடுத்தனர். அந்த ஆட்சி நிலைக்கவில்லை.

சில ஆண்டுகள் கழித்து, கட்சிக்கும் ஆட்சிக்கும் ஜெயலலிதா தலைமையேற்ற பின்பு, அவரது தலைமையை ஏற்றார். 1991-ம் ஆண்டு தேர்தலில், ஜெயலலிதா பர்கூர், காங்கேயம் ஆகிய இரு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றபோது, காங்கேயம் சட்டப்பேரவை உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகினார். அந்தத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆர்.எம்.வீரப்பன், ஜெயலலிதாவின் அமைச்சரவையிலும் இடம் பெற்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

டி.ராஜேந்தர்

பாக்யராஜ்

1995-ம் ஆண்டு, சத்யா மூவீஸ் சார்பில் ரஜினியைக் கதாநாயகனாக வைத்து இவர் தயாரித்த 'பாட்ஷா' திரைப்படத்தின் வெள்ளிவிழாவில் பேசப்பட்ட பேச்சுகளால், அமைச்சரவையில் இருந்தும், கட்சியில் இருந்தும் நீக்கப்பட்டார். 'எம்.ஜி.ஆர். கழகம்' என்ற கட்சியைத் தொடங்கினார்.

டி.ராஜேந்தர், பாக்யராஜ்

1984-ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, நடிகர் டி.ராஜேந்தர் தி.மு.க-வுக்காகவும், கே.பாக்யராஜ், அண்ணா தி.மு.க-வுக்கும் தேர்தல் பிரசாரம் செய்தனர். 'எனது கலை உலக வாரிசு பாக்யராஜ்' என்று எம்.ஜி.ஆர்., அறிவித்ததால், பாக்யராஜ் செல்வாக்குப் பெற்றார். இவர்களது பொதுக்கூட்டங்களில் பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்.

பின்னர் தி.மு.க-வில் இருந்து விலகிய நடிகர் டி.ராஜேந்தர், 'தாயக மறுமலர்ச்சிக் கழகம்' என்ற கட்சியைத் தொடங்கினார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பழநி நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், தமது மனைவி உஷாவை வேட்பாளராக நிறுத்தி, கணிசமான வாக்குகள் பெற்றார். சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் பலமுறை போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். மீண்டும் தி.மு.க-வில் இணைந்தார். சிறுசேமிப்புக் கழகத் துணைத்தலைவர் பதவியில் நியமிக்கப்பட்டார். பின்னர், அந்தப் பொறுப்பிலிருந்தும் கட்சியிலிருந்தும் விலகினார். தற்போது, ‘இலட்சிய தி.மு.க.’ என்ற பெயரில் கட்சி நடத்தி வருகிறார்.

அ.தி.மு.க-வில் இருந்து விலகிய பாக்யராஜ் சில காலம் தனிக்கட்சி நடத்தினார். பின்னர், மீண்டும் அ.தி.மு.க-வில் சேர்ந்தார். பின்னர் அங்கிருந்து விலகி, தி.மு.க-வில் இணைந்தார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இதர இயக்கங்கள்

இந்து முன்னணி

1980-களின் தொடக்கத்தில், திருநெல்வேலி மாவட்டம் மீனாட்சிபுரம் என்ற இடத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக, இஸ்லாமியர்களாக மதம் மாறினர். இந்தப் பிரச்னை அனைத்திந்திய அளவில் அரசியல் கட்சிகளின் கவனத்தை ஈர்த்தது. பாரதிய ஜனதா கட்சியின் தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி ஆகியோர் இந்தக் கிராமத்துக்கு வந்து நிலைமையை நேரில் ஆராய்ந்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையே பெரும் மோதல்கள் நிகழ்ந்தன. மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் திருவிழாவை ஒட்டி நடைபெற்ற கலவரங்களில் பலர் கொல்லப்பட்டனர். இதனால், அந்த மாவட்டத்தில் பெரும் பதற்றம் நிலவியது.

அதைத் தொடர்ந்து, ‘இந்துக்களுக்காக வாதாட, போராட, பரிந்து பேச’ என்ற ஒற்றைவரி முழக்கத்துடன், 1980-ம் ஆண்டு இந்து முன்னணி தொடங்கப்பட்டது. நிறுவனர், ராம.கோபாலன். நாகர்கோவில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தாணுலிங்க நாடார், தொடக்கத்தில் இந்தக் கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்தார். தமிழகத்தில் நாத்திகப் பிரசாரத்தை முறியடிப்பது; மதமாற்றத்தைத் தடுப்பது; இந்து மதத்தின் பெருமையை, இந்துக்களிடம் புரியவைப்பது என்பவை, இந்து முன்னணியின் கொள்கைகள்.

தமிழகத்தில் உள்ள ஆலயங்களிலிருந்து அரசு வெளியேற வேண்டும்; அவற்றை இந்துமத அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்; இந்தியாவை, ‘இந்து நாடு’ என்று அறிவிக்க வேண்டும்; பசுவதையைத் தடை செய்ய வேண்டும்; இஸ்லாமியர்களால் இடிக்கப்பட்ட கோயில்களை மீண்டும் கட்டித்தர வேண்டும்; இந்தியாவில் உள்ள இதர மத வழிபாட்டுத் தலங்களை அகற்ற வேண்டும் என்பவை, இந்து முன்னணியின் கோரிக்கைகள்.

‘பசுத்தாய்’ என்ற பெயரில், ஆன்மிக சமுதாய மாத இதழ் ஒன்றை நடத்தி வருகின்றனர்.

தற்காலத் தமிழக அரசியலில், கி.வீரமணி தலைமையிலான

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

திராவிடர் கழகம், கோவை ராமகிருஷ்ணன் தலைமையிலான பெரியார் திராவிடர் கழகம், கொளத்தூர் மணி, விடுதலை ராசேந்திரன் ஆகியோரின் திராவிடர் விடுதலைக் கழகம் ஆகியவை சமுதாயச் சீர்திருத்தப் பணிகளையே முதன்மையாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

தமிழகத்தின் உரிமை காக்கும் அறப்போர்க்களங்களை முன்னெடுத்து வருகின்றன. தேர்தலில் போட்டியிடுவது இல்லை. அதுபோலவே, பெ.மணியரசன் தலைமையில் தமிழ்த் தேச பொது உடைமைக் கட்சி, தோழர் தியாகு தலைமையில், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆகிய கட்சிகளும் இயங்கி வருகின்றன.

இருவருமே சிறந்த பேச்சாளர்கள். தமிழ்த் தேசியக் கருத்துகளை முன்னிறுத்துகிறார்கள். இயக்குநர், நடிகர் சீமான் தலைமையில் இயங்கி வருகின்ற நாம் தமிழர் கட்சியும், தமிழ்த் தேசியக் கொள்கையை முன்வைக்கிறது.

முஸ்லிம் இயக்கங்கள்

தமிழகத்தில் முஸ்லிம் இயக்கங்கள் பல தற்போது வலுப்பெற்றுள்ளன. ஆயினும், தேர்தல் களத்தில் ஒரு சில இயக்கங்களே பங்கேற்கின்றன. 1995-ம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம், 2009-ல் மனிதநேய மக்கள் கட்சி எனப் பெயர் மாற்றம் பெற்றது. அதே ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், நான்கு தொகுதிகளில் போட்டியிட்டு, 68,346 வாக்குகளைப் பெற்றது. 2011 சட்டமன்றத் தேர்தலில், அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இடம் பெற்று, மூன்று தொகுதிகளில் போட்டியிட்டது. பேராசிரியர் ஜவாஹிருல்லா (ராமநாதபுரம்), அஸ்லம் பாஷா (ஆம்பூர்) ஆகியோர் வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினர்களாகப் பொறுப்பு வகித்து வருகின்றனர்.

கொங்குநாடு முன்னேற்றக் கழகம்

தமிழகத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள கொங்கு நாடு, தமிழக அரசின் வருவாயில் 40 விழுக்காடு பங்களித்தபோதும், இந்தப் பகுதியில் வளர்ச்சித் திட்டப் பணிகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன. இந்தப் பகுதி பின்தங்கி இருக்கிறது. எனவே, கொங்கு நாடு பகுதியின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ‘கொங்கு நாடு முன்னேற்றக் கழகம்’ தொடங்கப்பட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தலைவர் பெஸ்ட் ராமசாமி; செயலாளர் ஈஸ்வரன்.

2009 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தக் கட்சி 12 தொகுதிகளில் தனித்துப் போட்டியிட்டு, சுமார் 5,79,704 வாக்குகளைப் பெற்றது. 2011 சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணியில் இணைந்து, ஏழு இடங்களில் போட்டியிட்டது. ஒரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. 3,70,044 வாக்குகள் கிடைத்தன. அதன்பிறகு, கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழக ஆளுநர்கள்

மாநில ஆளுநர்கள், நடுவண் அரசின் பரிந்துரையின் பேரில், குடியரசுத் தலைவரால் பொறுப்பு அளிக்கப் படுகிறார்கள். ஆளுநர் பொறுப்பிலிருந்து ஒருவர் விலகிச் செல்லும்போது, புதிய ஆளுநர் பொறுப்பேற்கும் வரை, அந்த மாநில உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி இடைக்கால ஆளுநராகப் பொறுப்பு வகிப்பார். அவ்வாறு தமிழகத்தில் நீதி அரசர்கள் பி.சந்திரா ரெட்டி, எம்.எம்.இஸ்மாயில் ஆகியோர் இடைக்கால ஆளுநர்களாகப் பொறுப்பு வகித்துள்ளனர். சில வேளைகளில், அண்டை மாநில ஆளுநர்களிடம் கூடுதல் பொறுப்பு அளிக்கப்படும்.

தமிழக ஆளுநர்களாக இருந்தவர்களைப் பற்றிய சிறு குறிப்பு:

1. சர் ஆர்ச்சிபால்டு எட்வர்ட் நை

(6 மே 1946 முதல் 7 செப்டம்பர் 1948 வரை).

முதலாவது ஆளுநராக இருந்த சர் ஆர்ச்சிபால்டு எட்வர்ட் நை, அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளினில் பிறந்தவர். இரண்டு உலகப்போர்களிலும், பிரிட்டிஷ் ராணுவத்தில் பணிபுரிந்து, ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார். லெஃப்டினண்ட் ஜெனரலாக ஓய்வு பெற்றார்.

முதலில் தமிழக ஆளுநராகப் பணியாற்றிய இவர், 1948 முதல் 1952 வரையிலும் இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதராகவும், பின்னர் 1956 வரை கனடாவுக்கான தூதுவராகவும் பணியாற்றினார்.

2. மகாராஜா ஸ்ரீ கிருஷ்ணகுமார் சிங்ஜி பவ் சிங்ஜி

(7 செப்டம்பர் 1948 முதல், 12 மார்ச் 1952 வரை).

குஜராத் மாநிலத்தின் பவநகர் மகாராஜா ஆவார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

3. ஸ்ரீ பிரகாசா

(12 மார்ச் 1952 முதல் 10 டிசம்பர் 1956 வரை).

விடுதலைப் போராட்ட வீரர்; காங்கிரஸ் அரசியல்வாதி. 1947 முதல் 1949 வரையிலும், பாகிஸ்தானுக்கான இந்தியாவின் முதலாவது தூதராகவும், ஓராண்டு அஸ்ஸாம் ஆளுநராகவும், பிறகு சென்னை ஆளுநராகவும், அடுத்து ஆறு ஆண்டுகள் பம்பாய் மாகாண ஆளுநராகவும் பணியாற்றினார்.

4. ஏ.ஜே. ஜான் அனபரம்பில்

(10 டிசம்பர் 1956 முதல், 30 டிசம்பர் 1957)

விடுதலைப் போராட்ட வீரர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். இந்திய விடுதலைக்குப் பிறகு, கேரள மாநிலத்தின் (அப்போது திருவாங்கூர்-கொச்சி என்று அழைக்கப்பட்டது) மூன்றாவது முதலமைச்சராக, இரண்டு ஆண்டுகள் (1952-54) பொறுப்பு வகித்தவர்.

5. டாக்டர் பாகலா வெங்கட ராஜமன்னார்

(இடைக்கால ஆளுநர்) 1 அக்டோபர் 1957 முதல் 24 ஜனவரி 1958 வரை.

6. விஷ்ணுராம் மேதி

(24 ஜனவரி 1958 முதல், 4 மே 1964 வரை)

1950 முதல் 57 வரை, அஸ்ஸாம் மாநில முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தவர். அஸ்ஸாம் மாநில காங்கிரஸ் தலைவராகவும், மாநில அமைச்சராகவும் இருந்தவர்.

7. மகாராஜா சர் ஜெயசாமராஜ உடையார் பகதூர்

(4 மே 1964 முதல் 24 நவம்பர் 1964 வரை)

1940 முதல் 1950 வரையிலும், மைசூர் சமஸ்தானத்தின் 25-வது மற்றும் கடைசி மகாராஜாவாகத் திகழ்ந்தார்.

8. பி.சந்திரா ரெட்டி **(இடைக்கால ஆளுநர்)**

(24 நவம்பர் 1964 முதல் 7 டிசம்பர் 1965 வரை)

சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி.

9. மகாராஜா சர் ஜெயசாமராஜ உடையார் பகதூர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

(7 டிசம்பர் 1965 முதல் 28 ஜூன் 1966 வரை)

10. சர்தார் உஜ்ஜல் சிங்

28 ஜூன் 1966 முதல் 16 ஜூன் 67 வரை இடைக்கால ஆளுநராகவும், பின் ஆளுநராக 27 மே 1971 வரையிலும் பொறுப்பு வகித்தார். இவர், 1930-ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற முதலாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றவர்.

இவரது மூத்த சகோதரர், சர் சோபா சிங், 1911 முதல் 1930 வரையிலும் நடைபெற்ற புதுடெல்லி நகரக் கட்டுமானப் பணிகளில் முதன்மை ஒப்பந்ததாரர். பிரபல எழுத்தாளர் குஷ்வந்த் சிங், இவரது நெருங்கிய உறவினர். பஞ்சாப் மாநில ஆளுநராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார்.

11. கோடர்தாஸ் காளிதாஸ் ஷா **(**கே.கே.ஷா**)**

(27 மே 1971 முதல் 16 ஜூன் 1976 வரை)

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். காங்கிரஸ் அரசியல்வாதி.

12. மோகன்லால் சுகாதியா

(16 ஜூன் 1976 முதல், 8 ஏப்ரல் 1977 வரை)

மோகன்லால் சுகாதியா, 38 வயதில் ராஜஸ்தான் மாநில முதல்வராகப் பொறுப்பேற்றவர். 1954-ம் ஆண்டு முதல் 1971 வரையிலும், தொடர்ச்சியாக 17 ஆண்டுகள் அந்த மாநில முதல்வராகப் பொறுப்பு வகித்தார். ஏராளமான திட்டங்களை நிறைவேற்றினார். எனவே, ‘நவீன ராஜஸ்தானின் சிற்பி’ (Founder of Modern Rajasthan) எனப் போற்றப்படுகிறார்.

13. நீதி அரசர் பி.கோவிந்தன் நாயர் **(**இடைக்கால ஆளுநர்**)**

(9 ஏப்ரல் 27 ஏப்ரல் 1977 வரை)

14. பிரபுதாஸ் பி.பட்வாரி

(27 ஏப்ரல் 1977 முதல் 27 அக்டோபர் 1980 வரை)

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர். விடுதலைப் போராட்ட வீரர். குஜராத் மாநிலத்தில் மது ஒழிப்புக்காகப் பாடுபட்டவர். முழுமையான காந்தியவாதி. எளிமையானவர். பதவியிலிருந்து விலகிய பின்னர், தொடர்வண்டியில் ஏறி குஜராத்துக்குச் சென்றார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

15. நீதி அரசர் **எம்.எம்.**இஸ்மாயில் **(**இடைக்கால ஆளுநர்**)**

(27 அக்டோபர் 1980 முதல் 4 நவம்பர் 1980 வரை)

16. சாதிக் அலி

(4 நவம்பர் 1980 முதல், 3 செப்டம்பர் 1982 வரை).

ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர். அரசியல்வாதி. தமிழகத்துக்கு வருவதற்கு முன்பு, மூன்று ஆண்டுகள் மராட்டிய மாநில ஆளுநராகப் பொறுப்பு வகித்தார்.

17. சுந்தர்லால் குரானா

(3 செப்டம்பர் 1982 முதல், 17 பிப்ரவரி 1988 வரை)

அரசியல்வாதி. டெல்லி, புதுவை மாநிலங்களின் ஆளுநராகப் பணியாற்றியவர்.

18. பி.சி.**அ**லெக்சாண்டர் ஐ.ஏ.எஸ்**., (**ஓய்வு**) (17** பிப்ரவரி **1988** முதல்**, 24** மே **1990** வரை**)**

கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திய ஆட்சிப் பணி அதிகாரி. 1993 முதல் 2002 வரையிலும், மராட்டிய மாநில ஆளுநராகப் பொறுப்பு வகித்தார். அதன்பிறகு, அதே மாநிலத்திலிருந்து மாநிலங்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆறு ஆண்டுகள் பொறுப்பு வகித்தார்.

19. சுர்ஜித் சிங் பர்னாலா

(24 மே 1990 முதல் 15 பிப்ரவரி 1991 வரை)

பஞ்சாப் மாநில முதலமைச்சர், மத்திய அமைச்சர், உத்தரகாண்ட், ஆந்திர மாநிலங்களின் ஆளுநர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர். மூத்த அரசியல்வாதி.

20. பீஷ்மநாராயண் சிங்

(15 பிப்ரவரி 1991 முதல் 31 மே 1993 வரை).

ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் அரசியல்வாதி. ஐந்து ஆண்டுகள் அஸ்ஸாம் மாநில ஆளுநராகவும் பொறுப்பு வகித்து இருக்கிறார்.

21. எம்**.**சென்னா ரெட்டி

(31 மே 1993 முதல் 2 டிசம்பர் 1996 வரை)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மூத்த அரசியல்வாதி. தொடக்க காலங்களில், தெலங்கானா மாநிலப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்தியவர். பின்னர் காங்கிரஸில் இணைந்தார். ஆந்திர மாநில முதல்வராக இரண்டு முறை பொறுப்பு வகித்துள்ளார். உத்தரப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களின் ஆளுநராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார்.

22. கிருஷ்ணகாந்த் (கூடுதல் பொறுப்பு)

(2 டிசம்பர் 1996 முதல் 25 ஜனவரி 1997 வரை)

23. நீதிபதி எம்.ஃபாத்திமா பீவி

(25 ஜனவரி 1997 முதல் 3 ஜூலை 2001 வரை)

கேரள மாநில உயர் நீதிமன்ற நீதிபதியாகவும், இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் நியமிக்கப்பட்ட முதலாவது பெண்.

24. டாக்டர் சி.ரங்கராஜன் (கூடுதல் பொறுப்பு)

(3 ஜூலை 2001 முதல் 18 ஜனவரி 2002 வரை)

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர். ஆந்திர மாநில ஆளுநராக இருந்தபோது, தமிழகத்தின் இடைக்கால ஆளுநராகவும் இருந்தார்.

25. பி.எஸ்.ராமமோகன் ராவ் ஐ.பி.எஸ். (ஓய்வு)

(18 ஜனவரி 2002 முதல் 3 நவம்பர் 2004 வரை)

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த, உளவுத் துறை அதிகாரி.

26. சுர்ஜித் சிங் பர்னாலா

(3 நவம்பர் 2004 முதல் 31 ஆகஸ்ட் 2011)

27. கே.ரோசையா

(31 ஆகஸ்ட் 2011 முதல்....

ஆந்திர மாநில முன்னாள் முதல்வர். ஆந்திர மாநில ஆளுநர்களாக இருந்த கிருஷ்ணகாந்த், டாக்டர் சி.ரங்கராஜன் ஆகியோர், தமிழக ஆளுநர்களாக இடைக்காலப் பொறுப்பு வகித்துள்ளனர்.

ஆளுநர்கள் பெரும்பாலும் மத்திய ஆளுங்கட்சிக்காரர்களாகவே இருப்பார்கள். ஒரு மாநிலத்தில்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதலமைச்சராக இருந்தவர் அல்லது முதல்வருக்குப் போட்டியாக இருப்பவரை, அந்த மாநில அரசியலிலிருந்து அகற்றுகின்ற வகையில், வேறு மாநிலத்தின் ஆளுநராகப் பொறுப்பளித்து அனுப்பிவிடுவார்கள்.

அரசுப் பணியில் இருந்தபோது, நடுவண் அரசின் ஆட்சியாளர்களுக்கு உதவிகள் செய்த, இந்திய ஆட்சிப்பணி மற்றும் காவல் பணி அதிகாரிகள், பணியிலிருந்து ஓய்வு பெற்றபிறகு, அவர்களை மாநில ஆளுநர்களாக நியமிப்பதும் உண்டு. இதுவரை தமிழக ஆளுநர்களாக இருந்த அனைவருமே, மேற்கண்ட மூன்று வகையினர்தாம்.

'ஆளுநர் மாளிகை என்பது, அரசியல்வாதிகளின் ஓய்வு மாளிகை' என்று, தி.மு.க. குற்றம் சாட்டி வந்தது. 'ஆட்டுக்குத் தாடி எதற்கு? நாட்டுக்கு ஆளுநர் எதற்கு?' என்று அண்ணா கேட்டார். 'ஆளுநர் பதவி தேவை இல்லை; அகற்ற வேண்டும்' என்பதும் அந்தக் கட்சியின் கொள்கை.

அமெரிக்காவில், மாநில ஆளுநர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகின்றார்கள். மாநில அரசுகளைக் கலைப்பதற்கு, மத்திய அரசுக்கு அதிகாரம் இல்லை.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதல் அமைச்சர்கள்

ஏ.சுப்பராயலு ரெட்டியார்

17.12.1920 முதல் 11.07.1921 வரை

பி.ராமராய நிங்கார் (பனகல் அரசர்)

19.11.1923 முதல் 03.12.1926 வரை

டாக்டர் பி.சுப்பராயன்

04.12.1926 முதல் 27.10.1930 வரை

பி.முனுசாமி நாயுடு

27.10.1930 முதல் 04.11.1932 வரை

ராவு சுவேதாச்சலபதி ராமகிருஷ்ண ரங்காராவ் (பொப்பிலி அரசர்)

05.11.1932 முதல் 04.04.1936 வரை

பி.டி.ராஜன்

04.04.1936 முதல் 24.08.1936 வரை

வெங்கட ரெட்டி நாயுடு (சர்.கே.வி. ரெட்டி)

01.04.1937 முதல் 14.07.1937 வரை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பிரதமர்கள்

சி. ராஜகோபாலாச்சாரி

14.07.1937 முதல் 29.10.1939 வரை ஆளுநரின் ஆலோசகர்கள் ஆட்சி

டி.பிரகாசம்

29.04.1946 முதல் 23.03.1947 வரை

ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார்

23.03.1947 முதல் 06.04.1949 வரை

பி.எஸ்.குமாரசாமி ராஜா

06.04.1949 முதல் 09.04.1952 வரை

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

முதல் அமைச்சர்கள்

சி.ராஜகோபாலாச்சாரி

10.04.1952 முதல் 13.04.1954 வரை

கு.காமராஜர்

13.04.1954 முதல் 01.10.1963 வரை

எம்.பக்தவத்சலம்

02.10.1963 முதல் 06.03.1967 வரை

அறிஞர் அண்ணா

06.03.1967 முதல் 03.02.1969 வரை

இரா.நெடுஞ்செழியன் (பொறுப்பு)

03.02.1969 முதல் 10.02.1969 வரை

மு.கருணாநிதி

10.02.1969 முதல் 15.03.1971 வரை

மு. கருணாநிதி

15.03.1971 முதல் 31.01.1976 வரை

ஆட்சிக் கலைப்பு ஆளுநரின் ஆலோசகர்கள் ஆட்சி

எம்.ஜி.ராமச்சந்திரன்

30.06.1977 முதல் 17.02.1980 வரை

ஆட்சிக் கலைப்பு ஆளுநரின் ஆலோசகர்கள் ஆட்சி

எம்.ஜி.ராமச்சந்திரன்

09.06.1980 முதல் 09.02.1985 வரை

எம்.ஜி.ராமச்சந்திரன்

10.02.1985 முதல் 24.12.1987 வரை

இரா.நெடுஞ்செழியன் (பொறுப்பு)

24.12.1987 முதல் 07.01.1988 வரை

ஜானகி ராமச்சந்திரன்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

07.01.1988 முதல் 30.01.1988 வரை

மு.கருணாநிதி

27.01.1989 முதல் 30.01.991 வரை

ஆட்சிக் கலைப்பு, ஆளுநரின் ஆலோசகர்கள் ஆட்சி

ஜெ. ஜெயலலிதா

24.06.1991 முதல் 12.05.1996 வரை

மு.கருணாநிதி

13.05.1996 முதல் 13.05.2001 வரை

ஜெ.ஜெயலலிதா

14.05.2001 முதல் 21.09.2001 வரை

ஓ.பன்னீர் செல்வம்

21.09.2001 முதல் 02.03.2002 வரை

ஜெ. ஜெயலலிதா

02.03.2002 முதல் 12.05.2006 வரை

மு.கருணாநிதி

13.05.2006 முதல் 15.05.2011 வரை

ஜெ. ஜெயலலிதா

16.05.2011 முதல்.......

தேர்தல் நினைவுகள் - மா.பாண்டியன்

வெள்ளைக்காரன் ஆட்சியில் கடைசியாக நடந்த தேர்தல், 1946 தேர்தல். ஒருங்கிணைந்த சென்னை மாகாணச் சட்டமன்றத்துக்குத் தனது அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு, மதுரை ஓட்டர் மகாஜனங்களுக்கும் கிட்டியது. அப்போதே இந்தியாவின் பதிமூன்றாவது பெரிய நகராக (மக்கள்தொகையில்) இருந்த மதுரை நகர் முழுவதற்கும் ஒரே தொகுதிதான்!

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

‘காந்தி மகான்’ கட்சி அபேட்சகராக, பின்னர் ‘மதுரை காந்தி’ என்று அழைக்கப்பட்ட என்.எம்.ஆர்.சுப்புராமன் நின்றார். அவரை எதிர்த்து நின்றவர் பொது உடைமை இயக்க வேட்பாளர் சாந்துலால். இருவருமே செளராட்டிரர்கள்.

என்னதான் பாண்டியன் தலைநகர் என்றாலும், என்னதான் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த ஊர் என்றாலும், ஒரு காலகட்டம் வரை ‘பட்டுநூல்காரர்கள்’ எனப்பட்ட செளராட்டிரர்களே மதுரை அரசியலைத் தீர்மானிப்பவர்களாக இருந்தார்கள்.

சாதிக்கணக்கின்படி பார்த்தால் அன்றைய நிலவரத்தில் பட்டு நூல்காரர்கள்தான் தனிப்பெரும் சாதி. நகராட்சிக்கு செளராட்டிர உறுப்பினர்கள் ஏழெட்டுப் பேர் தேர்ந்தெடுக்கப் பட்டுவிடுவர். எனவே, நகராட்சித் தலைவராகவும் அவர்களே வரமுடியும். வேறு பல சாதிகள் மதுரையில் இருந்தன என்றாலும், பட்டுநூல்காரர்களின் கட்டுப்பாடு அவற்றுக்குக் கிடையாது. எனவேதான் இரு இயக்கமும் செளராட்டிரர்களையே நிறுத்தின.

என்.எம்.ஆர்.சுப்புராமன், வசதியான பணக்காரர். அவருக்கு ஏற்கெனவே சொந்தமாக கார் உண்டு. தவிர, அவரது இயக்கத்தினர் பயன்பாட்டுக்காக ஒரு வண்டி வாடகைக்கு அமர்த்தப்பட்டது.

சாந்துலாலுக்கு அவரது இயக்கமே ஒரு வண்டியை வாடகைக்குப் பிடித்து தந்தது. இன்று நம்பமாட்டீர்கள்! அன்று அந்த மொத்த மதுரையையும் இந்த மூன்று வண்டிகள்தான் சுற்றி வந்தன. மற்ற தேர்தல் பணிகளெல்லாம் மிதிவண்டிகளிலும் சில குதிரை வண்டிகளிலும்தான் நடந்தன.

பின்னர் வந்த தேர்தல்களைப் பார்த்தால், ஒவ்வொரு வேட்பாளருக்கும் இருபது, முப்பது வண்டிகள் என ஊரே அமர்க்களப்பட்டது! எங்குப் பார்த்தாலும் ஏதேனும் ஒரு வண்டி, ஏதேனும் ஒரு கொடியைக் கட்டிக்கொண்டு தாறுமாறாகத் திரிந்தது! ஆம்! தேர்தல் என்றாலே சில ஆயிரம்தான் செலவு என்ற நிலை மாறி,லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் செலவாகத் தொடங்கிவிட்டது.

நல்லவேளை! இந்த 2011 தேர்தலில் தேர்தல் ஆணையத்தின் கண்டிப்பான விதிமுறைகளினால் ஒவ்வொரு வேட்பாளரும் ஒன்று அல்லது இரண்டு வண்டிகளைத்தான் ஓட்ட முடிந்தது! ஒரு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வேட்பாளர் வாக்குக் கேட்க வருகிறார் என்றால், அவர் பின்னே இருபது, முப்பது வண்டிகள் வருவதும், கரகாட்டம், ஒயிலாட்டம், குறவன் கூத்து கும்மாளமிட்டுக்கொண்டு வருவதும் பழைய கதைகளாகிவிட்டன!

இந்தத் தேர்தலில் வேட்பாளரே தன் வண்டியை ஒதுக்குப்புறமாக விட்டுவிட்டு பேட்டைகளுக்குள் வாக்குக் கேட்க வருவதையும் பார்க்க முடிகிறது! எவ்வளவு பெரிய மாற்றம்! பணம் படைத்த வேட்பாளர்களின் கொழுப்பைச் சரியாகவே சுண்ட வைத்துவிட்டது தேர்தல் ஆணையம்! நம்மைப் பொறுத்து இது நீதியான கட்டுப்பாடே! இது, வரும் தேர்தல்களிலும் தொடர வேண்டும்!

1946 தேர்தல் வரை, இந்தியாவில் சொத்துரிமை உள்ளவர்களும், எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும்தான் வாக்களிக்க முடியும். ‘21 வயதான எல்லோரும் வாக்களிக்கலாம்!’ என்ற விதி, 1952 பொதுத் தேர்தலில்தான் வந்தது. எனவே, 1946 தேர்தலில் மொத்த இந்தியாவிலும் வாக்காளர் எண்ணிக்கை குறைவாகத்தான் இருந்தது.

இந்த வாக்காளர்களைக் கவர அப்போது ஃபிளெக்ஸ் போர்டு போன்ற வசதிகள் எல்லாம் கிடையாது. சொல்லப்போனால், அவை அப்போது தோன்றவும் இல்லை. கையளவுத் துண்டறிக்கைகளைத்தான் தருவார்கள். மிஞ்சிப்போனால் கட்டை எழுத்துகளில் தினமணி, தினத்தந்தி அளவுக்குச் சுவரொட்டிகள் அடிக்கலாம். ஆனால், அவற்றைக்கூட வேட்பாளர்கள் அடித்தது கிடையாது.

வேட்பாளர்களே எல்லாத் தெருக்களுக்கும் வரவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அவர்கள் சில தெருக்களுக்கு வருவார்கள். சாவடிகளில், கோயில்களில், தெருப் ‘பெருசு’களை... சாதித் தலைவர்களைச் சந்திப்பார்கள். வாக்காளர்களுக்குக் கூட்டத்தைப் பார்த்து ஒட்டுமொத்தமாகக் கும்பிடுவார்கள். சாதித் தலைவர்களுக்கு... தம் சாவடியைத் தேடி ‘அபேட்சகர்’ வருவதே போதும்; ‘அவ்வளவு பெரிய மனுஷன்... நம்ம சாவடி தேடி வந்து... நம்ம ஊர்க் கோயில் மந்தை தெரு வந்து கும்பிட்டு வாக்குக் கேட்டாரே! அது என்ன சாமானியமா?’ என்று மகிழ்ந்து போவார்கள்.

வாக்காளர்களுக்கு அஞ்சல் அட்டை அளவில் வேண்டுகோள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அட்டைகள் தரவும் செய்வர். வேட்பாளர்கள், பேராயம் (காங்கிரஸ்) என்றால் அந்த அட்டை மஞ்சள் வண்ணத்தில் இருக்கும். பொது உடைமையர் (கம்யூனிஸ்ட்) என்றால், சிவப்பு வண்ணத்தில் இருக்கும். நீதிக் கட்சியினர் போட்டியிட்ட இடங்களில் நீல நிற அட்டையில் வேண்டுகோள் அச்சிட்டுத் தந்தனர்.

அந்த அட்டைகளில் வேட்பாளர் பெயர், தேர்தல் நாள் முதலியவற்றோடு 'மங்களகரமான மஞ்சள் பெட்டியில் ஓட்டளியுங்கள்!' என்றோ, 'தொழிலாளர்களின் சிவப்புப் பெட்டியில் வாக்களியுங்கள்!' என்றோ, 'இஸ்லாமியர் போற்றும் பச்சைப் பெட்டியில் ஓட்டு செய்யுங்கள்!' என்றோ வேண்டுகோள்களும் இருக்கும்.

தேர்தல் பொதுக் கூட்டங்கள் என்பது, மொத்தத்தில் பத்து, இருபது நடந்தாலே அரிதுதான்! மற்றபடி சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு இயக்கத் தொண்டர்கள் முழக்கங்கள் எழுப்பிவரும் சிறு சிறு ஊர்வலங்கள் நடப்பது உண்டு. அவர்கள் கையில் இயக்கக் கொடிகளும் இருக்கும். மஞ்சள் பெட்டியையோ, சிவப்புப் பெட்டியையோ பெரிதாகக் கட்டையில் செய்து எடுத்து வருவதும் உண்டு.

தேர்தல் 'காரியாலயங்கள்' என்பது, பெரும்பாலும் வட்டத்துக்கு ஒன்றிரண்டே இருக்கும். அவையும் பெரும்பாலும் அவரவர் வாசக சாலைகளிலேயே இருக்கும். அவை கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருக்கும். இத்துடன், பெரிதாகச் செலவு செய்து ஆர்ப்பாட்டம் செய்யமாட்டார்கள்.

கல்வியறிவு மற்றும் சொத்து இருப்பவர்களுக்குத்தான் வாக்குரிமை உண்டு. அந்தச் சொத்து நிலமாகவும் இருக்கலாம்; வீடாகவும் இருக்கலாம். அவற்றின் பெயரில் கிஸ்தியோ வீட்டு வரியோ செலுத்திப் பெறும் ரசீதுதான், நீங்கள் சொத்துள்ளவர்கள் என்பதற்குச் சான்று.

என் அப்பன் ஏட்டுப் பள்ளிக்கூடத்தில் சிறிது காலம்தான் படித்தார். பின் தன் முயற்சியில் டி.எஸ்.சொக்கலிங்கம் காலத்து தினமணியையும் தினசரியையும் வரி விடாமல் படித்துப் பேசுகிறவராக இருந்தார். அவரும் இவரைப் போன்றவர்களும் தம் முயற்சியில் படிப்பறிவை வளர்த்துக்கொண்டார்கள். வேறு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சிலரோ கையெழுத்து மட்டும் போட படாதபாடுபட்டுப் பழகி, அதைக் காட்டிப் படிப்பறிவு உள்ளவர்கள் என்று வாக்குரிமை பெற்றது உண்டு. அந்தத் தேர்தல் வரை இஸ்லாமியர்களுக்குத் தனித்தொகுதியும் இருந்தது.

இன்றைய நிலைமைகளை வைத்துப் பார்க்கையில், 1946 தேர்தல் மிக மிக அமைதியாக நடந்தது; செலவும் குறைவு என்றும் சொல்லலாம்! இந்தியா விடுதலை பெற்றபின் முதல் பொதுத் தேர்தல் 1952-ல் நடந்தது. 21 வயதான அனைவருக்கும் எழுத்தறிவு இல்லாதவன் என்றாலும்கூட; ஓட்டாண்டி என்றாலும்கூட வாக்குரிமை கிடைத்தது. அதாவது, ‘சர்வ ஜன வாக்குரிமை’ அமலுக்கு வந்தது. இஸ்லாமியர்களுக்குத் தனித் தொகுதி என்பதற்குப் பதில் தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனித் தொகுதி வந்தது!

1957 வரை தொகுதிகள் சில இரட்டை உறுப்பினர் தொகுதிகளாகவும் இருந்தன. இவற்றில் முன்னேறிய சாதிக்காரர் ஒருவரும் தாழ்த்தப்பட்டவர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். இருவரும் ஒரே இயக்கக்காரர்களாகவும் இருக்கலாம்; வெவ்வேறு இயக்கக்காரர்களாகவும் இருக்கலாம்.

1957 தேர்தலில் ஆத்தூர் இரட்டை உறுப்பினர் தொகுதியில் எம்.பி. சுப்பிரமணியம், இருசப்பன் ஆகிய இருவரும் வென்றனர். இருவருமே அன்று தி.மு.க. நாமக்கல் மக்களவைத் தொகுதியிலோ பொது இடத்தில் ஈ.வெ.கி. சம்பத் வென்றார். தாழ்த்தப்பட்டோர்க்கு உரிய இடம் வேறோர் இயக்கத்துக்குப் போனது. 1962-ல் இரட்டை உறுப்பினர் தொகுதி முறை நீங்கியது. தாழ்த்தப் பட்டவர்களுக்குத் தனித் தொகுதிகள் வந்தன.

1952 முதல் பொதுத்தேர்தல், முந்தையத் தேர்தல்களைவிட வேறுபட்ட தோற்றம் எடுத்தது. பொதுக் கூட்டங்கள் பெருகின. ‘ஓட்டர் மகா ஜனங்களுக்கு’ விண்ணப்பிக்கிற துண்டு அறிக்கைகளிலும் தமிழ் தலை எடுக்கத் தொடங்கியது. அந்தத் தேர்தலில் பேராயத்துக்கும் பொதுவுடைமை இயக்கத்துக்கும்தான் கடும் போட்டி.

மதுரை நகர், மதுரை வடக்கு, மதுரை தெற்கு என்று இரு தொகுதியானது. மதுரை வடக்கில் நீதிக் கட்சி சார்பில் பி.டி.ராஜன் அவர்கள் நின்றார். பேராயத்தின் சார்பில் தியாகி ரெ.சிதம்பரபாரதி நின்றார். பொது உடைமை சார்பில் சிறையில்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இருந்தவாறே பஞ்சாபகேசன் ராமமூர்த்தி போட்டியிட்டார்.

மதுரை தெற்கில் பேராயத்தின் சார்பில் டி.கே.ராமா என்ற சௌராட்டிரர் நின்றார். எதிரணி சார்பில் அன்று மதுரையில் புகழ்பெற்ற வழக்கறிஞராக விளங்கிய தர்மராஜ் சந்தோஷம் நின்றார். இவர், சென்னையில் புகழ் பெற்று விளங்கிய காச நோய் மருத்துவர் எம்.சந்தோஷத்தின் இளவல். இரு தொகுதிகளிலுமே சாதிபலம்தான் வென்றது.

இந்த இரு தொகுதிகளில் மட்டுமில்லை; மொத்த இந்தியாவிலும் தேர்தல் என்றாலே தாறுமாறான செலவுதான் என்ற நிலை தோன்றிவிட்டது. அதுவரை வீட்டுக் கஞ்சியைக் குடித்துவிட்டு வந்து பொதுப் பணியாற்றியவர்கள் எல்லாம் படி எதிர்பார்க்கத் தொடங்கினர். புதுப் பணக்கார இயக்கமான பேராயம் செய்த கேடு இது. எதற்கெடுத்தாலும் காசு தந்தால்தான் ஆள் கிடைக்கும் என்ற நிலை வந்தது. 1952 தேர்தலில் இந்தக் கொடுமையிலிருந்து தப்பியது பொது உடைமை இயக்கம் மட்டுமே.

குறைந்தது குருவி நீளத்திலாகிலும் தட்டிகள் எழுதி வைத்தார்கள், வசதிப்பட்டவர்கள். அதனிலும் வசதிப்பட்ட வேட்பாளர்கள் ஓவியர்களை அழைத்துவண்ணங்களில் விளம்பரங்கள் எழுதித் தரச் சொன்னார்கள். இவற்றுள் இன்றும் மனதில் நிற்பது, பி.ராமமூர்த்தி சிறைக் கம்பிகளுக்குப் பின்னிருந்து வாக்குக் கேட்பதுபோல் இரண்டு தட்டிகளில் ஓவியங்கள் வரைந்து கைவண்டி ஒன்றின் இருபுறமும் கட்டி அனுப்பியதுதான். கைவண்டிக்காரர் இந்த வண்டியைக் காலையிலிருந்து மாலை வரை இயக்கம் சொல்லும் பகுதிகளில் தெருத் தெருவாக இழுத்துச் சென்று வருவார்.

வைத்தியநாதய்யர் அன்று மதுரையில் என்.எம்.ஆர். சுப்புராமன் போலவே மேல் நிலையில் இருந்தவர். அவரோ மதுரை நகரில் தேர்தல் பணிகளில் பங்கேற்கவில்லை. பி.ராமமூர்த்தி வென்றது அவரைத் திகைக்க வைத்தது! மதுரை தெற்கிலும் சாதிபலம்தான் வென்றது. சௌராட்டிரரான டி.கே.ராமா வென்றார். என்னதான் அறிவாளியாக இருந்தாலும் சிறந்தவரான தர்மராஜ் சந்தோஷம் திட்டமிட்டுத் தோற்கடிக்கப் பட்டார்.

இந்தத் தேர்தலில், புதுப் பணக்கார இயக்கமான பேராயம்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பணத்தைத் தாறுமாறாக வாரி இறைத்தது. பண பலமோ, சாதி பலமோ உள்ளவன்தான் தேர்தலில் நிற்கக்கூட முடியும் என்ற நிலையை உருவாக்கியது.

‘காந்தியோ பரம சந்நியாசி’ என்று பாடியதை எல்லாம் மறந்து, ‘காசேதான் கடவுளடா!’ என்ற புதிய பாடல் முழங்கியது. இருப்பினும், ஒருங்கிணைந்த சென்னை சட்டசபைக்கு அன்று நடந்த தேர்தலில் ஆந்திரப் பகுதியிலிருந்து பெருமளவு பொது உடைமையர் வந்தது பேராயத்தை ஆடவைத்துவிட்டது. கடைசியில் குற்றாலத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ராஜாஜி காலில் போய் விழுந்து, அவரை அழைத்துவந்து அவரது மதி யூகத்தைப் பயன்படுத்தி ஆட்சி அமைக்க வேண்டி வந்தது.

இந்த 1952 தேர்தலில் மக்களவைக்கும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதிலெல்லாம் மகிழ்ச்சி தந்த தகவல், சாதி பலமே இல்லாத அனந்தன் நம்பியார் திருச்சியிலும், கேப்டன் லட்சுமியின் தாயான அம்மு சுவாமிநாதன் திண்டுக்கல்லிலும் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதுதான். திருச்சியில் பின்னர் உமாநாத் பெற்ற வெற்றிகளும் சென்னையில் ஹெச்.வி.ஹண்டே பெற்ற வெற்றிகளும், சென்னை வண்ணாரப் பேட்டையில் ஜீவா பெற்ற வெற்றியும் இவை போன்ற வேறு சிலவும்தான், சாதியையும் பணத்தையும் கடந்த வெற்றிகள்!

1952 தேர்தலில். தி.மு.க. போட்டியிடவில்லை. ஆயினும் மதுரை பொதுக்குழுத் தீர்மானப்படி, திராவிட நாடு விடுதலைக்கு ஆதரவாக இருப்பேன் என்று கையெழுத்திட்டுத் தந்தவர்களை அது ஆதரித்தது. இவ்வாறு ஆதரவு தெரிவித்துச் சென்னை சட்டமன்றத்துக்கு வந்த உறுப்பினர்கள் (பத்துக்கும் மேற்பட்டோர்) ‘திராவிடப் பார்லிமென்டரி கட்சி’ என்ற பெயரில் தனியாக இயங்கியதும் குறிப்பிடத்தக்கது.

பி.டி.ராஜன், மதுரையில் ஏமாந்து விட்டாலும், கம்பத்தில் வென்று சட்டமன்றத்துக்குள் வந்தார். தான் நீதிக் கட்சியின் பிரதிநிதி என்று பெருமையுடன் அவையில் தெரிவிக்கவும் செய்தார். 1957-ம் ஆண்டிலும் கம்பத்தில் வென்றார். அவருக்குப் பின், சட்டமன்றத்தில் நீதிக் கட்சி இடம்பெறவில்லை.

சட்டமன்றத்துக்கும் மக்களவைக்கும் என இந்தியாவெங்கும் ஒரே நேரத்தில் நடைபெற்ற இந்தப் பொதுத்தேர்தல் ஆட்சியைத் தீர்மானிக்கும் வாய்ப்பை குடிமக்கள் அனைவருக்கும் வழங்கியது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்பது உண்மைதான். ஆனால், பணத்தின் திருவிளையாடலும் தொடங்கிவிட்டது என்பதுதான் கவலை தந்தது. எந்த இயக்கமானாலும் இன்று அதை மீறி வெல்வது, மலையைப் புரட்டிய கதையாகத்தான் உள்ளது.

1957-ல் மதுரை நகர், மூன்று தொகுதியாகி விட்டது. மதுரை கிழக்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு என்பவை. இந்தத் தேர்தலில் தி.மு.க. நேரடியாக (திருச்சித் தீர்மானப்படி) போட்டியிட்டது. மத்திய மதுரையில் எஸ்.முத்து, தி.மு.க. வேட்பாளர். மேலூரில் கக்கனை எதிர்த்துத் திண்டுக்கல் சமதர்மம் நின்றார். மதுரை மாவட்டத்தில் தி.மு.க-வினர் யாரும் வெற்றி பெறவில்லை. எனினும், காஞ்சியில் அண்ணா வென்று பதினான்கு தோழர்களுடன் சட்டமன்றத்துக்குள் புகுந்தார். நாமக்கல்லில் சம்பத் வென்றார். திருவண்ணாமலையில் இரா.தர்மலிங்கமும் வென்று மக்களவை சென்றதாக நினைவு.

1962-ல் தி.மு.கழகத்தில் ஓரிருவர் வசதியான வேட்பாளர்கள். எனினும், யாரும் சில ஆயிரங்களுக்குமேல் செலவழிக்க வேண்டி நேரவில்லை. தொண்டர்கள் உழைப்பு, பேராயத்தின் பண பலத்தைப் புறம் கண்டது. பேராயத்தின் பண வெள்ளத்தால் காஞ்சியில் அண்ணா வெற்றி வாய்ப்பு இழக்க நேர்ந்தது. எனினும், தி.மு.கழகத்தவர் ஐம்பது பேர் வென்றனர்.

இவர்களுள் பலர் பண பலம் என்றால், என்ன என்றே அறியாதவர்கள். சிலர், அப்போதுதான் சென்னையை முதன் முறையாகப் பார்ப்பவர்கள். சிலர், நூறு, இருநூறு வாக்கு வித்தியாசத்தில் வெற்றியை இழந்தனர். 1967 தேர்தலில் இந்தத் தொகுதிகளும் தி.மு.க. வசம் வந்தன.

1962 தேர்தல் முடிவுகள் வந்ததும் பொது உடைமையர் தி.மு.க. வெற்றியை சாதி சார்ந்த வெற்றியாக மட்டுமே கருதினர். வன்னியர்கள் பகுதியில்தான் தி.மு.க. வென்றுள்ளது. எனவே, இது ஒரு சாதி சார்ந்த வெற்றி என்று கணிக்கவும் செய்தனர். சென்னையில் பெற்ற வெற்றிகளுக்கு எந்த சாதி காரணம் என்று விளக்கம் எதுவும் அவர்களால் சொல்ல முடியவில்லை.

மு.க., 1971-ல் சற்று சறுக்கி இந்திராவுடன் உடன்பாடு கொண்டார். அதனால், தமிழகத்தில் பேராயத்தின் பெயரால் சிலர் இன்றும் நடமாட வாய்ப்பு நேர்ந்துவிட்டது! மோகன் குமாரமங்கலம் தி.மு.கழகத்தையே மிரட்டுகிற அளவுக்குப்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

போனார். இன்று ராகுல் காந்தியும் அதே பணியைத்தான் செய்கிறார். 1946, 1952, 1957 தேர்தல்களை மதுரையிலிருந்து பார்த்தேன். 1962 முதல் 2000 வரை சென்னையில் வாக்காளனாக இருந்து தேர்தல்களைப் பார்த்தேன். ஒரு கட்டம் வரை தொண்டர்கள் உழைப்பால் தி.மு.க. வென்றது. ஆளும் இயக்கமான பின், கண்டோரெல்லாம் புகுந்து நிலை மாறிவிட்டது!

சென்னையில் ஒரு சல்லிக்காசுக்கூடச் செலவழிக்காமல் இருமுறை மக்களவை சென்ற நாஞ்சில் கி.மனோகரன்கூட, பணத்தின் நெருக்கடியை உணர்ந்தார். அவருக்காக கழகமும் நண்பர்களும் செலவழித்தால்தான் 'மனோகரன்கூட வெற்றி பெற முடியும்!' என்ற நிலை உருவானது.

1952 வரை பலர் ஊரார் விடுக்கும் வேண்டுகோள்களை நிறைவேற்றுவதாக வாக்குறுதி தந்து வென்றனர். பாலம் கட்டித் தருகிறேன்; பள்ளிக்கூடம் கொண்டு வருகிறேன்; இணைப்புப் பாதை போடுகிறேன் என்பன போன்றனதாம்... ஊருக்குப் பொதுவான அம்சங்கள்தாம் அவர்கள் தந்து நிறைவேற்றிய வாக்குறுதிகள்.

இன்று கதவில் எவ்வளவு செருகுவாய்? கையில் எவ்வளவு தருவாய்? எத்தனை நாட்கள் சோறு போடுவாய்? என்று கேட்கிறார்கள்.

வேட்பாளர் தரும் பணத்தை வாங்கும் போது தாமும் குற்றவாளிகளாகி விடுகிறோம் என்று வாக்காளர்கள் உணரவில்லையே?

(திராவிட இயக்க முதுபெரும் எழுத்தாளர், மறைந்த மா.பாண்டியன் எழுதிய கட்டுரை, சங்கொலி - 15.4.2011)

வட இந்திய, தமிழக அரசியல் - சில வேறுபாடுகள்

வட இந்திய அரசியல் கட்சிகள், கொள்கை, குறிக்கோள் போன்ற ஆவணங்களை வெளியிடுவதில் அதிக கவனம் செலுத்துவதில்லை. அவ்வப்போதைக்கு ஏற்படுகின்ற பிரச்னைகளை முன்னிறுத்தி, தலைவர்களின் உணர்ச்சி முழக்கங்களாகவே அங்கு அரசியல் நடைபெறுகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழ்நாட்டில் அரசியல் கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்களை, வட இந்தியாவில் ‘ரேலி’ (Rally) என்று அழைக்கிறார்கள். அங்கே நடைபெறுகின்ற எல்லாப் பொதுக்கூட்டங்களுமே ரேலிகள்தான். தேர்தல் காலங்களில் மட்டும்தான் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டைப்போல் கொடிக் கம்பங்கள் அமைத்து அதில் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகள், வட இந்தியாவில் நடைபெறுவது இல்லை.

வட இந்தியாவில் அரசியல் கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்களில், இன்றைக்கும் வன்முறைனகள் பெரிய அளவில் நிகழ்கின்றன. சாலைகள், தொடர்வண்டிகளை மறித்து, போக்குவரத்தை நிறுத்திவிடுவார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, ராஜஸ்தான் மாநிலத்தில், இடஒதுக்கீடு கோரி, குஜ்ஜார் இனத்தவர் நடத்திய மறியல் போராட்டங்களில், தேசிய நெடுஞ்சாலையில் பல நாட்கள் போக்கு வரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது.

அஸ்ஸாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில், மாதக்கணக்கில் போக்குவரத்து தடைப்படும்.

2011-ம் ஆண்டு, நாகாலாந்து மாநிலத்துக்கு பொருட்கள் போக்குவரத்தைத் தடை விதித்து, மணிப்பூர் மாநில தீவிரவாதிகள் இரண்டு மாதங்களாக தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்தை நிறுத்தி விட்டார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுத்தால், பெரிய அளவில் உயிர்ச்சேதம் ஏற்படும் என்பதால், மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை. வானூர்திகளின் வழியாகவே பொருட்களைக் கொண்டு சென்றது.

தனிப்பட்ட செல்வாக்கு

இந்தியா, விடுதலை பெற்று அறுபது ஆண்டுகள் கடந்த பின்னர், இன்றளவும் வட இந்தியாவில் பல மாநிலங்களில், முன்னாள் மன்னர்கள், ஜமீன்தார் பரம்பரையினர் மரியாதைக்கு உரியவர்களாகவும், அரசியலில் பெரும் செல்வாக்குப் பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, குவாலியர் அரச பரம்பரையினர் இன்னமும் மன்னர்களாகவே கருதப்படுகிறார்கள். மறைந்த குவாலியர் ராஜமாதா விஜயராஜ சிந்தியா, அவரது மகன் மாதவராவ் சிந்தியா,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அவரது மகளும், ராஜஸ்தான் மாநில பாரதிய ஜனதா கட்சியின் தலைவராகவும் முதல்வராகவும் இருந்த வசுந்தராராஜே சிந்தியா, மாதவராவ் சிந்தியாவின் மகன் ஜோதிர் ஆதித்யா சிந்தியா ஆகியோர், அரசியலில் பெரும் செல்வாக்குப் பெற்றவர்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்த காமராஜர், அறிஞர் அண்ணா, கருணாநிதி, எம்.ஜி.ஆர்., ஆகியோர், தங்கள் தகுதி, திறமை, மக்கள் செல்வாக்கால் மாநிலத்தின் தலைமைப் பதவியை அடைந்தனர். வட மாநிலங்களில், மக்கள் ஆட்சித் தத்துவத்தின் அடிப்படையே இன்னமும் முழுமையாக உணரப்படவில்லை.

வட இந்தியாவில் பல மாநிலங்களில், இன்னமும் கட்சி சாராத வேட்பாளர்கள் தனித்து நின்று வெற்றிபெறக்கூடிய அளவுக்கு செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றனர். ஆனால், தமிழ்நாட்டில் இப்போது ஒரு தொகுதியில்கூட, கட்சி சாராத தனி வேட்பாளர்கள் வெற்றி பெற முடியாது. கடந்த சில தேர்தல்களில், அத்தி பூத்தாற் போன்று ஓரிருவர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் தாமரைக்கனி, ஆலங்குடி தொகுதியில் வெங்கடாசலம், ராதாபுரம் தொகுதியில் அப்பாவு, வெள்ளகோவில் தொகுதியில் துரை ராமசாமி, தங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கால் வெற்றி பெற்றனர். பின்னர் இவர்கள், ஆளுங்கட்சிக்கு ஆதரவாகத் தங்கள் நிலையை மாற்றிக்கொண்டனர். 2006-ம் ஆண்டுத் தேர்தலில், ஓசூர் தொகுதியில் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்ற தளி ராமச்சந்திரன், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். 2011 தேர்தலில், அந்தக் கட்சியின் வேட்பாளராகவே போட்டியிட்டு, மீண்டும் வெற்றி பெற்றார்.

2013-ல் நடைபெற்று முடிந்த சட்டமன்றத் தேர்தலில், கர்நாடக மாநிலத்தில், ஒன்பது சுயேட்சைகள் வெற்றி பெற்றுள்ளனர்.

பொதுக்கூட்டங்கள்

தங்கள் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்காக, அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முன்னணிப் பேச்சாளர்கள் மக்களைச்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சந்தித்துப் பேசுகிறார்கள்.

தொடக்கக் காலங்களில், தேர்தல் நேரத்தில்கூட பிரசாரப் பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. வேட்புமனு தாக்கல் செய்துவிட்டு, ஒவ்வோர் ஊருக்கும் சென்று, அந்த ஊரில் உள்ள பணக்காரர் மற்றும் சாதித் தலைவர்களை மட்டும்தான் சந்தித்து வாக்குக் கேட்பார்கள். வழியில் நிற்கின்ற வாக்காளர்களுக்கு ஒரு கும்பிடு போடுவார்கள். அவ்வளவுதான்.

பொதுக்கூட்டங்கள் வாயிலாக மக்களைச் சந்திக்கும் வழக்கத்தை அறிமுகம் செய்தது, திராவிட இயக்கம்தான். 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், தந்தை பெரியார் கிராமங்கள் தோறும் சென்று, சுயமரியாதைப் பிரசாரம் செய்து வந்தார். அவரது உரைகள், தமிழர்களைச் சிந்திக்க வைத்தன. ஏராளமான இளைஞர்கள், அவரது கருத்துகளால் ஈர்க்கப்பட்டார்கள்.

அண்ணா சாலை பொதுக்கூட்டத்தில் எம்.ஜி.ஆர்.

அவர்களுள் ஒருவரான பேரறிஞர் அண்ணாவின் அடுக்குமொழிப் பேச்சு, தமிழ்நாட்டின் மேடைப்பேச்சுக் கலைக்கே இலக்கணம் வகுத்தது எனலாம். அவரது சொற்பொழிவுகளாலும் எழுத்துகளாலும் ஈர்க்கப்பட்ட லட்சக்கணக்கான இளைஞர்கள், மேடையேறிப் பேசத் தொடங்கினர்.

நாடகம், செய்தித்தாள்கள், புத்தகங்கள், சினிமா என எத்தனையோ வழிகளில் பிரசாரப் பணிகள் நடைபெறுகின்றன. தொலைக்காட்சிகள் வருவதற்கு முன்னர் பொதுக்கூட்டங்கள் மட்டும்தான் மக்களைச் சந்திப்பதற்கான முதன்மையான களமாக அமைந்திருந்தன.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தங்கள் ஊருக்கு வருகின்ற தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்பதற்காக, பல்லாயிரக்கணக்கான மக்கள் விடிய விடியக் காத்திருந்தனர். தலைவர்களும், விடிய விடிய பிரசாரம் செய்வர். குறிப்பாக, எம்.ஜி.ஆர். இரவு 7 மணிக்குமேல் தொடங்கி, விடியற்காலை ஐந்து மணி வரையிலும்தான் பேசுவார்.

ஒவ்வோர் ஊரிலும் பொதுக்கூட்டம் நடத்துவதற்கென ஓர் இடம் இருக்கும். தலைவர்கள் அந்த இடத்தில் பேசினால்தான் மரியாதை. அந்த இடத்தில் தலைவர்களுக்குக் கூடுகின்ற கூட்டத்தை, அந்தப் பகுதி மக்கள் ஒப்பிட்டுப் பேசுவார்கள். இதுதான் அடுத்த சில நாட்களுக்கு அந்த ஊர் முழுவதும் உள்ள தேநீர்க் கடைகளில் முடித்திருத்தகங்களில் வாதப்பொருளாக இருக்கும்.

‘எங்கள் தலைவர் பேச்சைக் கேட்க பத்தாயிரம் பேர் வந்தார்கள்’ என்பார் ஒருவர்; ‘அப்படியெல்லாம் இல்லை, எங்கள் தலைவருக்கு இருபதாயிரம் பேர் வந்தார்கள்’ என்பார் மற்றொருவர். இப்படியாகச் சுவையான விவாதங்கள் நடைபெறும்.

1967 தேர்தலில், காங்கிரஸை வீழ்த்தி தி.மு.க. ஆட்சி அமைத்ததற்கு, அண்ணா உள்ளிட்ட தி.மு.க. முன்னணியினரின் மேடைச் சொற்பொழிவுகளே காரணம் என்றால் அது மிகை அல்ல.

வரவேற்பு

கூட்டங்களில் உரையாற்ற வருகின்ற தலைவர்களுக்கு, தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையில் வரவேற்பு கொடுக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் வாடிப்பட்டி மேளம் அடித்து வரவேற்பார்கள். கொங்கு மண்டலத்தில் உள்ள கிராமங்களில், முரசுக் கொட்டி வரவேற்கிறார்கள்.

மலர்மாலைகள் அணிவிப்பது மட்டும் அல்லாமல், சோழவந்தான் பகுதியில் வெற்றிலை மாலை, தேனி மாவட்டச் சுற்றுப்பயணங்களில் ஏலக்காய் மாலை, கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் முந்திரி மாலை அணிவிப்பார்கள். எந்தப் பகுதியில் என்ன பொருட்கள் விளைகின்றனவோ, அதைத் தங்கள் தலைவருக்கு வழங்கி மகிழ்கிறார்கள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழகம் முழுவதும், தலைவரின் பெயரைச் சொல்லி ‘வாழ்க’ என்று முழங்கி வரவேற்பார்கள். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், ‘ஜே’ என்று முழங்குவார்கள். அருகிலுள்ள கேரள மாநிலத்தின் அரசியல் தாக்கம் அங்கே எதிரொலிக்கும். இன்றைக்கும், காங்கிரஸ், பாரதிய ஜனதா மற்றும் பொது உடைமை இயக்கங்களே, அந்த மாவட்டத்தில் வலுவாகக் கால் ஊன்றி உள்ளன.

தஞ்சை மாவட்டத்தில், சாலையில் இருபுறமும் இளங்குருத்து ஓலைகளைத் தோரணமாகக் கட்டி வரவேற்பர். மன்னார்குடி, ஜெயங்கொண்டம் பகுதியில் வரிசையாகத் தீப்பந்தங்களை ஏந்திப் பிடித்து வரவேற்பதைப் பார்த்திருக்கிறேன். பொள்ளாச்சியில் சவுக்குக் கட்டி வரவேற்கிறார்கள்.

கிராமங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களில், இரண்டு பெஞ்சுகளை இணைத்து மேடையாக்கிவிடுவர். அல்லது ஒரு டிராக்டரைக் கொண்டுவந்து நிறுத்தி விடுவர். தமிழ்நாட்டின் மிகப் பெரிய அரசியல் மாநாடுகள் அனைத்தும் ஊருக்கு வெளியே தனியாக பந்தல் அமைத்து நடைபெறுகின்றன. தஞ்சாவூர் பந்தல் சிவா என்பவர்தாம், அரசு நடத்துகின்ற விழாக்களுக்கும், அனைத்துக்கட்சிகளின் மாநாடுகளுக்கும், கலை வேலைப்பாடுகள் கொண்ட பிரமாண்டமான பந்தல்களை அமைக்கிறார். அதில் தஞ்சைக் கலைவண்ணத்தைக் காட்டி வருகின்றார். அரசியல் கட்சிகள் மாநாடு கூட்டுவதும் தற்போது அரிதாகி வருகிறது.

கூடும் இடங்கள்

சென்னையில் கடற்கரை மணல் வெளியில் பிரமாண்டமான கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில், காந்தி, நேரு, நேதாஜி முதல் அனைத்துத் தலைவர்களும் சென்னைக் கடற்கரையில் உரையாற்றி இருக்கிறார்கள். தமிழகத்தில், எம்.ஜி.ஆரைப் பார்ப்பதற்காகக் கூடிய கூட்டம்தான் ஒவ்வோர் ஊரிலும் சாதனை அளவுகோலாக இருக்கிறது. 1993, 1994-ம் ஆண்டுகளில் வை.கோ. கூட்டங்கள், பிரமாண்டமான உணர்ச்சிகரமான கூட்டங்களாக அமைந்தன. 1994-ம் ஆண்டு, ஏப்ரல் 16-ம் நாள், மறுமலர்ச்சி தி.மு.கழகம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சென்னையில் நடத்திய ‘எழுச்சிப் பேரணி’ மெரினா கடற்கரையில்தான் நிறைவு பெற்றது. அந்தப் பேரணி, தமிழக அரசியலில் புதிய வரலாறு படைத்தது.

காங்கிரஸ்காரர்கள், அந்த இடத்தைத் ‘திலகர் திடல்’ என்பார்கள். திராவிட கட்சிகள், முன்பு அங்கேயிருந்த ‘சீரணி அரங்கம்’ என்ற மேடையில் பொதுக்கூட்டங்களை நடத்தினார்கள். இப்போது, சென்னைக் கடற்கரையில் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு, முழுமையாகத் தடை விதிக்கப்பட்டு விட்டது. தற்போது பெரிய கூட்டங்களை நடத்துவதற்கு, தீவுத்திடல் ஒதுக்கப்படுகிறது.

சென்னை அண்ணா நகரில் புல்லா நிழற்சாலை, தியாகராய நகரில் முத்துரங்கன் சாலை, சைதாப்பேட்டை தேரடித் திடல், திருவல்லிக்கேணி லாயிட்ஸ் சாலை, மயிலாப்பூர் மாங்கொல்லை, ராயபுரம் -மணிக்கூண்டு, சுழல் மெத்தை, ராபின்சன் பூங்கா (தி.மு.க.வை அண்ணா தொடங்கிய இடம்) புரசைவாக்கம் தாணா தெரு, தியாகராய நகர் பனகல் பூங்காவில் அனைத்திந்தியத் இந்தியத் தலைவர்கள் கலந்துக்கொண்ட கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. தற்போது, பனகல் பூங்காவில் கூட்டம் நடத்தவும் தடை விதிக்கப்பட்டு விட்டது.

உண்ணாநிலை அறப் போராட்டங்களுக்கு சென்னை சேப்பாக்கம் அரசினர் விருந்தினர் இல்லம் முன்பும், வள்ளுவர் கோட்டத்தின் அருகிலும் அனுமதி அளிக்கப்படுகிறது. ஆர்ப்பாட்டங்களுக்கு, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சென்னை அரசு பொது மருத்துவமனை அருகே, மெமோரியல் அரங்கம் முன்பாகவும் அனுமதி அளிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல ஊர்களிலும், காலங்காலமாகப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றுவந்த, புகழ்பெற்ற பொதுக்கூட்ட மையங்களில் தற்போது பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு, காவல் துறை அனுமதிப்பதில்லை. ஊருக்கு வெளியே, கூட்டம் சேர முடியாத இடங்களில், கூட்டங்களை நடத்துங்கள் என்கிறார்கள்.

கோவையில் பிரமாண்டமான பொதுக்கூட்டம் என்றால், அது சிதம்பரம் பூங்காவில்தான் நடைபெற வேண்டும். தேர்நிலைத் திடல், சிவானந்தா காலனி 100அடி ரோடு ஆகிய இடங்களிலும் நடைபெறுகின்றன. பொள்ளாச்சியில் சந்தைத் திடல்,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெரியநாயக்கன்பாளையம் பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

திருச்சியில் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்ற இடங்கள், வெல்லமண்டி, உழவர் சந்தை, உறையூர், ஜங்ஷன் காதி கிராஃப்ட், புத்தூர் நால் ரோடு, சிந்தாமணி அண்ணா சிலை, உறையூர் குறத்தெரு, ஸ்ரீரங்கம் சாத்தார வீதி, ராஜகோபுரம் முன்புறம், அரியமங்கலம் உக்கடம், சுப்பிரமணிய புரம், எடத்தெரு அண்ணா சிலை, வரகனேரி முஸ்லிம் தெரு, பாலக்கரை, தாராநல்லூர் முருகன் தியேட்டர் ஆகிய இடங்கள்.

மதுரையில், தமுக்கம் திடல், வண்டியூர் தெப்பக்குளம், வடக்குமாசி வீதி மேலமாசி வீதி சந்திப்பு, ஜான்சிராணி பூங்கா, ஆரப்பாளையம் குறுக்குச் சாலை, செல்லூர் 60அடி சாலை ஆகிய இடங்களில் பெரிய கூட்டங்கள் நடைபெறுகின்றன. நெருக்கடிநிலைக் காலத்தில், பிரதமர் இந்திரா காந்தி வந்தபோது, ரேஸ்கோர்ஸ் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

நெல்லையில் பொருட்காட்சித் திடலில்தான் மாநாடுகள், மாபெரும் கூட்டங்கள் நடைபெற்றன. வாகையடி முக்கு, ரத வீதிகள், பாளையங்கோட்டையில் மார்க்கெட் பகுதியில், ஜவகர் மைதானம், பேட்டை காயிதேமில்லத் திடல் ஆகிய இடங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன.

புதுக்கோட்டை - தடிகொண்ட அய்யனார் திடல்.

கடலூர் - மஞ்சக்குப்பம் திடல்.

காஞ்சிபுரம் - தேரடித் திடல்.

உடுமலைப்பேட்டை - குட்டைத் திடல்.

ராமநாதபுரம் - அரண்மனை.

சிவகங்கை - அரண்மனைத் திடல், மருதுபாண்டியர் திடல்.

வேலூர் - கோட்டைவெளி மைதானம்.

பழநி - தேரடித் திடல்.

நாகர்கோவில் - நாகராஜா திடல்.

பாண்டிச்சேரி - அண்ணா விளையாட்டுத் திடல்.

தஞ்சாவூர் - திலகர் திடல், ஆபிரகாம் பண்டிதர் சாலை,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பெத்தண்ணன் கலையரங்கம்.

திருவாரூர் - ரத வீதி (கமலாலயம் குளக்கரை அருகில்).

சேலம் - போஸ் திடல், ஐந்து ரோடு சந்திப்பு.

திண்டுக்கல் - நாகமலை தண்ணீர் தொட்டி அருகில்.

சிவகாசி - கனரா வங்கி அருகில், சிவன்கோயில் திடல்.

ராஜபாளையம் - ஜவகர் மைதானம்.

தூத்துக்குடி - சார்லஸ் தியேட்டர் அருகில் மற்றும் குரூஸ் பொர்ணாந்து சிலை அருகில், அண்ணா நகர் மெயின், பாலவிநாயகர் கோயில் தெரு.

கோவில்பட்டி - செண்பகவல்லி அம்மன் கோயில், காந்தி மைதானம், கிருஷ்ணன் கோயில் தெரு.

சங்கரன்கோவில் - சுவாமி சந்நிதி, முப்பிடாதி அம்மன் கோயில் திடல் மற்றும் வடக்கு ரத வீதி.

ஈரோடு - சிதம்பரம் பூங்கா, பன்னீர்செல்வம் பூங்கா, கிருஷ்ணா திரை அரங்கம் அருகில், சூரம்பட்டி வலசு, சம்பத் நகர் பிரிவு, பெரியார் நகர் பிரிவு, மரப்பாலம்.

கோபி - பெரியார் திடல்.

தாராபுரம் - நகராட்சித் திடல்.

பவானி - சந்தைத் திடல்.

கோவை - தடாகம் சித்தாபுதூர் சாலை, சத்தியமங்கலம் நால் ரோடு.

தாராபுரம் - அலங்காரத் தட்டுத் திடல்.

மாநாடு நடைபெறும் இடம்:

சிதம்பரம் பூங்கா விருதுநகர் - தேசபந்து மைதானம்.

அம்பாசமுத்திரம் - கிருஷ்ணன்கோயில் திடல்,

திருமங்கலம் - தேவர் திடல்.

ஓசூர் - ராம் நகர்.

தர்மபுரி - பார்க் மைதானம்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

திருப்பத்தூர் - அரண்மனை மைதானம்.

கூடலூர் - ராஜாங்கம் சிலை அருகில்.

தேனி, மார்கெட் மைதானம்

நாகப்பட்டினம் - அண்ணா திடல், அவுரித் திடல்.

தென்காசி - காந்தி சிலை மைதானம், கொடிமரத் திடல்.

செங்கோட்டை - வண்டிமறித்த அம்மன்கோயில் திடல்.

கடையநல்லூர் - பள்ளிவாசல் மைதானம்.

புளியங்குடி - பேருந்து நிலையம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் - வடக்கு ரத வீதி.

குடியாத்தம் - தென்குளக்கரை.

ஆம்பூர் - பஜார் வீதி.

வாணியம்பாடி - ஜெண்டா மேடு.

திருப்பத்தூர் - பேருந்து நிலையம்.

ஜோலார்பேட்டை - ரயில் நிலையம்.

பள்ளிகொண்டா - பேருந்து நிலையம்.

கரூர் - ராஜலிங்கம் மைதானம்.

திருச்செந்தூர் - தேரடித் திடல்

ஆகிய இடங்கள், பொதுக்கூட்ட மையங்களாகத் திகழ்கின்றன. எல்லா ஊர்களிலும், ரத வீதிகளில் கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கட்சியினரும், கூட்டம் நடைபெறுகின்ற இடத்துக்குத் தங்கள் விருப்பம்போல பெயர் வைத்துக்கொள்வார்கள். எடுத்துக்காட்டாக, தேவாரத்தில் காங்கிரஸ் கூட்டம் என்றால் ‘மோதிலால் நேரு திடல்’, திராவிடக் கட்சிகள் என்றால் அதே இடத்துக்கு ‘வ.உ.சி. திடல்’ என்று பெயர் வைத்துக்கொள்வார்கள்.

களையிழந்த பொதுக்கூட்டங்கள்

கடந்த சில ஆண்டுகளாக, இரவு பத்து மணிக்குமேல் தேர்தல் கூட்டங்களை நடத்துவதற்கு, தேர்தல் ஆணையம் தடை விதித்துவிட்டது. அதனால், தேர்தல் களம் களையிழந்துவிட்டது

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

என்றே சொல்லலாம். மேலும், அலைபேசிகள், இணையதளங்களின் வருகையால், இப்போது பிரசாரக் களமே மாறிவிட்டது. கட்சிப் பேச்சாளர்களின் பேச்சைக் கேட்பதற்கு வருகின்ற மக்கள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

எஸ்.எஸ்.ராஜேந்திரன்

டி.வி.நாராயணசாமி

அரசியல் கட்சிகளின் முன்னணித் தலைவர்களைத் தவிர, நூற்றுக்கணக்கான சொற்பொழிவாளர்கள், தங்களது கருத்துரைகளால், கன்னித்தமிழ்ப் பேச்சால், அடுக்குமொழி வீச்சால், தமிழக அரசியல் மேடைகளைக் கலக்கி வந்தனர்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், வில்லுப்பாட்டு மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பி வந்தார். பட்டுக்கோட்டை அழகிரிசாமி, திராவிட இயக்க மேடைகளில் சங்கநாதம் செய்து வந்தார். திராவிடர் கழகத்தின் தலைவரான கி.வீரமணி, எட்டு வயதுச் சிறுவனாக தந்தை பெரியாரின் முன்னிலையில் மேடையேறி, இன்றளவும் தமிழகத்தின் தலைசிறந்த சொற்பொழிவாளர்களுள் ஒருவராகத் திகழ்கிறார். அடுக்கடுக்கான வாதங்களுடன், தொடர்ச்சியாகப் பல மணிநேரம்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உரையாற்றுகிறார். அதுபோலவே, திருவாரூர் தங்கராசு ஆற்றல்மிக்க சொற்பொழிவாளர். பகுத்தறிவுக் கருத்துகளை ஆணித்தரமாக வலியுறுத்துவார். நடிகர் எம்.ஆர்.ராதாவும் பெரியாரின் கருத்துகளைப் பரப்பி வந்தார்.

கவிஞர் சுப்பு ஆறுமுகம், காங்கிரஸ் மேடைகளில், காந்தி மகான் கதையை, வில்லிசையாகப் பாடினார். இசை முரசு நாகூர் ஹனீபாவின் பாடல்கள், தேர்தல் களங்களில் மூலைமுடுக்கெல்லாம் ஒலித்தன.

தி.மு.க. பிரசாரத்துக்கு வலுச் சேர்த்தன. தி.மு.க. மாநாடுகள் அனைத்தும், நாகூர் ஹனீபாவின் இசை நிகழ்ச்சியோடுதான் துவங்கும். அவரைப்போலவே, தி.மு.கழகத்தில் பல இசைக்குழுக்கள், மேடைப் பாடல்களைப் பாடி வந்தனர்.

தி.மு.கழகத்தின் முன்னணித் தலைவர்கள் பலரும் சிறந்த சொற்பொழிவாளர்களே. இருப்பினும், மேடைப் பேச்சை மட்டுமே முதன்மையான பணியாகக்கொண்டு, தமிழகம் முழுவதும் சுற்றி வந்தவர்கள் வரிசையில், முரசொலி அடியார், ஏ.கே.வில்வம், கவிஞர் நா.காமராசன், தத்துவக் கவிஞர் குடியரசு, வலம்புரிஜான், காளிமுத்து, விடுதலை விரும்பி, ஆலடி அருணா, புலவர் ஆடலரசு, புலவர் பொன்னிவளவன், இரா. வெற்றிகொண்டான், தீப்பொறி ஆறுமுகம், கடையநல்லூர் ஆ.திராவிடமணி, புளியங்குடி பழனிச்சாமி, கோவை ராமநாதன், கோவை தமீம், ஈரோடு இறைவன், கோவை மணியன், திருச்சி செல்வேந்திரன், நெல்லை நெடுமாறன், நாஞ்சில் சம்பத், தஞ்சை கூத்தரசன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

க.சுப்பு, ரகுமான்கான், துரைமுருகன் ஆகிய மூவரும், ‘இடி, மின்னல், மழை’ என்று அழைக்கப்பட்டனர். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது, வினாக்கணைகளைத் தொடுப்பதில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர்.

‘லட்சிய நடிகர்’ எஸ்.எஸ்.ராஜேந்திரன், ‘நடிகமணி’ டி.வி.நாராயணசாமி, ஆனந்தன் உள்ளிட்ட ஏராளமான திரைப்பட நடிகர்களும் நடிகைகளும், தி.மு.க. மேடைகளில் முழங்கி வந்தனர்.

தி.மு.க. மகளிர் அணியில், இளமுருகு பொற்செல்வி, எஸ்.பி.சற்குணம் (சற்குண பாண்டியன்), வண்ணை தேவகி, புலவர் பூங்கோதை, சக்தி கோதண்டம், புலவர் கண்மணி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தமிழரசன், புதுக்கோட்டை தமிழரசி, நூர்ஜகான் பேகம், சங்கரி நாராயணன், விஜயா முத்துவண்ணன், புதுக்கோட்டை விஜயா, ஆகியோர் தமிழகம் முழுவதும் சுற்றி வந்தனர். வண்ணை ஸ்டெல்லா, ஆங்கிலோ இந்தியப் பெண்மணி. கவுன் அணிந்துதான் மேடைகளில் ஏறி உரையாற்றினார். இவரது பேச்சுக்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

பொது உடைமை இயக்க மேடைகளில் அறந்தை நாராயணன், மதுரை நன்மாறன், சிவகிரி பாண்டியன், கே.டி.ராஜு ஆகியார் முழங்கி வந்தனர்.

புலவர் கீரன், தமிழரசுக் கழகச் சொற்பொழி வாளராகத் திகழ்ந் தார்.

ஜெயகாந்தன், தமிழருவி மணியன், நெல்லை கண்ணன் ஆகியோரின் தமிழ் உரை வீச்சு, இந்திய தேசிய காங்கிரஸ் மேடைகளை அலங்கரித்தது. தியாகி நெல்லை ஜெபமணி, சிறந்த நகைச்சுவைப் பேச்சாளர்.

வலம்புரிஜான்

இல. கணேசன், எம்.ஆர்.காந்தி ஆகியோர், பாரதிய ஜனதா கட்சியின் சொற்பொழிவாளர்கள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

புதுச்சேரி

நிலப்பரப்பில் புதுச்சேரி 793 ச.கி.மீ., காரைக்கால் 160 ச.கி.மீ., மாஹே 9 ச.கி.மீ., ஏனம் 30 ச.கி.மீ. புதுச்சேரி மாநிலத்தின் நிலப்பரப்பு சேர்ந்தாற்போன்று அமையவில்லை.

தமிழ்நாட்டின் கடலூர் மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் புதுச்சேரி பகுதிகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தை ஒட்டினாற்போல் காரைக்கால் பகுதியும், கேரள மாநிலத்தின் கண்ணனூர் அருகே மாஹே, பள்ளூர் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளும், ஆந்திர மாநிலத்தின் காக்கிநாடாவுக்கு அருகில் ஏனம் என்ற சட்டமன்றத் தொகுதியும் புதுச்சேரி மாநிலத்துக்குள் இடம் பெறுகின்றன.

கடந்த காலங்களில், பாண்டிச்சேரி, புதுகை, பொந்திஷே (ஃபிரெஞ்சு) என்று பலவகையாக அழைக்கப்பட்டு வந்தாலும், ‘புதுச்சேரி’ (Puducherry) என்ற பெயரைத்தான் இப்போது அரசு ஏற்றுக்கொண்டு இருக்கிறது.

2011-ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி, இந்த மாநிலத்தின் மக்கள்தொகை 9,73,829. 30 சட்டமன்றத் தொகுதிகளும், 1 நாடாளுமன்ற மக்களவைத் தொகுதியும், 1 மாநிலங்களவை இடமும் உள்ளன. 2006 சட்டமன்றத் தேர்தலில், வாக்களிக்கும் தகுதி பெற்றவர்கள் 6,49,168.

வரலாற்றுச் சுருக்கம்

ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சியால், அந்த நாடுகளில் பொருட்களின் உற்பத்தி பெருகியது. அவற்றை விற்பதற்கான புதிய சந்தையைக் கண்டறிய, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல், நெதர்லாந்து, டென்மார்க், இத்தாலி மற்றும் கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள சில

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஐரோப்பிய நாடுகளின் வணிகர்கள், கடல் பயணங்களை மேற்கொண்டனர்.

புதுச்சேரி நில வரைபடம்

அவர்களுள், இங்கிலாந்து, ஃபிரான்ஸ், போர்ச்சுகல் நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றி வந்து, இந்தியாவில் கால் பதித்தனர். வணிகம் செய்வதற்காக வந்த அவர்கள், இந்தியாவில் வலிமையான அரசு எதுவும் இல்லாமல், பல்வேறு குறுநில மன்னர்கள் ஆண்டுக்கொண்டு இருந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி, இந்தியாவைத் தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற போட்டியில், ஃபிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்து இங்கிலாந்து நாட்டவர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

வெற்றி பெற்று, இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

ஃபிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனம், சந்திரநாகூர் ஆகிய கடற்கரை ஓரப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன், மேலும் முன்னேற முடியாமல் நின்றுவிட்டனர். போர்ச்சுகீசியர்கள் கோவா பகுதியைக் கைப்பற்றிக்கொண்டனர்.

இங்கிலாந்து ஆதிக்கத்தின்கீழ் இருந்த இந்தியப் பகுதிகளில் அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்பட்டவர்கள், ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த புதுச்சேரி பகுதிக்குள் சென்றுவிட்டால் அவர்களைக் கைது செய்ய முடியாது. எனவே, அரவிந்தர், பாரதியார் போன்று ஆங்கிலேய அரசாங்கத்தை எதிர்த்தவர்கள், புதுச்சேரி ஆட்சிப்பகுதிக்குள்ளே சென்று, அங்கேயிருந்து இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்கள்.

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் நாள், இந்தியாவுக்கு விடுதலை அளித்துவிட்டு, இங்கிலாந்து நாட்டவர் வெளியேறினர். ஆனால், ஃபிரெஞ்சு காலனிப் பகுதிகள் விடுதலை பெறவில்லை. ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த சந்திரநாகூர் பகுதி, 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் நாள் விடுதலை பெற்று, மேற்கு வங்க மாநிலத்துடன் இணைந்தது.

புதுச்சேரி உள்ளிட்ட மற்ற நான்கு பகுதிகளும், ஃபிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் நீடித்து வந்தன. புதுச்சேரியை இந்தியாவோடு இணைக்க வேண்டும் என்ற வேட்கை இந்த மக்களிடம் எழுந்தது. எட்வர்டு குபேர், வ.சுப்பையா ஆகிய தலைவர்கள், புதுவையை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மக்கள் இயக்கம் நடத்தினர்.

1948-ம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற குபேர் தலைமையிலான சோஷலிசக் கட்சி, புதுவைக்குத் தன்னாட்சி வழங்கக் கோரி, ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸுக்குச் சென்று வலியுறுத்தினர். 08.06.1948 அன்று ஏற்பட்ட ஃபிரெஞ்சு - இந்திய ஒப்பந்தப்படி, ஃபிரெஞ்சு இந்தியாவின் எதிர்கால நிலையைக் கருத்துக் கணிப்பு நடத்தி முடிவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது. எனவே, ஃபிரெஞ்சு அரசாங்கமும், இந்திய அரசும் சேர்ந்து கருத்தறிதல் வாக்குப்பதிவினை நடத்தின.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்தியாவுடன் இணைந்தது

1954-ம் ஆண்டு அக்டோபர் 17-ம் நாள் கருத்தறிதல் வாக்குப்பதிவு நடைபெற்றது. அவ்வாறு இந்தியாவுடன் இணைவதற்கான இணைப்பு ஒப்பந்தம் குறித்த வாக்குப்பதிவு, 1954-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி, அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன் முன்னிலையில், கீழூர் என்ற இடத்தில் நடைபெற்றது.

1950-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் நாள் நடைபெற்ற புதுச்சேரி நகரமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற 192 உறுப்பினர்களுள் 14 பேர் இறந்துவிட்டனர். மீதம் இருந்த 178 உறுப்பினர்களுள், 7 பேர் ஃபிரெஞ்சு நாட்டின் குடியுரிமை பெற்றவர்கள். அவர்கள் வாக்களிக்க முடியாது. மற்ற 171 பேரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அவர்களுள் ஒருவரைத் தவிர, மற்ற அனைவரும் இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று வாக்களித்தனர்.

வாக்குப்பதிவு முடிந்ததும், இந்தியப் பிரதிநிதி கேவல்சிங்கும், ஃபிரெஞ்சுப் பிரதிநிதி பியேர்லாந்தியும் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அன்று முதல் புதுச்சேரி இந்தியாவுடன் இணைந்ததாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. கேவல்சிங், புதுச்சேரியின் தலைமை ஆணையராக நியமிக்கப்பட்டார்.

புதுச்சேரி, அதிகாரபூர்வ சட்டமுறைகளுடன், இந்தியக் குடியரசுடன் இணைப்பதற்கான மாற்றுதல் ஒப்பந்தம் (Dejure), 28.05.1956-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம், 1962 ஜூலை முதல் நடைமுறைக்கு வந்தது. 1962 டிசம்பர் 28-ல் புதுச்சேரி, காரைக்கால், மாஹே, ஏனம் பகுதிகள் ஒருங்கிணைக்கப்பட்டது; டெல்லி நடுவண் அரசின் நேரடி ஆட்சிப் பகுதியாகத் தனித்து இயங்கத் தொடங்கியது. ‘துணைநிலை ஆளுநர்’ (Lt.Governor) நடுவண் அரசின் பிரதிநிதியாகச் செயல்படுகிறார்.

காரைக்கால் பகுதியைச் சேர்ந்த பக்கிரிசாமி, இந்த மாநிலத்தின் முதலாவது நிர்வாகத் தலைவராகப் பொறுப்பேற்றார். ஆனால், உடல்நலக்குறைவால் ஆறு மாதங்களில் இயற்கை எய்தினார்.

அவருக்குப் பின்னர், எட்வர்டு குபேர் பொறுப்பேற்றார். அவர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

நீண்டகாலம் ஆட்சிப் பொறுப்பு வகித்தார்.

முதலாவது தேர்தல்

இந்தியாவுடன் இணைந்த பின்பு, புதுவை பிரதிநிதி சபையின் முதலாவது தேர்தல், 1955-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. கம்யூனிஸ்டுகள் 'மக்கள் முன்னணி' என்ற அமைப்பின்கீழ் தேர்தலைச் சந்தித்தனர். வ.சுப்பையா, பாரதிதாசன், பி.சண்முகம் ஆகியோர் அந்தக் கூட்டணியின் முக்கியத் தலைவர்களாகத் திகழ்ந்தனர். கம்யூனிஸ்ட் கட்சி முதன்மை எதிர்க்கட்சியானது.

1955 ஆகஸ்ட் 15-ம் நாள் புதுவை நகரசபையில், பாரதிதாசன் தலைமையில் 6 அமைச்சர்கள் பதவியேற்றனர். நெடுங்காடு தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சண்முகம், காங்கிரஸுக்குத் தாவி, இந்த மாநிலத்தில் கட்சி மாறுதலைத் தொடங்கி வைத்தார். அதற்குப் பின்னர், புதுவை அரசியலில் உட்கட்சி மோதல்களும், கட்சித்தாவல்களும் பெருமளவில் நடைபெற்றன.

சட்டமன்றம்

புதுவை பிரதிநிதித்துவ சபை, 1962-ல் சட்டமன்றமாக மாற்றப்பட்டது. 1964-ம் ஆண்டு முதலாவது சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் கட்சி 21 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான மக்கள் முன்னணி 4, சுயேச்சைகள் 5 இடங்களிலும் வெற்றி பெற்றனர்.

எட்வர்டு குபேர் மீண்டும் முதலமைச்சர் ஆனார். ஓராண்டுக்குள் பதவி விலகினார். 1964-ம் ஆண்டு வெங்கடசுப்பா ரெட்டி முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். 1967-ம் ஆண்டுவரை அவர் பொறுப்பு வகித்தார். உட்கட்சி மோதல்களால் 1967-ல் அவரது ஆட்சி கவிழ்ந்தது.

முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை பொறுப்பேற்றது. ஃபரூக் மரைக்காயர் முதலமைச்சரானார். ஆனால் அந்த அரசு ஒன்பது மாதங்களே பதவியில் நீடிக்க முடிந்தது.

1968-ம் ஆண்டு மார்ச் மாதம் வெங்கடசுப்பா ரெட்டியார் மீண்டும் முதலமைச்சரானார். ஆனால், அந்த அரசும் ஆறு

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மாதங்கள்கூட நீடிக்கவில்லை. செப்டம்பர் மாதம் அவர் பதவி விலகினார். அதற்குப் பின்னர் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றது.

1969-ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது சட்டமன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகம் 15 இடங்களிலும், அதன் கூட்டணிக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூன்று இடங்களிலும் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது.

காங்கிரஸ் 10 இடங்களிலும், சுயேச்சைகள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றனர். ஃபரூக் மரைக்காயர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றார். அவரது அரசு, 1974-ம் ஆண்டு வரை முழுமையாக ஐந்தாண்டுகள் பதவிக்காலத்தை நிறைவு செய்தது.

அண்ணா தி.மு.க. அரசு

1974-ம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது சட்டமன்றத் தேர்தலில் யாரும் எதிர்பாராத வகையில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைப் பிடித்தது. அந்தக் கட்சி 12 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2, மார்க்சிஸ்ட் 1 இடங்களிலும் வெற்றி பெற்றனர். ஸ்தாபன காங்கிரஸ் 6, இந்திய தேசிய காங்கிரஸ் 6 இடங்களிலும், சுயேச்சை 1 இடத்திலும் வெற்றி பெற்றனர்.

அ.தி.மு.க.வைச் சேர்ந்த டி.ராமசாமி முதலமைச்சரானார். டி.ராமச்சந்திரன் துணை முதலமைச்சராக இருந்தார். சட்டமன்றம் கூடியபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஃபரூக் மரைக்காயர், பட்ஜெட் உரையை வாசித்தார். எனவே, அரசின் ரகசியத்தைக் காப்பாற்ற முடியாததால் குழப்பம் ஏற்பட்டு அரசு கவிழ்ந்தது. இந்த அரசு 22 நாட்களே பதவியில் நீடித்தது. அதற்குப்பின்னர் நீண்டகாலம் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்றது.

நெருக்கடி நிலைக்குப் பின்னர், 1977-ம் ஆண்டு நான்காவது சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 14 இடங்களில் வெற்றி பெற்றது. நெருக்கடி நிலை காரணமாக வலுவிழந்த காங்கிரஸ் கட்சி, ஓர் இடத்தில் மட்டுமே வெற்றி பெற்றது. ஜனதா கட்சி ஏழு தொகுதிகளில் வெற்றி பெற்று முதன்மை எதிர்க்கட்சியாக உருவானது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இந்திய கம்யூனிஸ்ட் 1, தி.மு.க. 3, சுயேச்சைகள் 3 இடங்களில் வெற்றி பெற்றனர். ராமசாமி மீண்டும் முதலமைச்சரானார். ஆனால், அந்த அரசும் முழுமையாக ஓராண்டுகூட நீடிக்கவில்லை. 1978-ம் ஆண்டே கவிழ்ந்து விட்டது. மீண்டும் இந்த மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் வந்தது.

மொரார்ஜி கருத்து

1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய், ‘‘புதுச்சேரி மாநிலத்தின் பகுதிகள் தனித்தனியாக அமைந்திருப்பதைக் காட்டிலும், சந்திரநாகூர் மேற்குவங்க மாநிலத்தின் ஒரு பகுதியாக இணைந்ததைப்போல, நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும் வகையில் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளைத் தமிழகத்துடனும், மாஹே பகுதியை கேரள மாநிலத்தோடும், ஏனம் பகுதியை ஆந்திர மாநிலத்தோடும் இணைத்து விடலாம்’’ என்று தெரிவித்த கருத்து, இந்த மாநிலத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

டெல்லி நடுவண் அரசின் நேரடி ஆட்சிப்பகுதியாக நீடிப்பதால் கிடைக்கக்கூடிய பல சலுகைகளைக் கருத்தில்கொண்டு, இந்த மாநில மக்கள் தனி ஆட்சிப் பகுதியாகவே இயங்க விரும்பினார்கள்.

புதுவை மாநிலத்தில் மேற்கொள்ளப் படுகின்ற மக்கள்நலத் திட்டங்களுக்கு, நடுவண் அரசு பெருமளவில் மானியம் வழங்கி வருகிறது. எடுத்துக்காட்டாக, இந்த மாநிலத்தில் ஒருவர் சொந்தமாக வீடு கட்டத் தொடங்கினால், மத்திய அரசின் உதவியுடன், மாநில அரசு ரூ.50,000 மானிய உதவித் தொகையாக வழங்குகிறது.

புதுவை தனியாக நீடிக்க வேண்டுமென்றும், மொரார்ஜியின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் போராட்டம் வலுப்பெற்றது. அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இடம்பெற்ற ‘இணைப்பு எதிர்ப்பு போராட்டக் குழு’ நடத்திய எதிர்ப்புப் போராட்டங்களில், மாநில மக்கள் ஒட்டுமொத்தமாகக் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். எனவே, மொரார்ஜி தேசாயின் கருத்து செயல் வடிவம் பெறவில்லை. அதுவரையிலும் இந்த மாநிலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த ஜனதா கட்சி, மொரார்ஜியின் கருத்துக்குப் பின்னர் 1980-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வலுவிழந்தது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

தி.மு.க. ஆட்சி

1980-ம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாவது சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. 14 இடங்களில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணியான இந்திய தேசிய காங்கிரஸ் (இந்திரா பிரிவு) 10 இடங்களில் வெற்றி பெற்றது. ஜனதா 3, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) 1, சுயேச்சைகள் 2 இடங்களில் வெற்றி பெற்றனர். தி.மு.கழகத்தைச் சேர்ந்த டி.ராமச்சந்திரன் முதலமைச்சரானார். 1983-ம் ஆண்டு அவரது அரசு கவிழ்ந்தது. மீண்டும் குடியரசுத் தலைவர் ஆட்சி.

1985-ம் ஆண்டு நடைபெற்ற ஆறாவது சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இந்திய தேசிய காங்கிரஸ் 15, அ.தி.மு.க. 6, தி.மு.க. 5, ஜே.என்.பி. 2, சுயேச்சைகள் 2 இடங்களில் வெற்றி பெற்றனர். முன்னர் தி.மு.க. முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த ஃபரூக் மரைக்காயர், இப்போது காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அந்த அரசு முழுமையாக ஐந்தாண்டுகள் பொறுப்பு வகித்தது.

1990-ம் ஆண்டு நடைபெற்ற ஏழாவது சட்டமன்றத் தேர்தலிலும் காங்கிரஸ், அ.தி.மு.க. கூட்டணியே வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இந்திய தேசிய காங்கிரஸ் 11, அ.தி.மு.க. 3, தி.மு.க. 9, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 2, ஜனதா தளம் 3, சுயேச்சை 1 வெற்றி பெற்றனர்.

தி.மு.க. - ஜனதா தளம் கூட்டணி அமைச்சரவை பொறுப்பேற்றது. தி.மு.கழகத்தைச் சேர்ந்த டி.ராமச்சந்திரன் முதலமைச்சரானார். இந்த அரசு ஒன்பது மாதங்களில் கவிழ்ந்தது. எனவே, 1991-ம் ஆண்டு எட்டாவது சட்டமன்றத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் 15, அ.தி.மு.க. 6, தி.மு.க. 4, ஜனதா தளம் 1, சி.பி.ஐ. 1, சுயேச்சை 3 இடங்களில் வெற்றி பெற்றனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வி.வைத்தியலிங்கம் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். முன்னாள் முதலமைச்சரான வெங்கடசுப்பா ரெட்டியின் மகன்தான் வைத்தியலிங்கம். இந்த ஆட்சி ஐந்தாண்டுகள் முழுமையாகப் பொறுப்பு வகித்தது.

1996-ம் ஆண்டு நடைபெற்ற ஒன்பதாவது சட்டமன்றத் தேர்தலில், தி.மு.க. - தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. தி.மு.க. 7, த.மா.கா. 5, அ.தி.மு.க. 3,

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சி.பி.ஐ. 2, சுயேச்சை 2, பா.ம.க. 1, ஜனதா தளம் 1 இடங்களில் வெற்றி பெற்றனர். தி.மு.க.வைச் சேர்ந்த ஆர்.வி.ஜானகிராமன் முதலமைச்சரானார். 2000-ம் ஆண்டு வரை அந்த ஆட்சி நீடித்தது.

பின்னர், அந்தக் கூட்டணிக்குள் விரிசல் ஏற்பட்டது. ஜானகிராமன் பொறுப்பு விலகினார். சட்டமன்றத்தில் 9 இடங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியோடு, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி கூட்டணி சேர்ந்தது. புதிய கூட்டணி அமைச்சரவை பொறுப்பேற்றது. காங்கிரஸைச் சேர்ந்த பி.சண்முகம் முதலமைச்சரானார்.

2001-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பத்தாவது சட்டமன்றத் தேர்தலில், காங்கிரஸ் - அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றது. காங்கிரஸ் 11, அ.தி.மு.க. 4, புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் 3, தி.மு.க. 7, த.மா.கா. 2, பாரதிய ஜனதா 1, சுயேச்சைகள் 2 இடங்களில் வெற்றி பெற்றனர். பி.சண்முகம் மீண்டும் முதலமைச்சரானார். ஆனால், அவர் ஆறு மாதங்களே பொறுப்பு வகித்தார். அக்டோபர் மாதம் பதவி விலகினார். 2001 அக்டோபர் முதல் பி.ரெங்கசாமி முதல் அமைச்சராகப் பொறுப்பு வகித்தார்.

2006 தேர்தலில், காங்கிரஸ் 10, தி.மு.க. 7, அ.தி.மு.க. 3, புதுச்சேரி மக்கள் காங்கிரஸ் (கண்ணன் தலைமை) 3, பாட்டாளி மக்கள் கட்சி 2, சிபிஐ 1, ம.தி.மு.க. 1 இடங்களில் வெற்றி பெற்றனர். ரங்கசாமி மீண்டும் முதல்வரானார். உட்கட்சி மோதல்களால் அவர் பதவியிலிருந்து இறக்கப்பட்டு, மீண்டும் வைத்தியலிங்கம் முதல்வரானார்.

என்.ஆர். காங்கிரஸ் ஆட்சி

2011-ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு, ரங்கசாமி, ‘என்.ஆர். காங்கிரஸ்’ என்ற புதிய கட்சியைத் தொடங்கினார். அ.தி.மு.க-வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார். 15 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தார்.

நாடாளுமன்றத் தேர்தல்கள்

1963 - கு.சிவப்பிரகாசம் (காங்கிரஸ்)

1967 - என்.சேதுராமன் (காங்கிரஸ்)

1971 - எஸ்.மோகன் குமாரமங்கலம் (காங்கிரஸ்)

1974 - (இடைத்தேர்தல்) அரவிந்த பாலாபழனூர் (அ.தி.மு.க.)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

1977 - அரவிந்த பாலாபழனூர் (அ.தி.மு.க.)

1980, 1984, 1989 - பி.சண்முகம் (காங்கிரஸ்)

1991, 1996 - எம்.ஓ.எச்.பரூக் மரைக்காயர் (காங்கிரஸ்)

1998 - எஸ்.ஆறுமுகம் (தி.மு.க.)

1999 - எம்.ஓ.ஹெச்.பரூக் மரைக்காயர் (காங்கிரஸ்)

2004 - எம்.ராமதாஸ் (பாட்டாளி மக்கள் கட்சி)

2009 - வி.நாராயணசாமி (காங்கிரஸ்)

ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சட்டப்பேரவைத் தலைவர்கள்

பரூக் மரைக்காயர், பி.சண்முகம், மாணிக்கவாசகம், எஸ்.பெருமாள், எஸ்.பாக்கியம் (அ.தி.மு.க.), கே.காந்தி (சுயேச்சை), பரூக் மரைக்காயர் (காங்கிரஸ்), எம்.சந்திரகாசு (காங்கிரஸ்), பரசுராம வரபிரசாத ராவ் (காங்கிரஸ்), ஜி.பழனிராஜா (தி.மு.க.), பி.கண்ணன் (காங்கிரஸ்), வி.எம்.சி.சிவகுமார் (தி.மு.க.), ஏ.வி.சுப்பிரமணியன் (காங்கிரஸ்) ஆகியோர் சட்டப்பேரவைத் தலைவர்களாகப் பொறுப்பு வகித்திருக்கின்றனர்.

புதுவை-ஃபிரான்ஸ் தொடர்புகள்

புதுச்சேரியில் வசிக்கின்ற சுமார் 6,000 பேர், ஃபிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் தேர்லில் வாக்களிக்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள். ஃபிரான்ஸ் நாட்டு அரசுப் பணிகளில் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.

ஆங்கிலோ இந்தியர்கள் என்ற சமூகம் இருப்பதுபோல், புதுச்சேரி ஃபிரெஞ்சு கலப்புத் திருமணங்களும் பெருமளவில் நடைபெற்றிருக்கின்றன. இந்தச் சமூக மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, ஃபிரெஞ்சு அரசின் பிரதிநிதி ஒருவர் புதுவையில் பணியாற்றி வருகிறார். ஏராளமானவர்கள் ஃபிரான்ஸ் நாட்டு அரசின் உதவித் தொகை பெற்று வருகிறார்கள்.

புதுச்சேரியைச் சேர்ந்த சுமார் 10,000 பேர், ஃபிரெஞ்சு நாட்டின் குடியுரிமை பெற்று, ஃபிரான்ஸ் நாட்டிலேயே வாழ்கிறார்கள்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் தேர்வு பெற்றுப் பணியாற்றி இருக்கிறார்கள். தற்போதும் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார்.

ஃபிரான்ஸ் நாட்டில் வசிப்பவர்கள், அடிக்கடி புதுச்சேரிக்கு வந்து உறவினர்களைச் சந்தித்துவிட்டுச் செல்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளின் வருகையால், புதுவைக்கு அயல்நாட்டுச் செலாவணி வருமானம் கிடைக்கிறது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளின் தூதரகம் சென்னையில் அமைந்திருக்கிறது.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய தென்மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அமெரிக்கா செல்வதற்கான நுழைவு உரிமை (விசா) பெறுவதற்கு சென்னைக்குத்தான் வரவேண்டும். அதேபோல், அண்மைக்காலம் வரையிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் ஃபிரான்ஸ் நாடு செல்வதற்கான நுழைவு உரிமை பெறுவதற்கு புதுச்சேரியில் அமைந்துள்ள ஃபிரெஞ்சு தூதரக அலுவலகத்துக்குத்தான் செல்ல வேண்டும். தற்போது, சென்னையிலேயே அந்த வசதி உள்ளது.

ஆரோவில்

விடுதலைப் போராட்டக் காலத்தில் வங்காளத்திலிருந்து புதுச்சேரிக்கு வந்து குடியேறிய அரவிந்தர், ‘ஆரோவில்’ என்ற பன்னாட்டு நகரம் ஒன்றினை உருவாக்கினார். இந்த நகரில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வசிக்கிறார்கள்.

தமிழகத்தை ஒப்பிடுகையில், புதுவை மாநில மக்களின் பொருளாதாரம் சற்று மேம்பட்ட நிலையில் இருக்கிறது. கல்வி, குடிநீர், தரமான சாலை வசதிகள் போன்ற அடித்தட்டு மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. சிறிய அளவிலான இந்த மாநிலத்தில் ஒன்பது மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. பெருமளவில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

‘பி **2’** தகுதி

புதுவை மாநிலத்துக்கு ‘பி 2’ அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருக்கிறது. பி 2 தகுதி கிடைத்தால், அரசு ஊழியர்களுக்கு வீட்டுப்படி உள்ளிட்ட கூடுதல் சலுகைகள் கிடைக்கும். டெல்லி, கோவா மாநிலங்களில் இந்தச் சலுகை வழங்கப்படுகிறது. பி 2 தகுதியைப் பெற மக்கள்தொகை ஐந்து

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

லட்சம் இருக்க வேண்டும். எனவே, புதுவை மாநிலத்துக்கு பி 2 நிலை பெறுவதற்கான தகுதி இருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

உதவிய நூல்கள்

1. காங்கிரஸ் வினா-விடை **(1887)**: மு.வீரராகவாச்சாரியார் - நேஷனல் அச்சுக்கூடம், சென்னை.
2. காங்கிரஸ் சரித்திரம்: அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை.
3. திராவிடப் பெருந்தகை சர்.பிட்டி தியாகராயர்: கோ.குமாரசாமி (மயிலாடுதுறை). சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
4. தமிழர் தலைவர்: சாமி சிதம்பரனார்; பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு.
5. ராஜாஜி: நாரண. துரைக்கண்ணன் - அல்லயன்ஸ் வெளியீடு, சென்னை.
6. தமிழரசு தேர்தல் மலர்கள் (தமிழக அரசின் ஏடு)
7. தினமணி தேர்தல் மலர் - மே 2001
8. தமிழக முதல்வர்கள்: மணிமேகலைப் பிரசுரம், சென்னை.
9. டாக்டர் ராம் மனோகர் லோகியா வாழ்க்கை வரலாறு **(1967)**: மு. ரங்கநாதன் - சமுதாயம் பப்ளிகேஷன்ஸ், கோவை.
10. இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பெருமைமிகு வரலாறு: ஹர்கிஷன் சிங் சுர்ஜித்
11. சோஷலிசத்துக்கான இந்தியப் பாதை: தோழர் ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட்
12. தெலுங்கானா போராட்டம்: அருட்லா ராமச்சந்திர ரெட்டி - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
13. நீதிக் கட்சி வரலாறு: பண்டிதர் எஸ்.முத்துசாமி (விடுதலை முன்னாள் ஆசிரியர்).
14. இளைஞர்களே, உங்களுக்குத் தெரியுமா? - பெரியார் சுயமரியாதைப் பிரசார நிறுவன வெளியீடு.
15. தி.மு.க. வரலாறு: டி.எம். பார்த்தசாரதி

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

16. திராவிட இயக்க வரலாறு: முரசொலி மாறன்

17. நீதிக் கட்சி வரலாறு: க.திருநாவுக்கரசு

18. திராவிடர் இயக்கச் சாதனைகள்: க.திருநாவுக்கரசு

19. வினோபா பாவே **(1979)**: பெ.சு.மணி - பூங்கொடி பதிப்பகம், சென்னை.

20. காசி முதல் தாஷ்கண்ட் வரை: மு.நமசிவாயம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

21. இந்தியா டுடே, தி ஹிந்து, ஃபிரன்ட் லைன் இதழ்கள்.

22. தமிழர்கள் இளிச்சவாயர்களா? ஆமாம்!: சின்னக்கண்ணு (மு.தனராசு)

23. இந்திய கம்யூனிச இயக்கத்தின் வரலாறு: பி.டி.ரணதிவே, ஹர்கிஷன் சிங் சுர்ஜித்

24. இந்திய கம்யூனிச இயக்க வரலாறு: அருணன்.

25. நல்லகண்ணு பேட்டி - தோழர் நல்லகண்ணு 80-ம் ஆண்டு நிறைவு மலர்.

26. விக்கிபீடியா இணையதளம்.

27. தினத்தந்தி, தினமலர், தினமணி, தினகரன் உள்ளிட்ட நாளிதழ்கள்; துக்ளக், ஜூனியர் விகடன், குமுதம் ரிப்போர்ட்டர், தமிழக அரசியல் உள்ளிட்ட வார ஏடுகள்.

28. சி.சுப்பிரமணியம் வாழ்க்கை வரலாறு.

29. ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்: ஜெயகாந்தன்

30. நான் பார்த்த அரசியல் வனவாசம்: கண்ணதாசன்

31. நீதிக் கட்சி ஆட்சியின் சாதனைகள்: பூ.ராஜதுரை

32. நீதிக் கட்சி பாடுபட்டது யாருக்காக?

33. காமராஜ் ஒரு சகாப்தம்: ஏ.கோபண்ணா

34. கோட்டையின் கதை: ப. திருமாவேலன்

35. புதுவைக்குப் புகழ் சேர்த்த பெண்மணிகள்: கிளமென்ட் ஈஸ்வர்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

36. பெருமைக்குரிய பெண்டிர்: புலவர் தி.ராசகோபாலன்

37. தமிழ்நாடு சட்டமன்ற ஆவணங்கள்

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அருணகிரி

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலைச் சேர்ந்த அருணகிரி, பி.காம்., படித்துவிட்டு, பூடான் நாட்டில் டாடா நிறுவனத்தின் டாலமைட் சுரங்கத்தில் இரண்டு ஆண்டுகளும் (1984-86), டெல்லியில் வைகோ அவர்களுக்கு நாடாளுமன்றப் பணிகளில் உதவியாளராகவும் (1987-89), தொடர்ந்து அவருடனேயே 26 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்.

வைகோவின் சுற்றுப்பயணங்களில் இணைந்து, தமிழகம் முழுவதும், 10,000 கிராமங்களுக்கும் மேல் பயணித்து உள்ளார். கன்னியாகுமரியில் இருந்து மதுரை, கோவை வழியாக சென்னைக்கு 51 நாட்கள் எழுச்சி நடைபயணம்; பூம்புகார், கல்லணை காவிரி நடைபயணம்; மதுவிலக்கு பிரசாரம் உள்பட பல நடைபயணங்களில் 3,000 கிலோ மீட்டர்கள் நடந்து உள்ளார். ஏழு மாவட்டங்களில் சைக்கிள் பயணம் மேற்கொண்டு உள்ளார். பயண ஆவணங்களைத் திரட்டி வைத்து உள்ளார்.

வைகோ அவர்களின் உரைகள், மடல்கள், கட்டுரைகளைத் தொகுத்தும், தாமே எழுதிய புத்தகங்களையும் சேர்த்து, இதுவரையிலும் 105 நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு உள்ளார்.

15 நாடுகளுக்குச் சென்று வந்து, பயண நூல்களை எழுதி உள்ளார். தமிழில் உள்ள ஒரே பயண ஒளிப்படக் குறுவட்டு வெளியீட்டாளரும் இவரே. 54 நாடுகளில் பணியாற்றிய தமிழர்களை பேட்டி எடுத்து கட்டுரைகள் வெளியிட்டு உள்ளார்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

‘உலகம் சுற்றும் வாலிபன்’, ‘கட்சிகள் உருவான கதை’, ‘சதுரங்கம்’ (சதுரங்க விளையாட்டு விதிகள்), ‘அரசியல் பொதுவாழ்வில் வெற்றி பெற..’, ‘தமிழ்நாடா? ‘டமில் நடு’ வா?’, ‘உலக நாடுகளின் ஒன்றியம்’, ‘கிழக்கின் கதை’, ‘வாங்க பறக்கலாம்’ (விமானங்களைப் பற்றிய நூல்), ‘அந்தமானில் அருணகிரி’, ‘திறவுகோல்’, ‘ஆல்ப்ஸ் மலையில் அருணகிரி’, ‘உலக வலம்’, ‘ஈழத்தமிழ் எழுத்தாளர்கள்’ ஆகிய நூல்கள், இவரது படைப்புகள்!

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

Printed Books

வைகோ–வின் பார்வையில்...

உலகில் மிகத் தொன்மையாகத் தோன்றிய இனம், தமிழ் இனம். எனினும், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மொழியால், பண்பாட்டால் சிறந்த தமிழகத்தின் வரலாறு, முறையாக ஆவணப்படுத்தப்படவில்லை. கடல்கோளாலும் செல்லரிப்பாலும் அழிந்தவை போக, மீதம் இருக்கும் பழந்தமிழ் இலக்கியங்களும், கிடைத்து இருக்கும் செப்பு ஏடுகளும், கல்வெட்டுகளும்தாம், உன்னதமான தமிழர் சரிதத்தின் ஆவணங்களாக உள்ளன.

மனித குலத்தின் போக்கையும், நாடுகளின் இயக்கத்தையும் தீர்மானிக்கும் காரணியாக அரசியல் அமைந்து உள்ளது. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கி, 20-ம் நூற்றாண்டில் முழுக்கப் பயணித்து, இன்று வரையிலான தமிழகத்தின் அரசியல் தட்பவெட்ப நிலையை உணர வைக்கும் அரிய நூல் 'தமிழ்நாட்டின் கதை!'.

அன்றைய சென்னை ராஜதானி, அதன் அங்கங்களாகத் திகழ்ந்த பகுதிகள், கிழக்கு இந்திய வணிக நிறுவனத்தின் பிடியில் இருந்து விக்டோரியா பேரரசியின் ஆளுகைக்கு மாறிய நிலை, இங்கிலாந்தில் வகுக்கப்பட்ட பட்டயச் சட்டம் தொடங்கி, உருண்டோடிய ஆண்டுகளில் உருவான பல சட்டங்கள், 1921-ல் அமைக்கப்பட்ட சென்னை மாகாணச் சட்டமன்றம், ஈரடுக்குச் சட்டமன்றம், அதன் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் வளர்ந்த விதம், சென்னை ராஜதானியில் இருந்து கேரள, ஆந்திரா, கர்நாடகப் பகுதிகள் பிரிந்து சென்ற விவரம், இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்கள், அந்தச் சட்டமன்றம் இயங்கிய இடங்கள் அனைத்துமே, எளிதில் மனதில் பதியும்வண்ணம் கூறப்பட்டு உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துச் சமர்க்களத்தில் வாள் ஏந்தியதும் தென் தமிழ்நாடுதான்; இந்தியாவின் விடுதலைக்கான ஓர் அமைப்புக்கான எண்ணம் உதித்ததும் சென்னையில்தான் என்பது, தமிழர்களின் வீறுகொண்ட மான உணர்ச்சிக்கு அடையாளங்கள்.

விடுதலைக்குப் பின்பு நடைபெற்ற பொதுத்தேர்தல்கள், போட்டியிட்ட கட்சிகள், அன்றைய தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்கள் குறித்த விவரங்கள், ஆய்வாளர்களுக்கு பெரிதும் உதவிடும்.

'தமிழ்நாட்டின் கதை', தமிழக அரசியலின் காலக் கண்ணாடி.

விகடன்
பிரசுரம்

THAMIZNAATTIN KATHAI

₹ 280

ISBN 978-81-8476-512-0
9788184765120

https://telegram.me/aedahamlibrary